# நினைவுக் குமிழிகள்

பேராசிரியர்
டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்



முதல்
பகுதி

# நினைவுக் குமிழிகள்-1

தமிழ் வளர்ச்சிக்கான
சிறந்த நூல்களை வெளியிட
தமிழக அரசின் நிதியுதவி
வழங்கும் திட்டத்தின்கீழ்
நிதியுதவி பெற்று இந்நூல்
வெளியிடப் பெறுகின்றது

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்

# எனக்கு எல்லாம் நீ!

பெற்றதாய் நீயே, பிறப்பித்த தந்தைநீ,
மற்றையார் ஆவாரும்நீ, பேசில்; எற்றேயோ
மாய!மா மாயவனை மாயமுலை வாய்வைத்த
நீ அம்மா! காட்டும் நெறி?[1]

உரைக்கில்ஓர் சுற்றத்தார் உற்றார்என்று ஆரே?
இரைக்கும் கடல்கிடந்த எந்தாய்! உரைப்பு எல்லாம்
நின்அன்றி மற்றுஇலேன் கண்டாய் எனது உயிர்க்குஓர்
சொல்நன்றி ஆகும் துணை.[2]

—நம்மாழ்வார்

1. பெரி-திருவந். 5
2. ஷை. 77

# நினைவுக் குமிழிகள்-1

(ஆசிரியரின் 73-வது அகவை நினைவாக)

'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீசடகோபன் பொன்னடி'
பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்
எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி;
தமிழ்ப்பேராசிரியர்—துறைத்தலைவர் (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்,
திருப்பதி.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற்பதிப்பு-டிசம்பர் 1988

© டாக்டர் S. இராமகிருஷ்ணன் M.D.
(ஆசிரியரின் இளைய மகன்)
AD—13 (Plot No. 3354)
அண்ணாநகர், சென்னை-600040
தொ.பே. 615583

பக்கங்கள் : xxviii+520=548

விலை : ரூ. 40-00

NINAIVU-K- KUMIZHIKAL—Part-1

VENKATAM PUPLICATIONS,
AD-13 (Plot No. 3354)
Anna Nagar, MADRAS-600 040
Ph : 615583

அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
137, ஜானிஜான்கான் சாலை,
சென்னை-600014
தொ.பே : 83 32 31

# வேங்கட வாழ்வில் ஆசை

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்துஇயங்கும்
படியாய் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே.[3]


உம்பர் உலகுஆண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலைஅல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம்பவள வாயால் திருவேங் கடம்என்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவனே[4]


—குலசேகராழ்வார்

---

3. பெரு. திரு. 9
4. ஷை-10

# அன்னையும் பிதாவும்





மாதா பிதுவாக வைத்தேன் எனதுள்ளே
யாது ஆகில் யாதே இனி? (பெரி. திருவந்,70)
—நம்மாழ்வார்,



# பக்திப் படையல்

செம்மைசேர் ஞாலத் திலங்குபல் சமயத்
தெய்வங்க ளாகியங் கமைந்து
மும்மையும் உணர்ந்த ஞானியர் அகத்து
முறைமைசேர் ஆடல்கள் புரிந்து
மம்மரை விலக்கும் கல்வியை வழங்கி
மாண்புற நாடொறும் வளர்க்கும்
எம்மையா ளுடைய வேங்கடத் தப்பன்
இணையடிக் குரியதிந் நூலே.

[வேங்கடவனை அர்ச்சையாகக் காண்பது]

# அணிந்துரை

தமிழ் நாடு அரசு தமிழ் வளர்ச்சி இயக்குநர்
[**டாக்டர். சிலம்பொலி சு, செல்லப்பன்**
எம்.ஏ, பி,டி., பி.எல்., பிஎச்.டி.]

பேராசிரியர் **டாக்டர்.** ந. **சுப்புரெட்டியார்** தம் வாழ்க்கை வரலாற்றை **'நினைவுக் குமிழிகள்'** என்னும் தலைப்பில் வரைந்துள்ளார்கள். முதல் தொகுதியாகிய இந்நூலில் அவர் பிறப்பு, பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகள், பள்ளி—கல்லூரிப் படிப்பு, துறையூர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராக அமர்த்தப் பெற்றமை ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. மற்றவை அடுத்த தொகுதிகளில் தொடரும்.

பேராசிரியர் ரெட்டியார் மூன்றாண்டுப் பருவம் நிரம்பும் முன்னர் தந்தையாரை இழந்தவர். எளிய குடும்பத்தில் வளர்ந்தவர்கள், என்றாலும் தன் கடின உழைப்பால் படிப்படியாக முன்னேறி இன்று கல்வியுலகு பாராட்டுகின்ற உயர்ந்த நிலையில் திகழ்கின்றார்கள். தம் வாழ்க்கைப் பயணம்பற்றி அவருடைய மனம் அசை போட்டதன் விளைவே இந்நூல். நீர்ப் பரப்பில் மழை சிறு தூறலாக விழும்போது குமிழிகள் தோன்றுவதில்லை. பெருந்துளிகளாக விரைந்து விழும் போது மட்டுமே அழுத்த மிகுதியால் குமிழிகள் தோன்றுகின்றன. பேராசிரியர் ரெட்டியாருடைய வாழ்க்கைப் பரப்பில், எண்ணத்தில் நிற்கின்ற அழுத்தமான நிகழ்ச்சிகள் மட்டுமே இங்குக் குமிழிகளாக உருப்பெற்றன. குமிழியை நோக்கும்போது அதனுள் நமது உருவத்தையும் காண முடியும். அதேபோல் இந்நூற் குமிழியைப் படிக்கும்போது

பேராசிரியர் ரெட்டியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் அந்த வயதில் நம்முடைய வாழ்வில் நடந்தவையும் நம் மனத்திற்குள் நிழலாடவே செய்யும்.

தங்கள் பெருமைகளைக் கூறிக் கொள்வதற்கு மட்டுமே வரலாறு எழுதுவாருண்டு; தங்களுக்கு நேர்ந்த இன்னல்களை மட்டுமே சொல்லி உலகம் தங்களைக் கண்டுகொள்ள வில்லையே என்னும் ஏக்கத்தைப் புலப்படுத்துவாரும் உண்டு. பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் உயர்வோ தாழ்வோ, நடந்ததை நடந்தவாறே ஒளிவு மறைவின்றி வெளியிட்டுள் ளார்கள். தம் இளமைப்பருவப் படிப்புபற்றிய செய்திகளை ஓவியப்படுத்துவதுபோல துல்லியமாகவும் அழகாகவும் சித்திரித்துள்ளார்கள். வெறும் நிகழ்ச்சிக் கோவையாக அமைந்துவிடாமல் ஒரு கட்டுரைக் களஞ்சியம்போன்று படிக்கப் படிக்க நிறைவேற்படுத்தும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

பேராசிரியர் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மட்டுமே அடுக்கிச் செல்லவில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியைக் குறிக்கும்போதும் அது தொடர்பான பின்னணிகளுடன் அனைத்து விவரங்களையும் அழகு மிளிரும் சொல்லோவிய மாகத் தீட்டிச் செல்கின்றார்கள். இந்நூலினைப் பேராசிரியர் சுப்புரெட்டியாரின் தன்வரலாறு என்பதை விட 1920, 1930 களில் தமிழ் நாட்டுச் சிற்றூர்களின் நிலை, மக்களின் வாழ்க்கை முறை, திண்ணைப் பள்ளிக் கூடங்களில் கல்வி கற்றுத் தந்த முறை, உயர்நிலைப் பள்ளி—கல்லூரிகளில் கல்வி நிலை போன்றவற்றையெல்லாம் படம் பிடித்துக் காட்டுகின்ற சமூக வரலாற்று விளக்க நூல் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். ஆசிரியரின் அன்னையார் பிறந்த ஊர் பெரகம்பி என்பதும், ஆசிரியரின் சொந்த ஊர் கோட்டாத்தூர் என்ப தும் வெறும் செய்தியாக மட்டும் இடம்பெறவில்லை. அந்த ஊர்களுக்கே ஆசிரியர் நம்மை அழைத்துச் செல்கின்றார்கள்.

அந்த ஊர்களில் வாழ்ந்தது போன்ற உணர்வுகளையும் தோற்றுவித்து விடுகின்றார்கள்.

திண்ணைப் பள்ளியில் நடைபெறும் சிறப்பான நிகழ்ச்சிகளாகப் பிள்ளையார் சதுர்த்தி, சரசுவதி பூசை ஆகிய இரண்டைச் சொல்லலாம் என்பது ஆசிரியர் கூறவரும் செய்தி. ஆனால் ஆசிரியர் அந்தச் செய்தியைத் தெரிவிப்பதோடு மட்டும் நில்லாது இவ்விரண்டு விழாக்களையும் ஏன் கொண்டாடுகின்றோம்? எவ்வாறு கொண்டாடுகின்றோம்? என முழு விவரங்களையும் தந்துவிடுகின்றார். இதேபோல் சிற்றூர்த் திருவிழாக்களாக கரக ஆட்ட விழா, கண்ணன் பிறப்பு, காமன் பண்டிகை போன்றவற்றைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குகின்றார்கள். கோலிகுண்டு, கிட்டிப்புள், பம்பரம், கார்த்திசுற்றுதல், பீச்சுக்குழல் ஆகிய சிறுவர் விளையாட்டுகளும் இதில் அழகாக இடம்பெறுகின்றன.

பேராசிரியர் ரெட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசியராகப் பணிபுரிந்தவர். அதில் பெற்ற பட்டறிவு கொண்டு தன் பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பைப் பற்றிக் கூறும்போது இன்றைய கல்விமுறைகள், கற்பிக்கும் முறைகள் பற்றிய விளக்கங்களைச் சுவையாக எடுத்துச் சொல்லித் தாம் படித்தபோதிருந்த நிலையுடன் ஒப்பிட்டு அவற்றின் குறை நிறைகளை எடுத்துக் காட்டுகின்றார்கள். அவருக்குப் பாடம் சொல்லித் தந்த ஆசிரியர்களை நினைவுகூரும் வகையில் அவர்கள் சொல்லித் தந்த பாடங்களை நூலாசிரியர் நமக்குச் சொல்லித் தந்துவிடுகின்றார். அதனால் அறப்பளீசுரசதகம், குமரேச சதகம், விவேக சிந்தாமணி, நல்வழி, நன்னெறி போன்ற நூல்களிலிருந்து பல பாடல்களுக்கான விளக்கங்களைப் பெற்று மகிழ்கின்றோம்.

தமிழாசிரியர் குமார வீரய்யர் ''கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ!'' எனும் கம்பராமாயணப் பாடலை

அன்று இவருக்கு நடத்திய திறத்தைக் கூறி, இன்று நாமும் இப்பாடலின் பொருள் நயத்தை உணர்ந்து மகிழுமாறு செய்கின்றார்கள். கற்பிக்கும் முறையில் கற்பித்தால் கணக்குப் பாடத்தைவிட எளிதான பாடம் இல்லை எனலாம். ஆசிரியர் சரிவர விளக்கும் திறனில்லாதவராகும்போதுதான் 'கணக்கு பிணக்கு' என்னும் மொழி தோன்றுகின்றது. கணக்கைப் பிணக்கின்றி நடத்தியதால் இவருடைய கணித ஆசிரியர் திரு. கே. இராமச்சந்திர அய்யர் இவர் உள்ளத்தில் குறிக்கோள் ஆசிரியராக நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. அவருடைய கற்பிக்கும் ஆற்றலை இந் நூலாசிரியர் கூற்றாகவே அறிவது சிறப்பாம். ''வரலாற்று ஆசிரியர் கதை சொல்லுவது போல் ஆரம்ப கணிதத்திலுள்ள கணக்கின் சூழ்நிலையை உண்டாக்கி விடுவார். இலாப நட்டம், கூட்டுவட்டி, வட்டிக் கணக்கு, கூட்டு வாணிகம் இவற்றைக் கற்பிப்பது அற்புதமாக இருக்கும். வகுப்பறையில் இருப்பதை மறந்து அங்காடித் தெருவில் இருப்பது போன்ற சூழ்நிலையை உண்டாக்கிவிடுவார். நாங்களே முதல் போட்டுக் கூட்டு வாணிகம் நடத்துவது போலவும், கந்து வட்டிக் கந்தசாமிக் கடையில் வட்டிக்குக் கடன் வாங்குவது போலவும், காஃபிப் பொடிக் கடையில் காஃபித் தூளில் சிக்கிரித் தூளைக் கலப்பது போலவும், சருக்கரை மூட்டைகள் போன்ற சரக்குகள் வண்டியில் வந்து இறங்குவது போலவும் உணர்ச்சியை எழுப்பி விடுவார்''—இவ்வாறு கற்பிக்கும் செய்திகளை வாழ்க்கையுடன் இணைக்கும்போது கருத்துகள் மனத்தில் ஆழமாகப் பதியத்தானே செய்யும்!

''இன்று பெரும்பாலும் இலக்கணம் மாணாக்கர் காதில் புகாத உலக்கையாகவே இருக்கின்றது. மாணாக்கர் இலக்கணத்தைச் சிம்ம சொப்பனமாகக் கருதுகின்றனர். இதற்கு இலக்கணம் காரணமன்று; கற்பிக்கும் ஆசிரியர்களே இந்நிலைக்குக் காரணம். இலக்கணத்தை அநுபவ முறையில்

இலக்கியப் பாடத்துடன் இணைத்துக் கற்பித்தால் மாணக்கர்கள் கட்டாயம் இலக்கணத்தை விரும்புவர். நல்ல முறையில் கற்பித்தால் ஏனைய பாடங்களைக் கற்பதுபோல் அதிக இன்பத்தையும் பெறுவர்'' என்கின்றார் இந்நூலாசிரியர். இவருக்கு இனிமையாக இலக்கணம் சொல்லித் தந்த ஆசிரியரை நினைக்கும்போது எனக்கு இலக்கணம் போதித்த ஆசிரியரும் என் நினைவுக் குமிழியில் தோற்றமளிக்கின்றார். என்னுடைய தமிழாசிரியர் வேற்றுமை உருபுகள் பற்றிப் பாடம் நடத்தும்போது முதல் வேற்றுமை உருபு, இரண்டாம் வேற்றுமை உருபு இன்னின்ன என்று சொல்லி நடத்தமாட்டார். ஒருகதை சொல்வதுபோலத் தொடங்குவார். "ஒரு மன்னன், ஒரு மைந்தனைப் பெறும் விருப்பினால் தனக்குரிய மதுரை மாநகரின் நீங்கி மாதவத்தோரது மதங்கி வனத்தில் மலரவனே! மலரவனே! என மாதவம் புரிந்தனன்'' இதைச் சொல்லிப் பார்; இதில் எட்டு வேற்றுமைகளும் உள்ளன என்று விளக்குவார். "மன்னன் — முதல் வேற்றுமை, மைந்தனை — 'ஐ' இரண்டாம் வேற்றுமை உருபு; பெரும் விருப்பினால் — 'ஆல்' மூன்றாம் வேற்றுமை உருபு; தனக்கு —'கு' நான்காம் வேற்றுமை உருபு; மதுரைமா நகரின்— 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு; மாதவத்தோரது—'அது, ஆறாம் வேற்றுமை உருபு; மதங்கி வனத்தில் —'இல்' ஏழாம் வேற்றுமை உருபு; மலரவனே! மலரவனே! —இது எட்டாம் வேற்றுமையாகிய விளி வேற்றுமை —தெரிகிறதா?'' என்பார். இவ்வாறு இலக்கணத்தைதச் சொல்லித் தந்தால் இலக்கணம் இனிப்பின் கொடுமுடியாக விளங்காதா?

தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சொல்லிச் செல்லும் போது இலக்கியச் செய்திகளை இணைத்துச் சொல்வது இந்நூலாசிரியர்க்குக் கை வந்த கலையாக விளங்குகின்றது. சிற்றூரில் ஆரம்பக் கல்வி கற்ற இவரையும், இவர் அண்ணன் மகன் கணபதியையும் இவர்களின் ஆசிரியர் வி. கே.

அரங்கநாத அய்யர் அவர்களே முசிறிக்கு அழைத்துச் சென்று உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தார் என்பதை நயமாக எழுது கின்றார். வசிட்டரிடம் கல்வி சுற்ற இராம இலக்குமணர் களை விசுவாமித்திரர் வேள்வி காக்க அழைத்துச் சென்றார். இராம இலக்குமணர்கள் வசிட்டரிடம் பயிலாத சில அரிய வித்தைகளை இவரிடம் கற்றனர் என்பது இராமாயணம். பேராசிரியர் ரெட்டியாரையும், அவர் அண்ணன் மகனையும் அவர்களுடைய ஆசிரியா உயர்நிலைப் பள்ளியில் சேர்க்க முசிறிக்கு இட்டுச் சென்றது "வசிட்டரே இராம இலக்குமணர்களைக் கூட்டிச் சென்று" விசுவாமித்திரரிடம் விட்டது போன்று இருந்தது என எழுதி நயம் கூட்டுகின்றார்.

முதலில் புரியாதிருந்த ஒரு செய்தி பின்னர் புரிய வந்தது என்று கூறுமிடத்தில் "இந்தப் புதிர் அப்போது பிரம்ம சூத்திரம் போல் இருந்தாலும் நாளடைவில் அஃது பாஷியம் போல் விளக்கம் அடையும் என்பதை என்னால் அப்போது அறியக் கூடவில்லை" என எழுதுவதன் வாயிலாகச் சூத்திரம், பாஷியத்தின் இயல்பை நுண்மையாக விளக்குகின்றார்.

கல்லூரியில் படித்த காலத்தில் உணவு விடுதியில் தங்கி யிருந்தபோது 'பிட்சு' எனும் இளைஞன் ஒருவன் அங்குப் பணியாளாக இருந்தான். அவன் சலிப்பு ஏதுமின்றி விருப்புடன் இவர்கள் இட்ட வேலைகளையெல்லாம் செய்தான். அதனை இலக்கிய நடையில் அவன் "பாரதியார் சித்திரிக்கும் 'கண்ணன்—என் சேவகனைப்" போன்றே பணியாற்றினான் என்பார்!

"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்னும் முழக்கம் எம்மருங்கும் கேட்டாலும் நாம் சில சாதாரணப் பிழை களைக் கூடக் களைவதில்லை. களைவதில் முயற்சி எடுத்துக் கொள்வதுமில்லை. அதனால் விளம்பரங்கள், அறிக்கைகள், வெளியீடுகள் இவை 'பிழை மலிந்த சருக்கங்களாகக்' காணப்

பெறுவதை நாம் எம்மருங்கும் பார்க்கிறோம்'' என்கின்றார். 'பிழை மலிந்த சருக்கம்' என்னும் தொடராட்சி நயத்தைத் தந்தாலும் இந்நிலை கவலைக்குரியதன்றோ? இதனைப் போக்கவேண்டுவது தமிழர் கடனன்றோ!

பேராசிரியர் ரெட்டியார் எப்போதுமே நகைச்சுவையாக உரையாடும் இயல்புடையவர். அவருடைய நகைச்சுவைப் பேச்சால் ஓயாது நகைத்த வண்ணமேயிருக்க வேண்டி யிருக்கும் என்பதை அவரிடம் உரையாடியோர் நன்கு உணர்வர். எழுத்திலும் அந்த நகைச்சுவை இழையோடுவதை நூல் முழுதும் காணமுடிகின்றது. அவர் சிறுபிள்ளையாகப் பாட்டி வீட்டில் வளர்ந்தபோது காலையில் பால்கறக்கும் போது முதலில் இவருடைய தம்ளரில்தான் கறந்துவிடுவார் களாம். சிறிது வெப்பத்துடன் உள்ள அந்தப் பசும்பாலை அப்படியே பருகுவாராம்! இதனை ''மகேசுவரப் பால் பூசை காலை ஆறு மணிக்குள் எனக்குத்தான் முதலில்'' என நயமாக எழுதிச் செல்கின்றார்.

இவருடைய துணைவியாரின் ஊரான பொட்டணத்தில் நல்லப்ப ரெட்டியார் என்று ஒருவர். அவர் வீட்டுத் திண்ணையில் அவருடன் நம் நூலாசிரியர் பேசிக் கொண் டிருப்பது பழக்கம். திரு நல்லப்ப ரெட்டியார் பேச்சில் வல்லவர். உலகியலை நன்கறிந்தவர். அவரால் உலகியல் பற்றிய எவ்வளவோ செய்திகளை அறிந்துகொள்ள முடிந்தது என்பதை ''இவர் திண்ணை ஒரு பி.டி.ஐ. (P.T.I.) அலுவலகம்போல் செயற்பட்டு வந்தது' என்று நகைச்சுவை யாகக் குறிப்பிடுகின்றார்.

மற்றோர் இடத்தில் ''நூலின் தமிழ்நடை நன்றாக ஆற்றொழுக்காக அமையவில்லை; மேடு பள்ளங்களுள்ள சரளைச் சாலையில் நடப்பது போன்ற அநுபவத்தைத் தந்தது'' என்பார். 'மேடு பள்ளங்களுள்ள சரளைச் சாலை',

என்னும் சொல்லாட்சி பொருத்தமான உவமையாக அமைவ தோடு நடையைப்பற்றிய நகைப்பையும் உண்டாக்கி விடுகின்றது.

இடையிடையே வரும் முதுமொழிகளும் நயவுரைகளும் நடைக்கு உயிரூட்டுகின்றன. 'குருடன் இராஜ விழி விழிப்பது போல', 'சாணே ற முழஞ் சறுக்கியது', 'தப்பித்தது தம்பிரான் புண்ணியம்', 'பணம் பத்துவிதம் செய்யும்' 'கூட்டத்தில் கோவிந்தா போடுகிற மாதிரி', 'குருவிக்குத் தகுந்த இராமேசுரம்'. 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி; கடன் வாங்கியும் பட்டினி, 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது', 'கெடுமதி கண்ணுக்குத் தெரியாது', 'வினாச காலத்திற்கு விபரீத புத்தி', 'பூசாரியைப் பார்க்க முயல்வதைவிடச் சுவாமியைப் பார்ப்பது மேல்', 'பரம்பரை ஆண்டியோ பஞ்சத்தில் ஆண்டியோ' போன்ற மொழிகளைத் தக்க இடங்களில் பொருத்தமாகக் கையாண்டு செய்திக்குச் சுவைகூட்டி நடைக்கு விறுவிறுப்பூட்டியுள்ளார் ஆசிரியர்.

புகழ்ப் பட்டப் படிப்பில் (பி.எஸ்சி. ஆனர்ஸ்) சேர இவர் மறைத்திரு ஜெரோம் டி.சௌஸா (முதல்வர்) அவர் களை அடிக்கடி நேரில் பார்த்துக் கெஞ்சினாராம். பத்து நாட்கள் தொடர்ந்து சென்று வந்ததை "குழந்தைப் பேறு இல்லாத ஓர் இளம்பெண் அரச மரத்தைச் சுற்றி வழிபாடு செய்வதைப்போல் விடாமல் பாதிரியார் விடுதிக்குப் போவதும் வருவதுமாக இருந்தேன்" என்றெழுதுவார். அவருடைய ஆர்வத்தையும் அக்கறையையும் காட்ட இதை விடச் சிறந்த உவமை ஏது?

'சாதி அமைப்பு ஒழிக்கப் பெறாதவரை நாட்டிற்குக் கதிமோட்சமே இல்லை' என்பது இவர் கொள்கை. தந்தை பெரியாரின் அடிச்சுவட்டை ஓரளவு பற்றியவரல்லவா?

பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்பது பாரதியின்கல்வித்திட்டம். இந்தத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால் தாய்மொழியிலேயே எல்லாப்பாடங்களையும் கற்பித்தல் வேண்டும். விலைப்பாலை விட முலைப்பால் நல்லதல்லவா? என்பன போன்று இன்றைய வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாக் கருத்துகளை இடையிடையே பொதித்து வைத்துள்ளார்.

இளமைப் பழக்கம் எப்போதும் நிலைக்கும் என்பர். இவர் கல்லூரியில் படித்த காலத்தே ஒரு குயர் தாள் ஒன்றரை அணாவுக்குக் கிடைக்கும். இத்தாள்களை ¼ புல்ஸ்கேப் அளவில் வெட்டிக் கோப்புகளில் போடுவதற்கேற்பத் துளையிட்டு வைத்துக் கொள்வாராம். ஒரு நாளுக்குத் தேவையான தாள்களை வகுப்பிற்கு எடுத்துச் செல்லும் கோப்பில் கோத்துக் கொண்டு ஆசிரியர் கொடுக்கும் குறிப்புகளை தேதிபோட்டு எழுதும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தாராம். இந்தப் பழக்கம் இன்றும் இவரிடம் தொடர்கின்றது. அன்று (1934ல்) வாங்கிய துளையிடும் கருவி இன்றும் (1988ல்) அவரிடம் பயன்பட்டு வருவதைப் பெருமையுடன் எழுதிக் களிக்கின்றார்.

உரியவர்கள் படிக்க நேர்ந்தால் தம்மீது சினம் கொள்வார்களே என்பது பற்றியெல்லாம் கவலைப்படாமல் எதனையும் மறைக்காமல் தாம் சொல்ல நினைத்ததைச் சொல்லிவிடுகின்ற இயல்புடையவர் இவர்.

"என் தாய் மாமனுக்கு வாழ்க்கைப்பட்ட அம்மையாரும் சற்றுக் கடுமையானவர்கள். அவர்களின் சிரித்த முகத்தை நான் ஒருநாளும் பார்த்ததில்லை" என் மாமன் மனைவி பற்றிக் கூறுவதும், "இராமநாதபிள்ளை, கரும்பலகையில்

$$\frac{PV}{T} = \frac{P_1V_1}{T_1}$$

என்னும் வாய்ப்பாட்டை எழுதி விளக்கினார். அவருக்கு விளக்குவதற்கு வேண்டிய ஆங்கில

அறிவு இல்லையா அல்லது அவர் விளக்கத்தைப் புரிந்து கொள்ளுவதற்கேற்ற ஆங்கில அறிவு என்னிடம் இல்லையா என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். நான் 'விளங்கவில்லையே' என்றேன். மேடையிலிருந்து இறங்கி வந்து என் கன்னங்கள் வீங்குமளவுக்கு மாறி மாறி அறைந்தார். மீண்டும் மேடையேறி அதே பாடத்தையே படித்தார். சொல்வதையே சொல்லும் கிளிப்பிள்ளை யானாரேயன்றி வேறு விதமாக மாற்றிச் சொல்லும் திறமை அவரிடம் இல்லை என்பதை உணர்ந்தேன்'' எனத் தனக்கு வேதியியலைக் கற்பித்த ஆசிரியர் பற்றிக் கூறுவதும் இதற்குச் சான்றாகளாம்!

தலைமையாசிரியப் பணி கிடைத்தது என்பதோடு நூல் நிறைவுறுகின்றது. ஆசிரியப் பணி இவருடைய உள்ளம் கவர்ந்த பணி. ''ஆசிரியர் பணி என்பது கீதாசிரியனின் பொறுப்பைப் போன்றது. அப்பணியுடன் ஒரு பொறுப்பும் இணைந்தே வருகின்றது. நாம் என்றும் அப்பணிக்கு நம்மைப் பொருத்தப்பட அமைத்துக் கொள்வதே அது'' என்பது ஆசிரியப் பணி பற்றிய ஆசிரியர் கருத்து. ஆசிரியப் பணி ஏற்ற அவர் அதனைத் திறம்பட அனைவரும் போற்றும் வகையில் கடமையுணர்வுடன் செய்து வந்தார் என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

பேராசிரியர் ரெட்டியார் அவர்களிடம் காரைக்குடியில் அழகப்பர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் மாணவனாக இருக்கும் நற்பேறு எனக்குக் கிட்டியது. 1952-53இல் அவருடைய மாணவனாக இருந்தேன். ''நான் காரைக்குடி யில் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியபோது ஒரிருவரைத் தவிர எல்லோருமே உற்சாகமாக வகுப்புகளைக் கையாண் டோம். அதிகமாக நூல்களைப் பயின்றோம்; அற்புத மாகக் கற்பித்தோம்'' என்னும் பேராசிரியர் ரெட்டியார்

கூற்று நூற்றுக்கு நூறு உண்மை என்பதை அவரிடம் பயின்ற மாணவன் என்ற முறையில் என்னால் துணிந்து கூறமுடியும்.

அவருடைய மாணவன் என்னும் ஒரு தகுதி கருதியே எனக்கு இந்நூலுக்கு அணிந்துரை எழுதும் பெருவாய்ப்பினை ஆசிரியர் நல்கியுள்ளார். அவருக்கு என் உளமார்ந்த நன்றி.

இற்றைநாள் வரையிலான நிகழ்ச்சிகளையும் நினைவலைகளையும் ஆசிரியர் ஐந்து தொகுதிகளில் வெளியிட உள்ளார்கள். பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் எதுபற்றியும் எத்தனைத் தொகுதிகள் வேண்டுமானாலும் எழுதக்கூடிய அறிவும் ஆற்றலும் வாய்ந்தவர்கள். அவர்கள் எழுதும் அத்தனையும் முத்தனையதாகவே இருக்கும். இப்பெருந்தகை இன்னும் பல தொகுதிகளை நினைவுக் குமிழிகளாக வெளியிடுகின்ற வகையில் நெடுநாள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டுமெனும் என் பெருவிருப்பினைத் தெரிவித்து வணங்கி அமைகின்றேன்.

''குறளகம்''
சென்னை-600 108
15-12-1988

அன்புடன்,
**சு. செல்லப்பன்.**

# நூல் முகம்

மேன்மைப் படுவாய் மனமே!கேள்
விண்ணின் இடிமுன் விழுந்தாலும்,
பான்மை தவறி நடுங்காதே,
பயத்தால் ஏதும் பயனில்லை;
யான்முன் உரைத்தேன் கோடிமுறை
இன்னும் கோடி முறைசொல்வேன்
ஆன்மா வான கணபதியின்
அருளுண்டு அச்சம் இல்லையே.[5]

—பாரதியார்

எம்பெருமான் ஏழுமலையான் கருணை வெள்ளம் கோத்து என்னைச் சூழ்வதால் இச்சிறியேனின் மாணவ வாழ்க்கை **நினைவுக் குமிழிகள் — 1** என்ற தலைப்பில் இலக்கியமாகின்றது. இளமையில் வறுமைத் துன்பம் மிகப் பொல்லாதது. இதன் கொடுமையை வறியவன் இளமை போல்' (கலி - 10), 'பொருளில்லான் இளமைபோல்' (கலி - 38) என்ற கலித்தொகையடிகளில் காணலாம். வேறொன்றினை விளக்க இது உவமையாக வத்துள்ளமையால் இதன் கொடுமை மேலும் தெளிவாகின்றது. மூன்றாண்டுப் பருவத்திலேயே தந்தையை இழந்தும் வறுமையால் வாடியும், நல்வழி காட்டத் தக்கார் இல்லாததால் ஏக்கமுற்றும், அரக்கர் மனம் படைத்த சிலரால் துன்புற்றும் இளமைக்காலம் கழிந்தாலும், 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை' என்ற முதுமொழிப்படி இறைவன் இருள் சூழ்ந்த வாழ்விலும் ஒளிக் கீற்றைக் காட்டி உய்வித்த

5. வி. நா. மாலை - 23

மையால் கல்லூரிப் படிப்பையும் தாண்ட முடிந்தது. இந்த என் வாழ்க்கையைப் பின் நோக்கிக் காணும்போது

வெம்மாலைச் சிறுவரொடும்
விளையாடித் திரியும்
மிகச்சிறிய பருவத்தே
வியந்துநினை நமது
பெம்மான்என்(று) அடிகுறித்துப்
பாடும்வகை புரிந்த
பெருமானே! நான்செய்த
பெருந்தவமெய்ப் பயனே
செம்மாந்த சிறியேனைச்
சிறுநெறியில் சிறிதும்
செலுத்தாமல் பெருநெறியில்
செலுத்தியநல் துணையே
அம்மானே என்ஆவிக்
கானபெரும் பொருளே[6]

என்ற வள்ளல் பெருமானின் திருவாக்கு நினைவில் எழுகின்றது. இளமையில் நெறியல்லா நெறியில் செல்லாமல் தடுத்து ஆட்கொண்டு கல்லூரிப் படிப்பினை நிறைவு செய்த கடவுளர்களின் திருவருளையும் கலைமகளின் கடைக்கண் நோக்கையும் நினைந்து போற்றுகின்றேன்; உடல் பூரிக்கின்றேன். இந்த எளியேனது மாணவ வாழ்க்கை என் போன்ற எண்ணற்ற எளியவர்கட்கு ஏதாவது வழிகாட்டக் கூடுமானால், அதனை இறைவனின் திருவுளக் குறிப்பு என்று போற்றி மகிழ்வேன்.

'**தன் வரலாறு**' பற்றிய இலக்கியங்கள் தமிழில் மிகக் குறைவு. பதிப்பாசிரியர்களுள் சக்கரவர்த்திபோல் திகழ்ந்த தமிழ்த் தாத்தா அய்யர்வாளின் '**என் சரிதம்**' தமிழ்

6. திரு அருட்பா - ஆறாம் திருமுறை - அருள் விளக்க மாலை—76.

மொழியில் திகழும் சிறந்த தன் - வரலாற்று இலக்கியம். அண்மையில் வெளிவந்த கல்வித்தந்தை திரு நெ. து. சுந்தர வடிவேலு அவர்களின் **'நினைவு அலைகள்'** (மூன்று தொகுதிகள்) மற்றொரு சிறந்த தன் - வரலாற்று இலக்கிய மாகும். நாமக்கல் கவிஞரின் **'என் கதை'**யும் நல்லதோர் இலக்கியமாகும். வேறு சிலவும் இருக்கலாம். அவை என் கவனத்திற்கு வரவில்லை.

இளமையில் வறுமையால் வாடிய என்னை முதுமை யிலும் ஒய்வு ஊதியம் கூட இன்றி வறுமையால் வாட்டு கின்றான் இறைவன். இஃது என் நுகர்வினை போலும் (பிராரத்த கர்மம்) என்று எண்ணித் தாங்குகின்றேன். எதையும் தாங்கும் இதயத்தை அளித்த இறைவனின் திருவருளைச் சிந்தித்துப் போற்றுகின்றேன், இந்த நிலையில் தமிழக அரசு சிறிது நிதி உதவியது. முட்டுவழியில் மூன்றில் ஒரு பங்கு கூட இல்லையாயினும், இறையருளால் நூல் வெளி வருகின்றது. இதனைத் தொடர்ந்து அவனருளால் **நினைவுக் குமிழிகள்—2** (துறையூரில் 9 ஆண்டுகள் உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் வாழ்க்கை), **நினைவுக் குமிழிகள்—3** (காரைக்குடியில் 10 ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியன் வாழ்க்கை), **நினைவுக் குமிழிகள் 4** (திருப்பதியில் 17 ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியன் துறைத்தலைவன் வாழ்க்கை, (**நினைவுக் குமிழிகள் 5** (1977ல் ஒய்வு பெற்றபின் சென்னை வாழ்க்கை)போன்ற நான்கு நூல் கள் வெளிவர இருக்கின்றன.

இந்த நூலை வெளியிட சிறிது நிதி உதவிய தமிழக அரசுக்குத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் மூலம் என் நன்றியைப் புலப்படுத்துகின்றேன். இதனை அழகுற அச்சிட்டு உதவிய **கவிஞர் நாரா. நாச்சியப்பனுக்கும்**, (அதிபர், நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ் சென்னை-14) ஓவியங்கள்

வரைந்தும், அச்சுக்கட்டைகள் தயாரித்தும் வண்ண அச்சுப் பணிகளை முற்றுவித்தும் உதவிய கலைமன்னர் P.N. ஆனந்தன் அவர்கட்கும், நூலைக் கவின்பெறக் கட்டமைத்துத் தந்த அருமைத்தம்பி V. திருநாவுக்கரசுக்கும் என் உளம் கலந்த நன்றி என்றும் உரியது.

சிறியேனின் இந்த நூலுக்கு (முதற்பகுதி) அரியதோர் அணிந்துரையை அன்புடன் வழங்கியவர் என் கெழுதகை நண்பர் (மாணாக்கர்) டாக்டர் **சிலம்பொலி சு. செல்லப்பன்.** புராண காலத்தில் சாந்தீபினி முனிவருக்குக் கண்ணன் மாணாக்கராக அமைந்ததுபோல்[7] டாக்டர் சிலம்பொலியார் எனக்கு மாணாக்கராக வாய்த்தமை இறைவனின் திருவுள்ளக் குறிப்பாகும். என் நீண்ட வாழ்வில் கடமையைக் கண்ணெனப் போற்றி வாழ்பவன். இங்ஙனமே சிலம்பொலி யார் அவர் வாழ்வில் கடமையைக் கண்ணெனப் போற்றி வாழ்வார் என்ற கூறுகளை அவர் மாணாக்கராக இருந்த போது கண்டேன். அஃது உண்மையாயிற்று என்பது இப்போது தெளிவாயிற்று. ஒத்த மனமுடையவர்களாதலால் எங்கள் இருவர் தொடர்பும் இடையறாது நெருக்கமாக வளர்வதாயிற்று.

சிலம்பொலியார் கணிதத்தில் முதல் மாணாக்கராகத் திகழ்ந்தார்; பின்னர் பணிபுரியும்போது தமிழன்னையால் ஆட்கொள்ளப்பட்டவர்; சிறியேன் அறிவியல்—கணிதம் இத்துறையில் முதல் மாணாக்கனாகி அத்துறைகளில் மிக்க ஆழங்கால் பட்டேன். நானும் பணிக்காலத்தில் தமிழன்னை

---

7. இதனை எடுத்துக்காட்டிற்காக மட்டிலும் கொள்க. நான் சாந்தீப முனிவனைப் போல் கற்றுத்துறை போய வித்தகன் அல்லன்; சிலம்பொலியும் கண்ணனைப் போன்ற அவதார புருஷனும் அல்லர். ஆனால் இருவரும் தமிழன்னையால் ஆட்கொள்ளப் பெற்றது மட்டிலும் ஒற்றுமை.

யில் ஆட்கொள்ளப்பட்டவன். அவர் தமிழ் வளர்ச்சித் துறையில் பணியாற்றுகின்றார். சிறியேன் தமிழ் வளர்ச்சியில் பணியாற்றுகின்றேன். திருப்பதியில் தமிழ் வளர்வதற்குச் சிறியேன் முதற்காரணம்; சிலம்பொலியார் துணைக் காரணம்; நிமித்த காரணம் ஏழுமலையப்பன். பணியாற்றிக் கொண்டே இருவரும் பல பட்டங்கள் பெற்றோம். இருவரது டாக்டர் பட்டமும் ஏழுமலையானால் வழங்கப்பெற்றவை. இப்போதும் எங்கள் இருவரிடையேயும் 'சுறுசுறுப்பைக்' காணலாம். நான் பணி வாழ்க்கையில் துன்பப்பட்டதுபோல் அவரும் ஓரளவு துன்பப்பட்டதை யான் அறிவேன். ஆனால் இருவரையும் காத்தவன் இறைவன்; ஏழுமலையப்பன்.

அடியேன் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியனாக வாழ்க்கையைத் தொடங்கி, பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியனாக வளர்ந்து திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையைத் தோற்றுவித்து அதனை நாடே புகழும்படி வளர்த்து ஓய்வு பெற்ற பின்னும் தமிழன்னைக்குத் தொண்டாற்றி வருபவன். சிலம்பொலியாரும் கணித ஆசிரியன், உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியன், மாவட்டக் கழகக் கல்வியதிகாரி—இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் தனி அலுவலர், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் என்று வளர்ந்து பணியாற்றுபவர். இங்ஙனமாக இருவரிடையேயும் பல ஒற்றுமைகள் உள்ளன. இத்தகைய, உள்ளம் ஒன்றிய, அருமை மனிதரின்' அணிந்துரை பெற்றது இந்நூலின் பேறு; என் பேறும் ஆகும் என்றும் சொல்லலாம். அணிந்துரை அருளிய அன்பருக்கு உள்ளம் கலந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன்,

என் அலுவல் பணியின் இறுதிக்கால 17ஆண்டு வாழ்க்கையைத் (1960 ஆகஸ்டு முதல் 1977 அக்டோபர் முடிய) தமிழ் நடையாடாத ஆந்திரத்தில் கழியவும் தன் திருவடிவாரத்திலேயே தோற்றுவிக்கப்பெற்ற பல்கலைக் கழகத்தில் தமிழ்த்

துறையைத் தன்னந் தனியனாக நின்று தோற்றுவிக்கச் செய் வித்தும், அதற்கு நல்லெண்ணமானியமாகச் (Good will grant) சிறுதொகையைத் தமிழக அரசினை வழங்கச் செய்வித்தும், துறையின் விரிவாக்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் ஒல்லும் வகைகளிலெல்லாம் நான் மேற் கொண்ட முயற்சியினை வெற்றியுடன் முற்றுவிக்கச் செய் வித்தும் என்னை நன்னெறிப்படுத்திய 'பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலாம்'[8] ஏழுமலை அப்பனுக்கு இந்நூலையும் இதனைத் தொடர்ந்து வெளிவரும் நான்கு நூல்களையும் அவன் திருவடிகளில் **பக்திப் படையலாக்கி** மகிழ்கின்றேன். இந்த ஐந்துத் தொடர் நூல்களை எழுதத் தூண்டிய அவன் திருவுளக் குறிப்பிற்குத் 'தலையல்லால் கைம்மாறு இலேனே'[9]

என் பணியின் வாழ்நாளில் முற்பகுதி தமிழை முறை யாகப் படித்தலிலும், நடுப்பகுதி அறிவியல் கல்வியியல் நூல் களை எழுதுவதிலும், கடைப்பகுதி தமிழ் நடையாடாத தேசத்தில் தமிழை நிலைநாட்டி அதனை நாடே புகழ வளர்ப்பதிலும் கழிந்தது. ஓய்வு பெற்றபின் முதுமைப் பருவத்தில் சமய-தத்துவ நூல்களை எழுதுவதில் கழிகின்றது. இதனால்,

**என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே**[10]

என்ற திருமூலரின் திருமந்திரம் அடியேனுக்குப் பொருந்து வதும் அவன் திருஅருள் என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

---

8. குமரகுருபரர். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் காப்பு.
9. நாச். திரு. 5 :6
10. திருமந்திரம்-81

இந்த நிலையில் எனக்கு உடல்நலமும் மனவளமும் எதையும் தாங்கும் இதயமும் நல்கி என்னைத் தமிழ்ப் பணியில் ஈடுபடுத்தியும், சமய நூல்கள் வெளிவரக் கணிச மான அளவு நிதி வழங்கத் திருவருள் புரிந்தும் என்னை வாழ் விக்கும் ஏழுமலை அப்பனை,

**உளன்கண்டாய், நல்நெஞ்சே! உத்தமன்; என்றும்**
**உளன்கண்டாய்; உள்ளுவார் உள்ளத்து உளன்கண்டாய்;**
**விண்ஒடுங்கக் கோடுஉயரும் வீங்குஅருவி வேங்கடத்தான்**
**மண்ஒடுங்க, தான்அளந்த மன்.**[11]

என்ற பூதத்தாழ்வார் பாசுரத்தால் அவனை மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்கிச் சரண் அடைகின்றேன்.

'வேங்கடம்'
அண்ணா நகர்
சென்னை-600 040
திசம்பர் 15, 1988

**ந. சுப்புரெட்டியார்**
தொ.பே. 615583

---

11. மூன். திருவந். 40

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | பக்திப் படையல் | vii |
| | அணிந்துரை | viii |
| | நூல்முகம் | xix |

**குமிழிகள்**

| | | |
|---|---|---|
| I | பெரகம்பியில் —திண்ணைப் பள்ளி வாழ்வில் | 3 |
| 1. | நான் பிறந்த சிற்றூர் | 3 |
| 2. | நான் வளர்ந்த சூழ்நிலை | 9 |
| 3. | தொடக்கநிலைக் கல்வி | 19 |
| 4. | திண்ணைப்பள்ளி நிகழ்ச்சிகள் | 32 |
| 5. | சிற்றூர்த் திருவிழாக்கள் | 43 |
| 6. | என் சிறுவயது விளையாட்டுகள் | 51 |
| 7. | இளமை வாழ்க்கையில் திருப்பம் | 59 |
| II | கோட்டாத்தூரில் —தொடக்கநிலைப் பள்ளி வாழ்வில் | 65 |
| 8. | சொந்த ஊர் வாசம் | 65 |
| 9. | என் செல்வநிலை மாறியநிலை | 73 |
| 10. | தொடக்கநிலைப் பள்ளியில் | 81 |
| 11. | வேலூர் வாத்தியார் கற்பித்தமுறை | 88 |
| 12. | பழையமுறைக் கல்வி | 98 |
| 13. | புதியமுறைக் கல்வி | 106 |
| 14. | அரிச்சந்திரபுராணம் பயின்றது | 112 |
| 15. | நெஞ்சைநெகிழ்விக்கும் பாடல்கள் | 119 |
| 16. | தனியார் பள்ளிக்கு மாற்றம் | 124 |
| 17. | என் கல்வி முன்னேற்றத்தில் எழுஞாயிறு | 129 |
| 18. | மீண்டும் பங்காளி உறவு | 136 |
| 19. | நான் ஈடுபட்ட விளையாட்டுகள் | 144 |
| 20. | வளர்ச்சிப் பருவங்கள் | 150 |

III துறையூரில்
—உயர்நிலைத் தொடக்கப்பள்ளி வாழ்வில் 161
21. உயர்கல்விக்கு விடிவெள்ளி 161
22. சின்னமடத்தில் புகலிடம் 168
23. உயர்நிலைத் தொடக்கப்பள்ளியில் உயர்நிலைப்பள்ளிச் சூழ்நிலை 173
24. நற்பழக்கங்கள் படிதல் 180
IV முசிறியில்—கழக உயர்நிலைப் பள்ளி வாழ்வில் 186
25. உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தேன் 186
26. தாய்மொழி மூலம் கல்வி 195
27. நல்லாசிரியர்கள் இருவர் 203
28. நல்லாசிரியர்கள்—வேறு நால்வர் 221
29. பெரிய தமிழய்யா குமாரவீரய்யர் 228
30. சின்னத் தமிழய்யா ஐம்புலிங்கக் குருக்கள் 242
31. மாணவ விடுதி வாழ்க்கையில் 254
32. மாணவ விடுதி வாழ்க்கை ஒவ்வாத கூறுகள் மழுங்கல் 265
V திருச்சியில்—கல்லூரி வாழ்வில் 274
33. புனித சூசையய்யர் கல்லூரியில் சேர்ந்தது 274
34. தமிழ், ஆங்கிலக்கட்டுரை, மொழியாக்க வகுப்புகள் 281
35. கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்கள் கற்பித்த முறை 289
36. கல்லூரியில் பயிலும்போது என் பழக்கங்கள் 297
37. அறை வாழ்வில் சில பழக்கங்கள் 305
38. என் திருமண ஆண்டு நிகழ்ச்சிகள் 311
39. பொட்டண வாழ்வில் சில நிகழ்ச்சிகள் 321
40. ஒருபுதிய தகவல் 329
41. ஒரு பழைய நிகழ்ச்சி 337
42. மேற்கொண்ட சுற்றுலாக்கள் 348

43. ஆனந்தவிகடன் குறுக்கெழுத்துப் போட்டி 356
44. என் மனம் சிந்திக்கத் தொடங்கியது 361
45. படிப்பதற்குப் பண உதவி 367
46. மீண்டும் கல்லூரி வாழ்க்கை 370
47. இயற்பியல் புகழ்ப்பட்டப் (ஆனர்ஸ்) படிப்பு 382
48. தேர்வுக் கண்ணோட்டம் 385
49. படைப்பயிற்சி பெறுவதில் ஆர்வம் 390
50. தமிழை முறையாகக் கற்கத் தொடங்கியது 395
51. ஜி.எம். விருத்தாசலம் 398
52. இளங்கலை இரண்டாம் ஆண்டு 403
53. பட்டப்படிப்பும் நூலகப் பழக்கமும் 407
54. துன்பத்திலும் இன்பத்திலும் 415
55. இளங்கலைப்பட்டத் தேர்வும் முடிவும் 423
56. இளங்கலைத்தேர்வு வெற்றிக்குப்பின் 433
57. விநோதச் செயல்கள் 438
58. வேலை தேடும் படலம் 446
59. என் மனைவி நோயுற்ற காலத்தில் 451

VI சென்னையில்-ஆசிரியப் பயிற்சி கல்லூரி வாழ்வில் 459

60. பயிற்சிக் கல்லூரிக்குப் பணம் தேடுபடலம் 459
61. சைதையில் என் கல்லூரி வாழ்க்கை 467
62. மறக்க முடியாத சில நிகழ்ச்சிகள் 472
63. பயிற்சிக் கல்லூரிப் பேராசிரியர்கள் 480
64. நினைவுச் சிதறல்கள் 489

பின்னிணைப்பு-1 : நினைவில் எழுந்த நூல்கள் 497

பின்னிணைப்பு-2 : பொருட் குறிப்பு 500

பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் நூல்கள் 514

பிழைதிருத்தம் 518

# நினைவுக் குமிழிகள்-1

"... அகிலத்து உள்ளே
மெய்யாய் இருந்தது நாள்செல
நாள்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன
வாய்மெல்லப் போனதுவே."
— பட்டினத்தடிகள்

டாக்டர் ந. சுப்புரெட்டியார்

---

1. *பட்டினத்தார் பாடல்கள் — பொது. 52*

# டாக்டர் ந. சுப்புரெட்டியார்

---

## இளமை நினைவுகள்

இனி நினைந் திரக்க மாகின்று திணிமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொடு
உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இரும்இடை மிடைந்த சிலசொல்
பெருமூ தாளரே மாகிய எமக்கே[1]

— தொடித்தலை விழுத்தண்டினார்

---

1. *புறம்* — 243.

# I. பெரகம்பியில் - திண்ணைப் பள்ளி வாழ்வில்

குமிழி—1

## 1. நான் பிறந்த சிற்றூர்

திருச்சி மாவட்டத்தில் இலால்குடி வட்டத்தில் பெரகம்பி என்பது ஒரு சிற்றூர். என் அன்னையார் பிறந்த ஊர். நீர் வளமும், நில வளமும் மிக்க அழகியதோர் ஊர். ஊருக்கு மேற்கே ஓர் ஏரி உண்டு. அதில் நீர் நிரம்பாத ஆண்டை அக்காலத்தில் நான் பார்த்ததில்லை. அந்த ஏரி நீர் பாய்தலால் ஊருக்கு மேற்புறத்திலுள்ள நஞ்செய் நிலத்தில் இருபோகமும் நன்றாக விளைந்தன என்று சொல்ல வேண்டும். ஏரியின் நீர் மேட்டு நிலப் பகுதிக்கும் பள்ள நிலப் பகுதிக்குமாக மதகு வழியாகப் பிரிந்து சென்றது.

இந்த ஏரிக்கும் ஊருக்கும் இடையே சற்றேறக்குறைய 50 ஏக்கர் பரப்புக்குரிய பத்தடி பள்ளம் உண்டு. இப்பகுதியில் ஒரு மாரியம்மன் கோயில் உண்டு. தவிர, தனியாரின் வைக்கோல் போர் பட்டடைகளும் உள்ளன. சில சமயம் ஏரி அளவுக்கு மேல் பெருகி நீர் கடைவழிந்தால் ஊருக்கும் ஏரிக்கும் இடையேயுள்ள பள்ளப் பகுதியில் நீர் சூழ்ந்து விடும். ஒன்றிரண்டு நாட்கள் மக்களைத் தம் வயல்கட்குப்

போகாது தடுத்து விடும். மாரியம்மனையும் நீர் சூழ்ந்து விடும். நீர்க்கடவுளல்லவா? வைக்கோல் போர்கட்கும் இதே நிலைதான்.

ஏரியிலிருந்து வழிந்து பெருகிச் செல்லும் நீர் ஊருக்கு மேற்கில் ஒரு ஃபர்லாங் தொலைவிலுள்ள சின்ன ஏரிக்குச் செல்லும். இவ்வாறு வழிந்து செல்லும் நிலையில் இடுப்பளவுக்கு மேலும் நீர் செல்வதால் ஒன்றிரண்டு நாட்களுக்கு ஊருக்கு மேல் திசையிலுள்ள ஊர்கட்கும் இந்த ஊருக்கும் தொடர்பு அறுந்துவிடும். சின்ன ஏரிக்கு அதிகப் பாசனம் இல்லை. இதிலிருந்து வழியும் நீர் மேல் திசையில் சென்று ஊருக்குப் புறம்பே சுமார் இரண்டு கல் தொலைவில் செல்லும் ஒரு காட்டாற்றில் கலந்துவிடும்.

ஏரிக்கு மேற்கில் ஏரிக்கரையருகில் ஒரு சிறிய திருமால் ஆலயம் உள்ளது. இங்குக் கோயில் என்ற ஒரு தனிச் சிறப்பான அமைப்பு இல்லை. கம்பம் என்ற ஒன்று உண்டு. அதைக் 'கம்பத்தடிப் பெருமாள்' என்று வழங்குவர். இக்கோயில் வளாகத்தில் ஓர் அழகான புன்னைமரம் உள்ளது. இதில் சிறுவர்கள் ஏறி விளையாடுவார்கள். கோயிலுக்கு மேற்குப் புறத்தில் நல்ல கிணறு ஒன்று உண்டு. இது ஊர் மக்கள் இறங்கி நீராடுவதற்கு நல்லதோர் நீர் நிலை. இந்தக் கோயிலையொட்டி ஏரிக் கரையின் அருகில் வடதிசையில் ஒரு ஃபர்லாங் தொலைவில் பிடாரிக்கோயிலும் அதன் அருகே இராமசாமிக் கோயிலும் உள்ளன. ஊரையொட்டி மேற்புறமாக எல்லையம்மன் கோயில் உண்டு. எல்லையம்மனுக்கும் மாரியம்மனுக்கும் விழாவோ வழிபாடோ நடந்ததை நான் பார்த்ததே இல்லை. கம்பத்தடிப் பெருமாளுக்கு தாசரி (தாதன்) என்ற பெயர் கொண்ட ஒருவரால் நாடோறும் ஒரு முறை பூசை நடப்பதை நான் பார்த்திருக்கின்றேன்.

ஊருக்கு வடகிழக்கில் இன்னொரு பிடாரிக் கோயில் உண்டு. அக்கோயிலைச் சுற்றி ஏராளமான சுட்ட மண்ணாலான சிலைகள் உள்ளன. ஊருக்கு மேற்கேயுள்ள திருக்கோயிலில் அக்காளும், வடகிழக்கேயுள்ள கோயிலில் தங்கையும் இடங் கொண்டிருப்பதாக ஊர் மக்களின் நம்பிக்கை. இந்த இரண்டு கோயில் தெய்வங்கட்கும் நாடோறும் பூசை நடைபெறுகின்றது. 'பூசாரி ரெட்டியார் குடும்பம்' என வழங்கும் ஒரு குடும்பத்தினர் வழிபாடு நடத்தி வருகின்றனர்.

ஊருக்கு வடக்கே கிணற்றுப் பாசனம் கொண்ட நஞ்செய் நிலங்களும், கிழக்கே மானாவாரியாகப் பயிரிடப் பெறும் புன்செய் நிலங்களும் உள்ளன.

ஊருக்குள்வருவோம். கிழக்கு மேற்காகமூன்றுபெரியவீதிகள் உள்ளன. தென் வடலாக மூன்று சிறு வீதிகள் அவற்றை வெட்டிச் செல்கின்றன. நடுவீதியில் மேற்குத் திசையில் ஒரு பிள்ளையார் கோயிலும் வடக்கு வீதியின் நடுப் பகுதியில் ஒரு சிவாலயமும் உள்ளன. பிள்ளையார் கோயிலில் ஒரு பண்டாரமும், சிவாலயத்தில் ஒரு குருக்களும் நாடோறும் வழிபாடு செய்து வருகின்றனர். நடுத் தெருவின் நடுவில் நான்கு தெருக்களும் சந்திக்கும் இடம் விசாலமானது. இரண்டு இடங்களில் அகலமான கருங்கல் மேடைகள் போடப் பெற்றுள்ளன. இந்த இடத்தைச் ''சந்திக்கல் மேடை'' என்று வழங்குகின்றனர். மேல்புறம் உள்ள மேடையில் மாலை நேரங்களில் (இரவு எட்டு மணி வரை) மூத்தவர்கள் உட்கார்ந்து ஊர்க்கதைகளைப் பேசி அரட்டை அடிப்பர். வடபுறம் உள்ள மேடையில் 'இள வட்டங்கள்' அமர்ந்து வம்பளந்து கொண்டு இருப்பர். இந்தப் பகுதியில் ஒரு சிறிய சாவடி உண்டு. அங்கு ஒரு சிலர் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையோடு இருப்பதாகக் காணப்படுவர். ஊருக்கு மேற்கே பிள்ளையார் கோயிலுக்கு அருகிலும் ஒரு

சாவடி உண்டு. இதில் யாரும் அதிகமாக உட்காருவதில்லை. அதன் அருகிலுள்ள பசனை மடத்தில்தான் மாலை — முன்னிரவு நேரங்களில் மூத்தோர் சிலர் கண்ணன்மீது இசைப் பாடல்களைப் பாடி வழிபடுவர். அடக்கமான சிறுவர்கள் சிலர் அவர்கள் அருகில் 'பயபக்தியுடன்' அமர்ந் திருப்பர். பிள்ளையார் கோயில் மேடையில் சிலர் தாயக்கோடு, புலிக்கோடு விளையாட்டுகளில் ஈடுபட்டிருப் பதைப் பார்க்கலாம். அக்காலத்தில் மூத்தவர்களோ இளம் வட்டங்களோ சீட்டாடுவதை நான் பார்த்ததே இல்லை.

ஊருக்குக் கிழக்கே ஒரு சாவடி உள்ளது. இதில்தான் இலிங்கி செட்டியார் திண்ணைப் பள்ளிக் கூடம் இருந்தது. இதற்கு முன் இவர் தன் வீட்டிலேயேகூட இத்தகைய பள்ளிச்கூடம் வைத்திருந்தார். இங்கு மணலில்தான் மாணவர்கள் எழுதுவர். திரு. செட்டியார் நல்ல செல்வாக்கு உள்ளவர். தெலுங்கும் தமிழும் கற்பிப்பார். அக்காலத்தில் பிள்ளைகள் இருமொழிகளையும் கற்றனர். எண் சுவடி எல்லோருக்கும் மனப் பாடம். எளிதாகக் கணக்குப் பாடத் தைக் கற்பதற்கு இது பெருந் துணை புரிந்தது. திரு. செட்டியார் ஊர்மக்களுக்கு புரோநோட்டு எழுதுதல், கடிதங்கள் எழுதுதல் போன்ற கைங்கரியங்களைச் 'சிரமதானமாக' வழங்குவதால் இவர் செல்வாக்குக் குறையாமல் இருந்து வந்தது. சில சமயம் தாழை மடல் களில் இலைகள் தைத்து விற்பதும் உண்டு.

இந்தச் சாவடித் திண்ணைப் பள்ளிக் கூடத்திற்குச் சற்றுக் கிழக்கே இருப்பது மந்தைவெளி. புல்வெளிக்கு மேய்ப் போகும் கன்று காலிகளை இவ்விடத்தில் கூட்டுவர் மாடு மேய்க்கும் சிறுவர்கள்.

இந்த மந்தைவெளிக்குக் கிழக்கே இருப்பது அரிசனச் சேரி. இவர்களின் தொகை கணிசமான அளவில் பெருகியே

இருந்தது. இவர்கள் நிலச்சுவான்தார்களை அண்டிப் பிழைப்பவர்கள். ஒற்றுமை மிக்கவர்கள். ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் இவர்கள் மேற்கொள்ளும் 'முயல் வேட்டை'த் திருவிழா கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஆட்டமும் பாட்டமும், சிலம்பு விளையாட்டும் கத்தி சுழற்றும் விளையாட்டும் பார்ப்போர் கண்களுக்கு நல்ல விருந்து.

ஆண்டுதோறும் ஆடிப் பதினெட்டுக்கு முதல் நாள் நான்கு கரகங்கள் காவிரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நீராட்டி மறுநாள் திருப்பிக் கொணரப்படும். பாட்டுப் பாடிக்கொண்டு கரகஆட்டம் ஆடுவது இன்று பார்ப்பதுபோல் என் மனத்தில் பசுமையாக உள்ளது. பெரிய பூசாரி ரெட்டி யார் ஆடுவது மிக அற்புதமாக இருக்கும். இப்போதெல்லாம் இத்தகைய காட்சிகளைக் காண்பது அரிதாகி விட்டது. விழா முடிந்ததும் கரகங்கள் 'கோயில் வீடு' என்ற இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பெறும்.

ஊருக்குத் தெற்கே 'நல்ல தண்ணிக்குளம்' என்ற ஒரு நீர் நிலையுண்டு. மழை நீர் தேங்கும் குளம். நீரின் சுவை அற்புதமானது. ஊர் மக்கள் ஒன்றிரண்டு குடங்கள் இந் நீரை எடுத்துச் சென்று குடிநீராகப் பயன்படுத்து கின்றனர். இன்றும் இந்த நிலையைக் காணலாம். குளத்திற்குக் காவல் உண்டு. இல்லாவிட்டாலும் அக்காலத்து மக்கள் கட்டுப் பாட்டுடன் நீர் கெடாமல், பாதுகாத்தனர்.

இன்னும் ஊருக்குத் தென்புறத்தில், ஊருக்கு மிக அருகில், 'பூங்கேணி' என்ற நீர் நிலைஉண்டு. இது தனியாருக்குச் சொந்தமானது. இதன் நீர் வயலுக்குப் பாய்ச்சப் பயன் படு கின்றது. எனினும் இந் நீர் நிலை ஊருக்கு மிக அருகிலிருப் பதாலும், நீர் பளிங்கு போல் தெளிவாக இருப்பதாலும் மக்கள் இதனை நீராடுவதற்குப் பெரிதாகப் பயன்படுத்து கின்றனர்,

இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க சிற்றூரில் **'பண்ணையார் வீடு'** என்று வழங்கும் ஒரு நடுத்தரக் குடும்பம் உண்டு. இதுதான் என் அன்னையாரின் தாயகம். அன்னையாரின் திருநாமம் **காமாட்சி அம்மாள்**. இந்த ஊருக்கு மேற்கில் சுமார் ஆறுகல் தொலைவிலுள்ள கோட்டத்தூர் என்ற சிற்றூர் என் தந்தையார் பிறந்த ஊர். இவர் திருநாமம் **நல்லப்ப செட்டியார்** என்பது. இந்த ஊரில் **'ஞானியார்'** பரம்பரை என்ற பரம்பரை ஒன்று உண்டு. அந்த பரம்பரையைச் சேர்ந்தவர் என் தந்தையார்.

என் பிராரத்த கருமத்தால்(நுகர்வினையால்) நான் பெரகம்பியில் என் அன்னையார் பிறந்த இல்லத்தில் 27-8-1916ல் பிறந்தேன்.

கற்றார் பற்றறுக்கும்
பிறவிப் பெருங்கடலே
பற்றா வந்து
அடியேன் பிறந்தேன்[1].

என்ற திருமங்கையாழ்வாரின் திருமொழியை அப்போது சிந்தித்து அறிய அகவை இல்லையாயினும் இப்போது (72-அகவையில்) நினைந்து அசைபோட முடிகின்றது. சில ஆண்டுகள் பாட்டியார் வீட்டில் வளர்ந்தேன்; சில ஆண்டுகள் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் கல்விகற்றேன். இவையெல்லாம் 'பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்ல மெல்லப் போயினவே'.

பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளும் தன்-வரலாறுகளும் வரலாற்றில் தனிப்பட்டோரின் வாழ்க்கையைப் பற்றியனவாக அமையும். தகுதியுடைய வாழ்க்கையாக இருந்தால், அது நுணுக்கமாகவும் உண்மையாகவும் எழுதப் பெறும் தகுதியைப் பெறுகின்றது என்பது லாங்ஃபெலோ என்பாரின் கருத்து. தம்முடைய விடாமுயற்சியால் பயனுள்ள

1. பெரி. திரு. 8,9:8

முறையில் பெரும் புகழ் எய்திய நல்லவர்கள்-வல்லவர்களின் வரலாறு, தன்-வரலாறுகள் படிப்போரிடம் அகத்தெழுச்சியை எழுப்ப வல்லவை; அவை அவசியம் படிக்கவேண்டியவை என்றார் மற்றோர் அறிஞர். இவை உலகளாவிய முறையில் பயனுள்ள மகிழ்வூட்டத்தக்க படிப்பாக அமைகின்றன; படிப்பினையாகவும் அமைகின்றன. இந்த எளியேனின் வாழ்க்கை படிப்போருக்கு ஏதாவது பயன் நல்குமானால், அவர்களிடம் அகத்தெழுச்சியை எழுப்பக் கூடுமானால், அது நான் பெற்றபேறு; இறைவனின் திருவுள்ளமுமாகும்.

குமிழி—2

## 2. நான் வளர்ந்த சூழ்நிலை

**எ**னக்கு மூன்றாண்டுப் பருவம் நிரம்பும் முன்னர், என் தந்தையார் முப்பது அகவை எட்டும் முன்னர் இறைவன் திருவடி நிழலை அடைந்து விட்டார். என் தந்தையார் நோய்வாய்ப்பட்டு மரணத்தை எதிர்நோக்கியிருக்கும்போது அவர் விருப்பப்படி அவரருகில் என் தாயார் என்னைப் படுக்க வைத்ததும் என் தந்தையார் என்னை அணைந்த வண்ணம் படுத்திருந்ததும் கனவு கண்டதுபோல் நினைவிலுள்ளது. என் அன்னையார் நிலபுலன்களைப் பார்த்துக் கொண்டு மூன்று வயதுகூட நிரம்பாத என்னை நன்கு பராமரிப்பது சிரமமாக இருந்ததால் என்னைப் பெரகம்பியில் என்பாட்டி வீட்டில், அதாவது தான் பிறந்த இல்லத்தில், விட்டு வைத்தார்கள். அங்கு மிகச் செல்லமாக வளர்க்கப்பட்டேன். இதற்குக் காரணங்கள் உண்டு.

என் தாய்மாமன் **பண்ணை நல்லப்ப ரெட்டியார்** கிட்டத்தட்ட என் தந்தையாரின் வயதையொத்தவர். இவருக்குப் பெரகம்பியிலேயே ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் திருமணமாயிற்று. ஏதோ ஒன்றிரண்டு ஆண்டுகள் கூட இல்லற வாழ்க்கை இனிதாக நடைபெறவில்லை.

நான் அப்பொழுது இதையெல்லாம் அளந்து பார்க்கும் அளவுக்கு வயதை எட்டாத சிறுவன். ஒன்று மட்டும் நன்றாக நினைத்துப் பார்க்க முடிகின்றது. என் மாமனின் வாழ்க்கைத் துணைவியார் பெரகம்பியிலிருந்ததால், சில சமயம் அவர்களைப் பார்க்க வாய்ப்புகள் ஏற்பட்டன.

என் தாய் மாமன் மகா சாது. மடத்தில் சாதுக்கள் குழுவில் இருக்க வேண்டியவர் ஏதோ வீட்டில் இருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். என் தாய் வீட்டுப் பாட்டனை நான் பார்த்ததில்லை. நான் பிறப்பதற்கு முன்னர் காலகதியை அடைந்துவிட்டார் போலும். என் பாட்டியார் சற்றுக் கடுமையானவர். அவர் போட்ட கோட்டை யாரும் தாண்டக் கூடாது. இல்லத்தரசியாக விளங்கினார்கள். வேளாண்மை அவர்கள் ஆணைப்படிதான் நடைபெற்றது.

என் தாய்மாமனுக்கு வாழ்க்கைப்பட்ட அம்மையாரும் சற்றுக் கடுமையானவர்கள். அவர்களின் சிரித்த முகத்தை ஒருநாளும் நான் பார்த்ததில்லை. என்னைவிட ஒன்றிரண்டு வயது குறைந்த ஒரு பெண் மகவுடன் உள்ளூரில் தம் தாய் வீட்டில் இருந்து வந்தார்கள். என் தாய் மாமன் பண்புக்கும் இவர்தம் பண்புக்கும் சிறிதுகூடப் பொருத்தமில்லை என்பது ஐந்து வயதுகூட நிரம்பப் பெறாத என் கணிப்பு. என் மாமனைப் பொம்மைபோல் ஆட்ட முயன்றிருக்க வேண்டும். ஆனால் அந்த அம்மையாரைவிட இன்னும் சற்றுக் கடுமை யான என் பாட்டியார் **செல்லாயம்மாள்** முன் அவர்கள் 'செக்' (cheque) எங்ஙனம் செல்லும்? பருப்பு எப்படி வேகும்? உலகெங்கும் பொதுவாகக் காணப்படும் மாமியார்-மருமகள் போராட்டத்தை மிகச் சிறிய வயதில் நான் வளர்ந்த வீட்டிலேயே காண நேரிட்டது. இந்தப் போராட்டத்தில் மாமியார் கை ஓங்கி நின்றதால் மருமகள் தன் ஒரு வயதுப் பெண் மகவுடன் தன் தாய் வீடு செல்ல வேண்டியதாயிற்று

சுமார் நான்கைந்து ஆண்டுகள் என் தாய் மாமனுக்கு மனைவியைப் பிரிந்த நிலை. இந்தக் காலத்தில் மூன்று வயதுப் பேத்தியை(பெயர் செல்ல பாப்பா)(அப்போது எனக்கு வயது ஐந்து) தம் வீட்டிற்குத் தருவித்துக் கொஞ்சுவார்கள் என் பாட்டியார். என்னையும் தம் பேத்தியையும் சேர அமர்த்திப் '**பொம்மைக் கல்யாணம்**' செய்து மகிழ்வார்கள். செல்ல பாப்பாவைக் கண் போன்ற செல்லப் பேரனுக்குக் கட்டி வைத்துவிட வேண்டும் என்று கனவு கண்டார்கள் போலும்! தம் மருமகளைப் பொம்மையாக ஆட்டி வைக்கலாம் என்று நினைத்த உள்ளம் தோல்வியடைந்ததால் சிறு பிள்ளைகளாகிய எங்களை அம்மாதிரி ஆட்டிவைத்து அந்த உள்ளம் மகிழ்ந்திருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகின்றது. மனித உள்ளம் கட்டும் மனக்கோட்டை களை யார்தான் அளந்து காட்ட முடியும்? உளவியல் வல்லுநர்கள் கூட இங்ஙனம் அளப்பதில் இன்னும் குழம்பிய நிலையில்தான் உள்ளனர்.

இந்நிலையில் தந்தையை இழந்தவன் என்ற காரணத்தால் எல்லோர் இரக்கமும் என்பால் வழிந்தது. அக்கம் பக்கத்தார்கூட என்மீது கழிவிரக்கம் காட்டலாயினர். தன் ஒரே பெண் குழவி தன் வீட்டில் வளர வாய்ப்பில்லாத காரணத்தால் என் தாய்மாமனின் முழுக் கவனமும் பரிவும் என்பால் கவிழ்ந்தன. தவிர, என் தாய்மாமனும் என் தாயை 'மருந்தனைய தங்கை'யாகக் கருதியிருந்தமையாலும், அவர்கள் இளமையிலேயே கைம்பெண் நிலையை அடைந்தமையாலும் அவர்கள்மீது கொண்டிருந்த இரக்கமும் பரிவும் இயல்பாகவே என்மீது கவிழ்ந்தன. நான் பண்ணையார் வீட்டுப் 'பண்ணைச் செல்வமாக'க் கருதப் பெற்று வளர்க்கப் பெற்றேன். பண்ணைச் செல்வத்தின் பயன் எல்லாம் இந்தப் 'பண்ணைச் செல்வத்திற்குத்தான்' என்று வீட்டார் யாவரும் நினைப்பது போன்ற பிரமை என்

மனத்தில் அன்று ஒரு 'கானல்நீர்' போல் தோன்றியதை இன்று நினைந்து அசை போடுகின்றேன்.

**'பண்ணைச் செல்வம்'** என்பதுதான் என்ன? நினைவில் குமிழிகள் தோன்றும் அளவிற்குச் சொல்ல முயல்கின்றேன். சுமார் ஐம்பது ஏக்கருக்குக் குறையாத ஒரு சதுரமான நிலப் பகுதி இந்தப் பண்ணையார் வீட்டுப் பூர்வீகச் சொத்து. வண்டிப் பாதையில் வந்தால் மூன்று கிலோமீட்டர் தொலைவு. வண்டியில் வந்தால் இந்த வழியாகத்தான் வருவேன். இன்னொரு வழியில் வந்தால் இரண்டு கிலோ மீட்டர் தொலைவு; பாதித்தொலைவு வண்டிவரும்; மீதித் தொலைவு நடராஜா சர்வீஸ்தான். மூன்றாவது வழி ஒன்றரைக் கிலோமீட்டர். இந்த வழி பலருடைய நஞ்சை வரப்பு வழியாக ஒரு கிலோமீட்டர் தொலைவு வந்து கல்லும் மணலும் கலந்த கரட்டு நிலத்தில் ஒற்றையடிப் பாதையில் நடந்து மேற்படி நிலப்பகுதியை அடையலாம்.

**நிலவளம் :** இந்த நிலப்பகுதியில் நானிலச் சூழ்நிலை யையும் காணலாம். சுமார் **இருபது** ஏக்கர் நிலம் சாகுபடிக்கு ஒவ்வாத வறட்டு நிலம். சதுரமான நிலப்பகுதியின் நடுவில் தமிழ் எழுத்து **ட** வடிவில் அமைந்துள்ளது. மேடும் பள்ளமுமாக இருக்கும். மேடான பகுதியில் நெல்லடிக்கும் களம், உள்ளது. இந்தப்பகுதியில் வைக்கோல் போர் வரிசைகள் அமைந்திருக்கும். சற்றுப் பள்ளமான பகுதி **பாலை** நிலத்தோற்றமளிக்கும். கருவேல், வெளிவேல் மரங்கள் மிகுதி. இவற்றிலுள்ள பகுதிகளை வெட்டி ஆலைக் கூடத்தில் கருப்பஞ்சாற்றை வெல்லப் பாகாக்கி வெல்லக் கட்டியாக்குவதற்கு—அச்சு வெல்லமாக்குவதற்கு—விறகாகப் பயன்படுத்துவார்கள். இன்னொரு சற்று உயர்ந்த பகுதி நிரந்தரமாக ஆலைக் கூடத்திற்கென்றே ஒதுக்கப் பெற்றிருக்கும். சொந்தமாக ஆலைப் பொறியும் அதற்குரிய தளவாடங்களும் இந்தப் பண்ணையார் வீட்டுக்குச்

சொந்தமாகவே இருந்தன. ஆண்டுதோறும் பங்குனி-சித்திரையில் வெல்லம், நாட்டுச் சருக்கரை உற்பத்தியின்பொழுது ஆலைக் கூடத்தில் ஆலைப்பொறி பூட்டப்பெறும். வேலை முடிந்தவுடன் அவை கழற்றப் பெற்று பாதுகாப்பிற்காக வீட்டிற்கு எடுத்து வரப்பெறும்.

சுமார் பத்து ஏக்கர் பகுதியில் புன்செய்ப் பயிர்ச் சாகுபடி இருக்கும். சோளம், கம்பு, மொச்சை, பாசிப்பயறு, காராமணி (தட்டைப் பயறு). துவரையாகிய முல்லை நிலக் கருப் பொருள்கள் நல்ல விளைச்சல்களை நல்கும், இவற்றுள் சுமார் **ஐந்து** ஏக்கர் நிலத்தில் சிலசமயம் மிளகாய் சாகுபடியாகி நல்ல விளைச்சலை நல்கும். இந்தப் பகுதியில் சற்று ஆழத்தில் ஒரு கிணறு உண்டு. அதனை 'வாணிக்கிணறு' என்று வழங்குவர். மாரிக்காலத்தில் கிணறு நிரம்பி வழிந்து நீர் பெருகி கபிலை ஏற்றச் சாலைக்குமேல் ஐந்து அல்லது ஆறு அடிவரை உயர்ந்திருக்கும். இந்தக் காலத்தில் நீர் இறைப்பு இல்லை. ஒரு மதகு அமைப்பு வழியாக நீர் கட்டுப்படுத்தப் பெற்று பாசன வசதி செய்யப்பெறும்.

எஞ்சிய **இருபது** ஏக்கர் நிலத்தில் நெல், கேழ்வரகு, கம்பு, மிளகாய், கரும்புப் பயிர்கள் சாகுபடி செய்யப்பெறும். இவை **மருத நிலச்** சூழ்நிலையை மாண்புறுத்திக் காட்டும். அக்காலத்தில் இவை நல்ல விளைச்சலை நல்கியதால் பண்ணையார் வீடு மிகச் செழிப்பாகத் திகழ்ந்தது. விலைவாசி நிலை மிகக் குறைவாக இருந்ததால் பண்டங்கள் பெருகிக் கிடந்தனவேயன்றி பணம் பெருக்கம் இல்லை; பணப் புழக்கமும் குறைவாகவே இருந்தது. வாணிக் கிணற்றிலிருந்து ஒரு கரையோரமாக மருத நிலப் பகுதிக்கு வருங்கால் மூங்கில் புதர்கள் வரிசை வரிசையாகக் காணப் பெறும். இவை **குறிஞ்சி நிலச்** சாயலை நினைவூட்டும், **நெய்தல்** நிலத்திற்கு இங்கு இடமே இல்லை. மருதநிலப்

பகுதியிலும் ஓர் இறைகிணறு நன்கு பயன்பட்டது. இந்த நிலப்பகுதியில் சுமார் வேலியால் சூழப்பெற்ற முக்கால் ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு மாமரங்கள் இருந்தன. இரண்டு மரங்களின் கனிகள் மிகச் சுவையுடையனவாயினும், வடக்குப் பகுதியிலுள்ள மரத்தின் கனிகள் அதிமதுர மானவை.

சுமார் நான்கு கல் தொலைவிலுள்ள பச்சை மலைத் தொடர்களில் **அ-தழை** என்ற ஒருவகைத் தழை உண்டு; கறிவேப்பிலை மணம் கொண்டது. நல்ல தழை உரமாகப் பயன்படுவது. சுமார் இரண்டு ஏக்கர் நிலத்தில் இத்தழையை தழை-உரமாகப் பயன்படுத்தி வீட்டுச் செலவுக்கு வேண்டிய சம்பா நெல் பயிரிடுவர். இந்த நெல் அரிசிச் சோறு சுவை யுடையதாகவும் நறுமணம் உடையதாகவும் சற்று எண்ணெய்ப் பசையுடையதாகவும் இருக்கும். இந்தப் பண்ணையாருக்கு ஏரிப் பாசன வசதியுடன் நிலம் இல்லை. இவருக்குரிய நிலத்தில் கடுமையான உழைப்பால் சாகுபடி நடைபெற வேண்டியதாய் இருந்தது. பண்ணை வேலையை என் அம்மான் ஒருவரே சில பணியாட்களின் துணை கொண்டு கவனித்து வந்தார். இவரும் நல்ல உழைப்பாளி

கரும்பாலை வேலையில் என் தாய்மாமன் ஒருவரே நேராக ஈடுபடுவார். கரும்புப் பாலைக் காய்ச்சிப் பாகாக்கி நல்ல பதத்தில் இறக்கி அச்சுக் குழியில் இறக்கிச் சிறுசிறு அச்சு களாலான வெல்லம் தயாரிக்கப்பெறும். இப்பணியில், தொட்டியிலுள்ள பாகு அச்சாக்கப்பெறும்போது, கால தாமதம் ஏற்படும். அப்போது தொட்டியிலுள்ள பாகின் இறுதிப் பகுதியில் ஆடை கட்டும். அந்த ஆடையை பிரித்து எடுத்து 'ஆடை வெல்லமாகத்' தருவார் என் அம்மான். ஒரு தந்தை காட்டும் பரிவையும் அன்பையும் விட அதிகமாகவே என்மீது காட்டுவார் இந்தப் பெருந்தகை. வீட்டுச்

செலவுக்கும் பிறவற்றிற்கும் சுமார் மூன்று கொப்பரை வெல்லம் தேவைப்படும். இதற்குரிய கரும்புப்பால் ரஸ்தாளி என்ற வகைக் கரும்பினின்று நன்கு வடிகட்டப்பெற்று அதில் ஏலம், கிராம்பு, ஜாதிக்காய் இவற்றின் பொடியைக் கலந்து வெல்லம் தயாரிக்கப்பெறும். வெல்லம் காய்ச்சும் ஒருவாரம் அல்லது பத்து நாட்கள் நான் பள்ளிக் கூடத்திற்கு 'மட்டம்' போட்டுவிடுவேன். ஆயினும் ஒன்றிரண்டு நாட்கள் என் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியரை இட்டுவந்து கரும்புப்பால் விருந்து வைப்பேன்; அவர் இல்லத்தில் பிறருக்கு வேண்டிய அளவு கரும்புப்பாலை அனுப்பிவைப்பேன். தவிர, சுமார் இன்றைய அளவில் நான்கு கிலோவுக்குக் குறையாத அளவுக்கு அச்சு வெல்லத்தையும் கரும்புத் தோகையால் அழகான பார்சலாகக் கட்டி அனுப்புவேன். ஆசிரியர் அனைத்தையும் பெற்று மகிழ்ச்சியுடன் திரும்பும்போது என் தலையிலும், முதுகிலும் தட்டிக்கொடுத்து கன்னத்திலும் கிள்ளி விட்டுச் செல்வார்.

இனி, என் தாய்மாமன் வீட்டு நிலையைப் பற்றிச் சில சொற்கள். நல்ல மச்சு வீடு. பின்பகுதி நன்கு பூசப்பெற்று குடியிருப்புக்குச் சிறப்பாக அமைந்திருந்தது. முன்பகுதி மாடிப் பகுதியையுடையது. இது ஒரு நெற்களஞ்சியம் என்றே சொல்லலாம். கீழே ஈரம் தட்டாமலிருக்கும் பொருட்டு சுமார் மூன்றடி உயரத்திற்கு மேல்தான் இக் களஞ்சிய அமைப்பு இருக்கும். இந்தப் பகுதியில் ஆலைக் குரிய சாமான்களும் பிறவும் அடைக்கலம் பெற்றுப் பாது காப்பாக இருக்கும். மேலிருந்து களஞ்சியப் பகுதிகளில் (நான்கு பகுதிகள்) நால்வகை நெல் கொட்டப்பெறும். கீழிருந்து நெல் தேவைப்படும்போது எடுத்துக் கொள்ளப் பெறும். 'மேல்மாடி அறையாகப் பயன்படுத்தப் பெறும்; அது தங்குவதற்காக அன்று; சாமான்களைப் போடுவதற்காகத் தான். தானியங்கள், வெல்லம், பயறு வகையறாக்கள்

தேவைக்கு மேல் உள்ளவை விற்கப் பெற்றுப் பணமாக்கப் பெறும். குறைவான விலை காரணமாக ஓராயிரம் ரூபாய் கூடக் கிடைக்காது.

மிளகாய்த் தோட்டத்திலும் பிற இடங்களில் கறிகாய்கள் ஏராளமாகக் கிடைத்தன. பறங்கி, பூசணி, சருக்கரைப் பறங்கிப் பழங்கள் மாடிமுழுவதும் நிறைந்து கிடக்கும். அவரை, புடல், பீர்க்கன், வெண்டை, கொத்தவரை, பாகல்-இவை அவ்வப்பொழுது விற்கப்பெற்று அன்றாடச் செலவுக்குப் பணமாகப் பயன்படும். பறங்கி முதலியவை சேர்ந்தாற்போல் விற்கப்பெறும். வெளியில் அலைந்து திரிந்து உழைத்து அல்லற்படுவது என் தாய்மாமன். வீட்டிலிருந்து கொண்டு அதிகாரம் செய்பவர் என் பாட்டி. இருவருமே ஈகைக் குணம் மிக்கவர்கள். அதனால் இருவரும் பொது விருப்பார்வமிக்கவர்களாகத் திகழ்ந்தனர், ஊர்ப் பெருமக்களும் இவர்களை மிகவும் விரும்பினர்; ஆசையுடனும் பாசத்துடனும் பழகினர்.

**பால்வளம் :** பண்ணையார் வீட்டில் கறவை மாடுகள் இல்லாத நாட்களே இரா. நான் நினைவுகூரும் வகையில் இரண்டு பசுக்களும் மூன்று எருமைகளும் கறந்தன. ஆயர் பாடி போல் வீடு திகழ்ந்தது. பால், தயிர், மோர், நெய் இவற்றிற்கு எப்பொழுதுமே குறைவில்லை. பெரும்பாலும் மோர் தேவையானவர்கள் இலவசமாகவே பெற்றுச் செல்வார்கள். மூன்று வயதிலிருந்தே இன்றுவரை பசும் பால் பருகும் பழக்கமுடையவனாக இருக்கிறேன். மூன்று வயதுடையவனாக இருக்கும்போதே ஒரு டம்லரில் நாட்டுச் சருக்கரை அளவாகப் போட்டு என்பாட்டி என்னை பசு மாட்டிடம் அனுப்புவார்கள். என் தாய்மாமன்தான் பால் கறப்பர்; சில சமயம் என் பாட்டியும் கறப்பதுண்டு. கறக்கும் போது முதலில் என் டம்ளர் நிறைய பால் கறந்துவிடுவார்கள்.

அப்படியே சிறிது வெப்பத்துடன் பாலைப் பருகுவேன். சில நாள் வெள்ளைப் பசுவிடம் நிற்பேன்; சில நாள் சிவப்புப் பசுவிடம் நிற்பேன். கறப்பவர்கள் என் டம்ளரில்தான் முதலில் கறந்து விடுவார்கள். மகேசுவரப் பால் பூசை காலை ஆறு மணிக்குள் எனக்குத்தான் முதலில். சுமார் ஏழு அல்லது எட்டு வயது வரைதான் என் தாய்மாமன் வீட்டிலிருந்தேன். சிறு வயதில் நான் தயிர், மோர், நெய் இவற்றை அளவுக்குமீறி உண்டதாகச் சொல்வார்கள். ஆனால் நான் நினைவு கூரும் வகையில் பால் பருகும் பழக்கத்தைத் தவிர இன்றுவரை நெய் சேர்த்துக் கொள்ளும் பழக்கமே இல்லை. ஏதோ 'திருஷ்டியால்' நெய், தயிர், மோர் இவற்றின்மீது வெறுப்பு ஏற்பட்டு விட்டதாக என் பாட்டியும், என் அன்னையும் சொல்லி வந்ததை இன்று நினைவுகூர்கிறேன்.

சிறு வயதிலிருந்தே சுறுசுறுப்புடையவன் நான். சோம்பல் என்பது என்னைப் பற்றினதே இல்லை. சதா 'துரு துரு' வென்றுதான் இருப்பேன். இதனால் அக்காலத்தில் அக்கம் பக்கத்தாரும் என்னை நன்கறிந்த ஊராரும் மெச்சிப் புகழ்ந்ததையெல்லாம் இன்று நினைவுகூர்கிறேன். இந்த 72-வது வயதிலும் என் சுறுசுறுப்பையும் ஓயாத உழைப்பையும் பலர் மெச்சுகிறார்கள். இதே சமயம் வினை பற்றி சைவ சித்தாந்தம் கூறும் ஆழ் கருத்தையும் நினைவு கூர்ந்து அசை போடுகின்றேன். என் பிராரத்த கருமத்தின் ஆற்றல் செயற்படுவதை நினைத்து பார்க்க முடிகின்றது. என் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்த்தால் இந்த வினை செயற்பட்டு வந்ததைக் காணமுடிகின்றது. ஒவ்வொருவரும் தம்முடைய வாழ்க்கையை நீள் நோக்கில்—பின் நோக்கில்—இதனைக் கவனித்தால் வினைபற்றிய பல உண்மைகள் தெளிவாகும்.

**உணவு முறைகள் :** அந்தக் காலத்தில் அந்தச் சிற்றூரில் பெரிய செல்வர்கள் வீடுகள் உட்பட மதிய உணவு கம்பு, கேழ்வரகாலான மாவினால்தான் தயார் செய்யப்படும். அரிசிச் சோறு அவர்கள் வீட்டில் காண்பதென்பது குதிரைக் கொம்பு. இதற்கு அதிகக் காய்கறி வகையறா தேவையில்லை என்பது ஒரு காரணமாக இருக்கலாம்; தம் வயலில் வந்த தானியங்களையெல்லாம் பயன்படுத்திப் பார்க்க வேண்டும் என்ற கருத்தாகவும் இருக்கலாம். தவிர, மறுநாள் 'பழையதுக்கும்' சுகமாக இருக்கும் என்ற எண்ணத்திலும் இம் முறையை மேற்கொள்ளலாம். என் தாய்மாமன் வீட்டிலும் இந்த உணவு தயாரிக்கப்படுவது உண்டு. வேண்டுவோர் இதனை உண்ணலாம். ஆனால் எனக்காக என் பாட்டியார் அரிசிச் சோறு, பருப்பு, குழம்பு, ரசம் முதலியன தயாரிப்பார்கள். நான் மட்டிலும் இவற்றை உண்பேன். மறு நாள் 'பழையதற்கு' கம்பங்கூழ்', கேழ்வரகுக்கூழ் இவை எனக்கு தேவாமிர்தமாக இனிக்கும். ஊரிலே மிகவும் செல்வர் ஒரு செட்டியார். ஏராளமான நிலபுலங்கள் அவருக்கு உள்ளூரிலும் உண்டு; சமயபுரத் தருகிலும் ஆற்றுப் பாசன வசதிகளுடன் ஏராளமான நஞ்சை நிலங்களும் அவருக்குச் சொந்தமாக உள்ளன. அவர் வீட்டிலும் மதிய உணவு கம்பு, கேழ்வரகாலான உணவே. சில 'இளவட்டங்கள்' இதைக் குறைவாகப் பேசுவதை நான் கேட்டதுண்டு. பணக்காரர் 'அறுசுவைஉண்டி' உண்ண வேண்டும் என்பது இவர்கள் கணிப்பு போலும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தத்துவங்களுள் 'சிக்கனம்' என்பதும் ஒன்று. சிக்கனம், வேறு; 'கஞ்சத் தனம்' வேறு. இந்தச் செட்டியார் வீட்டில் பின்னதுதான் தலை தூக்கி நிற்கும். பணம் சேர்ப்பதில், சொத்து சேர்ப்பதில் இவருக்கு உள்ள ஆர்வம், பொருளைத் துய்ப்பதில்' இவரிடம் இருந்ததில்லை. என் செய்வது?

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி[2]
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

என்றல்லவோ வகுத்துக் காட்டியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை?

குமிழி—3

# 3. தொடக்கநிலைக் கல்வி

ஐந்தாண்டு நிறைவு பெறும் தருவாயில் எனக்கு வித்தியாப்பியாசம் நடைபெற்றது. இது என் தாய் மாமன் இல்லத்தில் சிறிது வைதிகச் சடங்குகளுடன் நடைபெற்றதை நினைவுகூர முடிகின்றது. ஒரு நன்னாளில் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் இலிங்கச் செட்டியார்தான் இதனை நடத்தி வைத்தார். அன்று வீட்டிலும் வீட்டிலுள்ளோரிடத்தும், வந்து நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அக்கம் பக்கத்தார் முகத்திலும் ஒருவித மகிழ்ச்சிக் களை தட்டியிருந்தையும் நினைந்து பார்க்க முடிகின்றது.

ஆசிரியர் மஞ்சள் தடவிய அளவுபடுத்தப் பெற்றுத் தயாரித்த நான்கைந்து பனையோலை அடங்கிய ஒரு சிறு கட்டில் முதல் ஏட்டில் 'ஹரி; நமோத்து சிந்தம்' என்று எழுதித் தந்ததும், சருக்கரை கலந்த காய்ச்சிய பாலில் ஏதோ மந்திரம் எழுதிப் பருகச் செய்ததும், அதன் மேற்படியேட்டில் எழுதியதைத் தனித்தனி எழுத்தை மூன்று முறையும், சேர்த்து வாசகமாக மூன்று முறையும் ஆசிரியர் சொல்ல அப்படியே என்னைத் தொடர்ந்து சொல்லும் படி செய்ததும் இவையாவும், ஒரு சிறு விநாயகர் வழிபாட்டிற்குப் பின்னரே நடைபெற்றதும் நினைவுக்கு வருகின்றன. மறு

2. குறள்-377

நாள் தொடங்கி பள்ளிக் கூடத்திற்கு முற்பகலும் பிற்பகலும் ஒழுங்காகப் போய் வந்ததும் நினைவுக்கு வருகின்றது.

**கல்வி முறை:** பள்ளிக்குச் சென்று வந்த சில நாட்களிலேயே ஆசிரியர், மாணாக்கர் இவர்களின் கவனத்தை ஈர்க்கச் செய்தேன். என்னுடைய சுறுசுறுப்பும், படிப்பில் காட்டிய மிக்க ஆர்வமும், ஒழுங்கு தவறாமல் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே பள்ளியில் இருப்பதும் எல்லோரும் மெச்சக் காரணமாக இருந்தன சில திங்களில் தமிழ் நெடுங் கணக்கைப் படிக்கவும், எழுதவும், கற்றுக் கொண்டமை அனைவரையும் வியக்க வைத்தன. ஓராண்டுக்குள் 1—10 வரை வாய்ப்பாடு பாடமாகி விட்டது. இன்றைய அரசுப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும் வகுப்பிற்கொரு ஆசிரியர் இருப்பதுபோல் இருக்க வேண்டும் என்றகட்டாயம் என் பள்ளியில் இல்லை. ஆண்டுதோறும் தேர்வுகள் வைத்துத் தேறியவர்களை வகுப்புயர்வு செய்யும் வழக்கம் இந்தத் திண்ணைப் பள்ளியில் இல்லை. முதலாண்டில் மணலில்தான் எண்களையும் எழுத்துகளையும் எழுதிக் கற்கக் வேண்டும். இரண்டு அல்லது மூன்றாவது ஆண்டில்தான் கற்பலகை, 'பலப்பம் ஆகியவற்றைப் பயன் படுத்தும் முறை தொடங்கும். அடுத்த ஆண்டில் பென்சிலைக் கொண்டு குறிப்பேட்டில் எழுதும் முறையும் தோன்றும். இதில் ஓரளவு கை தேர்ந்ததும் ரிலீப்முள் (Relief nib) பதித்த பேனாவினால் ஆசிரியரே கடுக்காயைக் கொண்டு காய்ச்சிச் சுட்ட மண்ணாலான மைக்கூட்டில் வழங்கும் மையைத் தொட்டு எழுதும் பயிற்சியும் தொடங்கும், முதலில் நான்கு கோடுகளும், பிறகு மூன்று கோடுகளும், அதன் பிறகு இரண்டு கோடுகளும், பின்னர் ஒருகோடுமாகப் போடப் பெற்றுள்ள குறிப்பேடுகள் பயன் படுத்தப் பெறும். பயிற்சியில் முன்னேற்றத்திற்கேற்றவாறு தேவையான கால கட்டத்தில் இவற்றை ஆசிரியர் பயன்படுத்தச் செய்வார். மணலில் எழுதும்போதும், கற்பலகையில் பலப்பத்தைக் கொண்டு

எழுதும்போதும், தாளில் பென்சிலால் எழுதும்போதும் ஆசிரியர் எழுத்தின் வடிவத்தில் கவனம் செலுத்தித் திருத்து வார். இதனால் எழுத்தின் சரியான வடிவம் சிறுவர்களின் மனத்தில் நன்கு பதியும்.

எழுதும்போது உட்கார்ந்து எழுதவேண்டிய நிலையைக் காட்டுவார். நேராக உட்கார்ந்து எழுதுமாறு வற்புறுத்து வார். உட்காருவது மாணாக்கர்கட்குச் சுகமாக இருக்கும் நிலையைக் காட்டி விளக்குவார். பலப்பம், பென்சில், பேனா இவற்றைக் குழந்தைகள் பிடித்தெழுதும் நிலையை நன்கு கண்காணிப்பார்; உடனுக்குடன் திருத்தவும் செய்வார். எழுத்துகளுக்கு இடையிலும், வரிகளுக்கு இடையிலும் சிறிது இடம் விட்டு எழுதும் பழக்கத்தைத் தொடக்கத்திலிருந்தே வற்புறுத்துவார். இதனால் குழந்தைகளின் கையெழுத்து முத்துக் கோத்தாற்போல் அழகாக அமைய ஏதுவாயிற்று.

இலிங்கச் செட்டியாரின் தொடக்கநிலைக் கல்வித்திட்டம் இக்காலத்தில் மிகச் சிறந்ததெனக் கருதப்பெறும் **டால்ட்டன் திட்டம்** என்ற அமெரிக்கக் கல்வித் திட்டத்தோடு ஓரளவு ஒப்பிட்டுப் பேசக் கூடியதாக இருந்தது. டால்ட்டன் திட்ட அமைப்பைப் போலவே செட்டியார் திட்டத்திலும் வகுப்பு அறைகள் இல்லை; பாடவேளைப் பட்டிகள் (Time-tables) இல்லை; தேர்வுகள், வகுப்பு மாற்றம் முதலிய அதிர்ச்சி தரும் நிகழ்ச்சிகள் இல்லை; வகுப்பு ஆசிரியர் என்ற ஒருவர் இல்லை. இலிங்கச் செட்டியார் மேற்குப் புறமாகத் திண்ணை யோரத்தில் 'கல்லாலின் புடையமர்ந்த தென்முகக் கடவுள் போல்' பனையோலையால் பின்னப்பெற்ற தடுக்கொன்றின் மீது வீற்றிருப்பார். இந்த நிலையிலேயே அனைத்தையும் கவனித்துக் கொள்வார். சில சமயம் ஊர்க்காரர்களுக்குப் புரோநோட்டுகள் எழுதுதல், கடிதங்கள் எழுதுதல் போன்ற 'சமூகத் தொண்டும்' நடைபெறும். இது பள்ளிவேலைக்குச்

சிறிதும் இடைஞ்சலாக இராது. வருகிறவர்களிடம் வீணாக அரட்டை அடிப்பதில்லை. ஒன்றிரண்டு பேச்சுடன் அனுப்பி விடுவார்.

**கா. நமச்சிவாய முதலியாரால்** எழுதப்பெற்ற புகழ் பெற்ற பாட நூல்கள் தாம் புழக்கத்தில் இருந்தன. அறிவியல், புவியியல், சமூகஇயல் போன்ற பாடநூல்கள் இங்குத் தலை காட்டுவதே இல்லை. உலகநீதி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, நல்வழி, நன்னெறி, விவேக சிந்தாமணி போன்ற நீதி நூல்களும்; அருணகிரி அந்தாதி' அறப்பளீசுவர சதகம், குமரேச சதகம்' போன்ற நூல்களும் கற்பிக்கப் பெற்றன. மாணாக்கர்கள் தங்கள் அறிவிற்கேற்ப, சுறுசுறுப்பாகப் படிக்கும் திறனுக்கேற்ப இந்நூல்களை ஒன்றன்பின் ஒன்றாகப் படித்துக் கொண்டே போகலாம். இவற்றை ஆசிரியர் மாணாக்கர்கட்குத் தனித்தனியே கற்பிப்பார்.

**சில பாடல்கள் :** சதகங்களில் பல பாடல்கள் அப்போது மனப்பாடம். அவற்றுள் இரண்டு பாடல்கள். இப்போது நினைவிற்கு வருகின்றன. 'பொருள் செயல் வகை' பற்றி ஒரு பாடல் :

புண்ணிய வசத்தினால் செல்வமது வரவேண்டும்;
பொருளை ரட்சிக்க வேண்டும்;
புத்தியுடன் அதுஒன்று நூறாக வேசெய்து
போதவும் வளர்க்க வேண்டும்;
உண்ணவேண்டும் பின்பு நல்லவஸ்த் ராபரணம்
உடலில் தரிக்க வேண்டும்;
உற்றபெரி யோர்கவிஞர் தமர்ஆது லர்க்குதவி
ஓங்கும்புகழ் தேட வேண்டும்;

மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டும்;
உயர்மோட்ச
வழிதேட வேண்டும்; அன்றி
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்க மறியாக் குருடராம்;
அண்ணலே! கங்கா குலத் தலைவன் மோழைதரும்
அழகன்எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே.[3]

[ஆதுலர் — தரித்திரர்]

இன்னொரு பாடல்; 'இதற்கு இது வேண்டுமெனல்' பற்றியது. இப் பாடல்:

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர்
தம்புத்தி கேட்க வேண்டும்;
தானதிக சூரனே யாகினுங் கூடவே
தளசேக ரங்கள் வேண்டும்;
கனக்கின்ற வித்துவா னாகிலுந் தன்னினுங்
கற்றோரை நத்த வேண்டும்;
காசினியை ஒருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்திரி வேண்டும்;
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகிலுஞ்
(சுதிகூட்ட ஒருவன் வேண்டும்;
சுடர்விளக் காயினும் நன்றாய் விளக்கித்)
தூண்டுகோ லொன்று வேண்டும்;
அனற்கண்ண னே! படிக சங்கநிநர் வண்ணனே!
ஐயனே! யருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்ப ளீசுர தேவனே.

---

3 அம்பலவாணக் கவிராயர்; அறப்பளீசுர சதகம்-7
4. ஷ. 36.

**'விவேக சிந்தாமணி'** என்னும் நூலில் பல பாடல்கள் மனப்பாடம், அவற்றில் இரண்டு மூன்றை நினைவு கூர்கின்றேன்.

ஒப்புடன் முகமலர்ந்தே
உபசரித்து உண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலும்
உண்பதே அமிர்தமாகும்;
முப்பழ மொடுபாலன்ன
முகங்கடுத் திருவராயின்
கப்பிய பசியினோடு
கடும்பசி யாகுந்தானே.[5]

சந்திக்கல் அருகிலுள்ள பல பெரியோர்கள் என்னை அழைத்துச் சில பாடல்களைக் கூறும்படி கேட்பார்கள்; நான் பிழையின்றி ஒப்புவித்தலைக் கேட்டு மகிழ்வார்கள்.

அடிக்கடி சொல்லும் இன்னொரு பாடல் :

நாய்வாலை அளவெடுத்துப் பெருக்கித் தீட்டி
நற்றமிழை எழுதஎழுத் தாணி யாமோ?
பேய்வாழும் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளி
பெரியவிளக் கேற்றி வைத்தால் வீடதாமோ?
தாய்வார்த்தை கேளாத சகசண் டிக்கென
சாற்றிடினும் உலுத்தகுணம் தவிர மாட்டான்;
ஈவாரை ஈயவொட்டான்; இவனும் ஈயான்;
எழுபிறப்பி னுங்கடைய இவன்பி றப்பே.[6]

[உலுத்த குணம்—உலோப குணம்]

இந்தப் பாடலைச் சொன்னதைக் கேட்டவுடன் மகிழ்ந்த பெரியோர்கள் பலர் என் மனக்கண்முன் நிற்கின்றனர்.

---

5. விவே. சிந்தா, 7
6. ஷை 14

ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்கள்வந்து தட்சணைக்குக் குறுக்கே நிற்கப்
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப்
பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணாதே.

இந்தப் பாட்டைக் கேட்டவர்கள் நான் அடிக்கடி சந்திக்கும் போதெல்லாம் கூறக்கேட்டு மகிழ்வதை இன்றும் நினைத்துப் பார்க்க முடிகின்றது.

**பள்ளி நடைமுறை :** பள்ளி நடைமுறை விநோதமாக இருக்கும். மாணாக்கர் அதிகாலையில் இருட்டோடு வந்து விடுவார்கள். முதலில் வருபவன் 'நான்தான் சரசுவதி' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வான். நான் பல முறை 'சரசுவதி' ஆனதை நினைவுகூர்கின்றேன். ஆசிரியர் வாராமலேயே **'முறைவைப்பு'** என்ற ஓர் அருமையான சடங்கு ஒழுங்காக நடைபெறும். இந்த முறைவைப்பில் அ, ஆ...என்று ஒவ்வோர் எழுத்தாக ஒரு மாணாக்கன் சொல்லுவான். மாணாக்கர்கள் அனைவரும் சேர்ந்தாற் போல் இவனைப் பின்பற்றிச் சொல்வார்கள். சில நாட்கள் 'தமிழ் நெடுங்கணக்கு' முழுவதும் இவ்வாறு முறை வைக்கப் பெறும். சில நாட்கள் கிழமைகளின் பெயர்கள், மாதங்களின் பெயர்கள் (சித்திரை, வைகாசி... ..... ஜனவரி, பிப்பிரவரி...) ஆண்டுகளின் பெயர்கள் (பிரபவ, விபவ...) நட்சத்திரங் களின் பெயர்கள் (அசுவனி, பரணி......) திதிகளின் பெயர் கள் (பிரதமை, துவிதை......) இந்த முறை வைப்பினாலேயே மாணாக்கர்கட்கு மனப்பாடமாகி விடும். தொடக்கத்தில்

7. டி. 77

இது குருட்டுப் பாடம்போல் தோன்றினாலும் நாளடைவில் மாணாக்கர்கள் அடையும் 'நடைமுறைப் பயன்' அளவிடற் கரியது.

இந்தமுறை வைப்பிலேயே மாணாக்கர்கள் வாய்பாடு, கொன்றைவேந்தன். வெற்றிவேற்கை முழுவதையும் கற்றுக் கொண்டு விடுவார்கள். எழுத்துகள் கற்கும் நிலையி லுள்ள மாணாக்கர்கள் கூட இந்த முறைவைப்பில் கலந்து கொள்வதால் எழுத்துகளைக் கற்பதற்கு முன்னதாகவே 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்', 'ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்' என்பன போன்ற நீதி களைப் பொட்டைப் பாடமாக ஒப்புவிப்பதால் இதனைக் கேட்கும் பெற்றோர்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள். 'செந்தமிழும் நாப்பழக்கம்' அல்லவா? இந்த முறை வைப்பினால் சிறுவர்களின் நாக்கு நன்கு திருந்தும். முறை வைப்பு காலை ஏழு மணி வரை நடைபெறும். இக்காலத்தில் ஆசிரியர் பெரும்பாலும் இருப்பதில்லை. தலைமை மாணவன் இதனை ஒழுங்காக நடத்தி விடுவான். ஏழு மணிக்கு மாணாக்கர்கள் வீடு திரும்பி விடுவார்கள். மீண்டும் காலை உணவிற்குப்பின் எட்டரை—ஒன்பது மணிக்குள் திரும்பி விடுவார்கள். இப்போது ஆசிரியர் இருப்பார். பாடங் களைக் கவனிப்பார்.

திங்கள்தோறும் ஒருமுறை சிறுவர்கள் எழுதும் மணலை மாற்ற வேண்டும். புழுதி நிறைந்த மணலில் இருப்பது உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் அல்லவா? மணலை சுமார் ஒரு கல் தொலைவிலுள்ள ஓர் சிற்றாற்றிலிருந்து கொணர்தல் வேண்டும். சிறுவர்களாகிய நாங்களே இதனைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். ஒவ்வொருவரும் வீட்டிலிருந்து 'விதைப் பொட்டி' (மிகச் சிறிய பொட்டி—விதைகளைக் காட்டில் தெளிக்கப் பயன்படுவது) கொண்டு வருவோம். அதிகாலை ஐந்தரை மணிக்கே பள்ளிக்கு வந்து விடுவோம்.

அன்று 'முறை வைப்பு' பள்ளியில் இல்லை. இரண்டு பேர்கள் வீதம் வரிசையாக அமைந்து செல்வோம். 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்'...என்று முன் வரிசையி லுள்ளவன் சொல்ல பின் வரிசையிலுள்ளவர்கள் சேர்ந்து சொல்ல இப்படிச் சொல்லிக் கொண்டே ஆறுவரையில் செல்வோம். அங்குத் தனித்தனியாகப் பிரிந்து சேடலற்ற நல்ல மணலை விதைப் பொட்டியில் நிரப்பிக் கொண்டு மீண்டும் ஓரிடத்தில் கூடுவோம். இரண்டு பேர் வீதம் வரிசை யாக நின்று கொண்டு முறைவைப்புடன் பள்ளி திரும்புவோம். இந்த முறை 'விநாயகர் அகவல்' முறை வைப்பில் இடம் பெறும். தொடக்கத்தில் இது எல்லோர் வாயிலும் நுழைவதற்குச் சிறிது சிரமமாக இருப்பினும் நாளடைவில் 'தண்ணிபட்ட பாடாய் விடும். உளறிக் கொட்டும் புதிதாய்ச் சேர்ந்த சிறுவர்கள் கூட நாளடைவில் நன்கு பின்பற்றிச் சொல்வதைக் காணலாம்.

இந்த முறைவைப்பை இக்காலக் கல்வி முறைகளுள் ஒன்றாகிய 'விளையாட்டு முறையில்' அடக்கிக் கூறலாம். உளவியற்கலை விரிவடைந்த பிறகு இயல்பூக்கங்கட்கும் (Instinct) அறிவு நிலைக்கும் உள்ள தொடர்பைக் காண விழைந்த முயற்சியே இதன் வடிவமாக அமைந்தது. இம் முறையில் ஒரு கடமையை நிறைவேற்றும் பொழுது கடமை திறமையாக முடிவடைவதுடன், அதனை நிறைவேற்றுவதில் ஓர் இன்பத்தையும் பெற முடிகின்றது. விளையாட்டு முறை உற்சாகமற்ற வேலையையும் உற்சாகத்துடன் செய்வதற்கு ஒருவித மனப்பான்மையைத் தருகின்றது. "வேலையையும் விளையாட்டையும் வேறுபடுத்திக் காட்டுவதென்பது எளிதன்று; இவற்றிற்கு விளக்கம் தருவது கடினமே. வேலை வாழ்வுடன் இணைந்த ஒரு புறம்பான செய்கை; ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தேவையை வேலை முற்றுவிக் கின்றது. ஆனால் விளையாட்டில் புறம்பான நோக்கு

மொன்றும் இல்லை; இஃது ஒருவருடைய மகிழ்ச்சியின் பொருட்டே மேற்கொள்ளப்படுகின்றது. வேலை மகிழ்ச்சி யுடன் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. விளையாட்டு மகிழ்ச்சியுடன் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. வேலையின் பயனைக் கண்ட பிறகுதான் மகிழ்ச்சி உண்டா கின்றது; விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் பொழுதே மகிழ்ச்சி ஏற்படுகின்றது. வேலை புறம்பான கட்டுப்பாடு களால் மேற்கொள்ளப்படுவது; விளையாட்டில் பல கட்டுப்பாடுகள் இருப்பினும் இவை விளையாடுபவர்களே ஏற்படுத்திக் கொண்டவை. வேலை உண்மை வாழ்வை யொட்டியது; விளையாட்டு பாவனை உலகைச் சார்ந்தது.

''இவ்வாறு ஒன்றையொன்று பிரித்தறியலாம் எனினும்' அடிப்படையான உண்மையொன்று உண்டு. இந்த வேறுபாடு கள் யாவும் செயல்களில் இல்லை; இவற்றில் ஈடுபடுபவர்களின் மனப்பான்மையைப் (Attitude) பொறுத்துள்ளது. எத் தொழிலையும் நாமே ஏற்று மகிழ்ச்சியுடன் ஆற்றத் தொடங்கினால் அஃது ஒரு பளுவாகத் தோன்றுவதில்லை; இத்தொழிலை மேற்கொள்ளும்பொழுது நம் இயல்பூக்கங்கள் திருப்தியடைந்தால் அது நமக்கு விளையாட்டாகவே தோன்றும். எனவேதான், உலகில் நடைபெறும் செயல் களனைத்தையும் ஆண்டவன் 'அலகிலா விளையாட்டாகச்' செய்து வருகின்றான் என்ற உண்மையையும் இலக்கியங்களில் காண்கின்றோம்.''[8]

இங்ஙனம் விளையாட்டுபோல் தோற்றுவிக்கப் பெற்ற இந்த 'முறைவைப்பினால்' தமிழ்மொழி, கணக்கு, நீதிகள், எதிலும் ஓர் ஒழுங்கு முறை, நாப்பழக்கம், ஒற்றுமை, பொதுநலனுக்கு உழைத்தல் முதலிய பல நற்பண்புகள் ஏற்பட வழியமைகின்றதைக் காண்கின்றோம். முதலில்

8. சுப்புரெட்டியார், ந: **தமிழ் பயிற்றும் முறை** (மூன்றாம் பதிப்பு) பக். 83-84

'குருட்டுப் பாடம்' போல் தோன்றினும் பிற்காலத்தில் இதன் பயன் தெரியும். என்னைப் பொறுத்தமட்டிலும் இது நன்கு தெரிகின்றது. நினைவாற்றல் வளர்வதற்கு நல்ல பயிற்சியாகவும் அமைகின்றது. 'சர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்பது ஒரு வேதவாக்கு. மெய்விளக்க அறிஞர்கட்குத்தான் இதன் உண்மை புலனாகும். ஆனால் 'எங்கும் பிள்ளையார் மயம்' என்பதைச் சிறுவர்கள் நன்கு அறிவார்கள். அரசமரத்துப் பிள்ளையார் முதல் அவ்வப்போது நாம் படைத்து மகிழும் பிள்ளையார் வரை (மஞ்சள் பிள்ளையார், சாணப் பிள்ளையார்) நன்கு அறிந்தவர்கள். எந்தக் கோயில் இருந்தாலும் இராவிட்டாலும், எல்லா ஊரிலும் பிள்ளையார் கோயில் கட்டாயம் இருக்கும்.

பிள்ளையாரைப் போற்றுகின்ற சிறுவர்கள் ஆற்றலையும் அறிவையும் பெறுவார்கள் என்ற தத்துவத்தில் பெரு நம்பிக்கை கொண்டவர் இலிங்கச் செட்டியார். இதனால் சிறு வயது முதலே விநாயகர் அகவலை விளையாட்டுபோல் கற்பிப்பதில் 'முறைவைப்பு' முறையை நுழைத்தார். அகவலில் அடங்கிய தத்துவம் புரியாவிட்டாலும் விநாயகர் வடிவத்தைக் காட்டும் முற்பகுதி ஓரளவு சிறுவர்கட்கு நன்கு தெளிவாகும். பள்ளியிலிருந்து மணல் கொள்ளப் புறப்படும் போது, ஊரைத் தாண்டாத நிலையில்,

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல்இசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

நான்ற வாயும் நால்இரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!

என்ற அடிகள் பாடப்பெறுகின்றன. சிறுவர்கள் இவற்றை உரத்துப் பாடுகின்றனர். இதனைக் கேட்கும் மூத்தோர் முதலியவர்கள் மிகவும் மகிழ்கின்றனர். மணல்வெளியை அடைவதற்குள் மூன்று முறை அகவல் பாடப்பெற்றுவிடும். மணல்வெளியை அடையும் போது,

கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்துஎனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

என்ற அடிகளைப் பாடி முடிப்பர். 'அப்பாடா!' என்று விதைப் பொட்டிகளைக் கீழே போட்டு மணலில் அமர்வர்.

சிறுவர்கள் தனித்தனியாகப் பிரிந்து நல்ல மணலைத் தேர்ந்தெடுத்துப் பொட்டியை நிரப்பிக் கொண்டு திரும்பவும் கூடி வரிசையாக நின்று கொள்வார்கள். "சீதக்களப" என்று தொடங்கி முறைவைப்புடன் திரும்புவார்கள். பள்ளியை வந்தடையும்போது 'வித்தக விநாயக விரைகழல் சரணே!' என்று முடியும் பெரிய ஒலியுடன். பள்ளியில் சேர்ந்த ஒன்றிரண்டு ஆண்டுகளில் இந்த 'முறைவைப்பு' என்னைச் சார்ந்து விட்டது. அகவலைப் படிக்கத் தெரியாவிட்டாலும் மனப்பாடம் ஆகிவிட்டது. நான் நன்றாகப் பாடுவதாக எண்ணி எனக்கே அந்தப் பொறுப்பை வழங்கி விட்டார்

ஆசிரியர். நாளடைவில் எல்லா நிகழ்ச்சிகளை நடத்தும் பொறுப்பும் எனக்கே வழங்கப்பட்டது. அந்தச் சிறுவயதில் நான் பெற்ற பொறுப்பை இன்று நினைந்து பெருமிதம் கொள்ளுகின்றேன்.

**இலிங்கச் செட்டியார்** விரும்புகிறவர்கட்குத் தெலுங்கும் கற்பிப்பார். கா. நமச்சிவாய முதலியார் எழுதிய தமிழ்ப் பாடல் நூல்களின் தெலுங்கு மொழியாக்க நூல்கள் புழக்கத்திலிருந்தன. வெள்ளைக்காரர் ஆட்சியில் மொழியின் அடிப்படையில் மாநிலப் பிரிவு இல்லையாதலால் முதலியார் அவர்களின் நூல்கள் தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற மூன்று மொழிகளிலும் மொழி பெயர்த்திருக்க வேண்டும் என நினைக்கத் தோன்றுகின்றது. சென்னை மாகாணம் முழுவதும் நான்கு மொழிகளிலும் இவரது பாட நூல்களே ஏகபோக உரிமையாகப் புழக்கத்தில் இருந்திருக்க வேண்டும்; இதனால்தான் அவருக்குச் செல்வச்செழிப்பும் இருந்தது. சிறந்த புலமையுடன் வள்ளண்மையும் இணைந் திருந்தமையால் வறுமையால் வாடும் பல புலவர்கள் இவரிடம் உதவி பெற்று மகிழ்ந்தனர். சென்னைக் கடற்கரை யில் அமைந்திருந்த இவர்தம் திருமாளிகைக்குப் புலவர் பெருமக்கள் சதா வருவதும் போவதுமாக இருக்கும் என்பதை அறியும்போது முதலியாரவர்களின் வள்ளண்மை தெளிவாகும். இது நிற்க. முதலியார் அவர்களின் தெலுங்கு மொழி பெயர்ப்பு நூல்களையே செட்டியாரவர்களும் எங்களை வாங்கச் செய்து அவற்றைக் கற்பித்தமையால் தெலுங்கு கற்றல் எளிதாக இருந்தது. இவற்றைத் தவிர 'பெத்த பால சிட்ச' (பெரிய பாலர் பயிற்சி நூல்) என்ற நூலையும் வாங்கச் செய்து அவற்றையும் பயன்படுத்துவார். ஓராண்டுதான் ஏனைய பாடங்களுடன் தெலுங்கும் பயின்றேன். பெரகம்பியிலிருந்து கோட்டாத்தூர் வர

நேர்ந்தமையால் தெலுங்கு மொழிப் பயிற்சி வீண் போயிற்று. எல்லாவற்றையும் மறந்தேன். என் செய்வது? அதனைக் கற்கும் 'ஊழ் இல்லை போலும்' என எண்ணு கின்றேன்.

குமிழி—4

# 4. திண்ணைப்பள்ளி நிகழ்ச்சிகள்

இலிங்கச் செட்டியார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் சிறப்பான நிகழ்ச்சிகளாகச் சொல்ல வேண்டு மானால் **பிள்ளையார் சதுர்த்தி, சரசுவதி பூசை** ஆக இரண்டைச் சொல்லலாம். எந்த விழாவாக இருந்தாலும் அவற்றில் பள்ளியில் பயிலும் சிறுவர், சிறுமியர் அனைவரை யும் அவற்றில் தொடர்பு கொள்ளச் செய்வதில் அதி சமர்த்தர் திரு. செட்டியார். சென்னை போன்ற நகரங்களில் மண்ணாலான பிள்ளையார் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்க்கு விற்கப் பெறுவதுபோல் அந்தச் சிற்றூரில் பிள்ளையார் விற்பதில்லை. திரு. செட்டியார் அவர்களே மிக அற்புத மாகப் பிள்ளையாரை உருவாக்கி விடுவார்.

**பிள்ளையார் சதுர்த்திக்கு** ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்னதாகவே சில பெரிய பிள்ளைகளைக் கொண்டு ஏரியிலிருந்து களிமண் கொணரச் செய்வார். பள்ளியில் கிடைக்கும் மணலில் நுண் மணலைச் சலித்தெடுத்து களிமண்ணோடு கலந்து, அவை நன்றாகக் கலக்குமாறு நீர் விட்டுப் பிசைந்து உருவம் அமைப்பதற்கு ஏற்றவாறு செய்து கொள்வார். தேவையான அளவு உருவத்திற்கேற்ப இரண்டு கையாலும் மண்ணை எடுத்துக் கொண்டு இரண்டு கை களாலும் அழுக்கி ஒரு கரட்டு உருவத்தை அமைத்து விடுவார். பிள்ளையாரின் இருபுயங்கள், கிரீடம் உள்ள தலை இவை

கிட்டத்தட்டச் சரியாக அமைந்து விடும். அதன் பிறகு முகம், துதிக்கை, கைகள் இவற்றைச் சரிசெய்து விடுவார். மணல் கலந்திருப்பதால் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிள்ளையார் வெடிக்காமல் இருக்கும். அதற்குப் பிறகுதான் அது நீர்ப் பிரளயத்தில் கலக்கப் போகின்றதே.

பிள்ளைகளில் படைப்பாற்றலைக் கருவிலே கொண்டவர்கள் மீதியுள்ள மண்ணை எடுத்துத் தாமே பிள்ளையார்களை அமைக்க முற்படுவார்கள். சிறுவயதில் 'போலச்செய்தல்' (Imitation) என்ற பண்பு எல்லோரிடமும் காணப்பெறும், பெரியவர்கள் செய்வதையெல்லாம் கூர்ந்து நோக்கி அவர்கள் செய்வதையே தாமும் செய்ய வேண்டும் என்று செய்ய முயல்வது குழந்தைகளின் இயல்பு என்பதை உளவியல் வல்லுநர்கள் விளக்கியுள்ளனர். இன்றும் புதுமுறைகளில் நகரங்களில் இயங்கும் குழந்தைப் பள்ளிகளில் (Kinder garten Schools) படங்கள் வரைதல், அச்சிட்ட படங்களைக் குறிப்பேடுகளில் ஒட்டிப் பார்வைக் குறிப்பேடாக்குதல் (Album), களிமண்ணைக் கொண்டு உருவங்கள் அமைத்தல் போன்ற செயல்களில் குழந்தைகளை ஈடுபடுத்தி இளம் வயதிலிருந்தே '**படைப்பாற்றல்**' அவர்களிடம் வளர்வதற்கு வாய்ப்புகள் அமைத்துத் தருவதைக் காணலாம்.

பிள்ளையார் சதுர்த்தியன்று ஆசிரியர் செய்த பிள்ளையார் வழிபாட்டிற்கு வைக்கப்பெறும். சிறுவர்கள் செய்தவற்றில் நல்லனவற்றைத் தேர்ந்தெடுத்து அவையும் ஆசிரியர் செய்த பிள்ளையாரின் அருகில் வைக்கப்பெறும். பிள்ளையார் சதுர்த்தியன்று ஆகும் செலவிற்குப் பிள்ளைகளே தலைக்கு ஓரணா, இரண்டணா என்று தந்துவிடுவார்கள். பெற்றோர்களும் மகிழ்ச்சியுடன் இச்சிறுதொகையைத் தம் பிள்ளைகள் மூலம் அனுப்பிவிடுவார்கள். மாணாக்கர்களே அறுகம்புல் சேகரித்து விடுவார்கள். சந்தனம் அரைத்தலில்

அவர்களே ஈடுபட்டு சந்தனக்குழம்பைத் தயாரித்துவிடுவார்கள். பொரி, கடலை, அவல், நாட்டுச் சருக்கரை கலந்து பெரிய தட்டில் வைக்கப்பெறும். திரு. செட்டியாரின் இல்லத்தரசி கடலை சுண்டல், கொழுக்கட்டை இவற்றைத் தயாரித்து அனுப்பிவிடுவார்கள். இவற்றையெல்லாம் சிறுவர்களாகிய நாங்களே பள்ளியில் கொண்டுவந்து சேர்ப்போம். பூசையைச் செட்டியாரே செய்வார். சிறுவர்கள் முறைவைப்பில் கலந்து கொள்வார்கள். நான்தான் ''சீதக்களப'' தொடங்குவேன். வழிபாட்டிற்கு பிறகு நைவேத்தியப் பொருள்கள் பிள்ளைகட்குப் பகிர்ந்தளிக்கப் பெறும். பிறகு மகிழ்ச்சியுடன் பிள்ளைகள் வீடு திரும்புவார்கள்.

மறுநாள் பிள்ளையாருக்குச் சாதாரண பூசைதான். மூன்றாம் நாள் செட்டியார் பின் தொடர, சிறுவர்கள் யாவரும் ''சீதக்களப'' சொல்லிக் கொண்டே அண்மையிலுள்ள ஒரு கிணற்றுக்குச் சென்று பிள்ளையாரைத் தண்ணீரில் விட்டு வருவோம். திரும்பும்போதும் ''சீதக்களப'' நடைபெறும்.

**சரசுவதி பூசை** நவராத்திரி விழாவை ஒட்டிவரும். நவராத்திரி தொடங்குவதற்கு ஒரு திங்களுக்கு முன்னரே கோலாட்டப் பயிற்சி தொடங்கிவிடும். இக்காலத்தில் விற்கப் பெறும் வண்ணக் கோல்கள் அக்காலத்தில் அதுவும் குக்கிராமத்தில் கிடைப்பதில்லை. உள்ளூர்த் தச்சர்களுக்கு நல்ல வேலை. எப்படியோ பெற்றோர்கள் அடவியிலிருந்து வம்பேரங்குச்சியைக் கொணர்ந்து தச்சு ஆசாரிகளிடம் தந்து அழகிய முறையில் கோலாட்டக் குச்சிகளைத் தயாரித்துத் தந்து விடுவார்கள். இந்தக் கோல்களால் கோலாட்டம் நடைபெறும்போது கேட்கும் ஒலி காதுகளுக்கு இனிமையாக இருக்கும். பல்வேறு கோலாட்டப் பாட்டுகளைச் சொல்லித் தருவார் செட்டியார். (இப்போது ஒன்றுகூட என் நினைவுக்

குமிழிகளில் எழவில்லை! பள்ளிக் கூடத்தில் நாடோறும் பிற்பகலில் கோலாட்ட ஒத்திகை நடைபெறும். இங்கும் நான்தான் கோலாட்டப் பாட்டுகளைத் தொடங்குவேன். சிறுவர்கள் என்னைப் பின்பற்றிச் சொல்லிக் கொண்டே கோலாட்டம் நடைபெறும். ஆட்டமும் பாட்டமும்[9] அற்புதமாக நடைபெறும். இந்த விளையாட்டுமுறைக் கல்வி அற்புதமானது. உடற்பயிற்சியும் உள்ளப் பயிற்சியும் கலந்த இம்முறையால் சிறுவர்களின் மனத்திற்குக் களிப்பும் மகிழ்ச்சியும் ஊற்றெடுக்கும்.

அக்காலத்தில் **'பின்னல் கோலாட்டம்'** என்ற வகை தான் இந்தக் கோலாட்ட விளையாட்டில் சிகரமாக விளங்கியது. மஞ்சள், சிவப்பு, ஊதா, பச்சை, வெள்ளை என்ற நிறங்களில் ஐந்து இணைக்கயிறுகள் (பத்து) ஒரு மரக்கட்டையாலான வட்ட அமைப்பில் தொங்கவிடப் பெற்றிருக்கும். இந்த அமைப்பைக் கூரையின் மேட்டு வளைவில் தொங்க விடுவார்கள். பக்கத்திற்கு ஐந்து பேர் வீதம் பத்துப் பேர்கள் இந்த ஆட்டத்தில் பங்கு பெறுவர். ஒவ்வொரு வண்ணக் கயிறும் எதிர் எதிராக இருக்குமாறு அமைத்துக் கொண்டு கயிற்றில் ஒரு கோலாட்டக் கழியைக் கட்டிக் கொண்டு மற்றொரு கழியால் ஒலியை எழுப்புவார் கள். இந்த ஆட்டத்திலும் பலவகைப் பாடல்கள் பங்குபெறும். பாலர்கட்குப் பாடல்கள் 'தண்ணிபட்டபாடு'. எல்லோருக்கும் பாடல்கள் நன்கு தெரியும்; எல்லாம் மனப்பாடம். இந்த ஆட்டத்திலும் நான்தான் பாடல்களைத் தொடங்குவேன். சிறுவர்கள் என்னைப் பின்பற்றிச் சொல்லிக் கொண்டே ஆட்டம் நடைபெறும். பாட்டைச் சொல்லிக் கொண்டே பாட்டிற்கேற்றவாறு கோல் ஒலியை எழுப்பிக் கொண்டே இணை இணையாகச் சிறுவர்கள்

---

9. இக்காலத்தார் கூறும் 'ஆட்டப்பாடல்கள் (Action songs) இவற்றையொத்தவையே.

சேர்ந்து இருவரிசைக்கிடையே நுழைந்து சென்று அடுத்த கோடியில் வரிசை மாறிச் சேர்ந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கூரையிலிருந்து தொங்கும் கயிறுகளில் பின்னல் சரியாக அமையும்.

பின்னல்களில் நாலைந்து வகை உண்டு. இப்போது என் நினைவிற்கு வருவன இரண்டு. ஒன்று, 'சடைப்பின்னல்'; இது மகளிர் தலையில் கூந்தலில் போட்டுக் கொள்ளும் சடைப் பின்னலைப் போன்றது. மற்றொன்று, சதுரப் பின்னல்; சதுரமாக அமையும்; இது மிக அழகாக அமையும். பஞ்சவண்ணக் கயிறுகளால் அமைக்கப்பெற்ற பின்னல் கண்டோர் களிப்பெய்தும் வண்ணம் அமையும். ஒவ்வொரு வகைப் பின்னலுக்கும் சிறுவர்களின் இணை எப்படிச் சென்று எப்படித் திரும்பி வரிசை மாறிச் சேரவேண்டும் என்பதற்கு ஒரு நியதி—ஒரு கணக்குமுறை—உண்டு. இந்த முறைகளில் வழுவாமல் கோலாட்டப் பாட்டுடன் ஆட்டம் நடைபெறும். இரண்டு மீட்டர் நீளம் பின்னல் அமைப்பு முடிந்ததும், பின்னர் பின்னல் அவிழ்க்கப்பெறும். இதில் சிறுவர்கள் சென்றமுறைக்கு எதிர் முறையாகக் கோலாட்டம் அடித்துக் கொண்டே திரும்புவார்கள். பின்னல் அவிழ்ந்து கொண்டே வரும். இந்த முறைகளில் ஏதோ தவறுகள் ஏற்பட்டுவிட்டால் பின்னல் பின்னப்படும்போது ஏற்பட்ட தவறுகள் அது பிரிக்கப்படும்போது தெரிந்துவிடும். பாட்டையும் ஆட்டத்தையும் நிறுத்திச் செட்டியார் மாணாக்கர்களைத் தக்கவாறு திரும்பி வருமாறு செய்து பின்னலில் ஏற்பட்ட பிழையை நீக்குவார். பின்னர் ஆட்டம் தொடங்கும்; பின்னலும் அழகாக அவிழ்ந்து கொண்டே வரும். இந்தப் பின்னல் வகைகளில் சதுரப் பின்னல்தான் சிறந்தது; இது சிறப்பாக நடைபெறுவதற்கு சிறுவர்களுக்கு அதிகமான பயிற்சியைத் தருவார் திரு செட்டியார்.

நவராத்திரி விழாவின் ஒன்பது நாளும் பள்ளியில் படிக்கும் சிறுவர்களின் வீடுதோறும் கோலாட்டம் நடைபெறும். முன்னதாகவே பெற்றோர்களிடம் நாளை உறுதி செய்து கொண்டு அந்தந்த வீடுகளுக்குச் செல்வோம். தெரு வழியாக வீடுவீடாகச் செல்லும்போது கோல்களைத் தட்டிக் கொண்டே பாட்டுகள் பாடிக் கொண்டே செல்வோம். ஊர் மக்கள் எங்களைப் பார்க்கப் பார்க்க எங்களுக்கு உற்சாகம் மிகும். பெருமிதத்துடன் நடந்து செல்வோம். அந்தந்த வீட்டுச் சிறுவர்கள் தம் வீட்டில் கோலாட்டம் அடிக்கும் போது மிக உற்சாகமாக அடிப்பர். தம் செல்வங்கள் நன்றாகக் கோல் போடுவதைப் பார்த்துப் பெற்றோர்களும் பெரியோர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைவர். ஆசிரியர்க்கு ஒரு தட்டில் வெற்றிலைப் பாக்கின்மீது ரூ 1, ரூ 2/ம் சரசுவதிப் பூசைக்காக அணா, 1, அல்லது 2-ம் வைத்து வழங்கப்பெறும். இதனை அந்தந்த வீட்டுச் சிறுவர்களே ஆசிரியரிடம் தருவார்கள். செல்வர்கள் வீட்டில் மட்டிலும் இரண்டு ரூபாய், இரண்டு அணாவிற்குக் குறையாது. வறியவர்கள் வீடுகளில் அரை ரூபாய், ஓரணாவிற்குக் குறையாது. நடுத்தர வீடுகளில் ஒரு ரூபாய், ஓரணாவிற்குக் குறையாமல் வழங்கப்பெறும். நவராத்திரி பத்து நாட்களும் இம்மாதிரி வீடு வீடாகச் சென்று கோலாட்டம் அடிப்பதே முழு வேலையாக இருக்கும். கோலாட்டத்தில் பங்கு பெறும் சிறுவர்கள் வண்ணக் காலுறையும் மேலுறையும் அணிந்து கொண்டு ஆடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வகுப்புகளில் பாடங்கள் நடைபெறா. கோலாட்டப் பாட்டுகளைச் சொல்லித் தருவதும், ஒரு வகையில் கல்வி கற்றல்தானே.

சரசுவதி பூசையன்று எல்லோருடைய நூல்கள், சுவடிகள் பள்ளிக்கூடத்தில் நிரல்பட அழகாக அடுக்கி வைக்கப் பெற்று அவற்றின்மீது கலைமகள் படமும் வைக்கப்பெறும்.

சரசுவதி அந்தாதியில் 4,5 வகுப்புகளில் படிப்போர் சில பாடல்களைச் சொல்வர். எல்லோருமாகச் சேர்ந்து ஏதோ சில பாடல்களைப் பாடுவோம். என்ன பாட்டுகள் பாடினோம் என்பது இப்போது நினைவில் இல்லை; ஏதோ பாடினோம் என்பது மட்டிலும் நினைவில் இருக்கின்றது. அவல், பொரி, கடலை (நாட்டுச் சருக்கரை கலந்தது), சுண்டல், வடை கலைமகளுக்கு நைவேத்தியமாகப் படைக்கப் பெறும். வடையும் சுண்டலும் ஆசிரியரின் இல்லத்தரசி அன்புடன் செய்து அனுப்புவார்கள். அவர்களும் சிலசமயம் பூசைக்கு வருவதுண்டு. அவர்கள் எல்லோரிடமும் காட்டும் தாய்ப் பாசத்தை இன்றும் நினைத்துப் பார்க்க முடிகின்றது.

சரசுவதி பூசைக்கு மறுநாள் **விஜயதசமி**. அந்த ஊரில் அம்பு போடுவதற்கு பசனை மடத்திலுள்ள கிருஷ்ணன் படத்தைத் தவிர வேறு திருக்கோயில்களில் திருமேனிகள் இல்லை. ஆகவே, அந்தப் படத்தை ஒரு சிறிய சப்பரத்தில் எழுந்தருளப் பண்ணிச் சுமார் இரவு 7½ மணிக்குமேல் வெளியில் கொணர்வார்கள். முறைப்படி பெரியவர்கள் அந்த விழாவை நடத்தி முடிப்பார்கள்.

விசயதசமியன்று ஊருக்கு மேற்புறமுள்ள பிள்ளையார் கோயிலுக்கு முன்புறம் மாலை 4½ம ணிக்கு மேல் சிறுவர்கள் யாவரும் ஒன்று கூடுவார்கள். ஆசிரியர் கற்றுத் தந்த பல்வேறு வகைக் கோலாட்டங்கள் அன்று அரங்கேற்றம் பெறும். ஊர் மக்களில் ஆண்களும் பெண்களும் எங்கள் கோலாட்ட விளையாட்டுகளைப் பார்க்க வந்து கூடி விடுவார்கள். ஆசிரியர் முகத்தில் மகிழ்ச்சிப் பெருக்குக் கொப்புளிப்பதைக் காண்போம். சிறுவர்கள் தவறின்றி ஒன்றாக ஆட வேண்டும் என்ற கவலை ரேகையும் முகத்தில் படர்ந்திருப்பதைப் பெரிய வர்கள் கவனித்து அறிய முடியும். தவறுகள் நிகழ்ந்தாலும் அவற்றையும் மக்கள் சுவைப்பார்கள். நாங்கள் சிறுவர்கள்

தாமே. இதற்காக ஆசிரியர் ஊர்ப்பெருமக்கள் முன்னிலையில் கடிந்து கொள்வதில்லை. அன்புடன் திருத்துவார். பள்ளிக்குத் திரும்பியதும் தவறுகள் செய்த சிறுவர்களை மட்டிலும் சற்றுக் கடிந்து கொள்வார். இவர்கள் தவறுகள் இழைக்காதிருந்தால் கோலாட்டம் மிகச் சிறந்திருக்கும் என்பதை அடிக்கடி சொல்லிக் காட்டுவார்.

இரண்டு உறுதியான மூங்கிற் கழிகளை நட்டு குறுக்கே ஒரு கழியைப் பொருத்திப் பின்னல் கோலாட்டத்திற்குத் தயார் செய்து வைத்திருப்பார். எல்லா வகைப் பின்னல்களும் அரங்கேற்றம் பெறும். சடைப் பின்னல் வகைகள், சதுரப் பின்னல் எல்லாம் நடைபெறும். கோலாட்ட விளையாட்டில் பின்னல் கோலாட்டம்தான் சிகரமாக அமையும். பெரும் பாலும் இதில் சிறுவர்கள் தவறுகள் இழைப்பதில்லை. ஊர்ப் பெருமக்களும் முக்கியமாக இந்த வகை ஆட்டங்களைத்தான் கவனிக்க வருவார்கள். இந்தப் பார்வையாளர்களின் முகத்தில் காணப்பெறும் மகிழ்ச்சிக்கேற்ப ஆசிரியரின் உற்சாகமும் மிகும். எங்கள் உற்சாகமும் பெருகி நிற்கும். வண்ண ஆடைகளை அணிந்து கொண்டு சிறுவர்கள் கோலாட்டம் போடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பள்ளி விழா ஊர் மக்களின் விழாவாக மாறி மக்கள் மகிழ்வதை இன்றும் நினைத்துப் பார்த்து அசை போட முடிகின்றது.

**அழுதலின் ஆழ்பொருள் :** பெரகம்பியில் செல்லப் பிள்ளையாக வளர்ந்த காலத்தில் என்னிடம் குறிப்பிடத்தக்க இரண்டு பண்புகள் துலங்கினதை இன்று நினைவு கூர்கின்றேன். ஒன்று, அழுது அழுதே காரியத்தைச் சாதித்துக் கொள்வது. பெரும்பாலும் இப்பண்பு குழந்தைகளிடம் காணப்பெறும் பண்புதான். பிறந்தவுடன் குழந்தை அழுகின்றது. அஃது அழுவதால்தான் மக்கட்பேறு பெற்றவர்கட்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகும். மக்கட்பேறு

நேரிட்ட இல்லங்கட்கு விசாரிக்க வரும் உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் 'குழந்தை அழுததா?' என்று கேட்பதை நாம் அறிவோம். சீதள அலமாரியை விட எத்தனையோ மடங்கு உயர்ந்த நிலையிலுள்ள தாயின் கருவறையில் எல்லா நலன்களும் பெற்றுப் பத்துத் திங்கள் பாங்குடன் வளர்ந்த குழந்தை புதியதோர் உலகிற்கு - இந்தக் கர்ம பூமிக்கு - வருகின்றது. தாயின் கருவறையிலிருக்கும்போது அதற்கு வேண்டிய 'உண்ணும் சோறு பருகும் நீர், தின்னும் வெற்றிலை'[10] முதலிய அனைத்தையும் அன்னையிடமிருந்தே பெற்று விடுகின்றது. அங்கு அதற்கு ஒரு குறையும் இல்லை. இங்ஙனம் 'செல்வக் களஞ்சியம்'போல் சேம அறையில் எல்லாப் பாதுகாப்புடன் இருக்கும் குழந்தை, தானே அனைத்தையும் தேடிக் கொள்ள வேண்டிய புதிய உலகிற்கு வருங்கால் அழாமல் என்ன செய்யும்? இந்த 'அழுகை மொழி தான்' குழந்தை தானாகக் கற்றுக் கொண்ட ஒரே மொழியாகும்; தன் உயிர்ப்பிலேயே கற்றுக் கொண்டதுமாகும். இந்த ஒரே மொழியைக் கொண்டே தன் பெற்றோரிடமிருந்து சில திங்கள் காலம் அனைத்தையும் பெற்று வாழ்ந்து வளர்ந்து வருகின்றது குழந்தை.

அறிவியல் நோக்கில் காணுவோமாயின் குழந்தைக்கு அழவேண்டிய இன்றியமையாமை உண்டு என்பதை அறியலாம். அன்னையின் கருவறையிலிருக்குங்கால் குழந்தை உயிர்ப்பதில்லை. அன்னையே அதனைச் செய்து அதற்கு வேண்டிய உயிர்க் காற்றை (Oxygen) நல்குகின்றாள். ஆதலால் கருவறையில் வாழும் குழந்தையின் நுரையீரல் (Lungs) செயற்படுவதில்லை. குழந்தை கருவறையிலிருந்து வெளிப் போந்ததும் அஃது அழுவதால் நுரையீரல் செயற்படத் தொடங்குகின்றது. பிறந்தவுடன் அஃது அழாவிடில்

10. இவை 'குறியீடுகள்'. தத்துவ நூலார் இவற்றைத் ''தாரக போஷக போக்கியங்கள்'' என்பர்.

மருத்துவப் பெண் அதனைக் கிள்ளியாவது அழவைக்கின்றாள். அதன் நுரையீரலைச் செயற்படச் செய்கின்றாள். இந்த உண்மைதான் 'குழந்தை அழுததா?' என்ன வினாவில் அடங்கியுள்ளது. ''அழுதபிள்ளை பால் குடிக்கும்'' என்ற பொன்மொழியில் அடங்கிக் கிடக்கும் உண்மையும் இதுதான். 'பால் குடிக்கும்' என்பது ஒரு மரபுத் தொடர்; 'பிழைக்கும்' என்பது இதன் பொருள். இங்ஙனம் பிறர் மகிழ அழுது பிழைத்த குழந்தை தானாக அறிந்து கொண்ட 'அழுதல்' மொழியைத் தன் வாழ்வுக்குப் பயன்படுத்திக் கொள்வதை அறிகின்றோம்.

சில குழந்தைகள் குற்றம் செய்து விட்டுத் தாமாகவே அழுகின்றன. பெற்றோரோ மற்றோரோ அதனைக் கடிவதை விட்டு அதன் மீது இரக்கம் கொள்கின்றனர். இந்த இரகசியத்தைக் குழந்தை அறிந்து அற்புதமாகப் பயன் படுத்திக் கொள்கின்றது. இந்த அழுதலைச் சிறந்ததோர் கருவியாகக் கொண்டு நான் காரியங்களைச் சாதித்துக் கொண்டதை இப்பொழுது நினைவுகூர்கின்றேன். ஒரு சமயம் திருப்பதிக்குச் சென்று வந்த நாராயணன் என்ற நண்பன் வீட்டில் சமாராதனை நடந்தது. அப்போது எனக்கு வயது ஆறு இருக்கும். உணவு பரிமாறுபவர்கள் என் இலையில் நெய் சாதித்து விட்டனர். நெய் எனக்குப் பிடிக்காத பொருள். 'வேண்டாம்' என்று சொல்வதற்கு முன் ஊற்றி விட்டனர். என்ன செய்வது? என் இயல்பை அறிந்து சொல்வதற்கு என் அம்மானோ பாட்டியோ அருகில் இல்லை. பெரிய அழுகையைத் தொடங்கி விட்டேன். அழுகையும் சாதாரண அழுகையன்று பெரிய தொழிற்சாலையில் ஊதப் பெறும் சங்கொலிபோன்றது அது! நெய் ஊற்றினவர் நெய் கலந்த உணவைத் தனியாக எடுத்தும் என் அழுகை நிற்க வில்லை. யாரோ என் அம்மானை இட்டு வந்து சமாதானம் செய்யச் செய்தனர். அவர் சொற்படி இலையை மாற்றினர்.

நெய் பட்ட இலையில் கூட உண்ண முடியாது; அந்த மணமே எனக்கு வாந்தியை உண்டு பண்ணும். இலையை மாற்றின பின்னர் தான் என் அழுகை நின்றது.

இன்னோர் பண்பு தனக்கு நேரிட்ட பழியைப் பிறர் மேல் சுமத்துவது. பெரும்பாலோரிடம் இந்த இயல்பைக் காணலாம். சிறுவயதில் இந்தப் பண்பு என்னிடம் இருந்தது இப்போது நினைவிற்கு வருகின்றது. (இப்போது அப்பண்பு என்னிடம் அறவே இல்லை; இறையருள் அதனைத் துடைத்து விட்டது). கண்ணன் பிறப்பு விழா முடிந்ததும், அந்த விழாவில் பயன்பட்ட வழுக்கு மரத்தைப் பசனை மடத்தருகிலுள்ள சாவடியில் கூரையோரத்தில் உட்புறமாகக் கட்டி வைப்பதுண்டு. பகல் நேரத்தில் குரங்குச் சேட்டை யுடைய சிறுவர்கள் சாவடியின் விட்டத்திலேறி விளை யாடுவதுண்டு. நானும் அந்த மாதிரிச் செயலில் ஈடுபட்டேன். கூரைக் கொம்புகளைப் பற்றிக் கொண்டு வழுக்கு மரத்தின் மீது கால் வைத்து மெதுவாக நகர்ந்து கொண்டு வரும் போது தவறிக் கீழே விழுந்து விட்டேன். அப்பொழுது மேற் பற்கள் விழாத நிலை. கீழே விழுந்த போது மேல் வரிசையி லிருந்து முன் பற்களில் இரண்டு உடைந்து வாயெல்லாம் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு விட்டது. ஒரே அழுகையுடன் வீடு திரும்பினேன். காரணம் கேட்ட என் பாட்டியிடம் ''கண்ணப்பாடியான்' தான் என்னைக் கீழே தள்ளி விட்டான்'' என்று பழியை ஒருவன்மீது சுமத்தினேன். கண்ணப்பாடியிலிருந்து என்னைப் போன்ற கிருஷ்ணசாமி என்ற ஒரு சிறுவன் தன் பாட்டி வீட்டில் வளர்ந்து வந்தான்; அவன் தாயை இழந்தவன். என் பாட்டி அவன் வீடு சென்று அவன் பாட்டியால் அவனுக்கு அடி வாங்கி வைத்தார். இந்தக் கிருட்டிணசாமி பின்னர் கண்ணப்பாடியிலுள்ள சொத்துகளை விற்றுக் கொண்டு பெரகம்பிக்கே குடியேறி விட்டான். வீடும் நிலமும் இங்கேயே வாங்கிக் கொண்டு மிக

நன்றாக வாழ்கின்றான். மகா சாதுவாகிய அவனுக்கு அடி வாங்கி வைத்தேனே என்று இப்பொழுது என் மனம் வருந்துகின்றது. பெரகம்பி நண்பர்களில் இவன் இன்றும் வாழ்வது எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஒவ்வொரு நாளும் பள்ளியில் முறை வைப்பு முடிந்து வீடு திரும்பும்போதும், முற்பகல் வேலை முடிந்து வீடு திரும்பும்போதும் மாலையில் வீடு திரும்பும்போதும் மெதுவாக நடந்து வருவதில்லை. ஒரே ஓட்டந்தான். இதனால் இடது கால் பெருவிரலுக்கு அடுத்த விரலில் கல்லடி பட்டுப் புண்ணாகும். பெரகம்பியிலிருந்த வரையில் இந்த விரலில் நல்லெண்ணெயில் அல்லது தேங்காய் எண்ணெயில் நனைக்கப்பெற்ற துணியைச் சுற்றிக் கொண்டு தான் இருப்பேன். அந்த விரலில் காயத்துடன் இருக்கும் நாட்கள் தாம் காயத்துடன் இல்லாத நாட்களை விட அதிகம். இந்த அநுபவமும் எனக்குப் போதவில்லை. துணி சுற்றிய விரலையும் மறந்து மீண்டும் ஓடுவேன். 'பட்ட காலிலே படும்' என்ற பழமொழிக் கிணங்க மீண்டும் அதே விரலில் தான் அடிபடும். ஆறாத புண்ணின்மீது திரும்பவும் அடி. இப்படித் தொடர்ந்து அடிபட்டு வந்ததால் அந்த விரலின் நகம் சொத்தையாகி விட்டது. இன்னும் அது அந்நிலையிலேயே இருந்து 'விழுப்புண்ணாக' நினைவுகூர்வதற்கு வாய்ப்பாக உள்ளது.

குமிழி—5

# 5. சிற்றூர்த் திருவிழாக்கள்

பெரகம்பியில் மூன்றே மூன்று திருவிழாக்கள்தாம் நடைபெற்றதை நான் கண்டதுண்டு. ஒன்று, ஆடிப் பதினெட்டு அன்று நடைபெறும் **கரக ஆட்ட விழா**. இதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். (குமிழி —1) இதில் மிகச்

சிறப்பாகச் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. இரண்டாவது **'கண்ணன் பிறப்பு'**த் திருவிழா இது மிகக் கோலாகலமாக நடைபெறும். இதில் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் எல்லோருமே பெரும்பங்கு கொள்வர். நகர்ப்புறங்களில் பெரும்பாலும் நடுத்தரக் குடும்பங்களில்—சிறப்பாக அந்தணர், அதிலும் வைணவர் இல்லங்களில்—நடைபெறுவது போன்ற 'வீட்டு விழா' நாட்டுப் புறங்களில் நடைபெறுவதை நான் பார்த்ததில்லை. பெரகம்பியில் 'வீட்டு விழா'வே இல்லையென்று சொல்லி விடலாம். மூன்றாவது' காமன் பண்டிகை. இது இளவேனிற் காலத்தில் நடைபெறும். அதாவது மாசி, பங்குனி மாதங்களில் இதனைக் கொண்டாடுவர். பிள்ளையார் கோயில், பசனை மடம் இவற்றின் அருகில் நான்கு வீதிகள் சந்திப்பில் உள்ள விசாலமான இடமே இதற்கு உகந்த இடமாக அமைந்தது.

இளவட்டங்களில் ஒரு செட்டியார் வீட்டுக் குடும்பம் பங்கு கொண்டது மிகவும் அற்புதமானது. அந்தக் குடும்பத்தில் இரண்டு சகோதரர்கள். அவர்களில் இளையவன் மிகத் துடுக்கானவன். அவனுடன் வேறு சில இளைஞர்களும் சேர்ந்து ஒரு பெரிய சப்பரத்தைச் சரிக் கட்டினர். மூங்கிற் சிம்புகளாலானது அப்பெரிய சப்பரம். வண்ணத்தாள்களை ஒட்டி, மேல் மூன்று அல்லது ஐந்து கலசங்களை பொன் தகடு போன்று பிரகாசிக்கும் குருநாதப் பட்டைத் தாள்களால் அமைத்துத் தயார் செய்தனர். சப்பரம் தயாரிப்பவர்கள் கூட இவ்வளவு அழகாகச் செய்ய முடியாது. வண்ணப் பாசிச்சரங்களையும் அசைந்தாடிகளையும் நாற்புறமும் தொங்கவிட்டு அலங்கரித்தனர். பெரியவர்கள் இந்தச் சப்பரத்தில் கண்ணன் எழுந்தருளி உலாவருவதற்கு ஒப்புக் கொண்டனர். சுமார் 20 வயதிற்குட்பட்ட இருபது இளைஞர்கள் இதில் பங்கு கொண்டிருந்தனர். நான், 6, 7 வயதுச் சிறுவனாதலால் இவற்றையெல்லாம் உன்னிப்பாகக்

கவனிப்பேனேயன்றி நேரடியாகப் பங்கு பெறுவதில்லை. அந்த இளைஞர்கள் என்னை எடுபிடி வேலைக்குப் பயன் படுத்திக் கொள்வர்.

**கண்ணன் பிறப்பு :** திருவிழாவன்று ஊர் முழுவதும் விழாக்கோலம் கொள்ளும். பல இடங்களில் வீதிகளின் குறுக்கே மாவிலை, வேப்பிலைத் தோரணங்கள் கட்டப்பட் டிருக்கும் பெரகம்பி என்ற அந்தச் சிற்றூர், ''வண்ணமாடங் கள் சூழ் திருக்கோட்டியூர்'' போல் காட்சி அளிக்கும் ஆயர்ப் பாடியின் சூழ்நிலை அமைந்து காட்டும், ஊர்ச் சிறுவர்கட்கு ஒரே குதூகலம்.

ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குத்தான் என்பார்;
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே.[11]

என்பன போன்ற சூழ்நிலையைக் காணலாம். பெரியவர்கள் பசனை பாடுவார்கள். விழாவன்று காலையிலிருந்தே பசனை மடத்தில் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் கூட்டம் போவதும் வருவதுமாக இருக்கும்.

மாலை 4 மணிக்கே இளைஞர்கள் நிர்மாணித்த சப்பரத்தில் கிருஷ்ணன் படம் வைக்கப்பெற்றுத் திருவுலா தொடங்கும். அந்தச் சிறுவயதில் வயதிற்கேற்ப உற்சாகம் கொண்டேன். கண்ணன் பவனி வருவது, சப்பரத்தில் எழுந்தருளித் திருவுலாப் போவது, இன்று என்னை,

தொடர்சங் கிலிகை சலார்பிலா ரென்னத்
    தூங்குபொன் மணியொலிப்பப்
படும்மும் மதப்புனல் சோர வாரணம்
    பையநின் றூர்வதுபோல்,

---

11. பெரியாழ். திரு. 1. 1: 2

உடன்கூடிக் கிண்கிணி யாரவாத ரிப்ப
உடைமணி பறைகறங்க
தடந்தா ளிணை கொண்டு சார்ங்கபாணி
தளர்நடை நடவானோ[12]

என்ற பாசுரத்தை நினைக்கச் செய்கின்றது. சப்பரத்தைச் சூழவும், அதற்கு முன்னும் பின்னும் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் சூழ கண்ணன் சப்பரத்தில் பவனி வரும் காட்சியைச் சற்றுத் தொலைவில் வீடுகளின் முன் வாசலில் நின்று காண்போருக்கு,

தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும்
தண்ணுமை எக்கம் மத்தளி தாழ்பீலி
குழல்களும் கீதமும் ஆகி எங்கும்
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு
மழைகொலோ வருகின்றது என்று சொல்லி
மங்கைமார் சாலக வாசல் பற்றி
நுழைவனர் நிற்பனர் ஆகி எங்கும்
உள்ளம் விட்டுஊண் மறந்துஒழிந் தாரே.[13]

என்ற பாசுரத்தில் வருணிக்கப்பெற்றுள்ள காட்சி நினைவுக்கு வரும்.

தொலைவில் சப்பரத்தில் கண்ணன் கையில் குழல் கொண்டு எழுந்தருளியிருக்கும் காட்சியைக் காண்போரிடம் அவன் குழல் கொண்டு ஊதி எழுப்பும் ஓசையைக் கேட்பது போன்ற ஒரு பிரமை ஏற்படும்.

சிறுவி ரல்கள் தடவிப்பரி மாற
செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்பக்
குறுவெ யர்ப்புரு வம்கூட லிப்பக்
கோவிந்தன் குழல்கொ டூதினபோது[14]

[கோட - வக்கரிப்ப; கூடலிப்ப - வளைய]

12. பெரியாழ். திரு. 1 8 : 1
13. ஷை 3.4 : 1
14. ஷை 3.6 : 8

என்ற காட்சியை அவர்கள் மானசீகமாகக் காண்பர். "செவி யுணர்வின் சுவை கொண்டு" மகிழ்வது போன்ற பாவனை தோன்றும். தம்மையே மறந்து பிருந்தாவனத்திலிருப்பது போன்ற பாவனையில் ஆழ்ந்து விடும் நிலைமை ஏற்பட்டு விடும். இந்தப் பாவனையில்,

பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந்தி றங்கிச் செவியாட்ட கில்லாவே.[15]

[கணங்கள் - கூட்டங்கள்; படுகாடு கிடத்தல் - வெட்டி விழுந்த காடுகள் போல கிடத்தல்]

மருண்டு மான்கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லும் கடைவாய்வழி சோர
இரண்டு பாடும் துலுங்காப் புடைபெயரா
எழுது சித்திரங்கள் போல நின்றனவே.[16]

[மருண்டு - அறிவழிந்து; வழிசோர - நழுவி விழ; இரண்டுபாடு - முன் பின்பக்கங்கள்; துலுங்கா - அசையாமல்]

மரங்கள் நின்றுமது தாரைகள் பாயும்;
மலர்கள் வீழும்வளர் கொம்புகள் தாழும்;
இரங்கும், கூம்பும்; திருமால் நின்றநின்ற
பக்கம் நோக்கிவை செய்யும் குணமே.[17]

என்ற காட்சிகள் அந்தச் சிறுவயதில் தோன்றாவிட்டாலும் இன்று அந்த நிகழ்ச்சியை மீண்டும் மனத்தில் குமிழியிடும் போது அவை மனத்திற்கு பக்தி விருந்தளிக்கின்றன.

---

15. பெரியாழ்; திரு. 3.6 : 8
16. ஷை 3.6 : 9
17. ஷை 3.6 : 10

பிள்ளையார் கோயிலுக்கு முன்னர் '**வழுக்குமரம்**' ஒன்று நடப்பெற்றிருக்கும்; அது சுமார் 20 அடி உயரம் உள்ளது. அதன் உச்சியில் மரத்தாலான கூண்டு பொருத்தப் பெற்றிருக்கும். ஓர் ஆள் அதில் நன்கு ஏறி உட்காரலாம். அந்தக் கூண்டினுள் முருக்கு, வடை, இனிப்புப் பலகார வகைகள், சின்ன உறியில் வெண்ணெய் முதலியவை தொங்கவிடப் பெற்றிருக்கும். வழுக்கு மரத்தில் கேழ்வரகுக் களி, விளக்கெண்ணெய் முதலிய வழுக்கிடு பொருள்கள் நன்றாகத் தடவப் பெற்றிருக்கும். பலர் வழுக்கு மரத்தில் ஏற முயல்வார்கள். அப்பொழுது பல சிறுவர்கள் மூங்கிலாலான பீச்சு குழலைக் கொண்டு ஏறுபவர்களின் உடலின்மீதும் முகத்தின் மீதும் தண்ணீர் பீச்சுவார்கள். இதனால் மரம் நன்றாக வழுக்கும்; ஏறுவது மிகக்கடினம். இறுதியாக ஏறுபவன் முதலில் பல சிறுவர்களையும் இளைஞர்களையும் ஏறச் செய்து வழுக்கிடு பொருள்களை வழுக்கி வழுக்கிக் குறைத்துவிடுவான். ஒருமணி நேரத்திற்குப் பிறகு ஏறத் திட்டமிட்டிருப்பவன் மிக்க சிரமத்துடன் ஏறி கூண்டிலுள்ள பொருள்களை உண்பான். முன்னால் ஏறுவதற்கு உதவி செய்தவர்கட்கும் மேலிருந்து வடை, முருக்கு போடுவான். இரண்டு முருக்குகளை விட்டு வைத்துவிட்டு இறங்கி விடுவான். மறுநாள் எளிதாக ஏறுபவர்க்கு இது பரிசு. இந்த விளையாட்டுகளையெல்லாம் சப்பரத்தில் வீற்றிருக்கும் கண்ணன் கண்டு களித்துக் கொண்டிருப்பான். தான் அவதார காலத்தில் சிறுவனாக இருந்தபொழுது செய்த சிறுகுறும்புகளையெல்லாம் இந்தக் கலியுகத்திலும் நினைவில் வைத்துக் கொண்டு மக்கள் செய்து மகிழ்வதைக் காணும்பொழுது அவனுக்கு மகிழ்ச்சி பொங்குமல்லவா?

**காமன் பண்டிகை**; நான் பெரகம்பியில் சிறுவனாக இருந்தபொழுது காமன் பண்டிகை மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது. சாதாரணமாக இப்பண்டிகை

(லாவணி என்றும் இது வழங்கப்பெறும்) மாசி மாதத்தில் ஏதோ ஒரு நாளில் நிறைவு பெறும் என்பதாக நினைவு. அறுபதாண்டுகட்கு முன்னர் நடைபெற்று வந்ததைச் சரி யாக நினைவு கூர முடியவில்லை. நினைவுக் குமிழி சரியாக எழ மறுக்கின்றது. பிள்ளையார் கோயிலருகே இது மாசி மாதம் தொடங்கும். நேராகவுள்ள சில கரும்புகளை தோகை வெளியில் தெரியுமாறு வைக்கோல் பிரியைச் சுற்றி ஒரு தூண் போலாக்கி நட்டு அதைச் சுற்றிலும் ஒரு பீடம் அமைக்கப் பெறும். அஃது எரிக்கப்பெறும் வரை நாடோறும் விளக்கு வைக்கப் பெற்று தீபாராதனை நடைபெறும். மன்மதன் இரதி வேடம் போட்டுக் கொண்டு பொருத்தமான பாடல் கள் பாடிக் கொண்டு வீடுதோறும் சென்று நிதி வசூல் செய்வார்கள். பக்க ஊர்கட்கும் சென்று வசூலிப்பது உண்டு. இந்த வசூலைக் கொண்டுதான் இந்த விழா கொண்டாடப் பெறுதல் வேண்டும்.

விழாவின் இறுதி நாளன்று ஒரு பெரிய படத்தேர் - தென்னை இளங்குருத்தினால் வேயப் பெற்றது - விழா நடைபெறும் இடத்தில் நிலையாக நிறுத்தப் பெற்றதாக நினைவு. ஆட்டமும் பாட்டமும் நடைபெற்ற பிறகு காமன் கொளுத்தப் பெறுவான். இரதி புலம்பல் அற்புதமாக நடை பெறும். இதனைக் கேட்பதற்கு ஊர்ப் பெருமக்கள் திரண்டு எழுவார்கள். இதில் இரதி வேடம் வழக்கமாகப் போட்டுக் கொள்பவர் கொசு ரெட்டியார் வீட்டைச் சேர்ந்த ஓர் இளைஞர். பார்ப்பதற்கு மெல்லியலார்போல் அழகாக இருந்ததால் இரதி வேடம் இவருக்கு நன்கு பொருந்திற்று. ஆண்டுதோறும் இவருக்கு இந்த வேடம் உரிமையாகப் போய்விட்டது. கொள்ளுக்கார ரெட்டியார் வீட்டைச் சேர்ந்தவர் மன்மதன் வேடம் போட்டுக் கொள்வார். அவர் மாநிறமாக இருப்பார். பொருத்தமான நல்ல

உயரம்; ஆண் வேடத்திற்குக் களையான முகம். இவருக்கு மன்மதன் வேடம் நன்கு பொருந்தியிருந்ததால், ஆண்டு தோறும் இவருக்கு இந்த வேடம் உரிமையாயிற்று. மன்மதன் வடிவமாக இருக்கும் 'கரும்புத்தூண்' எரிக்கப் பெற்றதும், இரதியின் புலம்பல் தொடங்கும்; இரதி வேடம் தாங்கியவர் அற்புதமாக ஒப்பாரி வைப்பார்; கேட்பவர்கள் யாவரும் மிகவும் உன்னிப்பாக ஒப்பாரிப் பாடல்களைக் கேட்டு மகிழ்வர்.

இதனையடுத்து **எரிந்த கட்சி, எரியாத கட்சி** என இரண்டு கட்சிகள் தோன்றி வாதங்கள் புரியும். கல்லாலின் கீழ் சிவபெருமான் தென்முகக் கடவுளாக வீற்றிருந்து சனகாதி முனிவர்கட்கு ஞானோபதேசம் செய்த காலத்தில் சிவபெருமான் அம்பிகையை விட்டுத் தனிமையாக இருந்த படியால் உலகில் பிறப்புச் செயல் நின்றுவிட்டது. தேவர்கள், முனிவர்கள் இவர்களின் வேண்டுகோட்கிணங்க மன்மதன் தென்முகக் கடவுள் மீது மலர்க்கணைகளை ஏவி காம உணர்வை எழுப்ப நினைத்தான். இதனால் சலனமுற்ற இறைவன் நெற்றிக் கண்ணைத் திறந்து விழித்ததனால் மன்மதன் எரிந்து சாம்பலானான். பின்னர் இரதி தேவியின் வேண்டுகோட்கிணங்க மன்மதன் அவள் கண்ணுக்கு மட்டிலும் புலப்படுவான் என்றும், பிறர் கண்களுக்குப் புலப்படான் என்றும் வரம் ஈந்தார் என்பது கதை.

இந்த வரலாற்றையொட்டி எரிந்த கட்சி மன்மதன் எரிந்தே போய் விட்டான் என்று சாதிப்பர். எரியாத கட்சி அவன் எரியாது இன்னும் உயிரோடு உள்ளான் என்று வாதிப்பர். இரு கட்சிகளைச் சார்ந்தவர்களும் தம் கட்சிக் கொள்கைகளுக்கேற்பப் பாடல்களைப் பாடுவர். இக் காலத்தில் நடைபெறும் சிறந்த பட்டிமன்றமும் வியக்கும் வண்ணம் வாதப்பிரதிவாதங்கள் நடைபெறும். ஒப்பாரிப்

பாடல்களும் வாதப்பிரதிவாதப் பாடல்களும் கேட்போருக்கு மகிழ்ச்சி விளைவிக்கும். விடியும்வரை இந்த நிகழ்ச்சிகளை உறக்கமின்றிக் கேட்டு மகிழ்வார்கள் ஊர் பெருமக்கள். இந்த விழாவை நான் என் பாட்டி மடியிலிருந்து கொண்டு அரைகுறைத் தூக்கத்துடன் கேட்டு மகிழ்ந்ததை இப்போது நினைவு கூர்கின்றேன். இந்தக் கதையையும் பாடல்களையும் புரிந்து கொள்ளும் வயது அப்போது எனக்கு இல்லையாயினும், ஏதோ பார்த்தவரையில் காட்சிகள் மட்டிலும் நினைவுக்கு வருகின்றன. இவை அரைகுறையாக எழும் குமிழிகளேயாகும் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

குமிழி—6

# 6. என் சிறுவயது விளையாட்டுகள்

**நீந்தக் கற்றேன்**; ஐந்து அல்லது ஆறு வயது நிரம்பும் முன்னே எனக்கு என் தாய்மாமன் நீந்தக் கற்றுக் கொடுத்து விட்டார். சுரைக் குடுக்கையை வலைப்பின்னலால் மூடி அதை முதுகுப் புறமாக இடுப்பில் கட்டி கிணற்றில் இறக்கி விடுவார். நான் காலையும் கையையும் எப்படி இயக்க வேண்டும் என்பதைச் சொல்லித் தருவார். சில நாட்கள் இப்படி நடைபெறும். அடுத்து இடுப்பளவு தண்ணீர் உள்ள கிணற்றில் சுரைக் குடுக்கையின்றி நீந்த விடுவார். இதில் தேர்ச்சி பெற்றதும் சற்று ஆழமாக நீர்உள்ள கிணறுகளில் இந்த நீச்சுப் பயிற்சி தொடரும். ஒன்றிரண்டு மாதங்களில் நன்றாக நீந்தக் கற்றுக் கொண்டேன். பெரும்பாலும் ஒவ்வொரு வீட்டுச் சிறுவர்கட்கும் பெற்றோர்களால் இந்த நீச்சுப்பயிற்சி தரப்பெறும். சிற்றூர்களில் அக்காலத்தில் நீந்தத் தெரியாத சிறுவர்களே இரார்.

நன்றாக நீந்தக் கற்றுக் கொண்ட பிறகு அதிகமாக நீராடுவது பூங்கேணியில்தான். முதலில் திட்டிலிருந்து குதிப்பேன். நாளடைவில் கபிலை ஏற்றத்தினருகிலிருந்து குதிப்பேன். சில சிறுவர்கள் கபிலை ஏற்றத்தின் மேலேறிக் குதிப்பதுண்டு. அக்காலத்தில் அந்தச் சிறுவயதில் எனக்கு அந்தத் துணிச்சல் வரவில்லை; அதனால் அப்படிக் குதிப்ப தில்லை. நாளடைவில் திட்டிலிருந்து தலைகீழாகப் பாயும் பழக்கம் கைவரப் பெற்றது. நாளடைவில் தண்ணீரில் மல்லாந்து அசையாது இருக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன். இப்படி எத்தனையோ விளையாட்டுகள். ஏழு அல்லது எட்டு வயதிற்குள்,

நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா இளமை[18]

என்று புறநானூற்றுப் புலவர் கூறுவதுபோல் இந்த விளை யாட்டெல்லாம் நடைபெற்றன.

ஏழு, அல்லது எட்டு வயதில் நான் விளையாடின விளையாட்டுகளுள் குறிப்பிடத் தக்கவை **கோலிகுண்டு விளையாட்டு, கிட்டிப்புள் விளையாட்டு, பம்பர விளையாட்டு, கார்த்தி சுற்றுதல், பீச்சுக்குழல் விளையாட்டு** உருவங்கள் அமைத்தல் முதலியவையாகும். கோலி விளையாட்டு இப்பொழுது சிறுவர்கள் எப்படி எப்படியோ விளையாடு கின்றனர். நான் எப்படி விளையாடினேன் என்பது இப்போது நினைவிலில்லை. மாவாலான வண்ணக் கோடு களிட்ட குண்டுகள்தாம் அன்று கிடைக்கும். இன்று எங்கும் கிடைக்கும் கண்ணாடியாலான குண்டுகளை அன்று நான் பார்த்ததே இல்லை. சுமார் மூன்று கல் தொலைவிலுள்ள 'செட்டிக்குளம்' என்ற ஊரில் சிவன் கோயிலில் தைப்பூசத்

18. புறம்-243

தேர்த்திருவிழாவிலும், பங்குனி மாதம் மலைமீதுள்ள முருகப் பெருமானுக்கு நடைபெறும் உத்திரத் தேர்விழா விலும் கூட கண்ணாடிக் குண்டுகள் கிடைப்பதில்லை. சுண்ணாம்பு மாவாலான குண்டுகளைக் கொண்டே கோலிக் குண்டு ஆட்டம் நடைபெற்று வந்தது. இதில் நான் உற்சாக மாக ஆடினேன் என்று சொல்லமுடியாது.

**கிட்டிப்புள் விளையாட்டில்** மிகவும் உற்சாகம் காட்டி னேன். மிகத் தொலைவில் கிட்டிப்புள்ளை அடித்து அனுப்பு வதில் பெருமகிழ்ச்சி கொள்வேன். இந்த விளையாட்டில் அடிக்கும் கோல் எந்த மரத்தாலானாலும் கெட்டிக்கோலாக இருந்தால் போதும். ஆனால் கிட்டிப்புள் மட்டிலும் காரைக் குச்சியாலானதாக இருந்தால் நலம் பயக்கும். இக்குச்சி மெல்லியதாகவும், உறுதியானதாகவும் சற்றுக் கனமான தாகவும் இருப்பதால் எளிதில் உடையாது; பிளந்து போகாது. அடிக்கும்போது வெகு தொலைவிற்கும் செல்லும். சிறுவர்களாகிய நாங்களே பக்கத்திலுள்ள காடு களில் அலைந்து திரிந்து இக்குச்சியைச் சேகரிப்போம்.

**பம்பர விளையாட்டு** என்ற ஒன்றை அக்காலத்தில் விளையாடுவோம். இக்காலத்தில் அங்காடிகளில் விற்கப் பெறும் வண்ணம் பூசிய கட்டைகளாலான பம்பரங்கள், அக் காலத்தில், அதுவும் சிற்றூர்களில், கிடைக்கா. உள்ளூர்த் தச்சர்களால் செய்யப்பெறும் உறுதியான மரக்கட்டை களாலான பம்பரங்கள்தாம் பயன்படுத்தப்பெறும். தரையில் ஒரு சிறுவட்டமான கோடு வரையப்பெறும். அந்தச் சிறு வட்டத்தில் முதலில் விழுமாறு பம்பரத்தை விடுவார்கள். விட முடியாதவர்கள் தங்கள் பம்பரங்களை அந்தக் கோட்டிற்குள் வைத்துவிட வேண்டும். விட முடிந்தவர்கள் கோட்டுக் குள்ளிருக்கும் பம்பரங்களைக் குத்துமாறு தங்கள் பம்பரங்களை விடுவார்கள். அவை குத்துப்பட்டு கோட்டுக்கு

வெளியில் வரும், கோட்டுக்குள்ளிருக்கும் பம்பரங்கள் வெளி வரும் வரை ஆட்டம் தொடர்ந்து நடைபெறும். எல்லாம் வெளியில் வந்தவுடன் மீண்டும் ஆட்டம் தொடங்கும். ஏழெட்டுச் சிறுவர்கள் சேர்ந்து இந்த ஆட்டம் ஆடுவார்கள்.

**'பிள்ளையார் பந்து விளையாட்டு'** மிகவும் உற்சாக மானது. ஒரு செங்கல் அல்லது நிற்கக் கூடிய கருங்கல் சிராய் ஒன்று இவ்விளையாட்டுக்குத் தேவையானது. இக்காலத்தில் எளிதாகக் கிடைக்கும் பழைய டென்னிஸ் பந்தை அக் காலத்தில் சிற்றூர்களில் நினைத்துப் பார்க்கவும் முடியாது. ஆதலால் இப்பந்தை சிறுவர்களாகிய நாங்களே தயார் செய்து கொள்வோம். பழைய கந்தல்களை உருட்டி வைத்து அதன்மீது ரிப்பன்போல் கிழித்த கெட்டித் துணியை குறுக்கும் நெடுக்குமாகப் போர்த்திக் கெட்டியான உருண்டை யாகச் செய்து கொள்வோம். கந்தலுக்குப் பதிலாக கொட்டையுடன் கூடிய பருத்தியைப் பயன்படுத்தலாம். பந்து இலேசாகவும், மெதுவாகவும் இருக்க வேண்டுமானால் கொட்டை நீக்கிய பஞ்சைப் பயன்படுத்துதல் வேண்டும். இரண்டிலும் ரிப்பன்போல் கிழித்த துணியைப் பயன் படுத்துதல் வேண்டும். பழைய கிழிந்த சமுக்காளத்தில் பாவாக (நெடுக்காக) உள்ள நூல் கெட்டியாக இருக்கும். அதை முப்பட்டை ஊசியில் கோத்து உருண்டையான துணிப் பந்தின்மீது அழகாகப் பின்ன வேண்டும். முதலில் ஒரு பாதி யையும் பின்னர் அடுத்த பாதியையும் பின்னுதல் வேண்டும். இப்படிப் பின்னப்பட்ட பந்து நீண்டநாள் நன்றாக உழைக்கும். மேலே குறிப்பிட்ட செங்கல், அல்லது கருங்கல் லாலான சிராயை நிறுத்தி வைத்து ஒரு குறிப்பிட்ட அளவு தொலைவில் நின்று கொண்டு பந்தினால் பிள்ளையாரை வீழ்த்த வேண்டும். செங்கல் உடையுமாதலால் கருங்கல் சிராயே இவ்விளையாட்டிற்கு மிகவும் உகந்தது. வீழ்த்தும்

வரை ஒருவரே ஆடிக் கொண்டிருக்கலாம். தவறும்போது அடுத்த சிறுவன் வீழ்த்தத் தொடங்குவான். ஒவ்வொருவரும் தமக்கெனப் பந்துகளை வைத்துக் கொண்டிருப்பர். பந்து தயாரிப்பதில் நான் தனித் திறமையை வளர்த்துக் கொண்டிருந்ததால், பந்து தயாரிக்கப் பலர் என்னை நாடுவார்கள். நான் பலருக்கு இதில் உதவுவேன்.

**ஆட்டைப் பிடிப்பேன் கோனாரே :** இதைத்தவிர 'ஆட்டைப் பிடிப்பேன் கோனாரே' என்ற விளையாட்டு ஒன்று இரவில் நிலவு ஒளியில் விளையாடுவது உண்டு. ஒருவன் இடையன் (கோனார்). அவனது இடுப்பு அரைஞாண் கயிற்று அல்லது இடுப்பு வேட்டியின் பின் விளிம்பைப் பற்றிக் கொண்டு பத்துப் பன்னிரண்டு சிறுவர்கள் ஒருவர்பின் ஒருவ ராக வரிசையாக நிற்பர். முதலில் நிற்பவன் திடமானவனாக இருப்பான். அதே மாதிரி திடமான மற்றொருவன் அவனுக்கு முன்னால் நிற்பான். இவன் தான் 'நரியனார், இவன் 'ஆட்டைப் பிடிப்பேன் கோனாரே' என்று சொல்லிக் கொண்டு வரிசையின் இறுதியிலுள்ள சிறுவனைத் தொட முயல்வான்; சுற்றிச் சுற்றி ஓடுவான். வரிசையின் முன்னால் இருப்பவன் 'ஏன் பிடிப்பாய் நரியனாரே' என்று சொல்லிக் கொண்டு இரண்டு கைகளையும் விரித்தவண்ணம் அவனை மறிப்பான். இவனுக்குப் பின்னால் வரிசையாக இருப்பவர் கள் 'ஆடுகள்'. இவர்கள் பக்கவாட்டில் அசைந்து ஓடிக் கொண்டு நரியனாருக்கு அகப்படாமல் இருப்பார்கள். பெரும்பாலும் இவர்கள் உயரத்தையொட்டி வரிசையாக நிறுத்தப் பெற்றிருப்பார்கள். இறுதியில் இருப்பவன் மிகச் சிறியவனாக இருப்பான். ஆட்டம் விறுவிறுப்பாகச் சூடு பிடிக்கும்போது நரியனார் கோனாரையும் மீறி ஒவ்வொரு ஆடுகளாக வீழ்த்துவான் (தொடுவான்). எல்லா ஆடுகளும்

வீழ்த்தப் பெற்றபிறகு நரியனார் கோனாராகவும் கோனார் நரியனராகவும் மாறி விளையாடுவார்கள். இந்த விளை யாட்டு அனைவருக்கும் உற்சாகத்தைத் தரும்.

**கால்தூக்கும் கணக்கப்பிள்ளை:** இஃது இன்னொரு விளை யாட்டாகும். ஒருவர் கை விரல்களுடன் மற்றொருவர் கை விரல்களைக் கோத்துக் கொண்டு இருவர் இணைந்து நிற்பர். மூன்றாமவன் தனது ஒரு முழங்காலை விரல்களின் இணைப்பில் ஊன்றிக் கொண்டும் தமது இரு கைகளையும் இருவர் தோள்களில் போட்டுக் கொண்டும் அமைவான். இவனது மற்றொரு காலை நாண்காமவன் தூக்கிப் பிடித்துக் கொள்வான். இவன்தான் 'கால் தூக்கும் கணக்கப்பிள்ளை', முதல் இருவரும் 'கால் தூக்குகிற கணக்குப் பிள்ளைக்கு மாதம் பத்து ரூபா' என்று சொல்லிக் கொண்டே நடந்து செல்வர். இந்த விளையாட்டு சிறுவர்களை மாற்றிக் கொண்டு தொடர்ந்து நடைபெறும். இந்த விளையாட்டும் முன்னிரவில் நிலவு ஒளியில்தான் நடைபெறும்.

தீபாவளியன்று பட்டாசு, மத்தாப்புக் கொளுத்துவது போல் கார்த்திகையன்று, நாங்களே தயாரித்த கார்த்திப் பையைச் சுற்றுவோம்; பொறி பொறியாகப் பொறிவதைக் கண்டு மகிழ்வார்கள் பெரியவர்கள். ஒரு சாண் நீளமும் நாலு அங்குல அகலமும் உள்ள பழைய துணியைக் கொண்டு துணிப் பைகளைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். அடுப்புக் கரியைத் தூளாக்கி அதில் நெற்பதிர், வரகுஉமி இவற்றை அளவாகக் கலந்து பைகளை நிரப்புதல் வேண்டும். உப்பைப் பொடியாக்கி அதில் கலந்து கொண்டால் பொறியும் போது சிறுசிறு ஒலியுண்டாகிப் பொறிவதைப் பொலி வாக்கும். இந்தப் பைகளை மூன்று கவடுகளாலான அலரிக் குச்சியில் இடுக்கி விழாமல் செய்து கொள்ளவேண்டும். இதை நாலு முழக் கயிற்றில் நீட்டிக் கொள்ள வேண்டும். பிறகு பையில் கனன்று கொண்டிருக்கும் கரிநெருப்பை

வைத்து தலையைச் சுற்றி வருமாறு கைகளால் பெருவட்ட மாகச் சுற்றினால் அற்புதமாக பொறியும் பொறி வட்டங் களைக் கண்டு மகிழலாம். துணிப் பைகளுக்குப் பதிலாக பீர்க்கம் நெற்றைப் பயன் படுத்தலாம். காம்புப் பக்கம் ஓட்டை உண்டாக்கி விதைகளை நீக்க வேண்டும். நெற்றை நையப் புடைத்து மேற்பக்கை நீக்கி வலைப் பகுதியில் (இது மூன்று அறைகளாக இருக்கும்) கரி-உமி-உப்புக் கலவைகளை நிரப்பிக் கொண்டு பயன் படுத்தலாம். வலைப்பகுதி நன்கு பொறிவதற்குத் துணையாக அமையும். பதிர் உமி இவற்றிற்குப் பதிலாகப் பனம் பூவைப் பொடியாக்கிப் பயன் படுத்தப் பெறுவதும் உண்டு. இக்கலவை மிக நன்றாகப் பொறியும். கார்த்திகை மாதம் கார்த்திகையன்று நடை பெறும் விளையாட்டு இது. 'கார்த்திகை விளக்கு' வருவ தற்கு ஒருவாரத்திற்கு முன்பிருந்தே ஆயத்தம் தொடங்கி விடும்.

பீச்சுக்குழல் விளையாட்டை வழுக்கு மரம் பற்றிக் கூறும் போது குறிப்பிட்டேன். இரண்டு அல்லது மூன்றங் குலம் குறுக்களவுள்ள மூங்கில் குழாய் இதற்குத்தேவை; ஒரு கணு போதுமானது, ஒரு பக்கம் கணு அடைப்பு முழுவதை யும் நீங்குதல் வேண்டும்; மறுபக்கமுள்ள ஒரு சிறு துவாரம் செய்து கொள்ள வேண்டும். கெட்டியான மூக்கில் பிளப்பு அல்லது வேறு கெட்டியான கோலில் பழைய கந்தல்களைப் பொருத்தி அதனை மூங்கில் குழாயில் செருகுதல் வேண்டும். இது கெட்டியாக மேலும் கீழும் நகரும்போது ஓர் அழகிய பீச்சுக் குழாயாகிவிடும். தண்ணீரில் இக்குழலை வைத்து கோலை இழுத்தால் தண்ணீர் குழாயில் ஓட்டை வழி யாகச் சென்று நிரம்பும். பிறகு கோலை அழுத்தினால்

துவாரம் வழியாக தண்ணீர் தாரையாகப் பீச்சப்படும். இதை கொண்டுதான் வழுக்கு மரம் ஏறுபவன் மீது சிறுவர்கள் நீரைப் பீச்சுவார்கள்.

**உருவம் அமைத்தல் :** களிமண்ணைக் கொண்டு பிள்ளையார் உருவம் அமைத்தலை முன்னர் எழுந்த குமிழியொன்றில் குறிப்பிட்டேன். அதைத் தொடர்ந்து உருவம் அமைத்தல் நடைபெறும். பெரும்பாலும் இதற்கு ஆலம் பிசினைப் பயன் படுத்துவோம். ஏரிக் கரையின் முகப்பில் ஒரு சிறிய ஆலமரம் இருந்தது. சிறுவனாகிய என்னால் அதில் ஏற முடிந்தது. அதில் பல இடங்களில் கூரான கல்லால் கொத்திவிட்டால் பால் வடிந்து ஒரு வாரத்தில் பிசின் கிடைக்கும். அதைச் சேகரித்து வைத்துக் கொண்டு சிவலிங்கம், பிள்ளையார், வாத்து, குருவி, காக்கை, நாய் முதலிய உருவங்களை அமைத்து மகிழ்வேன். கிட்டத்தட்ட நான் அமைக்கும் உருவங்கள் அந்தந்த மூல உருவங்கள் போலவே இருக்கும். இக்காலத்தில் பாலர் பள்ளிகளில் (Nursery School) வெள்ளைக் களிமண், பாரிஸ்காரை முதலியவற்றைக் கொண்டு சிறுவர்-சிறுமிகளிடம் உருவம் அமைக்கும் பயிற்சியைத் தருகின்றனர் அல்லவா? இத்தகைய பயிற்சிக்கு வழி கோலினவர் எங்கள் ஆசிரியர் இலிங்கச் செட்டியார் என்று கூறினால் அஃது எள்ளளவும் மிகையன்று. இதனால் கைவண்ணப் பயிற்சியும் கற்பனையாற்றலும் சேர்ந்து சிறுவர்களிடம் படைப்பாற்றல் வளரும் என்று இக்கால உளவியல் அறிஞர்கள் கூறும் தத்துவம் இலிங்கச் செட்டியாரின் திருவுள்ளத்தில் உதித்ததை நினைந்து நினைந்து வியப்படைகின்றேன். அதுவும் பத்தாண்டுகள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியனாக இருந்து சிறுவர்களைக் கவனித்துப் பெற்ற அநுபவம், பத்து ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியனாகப் பணியாற்றும்போது பல மேனாட்டுக் கற்பிக்கும் முறைகள், கல்வி உளவியல் ஆகிய

நூல்களைப் படித்து அதனால் பெற்ற உயர் கருத்துகளின் அநுபவம், அக்காலத்தில் பாலர் பள்ளி முதல் உயர் நிலைப் பள்ளி வரையில் மாணாக்கர்களின் செயல்களை நேரில் கண்டதால் பெற்ற அநுபவம் ஆகியவை ஒன்று சேர்ந்து இந்த வியப்பினை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

குமிழி –7

# 7. இளமை வாழ்க்கையில் திருப்பம்

என் அம்மான் மனைவியை இழந்தார். ஏதோ நோய் வாய்ப் பட்டு அவர்கள் கால கதியை அடைந்து விட்டார்கள். அவர்களின் ஒரே குழந்தை - செல்லபாப்பா - தாயைப்பெற்ற தன் பாட்டியார் வீட்டில் வளர்ந்து வரலானாள். என் தாய் மாமன் மறுமணம் செய்து கொண்டார். பண்ணையார் வீட்டுக் குடும்பத்தில் புயல் எழும்பத் தொடங்கியது. என் பள்ளி வாழ்க்கையிலும் பெருத்த மாற்றம் நிகழ்ந்தது. திருமணம் ஆகி ஒன்றிரண்டு திங்களில் நானும், என் தாயைப் பெற்ற பாட்டியாரும் வீட்டைவிட்டு விரட்டப்பெற்றோம் என்று சொல்லும் அளவுக்கு நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக விரைவாக நடைபெற்றன. இவற்றையெல்லாம் விரிவாக விளக்கத் தேவையில்லை. எல்லாக் குடும்பங்களிலும் சாதாரணமாக நடைபெறுபவையே. எனக்கு அருமையாகக் கற்பித்த ஆசிரியரையும், ‘பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து வளர்த்த’ என் தாய்மாமனையும் விட்டுப் பிரியும்போது என் கண்களில் நீர் தாரை தாரையாக வழிந் தோடினதை இப்போது நினைந்து பார்க்கிறேன். என் அம்மானின் மனநிலை எப்படி இருந்தது என்பதை அந்த வயதில் என்னால் கணித்துப் பார்க்க இயலாது போயினும்,

இளம் மனைவியின் உறவு என் தாய்மாமன் என்மீது காட்டிய அன்பு, பாசம் இவற்றையெல்லாம் மறைத்திருக்க வேண்டும் என்று இப்போது நினைக்கத் தோன்றுகின்றது.

கோட்டத்தூர் வரும்போது என் கைகளில் தங்கக் காப்பும் தங்கக் கொலுசும் இருந்தன. இவை பன்னிரண்டு சவரன்கள். இதற்குமுன் பன்னிரண்டு சவரன் மதிப்புள்ள தங்க அரைஞாண் கட்டியிருந்தேன். அது எப்படியோ களவு போய்விட்டது. பெரகம்பிக்கு அருகிலிருக்கும் தேனூரைச் சார்ந்த தூர உறவு உள்ள ஒரு பாட்டிதான் களவு செய்தார் கள் என்பதை என் பாட்டியாரும் அன்னையாரும் பேசிக் கொண்டதை இப்போது நினைவு கூர்கின்றேன். அதன் பிறகு அந்தத் தேனூர்ப் பாட்டியின் உறவு அறுந்தே போயிற்று. குற்றமுள்ள மனம், சாடையாகப் பேசும் எங்கள் வீட்டுப் பேச்சு ஆகியவை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

என் தாய்மாமன் திருமணத்திற்கு வேண்டுமென்று பதினெட்டு சவரன்களை என் தாயார் வாங்கித் தந்திருந் தார்கள். அந்தக் காலத்தில் ஒரு சவரன் விலை ரூ 13/- அல்லது ரூ 13.50 ஆக இருந்தது. புதிதாகப் புகுந்த அம்மையாரால் விளைவிக்கப்பெற்ற கசப்பை அறிந்ததும் என் பாட்டியார் பதினெட்டு சவரன்களையும் என் தாயா ரிடம் எடுத்துத் தந்து விட்டார்கள். இதனால் என் பாட்டி தன் மகள் வீட்டைப் புகலிடமாக அடை வேண்டிய தாயிற்று.

சுமார் நான்கு ஆண்டு காலம் கோட்டாத்தூரில் என் வீட்டில் வாழ்ந்தார்கள் என் பாட்டியார். என்மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார்கள். என் தாய்மாமனின் பிரிவு இவர்களுடைய அன்பை மேலும் பெருக்கி விட்டது. நான் வெளியூருக்கு உயர் கல்விப் பெறப் போகவேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்த பொழுதெல்லாம் கண்

கலங்கினார்கள். அவர்கள் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந் திருந்தால் என் மேல்படிப்பு பாழடைந்திருக்கும். மேற் படிப்பு படிக்கும் ஊழ் எனக்கு இருந்ததால் என் பாட்டியார் நான்கு ஆண்டு காலத்திற்குள் காலகதி அடைந்து விட்டார்கள்.

என் தாய்மாமனுக்குக் குழந்தையுள்ளம். ஓரிரண்டு ஆண்டுக்குள் எங்கள்மீது என் தாய்மாமனின் அன்பும் பாசமும் துளிர்விடத் தொடங்கின. பெரகம்பியிலிருந்து துறையூர் என்ற சிறு நகரத்திற்குப் போகும்போது கோட்டாத்தூருக்குப் வராமல் நேர் வழியில் போய்விடுவார். திரும்பும்போது துறையூரில் ஒரு கோமுட்டி செட்டியார் சிறந்த முறையில் தயாரிக்கும் நெய் (வெண்ணெய்) பிசுகோத்தை வாங்கி வந்து என்னிடம் தந்து விட்டுப் போவார். நாளடைவில் விரோதம் குறைந்துவிட்டது. என் பாட்டியார் மறைவுக்கு வந்து சேர்ந்தார் தனியாக. பதினைந்தாம் நாள் காரியம் பெரகம்பியில் தன் இல்லத்தில் நடத்தினார். நானும் என் தாயாரும் அதற்குப் போயிருந் தோம். அதன்பிறகு பெரகம்பிக்குப் போகும் வேலையே இல்லை. என் கவனம் எல்லாம் உயர்படிப்பிலேயே சென்று விட்டது.

பெரகம்பியில் வகுப்புத் தோழர்களாகவும் ஆருயிர் நண்பர்களாகவும் இருந்தோர் இப்போது நினைவுக்கு வருகின்றார்கள். கோட்டத்தூர் நாராயணன், கீச்சி ரெட்டியார் வீட்டுக் கிருஷ்ணசாமி, வேங்கடாசலம், அரங்க சாமி, கோபால்; வரகுபாடி வீட்டுக் கிருஷ்ணசாமி, மூக்கன் என்று செல்லமாக அழைக்கப்படும் அரங்கசாமி, கோபால் ஆகிய சகோதரர்கள். போஜன், பூசாரி ரெட்டியார் வீட்டுக் கிருஷ்ணசாமி, அவர் தம்பி இராமசாமி, கப்பாடி துரைசாமி பாபுரெட்டி, மொட்டை ரெட்டியார் வீட்டு ரங்கசாமி, செல்ல

முத்து ஆகியோர் குறிப்பிடத்தக்க வகுப்புத் தோழர்கள் பெண் பிள்ளைகளில் தனலட்சுமி, செல்லம்மாள், பெரிய காமாட்சி, சின்ன காமாட்சி இவர்கள் குறிப்பிடத்தக்க வகுப்புத் தோழியர்கள். இவர்களில் பெரும்பாலோர் காலகதி அடைந்து விட்டனர். பூசாரி வீட்டு இராமசாமி, செல்லமுத்து, கோபால், அங்கசாமி, பெரிய காமாட்சி, சின்ன காமாட்சி ஆகியோர் மட்டிலும் இன்னும் வாழ்ந்து வருகின்றனர் என்பதை அறிகின்றேன்.

சில ஆண்டுகட்கு முன்னர் ஒய்வு பெற்றுச் சென்னையில் குடியேறி கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றி வந்தபொழுது போஜன் என்பவர் துறவுக் கோலத்தில் சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடத்தில் என் அலுவலகத்தில் வந்து சந்தித்தார்; அவருடன் இன்னொரு துறவியும் வந்தார். நான் தலைமைப் பதிப்பாசிரியராக நியமிக்கப் பெற்றதைச் செய்தித் தாள்களில் பார்த்ததாகவும், அதனால் தாம்பெற்ற மகிழ்ச்சியை நேரில் தெரிவிப்பதற்கு வந்ததாகவும் தெரிவித்தார்கள். அதனை ஆசியாக நினைந்து மகிழ்ந்தேன். சிற்றுண்டி, காஃபி வழங்கி இருவரையும் அனுப்பி வைத்தேன். அதன் பிறகு சில திங்கள் கழித்து வாரணாசியிலிருந்து போஜன் கடிதம் எழுதினார். இப்போது அவர் இருக்கும் இடம் அறியக் கூடவில்லை. போஜன் என் வகுப்புத் தோழனாக இருக்கும்பொழுது நாவிதர், உடையார், வண்ணார் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் தன்னை 'போஜன்' என்று அழைக்கக்கூடாது என்றும் 'போஜர்' என்றே அழைக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியைக் கேட்டு அன்றும் சிரித்தேன்; அதை நினைக்கும்போது இன்றும் சிரிப்பு வருகின்றது. அந்தச் சிறுவயதிலேயே 'தன் முனைப்பு' 'சாதி ஆணவம்' ஆட்கொள்வதை நினைந்து பார்க்க முடிகின்றது.

பெரகம்பி நண்பர்களில் வரகுப்பாடி கிருஷ்ணசாமியும் மொட்டை ரெட்டியார் வீட்டு ரங்கசாமியும் பாம்பு கடித்து இறந்தார்கள். இவர்களைத் தவிர வேட்டகுடித்தம்பு என்ற பணக்காரர் ஒருவரும் வேறு சிலரும் பாம்பு கடித்தே மரித்தனர் என்ற செய்தியும் எனக்கு எட்டியது. இந்த நிகழ்ச்சிகள் அடிக்கடி என் கனவில் வரும். எனக்கும் பாம்புக் கடி இருக்குமோ என்று அஞ்சி விழித்துக் கொள்வேன். இப்போதெல்லாம் இத்தகைய கனவுகளால் அதிர்ச்சியடைவதில்லை. வைணவம் என் குருதியோடு கலந்து விட்டமையால் ஆதிசேஷன் என்னை ஒன்றும் செய்யான் என்ற நம்பிக்கையும், அப்படி ஏதாவது செய்தாலும் பெரிய திருவடி (கருடன்) என்னைக் காப்பான் என்ற நம்பிக்கையும் ஆழமாக ஏற்பட்டு விட்டதால் அச்சம் போய் விட்டது.

கோட்டாத்தூரில் நான்கு ஆண்டுகள் கழகத் தொடக்கப் பள்ளியிலும், சாமுவேல் பிள்ளை என்பவரால் நடத்தப்பெற்ற ஆங்கிலப் பள்ளியிலும் படித்தபோது அதிகமான நண்பர்கள் ஏற்படவில்லை. இருந்த போதிலும் குறிப்பிடத் தக்கவர்கள் ராமுடு, சுப்பு அய்யர், சிதம்பரம், கீரம்பூர் இராசகோபால், கணபதி, பெ. அரங்கசாமி, கிருஷ்ணசாமி, இராசமாணிக்கம் மோர்சு ரெட்டியார் வீட்டு துரைசாமி, நாராயணசாமி, கங்காணியார் வீட்டு சோமசுந்தரம், விருத்தாசல ரெட்டியார் வீட்டு இராமசாமி, குஞ்சு பிள்ளை, பெண் பிள்ளைகளில் செல்ல பாப்பா ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களில் ராமுடு சுப்பு அய்யர், பெ. அரங்கசாமி நாராயணசாமி இவர்கள் காலகதி அடைந்து விட்டனர். இராசமாணிக்கம் எங்கோ சென்று வியாபாரம் செய்கிறதாகக் கேள்வி. குஞ்சு பிள்ளை மேலூர் வட்டத்தில் (மதுரை வட்டம்) ஏதோ ஊரில் திருமணம் ஆகி மாமனார் வீட்டிற்கே போய் விட்டார். துரைசாமி பெரம்பலூர் வட்டத்தில் ஏதோ ஊரில் குடியேறி விட்டார். கீரம்பூர் இராசகோபால்

தன் பாட்டி வீட்டில் வாழ்ந்து வந்தவர், கீரம்பூருக்கே, தன் சொந்த ஊருக்கே, போய் விட்டார். ஏனையோர் இன்றும் கோட்டாத்தூரிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

கோட்டாத்தூரில் என் பக்கத்து வீட்டுப் பெண் மேலே குறிப்பிட்ட செல்லப் பாப்பா கழகப் பள்ளியில் என்னுடன் கீழ் வகுப்பில் பயின்றாள். என் அன்னையாரும் இவள் அன்னையாரும் நெருங்கிய நண்பர்கள். இவர்கள் இருவரும் செல்ல பாப்பாவை எனக்குத் திருமணம் செய்து வைப்பது என்று அடிக்கடிப் பேசிக் கொள்வதைக் கேட்டதுண்டு. அப்பேச்சுகள் இப்போது நினைவுக்கு வருகின்றன. என் அம்மான் மகளுக்கு அடுத்த செல்லபாப்பா இந்தப் பெண். விளையாட்டுப் பையனாக இருந்தபோது இந்தத் திருமணப் பேச்சு என் சிந்தனையில் ஏறவில்லை. 'திருமணங்கள் உம்பருலகில் உறுதிப் படுகின்றன' என்ற பொன் மொழியைக் கேட்கும் வயது வந்த பிறகு திருமணம் அவரவர் ஊழின்படி நடைபெறும் என்ற நம்பிக்கை வேரூன்றி விட்டது. பல்லாண்டுகள் திருமணம் பற்றிய சிந்தனையின்றியே என் கல்வி வாழ்க்கை நடைபெற்று வந்தது.

## II கோட்டாத்தூரில்—தொடக்கநிலைப்பள்ளி வாழ்வில்



### 8. சொந்த ஊர் வாசம்

கோட்டாத்தூர் என் தந்தையார் பிறந்த ஊர். இது தான் என் சொந்த ஊர். இந்த ஊரைப்பற்றியும் சிறிது கூறுவேன். பெரகம்பியை விடச் சற்று பெரிய ஊர். சற்று நாகரிகத்திலும் சிறந்த ஊராகத் திகழ்ந்தது. கிழக்கு மேற்காக மூன்று வீதிகள். இவற்றைக் குறுக்கே வெட்டுகின்ற போக்கில் தென்வடலாக மூன்று தெருக்கள். இவற்றைத் தவிர வீதிகளிடையே குறுக்கு வழிகளாக அமைந்த பல சந்துகள். கிழக்கு மேற்காக உள்ள நடுவீதியின் மேல் கோடியில் ஓர் அழகிய பிள்ளையார் கோயில். உள்ளூர்ப் பண்டாரம் ஒருவர் இரண்டு வேளை வழிபாடு செய்வார். இதற்கும் மேற்கே ஒரு சாவடி; கிராம முனிசிப்பு வீடு. அதிகாலையில் திருக்கோயிலுக்கு முன்நின்று சங்கொலி எழுப்புவார் பண்டாரம். கீழ்க்கோடியில் கழகத் தொடக்கப்பள்ளி. கிழக்கு மேற்காக உள்ள வடக்குத் தெருவின் கீழ்க்கோடியில் ஈசுவரன் கோயில். குருக்கள் ஒருவர் இரண்டு வேளை வழிபாடுகட்கு வசதிகள் செய்து தருவார்; தாமும் வழிபாடு நடத்துவார். இத்தெருவின் மேல்கோடியில் ஒட்டர், நாவிதர், வண்ணார் வாழ்கின்றனர். தெருவின் நடுவில் வடபுறத்தில் துலுக்கர், குறும்பர் வாழ்கின்றனர். தென்வடலாகவுள்ள கிழக்குத்

தெருவின் நடுவில் அருகருகே பசனைமடம் கம்பத்தடிப் பெருமாள் கோயில், திருமால் ஆலயம், மாரியம்மன் கோயில் உள்ளன. பசனை மடத்தில் கண்ணன் திருவுருவம் கொண்ட ஓர் அழகிய படம் வைக்கப்பெற்றுள்ளது. திருமால் திருக் கோயில் மிக அழகாகக் கட்டப்பெற்றுள்ளது. திருமால் ஆலயத்திலும் பசனை மடத்திலும் நாடோறும் இரண்டு முறை ஒரு சோழிய பிராமணர் வழிபாடுகள் நடத்துவார். மாரியம்மன் கோயிலில் இரண்டுமுறை வழிபாடுகள் நடத்து வார் உள்ளூர்ப் பண்டாரம். அதிகாலையில் இவர் இங்கு சங்கொலியும் எழுப்புவார்.

கிழக்குத் தெருவின் தென்கோடியில் ஒரு மகளிர்பள்ளி உள்ளது. இதைத் தொடர்ந்து அரிசனச் சேரி உள்ளது. இங்கு பள்ளர், பறையர், சக்கிலியர், வள்ளுவர் என்ற நான்குபிரிவு அரிசனமக்கள் வாழ்கின்றனர். இவர்களில் முந்நூறு குடும்பம் இருப்பதாகச் சொல்வர். இவற்றிற்கு மேலும் இருக்கலாம். இவர்கள் ஊர்ப் பெருமக்களின் நிலங்களில் உழவுத்தொழில் செய்வர். இத்தெருவின் தொடர்ச்சி ஏரிப்பாசனம் உள்ள வயலில் போய் முடிகின்றது. (இப்போது இந்த வயலின் குறுக்கே சாலை அமைக்கப்பெற்றுத் துறையூர்—கோட்டாத் தூர்—புத்தனாம் பட்டி—ஓமாந்தூர் வழியாகச் செல்லும் பேருந்துகள் செல்கின்றன). வயலின் தென்கோடியில் ஒரு பிடாரிக் கோயில் உள்ளது. இதில் நாடோறும் ஒரு முறை வழிபாடு நடக்கும். உள்ளூர்ப் பண்டாரம்தான் இதற்குப் பொறுப்பாளர். வடக்கு-தெற்காகவுள்ள மேற்குத் தெருவின் தென்கோடியில் அம்பலக்காரர், மூங்கில் தட்டி பின்னும் குறவர்கள் வாழ்கின்றனர். தெற்குத் தெருவில் தான் மளிகைக் கடை, துணிக்கடை இவை உள்ளன. இத் தெருவிலிருந்துதான் இரட்டை மாட்டு வண்டிகளில் தானியங்கள், வெல்லம், பருத்தி, மிளகாய், எலுமிச்சைபழம்

முதலியவை சுமார் 25 கல் தொலைவில் தென் திசையிலுள்ள திருச்சிக்கு ஏற்றுமதி செய்யப் பெறுகின்றன. அக்காலத்தில் பேருந்தோ சிற்றுந்தோ பாரப்பொறி உந்துகளோ (Lorries) இல்லை.

ஊருக்கு வடக்கில் தெற்கு-வடக்காகவுள்ள தெருவின் வடகோடியில் மார்க்கண்டன் கோயில் உள்ளது. இதனைத் தொடர்ந்து தென் வடலாகச் சேணியர் தெரு உள்ளது. தெலுங்கில் இவர்களைப் 'பத்மசாலியர்' என்று வழங்குவர். இவர்கள் தெலுங்குமொழி பேசும் பெருமக்கள். ஒருவருக்கும் தெலுங்கு படிக்கவும் தெரியாது; எழுதவும் தெரியாது. சில சமயம் இப்பெருமக்கள் மார்க்கண்டனுக்குத் திருவிழா நடத்துவர்.

ஊருக்கு மேற்புறம் ஊரையொட்டிப் பெரிய ஏரி ஒன்று உள்ளது. நீர் நிரம்பினால் குறைந்தது நான்கு திங்கள் வயல்கட்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். நான் உள்ளூர்ப் பள்ளியில் பயின்ற காலத்திலும் (1925-30), துறையூர் (1930)' முசிறியில் (1931-34) படித்த காலத்திலும் ஆண்டுதோறும் தவறாமல் ஏரி நிரம்பி 10-15 நாட்கள் கடை வழியும் கிழக்கு-மேற்காகவுள்ள நடுத் தெருவிலும் பிள்ளையார் கோயில்வரை (சுமார் 300 அடி தொலைவுவரை) நீர், ஊற்றெடுத்துக் கசியும்) கடந்த நாற்பது யாண்டுகளாக, ஒரு சில ஆண்டுகளைத் தவிர, இந்த ஏரி நிரம்பி வழிந்ததைப் பார்த்ததும் இல்லை; கேட்டதும் இல்லை. சரியாக மழை தவறாது பெய்வதில்லை.

அரிசி விற்றிடும் அந்தணர்க் கோர்மழை
வரிசை தப்பிய மன்னருக் கோர்மழை
புருஷ னைக்கொன்ற பூவையர்க் கோர்மழை
வருஷ மூன்றும் மழையெனப் பெய்யுமே[1]

1. விவேக சிந்தாமணி-27.

என்ற பாடல்தான் இப்போது நினைவிற்கு வருகின்றது. பொதுவாக இன்று அரசு பரிபாலினத்திலும், மக்கள் பொது வாழ்விலும் அறமும் ஒழுக்கமும் குன்றி வருவதைத்தான் காணமுடிகின்றது.

**வெள்ளரிக்காய் விருந்து :** ஓரிருமுறை நான் உள்ளூர்ப் பள்ளியில் பயின்ற காலத்தில் ஏரி நீர் வற்றியவுடன் ஊரில் பலர் ஏரியில் வெள்ளரி பயிரிட்டதைக் கண்டது உண்டு. சேற்றில் நடந்து சென்று பெரிய சோளத்தட்டைகளை நட்டு அடையாளமிட்டுத் தங்களுக்கென இடத்தை ஒதுக்கிவைத்துக் கொள்வர். ஈரம் காய்ந்து பதமாக இருக்கும் தருணத்தில் வெள்ளரி விதைகளை நடுவர். செடிகள் காய்க்கும் பருவம் வரும்போது தங்கள் தங்கள் இடங்களில் கம்பந்தட்டை சோளத் தட்டை, வைக்கோல் முதலியவைகளைக் கொண்டு குடிசைகளை எழுப்பி அவற்றில் இரவில்தங்குவர். தோட்டம் போடாத மக்களும் அக்கம் பக்கத்து ஊர்ப் பெருமக்களும் வந்து வெள்ளரிப்பிஞ்சு,வெள்ளரிப்பழம் இவற்றை விலைக்குப் பெற்றுச் செல்வர். நாட்டுச் சருக்கரையைக் கலந்து வெள்ளரிப் பழத்தைச் சாப்பிடுவர். உப்பு-மிளகு-பொட்டுக் கடலை, உப்பு-மிளகாய்-பொட்டுக் கடலையாலான பொடியைத் தூவி வெள்ளரிப் பிஞ்சுகளை உண்பர். காய்ப்பதற்குள் கோடைக் காலமும் வந்துவிடும். வெள்ளரிப்பிஞ்சு தேவாமிருதமாக இனிக்கும்; கோடை வெப்பத்தைத் தணிக்கும் இறைவனின் வரப்பிரசாதமன்றோ வெள்ளரிப் பிஞ்சு?

நானும் நண்பர்களும் சேர்ந்து கொண்டு தோட்டம் தோட்டமாகச் சென்று வருவோம். போகும்போது சிறிய கத்தியையும் மிளகுப் பொடியையும் கொண்டு செல்வோம். சில்லரைக் காசும் எடுத்துச் செல்வோம். பெரும்பாலும் சிறுவர்களாகிய எங்கட்கு இலவசமாகவே பிஞ்சுகளை அன்புடன் வழங்குவர் தோட்டக்காரர்கள். அப்படிக் கிடைக்காத நிலையில் விலைக்கு வாங்கி உண்போம்.

மாலை வேளைகளில் குடிசைகளில் தங்கித் தென்றலை அநுபவிப்போம். நிலவு காயும் இரவுகளில்-அதுவும் முழு மதியம் நாளன்று-இந்த அநுபவத்தால் பெறும் இன்பம் சொல்லுந்தரமன்று.

பூங்கொத்து மேய்ந்த புதிய மணவறையில்
ஆங்கொத்து நீவா புரண்மனையை—நீங்கித்தான்
பந்தியம் போது பசுந்தேவன் மேலிறைக்க
அந்தியம் போதுவிளை யாடுவாய்[2]

[அரண்மனை யென்றது சோலையை. பந்தி அம்போது-வரிசையாகிய அழகிய மலர்கள்]

என்ற பல பட்டடைச் சொக்கநாதப்பிள்ளை யவர்களின் தென்றலின் வருணனையை அப்போது சிந்திக்கும் வயது வாராதிருந்தாலும் இப்போது சிந்தித்து மகிழ முடிகின்றது.

இப்பொழுது ஏரி முழுவதும் கருவேல மரங்கள் அடர்ந்துள்ளன. பல ஆண்டுகட் கொருமுறை அம்மரங்களை ஏலம்விட்டு அரசுக்கு வருவாயாகச் செய்கின்றனர் .ஏழைகள் தெரிந்தோ தெரியாமலோ விறகு வெட்டிக் கொள்ளுகின்றனர். உழவர்கள் ஏருக்கு வேண்டிய உறுப்பினை இம் மரங்களிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுகின்றனர்.

ஊருக்குக் கீழ்ப் புறத்தில் ஒரு ஃபர்லாங்க் தொலைவில் உப்பாறு ஓடுகின்றது. மழைக் காலத்தில் வெள்ளம் இதில் பெருகியோடும். சில சமயம் வெயில் காய்ந்து கொண்டிருக்கையில் மின்னாது இடித்ததுபோல் வெள்ளம் பெருக்கெடுத்து நுங்கும் நுரையுமாக ஓடுவதுண்டு. ஊர்ப் பெருமக்களும் பள்ளிச் சிறுவர்களும் வெள்ளத்தை வேடிக்கை பார்ப்பதற்காகத் திரள்திரளாகச் செல்வர். சுமார் ஐந்து அல்லது ஆறு கல் தொலைவிலுள்ள பச்சை மலைத் தொடர்களில் பெய்வது

---

2. பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது-கண்ணி (37-38)

தெரியாமல் மழை பெய்தலால் இந்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாக மூத்தோர்பேசிக்கொள்வதைச் சிறுவர்களாகிய நாங்கள் கவனித்துத் தெரிந்து கொள்வோம். கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய மணலை இந்த ஆற்றிலும் ஊருக்கு வடமேற்கிலிருந்து ஏரிக்கு நீர் வரும் ஆற்றிலும் எடுத்துப் பயன்படுத்துவர்.

ஊர் மக்கள் நீராடுவதற்கு பல நீர் நிலைகள் உள்ளன. ஏரி பெருகி கடை வழிந்த பிறகு கடைக்காலில் பலர் குளிப்பர். ஏரியில் நீர் இல்லாத பொழுது ஊருக்கு அருகில் மேல் புறத்தில் தனியாருக்குச் சொந்தமான ஐந்து கிணறு களையும், ஊருக்கு அருகில் கீழ்புறத்தில் தனியாருக்குச் சொந்தமான ஐந்து கிணறுகளையும் பயன் படுத்துவர்.

இந்தப் பெரிய ஊரில் இத்தனைப் பெரிய திருக்கோயில் களிலிருந்தும் அடிக்கடி விழாக்கள் நடைபெறுவதில்லை. நான் சிறுவனாக இருந்தபொழுது மாசிமகத்தன்று சிவ பெருமானைக் காளை வாகனத்தில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வருவதை ஓரிருமுறை பார்த்ததுண்டு. அதன்பிறகு இன்று வரை இத்தகைய விழா நடைபெற்றதாக நான் கேள்வியுற்றதில்லை; கண்டதும் இல்லை. இங்ஙனமே ஓரிரு முறை திருமாலின் கருட சேவையைக் கண்டதுண்டு. அந்தக் கருட சேவையை இன்று மானசீகமாகக் காண்கின்றேன்; காஞ்சி வரதராசரது கருடசேவையையும் திருமலையில் கருட சேவையையும் காண்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படு கின்றது. இந்நிலையில்,

> பறவைஏறும் பரமபுருடா
>     நீ என்னைக் கைக்கொண்டபின்
> பிறவிஎன்னும் கடலும் வற்றிப்
>     பெரும்பதம் ஆகின்றதால்;

இறவு செய்யும் பாவக்காடு
தீக்கொளீஇ வேகின்றதால்;
அறிவை என்னும் அமுதஆறு
தலைப்பற்றி வாய்க்கொண்டதே[3].

என்ற பெரியாழ்வாரின் பாசுரத்தை என்மனம் நினைந்து அநுபவிக்கின்றது. அந்த விழாவும் நின்று போயிற்று. எல்லாத் திருவிழாக்களிலும் இறைவன் வாகனங்களில் திருவுலாச் செல்லும்போது இறைவனுக்குப் பின்னால் ஒரு **'பசனைக் குழு'** இறைவன் புகழைப் பாடிக் கொண்டு செல்வது வழக்கம். எனக்குப் பாட்டு வராது; இசைக்கும் எனக்கும் வெகுதூரம். ஆனால் இரகுபதி ரெட்டியார் என்ற ஒருவர் மத்தளம் கொட்டும்போது மத்தளத்தில் ஒரு பக்கம் ஒட்டப் பெற்றிருக்கும் சோற்றுப்பசை உலராமல் இருப் பதற்கு தண்ணீர் தேவைப்படும். அதற்கு தண்ணீர் கொண்ட ஒரு சிறு கிண்ணத்தைத் தாங்கி செல்லும் 'கைங்கரியம்' என்னுடையதாக இருந்ததை இப்போது நினைந்து பார்க்க முடிகின்றது.

பசனை மடத்தருகில் மரத்தேர் ஒன்று நிலையாக நின்று கொண்டிருந்தது. அது வெய்யிலாலும் மழையாலும் கெடா திருப்பதற்கு மேலே கூரை வேயப் பெற்றிருந்தது. நாளடைவில் கூரை அழிந்தது; தேரும் அழிந்து கொண்டே இருந்தது.

ஊருக்கு மேற்புறத்திலுள்ள ஏரிக் கரையின்மீது மிகப் பெரிய பல இலுப்பை மரங்கள் இருந்தன. 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சருக்கரை' என்பது பழமொழி யல்லவா? இந்த மரங்களின் கீழ் இலுப்பைப் பூ உதிர்ந்து கிடக்கும். இவற்றைப் பொறுக்கிச் சேர்த்து உப்பு, மிளகாய் இவற்றுடன் சேர்த்தது 'கிடுக்கட்டி' என்ற பெயர் கொண்ட

3. பெரியாழ். திரு. 5. 4:2

சிறிய உருண்டைகளாகச் செய்து உண்பதுண்டு. எங்கள் வீட்டிலும் இதனைச் செய்வதுண்டு. கிடுக்கட்டியை வாயில் அடக்கிக் கொண்டு வாயில் ஊறும் ‘உப்பு காரம் இனிப்பு’ என்ற முச்சுவையும் கலந்த நீரைச் சுவைத்து அநுபவித்ததை இன்று நினைவு கூர்கின்றேன். இப்போது கூட என் வாயில் நீர் ஊறுவது போன்ற உணர்வு ஏற்படுகின்றது.

இந்தப் பெரிய மரங்களை வெட்டச் செய்தனர் ஊர்ப் பெருமக்களில் சில பெரியோர். அடிமரத்தை மரச் செக்கு செய்வதற்கு விற்றனர். பெருங்கிளைகளைக்கொண்டு நான்கு சக்கரங்களைக் கொண்ட ஒரு ‘திருவிடைச்சான்’ செய்தனர். ஓரிருமுறை திருமால் இதில் திருவுலாச் செல்வதைப் பார்த்திருக்கின்றேன். அதன்பிறகு பெருமாள் கோயில் முன் மண்டபத்தின் தென்புறமாகவுள்ள பகுதி சில ஆண்டுகள் அந்தத் திருவிடைச்சானுக்குப் புகலிடமாக அமைந்தது.

திருமால் ஆலயத்தின் முன்மண்டபத்தின் தரை பல ஆண்டுகள் மண்ணாகவே கிடந்தது. இத்தரையின்மீது நல்ல கருங்கல் தளத்தை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர் ஞானி பெரிய கிருட்டிணசாமி ரெட்டியாரும் வேறு சில பெரியோர்களும். ஓராண்டுக் காலத்திற்குள் இத் திருப்பணி நிறைவு பெற்றது. திருப்பணி நடக்கும்போது சிலர் திருவிடைச்சானை வெளிக் கொணர்ந்து மரத்தேர் அருகில் நிறுத்தினர். மரத்தேரின் கதி இதற்கும் ஏற்பட்டு விடுமோ என்று சிலர் அஞ்சினர். நல்லகாலமாக இது நேரிட வில்லை. ஆனால் மீண்டும் திருவிடைச்சான் என்ற நகரும் சப்பரம் முன்பண்டபத்திலேயே தஞ்சம் புகுந்தது. திருப்பணி முடிந்த பிறகு ஒரு மூலையில் அது இடம் பெற்றது. இன்றும் அது பாதுகாப்பாக இருக்கும் என்றே கருதுகின்றேன்.

# 9. என் செல்வநிலை மாறியநிலை

பெரிய 'பண்ணைச் செல்வத்தில்' பாங்குடன் வளர்க்கப் பெற்று எல்லா வித நலன்களையும் துய்த்த நான் அந்த நலன்களை ஓரளவு கூட நன்கு அநுபவிக்க முடியாத என் சொந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். இந்திர பதவிக்குக் கூட ஒரு கால எல்லை உண்டு என்று நூல்கள் வாயிலாக அறிகின்றோம். அது போன்ற நிலை எனக்கு ஏற்பட்டது என்று சொல்லலாம். என் அன்னையார் இவற்றையெல்லாம் நினைந்து நினைந்து மனம் புழுங்கியிருக்க வேண்டும் என்று இப்போது தோன்றுகின்றது; அந்தக் காலத்தில் எனக்கு இவற்றையெல்லாம் நினைந்து பார்க்கும் அளவுக்கு மனம் முதிர்ச்சி ஏற்படவில்லை.

'வீட்டை விட்டு வெளியே நடந்து செல்க' என்று எங்களை என் அம்மான் நேரில் சொல்லவும் இல்லை; பிறர் வாயிலாகத் தெரியப்படுத்தவும் இல்லை. 'தாயும் தந்தையுமாக இருந்து' என்னை வளர்த்த என் அம்மான் ஒரு நாளும் அப்படிச் சொல்ல மாட்டார். இருக்கும்போதும் மனைவியுடன் வாழ இயலாத இளமைக் காலத்தை என் பாட்டியும் அன்னையும் நினைந்து பார்த்திருக்க வேண்டும் தமக்கு என்ன கஷ்டம் வந்தாலும் தம் ஒரே மகன் தன் இரண்டாவது மனைவியுடனாவது 'சுகமாக இருக்கட்டும்' என்று என் பாட்டியின் தாயுள்ளம் நினைந்து பார்க்க வேண்டும். 'மருந்தனைய தங்கை' யாகத் தம்மைக் கருதிய தன் அருமைத்தமையன் மனம் சிறிதும் நோகக்கூடாது என்று என் அன்னையும் கருதியிருக்க வேண்டும். இருவரும் அப்படி நினைந்திராவிட்டால் இரண்டாவது திருமணத்திற்குப் பிறகும் என் அம்மானின் இல்லற வாழ்க்கை இனிது நடைபெற்றிருக்க முடியாது. தாயும் மகளுமாகச் சேர்ந்து என் அம்மானின் மனநிலையைக் குலைத்திருக்கலாம். 'நாத்தி

யின் பங்கு' இதில் செயற்படவில்லை. இருக்கும் சூழ்நிலையை அனுசரித்து இருவரும் 'வெளிநடப்பு' செய்தார்கள். இந்தச் சூழ்நிலையில் எனக்கும் அதே நிலை ஏற்பட்டது. தாயுடன் 'கன்றும்' செல்ல வேண்டியது தானே முறை?

'ஏழிரண்டாண்டில் வா' என்று கைகேயி சொன்னது போல் இங்கு ஒருவரும் சொல்லவில்லை. எல்லாம் 'பேசாத பேச்சாக'வே நடைபெற்றன. நிரந்தரமாகவே இப்பிரிவு ஏற்பட்டது என்பது எனக்கு அப்போது தெரியாது. ஏதோ பிணங்கிச் செல்கின்றனர் என்றுதான் இச் சிறுவன் உள்ளம் எண்ணியது. இந்தச் சூழ்நிலையில் 'அப்பொழுதலர்ந்த செந்தாமரைப் போல்' என் 'திருமுகம்' மாறவில்லை; அந்தச் செந்தாமரையினையும் வெல்லவும் இல்லை.

'மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதிலும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதிலும்
சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகத்தினை'[4]

யாரும் பார்க்கவில்லை. 'தீராத விளையாட்டுப் பிள்ளை' யாகவே கோட்டாத்தூர் வந்து சேர்ந்தேன்.

கோட்டாத்தூர் நான் வந்த பிறகும் என் அன்னை என் முந்திய நிலையை அடிக்கடி நினைந்து பார்த்திருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது. என்ன நினைத்தார் களோ எனக்குத் தெரியாது; ஒரு நாள் பெரகம்பிலிருந்து வந்த யாரோ ஒருவரிடம் எனக்கு இரண்டாவது திருமணத் தன்று அன்பளிப்பாகத் தந்த சரிகை வேட்டி, சரிகை கட்டம் போட்ட நீல நிறமுள்ள பட்டு, புதியனவாக வாங்கித் தந்திருந்த விவேக சிந்தாமணி, அறப்பளீசுரசதகம்

4 கம்ப. சுந்தர. காட்சி. 20

அருணகிரியந்தாதி, அரிச்சந்திர புராணம் ஆகிய நூல்கள் அனைத்தையும் என் அம்மானிடம் சேர்க்குமாறு அனுப்பிவிட்டார்கள். இச் செயலில் எவ்வளவோ பொருள் அடங்கியுள்ளது. “இது காறும் தாங்கள் என் மகனைத் தந்தை போலும் தாய் நிலையிலும் இருந்து வளர்த்தமைக்கு என் நன்றி. தாங்கள் அன்புடன் என் மகனுக்குத் தந்த பொருள்களையெல்லாம் திருப்பி அனுப்பி வைத்துள்ளேன். ஆண் மகவு பெற்றால் அக் குழந்தைக்கு இவற்றைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள். என் வறிய நிலையிலும் இறைவன் அருளால் என் பிள்ளை நன்கு வளர்வான்; உயர் கல்வி பெறவேண்டும் என்ற கனவும் உள்ளது. இறையருள்படி அது நடைபெறக் கூடியதே என்ற நம்பிக்கையும் உண்டு......” இவை போன்ற பல கருத்துகள் அதில் அடங்கியிருக்க வேண்டும்.

சரிகை வேட்டியையும் பட்டையும் திருப்பித் தந்தது எனக்கு மிக்க வருத்தத்தைத் தந்தது. நூல்களின் பிரிவையும் என்னால் தாங்க முடியவில்லை. பள்ளிச் சிறுவனுக்குச் சரிகை வேட்டியும் பட்டும் எதற்கு? மாணிவாழ்க்கை தானே, படிப் புக்கு ஏற்றது? நூல்களையெல்லாம் புதியனவாக வாங்கித் தந்து விட்டார் என் அன்னையார். இதனால் எனக்கு ஓரளவு மனநிறைவு ஏற்பட்டது.

கோட்டாத்தூர் சூழ்நிலை எனக்கு அப்போதும் பிடிபட வில்லை; இப்போதும் நினைத்துப் பார்க்கும் அறிவும் தெளிவும் இல்லை. எங்கள் வீட்டு மாட்டுக் கொட்டகைத் தருகிலிருந்த(மாடுகள் அப்போது இல்லை)ஒரு கூரை வீட்டில் வயது முதிர்ந்த கைம்பெண் நிலையடைந்த ஓர்அம்மையார் இருந்தார்கள். என் அன்னையார்அவர்கட்கு உணவு முதலிய வசதிகள் செய்து தந்தார்கள்; நீராட்டி ஆடைகளை மாற்றி னார்கள். தாம் பெரகம்பிக்கு வரும் ஒரு சில நாட்களில் யாரைக் கொண்டோ இந்த வசதிகள் அந்த அம்மையாருக்

குச் செய்யப் பெற்றன. யான் பெரகம்பியிலிருந்து கோட்டாத்தூர் வந்த இரண்டாண்டுகளில் இந்த அம்மையார் காலகதி அடைந்துவிட்டார்கள். அடக்கம் செய்தல் முதல் பதினைந்தாம் நாள் செய்ய வேண்டிய வைதிகச் சடங்குகள் வரை என்னை முன் வைத்தே செய்யப் பெற்றன. அந்த அம்மையார் ஏதோ நெருங்கிய உறவு என்பதை நினைந்து பார்க்க முடிகின்றதேயன்றி என்ன உறவு என்பதை இப்போதும் என்னால் அறியக்கூடவில்லை.

இவர்களைத் தவிர எங்கள் மச்சு வீட்டு ஓர் அறையில் என் பங்காளி வீட்டாருக்குச் சொந்தமான பகுதியிலிருந்த ஓர் அறையில் 'எதுமலை அம்மாள்,' என்று அழைக்கப்பெறும் வயது முதிர்ந்த கைம் பெண் நிலையிலுள்ள ஓர் அம்மையார் வாழ்ந்தார்கள். ஹாலில் ஒரு மூலை அவருக்குச் சமையலறையாகப் பயன்பட்டது. இந்த அம்மையாருக்குச் சொந்தமாக எழுபத்தைந்து சென்ட் அளவுள்ள ஒரு நஞ்சை நிலம் இருந்தது. அதன் வருவாயைக் கொண்டு காலந் தள்ளினார்கள். இவர்கள் குழந்தைகளிடம் அன்பாகத் தான் இருந்தார்கள். ஆனால் என் தமையன் மகன் கணபதி யிடம் காட்டிய அளவுக்கு என்னிடம் அன்பு காட்டுவதில்லை. ஏதாவது தின்பண்டம் தந்தாலும் நான் இல்லாதபோது அவனுக்குத் தருவார்கள். என் அன்னையாரே இதனை அடிக்கடி என்னிடம் சொல்வதுண்டு. அந்தச் சிறுவயதில் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளால் குறிப்பாக எனக்கும் புலப் பட்டது. எங்கள் பங்காளி வீட்டில் ஏதாவது தின்பண்டங் கள் தந்தால் அவற்றை வாங்கக் கூடாது என்பது என் அன்னையாரின் தடை உத்தரவு. ஆனால் இந்த அம்மையார் தந்தவற்றை மறுக்கவேண்டா என்பது அவர் களின் ஆணை. இந்த அம்மையாரும் நான் வந்த ஒன்றிரண்டு ஆண்டுகளில் இறைவன் திருவடி நிழலை அடைந்து விட்டார்கள். ஈமச்சடங்கிற்குரிய செலவுகளை

என் அன்னையாரும் பங்காளி வீட்டாரும் ஏற்றுக் கொண்டார்கள் என்பதை அந்தச் சிறு வயதிலும் என்னால் அறிய முடிந்தது. பதினைந்தாவது நாள் நடைபெற வேண்டிய சடங்கு எதுமலையில் அந்த அம்மையார் பிறந்த வீட்டார் செய்தார்கள். அந்தச் சடங்கிற்கு நானும் என் அம்மையாரும் எதுமலைக்குச் சென்றிருந்தோம். இப்போதும் இது என் நினைவிலுள்ளது.

**எங்கள் வறிய நிலை** : கோட்டாத்தூரில் என் குடும்ப நிலையைப்பற்றி ஒருசில சொற்கள், இரண்டு ஏக்கர் நஞ்சை நிலமும், சுமார் மூன்று ஏக்கர் பரப்புள்ள நல்ல செழிப்பான கரிசல் பூமியும் இருந்தன. இவற்றைத் தவிர 'வடக்கிக் காடு' என்று வழங்கப் படுகின்ற இடத்தில் சுமார் ஓர் ஏக்கர் கரிசல் பூமியும் இருந்தது. இதில் வரகைத் தவிர வேறு எதையும் பயிரிடுவதில்லை. இதில் வருவாயும் அதிகம் இல்லை. பூர்வ புண்ணியத்தால் ஏதோ சிறிது வந்து கொண்டிருந்தது. இவற்றைத் தவிர என் அன்னையார் தம் சொந்த சேமிப்பைக் கொண்டு ஒன்றரை ஏக்கர் பரப்புள்ள நல்ல வளமான கரிசல் பூமியையும் வாங்கி இருந்தார்கள். ஊருக்குள் ஒரு மாட்டுக் கொட்டகையும், வைக்கோல் போர் குப்பை இவை போடுவதற்குரிய ஒரு சிறு இடமும் இருந்தது. மச்சு வீட்டில் எங்கட்கும் எங்கள் பங்காளி வீட்டாருக்கும் பங்கு இருந்தது. இந்த வீட்டை யொட்டி வடபுறத்தில் ஒரு கூரை வீட்டில் நாங்களும், தென் புறத்தில் நாட்டோடு வேயப்பெற்ற ஒரு சிறு வீட்டில் எங்கள் பங்காளி வீட்டாரும் இருந்தனர். இரண்டு வீட்டிற் கும் இடையிலுள்ள முற்றம் இருவருக்கும் சொந்தமாக இருந்து வந்தது. நான் வந்த மறு ஆண்டே கூரை வீடு மங்களூர் ஓட்டு வீடாகப் புதுப்பிக்கப்பெற்றது. அப்போது ரூ 250/= தான் செலவு என்பதையும் இப்போதும் நினைந்து பார்க்க முடிகின்றது. என் கையிலிருந்த பத்து சவரன்

எடையுள்ள காப்பும் கொலுசும் வீட்டிலிருந்த சில சவரன் களும் விற்கப்பெற்று வீடு கட்டின இந்தச் செலவுக்கு ஈடு செய்யப் பெற்றது என்பதையும் இப்பொழுது நினைவு கூர முடிகின்றது.

கோட்டாத்தூரில் இருக்கும்போது (8-வயது) என் பாட்டி தம் அருகில் என்னைப் படுக்க வைத்துக் கொள்வார் கள். தம் மகன், பேத்தி இவர்கள்மீது இருந்த பாசமெல் லாம் என்மீது கவிந்தன. வீட்டில் பாட்டியோ பாட்டனோ குழந்தைகள்மீது அதிகமாக அன்பு காட்ட வேண்டும் என்பது உண்மைதான். குழந்தைகள் தமக்குப் பாதுகாப்பு உள்ளது என்பதை நன்கு உணர்வதற்கு இந்த அன்பு, பாசம் எல்லாம் மிக மிக அவசியமானவை. ஆனால் படிப்பு நன்கு அமையவேண்டுமானால் குழந்தைகளின் வயதிற்கேற்றவாறு மூத்தோரின் கண்டிப்பும் மிகவும் இன்றியமையாதது. கல்வி உளவியல் அறிவு வீட்டிலுள்ள மூத்தோர்கள் பெற்றிருப்பின் இது நன்கு தெளிவாகும். என் பாட்டிக்கு இஃதெல்லாம் எப்படித் தெரியப் போகிறது? 'நான் வெளியூருக்குப் படிக்கப் போகிறேன்' என்று சொல்லும் பொழுதெல்லாம் கண்ணீர் விடுவார்கள். மிகவும் தள்ளாத நிலையை அடைந்து விட்டார்கள். மாட்டுக் கொட்டகையில் நல்ல இடத்தில் அவருக்குக் கட்டில் முதலியன தந்து இடம் அமைக்கப் பெற்றது. இயற்கைக் கடன்கள் கழிக்க இதன் அருகிலுள்ள குப்பைக் குழி நல்ல வசதியான இடம்.

பெரகம்பியிலிருந்து வந்த மூன்று ஆண்டுகளில் என் பாட்டியாருக்குக் கண்ணொளி மங்கியது. கிராமத்திற்கு வந்த ஒரு நாட்டு வைத்தியரைக் கொண்டு ஒரு கண் அறுவை சிகிச்சை செய்யப்பெற்றது. சிறிது காலம் ஒளி திரும்பியது; மீண்டும் மங்கியது. கண்ணொளி மங்கிய நிலையில் நான்

இயற்கைக் கடன்கள் கழிக்க கையைப் பிடித்து நடத்திச் செல்ல வேண்டும்; சில சமயம் என் அன்னையாரும் கவனிப் பார்கள். ஒரு சில ஆண்டுகளில் இவர்களும் காலகதி அடைந்தார்கள். பெரகம்பியிலிருந்து என் அம்மானும் மனைவியுடன் வந்தார். எங்கள் செலவில் ஈமக் கடன் களைச் செய்தார். பதினைந்தாம் நாள் சடங்கு பெரகம்பி யில் செய்யப் பெற்றது. நானும் என் அன்னையாரும் அதற்குச் சென்றிருந்தோம். ஒரு வகையில் என் படிப்புக்குத் தடையாக இருந்த என் பாட்டியின் மறைவால் தடை நீங்கியது என்றே சொல்ல வேண்டும்.

**எங்கள் வருவாய் :** எங்கள் குடும்பத்தின் பொருளாதார நிலை மனநிறைவு பெறத் தக்கதாக இல்லை. குத்தகைக்கு நிலம் விடப்பெற்றிருந்த காலத்தில் 20 கலம் நெல் சிரமமின்றி வரும். சொந்தப் பண்ணையில் புன்செய் வேளாண்மையில் வரகு 20 கலம் வரலாம்; கொத்தமல்லி 15-20 கலம் வரலாம்; ஓமம் 2 மூட்டை வந்தது; ஆமணக்கு 5 செக்கு போடும் அளவுக்கு வந்தது. பருத்தி 10-15 கோணி பிடிக்கும் அளவுக்கு வந்தது. வரகு அடித்து மூட்டை போட்டு வீட்டிற்குக் கொண்டு வருவதற்குச் செலவு வரும். வரகு விளைந்த தாளை அறுவடை செய்து களத்திற்குச் கொணர்ந்து அடுக்குதல், களத்தில் இடங்கிடைக்கும்போது தாளிலிருந்து வரகுமணியைப் பிரித்தல், வைக்கோலை மாடுகளை விட்டுச் சுற்றுதல், பிறகு வைக்கோலைப் போரிடுதல்-இவற்றிற்குச் செலவு ஆகும். இங்ஙனமே கொத்தமல்லியைப் பிரித் தெடுக்கும்போதே ஓமமும் பிரித்தெடுக்கப்படும். ஆமணக்கு, பருத்தி இவற்றை என் தாயாரே நாள்தோறும் காலையில் சென்று சிறிது சிறிதாக வீட்டிற்குக் கொணர்ந்து விடுவார் கள். வீட்டில் பருத்தி கொளிஞ்சியிலிருந்து பிரிக்கப்பெறும். ஆமணக்குக் காய் வெயிலில் உலர்த்திப் பருப்பு தனியாகப்

பிரித்தெடுக்கப்படும். வரகு, கொத்தமல்லி, ஓமம், பருத்தி, ஆமணக்கு விற்பதில் ரூபாய் 400, 500 கூட வருவாயாக வருவதில்லை. கொத்தமல்லி மூட்டை நான்கு, ஐந்து ரூபாய்க்கு மேல் விலை இல்லை. நெல்விலையும் ஒரு கலம் மூன்று, நான்கு ரூபாய்க்கு மேல் இல்லை.

இந்த வருவாயைக் கொண்டு மேல்படிப்பு படிக்க வேண்டும் என்று என் அன்னையார் கருதினது 'குருடன் இராஜவிழி' விழிப்பது போல் இருந்தது. திக்கற்றவருக்குத் தெய்வம் துணை நிற்கும் என்ற கொள்கையில் என் அன்னையார் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். இளமையிலேயே என் தந்தையார் மறைந்ததால் ஓர் ஆணின் துணிவும் என் அன்னையாருக்கு இறைவன் தந்திருக்க வேண்டும்.

இந்த நிலையில் '**சொந்தப் பண்ணை**' வைத்தால் குடும்ப வருவாயை அதிகப் படுத்திக் கொள்ளலாம் என்று சொந்தப் பண்ணை வைத்தார்கள். கையில் ஒன்றிரண்டு ஆயிரம் ரூபாய் இருந்ததாக நினைவு. ரூ 250/-க்கு இரண்டு எருதுகள் வாங்கப் பெற்றன. மருதப் பிள்ளை என்ற ஒருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டார். அவருக்கு மாதம் ஒரு மூட்டை நெல் சம்பளமாகத் தருதல் வேண்டும். தேவையானபோது பெரிய ஆள், சின்ன ஆள் ஒன்றிரண்டு நாட்களுக்குத் தற்காலிகமாக அமர்த்திக் கொள்வார்கள். சொந்தப்பண்ணை வைத்ததால் அதிசயிக்கத்தக்க வருவாய் ஒன்றும் ஏற்படவில்லை. கையிருப்பாக இருந்த ஒன்றிரண்டு ஆயிர ரூபாய்கள் கரைந்தன. வேலையே அதிகமாயிற்று; முட்டு வழிச் செலவும் வளர்ந்தது. 'சாணேற முழஞ்சருக்கியது' போன்ற முன்னேற்றம் தெரிந்தது.

'உழவன் கணக்கு பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது' என்ற பழமொழி எங்கள் சொந்தப் பண்ணை வைத்த

அநுபவத்தால் தெரிந்த உண்மையாகும். சுமார் இருப தாண்டுக் காலம் இந்தச் சொந்தப் பண்ணை நடைபெற்று வந்தது. நான் முசிறியில் நான்காவது படிவத்தில் மாணாக்க னாக இருந்த ஆண்டில் (1931) சுமார் ஒரு ஏக்கர் நிலத்தில் எலுமிச்சை செடிகள் வைத்தேன். நான்கு ஐந்து ஆண்டு களில் அவை காய்த்தன. நான் திருச்சியில் இடைநிலை வகுப்பு படித்த காலத்தில் காய்ப்பு தொடங்கியது. ஆனால் சரியான விலை இல்லை. 100 பழம் (பெரிய அளவு) சுமார் ஒன்றரை, இரண்டு ரூபாய்க்கு விற்றன. அரை ஏக்கர் நிலத்தில் மிளகாய்ச் செடிகள் வைக்கப்பெற்றன. நல்ல காய்ப்புதான். ஆனாலும் சரியான விலை இல்லை. எலுமிச்சைக்கும் மிளகாய்க்கும் நல்ல விலை இருந்திருப்பின், என் கல்லூரிப் படிப்பு கவலையின்றி நடைபெற்றிருக்கும்.

எங்கட்கு வேளாண்மை பலிக்காததுபோலவே என் தம்பி குடும்பத்திற்கும் வேளாண்மை பலிக்கவில்லை. அவன் தந்தையார் இதில் 'பகீரதப் பிரயத்தனம்' செய்தார். பயன் ஒன்றும் அதிகமாக இல்லை. கிணற்றில் சரியான அளவு நீர் இல்லை. ஆழமாக வெட்டுவதற்கும் பாறை குறுகிட்டது. நாங்கள் எலுமிச்சைபயிரிட்டது போலவே அவரும் எலுமிச்சை யும் மாதுளையும் பயிரிட்டார். சில ஆண்டுகளில் சரியான வருவாய் இல்லாத காரணத்தால் மாதுளைச் செடிகள் வெட்டி யெறியப்பட்டன. எலுமிச்சை காய்த்தாலும் சரியான விலை இல்லை.

குமிழி-10

# 10. தொடக்கநிலைப் பள்ளியில்

**நா**ன் கோட்டாத்தூர் வந்ததும் அந்த ஊரிலுள்ள கழகத் தொடக்கநிலைப்பள்ளியில் சேர்க்கப்பெற்றேன். அஃது ஓரே ஆசிரியரைக் கொண்ட பள்ளி. அப்போது வேலூர்

வாத்தியார் (பெயர் சந்திரசேகரய்யர் என்பதாக நினைவு) என்ற புகழ்பெற்ற ஆசிரியர் அதில் பணியாற்றி வந்தார். அவர் ஒரு Lower Grade ஆசிரியர்; ஆங்கிலம் அறியாதவர். அவருக்குச் சோதிடம் நன்கு தெரியும். ஊரிலுள்ளோருக்குப் புரோ நோட்டுகள் எழுதித் தருவார். ஊர்ப் பெருமக்கள் அடிக்கடிப் பள்ளிக்கு வந்து ஏதேதோ பேசிவிட்டுப் போவார்கள். இதனால அந்தச் சிற்றூரில் இவர் மிகவும் புகழோங்கியிருந்தார். பள்ளி ஒரு வாடகைக் கட்டடத்திலிருந்து வந்தது. பள்ளி உள்ளே நடைபெற்றுக் கொண்டிருக்கும். வெளியிலுள்ள திண்ணைகளில் ஒன்றிரண்டு பெரியவர்கள் உட்கார்ந்து கொண்டு ஊர்க் கதைகளைப் பேசிக் கொண்டிருப்பர். பட்டி ரெட்டியார் வீடு என்று வழங்கும் ஒரு வீடு பள்ளிக்கு 100 அடி தொலைவில் இருந்தது. அந்த வீட்டிலுள்ள வயோதிகர் ஒருவர் முற்பகல் ஒரு தடவையும் பிற்பகல் ஒரு தடவையுமாக ஒரு 'சிமிட்டா' பொடிக்காக வேலூர் வாத்தியர்ரைப் பள்ளியில் சந்தித்து பொ்டியைப் பெற்றுச் செல்வார். இது வழக்கமாக அன்றாடம் நடைபெற்று வந்த நிகழ்ச்சி.

ஏதோ பாட நூல்களும், சிவிக்ஸ் என்ற பாடநூலும், கணித நூலும் பாட நூல்களாக இருந்து வந்தனவாக நினைவு. வேலூர் வாத்தியார் இவற்றைப் பற்றிச் சிறிதும் அக்கறை கொள்வதில்லை. வாய்பாட்டினை மனப்பாடம் செய்யச் சொல்வார். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகளையும், ரூபாய் அணா பைசா கணக்கில் இந்த நால்வகைக் கணக்குகளையும் தெளிவாகச் சொல்லித் தருவார். இவற்றைத் தவிர, **அருணகிரி அந்தாதி, அறப்பளீசுர சதகம், அரிச்சந்திர புராணம்,** இவற்றை வாங்கச் செய்து ஒவ்வொன்றிலும் சில பாடல்களைச் சொல்லித் தருவார். எல்லோருக்கும் சதகங்களை அதிகமாகச் சொல்லித் தருவார். அங்கொன்றும் இங்கொன்று

மாகச் சில பாடல்களை மட்டிலுமே சொல்லித் தருவார். இவருக்குப் பிடித்தது அரிச்சந்திரபுராணம். இதைத்தான் குறிப்பிட்ட சிலருக்கு அதிகமாக விரும்பிச் சொல்வார்.

**கற்பித்தமுறை :** இவர் பாடம் சொல்லித் தரும் முறை சிறப்புடையது. ஆசிரியரிடம் புத்தகம் இல்லை; மாணாக்கன் புத்தகத்தை வைத்துக்கொண்டே காரியத்தை நிறைவேற்றி விடுவார். ஆசிரியரும் மாணவனும் ஒரே பக்கத்திலுள்ள பாடலைப் பார்க்க வேண்டும். சற்று வளர்ந்த பையனாக இருந்தால் சுமார் அரைமணி நேரமாகவாவது குனிந்து கொண்டு நிற்க வேண்டிவரும். இடுப்புவலி வந்துவிடும். ஆசிரியர் சற்று இசையோடு பாடலின் அடியில் சிறிது சிறிதாகச் சொல்லி வருங்கால் மாணாக்கன் அவரைப் பின் பற்றிச் சொல்லிக்கொண்டே வருதல் வேண்டும். ஒரு பிற்பகல் மூன்று அல்லது நான்கு பேருக்குத்தான் இவ்வாறு பாடம் சொல்ல முடியும். ஆசிரியர் வெற்றிலை அடிக்கடி போடுவார். வாய் நிறைய சதா வெற்றிலைச்சாறு ஊறிய வண்ணம் இருக்கும். ஆசிரியர் அரிச்சந்திர புராணச் செய்யுளை நிறுத்தி நிறுத்திப் படிக்கும்போது புத்தகத்தின் பக்கம் முழுவதும் வெற்றிலைச் சாறின் துளிகள் நிரப்பப் பெற்று செம்புள்ளிகள் காட்சியளிக்கும். கட்டமைந்த நூலின் மூன்று பக்க முகப்பிலும் (நூல் மூடியிருக்கும் நிலையிலும்) கட்டமைப்போர் செம்புள்ளிகள், அல்லது பச்சைப் புள்ளிகளால் அழகு படுத்தியிருப்பர். இது புற அழகாகும். ஆசிரியர் வெற்றிலை எச்சில் துளிகள் நூலின் உட்பக்கத்தில் சிதறி அக அழகைச் செய்துவிடும்! நூலின் ஏடுகளைத் திருப்பினாலே ஆசிரியர் சொல்லிக் கொடுத்த பாடங்களைக் கணக்கிட்டுச் சொல்லி விடலாம்.

**புதிய ஆசிரியர் :** ஓராசிரியர் பள்ளி ஒழுங்காக நடைபெறவில்லை என்பது தணிக்கையாளர் குறிப்பு. இதனை

யொட்டியும் பள்ளியில் அதிக எண்ணிக்கையில் பிள்ளைகள் சேர்ந்ததை யொட்டியும். ஒரு Higher Grade ஆசிரியர் அமர்த்தப் பெற்றார். இவர்தான் தலைமையாசிரியர்; இவருக்குக்கீழேதான் வேலூர் வாத்தியார் பணியாற்ற வேண்டும். இப்பொழுது இங்கே வரஇருக்கும் ஆசிரியர் சுப்பராய உடையார் என்பவர். இவர் வருவதற்கு முதல் நாளே என் போன்ற மாணாக்கர்களின் துணை கொண்டு நல்ல மேசை, நல்ல நாற்காலி இவற்றைத் தாம் இருக்க வேண்டிய இடத்திற்கு மாற்றிக் கொண்டார் வேலூர் வாத்தியார். தமக்குமேல் பணியாற்ற இருக்கும் சுப்பராய உடையாருக்கு சற்று உடைந்த மேசை, ஒரு பக்கம் கைதாங்கி உடைந்த நாற்காலி இவற்றைப் போட்டு வைத்தார். என்ன செய்வார் உடையார்? இவற்றைக் கொண்டுதான் காலந்தள்ள வேண்டியவரானார்.

வேலூர் வாத்தியார் ஓராசிரியராகப் பணியாற்றும்வரை சட்டைபோட்டுபார்த்ததில்லை. தணிக்கையாளர்வரும்போது போடுவார் போலும். கோட்டாத்தூரில் பயின்ற நான்கைந்து ஆண்டுகளிலும் எந்தத் தணிக்கையாளரும் அந்த ஊருக்கு வரவில்லை; வந்ததாக எனக்கு நினைவும் இல்லை. ஆனால் சுப்பராய உடையார் வந்தவுடன் ஓர் அரைக்கை சொக்காய் போடத் தொடங்கினார். அதுவும் வேண்டா வெறுப்பாக. பள்ளி நேரத்திற்குப் பிறகு அதைக் கழற்றி எறிந்து விடுவார். சுப்பராய உடையார் சில சமயம் அரைக்கை சட்டையும் சில சமயம் முழுக்கை சட்டையும் அணிவார். அதன்மேல் ஒரு துண்டோ மடித்த அங்கவஸ்திரமோ அணிந்து கொண்டு வந்ததாக நினைவு. முறுக்கு மீசை, கனத்த உடல், சிட்டுக் குடுமியுடன் சேர்ந்த நல்ல கறுத்த முடியிலான கொண்டை இவற்றை இயல்பாகக் கொண்டிருந்த உடையாருக்கு சட்டையும் அங்கவஸ்திரமும் நல்ல தோற்றத்தைத் தந்தன. பார்ப் பதற்கு கம்பீரமாக இருப்பார். இந்தத் தோற்றமே

மாணாக்கர்களை அடக்கி வைத்தது. ஊர்ப் பெருமக்களும் இத்தோற்றத்தால் ஈர்க்கப்பெற்றனர். அந்தக் காலத்தில் ஊர்ப் பெருமக்களிலும் சிலர் வெளியூர் செல்லும் பொழுது (நகர்ப் புறத்திற்குச் செல்லும் பொழுது)சட்டை அணிவதைப் பார்த்திருக்கின்றேன். உள்ளூரில் நான் படித்த காலத்தில் சட்டையும் அணிந்ததில்லை; பனியனும் போட்டுக் கொண்டதில்லை.

வேலூர் வாத்தியார் சட்டை போட்டுக் கொள்ளார்; விட்டாலும் நல்ல அழகுப் பொலிவுடன் திகழ்ந்தார். பொன்னிறமான மேனி, நெற்றியில் விபூதிப் பட்டை சந்தனப்பொட்டு, உடல் முழுதும் பட்டையான சந்தனக் கோடும் விபூதிப்பட்டையும்அணிந்துகொண்டு குடைபிடித்துக் கொண்டு அவர் பள்ளிக்கு வருவது தென்முகக் கடவுளே பள்ளிக்கு 'ஞானோபதேசம்' செய்வதற்கு வருவதுபோல் காட்சியளிக்கும், இதற்குமேலாக நெஞ்சில் பளபளக்கும் இலிங்கம் இவரது பொலிவினைச் சிறப்பிக்கும். பள்ளியிலும் அவருக்குத் தெரிந்தவரையிலும் வஞ்சகமின்றிக் கற்பிப்பார் மாணாக்கர்களும் அவரிடம் அளவற்ற அன்பு காட்டினர்.

**கருத்து மாறுபாடு—மோதல்கள் :** 'தனிக்காட்டு ராஜா' போல் இருந்து தம் வாழ்க்கையில் பெரும் பகுதியை மதிப்பாக ஒரூரிலேயே கழித்த வேலூர் வாத்தியாருக்கு சுப்பராய உடையாரின் 'பிரவேசம்' சற்று அதிர்ச்சியைத் தந்தது என்றே சொல்ல வேண்டும். இந்த அதிர்ச்சி வெளியில் அதிகமாகத் தென்படவில்லை யென்றாலும் புலத்தில் புலனாகாது மெக்ஸிகோவிலிருந்து அட்லாண்டிக் கடலை நோக்கிக் கடலடியில் செல்லும் வெப்ப நீரோட்டம் போல் உள்ளுக்குள் புகைந்து கொண்டுதான் இருந்திருக்கவேண்டும். அப்படியில்லாவிடில் பள்ளியில் இவர்களிடையே அடிக்கடி நேரும் வாக்குவாதத்திற்குக் காரணம் இல்லை. உளவியல் தத்துவப்படி'இவ்வாறு நிகழ்வதற்குக் காரணமும் காட்ட

இயலும். இங்ஙனம் வாழ்க்கையில் பலரிடம் நிகழும் செயல் கட்கு உளவியல் நல்ல விளக்கம் தருகின்றது.

வேலூர் வாத்தியாருக்குச் சோதிடத்தால் பொதுமக்க ளிடையே மிகுந்த செல்வாக்கு வந்ததென்றால், சுப்பராய உடையாருக்கு அத்தகைய செல்வாக்கு வராமல் போகுமா என்ன? இவருடைய எடுப்பான உடல் தோற்றம், கரிய நிறமாயிருந்தாலும் முகப் பொலிவு, கருகரு என்ற அளவான முருக்கு மீசை - இவையே மக்களைக் கவர்ந்தன. இவருக்கு நாட்டு வைத்தியமும் தெரியும். இலேகியம், பல்வேறு வகை குளிகைகள், பல்வேறு வகை பஸ்மங்கள் செய்யத் தெரியும். தவிர, ஆங்கிலமும் தெரியுமாதலால் மிக விரைவாகப் பொது மக்களிடம் செல்வாக்குப் பெற்று விட்டார்.

**தனிப்பட்டபாடம்** : ஆங்கிலத்தைத் தம்வீட்டில் சொல்லிக் கொடுத்தார். மாலை 6½ முதல் இரவு 8 அல்லது 8½ மணி வரையில் ஆங்கிலம் கற்றுத் தரப்பெறும். இதற்கு ஒவ் வொரு மாணாக்கனும் மாதம் ஒரு ரூபாய் கட்டணமாகத் தரவேண்டும். இப்படிச் சுமார் பதினைந்து மாணாக்கர்கள் சேர்ந்து படிக்கத் தொடங்கினர். மூன்று குழுவாக அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் உட்கார்ந்து படித்தனர் மாணாக்கர்கள். பள்ளியிலும் வட்டிக் கணக்கு, இலாப- நஷ்டக் கணக்கு முதலியவற்றையும் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். இதனால் மாணவர்களிடம் நல்ல புகழுடன் விளங்கினார். இவரும் பொதுமக்களுக்கு புரோ நோட்டு எழுதுதல் போன்ற தொண்டையும் புரிந்துவர லானார். நடுத்தர வயதுடையவர்; இந்த வயது எல்லையுடையவர்களிடையே இவர் செல்வாக்கு ஓங்கியது வேலூர் வாத்தியாருக்குச் சுமார் பத்து அல்லது பன்னிரண்டு மாணவர்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒரு மூட்டை நெல் சம்பள மாகத் தருவது வழக்கம். அந்த வருமானம் எல்லாம்

இப்போது சுப்பிராய உடையாருக்குக் கிடைத்தது. இதைத் தவிர ஆங்கிலம் சொல்லிக் கொடுத்ததால் மாதம் சுமார் இருபது ரூபாய் கிடைக்கும். வைத்தியத்தில் சிறிது வருமானமும் இருந்தது.

இதனால் இருவரிடையேயும் போட்டியும் பொறாமையும் அதிகரித்து வரலாயின. வேலூர் வாத்தியாருக்கும் குறைவில்லை. அவருக்கும் நல்ல வருமானம் இருக்கத்தான் செய்தது. பொதுமக்களிடம் அவர் மதிப்பு குறையவில்லை. எங்களில் சில நன் மாணாக்கர்கள் இருவர் வீட்டிற்கும் போய் வருவோம். இருந்தாலும் இருவரிடையேயும் மனக் கசப்பு வளர்ந்து கொண்டுதான் வந்தது. சில சமயம் பள்ளியிலேயே வாய்ச்சண்டை விளைவதும் உண்டு. எங்கள் காலச் சிறுவர்கள் ஆசிரியர்களிடம் பயபக்தியுடன் பழகுவார்கள். இந்தச் சண்டை அந்தப் பயபக்தியை ஓரளவு குறைக்கச் செய்தது இருவரது கீழான பண்புகள் அடிக்கடி தலைக்காட்டலாயின. எப்படியோ ஒருவர் மற்றவருக்குப் போட்டியாக உள்ளதாக இருவருமே நினைத்துக் கொண்டதாக நான் கருதுகிறேன். அப்போது சிந்தித்துப் பார்க்கும் பக்குவம் என்பால் இல்லையாயினும் இப்போது அதனைச் சிந்தித்து அறிய முடிகின்றது. இருவரிடையேயும் மாறுபட்ட உள்ளக் கிளர்ச்சிகள் ஏற்பட்டுவிட்டன. ஒருவரிடம் தனக்கு ஆங்கில அறிவு உண்டு என்ற **உயர்வுச் சிக்கலும்** (Superiority complex) மற்றொருவரிடம் தமக்கு ஆங்கில அறிவு இல்லை என்ற **தாழ்வுச் சிக்கலும்** (Inferiority complex)தோன்றிவிட்டன. உளவியல் உண்மைப்படி உள்ளக் கிளர்ச்சிகளைச் சிதைத்தல் முடியாது. இந்தச் சிக்கல்கள் இருவரிடையேயும் நிரந்தரமாக அமைந்துவிட்டன என்று கருதலாம். மேற்பரப்பில் இக் கோளாறுகள் தலைகாட்டாவிடினும் இவை உள்ளுக்குள்ளேயே கனிந்து கொண்டுதானிருக்கும். வாய்ப்பு வருங்கால் விரும்பத் தகாத முறையில்

பல பிரச்சினைகளை விளைவிக்கும். வீட்டிலும் பள்ளியிலும் அரசியலிலும் தோன்றும் பல பிரச்சினைகட்கு உள்ளேயே அடக்கி வைத்திருக்கும் கோளாறுகளே காரணம் என்பது உளவியல் காட்டும் உண்மை. மேற் பரப்பில் தோன்றாமல் உள்ளேயே உறைந்து கிடக்கும் குருதி கட்டிப் புரையோடிப் பலகோளாறுகளை விளைவித்தல் இவ்விடத்தில் கருதற் பாலது. ஆற்றுநீரினை அணை போட்டுத் தேக்கினாலும் வடி கால்கள் இருக்க வேண்டியது இன்றியமையாததன்றோ? அடிக்கடி இருவரிடையேயும் வாக்கு வாதம் முற்றி மோதல் கள் வரும் அளவுக்கு விளைவுகள் ஏற்பட்டமைக்கு இந்தச் சிக்கல்களே காரணமாகும் என்பதை இப்போது நினைத்துப் பார்க்க முடிகின்றது.

**குமிழி-11**

## 11. வேலூர் வாத்தியார் கற்பித்த முறை

**கோ**ட்டாத்தூரில் தொடக்க நிலைப் பள்ளியில் கற்பித்தவர் மூவர். முதலாமவர் **வேலூர் வாத்தியார்; சந்திரசேகரய்யர்** இவர் பெயர் என்பது நினைவு. இரண்டா மவர் **சுப்பராய உடையார்;** மூன்றாமவர் **வி. கே. அரங்கநாத அய்யர்.** வேலூரார் வாத்தியார் Lower grade ஆசிரியர்; பழைய மரபையொட்டிக் கற்பிப்பவர். ஓரளவு தமிழ் இலக்கிய மரபை அறிந்து கற்பிப்பவர். சுப்பராய உடையார் பள்ளியில் என்ன கற்பித்தார் என்பது நினைவு இல்லை; எதையும் தெளிவாகக் கற்பிக்கவில்லை. கற்பித்த முறையும் என் மனத்தைக் கவரவில்லை. ஏதோ காலத்தைத் தள்ளிக் கொண்டு போனார்; ஆனால் மாலையில் (இரவில்) தனி யாகக் கற்பித்தது நினைவில் உள்ளது. ஆங்கிலம் கற்பித்த தில் இவர்தாம் முதலில் எனக்குப் பிள்ளையார் சுழி போட்டார், எழுத்துகள், சொற்கள், சொற்றொடர்கள்

என்ற அளவில் கற்பித்தார். ஒரு குழந்தை நகர்தல், எழுந்து நிற்றல், தத்தித்தத்தி நடக்க முயலுதல் என்ற அளவில் முயலுதல்போல் என் ஆங்கில அறிவும் மெதுவாக வளர்ந்தது. ஆனால் இவர் மாற்றப் பெற்றதால் நானும் உள்ளூரில் **சாமுவேல் பிள்ளை** தனியாக நடத்தி வந்த பள்ளியில் சேர்ந்துகொண்டேன்,

**கற்பித்த முறை :** வேலூர் வாத்தியார் **வாக்குண்டாம்**, **நல்வழியை** நன்கு கற்பித்தார். ஏற்கெனவே இவற்றை ஓரளவு பெரகம்பியில் கற்று வந்திருந்தமையால், இங்கு நன்கு கற்க முடிந்தது. பல பாடல்களை நெட்டுருப் போட்டு ஒப்பிக்கச் செய்து விடுவார். சில பாடல்கட்குப் பொருள் தெளிவாக விளங்குவதில்லை. காரணம்,எங்கள் மனவளர்ச்சி அந்த அளவு ஏற்படவில்லை. அப்போது கற்று பசுமரத் தாணி போல் மனத்தில் பதிந்த சில பாடல்களை இன்றும் நினைந்து அசை போட முடிகின்றது.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே; அல்லாத
ஈரம் இலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.[5]

இந்த ஔவைப் பாட்டியின் பாடலின் உண்மையை நாம் அன்றாட வாழ்க்கையில் காணமுடிகின்றது. சிறுவயதில் தெளிவாக மனத்தில் பதியும் இன்னொரு பாடல்.

நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்; — தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும், மழை.[6]

---

5 வாக் — 2
6 ஷை 10

நாட்டுப் புறத்தில் பயிலும் சிறுவர்கட்கு, இக்காட்சி தெளிவு. முதலிரண்டு அடிகளில் உள்ள இக்காட்சியின் ஒளியால் இறுதி இரண்டு அடிகளில் உள்ள உண்மை மனத்தில் ஆழப் பதிந்து விடுகின்றது. இன்னொரு பாடல் :

*நஞ்சுடைமை தான்அறிந்து நாகம் கரந்துஉறையும்;*
*அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு; — நெஞ்சில்*
*கரவுஉடையார் தம்மைக் கரப்பர்; கரவார்*
*கரவுஇலா நெஞ்சத் தவர்.*[7]

இப்பாடலிலும் முதலிரண்டு அடிகளில் உள்ள காட்சி நாட்டுப்புற மாணாக்கர்கட்குத் தெளிவு. இறுதி இரண்டு அடிகளில் பொதிந்துள்ள உண்மை மனப் பக்குவத்திற்கேற்பப் புலனாகும். முதலிரண்டு அடிகளிலுள்ள காட்சியின் ஒளி இக் கருத்தினை மேலும் தெளிவாக்கும். 'வாக்குண்டாம்' என்ற சிறிய நீதி நூலில் உள்ள உண்மைகள் இப்போது, நன்கு மன முதிர்ச்சியடைந்தபோது நன்றாகத் தெளிவாகின்றன. சிறுவர்கட்கு இவற்றைக் கதைகள் மூலமும் கற்பிக்கலாம்.

ஒளவைப் பாட்டி அருளிய மற்றொரு நூல் **நல்வழி** என்பது. ஒளவையார் என்ற சினிமாவில் ஒளவைப் பாட்டியாக நடிக்கும் இசையரசி **கொடுமுடி சுந்தராம்பாள்** பாடி இலட்சக் கணக்கான தமிழர்களின் மனத்தைக் கவர்ந்த பாடல் இது :

*பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை*
*நாலும் கலந்துனக்கு நான்தருவேன்; — கோலம்செய்*
*துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்குச்*
*சங்கத் தமிழ்மூன்றுந் தா.*[8]

---

7 வாக்.— 25
8 நல்வழி — காப்பு

பெரகம்பியிலும் கோட்டாத்தூரிலும் விநாயக சதுர்த்தி விழாவன்று இதனை முதலில் பாடி விநாயகர் வழிபாடு தொடங்கும். ஆனால் அந்த வயதில் எனக்குக் கற்பித்த எந்த ஆகிரியரும் '**சங்கத் தமிழ்**' இன்னது என்பதை விளக்க வில்லை. ஒருகால் விளக்கி இருந்தாலும் எனக்கு அப்போது புரியுமா? என்பது ஐயமே. இப்போது சிந்தித்துப் பார்த் தால் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களிடம் இதனை உணர்ந்து கொள்ளும் அளவிற்கு நல்ல தமிழறிவு இல்லை என்பது தெளிவாகின்றது. 'பிள்ளையார் சதுர்த்தி'யன்று இப்பாடலைச் சொல்லி முடிந்த பிறகு 'விநாயகர் அகவல்' சேர்ந்து பாடப்பெறும். இதில் உள்ள பல பாடல்கள் வயது வந்தவர்கட்குத்தான் விளக்கம் எய்தும். சிறுவர்க்கும் விளக்கம் எய்தும் ஒரு பாடல் ,

சாதி இரண்டுஒழிய வேறுஇல்லை, சாற்றுங்கால்;
நீதி வழுவா நெறிமுறையின், மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்;
பட்டாங்கில் உள்ள படி.[9]

இறுதி இரண்டடிகளில் நுவலப் பெறும் கருத்தின் அடிப்படை யில் இரண்டே சாதி உண்டு என்பதை ஆசிரியரும் தெளிவாக விளக்கினார்; நானும் தெளிவாக அறிந்து கொண்டேன்.

வேலூர் வாத்தியார் சொல்லும்போது அப்போதே என் மனத்தைக் கவர்ந்த இன்னொரு பாடல் :

மரம்பழுத்தால் வௌவாலை 'வா'என்று கூவி
இரந்துஅழைப்பார் யாவரும் அங்குஇல்லை;சுரந்துஅமுதம்
கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்
உற்றார், உலகத் தவர்.[10]

9 நல்வழி — 2
10 ஷை — 29

இப்பாடலை முதல் இரண்டடிகளில் உள்ள எடுத்துக் காட்டை நன்கு விளக்கி உலகத்தாருக்கு உற்றார் யாவர் என்ற ஈற்றடிக் கருத்தை தெளிவாக விளக்கினது இன்றும் நினைத்து அசைபோட முடிகின்றது. நெஞ்சைக் கவர்ந்த மற்றொரு பாடல் :

சேவித்தும், சென்றுஇரந்தும்,
தெண்நீர்க் கடல் கடந்தும்,
பாவித்தும், பார்ஆண்டும்,
பாட்டுஇசைத்தும், போவிப்பம்
பாழின் உடம்பை
வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்.[11]

இந்தப் பாடலில் ஓர் உண்மை உள்ளது என்றாலும் அந்த உண்மை இன்றைய நாகரிக உலகில் எல்லார்க்கும் பொருந்துவதில்லை. மெய்வருத்திக் கூலிபெறும் உழைப்பாளிகட்குப் பெரும்பாலும் பொருந்தும். நாகரிக மக்கள், வணிகர்கள், ஆலை முதலாளிகள், அமைச்சர்கள், கள்ள வாணிகத்தில் ஈடுபடுபவர்கள், கடத்தல் மன்னர்கள் போன்ற இவர்கட்குச் சிறிதும் பொருந்தாது. வயிற்றுப்பசி தீர்ந்ததும் இவர்கள் 'அத்தியாயம்' முடிந்து போவதில்லை. வானுற ஓங்கி வளர்த்துக் கொண்ட ஆசையால் சாதாரண மக்களின் நினைப்புக்கும் எட்டாத எண்ணற்ற செயல்களின் மூலம் பொருள் திரட்டுகின்றனர். இவர்கள் எல்லோரையும் விட 'அரசிரல்வாதிகளின் திருவிளையாடல்கள்' சொல்லி முடியா. மேற்குறிப்பிட்ட பாடலை ஒருபுடையொத்த கவிமணி தேசியவிநாயகம்பிள்ளையவர்களின் அடியிற் கண்ட பாடலின் பொருளும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட் பட்டது.

---

11 நல்வழி — 19

கோர்ட்டிலே ஜட்ஜி இருப்பதுவும் — வக்கீல்
கொட்டி முழக்கிநின்று ஆடுவதும்
கூட்டிலே கள்ளன் நடுங்குவதும் — இந்தக்
கும்பி செயும்செயல் அல்லவோடோ[12]

கவிஞர் இங்குக் குறிப்பிடும் 'கும்பி செயும் செயலும்' மேற் பாடலின்'வயிற்றின் கொடுமையும்' ஒரு கருத்தையே தெரிவிப் பன.இப்பாடலின் கண்பொதிந்துள்ள உண்மை பிச்சைக்காரர் கட்கு முற்றிலும் பொருந்தும். திருப்பதியில் நடமாடும் பல நவீன பிச்சைக்காரர்கட்கு இது சிறிதும் பொருந்தாது. இவர்களுள் நூற்றுக் கணக்கானவர்கள் திருப்பதி கோவாப்பரேட்டிவ் வங்கியில் 'காப்பு நிதிக் கணக்கு' (Savings Account) வைத்திருப்பதை அறிந்தேன்; வியந்தேன். பணத்தாசை யாரை விட்டது? 'முற்றுந் துறந்த முனிவர்கள்' என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட பணத்தில் புரள்வதைக் காணும்போது நம் மனதில் ஒரே குழப்பம். எங்கும் 'சொல்லும் செயலும்' வடதுருவம் — தென் துருவம்போல் விலகி நிற்பதைக் காண்கின்றோம்.

நிற்க. வேலூர் வாத்தியாரின் கற்பித்தலுக்கு மீண்டும் வருகின்றேன். வீரசைவர் மரபைச் சேர்ந்தவராதலால் வீர சைவப் புலவர் சிவப்பிரகாச அடிகள் அருளிய '**நன்னெறி**' என்ற நூல்களிலுள்ள பாடல்களையும் மனப்பாடம் செய்யு மாறு வற்புறுத்துவர். இப்பாடல்கள் சிறந்த வாழ்க்கை நெறிகளை அநுபவ வாயிலாகக் காட்டுபவை. இங்கும் என் உள்ளத்தைக் கவர்ந்த இரண்டு பாடல்களைக் காட்டுவேன், ஒரு பாடல் :

---

12 கவிமணி : மலரும் மாலையும் — பிச்சைக்காரர் — கும்மாளம் — 7

இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்காது அழற்கதிரால், தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்.[13]

இன்முகத்துடன் கூடிய இன்சொல்லைக் கேட்டு எவர் மனமும் மகிழும்; மாறுபட்ட முகத்துடன் வெளிப்படும் வன்சொல் எவரையும் மகிழ்விக்காது. எல்லாரும் அறிந்த இந்த உண்மையை முன்னிரண்டு அடிகள் நுவலும். கதிரவன் காய்தலால் கடல் பொங்கி எழாது; ஆனால் தண் மதி காய்தலால் அது பொங்கி எழும். இந்த உண்மையை உவமையாகக் கொண்டு முன்னிரண்டு அடிகளில் பொதிந் துள்ள உண்மையைச் சிறுவர்களின் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியுமாறு விளக்குவார் வேலூர் வாத்தியார்.

இன்னொரு பாடல் :

பெரியவர் தம்நோய்போல் பிறர்நோய்கண்டு உள்ளம்
எரியின் இழுதுஆவர் என்க;—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.[14]

உடலில் எந்த உறுப்பில் நோய் தாக்கினாலும் அது படும் தொல்லைகண்டு கண் கலங்கும்; கண் நீர் பெருகும். இது சிறுவர்கள் நன்கு அறிந்த உண்மை. இஃது ஈற்றடி இரண்டில் பொதிந்துள்ளது. இதனை உவமையாகக் கொண்டு முன்னிரண்டு அடிகளில் நுவலப்படும் உண்மையை விளக்குவர் கவிஞர். பிறர்க்கு வரும் நோயைக் கண்டு பெரியவர்கள் தமக்கு வந்ததாகக் கருதி வருந்துவர்; தீயிற் பட்ட மெழுகுபோல் உருகி மனம் நெகிழ்வர். பெரியோர்

13. நன்னெறி-18.
14. ஷை-20.

களின் இப்பண்பை முற்கூறிய உவமையால் தெளிவாக்குவர். இந்தப் பாடலை அடிகளாரின் வழி நின்று என் உள்ளம் கவரும் வண்ணம் வேலூர் வாத்தியார் விளக்கினதை இன்றும் நினைவு கூர்ந்து மகிழ முடிகின்றது. மற்றுமொரு அருமையான பாடல் என் மனத்தில் குமிழியிடுகின்றது.

கைம்மாறு கருதாமல் கற்றறிந்தோர், மெய்வருந்தி
தம்மால் இயல்உதவி தாம்செய்வர்;—அம்மா!
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று.[15]

என்பது பாடல். கற்றறிந்த பெரியோர்கள் பயன் கருதாமல் மெய்வருந்தித்தம்மால் இயன்றஉதவிகளைப் பிறர்க்குச் செய்வர். இதுஎதுபோல் உளது? கவிஞர் ஓர் அருமையான உவமையால்-குறிப்பாகச் சிறுவர்கள் நன்கறிந்த உவமையால்-தெளிவாக விளச்குவர். உண்ணும உணவு வகைகளைச் சுவைப்பது நாக்கு. முறுக்கு, சீடை, தேன்குழல் போன்றவற்றை நாக்கு சுவைக்க முடியாது. ஆனால் அவற்றின்மீது நாக்கு தன் ஆசையை விடுவதில்லை. பற்கள் இதன் ஆசையை நிறைவேற்றுகின்றன. இத்தகைய வலிய பொருள்களை நன்கு மென்று நாவின் நடுவில் தள்ளுகின்றன. சீடை கரும்பு போன்றவற்றைச் சிரமப்பட்டு மெல்லுகின்றன; இப்படி மெல்லுவதால் தமக்கு ஒரு பயனும் இல்லை; நாவின் பொருட்டே மெல்லுகின்றன. இதனால் இவை கைம்மாறு கருதாமல் உதவும் பெரியோர்களை ஒக்கின்றன. இவ்வாறு கவிஞர் விளக்குவதை ஆசிரியர் தமக்கே உரிய தனிப்பட்ட முறையில் அற்புதமாக விளக்கிச் சிறுவர்களை மகிழ்விப்பர்.

‘**நீதி வெண்பா**’ என்ற பெயரில் அரிய நூல் ஒன்று உள்ளது. இயற்றிய ஆசிரியரின் பெயர் அறியக்கூடவில்லை. இதிலும் பல பாடல்கள் மாணாக்கர்கட்கு அரிதான நீதியை

15. நன்னெறி-27.

எளிதாகப் புகட்டும் முறையில் உள்ளன. இதிலுள்ள பாடல்களையும் வேலூர் வாத்தியார் அருமையாகக் கற்பித் தார். முன்னர்க் கற்பித்த பாடல்களுடன் ஒப்பிட்டும் கற்பிப் பதுண்டு.

ஒரு பாடல் :

மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்; கடின
வன்மொழியி னால்இகழும் மண்ணுலகம் —
நன்மொழியை
ஓதுகுயில் ஏதுஅங்கு உதவியது? கர்த்தபந்தான்
ஏதுஅபரா தஞ்செய்தது? இன்று[16]

எப்போதும் இனிமையாகவே பேசவேண்டும் என்ற கருத்தை உவமைகளினால் விளக்குகின்றது இப்பாடல். ஓசையால் மென்மையுற்றும் பொருளால் இனித்தும் ஒருவர் வாயி னின்று வெளிப்படும் சொல்லை இவ்வுலகம் விரும்பி மகிழ் கின்றது. ஆனால் இதே உலகம் ஓசையால் வன்மையுற்றும் பொருளால் கைத்தும் ஒருவர் வாயினின்று வெளிப்படும் சொல்லை அருவறுத்துப் பேசுகின்றது. இந்த உண்மையை விளக்க நீதிவெண்பா ஆசிரியர் இரண்டு எடுத்துக்காட்டு களைத் தருகின்றார். மெல்லிய குரலாலான இனிய ஓசை யுடன் கூவும் குயில் என்ன கொடுத்துவிட்டது? (எதுவும் இல்லை). அருவருப்புடன் வல்லோசையை எழுப்பும் கழுதை (கர்த்தபம்) என்ன கெடுதியை (அபராதம்) விளை வித்தது? (எதுவும் இல்லை). ஆனால் குயிலை மட்டும் உலகம் விரும்புவது ஏன்? அதன் மெல்லிய இனிய ஓசை யாலன்றோ? கழுதை வல்லோசையைத் தருவதால் அஃது உலகிற்கு அருவருப்பை விளைவிக்கிறது. ''இந்த உண்மையை இன்சொலால் அன்றி'' என்று தொடங்கும் நன்னெறிப்

16. நீ. வெ. 4.

பாடலாலும் அறிந்துள்ளீர்கள்"[17] என்றும் நினைவுகூரச் செய்து எங்களை மகிழ்விப்பார். நெஞ்சை நெகிழ்விக்கும் இன்னொரு பாடல் :

பாலின்நீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்—நூலினெறி
உற்றோர் இடுக்கண் உயிர்கொடுத்தும் மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து[18]

பாலும் நீரும் நண்பர்கள்; ஒன்றோடொன்று நன்றாகக் கலக்கும் தன்மையன. நீருக்கும் நெருப்புக்கும் பகை. நீர் கலந்த பால் காய்ச்சப்படும்போது பாலில் உள்ள நீரைத் தீ அணுகிச் சுடுகின்றது. பால் பொங்கத் தொடங்குகின்றது. பொங்கி வழிந்து தீயை அணைக்கின்றது. சிறிது நீர் தெளிக்கப்பெற்றதும் பொங்குவது அடங்குகின்றது. 'தளதள' என்று கொதிக்கின்றது; நீரும் பாலும் சேர்ந்து விளையாடுகின்றன. இங்குப் பாலின் துணையாகின்ற நீருக்கு ஆபத்து வருங்கால் பால் வெகுண்டு தன் உயிரைக் கொடுத்துத் தீயை அணைக்கின்றது. இது போலவே கற்றறிந்த பெரியோர்கள் தம்மை அடைந்தார்க்கு வரும் துன்பத்தைப் பிறர் இதுவே தகுதி என்று புகழ்ந்து சொல்லுமாறு மதித்துத் தம் உயிர் கொடுத்தும் அத்துன்பத்தை மாற்றுவார்கள். இவ்வாறு இறுதியடிகள் இரண்டிலும் குறிப்பிடப்பெற்றுள்ள உயர் கருத்தை முதலிரண்டடியிலுள்ள எடுத்துக்காட்டைக் கொண்டு தெளிவாக விளக்குவார் வேலூர் வாத்தியார். இவர் நீதி நூல் பாடல்களை மிக நன்றாகச் சிறுவர்கள் மனங் கவருமாறு கற்பிப்பர்.

---

17. இந்நூல்-பக்கம். 94
18. நீ. வெ. 77

# 12. பழையமுறைக் கல்வி

**தொ**டக்கக் காலத்தில் அதாவது நான் முதல் ஐந்து வகுப்புகள் பயின்றவரை எனக்குக் கற்பித்தவர்கள் நால்வர். பெரகம்பியில் **இலிங்கிசெட்டியார்** என்ற திண்ணைப்பள்ளி ஆசிரியர்; பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயிற்சி பெறாதவர். மரபு வழியாகக் கற்றுப் பழைய முறைகளில் கற்பிப்பவர். கோட்டாத்தூரில் முதலில் கற்பித்தவர் **வேலூர் வாத்தியார்** என வழங்கப்பெறுபவராகிய **சந்திரசேகரய்யர்**. இவர் Lower grade ஆசிரியர். பயிற்சி பெற்றிருந்தாலும் மரபு முறையில்தான் கற்பித்தவர். அடுத்து எனக்கு ஆசிரியர் களாக அமர்ந்தவர்கள் **சுப்பராய உடையார், வி.கே. அரங்க நாத அய்யர்**. இவர்கள் Higher grade ஆசிரியர்கள். அவர்கள் கற்பித்தமுறைகளையும் தரத்தையும் இப்போது நினைத்துப் பார்த்தால் சுப்பராய உடையார் எட்டாவது வரை படித்துப் பயிற்சி பெற்றவர் என்பதையும் அரங்கநாத அய்யர் பத்தாவது வரை படித்துப் பயிற்சி பெற்றவர் என்பதையும் ஊகித்து அறிய முடிகின்றது.

**இலிங்கிசெட்டியார்** 1 முதல் 100 வரை எண்ணுவதையும் 1 முதல் 20 வரை உள்ள வாய்பாட்டையும் ‘முறைவைப்பு’ முறையிலேயே கற்பித்துவிட்டார். விளையாட்டுப் போலவே சிறுவர்கள் இவற்றை நன்கு கற்றனர். எண்சுவடியையும், கற்பித்தார். தமிழ் ஆங்கில நாள், மாதம், ஆண்டு இவற்றின் பெயர்களையும் இவ்வாறே கற்பித்து மனப்பாடமாக்கி விட்டார். இவர் எண்களைக் கற்பித்தபின் கூட்டல்,கழித்தல் பெருக்கல், வகுத்தல் கணக்குகளையும் கற்பித்துவிட்டார். கோட்டாத்தூருக்கு வந்த பின் **வேலூர் வாத்தியார் ரூபா அணா பைசா** கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகளையும் அதுபோலவே ஆங்கில அரசு ஆட்சியி லிருந்ததால் **பவுன் ஷில்லிங் பென்ஸ் ஃபார்த்திங்** கூட்டல்,

கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகளையும் கற்பித்தார். சுப்பராய உடையார் காலத்தில் கணக்கில் கணிசமாக ஒன்றும் கற்றதாக நினைவு இல்லை. அரங்கநாதய்யர் காலத்தில் எல்லாத் துறைகளிலும் கல்வியில் எனக்கு வேகமான வளர்ச்சி ஏற்பட்டது. இலாப-நஷ்டம், சாதாரண வட்டி, பிரிவினை, தள்ளுபடி, சராசரி போன்ற கணக்குகளையும் கற்றுக் கொண்டேன். பின்னம், தசம பின்னக் கணக்குகளையும் அரங்கநாத அய்யர் கற்றுக் கொடுத்தார். இவர் காலத்தில் தசம பின்ன அறிவு சரியாக ஏற்படவில்லை. துறையூர் உயர் நிலைத் தொடக்கப்பள்ளியில் சேர்ந்து எட்டாவது படித்த எட்டு மாதக் காலத்தில்தான் தசம பின்னக் கணக்குகளைச் செய்வதிலும் கணிசமான அறிவு ஏற்பட்டது. இவ்வாறெல்லாம் கணக்குப் பாடத்தில் பெற்ற அறிவின் அடிப்படையில் உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் கணிதத்தில் முதல்வனாகத் திகழ முடிந்தது. இந்த நிலையில் இந்த நான்கு ஆசிரியர்கள் கற்பித்த முறைகளைப் பழையமுறைகள், புதிய முறைகள் என்றும் பிரித்துக் கொண்டு நினைவுகூர முடிகின்றது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பெற்ற பயிற்சியாலும், பத்து ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய அநுபவத்தாலும் பல்லாண்டுகள் பல நிலை மாணாக்கர்கட்குக் கற்பித்த அநுபவத்தாலும் இவ்வாறு சிந்திக்க முடிகின்றது. சுருக்கமாகக் கூறினால் பழைய முறைகளில் பாடங்களுக்கு முக்கியத்துவம் (Subject-centred) தரப்பெற்றிருந்தது, புதிய முறைகளில் பயிலும் குழந்தைக்கு (Child-centred) முக்கியத்துவம் தரப்பெறுகின்றது. என் கல்வியில் இந்த இரண்டு முறைகளும் இடம் பெற்றமையால் இவைபற்றி ஈண்டுச் சிந்திக்க முடிகின்றது.

**பழைய முறைகள் :** ஆசிரியர்கள் பயிற்சி பெறாது கற்பித்த காலத்தில் முதலில் எழுதவும் படிக்கவும் கற்பிக்கப் பெற்றது; எழுத்தைக் கற்பித்த பிறகு படிப்பு கற்பிக்கப்

பெற்றது; படிப்பையும் எழுத்து முறையிலேயே கற்பித்தனர். எழுத்துகள் ஒன்று சேர்ந்து சொற்களாதலையும், சொற்கள் பல சேர்ந்து சொற்றொடர்களாகி ஒரு கருத்தை விளக்கு தலையும் கண்டு அவ்வாறே காரணகாரிய முறைப்படி (Logical method) எழுத்து, சொல், சொற்றொடர் என்ற முறையில் கற்பித்தல் நடைபெற்றது. ஆனால் திண்ணைப் பள்ளிக் கூடத்திலும் சற்று உளவியல் முறைகளைத் தழுவி திரு. கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பெற்ற முதல் ஐந்து வகுப்புகளுக்கான தமிழ்ப் பாடநூல்கள் புழக்கத்திற்கு வந்திருந்தன. நான் திண்ணைப் பள்ளியில் படித்த காலத் திலேயே இந்தப் பாடநூல்களைப் படிக்கும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. பெரகம்பிக்கு அருகிலுள்ள செட்டி குளம் என்ற ஊரில் பலசரக்குக் கடையில் இந்த நூல்கள் கிடைத்தன.

சொற்களையும் சொற்றொடர்களையும் படிக்கத் தெரிந்ததும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, உலகநீதி போன்ற மூதுரை நூல்கள் படிப்படியாகக் கற்பிக்கப் பெற்றன. அடுத்து வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நீதி வெண்பா போன்ற நீதி நூல்கள் கற்பிக்கப் பெற்றன. திண்ணைப் பள்ளிகளிலும் செய்யுளைச் சொற் பொருள், பொழிப்புரை, கருத்துரை என்ற முறையில் ஆகிரியர் எடுத்துக் கூறுவது, அதை மாணாக்கர் கேட்டுக் கொண்டிருப்பது, முதல் நாள் கற்பித்தவற்றை மறு நாள் ஒப்புவிக்கச் செய்வது, அன்று கற்பித்தவற்றைத் திரும்பக் கூறச் செய்வது முதலியவை நடை முறையில் மேற்கொள்ளப் பெற்ற முறைகளாக இருந்து வந்தன. மனப்பாடம் செய்யும் பழக்கம் எல்லா நிலைகளிலும் வற்புறுத்தப்பெற்றன.

மூதுரைகளிலும் நீதி நூல்களிலும் சில கருத்துகள் சிறுவர் களின் அநுபவத்திற்கு அப்பாற்பட்டிருந்தன; குருவித் தலையில் பனங்காய் கட்டுவது போன்றிருந்தது. ஆத்திசூடியில்,

அறஞ் செய விரும்பு
ஊக்கமது கைவிடேல்
தந்தை தாய்ப் பேண்.
நன்றி மறவேல்
சனி நீராடு

என்பவை போன்றவை மாணாக்கர் அநுபவத்தை யொட்டி இருந்தாலும்,

ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்
மன்று பறித்து உண்ணேல்
தையல் சொல் கேளேல்
நுண்மை நுகரேல்
மோகத்தை முனி

என்பவை போன்றவற்றின் பொருளை அறிவது சிறுவர்களின் அறிவிற்கும் அநுபவத்திற்கும் அப்பாற் பட்டது.

ஔவையாரின் **கொன்றை வேந்தனிலும் கூட.**

அன்னையும் பிதாவும் முன்அறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
தாயின் சிறந்த ஒரு கோயிலும் இல்லை

என்பவை போன்றவற்றின் பொருள் சிறுவர்களின் அநுபவத்தை யொட்டி உள்ளது. ஆனால்,

சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
பீரம்பேணி பாரம் தாங்கும்

என்பவற்றின் பொருள் விளங்குதல் அரிது.

**அதிவீரராமபாண்டியனின் வெற்றிவேற்கையில்**

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்
கல்விக்கு அழகு கசடுஅற மொழிதல்
உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது

என்பவை போன்றவற்றின் பொருள் சிறுவர்களின். அநுபவத்திற்கு ஏற்றவையாயினும்,

அச்சம் உள்அடக்கி, அறிவு அகத்து இல்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின், அக்குடி
எச்சம் அற்று, ஏமாந்திருக்கை நன்றே

அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடு இருந்து அரசாளினும் ஆளுவர்

சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்

என்பவை சிறுவர்களின் அநுபவத்திற்கு அப் ஏற்பட்டவை யாகும்.

**உலகநாத பண்டிதர்** இயற்றிய **உலகநீதியிலும்** சிறுவர் கட்கு உகந்தவையும் உண்டு; அவர்கள் சிந்தனைக்கு அப்பாற் பட்டவையும் உண்டு. இந்நூலிலுள்ள பாடல்கள் அறுசீர் விருத்தம் போல் இருப்பினும் ஒவ்வோர் அடியிலும் பப்பாதி ஒருபழமொழிபோல் பொருள் முடிவு கொண்டவையாய் உள்ளன.

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்.
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்.

இவற்றின் பொருள் சிறுவர்க்குப் புரியக்கூடியவையாய் உள்ளன. ஆனால்,

கொற்றவனோடு எதிர்மாறு பேசவேண்டாம்.
வெஞ்சமரில் புறங்கொடுத்து மீளவேண்டாம்.
பொருவார்தம் போர்க்களத்தில் போகவேண்டாம்.
இருதாரம் ஒருநாளும் தேடவேண்டாம்.
வாதாடி வழக்கு அழிவு சொல்லவேண்டாம்.

என்பவை இவர்தம் அநுபவத்திற்கு அப்பாற்பட்டவை இவண்குறிப்பிட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, உலகநீதி ஆகிய நூல்களிலுள்ள பாடல்கள் யாவும் பெரகம்பியில் திண்ணைப்பள்ளியில் படிக்கும்போதே விளையாட்டுபோல் 'முறைவைப்பிலேயே' மனப்பாடம் ஆகிவிட்டன. வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி போன்ற நீதிநூல் பாடல்கள் தொடங்கப் பெற்ற சில மாதங்களில் கோட்டாத்தூரில் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

ஓராண்டுதான் வேலூர் வாத்தியாரிடம் பயின்றதாக நினைவு. வாக்குண்டாம், நல்வழி, நன்னெறியிலுள்ள பாடல்களை யெல்லாம் வற்புறுத்திமனப்பாடம் செய்யும்படி செய்து விட்டார். பாடல்களின் பொருள்களை விளக்கிய பிறகுதான் மனப்பாடம் செய்யுமாறு பணித்தார்.

ஆழ அமுக்கி முகக்கினும், ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால் நாழி;—தோழி!
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன்[19]

என்பனபோன ஒருசில பாடல்களைத் தவிர பெரும்பாலான வாக்குண்டாம் பாடல்கள் மாணாக்கர் அநுபவ நிலைக்கு ஏற்றவையே, நல்வழியிலும் பெரும்பாலான பாடல்கள் இவை கற்கும் வயதில் உள்ள சிறுவர்கள் அநுபவித்து மகிழக்கூடியனவ.

19. வாக்குண்டாம் 19

அம்மி துணையாக ஆறுஇழிந்த வாறுஒக்கும்,
கொம்மை முலைபகர்வார் கொண்டாட்டம்; இம்மை
மறுமைக்கும் நன்றுஅன்று; மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்துஆய் விடும்[20]

என்பனபோன்ற ஒரு சில பாடல்களே சிறுவர்கள் உணர்வதற்கு அரியவை.

**நன்னெறியில்** ஒரு சில பாடல்களே ஐந்தாம் வகுப்பு மாணாக்கர்கட்கு ஏற்றவை.

பொய்ப்புலன்கள் ஐந்தும்நோய்
புல்லியர்பால அன்றியே
மெய்ப்புலவர் தம்பால்
விளையாவாம்;—துப்பின்
சுழற்றுங்கொல் கல்தூணைச்
சூறா வளிபோய்ச்
சுழற்றும் சிறுபுன்
துரும்பு[21].

என்பன போன்ற பல பாடல்கள் சிறுவர்களின் அறிவு-அநுபவங்கட்கு அப்பாற்பட்டவை. என்ற போதிலும் பழைய மரபை யொட்டிக் கற்பித்த ஆசிரியர்கள் இவற்றையெல்லாம் மாணாக்கர்களிடம் மனப்பாடம் ஆக்குவதில் தவறுவதில்லை. இம்முறை புதிய முறைக் கல்வியின்படி உளவியல் கருத்துகளுக்கு ஒவ்வாதவை என்று இக்காலத்தார் குறை கூறுவர். பழங்கால ஆசிரியர்கள் குழந்தைகளின் மனநிலை, அறிவு வளர்ச்சி, மனவெழுச்சிகள், இயல்பூக்கங்கள் முதலியவற்றை அறியாதவர்கள் எனக் குற்றம் சாட்டுவர்; பொருத்திக் கற்பித்தல் (Correlation) இல்லாதது பெருங் குறையாக எடுத்துக் காட்டுவர்.

20. நல்வழி—20
21. நன்னெறி—11

**நிறைகள் :** இக்கால முறைவல்லார் பண்டைய முறைகளைக் குறை கூறுவது சிறிதும் பொருந்தாது. அக்காலக்கல்வி இக்காலக் கல்விபோல் வேலைதேடுவதற்காகக் கற்கும் கல்வி அன்று. படித்தல், எழுதுதல், கணக்கு இந்த மூன்றையும்[22] கற்றுக்கொண்டால் வாழ்க்கைக்குப் போதும் என்ற ஒரே நோக்க முடையவர்களாதலின், இந்த மூன்றிலேயே தம் கருத்தினைச் செலுத்தினர். இக்காலக் கல்வி ஏற்பாட்டில் உள்ள பொதுஅறிவியல், புவியியல், வரலாறு இயற்கணிதம், வடிவ கணிதம், வேதியியல், இயற்பியல், உயிரியல், தாவரஇயல், விலங்கியல் போன்ற பாடங்கள் அக்காலக்கல்வி முறையில் இல்லாமையால் காலம் மீதமாய் இருந்தது. அவர்கள் இக்காலத்திற்கும் பிற்காலத்திற்கும்—ஏன்? மறுமைக்கும் கூடத்தான்—பயன் படக்கூடியவை என்று பளுவான கருத்துகளையுடைய இலக்கியத்தையும் கற்பித்தனர் என்பதை நாம் உளங்கொண்டால் பண்டைய முறைகளைக் குறைகூற வேண்டியதில்லை என்பது தெரியும்.

பண்டைய முறைகளில் நிறைகளே இல்லை என்றும் சொல்ல முடியாது. மனப்பாடம் செய்ததால் மாணாக்கர்கள் மொழித்திறம் பெற்றுத் திகழ்ந்தனர். மனப்பாடம் செய்த பகுதிகளின் சொல்லும் பொருளும் எப்போதும் உள்ளத்திலும் காதிலும் ஒலித்துக் கொண்டிருப்பதால், வேண்டுங்கால் அவற்றை நினைவுகூரலாம், அக்காலத்தில் மாணாக்கர் பெற்ற ஆழ்ந்த இலக்கண அறிவு, தாமாகவே பல இலக்கியங்களை நயமுணர்ந்து கற்கத் துணையாக இருந்தது. இன்னும் பல நன்மைகளைப் பன்னி உரைக்கின் 'பாரதமாக' வளரும்.

---

22. இக்காலக் கல்வியியலார் இவற்றை மூன்று R கள் (Three Rs) என்று வழங்குவர். அதாவது Reading Writing, Arithmetic என்ற மூன்றிலும் உள்ள Rகள்

# 13. புதியமுறைக் கல்வி

தொடக்கக் காலத்தில் பழைய முறைப்படி கற்ற நான் பிற்காலத்தில்—நான் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்தபோது பல புதிய முறைகளை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. ஒன்பதாண்டுகள் பல பாடங்களை உயர்நிலைப் பள்ளி மாணக்கர்கட்குக் கற்பித்தபிறகு பத்தாண்டுகள் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் பேராசிரியனாகப் பணியாற்றிய போது இப்புதிய முறைகளைப்பற்றி மேலும் சிந்திக்கவும் இவற்றை எப்படி நடைமுறைப் படுத்தலாம் என்று எண்ணவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. புதிய முறைகட்கு வித்திட்ட பல மேனாட்டறிஞர்களின் சேவையும், அவர்கள் கொண்ட பல அடிப்படைக் கருத்துகளும் இந்தக் குமிழியில் எழுகின்றன. அவற்றை ஈண்டுக் காட்டுவேன்.

மேல் நாட்டில் 'மறுமலர்ச்சி' காலத்திலிருந்து புதிய கல்விமுறை தொடங்கியது என்று கருதலாம். ஃபிரெஞ்சுப் புரட்சியுடன் பழைய முறைகள் மறைந்தன.

**ரூஸோ** (1712-1779) : இந்த அறிஞரின் **எமிலி** என்ற நூல்தான் புதிய முறைகளின் வித்து எனலாம். ரூஸோவின் கல்விபற்றிய கருத்துகள் தெளிவாக இதில் காணப்பெறுகின்றன. இவர் கருத்துப்படி கல்வி என்பது மனிதனால் வளர்க்கப்பெற்ற செயற்கைமுறை நாகரிகத்திற்கு ஒரு குழந்தையை ஆயத்தம் செய்வது அன்று; ஆனால், குழந்தையின் இயல்பு மனிதனால் படைக்கப்பெற்ற சமூகத்தினால் பாதிக்கப்பெறாமல் பாதுகாக்கப்பெற வேண்டும் என்பது இவர் விருப்பம். "இயற்கை அன்னையிடமிருந்து வரும் எவையும் சிறந்து விளங்குகின்றன; ஆனால் அவை

யனைத்தும் மனிதன் கைப்பட்டதும் சீரழிகின்றன''[23] என்பது இவர் கொள்கை. இயற்கையன்னை ஈன்ற குழந்தையை மனிதன் படைத்த சமூகத்தில் பழக்கிக் கெடுக்கக் கூடாது என்பதும், கல்விபுகட்டுதலில் குழந்தை தான் முக்கியக்கூறு, மனிதன் வளர்த்த பண்பாடல்ல என்பதும் இவர் கருத்து. இதனால்தான் ரூஸோவைக் கல்விமுறையின் **'காபர்னிகஸ்'** என்று கூறுகின்றனர். பூமியை நடுவாக வைத்துத்தான் ஏனைய கோள்கள் இயங்குகின்றன என்ற பழைய கொள்கையை காபர்னிகஸ் மறுத்து, கதிரவனைத் நடுவாகக் கொண்டுதான் அவை இயங்குகின்றன என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியது போலவே, அதுகாறும் கல்வி ஏற்பாட்டினை (Curriculum) நடுவாக வைத்துக் கற்பிக்கப் பெற்ற முறையைத் தவறு எனக் கண்டித்து, குழந்தையை நடுவாக வைத்துக் கற்பிக்கப் பெறல் வேண்டும் என்று கூறினார் ரூஸோ. ''குழந்தையை நன்றாக ஆராய்க; குழந்தையை அறிவது எளிதல்ல,'' ''குழந்தையைக் கவனி; இயற்கையோடு இணைந்துநட'' என்பவை ரூஸோ கல்வித் துறையில் பணியாற்றுவோருக்குக் காட்டிய மாபெரும் உண்மைகள். இவர் கொள்கை உளவியல் உண்மைகளை ஒட்டியது.

**பெஸ்டலாஸ்ஸி** (கி. பி. 1746-1827): இவர் ஸ்விட்ஸர் லாந்து நாட்டு அறிஞர். ரூஸோவின் கல்விபற்றிய கருத்து களை வகுப்பறையில் பயன்படச் செய்தவர் இவர். இவர் குழந்தையை விதையாகக் கருதினார். விதைக்குள் எதிர் காலத்தில் பெரிய மரமாகும் ஆற்றல் சிறு வடிவில் உள்ளுறைந்திருப்பது போல (Latent) பிற்காலத்தில் வெளி வரவேண்டிய பேராற்றல்கள் குழந்தைகளிடம் உள்ளுறைந்து

23. 'All things are good as they come out of the hands of their Creator but everything degenerates in the 'hands of man'—**Emile or A Treatise of Education**.

கிடக்கின்றன என்று இவர் எண்ணினார். இவ்வாற்றல்களை வெளிப்படுத்தலே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும் என்றும் இவர் கருதினார். எனவே, இவர் புலன்கள் வாயிலாகத்தான் கல்வி புகட்டப்பெறல் வேண்டும் என்று வலியுறுத்தினார். இவரும் ஏட்டுப் படிப்பை ஆதரித்தாரிலர். ''சொற்களுக்கு முன் பொருள்கள்'' என்பது இவர் கொள்கையின் உயிர்நாடி. எனவே, **உற்று நோக்கல் முறை** (Observation method) என்ற ஒரு முறையையும் கண்டார். உற்றுநோக்கிக் கற்றலில்தான் மொழி விளக்கமடைகின்றது என்பது இவர் கொண்ட நம்பிக்கை.

பெஸ்டலாஸ்ஸியின் முறையில் இரண்டு முக்கியமான கூறுகள் உள்ளன. **ஒன்று:** புறஉலகிலிருந்து பட்டறிவுமூலம் பெறும் கருத்துகளே கல்வி என்பது; இப்பட்டறிவைப் புலன்கள் வாயிலாகவே அடையமுடியுமாதலால் ஆசிரியர் இவ்வறிவுப் பெருக்கத்தில் துணையாக இருக்க வேண்டும் என்பது இவரது விருப்பம். **இரண்டு:** முழுவளர்ச்சியடைய வேண்டிய மனிதன் குழந்தையிடமே மறைந்து காணப்படுகின்றான் என்ற ரூஸோவின் கொள்கையை இவரும் வலியுறுத்தினார். விவேகாநந்த அடிகளும் இதைத்தான் 'கல்வி என்பது ஏற்கெனவே மனிதனிடம் மறைந்து கிடக்கும் அறிவின் மலர்ச்சியே'[24] என்று கூறினார். பெஸ்டலாஸ்ஸியினுடைய கொள்கையின் முதற்கூற்றை ஹெர்பார்ட் என்ற செருமானிய நாட்டுப் பேராசிரியர் அப்படியே தழுவினார்; இரண்டாம் கூறு அப்படியே ஃபிராபெல் என்ற செருமானிய நாட்டுக் கல்வி அறிஞரால் தழுவப்பெற்றது. பெஸ்டலாஸ்ஸி ஓர் உளவியற் கலைஞர் அல்லர்; ஆயினும் இவர் கல்வியை உளவியலின் அடிப்படையில் அமைக்க ஆர்வங் கொண்டார். இதை ஹெர்பார்ட் என்ற அறிஞர் நிறைவேற்றினார்.

---

24. Education is the manifestation of the perfection already in man —Swami Vivekananda.

**ஹெர்பார்ட்** (கி. பி. 1776-1841) : இவர் மனத்தைப்பற்றி நன்கு ஆராய்ந்தவர். மனம் செயற்படுவதைப்பற்றிய பல உண்மைகளைக் கண்டவர். மனம் எவ்வாறு வெளியுலக அநுபவத்தை வாங்கிக் கொண்டு தன் வயமாக்கிக் கொள்ளுகின்றது என்பதை ஒரு கொள்கையாக விளக்கம் தந்து, கற்பித்தலின் ஐந்து படிகளை உலகிற்கு உணர்த்தினார். இந்த ஐந்து படிகளின் வழியாகத்தான் மனம் வெளியுலக அநுபவத்தைப் பெறுகின்றது என்பது ஹெர்பார்ட் நமக்குக் காட்டிய உண்மை. மனத்தைத் தயாரித்தல், எடுத்துக் கூறல், ஒப்பிடல் பொதுவிதி காணல், விதியைச் செயற்படுத்தல் ஆகியவையே ஹெர்பார்ட்டின் ஐந்து படிகள் (Herbartian five steps) ஆகும். இப்படிகளை அறிந்தோ அறியாமலோ பல அறிஞர்கள் கற்பித்தலில் கையாண்டபோதிலும் இவற்றை வரையறை செய்து உலகிற்கு முதன்முதலாக உணர்த்திய பெருமை ஹெர்பார்ட்டையே சாரும். இந்த ஐந்து விதிகளும் உளவியலின் அடிப்படையில் அமைந்தவை.

**ஃபிராபெல்** (கி. பி. 1782-1852) : இவர் இயற்கை அன்னையும் மனிதனும் ஒன்றாக இருந்து கொண்டு இறைவனுடைய திருவுளத்தை வெளிப்படுத்துகின்றனர் என்று நம்பினார். எனவே, குழந்தைகளின் ஆற்றல்கள் மலர்ச்சியடைதல் இறைவன் திருவுளக் குறிப்புப்படி நிறைவேறுவதால் இவை தவறாகா என்று நம்பினார். எனவே, இயற்கையையொட்டி கல்வி கற்பித்தல் நடைபெற வேண்டும் என்பது இவர் கருத்தாகும். இவர் கொள்கைப்படி பள்ளி என்பது குழந்தைகளின் பூங்கா; பள்ளியில், கல்வீபயிலும் குழந்தைகள் பூங்காவில் வளரும் செடிகள், குழந்தைகளைக் கண்காணிக்கும் ஆசிரியர்; செடிகளைப் பாதுகாக்கும் தோட்டக்காரரைப் போன்றவர். எனவே கற்கும் குழந்தைகள் தாமாகச் செயற்பட்டும், கருத்துகளைத்தாமாக வெளியிட்டும் வளர்ச்சி எய்த வேண்டும் என்பது ஃபிராபெலின் விருப்பமாகும். இவற்றை

இவர் பாட்டுகள் வாயிலாகவும், படைப்பாற்றலின் துணை கொண்டும் எய்துவிக்கலாம் என்றும் கருதினார்.

**மாண்டிசாரி** (கி. பி. 1870-1952) : இத்தாலி நாட்டைச் சார்ந்த இந்த அம்மையார் ஃபிராபெல்லைப் போலவே குழந்தைகளை வளரும் செடிகளாகக் கருதினார். குழந்தைகளின் புலன்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களைக் கூர்த்த மதியினராக்கலாம் என்று இவர் கருதினார். இக்கருத்தைச் செயல் முறையிலும் மெய்ப்பித்துக்காட்டிப் பெரும் புகழ் பெற்றார். இன்று பல்வேறு இடங்களில் அம்மையாரின் கொள்கைகளைத் தழுவிப் பல குழந்தை நிலையங்கள் தோன்றி நடைபெற்று வருவதைக் காண்கின்றோம்.

**ஜான்ட்யூயி** (கி. பி. 1859-1952) : இவர் அமெரிக்க நாட்டைச் சார்ந்தவர். கல்வித்துறையில் புதியதோர் ஊழியைத் தொடங்கினவர். பிற்கால வாழ்க்கையைக் குழந்தை பள்ளியிலேயே ஓரளவு கண்டு கொள்ள வேண்டும் என்பது இவர் கொள்கை. இயக்கம், குழந்தைப் பருவத்தின் இயல்பாதலால், குழந்தை செயலுக்குத் துடித்து நிற்கின்றது. குழந்தை, பள்ளியில் பெறும் பட்டறிவு (அநுபவம்) அதனிடம் இயல்பாக அமைந்த இயக்கப் பண்புகளையையும் கவர்ச்சிகளையும் ஒட்டியிருத்தல் வேண்டும். பள்ளிவாழ்க்கை இம்முறையில் அமைந்தால், குழந்தையின் கல்வி சிறக்கும். இதைத் தெளிவாக உணர்ந்த ட்யூயி கற்றல் செயல் முறையில் அமைய வேண்டும் என்ற கொள்கையைக் கண்டு அதை நாடெங்கும் பரப்பினார். ஓர்வித அநுபவமுமின்றிச் செய்திகளைக் குழந்தை கற்பதை இவர் அடியோடு வெறுத்தார்.

ஜான் ட்யூயி குழந்தையின் இயற்கைக் கவர்ச்சிகளை நான்கு விதமாகப் பகுத்துக் கூறுவார். உரையாடுவதன் மூலம் கருத்துகளைத் தெரிவிப்பதில் ஆர்வம், வினாக்களின்

மூலம் செய்திகளை அறிவதில் ஊக்கம், பொருள்களைப் புனைவதில் விருப்பம், கருத்துகளைக் கலை உணர்வுடன் கூறுவதில் ஆசை ஆகிய நான்கு பண்புகளும் குழந்தைகளிடம் இயல்பாக அமைந்தவை என்றும், இவைதாம் குழந்தையின் விரைவான வளர்ச்சிக்கு இயற்கையாக அமைந்த மூலதனம் என்றும் இவர் மொழிவர். கற்றலில் அடங்கிய படித்தல், எழுதுதல், கணக்கிடுதல் ஆகிய மூன்று செயல்களும் மேற் கூறிய பண்புகளையொட்டி அமையவேண்டும் என்பது இவருடைய கொள்கை. கல்வித்துறையில் தாம் எழுதியுள்ள நூல்களிலும் இதே கருத்தைத்தான் இவர் மீண்டும் வற்புறுத்தி உரைப்பார்.

இவண் கூறிய கருத்துகளை ஒருங்கே வைத்துச் சிந்தித்தால் கல்வி முறைகள் இரண்டு பிரிவுகளில் அடங்கும் என்பது தெரியவரும். ஒன்று, அக நிலையை ஒட்டியது: இன்னொன்று புறநிலையைத் தழுவியது. ஒன்று உளவியலை அடிப்படையாகக் கொண்டது; இன்னொன்று சமூக இயலைச் சார்ந்தது. சிலர் அகநிலைக் கல்வியே சிறந்தது என்றும், சிலர் புறநிலைக் கல்வியே உயர்ந்தது என்றும் கூறுவர். அக நிலைக் கல்வியை வற்புறுத்துகின்றவர் உள்ளத்தின் வளர்ச்சியை முக்கியமாகக் கொள்கின்றனர். புறநிலைக் கல்வியை விரும்புகின்றவர் வெளியுலக அறிவிற்குச் சிறப்பு தருகின்றனர். கூர்ந்து ஆராய்ந்தால் உண்மை இரண்டு எல்லைக்கும் இடைப்பட்டது என்பது தெரியவரும். எனவே, கல்வி கற்பித்தலில் அகநிலைக் கல்வியையும் புறநிலைக் கல்வியையும் தேவைக்கேற்ற அளவு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது தெரியவரும். இங்ஙனம் பல அறிஞர்கள் கல்வித்துறையில் சிந்தித்ததின் விளைவாகப் பல கற்பிக்கும் முறைகள் உருவாயின.

இப்போது சிந்தித்துப் பார்த்தால் எனக்குக் கீழ் நிலையில் கற்பித்த ஆசிரியர்களுள் திரு. இலிங்கிசெட்டியார் அவர்

களே இக்கருத்துகளை ஓரளவு கடைப் பிடித்ததாகத் தெரிகின்றது. இவரை அடுத்து வேலூர்வாத்தியார் இக்கருத்துகளை ஓரளவு நடைமுறையில் காட்டினார் என்பதை அறிய முடிகின்றது. இந்த இருவரும் கருவிலே திருவுடைய ஆசிரியர்கள். தம் சிறார்களின் கல்வியில் அக்கறை கொண்ட பெற்றோர்களும் ஓரளவு இக்கருத்துகளை அறிந்து செயற்படுதல் மிகவும் இன்றியமையாதது.

குமிழி—14

# அரிச்சந்திர புராணம் பயின்றது

முன்னொரு குமிழியில் வேலூர் வாத்தியார் அரிச்சந்திரபுராணம் கற்பித்தல் பற்றிய கருத்து எழுந்து அப்படியே அடங்கிப் போயிற்று. அது மீண்டும் ஈண்டு எழுகின்றது. மாணாக்கர்களில் பெரும்பாலோர்க்கு வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி முதலிய நூல்களைக் கற்பிப்பதுடன் நிறுத்திக் கொள்வார். பெரும்பாலோர்க்கு அவையே மிகவும் பழுவாய்ப் போய் விடும். கற்பதில் ஆசை கொள்பவர்க்கு மட்டிலுமே **சதகங்கள். புராணங்கள்** இவற்றைக் கற்பிப்பார். நான் பயின்றபொழுது ஒரு நாலைந்து பேருக்கு மட்டிலுமே அரிச்சந்திரபுராணம் கற்பித்ததாக நினைவு. குத்து மதிப்பாகவே 'இவர்கட்கு இது தகும்' என்று அளந்து அறுதியிடுவதில் வல்லவர் வேலூர் வாத்தியார். குருவித் தலையில் பனங்காயைக் கட்டித் திறமையற்றவர்கட்குத் தொந்தரவு கொடுப்பதில்லை. இப்போதுள்ள கல்வி முறையில் மேல் வகுப்புகளில் விருப்பபாடம் (Optionals) என்ற ஒரு முறை இருக்கின்றதல்லவா? இத்தகைய ஒரு முறையையே வேலூர் வாத்தியார் மேற்கொண்டவராதலால் தேர்ந்தெடுத்த ஒரு சிலர்க்கு மட்டிலும் 'அரிச்சந்திர

புராணம்' கற்பித்தார்: அதனைத் தனித்தனியாகவும் கற்பித்தார். அநேகமாக வாரத்தில் மூன்று நாட்கள்தான் அரிச்சந்திரப் புராணம் கற்றதாக நினைவு.

அரிச்சந்திர புராணத்திலும் எல்லாப் பாடல்களையும் கற்பிப்பதில்லை. கதையை நன்கு விளக்கிவிட்டு சுவையான சில பகுதிகளையே தேர்ந்தெடுத்துக் கற்பிப்பார். நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு இவற்றில் சில பாடல்கள், விவாக காண்டத்தில் சில பாடல்கள், குறிப்பாக அரிச்சந்திரனின் திருமணப் பகுதியில் சில பாடல்கள் மட்டிலுமே கற்றதாக நினைவு. இந்திர காண்டத்தில் சில பாடல்கள் கதைத் தொடர்புக்காகப் படிப்பித்ததாக நினைவுகூர முடிகின்றது. வசிட்டனுக்கும் கோசிகனுக்கும் இடையே நடைபெற்ற வாக்குவாதத்தால் சிரமப்பட்டவன் அரிச்சந்திரன் என்பதை எங்கள் சிறு உள்ளங்கள் புரிந்து கொள்ளும் அளவுக்கு விளக்கு வார். இந்தக் கடல் சூழ்ந்த பூமியில்,

'வாய்மைக்கு நன்னூல் வளனுக்கு
மனத்தி லுற்ற
தூய்மைக்கும் மிக்கார் தமைஆய்ந்துநீர்
சொன்மின்[26]

என்று இந்திரன் வினவுகின்றான். இந்திரன் அவையிலிருந்த பல முனிவர்களுள் வசிட்டன் எழுந்து,

'பாருக் கொருவன் பரதார
சகோத ரன்வெம்
போருக் கொருவன் புகழுக்கு
மறைப்பொ ருட்டு

25. இந்தி. காண் 31

நேருக்கும் வீடா மனு நூல்நெறிக்
கும்பொ றைக்கும்
ஆருக்கும் மிக்கான் அரிச்சந்திரன்
ஆகும்'[26]

என்று அடித்துப் பேசுகின்றான். இதைக் கேட்ட கோசிகனுக்கு மனம் தாங்க முடிய வில்லை.

'வெய்யன் பதகன் பரதார
விருப்பன் வீணன்
பொய்யன் நிறையும் பொறையும்சிறி
தும் மில் புல்லன்
கையன் கபடன் கயவன்றனை
நல்லன் என்றிவ்
ஐயன் திருமுன் உரைத்தாய் இதுஏன்
ஆக'[27]

என்று மொழிகின்றான். 'எப்படியாயினும், தன் கருத்தை நிலை நிறுத்த முனைகின்றான் தவ வலிமை மிக்க விசுவாமித்திரன் என்று கூறி கதைத் தொடர்பைக் காட்டுவார் வேலூர் வாத்தியார். வஞ்சனைக் காண்டம், வேட்டஞ்செய் காண்டம் இவற்றின் கதைப் பகுதிகளை விளக்கி விடுவார்; பாடல்களைப் படிப்பதில் நாட்டம் செலுத்தாது அவற்றை ஒதுக்கி விடுவார். நகர் நீங்கிய காண்டத்தில், அரிச்சந்திரன் கோசிக முனிவர்க்கு நாடு நகரங்களைக் கொடுத்த பின்பு தன் மனைவி மைந்தனுடன் அந்நகரத்தை விட்டு நீங்கிச் செல்லும் காட்சிகளை நுவலும் பாடல்களில் ஆழங்கால்பட்டு அவற்றை மிக உருக்கமாகக் கற்பிப்பார். அரசன் சென்ற காட்சியைக் காட்டும்,

26. இந்தி. காண்-33
57.ஷை—35

தலமுழுதும் தவமுனிவன் றனக்களித்தேம்
இனியுறைதல் தகுதி அன்றென்று
இலகுமணி மண்டமும் எழில்மணிச்சிங்
காதனமும் இழிந்து போந்து
பலஅரச ருடன்அமைச்சர் அழுதுடன் போய்ப்
பரதவிக்கப் பதாதி மொய்க்கக்
குலமகனும் மடமயிலும் முன்நடக்கப்
பின்நடந்தான் கொற்ற வேந்தன்.[28]

என்ற பாடலை அவருக்கே உரிய 'கிரீச்' குரலுடன் படிக்கும் போதே தம்மை மறந்து கண்ணீர் சொட்ட விடுவார். மனப் பக்குவம் அடையும் அகவையை எட்டாததால் அவர் கண்ணீர் விடுவதன் பொருளை உணர முடிவதில்லை.

அரசன் பிரிவைக் கண்டு அலமந்து இரங்கும் மக்கள் நிலையைக் காட்டும் பல பாடல்களைப் படித்துக் கற்பிக்கும் போது தம்மை மறந்த நிலையில் குரல் தழுதழுத்த நிலையை அடைந்து விடுவார்.

தொடைதுறந்து முடிதுறந்து பணிதுறந்து
துடிமுரசும் துறந்து தாமக்
குடைதுறந்து வெண்கவரிக் குழாம்துறந்து
கரிபரிதேர்க் குலந்து றந்து
கடைதுறந்து மறுகணைந்த காவலன்தன்
திருமுகத்தைக் கண்டோ ரெல்லாம்
அடையமனம் அழிந்துருகி அவரவரே
முகத்தில்அறைந் தழுவார் ஆனார்'[29]

'துறந்து' என்ற சொல் பாடலில் வருவதை அழுத்தம் கொடுத்துப் படித்து அடிக்கடி என்னை நோக்குவது இன்றும் எனக்குப் பசுமையாகவே உள்ளது. 'அழுவார் ஆனார்'

28. நகர்நீங். காண். 1
29. ஷை—2.

என்று தொடரைப் படிக்கும்போதே அயோத்தி மக்களில் இவரும் ஒருவராகி விடுவார்.

> குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
> நடைமெலிந்து ஓர்ஊர் நண்ணினும் நண்ணுவர்[30]

என்ற முதுமொழிக்கு அரிச்சந்திரன் இலக்காகி விடுவதை எடுத்துக்காட்டுவதற்கும் இவர் தவறுவதில்லை.

> மயிரோடும் சிறைஇழந்த போகில்போல்,
> வேலியொடு வரம்பி ழந்த
> பயிரே போல், கரமிழந்த கரியேபோல்,
> பொறிஇழந்த பாவையே போல்,
> உயிரேபோய்ப் பரிதவிக்கும் உடலேபோல்,
> மத்தாலுள் ளுடைந்த லம்பும்
> தயிரேபோல், தளர்ந்தலைந்து தத்தமக்கு
> நிகழ்ந்தவெலாம் சாற்ற லுற்றார்.

என்ற பாடலைப் படித்துக் கற்பிக்கும்போது நானும், அவரைப் பின்பற்றி அவர் நிறுத்திய இடத்தில் நிறுத்திப் படிக்க வேண்டும். போகில் போல், பயிரேபோல் கரியே போல், பாவையேபோல், உடலே போல், தயிரே போல் என்ற இடங்களில் எல்லாம் நிறுத்தி நிறுத்தி என்னைப் பார்த்துக் கொண்டே படிப்பார்; நெஞ்சம் நெகிழ்ந்த நிலையில் படிப் பார்.

நாம் கவிதையை அநுபவிப்பதற்கு நம்மிடமுள்ள ஒத்துணர்ச்சியும் (Sympathy) ஒட்ட உணர்தலும் (Empathy) பெரும் பங்கு பெறுகின்றன என்பர் உளவியலார். உணர்ச்சிப் பெருக்கால் உள்ளம் பூரித்திருக்கும் பிறரைக் காணும் பொழுது நம்மிடமும் அதே உணர்ச்சி எழுதல் இயற்கை.

---

30. வெ. வே. 50

மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்திருக்கும் நண்பர்கள் மகிழ்ச்சியையும், மனவருத்தத்தால் பீடிக்கப்பெற்றுள்ள நண்பர்கள் துக்கத்தையும் நம்மிடம் தொற்றி விடுவர். கிளர்ச்சி பெற்றுள்ள மக்களுள்ள இடத்தில் நாம் இருக்கும் போது நம்மிடம் கிளர்ச்சி எழுவதற்குக் காரணம் இன்றேனும் அது நம்மிடம் எழுகின்றது. இவ்வாறு 'பிறருடன் ஒத்து உணக்கும் நிலைதான்' **ஒத்துணர்ச்சி** என்பது, ஒட்ட உணர்தல் என்பது தன்னைப் பிறராகவே கருதி உணர்வது. எடுத்துக்காட்டாக, ஒரு சிறு குழந்தை நடுத் தெருவில் உட்கார்ந்து கொண்டு விளையாடுகின்றது. ஒரு மோட்டார் விரைந்து அக் குழந்தையை நோக்கி வந்து கொண்டுள்ளது மோட்டார் தன்மீது ஏறிவிடும் என்ற அச்ச உணர்ச்சியே குழந்தைக்கு இல்லை. ஆனால் அதனைக் கண்ணுறும் நாம் குழந்தை நிலையில் இருந்து கொண்டு அச்ச உணர்ச்சியைப் பெறுகின்றோம். நாம் குழந்தையாகவே ஆகி விடுகின்றோம். நாம் ஓடிக் குழந்தையைத் தூக்கவும் முயல்கின்றோம். இந்த உணர்ச்சியே ஒட்ட உணர்தல் என்பது. அரிச்சந்திரன் கதையைப் படிக்கும்போது நாம் கதையுடன் ஒன்றி அரிச்சந்திரனாகவும் ஆகிவிடுகின்றோம். அவன் நாட்டை விட்டு ஏகுவதைக் கண்டு மனமுடைந்து நிற்கும் மக்களில் ஒருவராகவும் ஆகிவிடுகின்றோம்.

கொடிமீது செறிதேரும் குஞ்சரமும்
பொற்சிவிகைக் குழாமும் இன்றிப்
படிமீது நடந்திடவும் படித்தனவோ
பார்வேந்தன் பாதம் என்பார்;
அடிமீது தொழும்அரசர் முடிமீதும்
மடிமீதும் அன்றிச் சுட்ட
பொடிமீது நடந்திடவும் பொறுத்தனவோ
குலகுமரன் பொற்றாள் என்பார்.[31]

31. நகர் நீங். காண்-4.

முல்லைமுகை நகையாளும் முடிவேந்த
  னும்மகனும் முழுதும் போன
எல்லைஎலா மணஅறையும் மலரணையும்
  உண்டோஎன் (று) இரங்கி வீழ்வார்;
தொல்லைவிதிப் பயனாலே வந்திரந்த
  மாமுனிவன் சொன்ன வெல்லாம்
இல்லைஎன ஈஅ·தோருக்கு இத்தனையோ
  பெரும்பேறுஎன்று ஏங்கி வீழ்வார்.[32]

கொண்டிருந்த வளநாடும் குறையாத
  பெருந்திருவும் கொடித்திண் டேரும்
பண்டிருந்த மாளிகையும் பரிசனமும்
  தமக்களித்துப் பால னோடும்
வண்டிருந்த தாரானும் வாணுதலும்
  வறியோர்போல் வனத்தே போகக்
கண்டிருந்தும் விலக்காத கௌசிகனார்
  தம்மனமும் கல்லோ என்பார்.[33]

என்றெல்லாம் வரும் பல பாடல்களைப் பயிற்றும்போது தாம் அடையும் உணர்ச்சியை எல்லாம் என்னிடமும் தோற்றி விடுவார்; சரியான மனப்பக்குவம் எய்தப்பெறாத எனக்கும் அழுகை வந்துவிடும். பள்ளியின் வெளித்திண்ணையில் உட்கார்ந்து கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கும் ஒரு சில ஊர்ப் பெருமக்களும் சாளரத்தின் வழியாக ஆசிரியர் கற்பிப்பதைக் கண்டு தாமும் மனம் நெகிழ்ந்து போனதைக் கண்டதுண்டு.

---

32. நகர் நீங். காண் 7.
33. ஷை-8.

# 15. நெஞ்சை நெகிழ்விக்கும் பாடல்கள்

**வே**லூர் வாத்தியார் காசிக் காண்டத்தில் நெஞ்சை உருக்கும் சில நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி என்னை நெகிழ்விப்பார். சந்திரமதியையும் தேவதாசனையும் அந்தணன் ஒருவனுக்கு ஆவணம் வரைந்து விற்றல், இதனால் கோசிகன் கடன் தீர்த்தல், கடனை வாங்கவந்த சுக்கிரன் தனக்குக் கூலி கொடுக்குமாறு வேண்டும்போது வீரவாகு என்ற புலையனுக்குத் தன்னை விற்றுச் சுக்கிரன் கூலியையும் தருதல், காவலன் சுடலைகாக்கும் பணியில் ஈடுபடல் போன்ற நிகழ்ச்சிகளை எல்லாம் கதையாகக் கூறிச்செல்வார். அவர் கதை கூறும் திறன் என் உள்ளத்தைக் குளிர்விக்கும். கதைகள் சிறுவர்கட்கு 'வெல்லம்' அல்லவா?

மறையோனிடத்தில் பணிபுரியும் தேவதாசன் விறகெடுக்க வனத்திற்குச் சென்றபோது அவன் அரவு தீண்டி இறந்த செய்தியை உடன் சென்ற சிறார்கள் வந்து சந்திர மதிக்குக் கூறல், மறையோனிடம் விடைபெற்றுக் கானகம் சென்று காதல் மகனைச் சென்று காண்டல் போன்ற செய்தி களை எல்லாம் கதையாகச் சொல்லி நெஞ்சை நெகிழ வைப் பார். மகனைக் கண்டு இரங்கி ஏங்கிக் கதறும் பாடல்களை அற்புதமாகக் கற்பிப்பார்.

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
பசியால் அலைந்தும் உலவா
அனியாய வெங்கண் அரவால் இறந்த
அதிபாவம் என்கொல்? அறியேன்
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீது உருண்ட மகனே!
இனியாரை நம்பி உயிர்வாழ்வம் என்றன்
இறையோனும் யானும் அவமே.[34]

34. மயா. காண். 21.

என்ற பாடல் முதல் 12 பாடல்கள் உள்ளத்தை உருக்குபவை; அவலச்சுவை பீரிட்டு நிற்பவை. அவலத்தைக் கருணம் (அழுகை) என்பர் வடமொழிவாணர்கள். இங்கு நிலைத்து நிற்கும் மனோபாவம் துக்கமாகும். நிகழ்ச்சியை விளக்கும் கவிதைகளைப் படித்து அநுபவிக்கும்போது நமது உள்ளம் துக்க உணர்ச்சியால் பூரிக்கத் தொடங்குகின்றது. இப்போது 'கருணரசம்' பிறக்கின்றது. கருண ரசம் உலகின் அடிப்படையான நிலையில் கிடக்கின்றது. ஆன்மாவும் உலகமும் பின்னிக் கிடப்பதாக அறிஞர்கள் கூறுவர். ஆன்மாவின் கூறு இன்பமாகவும் உலகின் பங்கு துன்பமாகவும் இருப்பதாகப் பெரியோர்கள் உணர்த்துவர். துன்பத்தில் இன்பத்தைக் காண்பது உலக வாயிலாக ஆன்மாவை உணர்வதாகும் ஆகவே, கருணரசத்தைச் சிறந்ததாகக் குறிப்பிடுவர் அறிஞர் கள். வால்மீகி பகவான் கிரௌஞ்சப் பறவைகள் இறந்ததைக் கண்டு மனம் துக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும்போது—உள்ளம் பூரித்திருக்கும்போது—கருணம் பிறந்ததாகவும், அப்போது தான் இராமாயணம் உதயமாயிற்று என்றும் சொல்வதுண்டு பவபூதி என்ற கவிஞர் உத்தர இராமாயணத்தில் இந்தக் கருண ரசத்தை நன்கு வளர்த்துக் காட்டியுள்ளதை வடமொழிவாணர்கள் பாராட்டிப் பேசுவதை நான் அடிக்கடி கேட்டு மகிழ்ந்ததுண்டு.

இறந்த மகனைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்ற காட்சியும், சுடுகாட்டினைச் சில அறிகுறிகளால் அறிந்த செய்தியும் நெஞ்சை உருக்குபவை. சுடுகாடுபற்றிய அறிகுறிகளை எடுத்துக் காட்டும்,

பிணங்கள்சுடும் கடும்புலையர் அரவத் தாலும்
பிளந்து தலை வெடித்திடுபே ரமலை யாலும்
நிணங்கருகிச் சுடுநாறு முடையி னாலும்
நெடுங்கனலின் கொழுந் தெழுந்த நிவப்பி னாலும்

*கணங்கள்மிகக் களித்தாடும் துழனி யாலும்*
*கனற்பொறியின் மலிவாலும் புகையி னாலும்*
*சுணங்குபல பிணங்குபெருங் குரைப்பி னாலும்*
*தோகைஅறிந் துணர்ந்து கொடுஞ் சுடலை*
*சார்ந்தாள்.*[35]

என்ற பாடலை மிக உருக்கமாகப் படித்துக் கற்பித்தது இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. சந்திரமதி தன் மைந்தன் உடலை ஓரிடத்தில் வைத்துவிட்டு எறிந்த குறைக்கட்டைகளைப் பல இடங்களிலும் ஓடித்தேடி ஒவ்வொன்றாகப் பொறுக்கிக் கொண்டு வந்து சேர்த்துக் குவித்துத் தீமூட்டிப் பின் சவத்தை எடுத்து நெருப்பின்மேல் வைத்த காட்சியை பரண்மீதிருந்த அரிச்சந்திரன் கண்ணுறுகின்றான். தன் மைந்தன் என்றறியாமல் அப் பிள்ளையின் உடலைக் காலால் எற்றுகின்றான். சந்திரமதி தனக்குச் சுற்றமும் பொருளும் இல்லை என்று தன் குறையைக் கூறித் தன் மதலையைச் சுடக் கருணை செய்யு மாறு அவன் திருவடிகளே தஞ்சம் என்று அலறி வீழ்கின்றாள். அதற்கு அரிச்சந்திரன் தன் தலைவனுக்குக் 'காற்பணமும் கொள்ளியாடையும் கொடுக்க வேண்டும். தனக்குரிய வாய்க்கரிசியை மட்டிலும் தரவேண்டா என்று கூறும் பாடலை மிக உருக்கமாகப் படித்துக் காட்டுவார் வேலூர் வாத்தியார்.

*பொன்னனையாய் விடுவிடுயான் புலைய னென்னிற்*
*புலையனும்அல் லேன்புலையற் கடிமை கண்டாய்*
*என்னடிநீ தீண்டுவது தகாது நீதான்*
*இப்பொருட்கியா னுரியனலேன் என்னை யாள்வோன்*

35. மயா. காண்-35.

சொன்னபணங் காலுண்டு கொள்ளி ஆடைத்
துண்டமுமொன் றுண்டு தந்து சுடுதி யன்பால்
அன்னவன்றான் படியாக எனக்குத் தந்த
வாய்க்கரிசி யானளிப்பே னறிதி என்றான்.[36]

அடுத்து வரும் இரண்டு பாடல்களும் வேலூர் வாத்தியார் சுவைத்துக் கற்பித்தவை :

துஞ்சியமைந் தனைஎடுத்துச் சுமந்து போந்து
சுடுவாரற் றிடுகாட்டில் தோல்மேல் ஏற்றிப்
பஞ்சுபடும் பாடுபடும் பாவி யேற்குப்
பணமேது கொள்ளிமுறிப் பாதி யேது
நெஞ்சுதளர்ந் தருவினையேன் வருந்தக் கண்டு
நீஇரங்காய் எனஇரந்து நிற்குங் காலை
வஞ்சிதிரு மணிமிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்டிறைவன் மதித்துஞ்
சொல்வான்.

நல்லைநல்லை அறச்சமர்த்தி நீயே கண்டேன்
நன்னுதலா ரனைவரினும் இந்த்ர சாலம்
வல்லைவல்லை விறகுகளும் களவே செம்பொன்
மங்கலநாண் உன்கழுத்தில் இருக்க ஏதும்
இல்லைஎனச் சொல்வது சற்றும் ஏலாது
இதனைஎனக் கீவாய்என்று இயம்ப வேடர்
பல்லம்உயிர் நிலைவாயிற் பட்ட மான்போல்
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி
வீழ்ந்தாள்.[37]

"சந்திரமதி தன் கழுத்தில் பூண்டிருந்த மங்கலநாண் தன் கணவனையன்றி ஒருவருமே கண்டறியாத மங்கலநாண்

36. மயா. காண் 40.
37. ஷை. 41, 42.

ஆகும். கடவுளால் கொடுக்கப்பட்டுத் தான் பிறக்கும்போதே உடன் தோன்றிய மங்கலநாண் இது. இது ஒரு புலையனால் காணப்பட்டது குறித்து மிகவும் வருந்தினாள். "என் கணவனாகிய அரிச்சந்திர மன்னனுக்குக்கல்லாமல் மற்றொருவர்க்கும் தோன்றாத என் மங்கலநாண் இன்று புலையனாற் காணப்பட்டதே! இது பொல்லாத காலம் போலும்!" என்று கூறி அனலில் பட்ட மெழுகுபோல் உருகி வருந்தினாள்" என்று விளக்குவார்.

**காந்தியடிகள்** சிறுவயதிலேயே அரிச்சந்திரன் கதை கேட்டு மனம் மாற்றம் அடைந்ததாகச் சொல்வதுண்டு. வேலூர் வாத்தியாரும் சிறுவர்களின் பிஞ்சு மனத்தில் இத்தகைய உயர்ந்த கருத்துகளை விதைத்ததை இன்று நினைந்து பார்க்கின்றேன். புறத்திண்ணையில் உட்கார்ந்து கொண்டுள்ள ஊர்ப் பெருமக்களில் சிலர் சாளரத்தின் வழியாகத் தான் கற்பிப்பதைக் கண்ணுற்று மகிழ்வதை வேலூர் வாத்தியார் காணும்போது அவரது உற்சாகம் பன்மடங்கு மிகும். சோதிடத்தால் புகழ்பெற்றுத் திகழ்ந்த வேலூர் வாத்தியார் அரிச்சந்திர புராணம் கற்பித்தலிலும் ஊர்ப்பெருமக்களின் மதிப்பிற்கும் உரியவராக விளங்கினார். அக்காலத்தில் சிற்றூர்களில் வேலூர் வாத்தியார் போன்ற சில ஆசிரியர்கள் திகழ்ந்ததை இன்றும் பல பெரியோர்கள் பேசிவருவதைக் கேட்டிருக்கின்றேன். காரைக்குடியில் நான் பணியாற்றியபோது **சா. கணேசன், சொ. முருகப்பா, ராய. சொக்கலிங்கன்** போன்ற பெரியோர்களும் தமக்குத் தமிழ்க் கற்பித்த **சிதம்பர அய்யரைப்** புகழ்ந்து பேசியதைக் கேட்டதுண்டு. இன்றும் சிற்றூர்ப் பெருமக்களிடம் பேச்சுக் கொடுத்தால் இத்தகைய புகழ்பெற்ற ஆசிரியர்களைப் பற்றிய நினைவுக் குறிப்புகளை அறிந்து மகிழலாம். பெரகம்பியில் திண்ணைப்பள்ளியில் பயின்றபோது சதகச் செய்யுட்களைக் கற்பித்துப் பெரும்புகழ் பெற்ற இலிங்கிச் செட்டியாரும் இப்போது என் நினைவிற்கு வருகின்றார்.

# 16. தனியார் பள்ளிக்கு மாற்றம்

ஓராண்டுக்குமேல் சுப்பராய உடையாரிடம் ஆங்கிலம் கற்றேன். தொடக்கத்தில் உற்சாகமாகத்தான் கற்பித்தார். நாளடைவில் அவர் பயிற்றியதில் 'சென்று தேய்ந்திறுதல்' பண்பு தலைகாட்டத் தொடங்கியது. கற்பித்தலில் கவனம் செலுத்துவதைவிட மருத்துவத்தில் அதிக அக்கறை காட்ட லானார். மாலை நேரத்தில் பெண்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. ஒவ்வொருவருக்கும் என்ன நோயோ, இறை வனுக்குத்தான் வெளிச்சம்! 'சளசள வென்று' ஒவ்வொரு வரிடமும் தனித்தனியாகப் பேசி அவர்களை அனுப்பு வதற்கும், மருந்து தயாரிப்பதற்குச் சிறு தொகைகளைப் பேரம்பேசி வாங்குவதற்குமே நேரம் சரியாக இருந்தது. பத்துப் பன்னிரண்டு பேர் ஒருவரை ஒருவர் விழித்துநோக்கிக் கொண்டு வாளா காலம் கடத்தினோம். இதற்குள் இரவு எட்டு, எட்டரை ஆகிவிடும். தொடக்கக் காலத்தில் எந்த மொழியைக் கற்பித்தாலும் கற்பிக்கும் முறைப்படி கற்பித் தால் ஆசிரியரும் மாணாக்கர்களும் அதிகமாக ஊடாட வேண்டும். வாய்மொழிப் பயிற்சியிலும் எழுத்துப் பயிற்சி யிலும் அதிக அக்கறை காட்ட வேண்டும். கற்றலில் மாணாக்கர்கட்கு ஊக்கம் அளிக்க வேண்டும்; ஒவ்வொரு நிலையிலும் கற்றலின் பயனை அவர்கள் அறியச் செய்தல் வேண்டும். முறைப்படி கற்பிக்காவிட்டாலும், கற்றலின் பயனை மாணாக்கர்கள் உணர்ந்தார்கள் இலர். மாணாக்கர் களும் 'இவரிடம் ஆங்கிலம் பயில்வது வீண்' என்பதை உணரத் தொடங்கினர். 'ஏதோ கடனுக்கு வந்து போகின்றோம்' என்ற எண்ணம்தான் தலை தூக்கி நின்றது. ஆங்கிலம் கற்றலில் எந்த முன்னேற்றமும் தெரியவில்லை.

இந்நிலையில் வேறோர் நிகழ்ச்சி நடைபெற்றது. "எங்கிருந்தோ வந்தான். 'இடைச்சாதி நான்' என்றான்"[38]

38. பா. க. கண்ணன் என்சேவகன் அடி 14.

என்று கண்ணன் கூறியதைப் பாரதியார் காட்டுவதுபோல் முன்பின் தெரியாத **சாமுவேல் பிள்ளை** என்ற பெயர் கொண்ட ஒருவர் எங்களூருக்கு வந்தார். சில செல்வர்களைப் பார்த்துத் தாம் ஆங்கிலம் கற்பிப்பவர் என்றும், குறைந்தது பத்து அல்லது பதினைந்து சிறுவர்களைச் சேர்த்துத் தந்தால் தம் பணியைத் தொடங்கலாம் என்றும் விண்ணப்பித்துக் கொண்டார்.

மயன் வேலைதான். செல்வர் ஒருவர் வீட்டுப் பெரிய திண்ணையொன்றில் ஆங்கிலப் பள்ளி தொடங்கப் பெற்றது. திண்ணையும் அதன்கீழ் உள்ள தாழ்வாரமும் சேர்ந்து 30 பேர் பயில்வதற்கேற்ற இடமாயிற்று. மூங்கில் தட்டிகளைக் கொண்டு தாழ்வாரத்தில் மறைப்பு ஏற்படுத்தப்பெற்றது. தாழ்வாரத்தில் இரண்டு பெஞ்சுகள் போடப்பெற்றன. உட்காருவதற்குப் பத்துப் பேருக்குப் போதும் இவை. ஆசிரியருக்குத் தாழ்வாரத்தில் ஒரு நாற்காலி போடப் பெற்றது. ஒரு சிறு மேசையும் சரிக்கட்டப் பெற்றது. இருபது பேர்கட்குமேல் சேரவில்லை. செல்வர் வீட்டுப் பிள்ளைகள் மட்டிலுமே சேர்ந்தனர். காரணம், ஒவ்வொருவரும் மாதம் ஒன்றரை ரூபாய் கட்டணமாகவும், ஆண்டிற்கு ஒரு மூட்டை நெல்லும் தரவேண்டும். இவை சாதாரண நடுத்தரக் குடும்பத்தினருக்கு அக்காலத்தில் பளுவாகவே இருந்ததும் ஆசிரியர் மிக உற்சாகமாகக் கற்பித்தார். 20 மாணாக்கர்கட்கு மேல் சேரவில்லை என்பது நினைவு. எல்லோரிடமும் குறுகிய காலத்திலேயே நல்ல முன்னேற்றம் காணப்பட்டது.

**புதிய கதிரோன் :** சுப்பராய உடையாரின் புகழ் இறங்கு முகமாகவும் சாமுவேல் பிள்ளையின் புகழ் ஏறு முகமாகவும் இருந்தன. இந்நிலையில் நானும் என் அண்ணார் மகன் கணபதியும் வேறு சிலரும் சாமுவேல் பிள்ளையிடம் வந்து சேர்ந்தோம். ஓராண்டுக் காலத்தில் நல்ல முன்னேற்றம்

கண்டோம். ஆங்கிலத்தில் நல்ல அடிப்படையை எங்களிடம் ஏற்படுத்தி விட்டார். ஆனால் அவரிடம் படித்தவர்களுள் ஒருவர் கூட உயர்நிலைப் பள்ளியை எட்டிப் பார்க்கவே இல்லை. என் தம்பி கணபதி மட்டிலும் உயர்நிலைப் பள்ளியில் என்னுடன் பயின்றான். ஆனால் அவனும் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றிபெற வில்லை Higher Grade Training பயின்று ஆசிரியப் பணியில் இறங்கினான். பின்னர்க் கரந்தையில் புலவர் வகுப்புப் பயின்று அதில் தேறித் தமிழாசிரியரானான். நான் மட்டிலும் என் நல்வினைப் பயனால் எவ்வளவோ இக்கட்டுகளிடையே கல்லூரி வாழ்க்கையை முடித்து நல்ல பதவிகளை வகித்து இன்று இதை எழுதும் வரை நல்ல உடல் நிலையுடனும் மனவளத்துடனும் இருக்கின்றேன்.

சாமுவேல் பிள்ளையவர்களும் எங்களூரில் குடும்பத்துடன் தங்கி வசதியுடனும் புகழுடனும் திகழ்ந்தார். என்ன காரணத்தால் அவர் இந்த ஊரைவிட்டுப் போனார் என்பது அன்றும் எனக்குத் தெரியவில்லை. இன்றும் ஊகித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. ஆனால் இருந்தவரை ''நல்லாசிரியன்'' என நாங்கள் மகிழும் வண்ணம் கற்பித்தார். இவர் ஊர்ப் பெருமக்களிடம் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை. புரோநோட்டு எழுதுதல், கடிதங்கள் எழுதுதல் போன்ற பணிகளும் இவரை வந்தடைவதில்லை. எல்லோரிடம் நன்கு பழகத்தான் செய்தார். எனினும் பட்டுக்கத்தரித்த மாதிரி சுருக்கமாகப் பேசித் தம்மைக் கத்தரித்துக் கொள்வார். சாமுவேல் பிள்ளை ஊரைவிட்டுப் போனதும் சில செல்வர் வீட்டுப் பிள்ளைகள் தம் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். இராச மாணிக்கம் என்னும் வைசியச் சிறுவன் மளிகைக் கடையில் உட்கார்ந்து கொண்டான். வேறு சிலர் பண்ணை வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டனர்.

நான், சிதம்பரம், இராமுடு, (பிராமணன்) **கி. இராச கோபால், ச. கணபதி, மு. துரைசாமி, மு. நாராயணசாமி, இராசமாணிக்கம், இராதா, இராமுடு** (வைசியன்) ஆகியோர் மட்டிலுமே படிப்பைத் தொடர்ந்தோம். இந்நிலையில் சுப்பராய உடையார் மாற்றலாகி வேற்றூர் சென்றுவிட்டார்.

வேலூர் வாத்தியாரும் ஒய்வு பெற்றுவிட்டதாக நினைவு. தனியாக ஒருசில பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டு திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திவந்ததைப் பார்த்திருக்கின்றேன். இறுதிவரையிலும் நல்ல புகழுடன் திகழ்ந்தார் என்பதை இன்றும் நினைந்து பார்க்கமுடிகின்றது. இந்தநிலையில் ‘உதயசூரியன்’ என்று சொல்லும் வகையில் **வி.கே. அரங்கநாத அய்யர்** என்ற ஒரு நல்லாசான் இந்த ஊருக்கு மாற்றலாகிவந்து சேர்ந்தார். அவர் பத்தாண்டு கட்குமேல் எங்களூரிலேயே பணியாற்றி ஓய்வு பெற்றார். நான் கல்லூரி வாழ்க்கையை முடித்துக் கொண்டு துறை யூரில் நானே நிறுவிய உயர்நிலைப் பள்ளித் தலைமையா சிரியனாகச் சேர்ந்துபணியாற்றும் வரையில் எங்களூரிலேயே பணியாற்றிவந்தார். இளம்வயதிலேயே ஓர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியனாகப் பணியாற்றிய நிலையைக் கண்டு உள்ளங்குளிர மகிழ்ந்தவர்கள் மூவர். ஒருவர் எனக்கு வசிட்டர்போல் குலகுருவாக விளங்கிய வி. கே. ரங்கநாத அய்யர்; மற்றொருவர் ‘நான் நல்ல உயர்கல்வி பெற்று நல்ல உயர்பதவிகளைப் பெறுவேன்’ என்பதாகச் சோதிடம் கூறி என் அன்னையை மகிழ்வித்துக் கொண்டிருந்த வேலூர் வாத்தியார். துறையூரிலிருந்து ஊருக்கு வரும்போதும் ஊரிலிருந்து துறையூருக்குத் திரும்பும்போதும் வேலூர் வாத்தியாரைப் பார்த்து வணக்கம் சொல்லும்போதெல்லாம் அவர் உள்ளம் குளிர்ந்து மகிழ்வதை அவர் முகத்தில் காண்பேன். ஒரு தந்தையின் பாசம் அவர் முகத்தில் ததும்பி ஊற்றெடுப்பதைக் கண்குளிரக் கண்டு ஆனந்தக்

கண்ணீர்த்துளிகளைச் சொட்டுவேன். மூன்றாவது பெரியார் இலிங்கச் செட்டியார். என் வெளியூர்ப் படிப்புக் காலத்தில்-பத்தாண்டுகள்-அவரைக் காணவாய்ப்பே இல்லை. காரணம், பெரகம்பிக்குப் போய்வரும் வாய்ப்பே எனக்கு ஏற்பட வில்லை. துறையூரிலிருக்கும் போது என்னைப் பார்ப்பதற் கென்றே ஒரு முறை பெரகம்பியிலிருந்து துறையூருக்கு வந் தார். நடந்தே 10மைல் வரவேண்டும். அப்போது திண்ணைப் பள்ளிக்கூடப்பணி அவருக்கு இல்லை. வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டு போவதில் கஷ்டநிலையை அநுபவிப்பதைச் சொல் லித் தீர்த்தார். உயிரனைய மனைவி மறைந்ததையும் முதல் மனைவியாரோ உறவினர் பிள்ளையாகக் கூட்டிக் கொண்டு ஆத்தூரில் சகமாக இருப்பதையும், இரண்டாவது மகன் உதவாத பையனாகித் தனக்குச் சுமையாக இருப்பதையும், தாம் தாழை மடலாலாகிய இலை தைத்து அதில் வரும் சிறு வருவாயைக் கொண்டு வாழ்வதையும் அழாக்குறையாகச் சொல்லி விசனப்பட்டார். நான் அவருக்கு ஓர் உணவுவிடுதியில் விருந்து வைத்து ஒரு சோடி வேட்டிவாங்கி அத்துடன் ரூபாய் பத்தும் வைத்துத்தந்து ஊருக்கு அனுப்பிவைத்தேன். ஐம்பது ரூபாய் மாத ஊதியத்தில் அதற்குமேலும் என்னால் செய்ய முடியவில்லை. அதன்பிறகு அவரைப் பார்க்கவே இல்லை. அவர் இறந்த செய்திதான் என்னை வந்தடைந்தது.

நெருநல் உளனொருவன்
இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு[39]

என்ற குறள் நினைவுக்கு வந்தது. ஒரு தந்தையைப் பிரியும் உணர்வு அப்போது என்னிடம் எழுந்தது. என் தந்தை இறந்தபோது அந்தப் பிரிவை உணரும் வயது எனக்கு இல்லை யல்லவா?

39. குறள் - 336

# 17. என் கல்வி முன்னேற்றத்தில் எழுஞாயிறு

**வி. கே.** அரங்கநாத அய்யரை 'உதய சூரியன்' என்று குறிப்பிட்டேன் அல்லவா? ஆம்; உண்மையில் உதய சூரியன் - எழுஞாயிறுதான் அவர். அவர் வந்த பிறகு ஊரில் ஆங்கிலக் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படலாயிற்று. பலருக்கு நல்ல ஆங்கில அறிவு ஏற்பட்டதுடன், இக்காலக் கல்வி முறையில் உள்ள எல்லாப் பாடங்களையும் முறையாகக் கற்பிக்கலாயினர். புவியியல், வரலாறு, அறிவியல் என்ற பாடங்களிலும் கருத்தைச் செலுத்தினார்; இவற்றில் பாட நூல்கள் வாங்கச் செய்து கற்பிக்கத் தொடங்கினார். ஆகவே, இவரை உதயசூரியன் என்று சொல்லுவதைவிட 'ஞானக் கதிரவன்' என்று கூறுவதும் மிகப் பொருந்தும். நன்றாகக் குளித்து, நெற்றியில் இட்டு வரும் கோவிச்சந்தனப் பொட்டும் கண்ணொளியும் இவரது பொன்னிற மேனிக்கு மேலும் பொலிவினைத் தந்தன. இவரது தோற்றமே மாணாக்கர்களை நன்கு கவர்ந்தது. சாமுவேல் பிள்ளை சென்ற பிறகு ஊர்க்கல்வியில் களப்பிரர் ஆட்சி போன்ற ஒருகுழப்ப நிலை ஏற்பட்டது. செல்வர்கள் வீட்டுப் பிள்ளைகளில் பெரும்பாலோர், என் போன்ற நடுத்தர வகுப்புப் பிள்ளை ஓரிருவருக்குப் புதிதாகப் பிழைப்பின் நிமித்தம் வந்த ஆசிரியர் ஒருவரிடம் கல்வி பயின்றோம். அவர் பெயர் நினைவு இல்லை. கணபதியின் வீட்டுத் திண்ணையில்தான் கல்வி பயிற்றல் நடைபெற்றது. கழுத்தில் ஓர் உருத்திராக்க மணியுடன் காணப்பட்ட இந்த ஆசிரியரிடம் உற்சாகமே இல்லை. மூன்று அல்லது நான்கு பேருக்குமேல் சேராமை ஒரு காரணமாக இருக்கலாம். இவரும் இரண்டு மாதத்திற்கு மேல் தங்காமல் சென்று விட்டார்.

இந்நிலையில் நானும் கணபதியும் வி. கே. அரங்கநாத அய்யர் ஆசிரியராகத் திகழும் பள்ளிக்கே வந்து சேர்ந்தோம் இவரும் வீட்டில் முன்னிரவு நேரத்தில் சிலருக்குத் தனிப் பயிற்சி அளித்தார். சுப்பராய உடையார் தங்கியிருந்த வீடே இவருக்குக் கிடைத்தது. நல்ல விசாலமான வீடு. இதில் முன்புறம் அகலமான இரண்டு திண்ணைகள். திண்ணைக்கு முன்புறம் விசாலமான வாசல். இடமும் மாணாக்கர் நடமாடுவதற்கும் அவர்களின் உடல்நலத்திற்கு உகந்ததாகவும் இருந்தது. வி. கே. அரங்கநாத அய்யர் விரும்புவோருக்கு வடமொழியும் கற்பித்தார். நானும் நான்கைந்து பேரும் வடமொழியும் சில ஆண்டுகள் பயின்றோம். ஆனால், இதில் அதிகமான அக்கறை செலுத்த வில்லை. ஆங்கிலத்தைத்தான் அழுத்தமான அக்கறையுடன் பயின்றோம். ஏனைய பாடங்கள் பள்ளியில் நன்றாகப் பயிற்றப் பெற்றன. இவர் தமிழ்ப்பாடத்தில் அதிக அக்கறை காட்டவில்லை. இவர் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் சரியாகப் பயிலவில்லைபோலும்!

**பாடம் ஒன்றிலேயே ஈடுபாடு:** வி. கே. அரங்கநாத அய்யருக்கு பாடம் பயிற்றலைத்தவிர வேறு தொழிலில் ஈடுபடவில்லை. இவருக்குச் சோதிடமோ, மருத்துவமோ தெரியாது. சிற்றூராதலால் வேறுவழி இல்லாத பெரு மக்களில் சிலர் பள்ளியாசிரியர்களின் உதவியை நாட வேண்டியவர்களாயினர். இவரும் புரோ நோட்டு எழுதுதல், கடிதங்கள் எழுதுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டுச் 'சிரமதானம்' செய்தார் என்றாலும், இப்பணிகளை இவருக்கு முன்னிருந்த ஆசிரியர்கள்போல் பள்ளிநேரத்தில் செய்வதில்லை. அவர்கள் யாவரும் பள்ளி நேரத்திலேயே பள்ளிக்குள் நுழைந்து தங்கள் வேலைகளை முற்றுவித்துக் கொள்வர். வி. கே. அரங்கநாத அய்யரோ பெருமக்களிடம் அவர்கள் மனம் கோணாது இனிமையாகப் பேசி நாலரை

மணிக்குமேல் அவர்களை வருமாறு செய்து வேண்டிய உதவிகள் செய்து அனுப்புவார். இவர் காலத்தில் பள்ளி வேலையில் நல்ல ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப் பெற்றது. இந்த நாளில், இந்த நேரத்தில், இந்தப்பாடம்தான் பயிற்று வது என்ற பாடவேளைப்பட்டி (Time table) முறை கடைப் பிடிக்கப்பெற்றது. வீட்டு - வேலை (Home-work) என்ற ஒரு முறையையும் தம்பாடம் பயிற்றலில் நுழைத்தார். இதனால் மாணாக்கர்களிடம் சில கணக்குகளை வீட்டில் செய்தல், சில-எழுத்துப் பயிற்சிகளை வீட்டிலும் செய்தல் போன்ற நற்பழக்கங்களை ஏற்படுத்தினார்.

**கரும்பலகையின் பயன்:** கரும்பலகையை நன்கு பயன் படுத்துவார். வட்டிக் கணக்கு, இலாப-நஷ்டக் கணக்கு, காலமும் வேலையும், காலமும், தூரமும், கூட்டுவாணிகம், பின்னம், தசம பின்னம், போன்ற கணக்குகளைக் கரும் பலகையில் செய்து காட்டுவார். கணக்குகளைச் செய்யும் போது படிப்படியாக வழிமுறைகளைக் கரும்பலகையில் எழுதிக் கற்பிப்பார். கல்விபயிற்றலில் கரும்பலகையைப்போல் கவனத்தை ஈர்க்கும் சாதனம் வேறொன்று இல்லை. அப்படிப் பிறசாதனங்கள் இருந்தாலும் இதனைப்போல் அடிக்கடிப் பயன்படுத்தக் கூடிய வேறு சாதனங்கள் இல்லை. வி. கே. அரங்கநாத அய்யர் இதனை நன்கு பயன்படுத்திக் கற்பித்ததால் எங்கள் மனத்தில கணக்கு செ தலில் தெளி வான அறிவு ஏற்பட்டது. கொடுக்கப்பெற்ற விட்டு வேலை கள் சரியாகச் செய்யப்பெற்றனவா என்பதைத் தணிக்கை செய்யும் பழக்கத்தைச் சோராது கடைப்பிடித்ததால் மாணாக்கர் கல்வியில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டது இவர் சதகங்கள், புராணங்கள், அந்தாதிகள், நீதிநூல்கள் இவற்றில் கவனம் செலுத்துவதில்லை. பாடநூல்களில் வரும் இப்பகுதிகளில் மட்டிலும் கவனம் செலுத்துவார். இக்காலக் கல்விமுறைகளை நன்குக் கடைப்பிடித்துக் கற்பித்ததால்

மாணாக்கர்களிடல் புவியியல், வரலாறு, அறிவியல் போன்ற பாடங்களிலும் நல்ல அறிவு ஏற்பட்டது. இதனால் உயர் நிலைப் பள்ளி கல்விக்கு நல்ல அடிப்படை ஏற்பட்டது என்று சொல்லலாம். கணக்கு போடுவதில் முன்னணியில் நின்றேன். கல்லூரி வாழ்வு முழுவதிலும் கணிதமும் அறிவியலும் இரண்டு கண்கள் போல் அமைந்தன.

வி. கே. அரங்கநாதய்யர் கற்பிக்க வேண்டியவற்றை யெல்லாம் கற்பித்துவிட்டார். நான் எட்டாம் வகுப்பில் சேர்வதற்குத் தகுதி பெற்று விட்டேன் என்றும் சொல்லி விட்டார். வெளியூர்ப் படிப்புக்குத் தடையாக இருந்த என் பாட்டியாரின் அன்புள்ளமும் இப்போது இல்லை; என் பாட்டி யாரின் மறைவுடன் இதுவும் மறைந்தது. உயர்நிலைப் பள்ளி யில் எப்படியாவது சேர்த்து விட வேண்டும் என்று என் அன்னையார் துடித்தார்கள், ஒன்றுவிட்ட என் அண்ணார் மகன் கணபதியும் சேர்ந்தால் ஒருவருக்கொருவர் துணை யாக இருக்கும் என்று என் அன்னையார் நினைத்தார்கள். என் அண்ணார் தன் மகன் உயர்கல்வியைப் பற்றிக் கருத்தின்றி யிருந்தார். எதற்கும் 'காலம்' வரவேண்டுமல்லவா? நான் பள்ளிக்கு வாளா போய்க்கொண்டிருந்தேன். என்னைக் கொண்டு பலமாணாக்கர்கட்கு கற்பிக்கச் செய்தார் ஆசிரியர். இதனாலும் நான் கற்றவரையிலும் தெளிவு பெற்றேன். அப்போது நினைந்து பார்க்கும் ஆற்றல் இல்லாதவனாயினும் இன்று இத்தெளிவின் காரணத்தைக் கூறும் நன்னூலின் நூற்பாக்களை நினைந்து அசை போடுகின்றேன்.

நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடநனி இகக்கும்.

ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே.

முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.

ஆசான் உரைத்த தமைவரக் கொளினும்
காற்கூறு அல்லது பற்றலன் ஆகும்.

அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.[40]

இவற்றுள். இறுதியில் குறிப்பிட்ட நூற்பாவின் கருத்து எனக்கு மிகவும் பொருந்துகின்றது. மாணாக்கர்க்குச் சொல்லிக் கொடுக்கும் போது தெளிவு ஏற்பட்டுவிடுகின்றது.

எனினும், நான் மேலும் கற்றலில் ஒரு நோக்கம் ஏற்பட்டு விட்டது. வெளியூருக்குப் பயில்வதற்குப் போகமுடிய வில்லையே என்ற ஏக்கமும், என் படிப்பில் முன்னேற்றம் தடைப் பட்டதே என்ற கவலைபும் என்னைச் சூழ்ந்தன. பள்ளியில் ஆசிரியர் இட்ட பணிகளைச் செய்து முடித்தபின் பள்ளிக்கருகிலுள்ள பசனைமடத்துக்குச் செல்வேன். அது எப்போதும் திறந்தே இருக்கும். வெளியில் பாரதம், இராமாயணம், பக்தவிஜயம் என்ற மூன்று நூல்கள் பலகை களாலான கவட்டைகளில் அடையாளம் இட்டபடி திறந்த நிலையில் காட்சியளிக்கும். பெரியவர்கள் வந்து அவற்றைப் படித்துப் போவர். நான் இந்த மூன்று பெரிய நூல்களையும் ஓராண்டுக்குள் படித்து முடித்தேன். 'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி', வடுவூர் துரைசாமி அய்யங்காரின் சில புதினங்கள், ரங்கராஜு எழுதிய புதினங்கள் சில ஆகிய வற்றையெல்லாம் படித்து முடித்தேன். உரைநடையில் எது கிடைத்தாலும் வேகமாகப் படித்து முடிக்கும் பயிற்சி கைவரப் பெற்றுவிட்டது.

---

40. நன்னூல் - 41, 42, 43, 44, 45,

இக்காலக் கல்வி வல்லுநர்கள் **வாய்க்குள் படித்தலை** (Silent reading) மிகவும் வற்புறுத்துகின்றனர். இன்றைய உலகில் நூல்களும், கட்டுரைகளும், வெளியீடுகளும் செய்தித் தாள்களும் பிறவும் கடல்போல் பெருகிக் கிடக்கின்றன. 'கல்விகரையில; கற்பவர் நாள் சில' என்பது கணந்தோறும் நினைவிற்கு வந்து கொண்டுள்ளது. 'கற்றது கைமண்ணளவு: கல்லாதது உலகளவு' என்பதை எல்லோரும் உணர்கின்றனர். இவையனைத்தையும், வாய்விட்டுப் படித்துணர்தல் என்பது இயலாத செயல். இதில் முயற்சி, காலச் செலவு இவை உண்டாவதுடன் சோர்வும் ஏற்படும்; கருத்துணர்தலும் (Comprehension) தடைப்படும். படிப்பதன் நோக்கம் கருத்துணர்தலேயாதலின், இதனை எளிதில் எய்துவிக்கும் வாய்க்குள் படிப்பே இதற்குப் பெருந்துணை புரிகின்றது; விரைவும் விரிவும் அமைந்த இவ்வகைப் படிப்பினால்தான் கருத்துணர்தல் எளிதில் கைவரப் பெறுகின்றது.

மெய்யுணர்வுக் கல்வியிலும் இறைவனோடு இரண்டறக் கலக்கத் துணை செய்யும் மோன நிலையிலும் பேச்சு நிலையிலிருந்து பேச்சற்ற ஞான நிலைக்குப் போகும் படிகள் இருப்பதைக் காணலாம்.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறைஆ
றங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்ன வரை.[14]

---

41. பரஞ்சோதி முனிவர் ; திருவிளையாடல் புராணம், கடவுள் வாழ்த்து- 14

என்ற அடிகளினால் பிறைசூடிய பிஞ்ஞகன் சனகாதி முனிவர்க்கு ஞான நிலையைப் பேசாமல் குறிப்பித்த செய்தி அறியக் கிடக்கின்றது. மெய்யுணர்வு பெற்ற தாயுமான அடிகளும் 'கண் மூடி மௌனியாகிச் சும்மா இருக்க' நினைப் பதையே தம் குறிக்கோள் என இறைவன் திருமுன் முறை யிட்ட செய்தியையும் அறிகின்றோம். இவற்றால் உலக உணர்வுக் கல்வியிலும் வாய்க்குட் படிப்பே நிறைந்த பயனைத் தருகின்றது என்பதை அறிய முடிகின்றது.

இவ்வாறு வாய்க்குட் படிப்பினால் மேற்குறிப்பிட்ட மூன்று நூல்களையும் விரைவாகப் படிக்க முடிந்தது. பேச்சுக் கருவிகட்கு வேலையில்லாததால் உடல் சோர்வு ஏற்பட வில்லை. கண்ணும்மனமும் மட்டிலும் செயற் பட்டதால் படிக்கும் பொருளில் அதிக்கவனம் சென்றது. குறைந்த கால அளவில் அதிகமான பகுதிகளைப் படிக்க முடிந்தது அடுத் திருப்போருக்கு இடையூறாக இல்லாமல் படிக்க இயல்வதை யும் கண்டேன். படிப்பில் ஆர்வமும் பற்றும் உண்டானதை இதில் காணமுடிந்தது. படிக்கும் பழக்கமும் பாங்குடன் வளர்ந்தது. பிற்காலத்தில் இதிகாசங்கள், புராணங்கள், பக்திப் பனுவல்கள் பாடமாக வருங்கால் அதிலுள்ள கிளைக் கதைகளைத் தெளிவாக அறிந்து கொள்ள இந்த வாய்ப்பு துணையாக அமைந்தது. இதனால் என்னுடைய கவலையும் சோர்வும் மறைந்தன. ஓராண்டுக் காலம் இவ்வாறு பயனுள்ள வாறு கழிந்ததை இப்போது நினைந்து மகிழ்கின்றேன். இதுவும் ஒருவகையில் என் ஊழ்வினையாக அமைந்ததோ என்றும் சிந்திக்கின்றேன்.

# 18. மீண்டும் பங்காளி உறவு

கோட்டாத்தூர் வந்த பிறகு பல பெரியோர்களின் அன்புக்குப் பாத்திரமானேன். மாமன் முறையிலுள்ள பலர் என்னைக் 'கொம்பு காத்தான்' என்று அழைத்துப் பரிகசித்தனர். இதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. ஒரு பெரியவர் காரணத்தை விளக்கினார்: என் தந்தையார் பயந்த சுபாவம் உள்ளவர் என்றும், ஆயினும் சில சிறு குறும்புகளைச் செய்வார் என்றும், ஒருசமயம் ஒரு துக்க நிகழ்ச்சிக்குப் பறை மேளத்துடன் வந்திருந்த ஊது கொம்பை எடுத்து ஊதிவிட்டார் என்றும், அது முதல் அவரைக் 'கொம்பு காத்தான்' என்று மாமன் முறையினர் கிண்டல் செய்வதுண்டு என்றும் விளக்கினர். என் தந்தையார் இறந்த பின் பல ஆண்டுகளாக இப்பெயர் வழக்காற்றில் இல்லையென்றும், நான் வந்த பிறகு என் தந்தையாருக்கு அமைந்த 'பட்டப் பெயர்' வாரிசாக எனக்குச் சூட்டி மகிழ்கின்றனர் என்றும் அறிந்து கொண்டேன்.

என் அன்னையார் எனக்கு எப்படியும் உயர்கல்வி பெறுவதற்கு வசதிகள் செய்து தரவேண்டும் என இராப் பகலாக எண்ணிக் கொண்டிருந்தார். காரணம், என் தந்தையார் இறந்த பிறகு பங்காளிகளால் சொல்லொணாத் துன்பங்களை அநுபவித்தார். ஒரு சமயம் என் அன்னையார் நான் பெரகம்பியிலிருந்தபோது என்னைப்பார்க்க வந்திருந்த பொழுது எங்கள் வீட்டுக் கதவைக் **'கள்ளச் சாவி'** போட்டுத் திறந்து எல்லாச் சிறு பாத்திரங்களையும் ஒரு பித்தளைக் கொப்பரையில் அடக்கி ஒரு பெரிய தாம்பாளத்தால் மூடி கயிற்றால் பலமாகக் கட்டி வீட்டருகிலுள்ள உறைக் கிணற்றில் போட்டு விட்டார்களாம். என் அன்னையார் ஊர் திரும்பிய பிறகு நிகழ்ச்சியை அறிந்து திடுக்கிட்டுப்

போனாராம். நான்கு ஐந்து வீட்டுக்கப்பாலுள்ள இரகுபதி ரெட்டியாரைக் கொண்டு பல இடங்களில் தேடினார்களாம். சில தினங்களில் துப்புத் துலங்கவே, உறைக்கிணற்றிலிருந்து பாத்திரங்களை எடுத்தார்களாம். இந்த வரலாற்றை (!) இரகுபதி ரெட்டியாரே நான் கோட்டாத்தூர் வந்ததும் தெரிவித்தார். இது போன்ற பல நிகழ்ச்சிகளால் என் அன்னையார் தொல்லைப்பட்டதையும் கூறினார். அவை யெல்லாம் இப்போது நினைவில் இல்லை. வேறு சில வம்புக் கிழுத்த சிவில் வழக்குகளாலும் சில ஆண்டுகள் மாவட்ட நீதிமன்றத்திற்கும் போக வேண்டியிருந்தது என்றும் தெரிவித்தார். அந்தக் காலத்தில் ஏழைக் கட்சிக்காரர்களை சில வழக்கறிஞர்கள் (பிராமணர்கள்) அரிசனங்கள்போல் நடத்தினர். நானே துறையூரில் பயின்றபோது இக்காட்சி களை நேரில் கண்டிருக்கின்றேன். இதனால் என் அன்னை யார் என்னை வழக்கறிஞராகச் செய்ய வேண்டும் என்று மனப்பால் குடித்திருக்க வேண்டும் என்பதை ஊகித்து அறிகின்றேன். பலரிடம் இப்படித் தெரிவித்ததாகவும் அப்போதே சிலர் மூலம் அறிந்தேன். ஆனால் அந்தச் சிறு வயதில் எனக்கு ஒன்றும் சரியாக விளங்கவில்லை.

பங்காளி வீட்டுத் தொந்தரவு தாங்கமுடியாமல் அந்த வீட்டாருக்கும் எங்கட்கும் 'முறப்பாடு' இருந்தது சிறுவர் களாகிய நாங்கள் பேசுவோம்; விளையாடுவோம். ஆனால் அவர்கள் வீட்டுத் தின்பண்டங்களைக் கூட உண்ணக்கூடாது என்பது என் அன்னையாரின் கட்டளை. பல்வேறு தொந்தரவு களைக் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் என் குடும்பத்திற்கு ஒரே பிள்ளையாகிய என்னை நஞ்சூட்டிக் கொன்றாலும் கொன்று விடுவார்கள் என்று என் அன்னை நினைத்தார் களோ என்று இப்போது ஊகிக்கின்றேன். பல்லாண்டுகளாக இப்படி விரோதம் தொடர்ந்து இருந்து கொண்டு இருந்தது.

சிறுவர்களாகிய நாங்கள் வளர வளர இந்த விரோதம் கரைந்து கொண்டே போயிருக்க வேண்டும். இந்நிலையில் என் பங்காளி வீட்டுப்பெண்—எனக்குத் தமக்கை முறை—திருமணத்திற்கு ஏற்றவளாகி விட்டாள். சில ஆண்டுகட்கு முன்னால் அவளுடைய தாயும் இறந்து விட்டாள். அதற்குள் இரு குடும்பமும் ஒற்றுமையாகி விடவேண்டும் என்ற எண்ணம் இருபாலாரிடமும் ஒரே சமயத்தில் உதித்திருக்க வேண்டும். இது தெய்வத்தின் திருவுள்ளமுமாக இருந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றேன். திருமணம் நடைபெறும் போது ஒரே வீட்டில் ஒரு பாதியில் குடியிருக்கும் நாங்கள் திருமணத்தில் கலந்து கொள்ளாதிருந்தால் நன்றாக இராது என்று வேறு சில பெரியோர்களும் கருதி ஒற்றுமைக்கு வழிகோலி இருக்க வேண்டும். ஊரிலுள்ள எல்லாக் கோயிலுக்கும் இரு குடும்பமும் சென்று 'எங்கள் முறப்பாடு' தீர்ந்தது என்று சொல்லி வேண்டிக் கொண்டது இப்போது நினைவிற்கு வருகின்றது. என் அன்னையார் தொல்லை பொறுக்க முடியாத நிலையில் ஊர்த் தெய்வங்களிடம் முறையிட்டு இந்த 'முறப்பாட்டை' ஏற்படுத்தியிருக்க வேண்டும். என் தமக்கையாரின் திருமணத்திற்கு முன் இந்த 'முறப்பாடு' முறிந்ததை அக்கம்பக்கத்தார் உட்படப் பல பெரியோர்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

**கோயில் வழிபாடு :** எங்கட்கு எங்கள் ஊரிலோ வேறிடங்களிலோ யாதொரு உதவியும் செய்வாரிலர். பிறந்தது முதல் இன்று வரை இதே நிலைதான். 'திக்கற்ற வருக்குத் தெய்வமே துணை' என்பது முதுமொழியன்றோ? இந்த முதுமொழியில் அழுத்தமான நம்பிக்கையுடையவர்கள் என் அன்னையார். இதனால் கோட்டாத்தூர் வந்த பிறகு அவர்கட்குத் தெரிந்த பல கோயில்கட்கு என்னை இட்டுச் செல்வார். உள்ளூரிலுள்ள எல்லாக் கோயில்கட்கும் நான் அவர்களுடன் போவேன். அடிக்கடி சோதிடம் பார்ப்பார்

மந்திரவாதிகளிடம் சென்று என்னைப் பற்றி ஆலோசிப்பார். ஊரிலுள்ள வள்ளுவப் பண்டாரம் சோதிடத்தில் வல்லவர். அவரை இட்டு வந்து என் சாதகக் குறிப்பை ஆராய்வார். அவர் சொல்லுவதற்கேற்ப நவக்கிரகங்களில் சிலவற்றிற்கு விளக்குப் போடுவார். என்னையும் ஈசுவரன் கோயிலுக்கு இட்டுச் சென்று அங்குள்ள நவக்கிரகங்களை ஒன்பது முறை சுற்றி வரச் செய்வார். உள்ளூரிலுள்ள எந்தக் கோயில்களை யும் விட்டு வைப்பதில்லை. எல்லாக் கோயில்களிலும் அடிக்கடி வழிபாடுகள் நடக்கும்.

மேலும், சேணியர் தெருவிலுள்ள மந்திரவாதி ஒருவரிடம் இட்டுச் சென்று மந்திரத்தாலான வெள்ளித் தாயத்து ஒன்றை இடுப்பில் கட்டச் செய்ததும் நினைவிற்கு வருகின்றது. இன்னும், பெரகம்பிக்கு ஏதாவது திருவிழாவுக்குப் போகும்போது, அவ்வூரில் குலாலயரின் ஒருவர் வீடு சென்று உடுக்கையடிக்கச் செய்து சுவாமி குறை ஏதாவது இருக்கின்றதா என்று சோதிப்பார். உடுக்கை யடிப்போர் இராகத்துடன் பாட்டுப் பாடிக் கொண்டு அடிக்கும்போது மிக உருக்கமாகத் தோற்றும். அவர் பாட்டும் உடுக்கையொலியும் கேட்போரிடையேயும்உணர்ச்சி பொங்கி வழியச் செய்யும். இந்த நிகழ்ச்சி இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது.

மேலும், சிலசமயம் பெரகம்பியில் உள்ள கோயில்கட்கும் இட்டுச் செல்வார். பெரகம்பிக்கு நடந்தே செல்வோம். அந்தச் சிறுவயதில் ஐந்தாறு கல் தொலைவு நடப்பது சிரம மாகத்தான் இருக்கும். எப்படியோ உற்சாகப்படுத்தி என்னை நடராஜா சர்வீசிலேயே இட்டுச் சென்று விடுவார். பெரகம்பியில் என் அன்னை வழியில் சொந்தமான அத்தை வீடு உண்டு. அங்குதான் தங்குவோம். ஊருக்கு மேற்கிலுள்ள பிடாரிக்கோயில், இராமசாமிக் கோயிலில் முதலில் வழிபாடு

நடக்கும். நடுவீதியிலிருக்கும் என் அம்மான் வீட்டி லுள்ளோருக்கு எங்கள் நடமாட்டம் தெரியாதவாறு வடக்கு வீதி வழியாகவே நடந்து செல்வோம். பிறகு கீழ்த்திசையில் சுமார் ஒரு கல் தொலைவிலுள்ள பிடாரியம்மனின் தங்கை வதியும் கோயிலுக்கும் இட்டுச் சென்று வழிபாடுகளை நடத்துவார். எனக்கு என் அம்மானைப் பார்க்க வேண்டும் என்ற நப்பாசை இருக்கும். என்னைக் கடிந்தே அந்த ஆசை எழாமல் அடக்கி விடுவார். ஒன்றிரண்டு நாட்களில் கோட்டாத்தூர் திரும்புவோம்.

ஒருசமயம் கோட்டாத்தூர் வந்த சில ஆண்டுகளுக்குள் பெரகம்பியில் 'ஊரணை' என்ற திருவிழா நடைபெற்றது. தினந்தோறும் ஒவ்வொரு கோயிலாக ஊர்ப் பெருமக்கள் திரண்டு பொங்கல் வைத்து வழிபாடுகள் நடத்துவர். இந்த விழாவிற்கு வருமாறு என் அத்தை அழைப்பு விடுத்தார்கள். நானும் என் அன்னையும் சென்றிருந்தோம். வடகிழக்கே யுள்ள ஆற்றுக்குப் பொங்கலிட்டனர். ஒருநாள் சமுக்காளம் விரிப்பு எடுத்துச் சென்று ஒரு மரத்தடியில் தங்கியிருந்தோம். அப்பொழுது மிக நெருக்கமான மற்றோர் மரத்தடியில் என் அம்மானின் குடும்பமும் தங்கியிருந்தது. என் அம்மானின் துணைவியார் அடிக்கடி கடைக்கண்ணால் எங்களைக் கவனித்தார். என் அம்மானோ 'சிவனே' என்று மரத்தடியில் கிடந்தார். எனக்கோ என் அம்மானிடம் செல்லவேண்டும் என்ற ஆசை இருந்தது. கடிந்தே என் ஆசையை அடக்கி விட்டார் என் அன்னையார்.

கோட்டாத்தூர் வந்த சில ஆண்டுகளில் சொந்தப் பண்ணை வைக்கத் தொடங்கினார். என் அன்னையார் அதுகாறும் நஞ்சை நிலத்தை ஒருவரிடம் குத்தகைக்கு விட்டிருந்தார். புன்செய் சாகுபடி மட்டிலும் நேர்பார்வை யில் இருந்தது. இதனால் ஆள், மாடுகள் வசதிகள் இருந்தன.

ஒருசமயம் இரவல் வண்டி வாங்கிச் சொந்த மாடுகளைப் பூட்டி சொந்த ஆளைக் கொண்டு வண்டியோட்டச் செய்து புத்தனாம்பட்டி காமாட்சியம்மன் கோயிலுக்கு இட்டுச் சென்றார். புத்தனாம்பட்டி கோட்டாத்தூரிலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ளது. இங்ஙனமே, மற்றொரு சமயம் சுமார் பத்துக்கல் தொலைவிலுள்ள மாரம்ம ரெட்டி பாளையத்திற்கு வண்டியில் இட்டுச் சென்று அவ்வூர்க் கோயிலில் வழிபாடு நிகழ்த்தச் செய்தார். தாம் பிறந்த ஊராகிய பெரகம்பியிலிருந்து மூன்று கல் தொலைவுதான். தாம் தாயகத்திலிருந்த போது இந்த ஊர்த் தேவதைகளை யெல்லாம் வழிபட்ட பழக்கம்தான் என்னை இத்திசை களிலெல்லாம் இழுத்துச் சென்றது போலும்.

உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்ற அவா எழுந்த காலத்தில் என் வாழ்க்கையில் வேறொரு தொல்லை எழுந்தது. மாலை ஆறு மணிக்கு மேல் எனக்கு கண் தெரிவதில்லை. எல்லாச் சிறுவர்களுடன் சேர்ந்து இரவில் நிலவொளியில் விளையாட முடிவதில்லை. '**மாலைக் கண்**' என்று சொல்கிறார்களே அந்த நோயாக இருக்கலாம். விட்டமின்-ஏ குறைவால் ஏற்படுகின்ற நோய் இது. எனக்கும் என் தாயாருக்கும் இது பெருங்கவலை அளித்தது. விரைவில் கண்ணொளியில் முன்னேற்றம் கண்டால் பழநி முருகனுக்கு முடியெடுப்பதாக வேண்டிக் கொண்டோம். சுமார் ஓராண்டியில் இக்குறை நீங்கியது. என் அண்ணார் துணை யுடன் நானும் என் அன்னையாரும் பழநி சென்று முடியெடுத்து வழிபாடு நிகழ்த்தி ஊர் திரும்பினோம். அந்த நிகழ்ச்சியை நினைந்து மனத்தில் குமிழி எழும்போது,

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள்; மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும்
நாமங்கள்; முன்புசெய்த

பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன மயூரமுமே[42]

என்ற அருணகிரியாரின் திருப்பாடலும் எழுகின்றது. வாயும்,

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியார் எல்லாம்.

என்று அந்த முருகப் பெருமானை வாழ்த்துகின்றது.

**கிராப்பு ஆசை** : நீண்ட நாட்களாக 'கிராப்பு' வைத்துக் கொள்ள வேண்டும் என்று கொண்டிருந்த ஆசைக்கு அடிப் படையாக இருந்தது என் முடிதுறப்பு. ஆயினும் கிராப்பு வைத்துக் கொள்ளும் துணிவு எனக்கு இன்னும் வரவில்லை. முடிவளர்க்காமல் 'அரைகிராப்பு' வைத்துக் கொண்டேன். இது கிராப்பு மாதிரிதான்; முன்பக்கம் நெற்றிக்குமேல் முடி இல்லாமல் சிறைக்கப் பெற்றிருக்கும். என் நிலையைக் கண்ட என் தம்பி கணபதிக்கும் கிராப்பு ஆசை எழுந்தது. அதைச் சொல்லத் துணிவு இல்லை. தானும் பழநி சென்று முடி யெடுத்து முருகப் பெருமானை வழிபடவேண்டும் என்ற ஆசையை வெளியிட்டான். என்னை அவன் தந்தையார்

42. கந்த, அலங். 70

பழநிக்கு எங்களை இட்டுச் சென்றபோதே அவனையும் கூட்டிச் சென்றிருக்கலாம். இப்படித்தான் அவர் முன் யோசனையின்றிக் காரியங்களைச் செய்வார், ஒருநாள் தன் விருப்பத்தைத் தன் அத்தையிடம் தெரிவித்து ரூபாய் இருபது பெற்று வந்தான். அவன் தந்தையாருக்குத் தெரியாமல் நானும் கணபதியும் பழநி சென்று முடியெடுத்து முருகனை வழிபாடு செய்து திரும்பி வந்தோம் அவன் தந்தையாரும் ரூபாய் இருபதைத் தன் தமக்கையாரிடம் தந்து கடனைத் தீர்த்துக் கொண்டார். அதனை இப்போது நினைந்து பார்க்கின்றேன். இருவரும் 'அரைக் கிராப்புடன்' துறையூர் சென்று படிப்பைத் தொடங்கினோம். இவ்வாறு முடி துறந்தது, நாங்களே குளித்துத் தலைவாரிக் கொள்வதற்கு மிகவும் சௌகரியமாக இருந்தது. துறையூரிலிருந்தவரை எங்கட்குக் 'கிராப்பு' வைத்துக் கொள்ளும் துணிவு பிறக்கவில்லை. முசிறியில் படிக்கும்போதும் இரண்டு ஆண்டுகள் வரை எங்கட்கு கிராப்பு வைத்துக் கொள்ளும் துணிவு பிறக்கவில்லை. எஸ். எஸ். எல். சி. வகுப்பு படிக்கும் பொழுது இத்துணிவு பிறந்தது. இருவருமே கிராப்பு வைத்துக் கொண்டோம். எங்களின் இந்நிலையைக் கண்ட என் தம்பியின் தந்தையாரும் தம் வெறுப்பை முகத்தில் காட்டினாரேயன்றி வாயினால் எதுவும் சொல்லவில்லை.

> பிள்ளைதான் வயதின் மூத்தால்
> பிதாவின்சொற் புத்தி கேளார்[43]

என்ற பெரியோரின் வாக்கு அவர் அறியாததா என்ன? 'காலத்திற்கேற்ற கோலம்'தான் என்று நினைந்து வாளா இருந்து விட்டார்.

---

43. விவே. சிந்தா. 2.

# 19. நான் ஈடுபட்ட விளையாட்டுகள்

கோட்டாத்தூரில் கல்வியை மிக உற்சாகமாகக் கற்றது போலவே, விளையாட்டுகளில் அதிகமான அக்கறை கொண்டேன். இயல்பாகவே விளையாடும் இயல்புடையவர்கள் சிறுவர்கள் என்பதை அப்பொழுது சிந்திக்க முடியாவிடினும் இப்பொழுது சிந்திக்க முடிகின்றது உளவியலை ஆழ்ந்து கற்றமனம் அதனை இப்பொழுது சிந்திக்கின்றது. விளையாட்டுச் செயல் சிறுவர்களிடம் தானாகவே தோன்றுகின்றது; அதன்பொருட்டே சிறுவர்கள் விளையாட்டில் ஈடுபட்டுத் துய்க்கின்றனர். விளையாட்டு சிறுவர்களின் உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, புலப்பயிற்சி, கற்பனையாற்றல் போன்ற பண்புகளை வளர்க்கின்றது. இதனால்தான் விளையாட்டுமுறை கல்வி கற்றலில் பயன் படுத்தப்பெறுகின்றது.

விளையாட்டைப்பற்றி உளவியலாரிடையே பல்வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இவை யாவும் கொள்கை வடிவம் பெற்று விளையாட்டின் உண்மையை விளக்க முயல்கின்றன. என்றாலும் இவை ஒவ்வொன்றும் விளையாட்டுகளின் ஏதேனும் ஒரு கூறினையே வற்புறுத்துகின்றன. குழந்தைகளிடமும் பிராணிகளின் குட்டிகளிடமும் தற்காப்புக்கும் வளர்ச்சிக்கும் தேவையான ஆற்றலைவிட அதிகமான ஆற்றல் உள்ளது; தேவைக்குரிய ஆற்றல்போக எஞ்சிய ஆற்றலே விளையாட்டின்மூலம் வெளிப்படுகின்றது. வயிறு நிறைய உண்ட சிங்கங்கள் கர்ச்சிக்கின்றன; உண்டு வயிறு நிறைந்த பறவைகள் பாடுகின்றன. அவ்வாறே குழந்தைகளும் தம்மிடமுள்ள மீறிய ஆற்றலால் களித்து விளையாடுகின்றனர். நீராவிப்பொறி தேவைக்கு அதிகமாகச் சேர்ந்திருக்கும் நீராவியை வெளிப்படுத்துதல் போல பிராணிகளும் தம்முடைய மிகுதியான ஆற்றலை விளையாட்டின்

மூலம் வெளிப்படுத்துகின்றன. இக்கொள்கைளை விஞ்சு ஆற்றல் கொள்கை (Surplus energy theory) என்று வழங்குவர் உளவியலார். பிறிதொரு சாரார் கருதுவது பிற்கால வாழ்க்கைத் தேவைகளுக்கு வேண்டிய வேலைகளை' முன்பே எதிர்பார்த்துக் குழந்தைகளும் பிராணிகளின் குட்டிகளும் தங்கள் விளையாட்டில் பழகுகின்றன. பூனைக் குட்டி அசையும் பொருள்களைக் கண்டு விரட்டுதலும், நாய்க்குட்டிகள் ஒன்றோடொன்று புரண்டு கொண்டு சண்டையிட்டுக் கொள்ளுதலும், சிறுவன் போர் வீரனாகவும், சிறுமி பொம்மை பராமரிப்பு செய்பவளாகவும் விளையாடும் விளையாட்டுகளையும் காண்கின்றோம். இவற்றையெல்லாம் இவர்கள் 'வாழ்க்கை ஆயத்தக் கொள்கை' (Preparation for life theory) என்பதில் அடக்கிக் காட்டுவர்.

மற்றும் ஒரு சாரார் கருதுவது: மனிதபரம்பரை பல்லூழி காலத்தில் அடைந்த அநுபவங்களைக் குழந்தைகள் தம்முடைய குழவிப்பருவத்தில் திரும்பவும் அடைகின்றனர். நாகரிகம் அடைந்த காலத்திலும் குழந்தைகள் ஆதிகால மனிதர்களின் செயல்களில் ஈடுபடுகின்றனர். விளையாட்டில் மரம் தொற்றுதல், வேட்டையாடுதல், குகையமைத்தல், மீன் பிடித்தல் முதலியவற்றைக் காண்கின்றோம். தாய் வயிற்றில் குழந்தை கருவாய் வளரும் காலத்தில் படிப்படியாகக் கீழ் நிலை உருவங்களைக் காணமுடிகின்றது. இவற்றையெல்லாம் இவர்கள் 'ஆதிகாலச் செயல்கட்குத் திரும்பும் கொள்கை' (Recapitulation theory) என்பதில் அடக்குவர்.

இக்கொள்கைகளைத் தவிர காலுதற் கொள்கை (Cathartic theory) என்ற ஒரு கொள்கை உண்டு. இதனை முதன் முதலில் காட்டியவர் அரிஸ்டாட்டில் என்ற பேரறிஞர்.

துன்பியல் நாடகத்தைத் திறனாய்ந்த பொழுது இக் கொள்கை கையாளப் பெற்றது. பேதிமருந்து உடலிலிருந்து வேண்டாத பொருள்களை அகற்றுதல் போலவே, ஆன்மாவைச் சூழ்ந்துள்ள அழுக்குப் பொருள்களைத் துன்பியல் நாடகங்கள் அகற்றுகின்றன என்று கருதுவர் இந்த அறிஞர். ஒரு துன்பியல் நாடகத்தைக் காணும் பொழுது நம்மிடம் தேங்கிக் கிடக்கும் சில உணர்வுகள் செயற்பட்டு வெளிப்படுகின்றன. நாமும் கதைத் தலைவனுடைய உணர்வுகளைப் பெறுகின்றோம். அவன் படும் துன்பங்களையெல்லாம் நாம் மானசீகமாக அநுபவிக்கின்றோம். அவனிடம் நடைபெறும் உணர்வுப் போராட்டம் நம்மிடமும் நடைபெறுவதை உணர்கின்றோம். இங்ஙனமே, விளையாட்டும் நம்மிடம் அடங்கிக் கிடக்கும் உணர்வுகள் வெளிப்படத் துணை செய்கின்றது. நாகரிக வாழ்வில் போரூக்கம் (Instinct of pugnacity) செயற்படுவதற்கு அதிக வாய்ப்பில்லை. நாகரிக உலகில் விளையாட்டில் அந்த வாய்ப்புக் கிடைக்கின்றது. ஒவ்வொரு விளையாட்டும் போலிச் சண்டையே; அதில் குருதி சிந்துவதில்லை. சினமும் வெளிப்படுவதில்லை. ஆனால் அந்த இயல்பூக்கத்திலிருந்து ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பினை நல்குகின்றது. உண்மை உலகங்களில் நேரும் ஏமாற்றங்களுக்கு ஈடு செய்யும் பொருட்டு விளையாட்டு உண்டாகின்றது எனலாம். இங்ஙனமே, பாவனை உலகில் குழந்தைகள் மேற்கொள்ளும் விளையாட்டிலும் இவ்வாற்றல்கள் வெளிப்படுவதற்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கின்றன.

பெரகம்பியில் விளையாடின விளையாட்டுகளில் கிட்டியடித்தல், பம்பரம் விடுதல், பிள்ளையார் பந்து அடித்தல் ஆகியவை இங்கும் தொடர்ந்தன. நல்ல நல்ல பம்பரங்கள் கிடைக்க இவ்வூரில் வாய்ப்புகள் ஏற்பட்டன.

தச்சர் ஒருவர்—அவர் மிக இளைஞர்—குறைந்த விலைக்கு கடைசல் பம்பரங்களைத் தயாரித்துத் தந்தார். சிறுவர்களாகிய எங்களையே கயிற்றை இழுக்கச் செய்து நல்ல அழகான பம்பரங்களைக் கடைந்து தந்தார். ஓரணா, இரண்டணாவுக்கு மேல் விலை இல்லை. அந்தக் காலத்தில் இதுவே சிறுவர்களாகிய எங்கட்கு ஒரு பெரிய தொகையே; தச்சருக்கும் நல்ல விலையே.

**கிட்டிப்புள் அடித்தல்:** பெரகம்பியில் ஊருக்குள், தெருவில், விளையாடினேன். அந்த வயதில் அந்த இடம் போதுமானதாகவே இருந்தது. ஆனால் சற்று வளர்ந்த பிறகு தெரு இதற்குப் போதுமானதாக இல்லை. தெருவில் நடமாடுவோர்மேல் அடிக்கப்பெறும் புள் விழுமாதலால், ஏரிக் கரையின் வெளிப்புறமும், ஏரியின் உள்புறமும் வாய்ப்பான இடங்களாக அமைந்தன. யாருக்கும் தொந்தரவு இல்லாமல் விளையாடுவதற்கு இவை நல்ல இடங்களாகப் பயன்பட்டன. பிறர் மீது படாது அடிக்கும் புள் 100 அடி 200 அடி தொலைவில் கூடச் சென்றது.

**பட்டம் விடுதல்:** நான் விளையாடின விளையாட்டுகளில் சிறந்தது. இதையும் ஏரிக்குள்தான் விட்டேன். கதவுப் பட்டம், வௌவால் பட்டம் என்ற இருவிதப் பட்டங்கள் தயாரிக்கக் கற்றுக் கொண்டேன். கதவுப்பட்டம் பெரியது; சற்றுக் கனமானது. இதனை மூங்கில் டப்பைகளால் தயாரிக்க வேண்டும். வௌவால் பட்டம் செய்ய தென்னை விளக்குமாற்றுக் குச்சிகளே போதுமானது. கடைகளில் கெட்டியான பழைய செய்தித்தாள்கள், காக்கி நிறக் காகிதம், நல்ல நல்ல வண்ணத்தாள்கள் குறைந்த விலைக்குக் கிடைத்தன. தங்கம்போல் ஒளிவிடும் குருநாதப் பட்டையும் சற்று அதிக விலையில் கிடைத்தது. கதவுப் பட்டத்தை அலங்கரிக்க இது

பயன்பட்டது. வெளவால் பட்டத்திற்குச் சாதாரணமான மெல்லிய நூல் போதுமானது; கதவுப் பட்டத்திற்கு கெட்டியான நூல் (Twine) தேவைப்பட்டது. இருவகை நூல்களும் அந்தச் சிற்றூரில் அப்போதே மளிகைக் கடையில் கிடைத்தன.

பெரகம்பியில் விளையாடாத ஒரு புதுவகை விளையாட்டு வளையம் உருட்டுதல். பழைய இறைசால்களில் உள்ள கெட்டியான சதுரப்பட்டை இரும்பாலான பெரிய வளையமும், உருட்டுக் கம்பியாலான சிறிய வளையமும் இதற்குப் பயன்பட்டன. பெரிய வளையம் நாலணாவுக்கும் சிறிய வளையம் இரண்டணாவுக்குமாகக் கிடைத்தன. இரும்பு வேலை செய்யும் கருமானிடம் இவை கிடைக்கும். தொடக்கத்தில் சிறிய வளையமும், பின்னர் பெரிய வளையமும் உருட்டலானேன். மூன்றடிக் கோலின் நுனிப் பக்கம் ஓர் ஆணியைப் பொருத்தி அதனைக் கொண்டு இந்த வளையங்களை உருட்டவேண்டும். நான்கைந்து சிறுவர்களாகச் சேர்ந்து வளையங்களை உருட்டிக் கொண்டு இரண்டு கல் தொலைவிலுள்ள சுற்றுப்புறச் சிற்றூர்கட்கும் சென்று வருவோம். இந்த விளையாட்டில் பசி, நீர் விடாய் கூட மறந்து விடும். இந்த வளையங்கள் விடுவதற்கு நல்ல ஒற்றையடிப் பாதைகூடப் போதுமானது. வயல்களில் ஒன்றரைச் சாண், இரண்டு சாண் அகலமுள்ள வரப்புகளிலும் இந்த வளையங்களை உருட்டிச் செல்லும் திறமையையும் வளர்த்துக் கொண்டேன். அந்தக் காலத்தில் அந்தச் சிற்றூர்களில் ஒன்றிரண்டு மிதி வண்டிகள்தாம் இருந்தன. செல்வக் குடும்பங்களிலுள்ள பெரியவர்கள்தாம் இவற்றை வைத்திருந்தனர். வளையங்களை நன்கு உருட்டக் கற்றுக் கொண்டால் பிற்காலத்தில் மிதிவண்டியை நன்கு விடமுடியும் என்ற கொள்கை சிறுவர்களாகிய எங்களிடம் நிலவியது. இது தவறு என்பது மிதிவண்டி விடும் போதுதான் தெளிவாயிற்று

பெரகம்பியில் நன்றாக நீந்தக் கற்றுக் கொண்டேன். இந்தப் பயிற்சி கோட்டாத்தூரில் நன்கு திறம் பெற்றது. முதலில் திட்டிலிருந்து நீரில் குதித்தல், கிணற்று மேட்டிலிருந்து குதித்தல், அதன்பிறகு கபிலை ஏற்றத்திலிருந்து குதித்தல் முதலிய செயல்கள் படிப்படியாக வளர்ந்தன. பெரும்பாலும் இவ்வாறு குதித்தலுக்கு ஒரு சில கிணறுகள் தாம் வாய்ப்பாக அமைந்தன. நாளடைவில் நீரில் தலை கீழாகப் பாய்ந்து வெளிவரும் செயலும் கைவரப் பெற்றது. ஒரு சமயம் இவ்வாறு பாயும்பொழுது நீர் ஆழம் போதாமையால் என் முன்பற்கள் இரண்டு கிணற்று அடித்தரையில் மோதி நுனியில் சிறிது தெறித்துப் போயின. நல்ல வேளையாகப் பெரிய விபத்து ஒன்றும் நேரிடவில்லை. 'தப்பித்தது தம்பிரான் புண்ணியம்' என்று அமைந்து, அதிலிருந்து இத்தகைய செயல்களில் ஈடுபடுவதைக் குறைத்துக் கொண்டேன்.

கரட்டாம்பட்டி இராமசாமி என்ற சிறுவன் பணக்காரன். சற்று முரடன்; என்னைவிடப் பலசாலியும் கூட. அவனுடன் அடிக்கடி சிறுமோதல்கள் நேரிடுவதுண்டு. என்னை அடிப்பான்; என்னால் சமாளிக்க முடிவதில்லை. நீந்துவதில் அவனுக்கு நல்ல பயிற்சி இல்லை. ஆதலால் கிணற்றில் நீந்தும் போது அவனைச் சற்று நீரில் அழுத்துவேன்; துடிதுடித்துப் போவான். பிறகு இருவரும் நல்ல நண்பர்களானோம். நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதே அவனுக்குத் திருமணம் ஆயிற்று. செட்டிக்குளத்திலுள்ள ஒரு பெண்ணைத் திருமணம் புரிந்து கொண்டான். சிற்றின்பத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவன். எண்ணெய்க் குளியலன்று இரவில் சிற்றின்பத்தில் அதிகமாக ஈடுபட்டு 'சுக ஜன்னி' வந்து இறந்து விட்டதாக நான் விடுமுறையில் ஊருக்கு வரும்போது அறிந்தேன்.

பெரகம்பி, கோட்டாத்தூர் வாழ்க்கையில் காலையில் நீராடும் பழக்கமே இல்லை. யாரோ ஒரு சில பெரியவர்கள் நியமநிட்டை அநுட்டிப்பவர்கள் காலையில் நீராடுவதைப் பார்த்திருக்கின்றேன். அமாவாசை, புரட்டாசி சனி, ஏகாதசி, கிருத்திகை போன்ற நன்னாட்களில்தான் காலையில் நீராடும் பழக்கம் உண்டு. ஏனைய நாட்களில் பகல் பன்னிரண்டு மணிக்கு மேல் தான் கிணற்றில் நீராடும் பழக்கம் பெரும்பாலோரிடம் இருந்தது.

குமிழி—20

# 20. வளர்ச்சிப் பருவங்கள்

கோட்டாத்தூரில் வாழ்ந்தபோது சில பயனுள்ள பொழுது போக்குச் செயல்சளில் ஈடுபட்டதுண்டு. அந்தஊர் பள்ளிப் படிப்பில் ஒரு தெவிட்டுநிலை (Saturation point) ஏற்பட்டுவிட்டது. ஆகவே, பள்ளியிலேயே தங்குதலில் ஒரு சோர்வும் நேரிட்டுவிட்டது, இந்த நிலையில் வெளியில் சென்று ஓடியாடவேண்டும் என்ற உந்தல் இயல்பாகவே ஏற்பட்டது. இதற்குரிய காரணங்கள் அப்போது சிந்திக்க நேரம் இல்லை; அதற்குரிய அகவை முதிர்ச்சியும் ஏற்படவில்லை. உளவியலை நன்கு கற்று வாழ்க்கையில் நல்ல அநுபவம் ஏற்பட்டபிறகு என் இளமைப் பருவ வாழ்க்கையைப்பற்றிய சிந்தனைகள் எழுகின்றன. இவை உளவியல் அடிப்படையில் இளமையில் மேற்கொண்ட செயல்களை ஆராயத் தூண்டுகின்றன. இந்த ஆராய்ச்சி ஒரு வகையில் சுயசோதனை (Self experiment) ஆகின்றது.

குழந்தையின் வளர்ச்சி தொடர்ச்சியாக இருந்தாலும், அதில் சில முக்கியமான பருவங்களை உளவியலறிஞர்கள் பகுத்து ஆய்ந்துள்ளனர், அவை வருமாறு:

குழவிப்பருவம் : 0-2½ அல்லது 3வயது

முன்பிள்ளைப்பருவம் 3½ அல்லது 7வயது; மனவளர்ச்சிக் குரியது.

நிலைமாறு பருவம் 6 அல்லது 7-8 வயது; உடல் வளர்ச்சிக் குரியது.

பின்பிள்ளைப்பருவம் 8-12 வயது; மனவளர்ச்சிக்குரியது;

முன்குமரப்பருவம் 12-14வயது; உடல் வளர்ச்சிக்குரியது.

பின்குமரப்பருவம் 14-18வயது மனவளர்ச்சிக்குரியது

இவற்றுள் சில சமயம் நிலைமாறு பருவத்தை நடுப் பிள்ளைப்பருவம் எனவும் குறிப்பிடுவதுண்டு.

இங்ஙனம் குழந்தையின் வளர்ச்சியைப் பலபடிகளாகப் பிரித்தாலும் வளர்ச்சி ஆங்காங்கு ஒவ்வொரு படியிலும் முடி வெய்திப் பின்பு புதிதாகத் தொடங்குகின்றது என்று கருதுதல் தவறு; அஃது ஓரே தொடர்ச்சியாகவே போகின்றது. ஒரு பருவத்திற்குரிய சிறப்பியல்புகள் பிற பருவங்களில் காணப்பெறா என்றோ, ஒவ்வொரு பருவத்திற்குரிய சிறப்பியல்புகள் முழுவதும் மறைந்த பிறகு தான் அதற்கடுத்த பருவத்திற்குரிய சிறப்பியல்புகள் தோன்றும் என்றோ கருதுதல் வேண்டா. மேலும், ஒவ்வொரு பருவத்திற்குரிய வயது எல்லையையும் மறைமொழியாகக் கொள்ள வேண்டியதும் இல்லை, இவை யாவும் குழந்தைக்குக் குழந்தை மாறக்கூடியவை; இவை யாவும் குழந்தைகளின் குடிவழியையும் அவை வளர்ந்து வரும் சூழ்நிலையையும் பொறுத்தேயிருக்கும் என்பது உளவியலாரின் முடிவுமாகும்.

இப்போது பின் பிள்ளைப்பருவத்திலிருக்கின்றேன். பல் வரிசைகள் திருந்துகின்றன. வளர்ச்சியில் வேகம் குறை கின்றது. குளித்தல், தலை வாருதல் போன்ற உடல்தேவை களுக்கு அதிகக் கவனம் தந்தது நினைவிற்கு வருகின்றது.

ஆண்டில் ஓரிரு தடவைகள் பெரகம்பி சென்று வருவேன்; அங்குள்ள நண்பர்களைப் பார்க்க வேண்டும் என்ற பேராவல் இருந்து வந்தது. நான் அங்குப் போனபோது கிருஷ்ண மூர்த்தி என்ற ஆங்கில ஆசிரியர் நியமிக்கப் பெற்று என் நண்பர்கள் ஆங்கிலம் கற்றுக் கொண்டிருந்ததைக் கண்டேன். என் நண்பர்களில் கீச்சி ரெட்டியார் வீட்டுக் கிருஷ்ணசாமி, கோட்டாத்தூர் நாராயணன் என்ற இருவரின் படிப்பில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டேன். இலிங்கி செட்டியார் தமக்கே உரிய முறையில் சிறுபிள்ளைகட்குப் பாடம் பயிற்றிக் கொண்டிருந்தார். ஆனால் நான் படித்தபோது அவருக் கிருந்த உற்சாகம் காணப் பெறவில்லை. இதற்குத் துணைவி யாரை இழந்தது, குடும்பப் பொருளாதார நிலை, தம் மக்கள் சரியாகப் படிக்காமை இவை காரணங்களாக இருக்கலாம். என் நண்பர்களின் முன்னேற்றம் என்னுடைய முன்னேற்றத்தை விட விஞ்சியிருப்பதையும் கண்டேன். இது எனக்கு உற்சாகத்தை அளித்தது. ஊருக்குத் திரும்பியதும் மிக ஆர்வத்துடன் கற்றேன். அரங்கநாத அய்யரும் என் புதிய ஊக்கத்தைக் கண்டு மகிழ்ந்து நன்றாகக் கற்பித்தார். என்னுடைய முன்னேற்றத்தில் ஒரு வேகமான மாற்றமும் காணப்பட்டதை நானே உணர்ந்தேன். விரைவில் படிப்பில் ஒரு தேக்கமும் ஏற்பட்டது. இந்தச் சமயத்தில்தான் பசனை மடத்திலிருந்த இராமாயணம், பாரதம், பக்தவிஜயம் என்ற பெரிய உரைநடை நூல்களைப் படித்து முடித்தேன்.

பெரகம்பிக்குச் சென்றபொழுது என்னைவிடச் சற்று மூத்தவர்களில் பலர் தலைமுடியை நன்கு வளர்த்து அழகான கொண்டை போட்டுக் கொண்டிருந்தனர். என்னோ டொத்தவர்களும் அவ்வித ஆசை கொண்டிருந்தனர். என்னிடமும் அத்தகைய ஆசை எழுந்தது. நானும் முடி வளர்த்துப் போற்றத் தொடங்கினேன். என்னைப் பார்த்து கி. இராசகோபால், ராமுடு, இராசமாணிக்கம் முதலியோர்

வளர்த்துப் போற்றத் தொடங்கினர். பெரகம்பியிலிருந்த முடிவளர்க்கும் நாகரிகம் கோட்டாத்தூரிலும் நன்கு பரவி விட்டது. என்னை விடச் சற்று மூத்தவர்களிடமும் இந்த நாகரிகம் பற்றிக் கொண்டதைக் கண்டேன். அவர்கள் சிட்டுக் குடுமி விட்டுக் கொண்டை போட்டுக்கொள்ளத் தொடங்கினர்.

இந்த நிலையில் ஊரிலுள்ள செல்வர்கள் வீட்டு இளைஞர்களில் சிலர் இசைப்பயிற்சி பெற விழைந்து எங்கிருந்தோ வந்த கிருஷ்ணமூர்த்தி என்ற ஓர் இசை யாசிரியரைக் கொண்டு இசையில் பயிற்சி பெற்றனர். ஐந்தாறு பேர்கட்குமேல் இந்தப் பயிற்சி வகுப்பில் சேர வில்லை. இவர்கள் கூட்டாசச் சேர்ந்து ஐம்பது ரூபாய் மாதச் சம்பளமாகச் சேர்த்துத் தந்ததாக நினைவு. என் இல்லத்தருகில் கிருஷ்ண மூர்த்தியும் அவர் தம்பியும் ஒரு வீட்டில் தங்கியிருந்ததால் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. இந்தச் சமயத்தில் வடுவூர் துரைசாமி அய்யங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ரங்கராஜு இவர்கள் எழுதிய புதினங்கள் சிலவற்றைப் படித்த முடித்தேன். இப்போது என்ன புதினங்கள் படித்தேன் என்று நினைவுக்கு வரவில்லை. இந்தச் சமயத்தில் புதினங்களில் எனக்கிருந்த ஆர்வத்தைக் கண்டு கிருஷ்ணமூர்த்தி தான் எழுதி வைத்திருந்த புதினத்தின் கைப்படியைத் தந்தார். அது மிக நன்றாக இருந்ததாக நினைவு. பின்னர் அஃது அச்சேறிற்றா என்பதை அறியக் கூடவில்லை. நானும் மேற் படிப்பின் நிமித்தம் வெளியூர் சென்று விட்டேன். துறையூரில் படித்த காலத்திலும் முசிறியில் முதல் ஆண்டு படித்த காலத்திலும் கிருஷ்ணமூர்த்தி கோட்டாத்தூரில்தான் இருந்தார். பின்னர் எங்கு சென்றார் என்பதை என்னால் அறிந்து கொள்ள இயலவில்லை. அதில் முயற்சியும் எடுக்க வில்லை.

கிருஷ்ணமூர்த்தி கோட்டாத்தூரில் இருந்து இசை பயிற்றிய காலத்தில் மார்கழி மாதம் அதிகாலையில் பசனைக் குழு ஒன்று பசனை மடத்திலிருந்து கிளம்பி ஊரை வலம் வரும் இவ்வாறு வலம் வருதல் காலை ஆறு மணிக்குள் நிறைவு பெறும். நான் ஊரிலிருந்த பொழுது இந்தப் பசனைக் குழுவில் கலந்து கொள்வதுண்டு. பசனைக்குழு பசனை மடத்திற்கு மீண்டதும் கண்ணனுக்குக் கற்கண்டு கலந்த வெண்ணெய், பஞ்சாமிர்தம், சுண்டல் இவை நைவேத்தியம் ஆகும். இவற்றை பசனைக் குழுவினருக்கும் குழுமியிருக்கும் சிறுவர் கட்கும் பகிர்ந்து வழங்குவார்கள். கிருஷ்ணமூர்த்தியிடம் பயின்ற குணம் நல்லப்ப ரெட்டியார், சிதம்பரம், சின்னத்தம்பு என்கின்ற நல்லப்ப ரெட்டியார் என்ற மூவரும் சில பெரியோர் களால் தூண்டப் பெற்று இந்தப் பசனைக் குழுவில் கலந்து கொள்ளும்போது இந்தப் பசனைக் குழுவிற்கு ஒரு புதிய களை ஏற்பட்டது. ஊர்வலத்தில் வந்த கூட்டமும் பெருகிற்று. ஊருக்கும் ஒரு பெரிய புகழ் ஏற்பட்டது. ஒரு சில ஆண்டுகளில் இந்த உற்சாகம் மங்கியது. இப்போது ஊரில் எந்தவித சிறப்பான நிகழ்ச்சியும் நடைபெறுவதில்லை; 'விரிச்'சென்று கிடக்கின்றது.

திருவிழாக்கள் அரியனவாக உள்ள எங்கள் ஊரில் ஒரு முறை 'ஊரணை' கொண்டாடப்பெற்றது. என் தாயார் அந்த ஆண்டுதான் தம் சொந்தச் செலவில் பஞ்ச உலோகங் களாலான மாரியம்மன் திருமேனியைத்தயாரித்துக்கோயிலில் வைத்தார்கள். மாரியம்மன், பிடாரிக் கோயில்களில் ஊர் மக்கள் பொங்கலிட்டு வழிபட்டனர். ஒரு வாரம் ஊர் விழாக் கோலம் கொண்டிருந்தது. ஏதாவது ஒரு தெய்வத் திருமேனி மாலையிலோ, காலையிலோ ஊர்வலம் வந்தவண்ணம் இருந்தது. சிறுவர்கள் பல்வேறு வேடங்களைப் போட்டுக் கொண்டு ஊர்வலம் வந்தனர். ஒருநாள் பகலில் 'வெட்டியான்' வேடத்தையும் மற்றொரு நாள் இரவில்

'வெள்ளைக்காரன்' வேடத்தையும் போட்டுக் கொண்டதாக நினைவு. மாமன் முறையிலுள்ளவர்களெல்லாம் நான் போட்டுக் கொண்ட 'வெட்டியான்' வேடத்தைக் கேலி செய்தனர். "உன் தந்தையார் கொம்பு ஊதிக் கொம்பு காத்தான்' என்ற பெயர் பெற்றார். அந்தப் பட்டப்பெயர் உனக்கும் இறங்கிவிட்டது இப்போது 'வெட்டியான்' வேடத்தைப் போட்டுக் கொண்டு 'பறையன்' ஆகிவிட்டாய். உங்கள் வமிசமே தீண்டத்தகாதார் மீது ஈடுபாடு கொண்டது போலும்!" என்று நையாண்டி செய்ததை இப்போது நினைவுகூர முடிகின்றது. 'எஸ்' 'நோ' என்ற இரண்டு சொற் களைக் கொண்டே வெள்ளைக்காரன் வேடத்திற்குப் பொலிவு தந்தேன். அப்பொழுதுதான் ஆங்கிலம் பயின்று கொண்டிருந்தேன். என் நண்பன் கி. இராசகோபாலன் சற்று அழகானவன்; ஆகையால் அவனுக்குப் பொருத்தமான பெண் வேடம் போட்டுக் கொண்டான். வேறு சிலர் என்னென்னவோ வேடங்களைப் கொண்டனர். அவையெல்லாம் இப்போது நினைவுக்கு வரவில்லை.

இந்தப் பருவத்தினரின் சிறப்பியல்பாகப் படிப்பில் ஆர்வங்காட்டுதலை எடுத்துக் காட்டுவர் உளவியலார். "எத்தனை நூல்களைக் கொடுத்தாலும் அவற்றை விரைவில் படித்து முடித்து விடுவர்."[43] சிற்றூர்களில் அக்காலத்தில் நூலகம் இல்லை. உரைநடை நூல்கள் கிடைப்பது அரிய தாகவே இருந்தது. தாய்மொழிக்குச் சிறிதளவு ஏற்றம் கொடுத்திருப்பதால் இப்பொழுது பல்வேறு துறைகளில் நல்ல நல்ல உரைநடை நூல்கள் வெளிவருகின்றன. இவற்றைப் பெற்றோர்கள் வாங்கும் நிலையில் இல்லாதிருந்த போதிலும் நூலகங்களிலாவது இப்போது கிடைக்கும். இவற்றைத் தவிர வார, பிறை, திங்கள் இதழ்கள் கிடைக்

43. கல்வி உளவியல் – பக். 108

கின்றன. இவற்றையெல்லாம் எண்ணும்போது "நான் இக் காலத்தில் சிறுவனாக இருந்து படிக்க வாய்ப்பு இருக்கக் கூடாதா?" என்ற சபலமும் அடிக்கடி மனத்தில் எழுகின்றது. இந்த வயது உயர்நிலைப் பள்ளிகளில் கீழ்ப்படிவங்களில் படிக்க வேண்டிய காலம். அந்த வாய்ப்பு கைவரப் பெறாமல் சிற்றூரில் காலம் கழிக்க வேண்டி வந்ததே என்ற கழிவிரக்கம் இப்போது எழுகின்றது.

இப்பருவத்துச் சிறுவர்களைப் பற்றி (8-12. வயது) உளவியலார் கூறுவதை நினைந்து பார்க்கின்றேன்.

> "இப்பருவத்தில் சிறுவர்கள் பிற பிள்ளைகளுடன் கூடிக்குலாவுவதில் ஆர்வங்காட்டுகின்றனர். இப்பொழுது சிறுவன் தன்னந்தனியனாக விளையாட விரும்புவ தில்லை; பிற சிறார்களுடன் சேர்ந்தே விளையாடு கின்றான்; பலருடன் சேர்ந்து ஒரு குழுவாக இணைந்து விடுகின்றான். பெரும்பாலும் ஒரே பாலைச் சார்ந்த சிறுவர்களே இக்குழுக்கள் அமைத்துக் கொள்ளு கின்றனர். ஒவ்வொரு குழுவிற்கும் தலைவன் ஒருவனே இருப்பான்; பெரும்பாலும் தற்சாதிப்பும் உடல் வன்மையும் மிச்குள்ளவன் தலைவனாக அமைவான் .. ......இப்பொழுதுதான் குழந்தைகள் வெளியுலகைப் பற்றித் தெரிந்து கொள்ள விழைகின்றனர். வெளிச் சிறார்களுடன் கூடி விளையாடுவதால் சிறுவர்களிடம் சமூக சம்பந்தமான சில பண்புகள் அமைகின்றன. தலைவனுக்கு கீழ்ப்படிதல், குழுவின் நம்பிக்கைக்குப் பாத்திரனாதல் போன்ற குணங்கள் அவர்களிடம் வளர் கின்றன."[44]

இக்குணங்களெல்லாம் அப்பொழுது அமைந்திருந்தனவா என்று இப்பொழுது நினைந்து பார்க்கின்றேன்.

44. கல்வி உளவியல்-பக் 107-108

இந்தப் பருவத்தில் (8-12 வயது) நாங்கள் நான்கைந்து பேர் சேர்ந்து கொண்டு இலந்தைப் பழம் சேகரிப்பதற்கு ஒரு கல் தொலைவிலுள் முட்புதர்களும் முள் மரங்களும் மண்டிக் கிடக்கும் அடவிக்குச் செல்வோம். இலந்தைப் பழங்களைச் சேகரித்து வருவோம். அதிகமான பழங்களைச் சேகரித்து வரும்போது அவற்றிலுள்ள கொட்டைகளை நீக்கி விட்டு உப்பையும் சிறிய அளவு மிளகாய்ப் பொடியையும் சேர்த்து சிறுசிறு வடைகளைத் தயாரித்து வெயிலில் உணர்த்துவார் என் அன்னையார். கோடைக்காலத்தில் இவ்வடையில் ஒரு சிறு துண்டை வாயில் போட்டுக் கதுப்பில் அடக்கி வைத்துக் கொண்டால் தாகவிடாய் தீரும்; அஃது எழாமலும் இருக்கும்.

இன்னொரு பழக்கமும் என்னிடம் அப்பொழுது இருந்தது. பன்னிறப் பொன்வண்டுகளைப் பிடித்து வந்து காலித் தீப்பெட்டியில் வைத்துப் போற்றுவேன். சிவப்பு நிறம், சிவப்புப் புள்ளிகள் மின்னும் நிறம், பச்சை நிறம், பச்சைப் புள்ளிகள் மின்னும் நிறம் இவ்வாறு பல நிறங்கள் கொண்ட வண்டுகளைத் தீப்பெட்டிகளில் அடைத்து வைத்துப் போற்றுவேன். அவற்றிற்கு உணவாக அவை இருந்த செடிகளின் தழைக்கொழுந்துகளையே தீப்பெட்டியில் போட்டுப் பாதுகாப்பேன். ஒரு சமயத்தில் பத்துப் பன்னிரண்டு பன்னிற வண்டுகள் என்னிடம் இருந்ததைப் பலர் கண்டு மகிழ்ந்ததுண்டு.

ஆடி மாதத்தில் நாவற்பழம் மலிந்திருக்கும். இதைச் சேகரிப்பதற்கும் குழுக்களாகச் செல்வோம். இருப்புச் சக்கரங்களை உருட்டிக் கொண்டே எங்கும் செல்லும் பழக்கம் எங்களிடம் இருந்தது. ஏதோ வாகனங்களில் சென்று வருவது போன்ற பாவனை (Make believe). கோட்டாத் தூரில் இருக்கும் ஏரி ஒன்றைக் குறிப்பிட்டேன் அல்லவா? இந்த ஏரியில் மூன்று பகுதிகள் இருந்தன. இப்பகுதிகளில் நடுப்பகுதியும் இறுதிப்பகுதியும் ஏரிக்குத் தென்புறமாக

அமைந்திருந்தன. நடுப்பகுதியை நடு ஏரி என்றும், இறுதிப் பகுதியைச் சின்ன ஏரி என்றும் வழங்குவதுண்டு. இந்த ஏரிக் கரையில் வரிசையாக ஐந்தாறு நாவல் மரங்கள் இருந்தன. நடுத்தரமான மரங்கள் இவை. இந்த மரங்கள் ஒன்றில் ஏறி பழங்கள் பறித்துக் கொண்டிருந்தபோது காற்று பலமாக வீசிற்று. ஆடிக்காற்றல்லவா? விழுந்தால் கால் கை ஒடிந்து விடும்' என்பது உறுதி. ''மரத்தில் ஏற வேண்டாம்; உயரத் திலிருந்து கிணற்றில் குதிக்க வேண்டாம்...நீ எனக்கு ஒரே பிள்ளை. உனக்கு ஏதாவது நடந்தது என்றால் என் உயிர் இருக்காது'' என்று அடிக்கடி என் அன்னையார் சொல்லி வந்ததை மரத்தின் மேல் இருக்கும்போது நினைத்துக் கொண்டேன். தாங்க முடியாத திகில் உண்டாயிற்று. உடலும் சிறிது நடுங்கத் தொடங்கியது. காற்றோநிற்பதாகத் தெரியவில்லை. 'எப்படியாவது இறங்கி விடவேண்டும்' என்ற தீர்மானத்தில் இருந்தேன். கம்பளிப்புழு அல்லது 'மர அட்டை' நகர்வதுபோல் மரக்கிளையை வயிறு ஒட்டும் நிலையில் தழுவிக் கொண்டே பின்பக்கமாக மெதுவாக ஊர்ந்து ஓர் அரைமணி நேரத்தில் இறங்கி விட்டேன். போன உயிர் திரும்பி வந்தது போன்ற நிலை. 'இனி மரத்தில் ஏறுவ தில்லை' என்ற உறுதி எடுத்துக் கொண்டேன்.

1937-39 ஆண்டுகளில், நான் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது விடுமுறையில் பொட்டணத்தில் (நாமக்கல் தாலுக்காவில் ஒரு சிற்றூர்) என் மாமனார் வீட்டில் தங்குவதுண்டு. உண்டநேரம் போக அரட்டைக் கச்சேரி நடக்கும். 'மணியக்காரர் வீட்டுத் திண்ணை' என்று வழங்கும் ஒன்றுவிட்ட என் அண்ணார். வீட்டுத் திண்ணையில் பொழுது போக்குவதுண்டுத அப்பொழுது அந்த ஊரில் சடை ரெட்டியார் வீட்டு மூத்' மகன் நெல்லி மரத்தில் ஏறிக் கையை ஒடித்துக் கொண்டான் இரண்டு மாதம் கையில் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தான்.

இடக்கையில் மேற்பகுதி உடைந்து கூடும்போது சிறுத்து விட்டது. மரத்திலிருந்து வீழ்ந்த நிகழ்ச்சியைக் கேட்ட போதும் பின் அந்தப் பையனைப் பார்த்த போதும் பிறகு ஊனக்கையை அடிக்கடி பார்க்கும்போதும் நான் நாவல் மரத்தில் ஏறி ஊனமின்றி இறங்கி விட்டதை நினைத்துக் கொள்வேன்; மரத்திலிருந்தபோது ஏற்பட்ட திகிலும் எழும். பல்வேறு வகைகளில் படிப்பதற்குப் பணமின்றி உழலும் என்னை உடல் ஊனமின்றிக் காத்த, இன்றும் காத்து வருகின்ற, இறைவனின் கருணை உள்ளத்தை அடிக்கடி நினைத்துக் கொள்ளுகின்றேன். என் பிராரத்த கன்மமும் இவ்வாறு ஊனமுறும் நிலைக்கு என்னை உட்படுத்தாததும் இறைவனின் பெருங்கருணைத்திறமே என்பதை அடிக்கடி நினைத்துக் கொள்ளுவேன்.

**பொம்மலாட்டம்-நிழலாட்டம் :** கோட்டாத்தூரிலிருந்து 'பொம்மலாட்டம்' என்ற ஒன்றை நானாக உருவாக்கிப் பலருக்குக் காட்டி மகிழ்வித்தது இப்போது நினைவிற்கு வருகின்றது. மெல்லிய அட்டையில் காக்கை, குருவி, கிளி, குதிரை, யானை, குதிரைமீது மனிதன், யானைமீது மனிதன்...என்றெல்லாம் படங்களை வரைந்து அப்படங்களை வெட்டி எடுப்பேன். இரண்டு மூங்கில் டப்பைகளை ஓர் ஆணி யால் நடுவில் பொருத்தி ஆங்கில எழுத்து X (எக்ஸ்) போல் ஆக்கிக் கொள்வேன். டப்பையின்மேற்பகுதிகள் இரண்டிலும் சிறிய பிளவுகளை உண்டாக்கி அவற்றில் இந்தப் படங்களைப் பொருத்துவேன். என் தாயாரின் கிழிந்த வெள்ளைச் சேலையைத் திரையாக அமைத்துக் கொள்வேன். திரையின் உட்புறத்தில் ஓர் அரிக்கேன் விளக்கை வைத்துக் கொண்டு டப்பைக் குச்சிகளின் பிளவுகளில் வெட்டி எடுத்த அட்டைப் படங்களைப் பொருத்தி அவற்றின் நிழல் திரையில் படுமாறு அமைப்பேன். திரைக்கு வெளியிலிருந்து பார்ப்பவர்கள் படங்களின் நிழலைக் காண்பார்கள். டப்பைப்பிளவொன்றில்

காக்கை வடிவ அட்டையையும் மற்றொன்றில் குருவி வடிவ அட்டையையும் பொருத்துவேன். டப்பைகளின் அடிப் பகுதிகளை இரண்டு கைகளாலும் அசைத்தால் காக்கையின் நிழலும் குருவியின் நிழலும் எதிர்நோக்கி நகரும். ''காக்கையும் குருவியும் சண்டையிடுகின்றதைப் பாருங்கள்'' என்பேன். இப்படியே யானைமேல் மனிதனை யும், குதிரைமேல் மனிதனையும் கொண்ட அட்டைவடிவங் களைப் பொருத்தி அசைத்து யானை வீரனும் குதிரை வீரனும் போரிட்டுக் கொள்கின்றதைப் பாருங்கள்'' என்பேன். திரைக்கு வெளியில் இருப்பவர்கள் இவற்றைக் கண்டு மகிழ்வார்கள்.

என் வகுப்புத் தோழர்களும் கீழ்வகுப்புகளில் படிக்கும் சிறுவர்களும் இந்தக் காட்சிகளைப் பார்ப்பதற்கு என்வீட்டில் வந்து கூடுவார்கள், என் அன்னையார் அக்கம்பக்கத்துப் பெண்களையும் பாட்டிமார்களையும் கூட்டிவந்து இந்த 'ஊமைப் படக்காட்சிகளைக' காணச் செய்வார்கள். 'தன் மகன் பெரிய படக்காட்சியின் இயக்குநர்' என்ற பெருமித உணர்ச்சி அவர்களிடம் ஏற்படும். பாட்டிமார்களும் பெண்களும், ''காமு, உன் பையனின் மூளையே மூளை. இந்தச் சிறுவயதில் என்னென்னவோ செய்கின்றானே'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டு பிரிவார்கள்.

III. துறையூரில்—உயர்நிலைத் தொடக்கப் பள்ளி வாழ்வில்



## 21. உயர்கல்விக்கு விடிவெள்ளி

என் வாழ்க்கையில் விடிவெள்ளி தோன்றத் தொடங்கியது. என் அண்ணாரும் தன் மகன் கணபதியை உயர் நிலைப்பள்ளிக்கு அனுப்ப முடிவு செய்தார். என் அன்னையாருக்கு அளவற்ற மகிழ்ச்சி. என்னிடமும் புதியதோர் உற்சாகம் தோன்றியது. என்னையும் கணபதியையும், முசிறியிலிருந்த கழக உயர்நிலைப் பள்ளியில் (District Board Hish School) சேர்க்கும் பொறுப்பை எங்கள் ஆசிரியர் வி. கே. அரங்கநாத அய்யர் ஏற்றுக்கொண்டார். 1930 ஆகஸ்டு மாதத்தில் ஒருநாள் என்னையும் கணபதியையும் முசிறிக்கு இட்டுச் சென்றார்.

வசிட்டரிடம், கல்விகற்ற இராம லக்குமணர்களை விசுவாமித்திரர் தாம் செய்ய இருக்கும் வேள்விக்கு அசுரர்கள் குந்தகம் விளைவிக்காதிருக்கும்பொருட்டுக் காவலுக்காக இட்டுச் சென்றார் என்பதைக் கம்பராமாயணத்தால் அறிகின்றோம். பள்ளிப்பிள்ளையாக இருந்த இராமனின் வாழ்க்கையில் ஈடுபட வாய்ப்பளிக்கின்றார் விசுவாமித்திரர். வசிட்டரிடம் ஏட்டுப்படிப்பாகப் பயின்றவற்றை வாழ்க்கை

யநுபவத்தில் காட்ட இராமனுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. வசிட்டரிடமிருந்து பெறாத ஒரு சில அரிய விஞ்சைகளையும் விசுவாமித்திரரிடமிருந்து பெறுகின்றான் இராமன். இவ்வாறு பலவற்றைப் பெறப் போகின்றார்கள் இராமலக்குமணர்கள் என்பதை,

> பெய்யு மாரியால் பெருகு வெள்ளம்போல்
> மொய்கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்
> ஐய! நின் மகற்கு அளவில் விஞ்சைவந்(து)
> எய்து காலம் இன்று எதிர்ந்ததாம்[1]

[பெருகும் - அதிகரிக்கும்; போய் - சென்று; வேலை - கடல்; முடுகும் - விரைந்து செல்லும்; ஆறுபோல - விதம் போல்; விஞ்சை - வித்தை; எதிர்ந்தது - நேர்ந்தது.]

என்று வசிட்டன் தசரதனிடம் கூறுவதைக் காண்கின்றோம். இராமாயணத்தில் இராமலக்குமணர்களை விசுவாமித்திரரே வந்து கூட்டிச் செல்லுகின்றார். எங்கள் வாழ்வில் வசிட்டரே இராமலக்குமணர்களை விசுவாமித்திரரிடம் கூட்டிச் செல்வதுபோல் எங்களை வி. கே. அரங்கநாத அய்யர் முசிறிக்கு இட்டுச் செல்லுகின்றார். தாயை இழந்த கணபதியை மகிழ்ச்சியுடன் தந்தை வாழ்த்தி அனுப்பி வைக்கின்றார்; தந்தையை இழந்த என்னை என் அன்னை மகிழ்ச்சியுடன் ஆசிகூறி அனுப்புகின்றார்.

நாங்கள் முசிறிக்குச் சென்ற போது உயர்நிலைப் பள்ளி முசிறிவட்ட அலுவலகத்திற்கு எதிரிலுள்ள அய்யம்பாளைய தனவந்தர் பிள்ளையொருவருக்குச் சொந்தமான கட்டடத்தில் இருந்தது. 'செல்லையா' என்று அன்புடன் அழைக்கப் பெறும் அரங்கசாமி அய்யங்கார் அப்போது தலைமையாசிரியர்; "கே.ஆர்." என்று எல்லோருக்கும் நன்கு தெரிந்த கே. இராமச்சந்திர அய்யர் முதல் உதவி ஆசிரியர். இவர்

1. பால. கையடை - 15

தெலுங்கு பிராமணர். ஆயினும், இவர்தான் உண்மையில் (de facto) தலைமையாசிரியராகப் பணியாற்றினார். கே. இராமசந்திர அய்யர்தான் மாணாக்கர்களைச் சேர்த்தல் குற்றம் புரிகின்ற மாணாக்கர்களைச் சமாளித்தல் போன்ற செயல்களில் தலையிட்டுப் பள்ளியைச் சிறந்த பள்ளியாகத் திகழச் செய்வதில் பெரும்பங்கு கொண்டிருந்தார்.

நாங்கள் சேர்வதற்குச் சென்றிருந்த காலத்தில் பிள்ளைகளைச் சேர்க்கும் பணி முற்றுப் பெற்றுப் பள்ளிப் பாடங்கள் வேகமாகக் கற்பிக்கப்பெற்று வந்தன. வி.கே. அரங்கநாத அய்யர் எங்களைத் தலைமையாசிரியர் அறைக்கு இட்டுச் சென்றபோது கே. இராமச்சந்திரய்யர் அங்கு அமர்ந்திருந்தார். இருவரும் ஏதோ நிர்வாகப் பிரச்சினைகளைப் பற்றி கலந்து ஆய்ந்து கொண்டிருந்தனர். "ஆகஸ்டு கடைசியில் வருகின்றீர்கள்; ஜுலை 15 தேதியிலேயே மாணாக்கர்களைச் சேர்க்கும் வேலை முடிந்தது. அடுத்த ஆண்டில் ஜுன் 10 தேதிக்குள் வந்து விடுங்கள்" என்று கே. இராமச்சந்திர அய்யரே முடிவு தெரிவித்து விட்டார். இடையில் என்னை நோக்கி, "பையா, .1 ஐ .1 ஆல் பெருக்கினால் என்ன விடை?" என்று வினவினார். நான் ".1" தான் என்றேன். உடனே "இப்படித்தான் கணக்கிலும் ஆங்கிலத்திலும் அடிப்படை அறிவின்றி நேராக நான்காம் படிவத்தில் சேர்க்க வேண்டும் என்று வருகின்றார்கள். ஒரே 'கழுத்தறுப்பு'" என்று கிராமத்திலிருந்து மாணாக்கர்களைச் சேர்ப்பதற்கு வரும் ஆசிரியர்களைச் சலித்துக் கொண்டார். பிறகு "அடுத்த ஆண்டு வாருங்கள்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். எனக்கோ " .1 " என்ற விடை சரிதானே என்று மனத்தில் உறுத்திக் கொண்டிருந்தது. வெளியில் வந்ததும், "உன் விடை தவறு; .01 என்று சொல்லியிருக்க வேண்டும்" என்று விளக்கினார் வி.கே. அரங்கநாத அய்யர்.

எனக்கோ மிக வருத்தம். ஊருக்கு எப்படிப் போவது? "சிலர் கிண்டல் செய்வார்களே" என்ற கௌரவப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டேன். "எங்காவது, எப்படியாவது சேர்ந்து விட வேண்டும்." என்று மனம் உறுத்திக் கொண்டிருந்தது. என்னுடைய "துடிப்பை" நன்கு அறிந்து கொண்டார் அரங்கநாத அய்யர். "ஏதாவது வழிகாண்போம்" என்று எங்கட்கு ஆறுதல் தெரிவித்தார். பேருந்து கிடைத்ததால் பகல் 2 மணிக்குள் துறையூர் வந்து விட்டோம். அந்தக் காலத்தில் ஒரே ஒரு பேருந்துதான் நான்குமுறை துறையூருக்கும் முசிறிக்குமாக ஓடிக் கொண்டிருந்தது சரியாக. 2½ மணிக்கு பெருநிலக்கிழவர் உயர்நிலைத் தொடக்க பள்ளிக்கு எங்களை இட்டுச் சென்றார் அரங்கநாத அய்யர். அப்போது அங்குத் தலைமையாசிரியாக இருந்தவர் E.B. நாகரத்தினம் அய்யர்; சிறந்த நிர்வாகி என்ற பேரும் புகழும் நிறைந்தவர். அவர் சேர்க்கும் பொறுப்பை A. இராமசாமி அய்யர் என்ற இரண்டாவது உதவி ஆசிரியரிடம் விட்டு விட்டார். இராமசாமி அய்யர் ஆங்கிலத்திலும் கணக்கிலும் வாய்மொழித்தேர்வுகள் வைத்தார். "ஏழாவது வகுப்பில் அவசியம் சேர்த்துக் கொள்ளலாம்; எட்டாவது வகுப்பில் சேர்த்தால் கஷ்டப்படுவார்கள்" என்று சொல்லிவிட்டார். இராமசாமி அய்யர் மகா சாது; புன்முறுவலுடன் இனிமையாகப் பேசுபவர். அரங்கநாத அய்யர் அவரை வற்புறுத்தி "எட்டாவது வகுப்பில் சேர்த்துக் கொள்ளுங்கள்; அறிவுக் குறைவாக இருந்தாலும் சமாளிக்க ஏற்பாடு செய்வேன்" என்று உறுதியளித்து எட்டாவது வகுப்பில் எங்கள் இருவரையும் சேர்த்துக் கொள்ள ஒப்பவைத்தார். நாங்கள் இருவரும் எட்டாவது வகுப்பில் சேர்ந்து விட்டோம்.

ஒன்றிரண்டு நாட்களில் பெட்டி படுக்கையுடன் வருவதாகச் சொல்லி விடைபெற்றுக் கொண்டார். வி.கே. அரங்கநாதய்யர். மிக்க மகிழ்ச்சியுடன் ஊர் திரும்பினோம்.

உணவுக்கும் தங்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமே என்ற பிரச்சினை எழுந்தது. சுமார் ஒரு கல் தொலைவி லுள்ள சுரத்தூர் என்ற ஊரிலிருந்து தினமும் போய் வர முடிவு எடுக்கப் பெற்றது. கோட்டாத்தூரிலிருந்து சுரத்தூரில் திருமணமாகி இருந்த நல்லம்மாள் வீட்டில் கணபதி உணவு கொள்ளவும், எனக்கு என்தாய் மாமன் வழியில் ஒன்று விட்ட மாமன் முறையில் உறவுள்ள தொலை யானத்தம் அம்மாள் வீட்டில் நான் உணவு கொள்ளவும் ஏற் பாடாயிற்று. அப்போது என் மாமன் இலங்கையில் ஏதோ வேலை பார்த்து வந்தார். தொலையானத்தம்மாள் மட்டிலும் மூன்று பெண் மகவுகளை வைத்துக் கொண்டு கஷ்டமாகக் காலம் கழித்து வந்தார். தொலையானத்தம்மாளும், நல்லம் மாளும் தினந்தோறும் காலையில் தயிர், மோர் எடுத்துச் சென்று துறையூரில் விற்று வந்தார்கள். வழக்கமாகச் சிலர் வீட்டில் தந்து வேலையை முடித்துக் கொள்வார்கள். இருவரும் தத்தம் வீட்டில் எங்கட்குக் காலையில் பழஞ்சோறு இட்டு கையில் கட்டமுது தந்து அனுப்பி விட்டுத் தாங்களும் தயிர் மோர் பாத்திரங்களைக் கூடையில் வைத்துச் சுமந்து கொண்டு எங்களுடன் கிளம்பிவிடுவார்கள்.

அரையாண்டுத் தேர்வு வரையில் சுரத்தூரில்தான் இருந் தோம். செப்டம்பர், அக்டோபரில் சரியான மழை. சோளக் காட்டின் குறுக்கே ஒட்டையடிப் பாதையில் களிமண்ணா லாகிய சேற்றில் சென்று வந்து கொண்டிருந்தோம். கையிலிருந்த மதிய உணவை—கட்டமுதை—அருகிலிருந்த தெப்பகுளத்துத்திட்டில் அமர்ந்து உட்கொள்வோம். மிகச் சிரமமாக இருந்தது. படிப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை. காலை நேரம் நடையில் கழிந்தது. மாலையில் திரும்பிய வுடன் சோர்வு எங்களை ஆட்கொள்ளும். இரவில் படிக்க முடியாமல் தூங்கிவிடுவோம். பள்ளியில் தரப்பெறும் வீட்டு வேலைகளை (Home - work) துறையூர்த் தெப்பகுளத்துத்

திட்டில்தான் செய்து முடிப்போம். சிறிது சிறிதாக படிப்பில் ''சூடுபிடித்தது''; மிக்க அக்கறையுடன் பயின்றோம். வகுப்பு ஆசிரியர்கள் ஒன்றிரண்டு மாதங்களில் படிப்பில் எங்கள் முன்னேற்றத்தைக் கண்டு மெச்சினார்கள். மூன்று மாதங் களில் வகுப்பில் 'இரண்டாவது மாணாக்கன்' என்ற பெய ரெடுத்தேன். சாம்பமூர்த்தி என்ற தேவாங்கச் சிறுவன்தான் முதல் மாணாக்கனாகத் திகழ்ந்தான். உள்ளூர்ப்படிப்பு; வீட்டில் நல்ல வசதி. கீழிருந்து தொடர்ந்து முறையாகப் படித்து வந்ததால் அடிப்படை பலமாக இருந்தது. சின்னராசு, வாசுதேவன், வேங்கடாசலம் (பெயர் நினைவில்லை) இவர்கள் நெருங்கிய நண்பர்களானார்கள். சாம்பமூர்த்தியும் முத்துசாமியும் ஒன்றுவிட்ட சகோதரர்கள். இவர்களும் நண்பர்களாயினர். எனக்கும் சாம்பமூர்த்திக்கும் படிப்பில் போட்டி இருந்து கொண்டே இருந்தது. நாங்கள் விரைவில் முன்னேறியதைக் கண்டு வகுப்பு மாணாக்கர்கள் அனை வருமே வியப்புற்றனர்.

ஊரை விட்டுப் படிப்பிற்காக வெளியூர் வந்ததும் எங்கள் பழக்க வழக்கங்களில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. அதிகாலையில் ஐந்து, அல்லது ஐந்தரை மணிக்குத் துயிலெழும் பழக்கமும், காலைக்கடன் கழிப்பதற்கு வெளியில் சென்று வருவதும், கருவேல் குச்சியைக் கொண்டு பல்துலக்கு வதும், காலையில் நீராடுவதுமான பழக்கங்கள் ஏற்பட்டன. கோட்டாத்தூரிலிருந்த வரையில் பகல் பன்னிரண்டு மணிக்கு தான் நீராடுவோம்; நினைத்தபடி கிணற்றில் குதித்து நீந்து வோம். இந்தப் பழக்கங்கள் எல்லாம் குறைந்தன; குளிப்பதில் ஓர் ஒழுங்கு முறை ஏற்பட்டது. சுரத்தூரில் இருக்கும் போதே இந்த ஒழுங்கு முறை நடை முறைக்கு வந்து விட்டது.

**வாரவிடுமுறையில் சொந்தஊர்;** சுரத்தூரிலிருந்தபோது வாரந்தோறும் சனி, ஞாயிறில் கோட்டத்தூர் வந்து கொண் டிருந்தோம். மழைக்காலத்திலும் கூட எங்கள் பயணம்

நிற்பதில்லை. வழியில் ஒரு குட்டை; முழங்கால் அளவுக்கு மேல் உள்ள தண்ணீரில் நடந்து குட்டையைக் கடந்தாக வேண்டும். மாட்டுவண்டியும் இந்தக் குட்டையில் நுழைந்து தான் வெளியில் வர வேண்டும். வாரந்தோறும் சனிக்கிழமை காலையில் ஐந்துமைல் நடை: ஞாயிற்றுக் கிழமை மாலையில் ஐந்து மைல் நடை. இப்படியாக அரையாண்டுத்தேர்வுவரை (டிசம்பர்) எங்கள் காலம் கழிந்தது. பெரும்பாலான நேரம் வீணடிக்கப்பெற்றது. அந்தக் காலத்தில் படிப்பில் வழி காட்டுவதற்கு வீட்டில் யாரும் இல்லை. தனிக்காட்டு ராஜா போல் நாங்கள் இட்டதுதான் சட்டம். இறைவன் அருள் இருந்ததனால், படிப்பில் எங்கட்கு அக்கறை இருந்தது படிப்பில் கண்ணுங்கருத்துமாக இருந்தோம். வீணடிக்கும் காலத்தைப் படிப்பில் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் முகிழ்க்கத் தொடங்கியது. துறையூரிலேயே தங்கிப்படித்தால் தான் காலம் பொன்னாகவும், கடமைகண்ணாகவும் அமையும் என்ற முடிவுக்கு வந்தோம். டிசம்பரில் அரை யாண்டுத் தேர்வு தொடங்குவதற்கு முன்பே துறையூருக்கு வந்து சேர்ந்தோம்.

சுரத்தூரிலிருந்து கோட்டத்தூர் வரும்போது சில சமயம் என் மாமன் மகள் செல்ல பாப்பாவைக் கோட்டாத்தூருக்குக் கூட்டிவருவதுண்டு. என் அன்னையாரும் இவள் அன்னை யாரும் இவளை எனக்குத் திருமணம் முடிக்க வேண்டும் என்று பேசிக்கொள்வதைக் கேட்டதுண்டு. இவளுடன் சிறு பிள்ளை போல் விளையாடி மகிழ்வேன். அப்போது எனக்கு வயது பன்னிரண்டு இருக்கும்; அவளுக்கு வயது எட்டு இருக்க லாம். திருமணப் பேச்சு எடுக்கும் போது எனக்கு எந்தவித மன வேறுபாடும் ஏற்படுவதில்லை. அவள்தான் நாணிக் கோணி தன் மன நிலையைக் காட்டுவாள். இவள் எனக்குத் திருமணமாகப் பேசப் பெற்ற மூன்றாவது செல்லபாப்பா. இவள் எரகுடியில் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டு நன்னிலையி

விருக்கின்றாள். நான் துறையூரில் பணியாற்றிய போது ஒரு முறை ஆலத்துடையாம் பட்டி செல்லுங்கால் இவள் வீடு சென்று காஃபி அருந்தியதாக நினைவு. அதன் பிறகு முப்பத்தைந்து ஆண்டுகளாக இவளைச் சந்திக்கவே இல்லை.

குமிழி—22

## 22. சின்ன மடத்தில் புகலிடம்

துறையூரில் எங்களைக் கண்காணிப்பதற்கு மூத்தோர்கள் ஒருவரும் இலர். **நல்லிப் பாளையம் ரெட்டியார் ஒட்டல்** என்ற ஓர் உணவு விடுதி அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்தது. இங்குச் சிற்றுண்டி இல்லை. சாப்பாடு மட்டிலும் தான் உண்டு. ஒரு சிறிய கூரைக் கட்டடத்தில் இந்த உணவு விடுதி இருந்தது. கூரைக்கட்டடத்தின் வெளியில் மூன்றடி அகலமுள்ள மண் திண்ணை இருந்தது. மூங்கில் தட்டியால் மறைக்கப் பெற்றிருந்த திண்ணையில்தான் உள்ளே உண்பவர்கள் போக ஏனையோர் காத்திருக்க வேண்டும். உள்ளேயும் ஒரு பெஞ்சு இருந்தது. அதில் பெரியவர்கள் உட்கார்ந்து காத்திருப்பர். ஒரு சாப்பாடு அக்காலத்தில் $2\frac{1}{2}$ அணா, 3 அணாவுக்குக் கிடைத்தது. (15 காசு; 18 காசு) மாதத் தவணையில் சாப்பிடும் எங்கட்கு மாதம் ஆறு ரூபாய்க்குச் சாப்பாட்டு போட்டார்கள். காலையில் பழையது தான். நீரிலிருந்து சோற்றைப் பிழிந்து வைத்து முதல்நாள் மிஞ்சிய குழம்பு, ரசம் விடுவார்கள்; தேவைப்பட்டால் மோரும் தருவார்கள். பகல் $12\frac{1}{2}$ மணி, இரவு $7\frac{1}{2}$ மணிக்கு முழுச் சாப்பாடு உண்டு. இன்றைய நிலையுடன் அந்நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால் மலிவாகத் தோன்றும். ஆனால் அன்றைய பொருளாதார நிலையில் நாட்டுப் புறத்திலிருந்து வந்த எங்கட்கு அது கிராக்கியாகத்தான் இருந்தது.

துறையூரின் வடபுறத்தில் தெப்பகுளத்துக்கு அருகில் கீழ்த் திசையில் இருக்கும் சின்ன மடத்தில்தான் தங்கு வதற்கு இடம் ஏற்பாடு செய்யப்பெற்றது. மடத்திலிருந்த திரு. பெருமாள் அய்யா என்பவர் எங்கட்கு நல்ல வசதிகள் செய்து தந்தார். நூல்கள் வைத்துக் கொள்வதற்கு ஓர் அலமாரி தந்தார். பாதுகாப்பாக நூல்களை அதில் வைத்துப் பூட்டிக் கொள்ளலாம். பெரிய கட்டடம்; சிறிய பல அறை களைத் தவிர பெரிய மண்டபம் (Hall) இருந்தது. மழைக் காலத்தில் இந்த மண்டபத்தில் படுத்துக் கொள்ளலாம். வெயில் காலத்தில் மாடியில் தங்கலாம்; மொட்டை மாடி தான். நல்ல காற்றோட்ட வசதி. அமைதியாகப் படிப்பதற்கு நல்ல இடமாக அமைந்தது இறைவன் திருவருள் என்பதை இப்போது நினைந்து பார்க்க முடிகின்றது. மடத்துக்கருகில் பெரிய ஏரி ஒன்று உண்டு. அக்காலத்தில் ஆறுமாதம் அதில் நீர் இருக்கும். ஏரிக் கரையின் வெளிப் புறமும், கடைவழிந்து செல்லும் ஓடையும் தான் கழிப்பிடங்கள் போல் பயன் பட்டன. ஊரின் வடபகுதியிலிருப்பவர்கள் இவற்றைப் பயன்படுத்தினர். தென் பகுதியிலிருப்பவர்கட்குச் சின்ன ஏரி காலைக் கடன் கழிக்க உதவியது. மேற்கு கிழக்குப் பகுதியி லிருப்பவர்கள் புன்செய் விளை நிலத்தை இவற்றிற்குப் பயன் படுத்தினர்.

அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சுமார் அரை ஃபர்லாங் தொலைவில் ஏரிக்கரை யருகிலிருக்கும் கிணற்றில்தான் பெரும்பாலான மக்கள் நீராடுவார்கள். கடைத்தெருவில் பணியாற்றுபவர்கள் வருவதற்கு முன் நாங்கள் நீராடித் துணிகளைத் துவைத்து முடித்து விடுவோம். துறையூரிலிருந்த வரையில் சனிக்கிழமை நடைபெறும் எண்ணெய்க் குளியல் கைவிடப்பெற்றது. அதற்குச் சரியான வசதிகள் இல்லை. காலை ஏழுமணிக்குள் இந்த வேலை முடிந்து விடும்.

**பெரியார் வழிபாடு :** மடத்தில் இரண்டு சமாதிகள் உள்ளன. தனித்தனியான கட்டடம் அவற்றிற்கு உண்டு. அவற்றில் சிவலிங்கப் பிரதிட்டை செய்யப் பெற்றிருந்தது. பெருமாளய்யா எங்கட்குச் சில பணிகளை இட்டார். காலையில் இரண்டு சமாதிகளையும் துப்புரவு செய்ய வேண்டும். இலிங்கத்தை நீராட்ட வேண்டும். மடத்திற்குள்ளேயே ஒரு சிறு நந்தவனம் இருக்கின்றது. மரமல்லிகை, அலரிமலர், வில்வம் அங்குக் கிடைக்கும். இவற்றைக் கூடைகளில் சேகரிக்க வேண்டும். நானும் என் தம்பி கணபதியும் இந்தப் பணிகளையெல்லாம் அன்புடன் செய்தோம். பிறகு சமாதிக்கு விளக்கேற்றி மணியடித்துத் தூப தீபங்கள் காட்ட வேண்டும். இன்றுவரை நான் நல்ல நிலையிலிருப்பதற்கு சமாதியில் அடங்கிய பெரியவர்களின் ஆசி என்றே கருதுகின்றேன். பெருமாளய்யா இந்த வைதிகக் காரியங்களை எங்களிடம் ஒப்படைத்து விட்டு மடத்துச் சொத்துகளைப் பராமரிக்கும் இலெளகிகக் காரியங்களில் ஈடுபட்டு விடுவார். பெருமாளய்யா ஒரு மாணி; வெள்ளாடை புனைபவர்; காவி வாங்கிக் கொள்ளவில்லை. நாங்கள் அன்புடனும் உகப்புடனும் காரியங்களைச் செய்து வருவதைக் கண்டு உள்ளம் பூரிப்பார்; தட்டிக் கொடுத்து ஆசி கூறுவார்.

**நண்பர்கள் :** துறையூர் சின்ன மடத்தில் தங்கியிருந்த போது அந்த மடத்தருகில் குடியிருந்தவர்களுள் இரண்டு பேர் நண்பர்களானார்கள். ஒருவர் **வேணுகோபால்** என்ற உடையார். இவர் எங்களை விடப் பெரியவர். மகா சாது. கள்ளங்கபடமற்றவர். அவருக்குத் தெரிந்த அளவு சில உலக விவகாரங்களைச் சொல்வார். மடத்துப் பெருமாளய்யாவைப் பற்றி விமர்சிப்பார்; பெருமையாகத்தான் பேசுவார். இவரிடம் சில விவேக சிந்தாமணிப் பாடல்களைச் சொல்வேன்; இவர் நுணுகிக் கேட்டு மகிழ்வார். இவரிடம் சொன்ன பாடல்கள் ஒன்றிரண்டை நினைவு கூர்கின்றேன்.

கருதியநூல் கல்லாதான் மூட னாகும்;
கணக்கறிந்து பேசாதான் கசட னாகும்;
ஒருதொழிலும் இல்லாதான் முகடி யாகும்;
ஒன்றுக்கும் உதவாதான் சோம்ப னாகும்;
பெரியோர்கள் முன்னின்று மரத்தைப் போலும்
பேசாம லிருப்பவனே பேய னாகும்;

பரிவுசொலித் தழுவினவன் பசப்ப னாகும்;
பசிப்பவருக் கிட்டுண்ணான் பாவியாமே [1]

[முகடி-மூதேவி]

வேணுகோபால் பெரும்பாலும் குளத்தங்கரையில் சோம்ப னாக உட்கார்ந்திருப்பார். "ஒரு தொழிலும் இல்லாதான்... ......ஒன்றுக்கும் உதவாதான் சோம்பனாகும்" என்ற அடிகளைச்சொல்லும் போது தன்னைப் பரிசோதித்துக் கொள் வார்; தன் நிலைக்கும் வருந்துவார்.

அடியிற்கண்ட இரண்டு பாடல்களைச் சொல்லும் போது அளவற்ற மகிழ்ச்சி அடைவார்.

திருப்பதி மிதியாப் பாதம்
சிவனடி வணங்காச் சென்னி
இரப்பவர்க் கீயாக் கைகள்
இனியசொற் கேளாக் காது
புரப்பவர் தங்கள் கண்ணீர்
பொழுதரச் சாகாத் தேகம்
இருப்பினும் பயனென் காட்டில்
எரிப்பினும் இல்லை தானே.[2]

முதலடியைப் படிக்கும்போது என்னையறியாமல் ஓர் உணர்ச்சி எழும். இந்த உணர்ச்சிதான் பிற்காலத்தில் நான்

1. விவே. சிந்தா-20
2. ஷை. 28

திருப்பதியில் பதினேழு ஆண்டுகள் பணியாற்றத் துணை புரிந்தது போலும். ஏழுமலையான் திருவருள் அப்போது அடங்கிய நிலையில் இருந்திருக்க வேண்டும் எனக் கருது கின்றேன்.

இன்னொரு பாடல் வேணுகோபாலை உணர்ச்சி பொங்கச் செய்து விடும். கள்ளங்கபடமற்ற அவரது உள்ளம் தீச்செயல்களைக் கண்டாலும் அவற்றைப் பற்றிக் கேட்டாலும் வருந்தும்.

ஆரம் பூண்ட மணிமார்பா
அயோத்திக் கரசே அண்ணாகேள்
ஈரம் இருக்க மரமிருக்க
இலைகள் உதிர்ந்த வாறேது
வாரம் கொண்டு வழக்குரைத்து
மண்மேல் நின்று வலிபேசி
ஓரம் சொன்ன குடியதுபோல்
உதிர்ந்து கிடக்கும் தம்பியரே.[3]
[ஆரம்-பட்சபாதம்; ஓரம்-வஞ்சனை]

இந்தப் பாடல் அவர் மனத்தை மிகவும் தொட்டது. இவர் வீட்டருகில் வழக்குரைஞர்கள் பலர் வாழ்ந்தனர். வழக்கறிஞர் வீட்டுக்கு வரும் கட்சிக்காரர்களும் சாட்சி களும் இரவு முன் வேளையில் வேணுகோபாலிடம் பேசிக் கொண்டிருப்பதுண்டு. இப்பாடல்களின் இறுதியடிகளைச் சொல்லும் போது அவர் மனம் கொதிக்கும்.

இவர் தம்பி **கருப்பண்ணன்** நாங்கள் எட்டாவது படிக்கும் போது ஆறாவது பயின்றான். நல்ல பையன். எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்துடன் காணப் படுவான். இவன் எட்டாவது வகுப்பிற்கு மேல் பயிலவில்லை. எட்டாவது படித்து முடித்ததும் ஒரு வழக்குரைஞரிடம்

3. ஷை-94

எழுத்தர் வேலையில் சேர்ந்து கொண்டான். அக்காலத்தில் இப்பதவி துறையூரில் கிடைத்தற்கரியதாக இருந்தது நான் துறையூரில் தலைமையாசிரியனாகப் பணியாற்றியபோது இவனையும் நடேசன் என்ற மற்றொரு எழுத்தரையும் (நாங்கள் படிக்கும் போது ஏழாவது வகுப்பில் பயின்றவர்) அடிக்கடிச் சந்தித்துப் பழகுவதுண்டு.

கோட்டாத்தூரில் படிக்கும் வரையில் சட்டையோ பனியனோ அணியும் பழக்கம் இல்லை. இடுப்பு வேட்டியும் ஒரு சிறு மேலாடையும்தான் உடுத்திக் கொண்டிருப்போம். நாளடைவில் ஒருசிறு பனியன் அணியும் பழக்கம் வந்தது. துறையூருக்கு வந்த பின்னர்தான் சட்டை, பனியன் அணியும் பழக்கம் ஏற்பட்டது. மூன்று சட்டைகளைவைத்திருந்தோம். நாங்களே சோப்புபோட்டுத் துவைத்துக் கொள்வோம். மடத்தின் மாடியில் இருந்த கொடிகளில் உலர்த்திக் கொள்வோம். லாண்டரியில் துணிகளைப் போடும் பழக்கம் துறையூரிலிருந்தவரை எங்களிடம் ஏற்படவில்லை.

குமிழி—23

# 23. உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிச்சூழ்நிலை

துறையூர் பெருநிலக் கிழவர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளி அக்காலத்தில் மிகச் சிறப்பாகவும் பெரும்புகழுடனும் திகழ்ந்தது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அக்காலத்தில் திருச்சி மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகள் அதிகமாக இல்லை. முசிறி, இலால்குடி, அரியலூர், குளித்தலை இந்த நான்கு ஊர்களிலும் கழக உயர்நிலைப் பள்ளிகளும், உடையார் பாளையத்தில் ஒரு நடுநிலைப் பள்ளியும் இருந்தன. இந்த ஊர்கள் வட்டத் தலைநகர்கள், இப்பள்ளிகளும் மாவட்டக் கழக ஆட்சியின்கீழ் இருந்தன.

இவற்றைத் தவிர, மாவட்டத் தலைநகராகிய திருச்சியில் தேசிய உயர்நிலைப்பள்ளி, புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளி, பொன்னய்யா உயர்நிலைப் பள்ளி, E.R. உயர்நிலைப் பள்ளி என்ற நான்கு உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. இருப்பூர்தி திருச்சி, இலால்குடி, குளித்தலையில் உள்ள பள்ளிகளில் இரயில் போக்குவரத்து உள்ள ஊர்களிலிருந்து வரும் சிறுவர்கள் மட்டிலுமே படித்து வந்தனர்; கல்லூரிப் படிப்பிலும் இந்த ஊர்தி வசதியையே பயன்படுத்திக் கொண்டனர். பிற இடங்களில் உள்ள பள்ளிகளில் அந்தந்த ஊர்களிலுள்ள சிறுவர்களும், சுமார் மூன்று கல் தொலைவிலுள்ள ஊர்களிலுள்ள சிறுவர்களுமே உயர்நிலைப் பள்ளிக் கல்வி பெற்றனர். இதனால் துறையூரிலுள்ள பெருநிலக்கிழவர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளி ஓர் உயர்நிலைப் பள்ளிபோல் திகழ்ந்தது. துறையூர் சிறுவர்களும் அண்மையில் ஒரு கல், இரண்டு கல் தொலைவிலுள்ள ஊர்ச் சிறுவர்களும் எட்டாம் வகுப்புப் பட்டதாரிகள் ஆயினர். **இரண்டு** : இங்குப் பணியாற்றிய E.B. நாகரத்தினம் அய்யர் (தலைமையாசிரியர்), T.S. இராசகோபாலய்யர், A. இராமசாமிஅய்யர், சுப்பிரமணிய அய்யர், பெருமாள் நாயுடு (உடற்பயிற்சி ஆசிரியர்) போன்ற ஆசிரியர்கள் மிகுந்த பக்தியுடன் தம் கல்விப் பணியை ஆற்றினர். E.B. நாகரத்தினம் அய்யர் நல்ல பொன்னிறத் திருமேனி வாய்க்கப் பெற்றவர். சலவை செய்யப்பெற்ற வேட்டியாலான பஞ்சகட்சம், மார்பு திறக்கப் பெறாத முழுகோட்டு, சலவை செய்யப் பெற்ற முல்லைப் பூப்போன்ற வெண்ணிற ஆடையாலான தலைப்பாகை, சரிகை அங்கவஸ்திரம் இவற்றை அணிந்து கொண்டுதான் பள்ளிக்கு வருவார்; நெற்றியிலுள்ள கோபிசந்தனம் இவர்தம் முகத்திற்குப் பொலிவூட்டும். இந்தப் புறத்தோற்றம் பள்ளி ஒழுங்குமுறைக்குப் பெருந்துணை புரிந்தது.

T.S. இராசகோபாலய்யர், A. இராமசாமி அய்யர், சுப்பிரமணிய அய்யர் இவர்கள் பஞ்சகச்சத்துடனும் முழுக்கைச் சட்டையுடனும், அங்கவஸ்திரத்துடன்தான் பள்ளிக்கு வருவர். பெருமாள் நாயுடு மட்டிலும் தட்டாடை, அரைக்கை சட்டை, அங்கவஸ்திரம் அணிந்து வருவார். காலையில் இவருக்கு இந்தத் தோற்றம். மாலையில் அரைக் காக்கி டிராயர், அதனுள் செருகிய நிலையிலுள்ள அரைக் கைச்சட்டை இவற்றுடன் காட்சியளிப்பார். உடற்பயிற்சிக் கேற்ற உடையல்லவா? ஆடுகளத்திலும் விழாக்கள், சிறப்புக் கூட்டங்கள் நடைபெறும்போதும் மாணாக்கர்களின் ஒழுங்கு முறையைக் கண்காணிப்பதில் இவருக்கு நிகர் இவரே என்று அக்காலத்தில் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றவர். பார்ப்பதற்கும், பேசுவதற்கும் முரட்டுத்தன்மையுள்ளவர் போல் காணப் பெற்றாலும் பழகுவதற்கு மிக உயர்ந்தவ ராகத் திகழ்ந்தார். மாணாக்கர்களின் அன்புக்குப் பாத்திர மாகவும் விளங்கினார். சுருங்கக் கூறினால், புறத்தோற்றத் தில் இப்பள்ளி உயர்நிலைப்பள்ளியை ஒத்துத் திகழ்ந்தது.

பாடவேளைப்பட்டி (Time - table) நடைமுறையி லிருந்தது. பள்ளி முற்பகலிலும் பிற்பகலிலும் தொடங்கும் போது முதலில் இரண்டு நீண்ட மணியோசையும் அடுத்து இரண்டு சிறிய மணியோசையும் எழுப்பப் பெறும். ஒவ்வொரு பாடவேளையின் இறுதியிலும் பாட வேளை நிறைவு பெற்றதற்கறிகுறியாக மணியோசைகள் எழுப்பப் பெறும் மாணாக்கர்கள் அப்படியே அமர்ந்திருக்க ஆசிரியர்கள் மட்டிலும் வகுப்பு மாறிச் செல்வார்கள். E.B. நாகரத்தினம் அய்யர் ஆங்கிலமும் வரலாறும் கற்பித்தார்; இராச கோபாலய்யர் புவியியல் கற்பித்தார்; இராமசாமி அய்யர் தமிழும் கணக்கும் கற்பித்தார். ஓவியம் கற்பித்தல் பெருமாள் நாயுடுவின் பொறுப்பிலிருந்ததாக நினைவு. நாங்கள் சேர்ந்த ஒன்றிரண்டு திங்களில்

இளமையுடன் திகழ்ந்த E.B. நாகரத்தினமைய்யர் ஏதோ நோய்வாய்ப்பட்டு இறைவன் திருவடி நிழலை அடைந்தார். பள்ளிமுழுவதும்—ஆசிரியர்களும் மாணாக்கர்களும்—துக்கக் கடலில் ஆழ்ந்தது. ஊர் முழுவதும் இந்தத் துக்க அலை பரவியது. தலைமையாசிரியர் இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பாக இருந்ததை எல்லோருமே உணர்ந்தனர். அவர்தம் மிடுக்கான நடை, எல்லாவற்றிலும் கண்டிப்பு, அதே சமயத்தில் அன்பு, நெகிழ்ந்த பார்வை, நல்ல மாணாக்ர்களைத் தட்டி கொடுக்கும் பாங்கு—இவை இன்றும் என் உள்ளத்தில் பசுமையாகவே உள்ளன.

T. S. இராசகோபாலய்யர் தலைமையாசிரியராக உயர்த்தப் பெற்றார். அவர் ஆங்கிலம், புவியியல் கற்பிக்கும் பொறுப்பை ஏற்றார். யாரோ ஒரு புதிய ஆசிரியர்—பட்டதாரி! ஆனால் பயிற்சி பெறாதவர்—நியமனம் பெற்று எங்கள் வகுப்பிற்கு வரலாறு கற்பித்தார். தட்டாடை, திறந்த கோட்டு அணிந்து, சற்றுக் கூன்முதுகுடன் தோற்றம் அளித்தார். குறைந்தது மூன்று திங்களே இவர் கற்பித்தமையால், இந்தக் குறுகிய காலத்தில் இவரைப் பற்றிய பண்புகளை அதிகமாக நினைவு கூர இயலவில்லை. தலைமையாசிரியர் பதவி ஏற்றதும் இராசகோபாலய்யரிடம் மார்பு திறவாத கோட்டு இவர் திருமேனியிலும், வெள்ளைத் தலைப்பாகை இவர் திருமுடியிலும் ஏறின. பொன்னிற மேனியும், நெற்றியில் திருநீறும், சந்தனப் பொட்டும் இவருக்கு மேலும் பொலிவினை அளித்தன.

எல்லா ஆசிரியர்கள் கற்பித்த தனிப்பண்பு முதலியவற்றை இப்போது நினைவு கூர முடியவில்லை. இராமசாமி அய்யர் புன்முறுவலுடன் கற்பித்தமை இன்றும் நினைந்து பார்க்க முடிகின்றது. மாணாக்கர்கள் ஏதாவது சிறு குறும்பு, செய்தால். 'உட்காரப்பா, பிரகஸ்பதி' என்று அடிக்கடி இவர் வாயில் பிறப்பது இன்றும் என்நினைவில் பசுமையாக

உள்ளது. சிறுவர்களின் போக்கு அறிந்து, மனநிலையை நன்கு தெரிந்து வாழ்க்கையுடன் இணைத்து இலாப-நட்டம், வட்டி; முதலிய கணக்குகளை மிக அற்புதமாகக் கற்பித்ததை இன்றும் நினைந்து பார்க்க முடிகின்றது. இவர் தமிழ் கற்பித்ததை இன்றும் மானசீகமாகப் பார்க்கின்றேன். இவர் கற்பித்த திருவாசகப் பாடல்கள் இப்போது நினைவுக்கு வருகின்றன. பாடநூலில் 'தோத்திரப் பகுதி' என்ற பகுதியில் வருவன இவை. ஒரு பாடல்:

*மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து*
*உன்விரைஆர் கழற்கென்*
*கைதான் தலைவைத்துக் கண்ணீர்*
*ததும்பி வெதும்பியுள்ளம்*
*பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி*
*சயசய போற்றியென்னும்*
*கைதான் நெகிழ விடேன்உடை*
*யாய்என்னைக் கண்டுகொள்ளே.*[5]

A. இராமசாமி அய்யர் ஒரு பெரிய புலவர் அல்லர். சிறந்த பக்திமான். பாடலைப் பலமுறை உள்ளம் உருகப் பாடுவார். இவர் ஓர் இசைக் கலைஞருமல்லர். எனினும் சிறிதும் நாணமின்றி அவருக்கே உரிய இயல்பான குரலில் பாடுவார். பிறகு மெய் அரும்பல்—உடல் புளகித்தல்; விதிர்விதிர்த்தல்—நடுங்குதல்; விரை—மணம்; விரைஆர் கழல்—மணம் நிறைந்த திருவடி; கழல் என்பது வீரர்சதங்கை, அதை அணிந்திருக்கும் திருவடி ஈண்டு குறிப்பிடப் பெறுகின்றது. என்று சொற்பொருள் கூறுவார். வெதும்புதல்—இளஞ்சூடு ஆதல்; சயசய - ஜயஜய; வெற்றிக்குமேல் வெற்றி; கை - ஒழுக்கம்; நெகிழ விடேன் - தளரவிடேன்—இவ்வாறு சொற்பொருள்

5. திருவா. திருச்சத. 1

களை விளக்குவார்; இவற்றைக் கரும்பலகையிலும்எழுதுவார் —நாங்கள் குறிப்பேடுகளில் குறித்துக் கொள்வதற்கு,

பிறகு பொழிப்புரைபோல் ஒரு சிறு சொற்பொழிவே நிகழ்த்துவார்: "நறுமணம் நிறைந்த நின் திருவடியை நாடுகின்ற எனக்கு உடல் புளகாங்கித மடைகின்றது; உணர்ச்சியின் வேகத்தால் அது நடுநடுங்குகின்றது. என்கைகள் இரண்டையும் தலையில் வைத்து உன்னை வணங்குகின்றேன். கண்ணீர் பொங்கிவருகின்றது. உள்ளத்தில் இளஞ்சூடு தட்டு கின்றது. அந்த உள்ளத்தை உனக்கே சோயில் ஆக்கியதால் நிலையற்ற உலக வியவகாரங்கள் எல்லாம் அதை விட்டுப் பறந்தோடுகின்றன. நாவால் உன்னைப் போற்றுகின்றேன். 'உனது திருவருள் விலாசத்துக்கு மேலும் மேலும், வெற்றி யுண்டாகுக' என்று வாழ்த்துகின்றேன். ஈசனே, உன்னை நாடியிருப்பதே சன்மார்க்கமாகின்றது. அந்தச் சன்மார்க்கத் தினின்றும் நான் ஒரு பொழுதும் வழுவேன். நான் உடைமை, நீ என்னை உடையவன். மேலும் நீ எல்லாம் அறிந்தவன், அதாவது ஓதாது முற்றும் உணர்ந்தவன். ஆதலால் நான் எவ்வளவு தூரம் பண் பட்டு இருக்கின்றேன் என்பதை நீயே நன்கு அறிவாய். உனது திருவுளத்துக்கு ஒத்து ஒழுகுவது நான் கடைப்பிடிக்கும் நல்லொழுக்க மாகும்." இதன்பிறகு பாடலை அவர் உள்ளம் நிறைவு பெறும் வரை ஓரிருமுறை பாடி மகிழ்வார். இதனால் எங்கள் உள்ளமும் நிறைவுபெறும்; மகிழ்வடையும்.

மற்றொரு பாடல் ;

இரும்புதரு மனத்தேனை
    ஈர்த்து ஈர்த்துஎன் என்புருக்கி
கரும்புதரு சுவைஎனக்குக்
    காட்டினை உன் கழல்இணைகள்

ஒருங்குதிரை உலவுசடை
உடையானே நரிகள்எல்லாம்
பெருங்குதிரை ஆக்கியஆறு
அன்றேஉன் பேர்அருளே.[4]

இந்தப் பாடலையும் உள்ளம் உருகப் பாடுவார். 'இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் என் புருக்கி' என்ற அடிகளைப் பாடும்போது தன்னை மறந்த நிலையில் பாடுவார். மனம் இரும்பாக உருவகப் படுத்தியிருப்பதை எடுத்துக் காட்டுவார். நல்லவேளை மனதைக் கல்லாகச் செய்யாமல் இரும்பாகச் செய்தானே என்று கூறி மெய் மறந்து நிற்பார். சிவபெருமானாகிய காந்தம் மனம் கல்லாக இருந்தால் எப்படி ஈர்க்க முடியும்? என்று பாநயத்தையும் புலப்படுத்துவதுடன் கருத்து நயத்தையும் விளக்குவார்-கழலிணைகள் கரும்பிற்கு உருவகமாக அமைந் திருக்கும் நயத்தை எடுத்துக் காட்டுவார். இரும்பு மனத் திற்கு கரும்பின் சுவையைக் காட்டிய அற்புதத்தை விளக்கு வார். 'ஒருங்குதிரை உலவு சடை' என்ற தொடரை விளக்கும்போது சிவபெருமான் தலையில் கங்கா தேவி உலவுகின்றதாக இருப்பதைப் புலப்படுத்துவார். மதுரையில் சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கின கதையை விரிவாகக் கூறி எங்கள் மனத்தைக் கதையில் ஈர்ப்பார் வகுப்பில் சிதறி இருக்கும் மனங்களையும் ஈர்த்துப் பாடத்தின்மீது கவனத்தைத் திருப்புவார். தானே சுவைக்குன்றாக மாறி விடுவதால், சுவை அருவி எங்கள் மனத்தில் வந்து பாயும்; வெள்ளம் இடும். இப்படியாக அவர் கற்பித்ததை இன்றும் நினைவு கூர முடிகின்றது.

துறையூர் மேட்டுத் தெருவில் இவர் குடியிருந்த அந்தக் காலத்தில் அடிக்கடி நான் இவரைப் பார்ப்பதுண்டு. "வா, சுப்பு" என்று உள்ளங் குளிர அழைத்து உரையாடுவார்.

---

4. திருவா. திருஏசறவு-1.

நன்றாகப் படிக்குமாறு அறவுரை பகர்வார். பின்னர் நான் புதிதாகத் தொடங்கப்பெற்ற பெருநிலக் கிழவர் உயர் நிலைப் பள்ளியில் தலைமையாசிரியனாக இருந்தபோது—1944 என்று நினைக்கின்றேன்—இவர் காலகதி அடைந்தார். தந்தையை இழந்தாற்போன்ற உணர்வுடன் இவர் இல்லம் சென்று துக்கம் விசாரித்துத் திரும்பினேன்.

'தமிழ் பயிற்றும் முறை' என்ற என் பெருநூலின் மூன்றாம் பதிப்பு 1980இல் வெளிவந்தது. அதில் 'தாய் மொழியாசிரியர்கள்' என்ற தலைப்பில் ஓர் இயலைப் (இயல்-17) புதிதாகச் சேர்த்துள்ளேன். அதிலுள்ள ஒரு கருத்தினை ஈண்டுத் திரும்பக் கூறுதல் பொருத்தமாகின்றது.

> "ஏனைய பாட ஆசிரியர்கள் மாணாக்கர்களின் அறிவைப் பெருக்குவதற்குக் காரணமாக இருக்க, இலக்கியம் கற்பிக்கும் தமிழ்மொழியாசிரியர்கள் இவர் தம் உள்ளத்தைப் பண்படுத்துபவர்களாக அமைகின்றனர். இஃது இவர்தம் பெரும் பேறாகும். இறைவனின் திருவுள்ளமுமாகும். இதனைத் தாய்மொழி யாசிரியர்கள் சிந்தித்துத் தமது கடமைகளை—பொறுப்புகளை—உணர்வார்களாக."

இந்தக் கருத்தினைக் கொண்டவர் A. இராமசாமி அய்யர் என்பதை இப்போது நினைந்து பார்க்க முடிகின்றது.

குமிழி—24

## 24. நற்பழக்கங்கள் படிதல்

துறையூரில் படிக்குங்கால் சில நற்பழக்கங்கள் என்னிடம் ஏற்பட்டன. அதிகாலையில் எழுந்து நீடாடுதல் என்ற பழக்கத்தை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இந்தப் பழக்கம் இன்றுவரை நிலைத்து நிற்கின்றது.

7. தமிழ் பயிற்றும் முறை (மூன்றாம் பதிப்பு)-பக்.544

துறையூருக்கு வரும்வரை ஊற்றுப்பேனாவைப் (Fountain pen) பயன்படுத்தும் முறையை நான் மேற்கொள்ளவில்லை. இங்கு வந்த பிறகுதான் (1930)இப் பழக்கம் என்னிடம் ஏற்பட்டது. நாலணாவுக்குக் கிடைக்கும் மையூற்றுப் பேனா. இதை 'ஜப்பான் சரக்கு' என்று சொல்வார்கள். இதன் முள் கண்ணாடியாலானது. உருண்டை வடிவமாக உள்ள முள்ளின் எல்லாப் பக்கங்களிலும் 'வாரி' போன்ற பள்ளங்கள் இருக்கும். இவற்றின் வழியாக மை கசிந்து பேனாவின் முனைக்கு வரும். முள் (Nib) பழுதடைந்து விட்டால், மூன்று பைசாவுக்குக் (அப்போது அரையணா— ஆறு காசு) கிடைக்கும். கடையில் வாங்கிப் போட்டுக் கொள்ளலாம். அக்காலத்தில் இத்தகைய முள்கள் கோவிந்தராவ் புத்தகக் கடை, வேங்கடசுப்பையா செட்டியார் மளிகைக் கடை இவ்விடங்களில் கிடைக்கும். இப்போது அந்தக் கடைகள் இல்லை; மறைந்து விட்டன, இந்தப் பேனாவுக்கு அப்போது கிடைக்கும் 'ஸ்வான் இங்கி' என்ற மையைத்தான் பயன்படுத்துவோம். இரண்டு அவுன்சு போத்தல் விலை மூன்றணா; எல்லோரும் போத்தலாக வாங்குவதில்லை. முதலில் வாங்கிய போத்தலிலுள்ள மை தீர்ந்ததும் அவுன்சு ஓரணாவுக்குக் கிடைக்கும். இதே மையை வாங்கிப் போத்தலில் நிரப்பிக் கொள்வோம். (Blue-Black) என்ற ஒரே ஒரு ரகம் மைதான் கடையில் விற்கப் பெற்றது. சிவப்பு மையும் கிடைக்கும். அதையும் வாங்கி அதற்கெனத் தனியாக வைத்திருக்கும் மற்றொரு ஊற்றுப் பேனாவில் நிரப்பிக் கொள்வோம். புவியியல், வரலாறு இப்பாடங்களில் படங்கள் வரையுங்கால் அவற்றின் ஊர்ப் பெயர்கள் முதலியவற்றைக் குறிப்பிடவும், மாகாணங்கள் பிரிவுகளைப் பிரித்துக் காட்டவும் இந்தச் சிவப்புமைப் பேனா பயன்படும்.

கோட்டாத்தூரில் இருக்கும் வரை **'தேர்வு முறை'** என்ற ஒன்றைக் கண்டதே இல்லை. பள்ளியில் மையால் எழுதும்

வேலையே இல்லை. வீட்டில் எழுதும்போது 'ரிலீப்' முள்ளைக் கொண்டு தொட்டு எழுதும் பழக்கத்தைத்தான் மேற்கொண்டிருந்தோம். சில்லறைக் கடைகளில் சிறிய மைக்கட்டி ஒரு காசுக்கும், பெரிய மைக்கட்டி மூன்று காசு மாகக் கிடைக்கும், சிவப்பு மைக்கட்டியின் விலை இருமடங் காக இருந்தது. இவற்றைத் தனித்தனி மைக்கூட்டில் கரைத்துக் கொள்வோம். மூன்று காசு என்பது இப்போதுள்ள ஒன்றரைக் காசுக்குச் சமம். அதாவது ஒரு ரூபாய்க்கு 192 காசு; ஓரணாவுக்குப் பன்னிரண்டு காசு; ஒரு ரூபாய்க்குப் பதினாறு அணா என்ற நாணய முறை அக்காலத்தில் நடை முறையிலிருந்தது. தேர்வு முறை வந்தபிறகு மைக்கூட்டை யும் தனிப்பேனாவையும் பள்ளிக்கு எடுத்துச் செல்வதைப் பெரும்பாலான மாணாக்கர்கள் விரும்பாததால் மையூற்றுப் பேனாவைப் பயன்படுத்தும் முறை வழக்கத்திற்கு வந்தது. அப்பொழுதும் துறையூரிலிருந்த சில பெரியவர்கள் மை யூற்றுப் பேனாவைப் பயன்படுத்தினால் எழுத்து கெடும் என்ற கொள்கையையுடையவர்களாக இருந்தமையால் அவர்கள் தங்கள் சிறுவர்கள் மையூற்றுப் பேனாவைப் பயன்படுத்து வதை அனுமதிப்பதில்லை. அதனால் சில சிறுவர்கள் தேர்வில் மைக்கூட்டையும் பேனாவையும் 'சுமந்து கொண்டு வந்து' தேர்வு எழுதுவதைப் பார்த்திருக்கின்றேன்.

சில மாணாக்கர்கள் மைக்கூட்டைக் கவனமாகக் கையாளாததால் தங்கள் சட்டையிலும் வேட்டியிலும் மையைக் கொட்டிக் கொள்வதுண்டு; பேனாவைக் கவன மாக எடுத்துச் செல்லாததால் முள்ளின் முனை மழுங்கிப் போவதுண்டு. மையூற்றுப் பேனாவைப் பயன்படுத்துவோர் சட்டையிலும் மைக்கறை தென்படுவதுண்டு. எல்லாச் சிறுவர்கட்கும் மையூற்றுப் பேனாவைப் பயன்படுத்தும் முறை சரியாகப் புரிவதில்லை. சிலர் மரையைச் சரியாகத் திருகி மூடுவதில்லை. சில சமயம் மரை கெட்டு பேனா

சரியாக மூடப்பெற முடியாது போவமுதுண்டு. இதனால் சட்டைப்பைகளில் வைக்கப்பெறும் பேனாவில் மையொழுக்கு ஏற்பட்டுக் கறையை விளைவிக்கும். எழுதும் போதும் விரல்களில் மைக்கறை படிந்து விடும். இந்த மட்டரகப் பேனா வாங்குவதற்கும் காசு கிடைப்பதில்லை. நாட்டுப்புறத்திலிருந்து வந்த எங்கட்குக் 'காசு' மிக அரிதான பொருளாகவே இருந்தது.

அந்தக் காலத்தில் (1930) துறையூரில் படக்காட்சிகட்கு வசதி இல்லை. அருகிலுள்ள சிற்றூர்களைச் சேர்ந்த சில துடுக்கான இளைஞர்கள் (Minors) மட்டரகமான பெண்களுடன் சேர்ந்த சில நாடகக் கம்பெனியாரைக் கொண்டு கொட்டகைகள் எழுப்பி நாடகங்கள் போடுவதுண்டு. நாங்கள் அந்தப் பக்கமே போவதில்லை; அந்நாடகங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் எங்கட்கு இல்லை; அக்கறையும் இல்லை. இதனால் எங்கட்கு இந்தத் துறையில் காசு செலவு இல்லை. ஆனால் நாங்கள் முசிறியில் படிக்கும் போது துறையூர் வழியாகத்தான் எங்களூரை அடைய வேண்டும். அப்போது நாடகம் போட்ட 'மைனர்கள்' கடனாளியாகி விட்டனர் என்ற செய்தி எங்கட்குக் கிடைத்தது. இவ்வாறு கடனாளி ஆகிவிட்டதன் அறிகுறி அவர்கள் முகத்தில் தாடியும் தலைமுடியுமாகக் காட்சி அளிப்பதுதான். தங்கட்கு இனி நல்ல வழிகாட்ட வேண்டுமென்று திருப்பதிக்கோ பழநிக்கோ முடி வளர்த்தனர் போலும்!

துறையூருக்கு வருவதற்கு முன்னர் தேர்வுபற்றிய அநுபவமே இல்லை. பள்ளி மாணாக்கர்கள் 'தேர்வுக் காய்ச்சலால்' அல்லலுற்றதை அரையாண்டுத் தேர்வின் போதே கண்டு கொண்டேன். சனவரியிலிருந்தே (1931) படிப்படியாக என்னையும் அக்காய்ச்சல் பற்றத் தொடங்கியது. வரலாற்றுப் பாடநூல் முழுவதும்—உரை

நடையாயிருந்த போதிலும்—எனக்கு மனப்பாடம். தமிழ்ப் பாடநூலில் உள்ள செய்யுட்பகுதி முழுவதும் நெட்டுரு போட்டு விட்டேன். தேர்வு எழுதும் முறை நன்றாகப் பிடிபடவில்லை. பொருத்தமானவற்றை எழுதுவதைவிட அதிகமாகவே எழுதி விட்டதாக நினைவு. அரையாண்டுத் தேர்விலேயே வரலாறு கற்பித்த ஆசிரியர் எனக்கு இதை எடுத்துக் காட்டி விட்டார்.

வெயில் காலமானதால் மாலையில் சுமார் அரைக்கல் தூரம் ஏரிக்கரை வழியாக நடந்து சென்று கரையோரத்தில் படிப்பதும், சில சமயம் தெப்பக்குளக் கைப்பிடிச் சுவர்மீது அமர்ந்து கொண்டு படிப்பதும், இன்னும் சில சமயம் சின்ன மடத்து மொட்டை மாடியிலிருந்து கொண்டு படிப்பதுமான வழக்கத்தை மேற்கொண்டிருந்தேன். துறையூரைத் தாயக மாகக் கொண்டு பள்ளியில் படித்த மாணாக்கர்கள் என்னைப் 'புத்தகப் புழு' (Book worm) என்று கூடப் பெயரிட்டு வழங்கியதாக நினைவு. வண்ணத்துப் பூச்சியின் வாழ்வில் நான்கு பருவங்களைச் சொல்வார்கள்; முட்டைப் பருவம், கம்பளிப்பூச்சிப் பருவம், கூட்டுப்புழுப் பருவம், பூச்சிப்பருவம் என்று. இவற்றுள் கோட்டாத்தூரில் வி கே. அரங்கநாத அய்யரிடம் கற்ற காலத்தில் என் கல்வி வாழ்வின் முட்டைப் பருவம் தொடங்கியதாகக் கருதலாம். கல்வி கற்றல்பற்றிய ஏராளமாக கருத்துகளை மனத்தில் விதைத்தார். இக்கருத்து கள் எந்த வித ஒழுங்குமின்றி என் மனத்தில் படிந்திருந்தன. துறையூரில் பயின்ற காலத்தில் என் கல்வி வாழ்வில் கம்பளிப் பூச்சிப் பருவம் அமைந்ததாகக் கருதலாம். கம்பளிப் பூச்சிகள் ஏராளமாக இலைகளைத் தின்று வளர்வதைப் பார்த்திருக் கின்றோம். முருங்கை மரத்தில் இவை ஏறி விட்டால் சொல்ல வேண்டியதில்லை; மரத்தில் ஓர் இலையைக் கூட விட்டு வைப்பதில்லை. மிலார் தான் மீதி இருக்கும்; இலை கள் யாவும் 'கபளீகரம்' ஆகிவிடும். இந்த மாதிரி ஒரு பூச்சி வாழ்க்கை என் கல்வி வாழ்வில் அமைந்ததை ஒப்பிட்டுப்

பார்க்கலாம். பாடநூல்களைக் கபளீகரம் செய்ததன்றி, கிடைத்த நூல்கட்கெல்லாம் இதே கதிதான். வாய்க்குட் படிக்கும் பழக்கம் நன்றாக ஏற்பட்டு விட்டது. கோட்டாத் தூரிலிருந்த போது என் படிப்பில் ஒரு தேக்க நிலை ஏற்பட்ட காலத்தில் அவ்வூர்ப் பசனை மடத்திலிருந்த இராமாயணம், பாரதம், பக்த விஷயம் போன்ற பெரிய உரைநடை நூல்களைப் படித்தலால் ஏற்பட்ட வாய்க்குட் படித்தல் பழக்கம் துறையூர் வாழ்வில் நன்கு வேரூன்றியது. இப்பழக்கம் என் பிற்காலக் கல்லூரி வாழ்வில் பெருந்துணை புரிந்தது. பல்வேறு மட்டங்களின் என் ஆசிரிய வாழ்விலும், பணியிலிருந்து ஒய்வு பெற்ற பின்னரும் நீடித்து நின்ற இப்பழக்கம் என்னை வாழ்வித்து வருகின்றது.

x x x

துறையூர்ப் பள்ளியில் நடைபெற்ற அரசினர் நடத்திய தேர்வில்—எட்டாவது வகுப்பில்—பள்ளியில் இரண்டாவ தாகத் தேர்ச்சி அடைந்தேன். எஸ். சாம்பவமூர்த்தி என்பவன் முதலாவதாகத் தேர்ந்தான். ஆறாவது வகுப்பி லிருந்தே இப்பள்ளியில் சேர்ந்து படித்திருந்தால் இன்னும் அதிக முன்னேற்றம் அடைந்திருக்க முடியும். தேர்வு முறை கள் நன்கு பிடிபட்டிருக்கும். போட்டியுணர்வால் முன்னேற்றம் நன்கு அடைந்திருக்க முடியும். கோட்டாத் தூரில் வி.கே. அரங்கநாத அய்யர் நல்ல அடிப்படையை உண்டாக்கினாலும் அவர் கணக்கு, ஆங்கிலம் இரண்டை மட்டிலுமே கவனிக்க முடிந்தது. வரலாறு, புவியியல், அறிவியல், தமிழ்—இந்தப் பாடங்கள் துறையூருக்கு வந்த பிறகே நன்கு அறிமுகமாயின். 1930-இல் முசிறியில் சேராமல் துறையூரில் சேர்ந்தது ஒரு விதத்தில் நல்ல வாய்ப்பாகவே அமைந்து விட்டது. உயர்நிலைப் பள்ளி சூழ்நிலை துறையூரிலேயே அமைந்து விட்டது. 1931இல் முசிறியில் சேரும்போது நல்ல அடிப்படையுடன் சேர்ந்தது இறைவன் திருவருளால் ஏற்பட்ட வாய்ப்பாகவே கருதுகின்றேன்.

குமிழி—25

## 25. உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தேன்

1934 ஜூன் திங்கள் ஒரு நன்னாளில் வி. கே. அரங்கநாதஅய்யர் கணபதியையும் என்னையும் முசிறிக்கு இட்டுச் சென்றார். எங்களை நான்காம் படிவத்தில் (பழைய ஒன்பதாம் வகுப்பு) சேர்த்து விட்டார். சென்ற ஆண்டு தடங்கல் சொல்லி எங்களைச் சேர்க்காது அனுப்பிவிட்ட கே. இராமசந்திர அய்யர் இந்த ஆண்டு மகிழ்ச்சியுடன் சேர்த்துக் கொண்டார். இப்போதும் தலைமையாசிரியராக இருந்தவர் எஸ் அரங்கசாமி அய்யங்கார்தான். இவரை 'செல்லய்யா' என்றே அனைவரும் சொல்வார்கள். அதுவும் மாணாக்கர் விடுதியில்தான் சேர வேண்டும் என்று சொன்ன போது இரட்டை மகிழ்ச்சியுடன் விடுதியிலும் சேர்த்துக் கொண்டார். நாங்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தபோது பள்ளி புதிதாகக் கட்டப்பெற்ற கட்டத்திற்கு வந்து விட்டது. உம்பர் உலகிற்கு வந்து விட்டது போன்ற ஒரு நல்லுணர்ச்சி எங்களை ஆட்கொண்டது. நல்ல முறையில், நன்கு உழைத்துப் படிக்க வேண்டும் என்ற முடிவு கொண்டோம். துறையூர்ப் பள்ளியில் எட்டு மாதம் பெற்ற அடிப்படைக் கல்வி புதிய சூழ்நிலையில் கைகொடுத்து உதவியது.

ஐயம்பாளையம் தாண்டவராய பிள்ளையவர்களின் கட்டடத்தில் கே. இராமசந்திர அய்யரின் அரிய முயற்சியால் மாணாக்கர் விடுதி (Students Hostel) ஒன்று தொடங்கப் பெற்றிருந்தது சென்ற ஆண்டுவரை இதில்தான் உயர்நிலைப் பள்ளி இயங்கி வந்தது. சுற்றுப்புற ஊர்களி லிருந்து கல்வி பயிலும் மாணாக்கர்கள் ஓட்டலில் உண்டு தங்குவதற்கு இடவசதியின்றித் தொல்லையுறுவதையும், ஐந்தாறு கல் தொலைவு நடந்தே பள்ளிக்கு வரும் மாணாக்கர்கள் அல்லலுறுவதையும் கவனித்த கே. இராமச் சந்திரஅய்யர் உள்ளத்தில் எல்லா வசதிகளும் கொண்ட ஒரு விடுதியைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் கால் கொண்டிருக்க வேண்டும். சில செல்வர்களை அண்மிப் பொருளுதவி பெற்றார். உயர்நிலைப் பள்ளி தம் கட்டடத்தி லிருந்தவரை வாடகை பெற்றிருந்த ஐயம்பாளையம் பிள்ளையவர்களிடமிருந்து வாடகையின்றி இலவசமாகப் பெற்றார் கட்டடத்தை. இந்தக் கட்டடத்தில் சுமார் முப்பது மாணாக்கர்களைக் கொண்டு விடுதி தொடங்கப் பெற் றிருந்தது. சுமார் முப்பது மாணாக்கர்கட்குத் தேவையான முப்பது மேசைகள், கையில்லாத முப்பது நாற்காலிகள், நூல்கள் வைத்துக் கொள்ள முப்பது சுவர் நிலைத்தட்டு (Shelf) இவற்றைப் பள்ளி கட்டடத்தை ஒப்பந்த வேலை யாக ஏற்று முடித்த நாரணமங்கலம் கணபதிரெட்டியாரிடம் இலவசமாகப் பெற்றார். அதேபோல் விடுதி அலுவலகத் திற்குத் தேவையான மேசை, நாற்காலி, பீரோக்களையும் இலவசமாகவே பெற்றார்.

**ரெட்டிகுல வள்ளல்கள் :** அக்காலத்தில் திருச்சி மாவட்டத்தில் தயாள சிந்தையுள்ள பல ரெட்டியார் குடும்பங்கள் இருந்தன. பொது நலத்தொண்டில் விருப்பார்வங் கொண்டு செல்வத்தைத் தாராளமாகச் செலவு செய்தனர்.

அன்பர்பணி செய்யஎனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து
எய்தும் பராபரமே[1]

என்ற தாயுமான அடிகளின் திருவாக்கை வேதவாக்காகக் கொண்டு போற்றுபவர்கள் இவர்கள். நாரணமங்கலம் கணபதி ரெட்டியார் குடும்பம் இத்தகைய அறங்களைச் செய்வதில் பெரும் புகழ் பெற்றிருந்தது. ஏதோ பொருளாதார நெருக்கடியால் க. நடராசன் என்ற அவர் திருமகனார் தொழிலில் பேரிழப்பைச் சந்திக்க நேர்ந்தது. சொந்த மாவட்டத்தைத் துறந்து சென்னை வந்து பல தொழில்களை மேற்கொண்டார். 'தருமம் தலைகாக்கும்' என்ற பழமொழிக் கிணங்க இப்பொழுது நல்ல நிலையிலுள்ளார்; பொருளாதார இழப்பு நீங்கி செல்வச் செழிப்புடையவராகத் திகழ்கின்றார். தந்தையாரைப் போலவே இவரும் அடக்கமான பண்புடையவர்; தயாள சிந்தை கொண்டவர்.

திருச்சி தென்னாற்காடு மாவட்டங்களில் ரெட்டியார் வகுப்பினர் மிக அதிகமாக உள்ளனர். பெரும்பாலும் இவர்கள் நிலக்கிழவர்கள்; வேளாண்மையே இவர்களின் குடும்பத் தொழிலாக இருந்து வருகின்றது. இப்பொழுது தான் ஒரு சிலர் அத்தி பூத்த மாதிரி வாணிகத்திலும், கைத் தொழிலும், ஆலைத் தொழிலும் இறங்கிப் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கின்றனர். சங்கங்கள் வைத்துக் கிளர்ச்சி செய்வது கலியுக தர்மமாக நிலவி வருகின்றது. ஒவ்வொரு வகுப்பினரும் சங்கங்கள் வைத்துக் கொண்டு கிளர்ச்சி செய்து தம் வகுப்பைப் பிற்போக்கு வகுப்பினர் பட்டியலில் சேர்த்துக் கொள்கின்றனர்.

---

1. தா.பா, பராபரக்கண்ணி-155

*சாதிக்கு ஒருநீதி வழங்கு மிந்தச்*
*சமுதாயம் தனைமாற்ற முயன்றி டாமல்*
*சாதிக்கு வீதிதொறும் சங்கம் வைத்தோம்;*
*'சங்ககாலம்' ஒருவகையில் தோற்று வித்தோம்!*

என்று கவிஞர் இந்நிலையைக் கிண்டல் செய்கின்றார். இந்நிலை பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி இவற்றில் இடம் பெறுவதற்கும் அரசின் அலுவலராவதற்கும் துணை செய்கின்றது. உண்மையிலேயே நன்கு உழைத்து நல்ல மதிப் பெண்கள் பெற்றிருந்தாலும் முற்போக்கு வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றவர்கள் இச்சலுகைகளைப் பெற முடியாமல் போகின்றது. தேர்ந்தெடுக்கும் குழுவின் தில்லு முல்லுகளும், அரசியல் குறுக்கீடுகளும் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றிய நிலையை ஏற்படுத்தி விடுகின்றது. இவர்கள் அப்பாவிப் 'பிறவிகள்'. இந்நிலையில் தேர்வுகள் நடத்தும் அலுவலகங்களிலேயே 'மதிப்பெண் மாற்றச் சதி' நடைபெறுகின்றது; இது பயங்கரமான போக்கு. 'கேரளம்' இதற்கு 'இமயச் சான்றாகத்' திகழ்கின்றது. தமிழகத்திலும் இந்தச் 'சதி' தலைக்காட்டி வளரத் தொடங்கிவிட்டது!

சாதிகள் ஒழிக்கப் பெற வேண்டுமென்று எம்மருங்கும் பெருங்கூச்சல்கள். அரசுகூட தெருப்பெயர்களிலுள்ள '**ஜாதிப் பகுதி**'யை மட்டிலும் அழித்துச் சாதி ஒழிப்பில் பெரி முன்னேற்றம் கண்டு விட்டதாக மகிழ்ச்சி அடைகின்றது.

'ஒன்றே குலம்' என்று
ஒப்புக்குத் 'தொகுப்புக்கள்!'
அன்று முதல் பலசாதி
அரிச்சுவடி வகுப்புக்கள்![3]

---

2. கவிஞர் தாராபாரதி : புதிய விடியல்கள்—சாதிக் காய்-1

3. கவிஞர் தாராபாரதி: இன்னும் ஒரு சுதந்திரப்போர்

ஆனால் நடைமுறையில்—செயற்கை முறையில்—சாதியின் பெயரால் ஏற்றத் தாழ்வுகளை உற்பத்தி செய்து கொண்டே போவதைக் காண முடிகின்றது.

புதுவழியில் சாதிகளின் கிளைபி ரித்து
பொதுவயலில் களைகளையே வளர்க்க லானோம்!
உதவிகளைத் தருகையிலே வர்ண பேதம்;
'ஓட்டுகளைப்' பெறுகையிலே இனத்தின் பற்று;
பதவிகளின் பங்கீட்டில் சாதி பேதம்;
பணியிடத்தில் தனியிடத்தில் பாகு பாடு;
சதவீதம் சாதிகளைப் பிரிக்கும் போது
சமதருமம் எப்படித்தான் உருவெ டுக்கும்?[4]

என்ற கவிஞரின் குரல் இந்நிலையை எடுத்துக்காட்டுகின்றது. சாதி அமைப்பு ஒழிக்கப் பெறாதவரை நாட்டிற்குக் 'கதிமோட்சமே' இல்லை. ஒற்றுமையின்மைக்குப் பேர் போனது ரெட்டியார் சமூகம். தமிழகத்தில்தான் இப்படி என்றால் ஆந்திரத்திலும் இதே நிலைதான். 'ஜனநாயகம்' என்ற பேரில் நடைபெறும் 'நாடக ஆட்சி முறையில்' 'பண நாயகம்' எல்லா மட்டங்களிலும் தாண்டவமாடுவதால் இழிநிலைப் போக்குகள் 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்' கண்ணிலாக் குருடனுக்கும் தெரியும்படிக் காட்சி அளிக்கின்றன.

சாதிக்கு அப்பாற்பட்டுச் செயல் புரிவது ஓர் உயர்ந்த பண்பு என்பதை நாம் ஒப்புக் கொண்டாலும், மக்களாட்சி முறையில்—வாக்குகள் வாணிக முறையில் பயன்படும் போது—இப்பண்பு நடைமுறைக்கு ஒவ்வாததாக அமைகின்றது. தவிர, இந்தப் பண்பு மனமறிந்து செயல்படுகின்றதாகவும் தெரியவில்லை. அப்படிச் செயல்பட்டால் போற்றக் கூடியதுதான். ஆனால் உலகத்தோடொட்ட ஒழுக வேண்டு

4. ஷை. சாதிக்காய்-2

மல்லவா? சூழ்நிலை முழுவதும் சாதிச் சாயம் ஏறியிருக்கும் போது ரெட்டியார் சமூகம் மட்டிலும் சாதிக்கு அப்பாற் பட்டது என்று சொல்வது—கருதுவது—எவ்வாறு பொருந்தும்?

இனியொரு
விதி செய்வோம்—
ஒற்றைச் சக்கரத்தில்
வண்டி உருளாது
ஒற்றுமைச் சக்கரத்தால்
உலகையே உருட்டுவோம்.[5]

என்ற புதுக்கவிஞரின் குரல் வழிகாட்டட்டும். தாற்காலிக மாகச் சாதி ஒற்றுமைக்குப் போராடுவதே சரி என்று தோன்றுகின்றது. அடுத்து மாநில ஒற்றுமை; பின்னர் நாட்டு ஒற்றமை; அதன் பின்னர் உலக ஒற்றுமை என்று குறிக்கோள் விரிந்து கொண்டே போகட்டும். இந்தக் கொள்கையே மக்களாட்சி நிலவும் இக்காலத்திற்குப் பொருத்தமானதாகும் என்று தோன்றுகின்றது.

**இராமச்சந்திர அய்யரின் தன்னலமற்ற பணி**: நான் உயர் நிலைப் பள்ளியில் சேர்ந்தபோது புதுக்கட்டடத்தில் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. பழைய கட்டடம் மாணாக்கர் விடுதியாக மாறியது. நானும் கணபதியும் விடுதியில் சேர்ந்துதான் படித்தோம். அந்தக் காலத்தில் கே. இராமச்சந்திர அய்யரின் தொண்டு பொன்னெழுத்து களால் பொறிக்கப் பெற வேண்டியதாக இருந்தது. நாட்டுப் புறங்களிலிருந்து நகர்ப் புறத் திற்குக் கல்விபயில வரும் சிறுவர்கள் சீர்கெட்டுத் 'தான்தோன்றிகள்' ஆகாமல் ஒழுங்காகப் படித்து முன்னேற்றம் அடைவதற்கு கே.ஆர். நிறுவிய மாணாக்கர்

5. மேத்தா. மு; காத்திருந்த காற்று-பக். 43

விடுதி ஒரு புகலிடமாக இருந்தது. கே.ஆருக்கு ஒரு ஆண் பிள்ளையும் இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தனர். தன் குடும்பத்தைக்கூட அதிகம் கவனியாமல் தான் நிறுவிய சுமார் முப்பது மாணாக்கர்கள் அடங்கிய மாணாக்கர் விடுதியான 'பெருங்குடும்பத்தில்' தான் அதிக அக்கறை செலுத்தி வந்ததை அக்கால மக்கள் நன்கு அறிவார்கள்; விடுதியில் தங்கியிருந்த நாங்கள் நன்கு அறிவோம்.

அதிகாலையில் நாலரை-ஐந்து மணிக்கு வந்து எல்லோரையும் துயில் எழுப்பிவிடுவார். அவர் இல்லம் முசிறி அக்கிரகாரத்தில் இருந்தது. அக்கிரகாரத்தின் கீழ்க்கோடியில் மாணாக்கர் விடுதி இருந்தது. அவர் இல்லத்திற்கும் மாணாக்கர் விடுதிக்கும் சுமார் அரை ஃபர்லாங் தொலைவு தான் இருக்கும். காலையிலும் மாலையிலும் மாணாக்கர் விடுதிக்கு வருகை புரிவதில் தவறமாட்டார். நாட்டுப்புறத்தி லிருந்து வந்த சிறுவர்கள் உருப்படியாவதற்கு இராமச்சந்திர அய்யர் மேற்கொண்ட பணி பெரியது; மிகப் பெரியது. மணிவாசகப் பெருமானின்,

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
　　பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
　　உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
　　செல்வமே! சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
　　எங்கெழுந் தருளுவ தினியே.[6]

என்ற திருப்பாடல் நாட்டுப்புறச் சிறுவர்களின் குரலாக ஒலிக்கட்டும். '**சிவபெருமானே!**' என்ற இடத்தில் **இராமச்**

---

6. திருவா. பிடித்த பத்து-9.

**சந்திரப் பெருமானே!'** என்று நினைத்துக் கொண்டு அவர்கள் பாட வேண்டும் எனத் தோன்றுகிறது.

**இலக்கியக் கழகங்கள்:** அந்தக் காலத்தில் யான் உயர் நிலைப் பள்ளியில் படித்த காலத்தில் பள்ளியிலோ அல்லது மாணாக்கர் உணவு விடுதியிலே இத்தகைய கழகங்கள் தோற்றுவிக்கப்பெறவில்லை. வகுப்பு வேலைகளையும், வெளியூர் மாணாக்கர்கள் தங்குவதற்கும் குறைந்த செலவில் உணவு கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்த தலைமை யாசிரியரோ, கே. இராமச்சந்திர அய்யரோ இந்தப் போக்கில் ஏன் சிந்திக்கவில்லை என்பதை என்னால் எண்ணிப் பார்க்க இயலவில்லை.

சில சமயம் கையெழுத்துப் போட்டி (தமிழ், ஆங்கிலம்), ஓவியப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள், சில சமயம் பேச்சுப் போட்டிகள்—இவற்றை நடத்தி இவற்றில் வெற்றி பெற்ற முதல்நிலை, இரண்டாம் நிலை மாணாக்கர்கட்குப் பரிசுகள் நல்கி வந்ததை நினைவுகூர்கின்றேன். நான் கூட கையெழுத்துப் போட்டிகளில் பரிசுகள் பெற்றிருக்கின்றேன். பள்ளி ஆண்டு விழாவோ, மாணாக்கர் ஆண்டுவிழாவோ அடிக்கடி நடைபெற்றதை நான் நினைவுகூர முடியவில்லை. மாவட்டக் கழகத் தலைவர் பள்ளியைப் பார்வையிட வரும் போது அவசரமாக மாணாக்கர், ஆசிரியர்கள் அடங்கிய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பெறும். உணவு விடுதிக்கும் தலைவர் அழைத்துக் கொண்டு வரப்பெறுவார். ஆனால் கூட்டம் ஒன்றும் இராது. பள்ளியில் அமைக்கப்பெற்ற கூட்டத் திலேயே தலைவர் உணவு விடுதியின் இன்றியமையாமை பற்றியும், அது நடைபெற்றுவரும் சிறப்பு பற்றியும்; ஏதோ பேசிவிட்டுச் சென்று விடுவார்.

ஒருசமயம் மாவட்டக்கழக ஆட்சித் தலைவர் (நான் பள்ளியிறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது)

பள்ளியைப் பார்வையிட வந்ததாக நினைவு. அப்போது மாவட்டக்கழகத்தின் தலைவராக இருந்தவர் **T.M. நாராயணசாமி பிள்ளை.** அவர் பள்ளிக்கு வந்தபோது கே.ஆர். அவர்கள் அவருக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்ததாக நினைவு. "ஐயா சுப்பு நல்ல மாணாக்கன். பள்ளியிலேயே முதன்மையாக இருப்பவன்; கடும் உழைப் பாளி. இவனுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. தூண்டுதலும் உதவியும் கிடைத்தால் நன்றாக முன்னுக்கு வரும் சாத்தியக் கூறுகள் உண்டு." என்று என்னைப்பற்றித் தலைவரிடம் பேசியதை நினைவுகூர முடிகின்றது.

நான் ஐந்தாம் படிவத்தில் பயின்று வந்தபோது முசிறி யில் உள்ள செல்வ குடும்பத்தைச் சேர்ந்த **மைனர் கிருட்டிணசாமி** பிள்ளை திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி யில் பட்டப்படிப்பு வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அவர் முயற்சியால் முசிறி உயர்நிலைப்பள்ளியில் **'பழைய மாணாக்கர் கழகம்'** என்பதன் ஆதரவில் ஒரு பெருங் கூட்டம் நடைபெற்றது. திருச்சி புனித சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு **மு. நடேச முதலியார் 'திருக்குறள்'** என்ற தலைப்பில் பேசினார். அக்காலத்திலோ பின்னர் கல்லூரி வாழ்க்கையிலோ இத்தகைய ஓர் அழகிய இலக்கியப் பொழிவை நான் கேட்டதே இல்லை. அந்தப் பேச்சால்தான் திருக்குறளின்மீது எனக்கு ஓர்வித ஆர்வமும் மதிப்பும் ஏற்பட்டது. அன்றிலிருந்து **'திருக்குறள்'** என்ற நூல் (கழகப் பதிப்பு) என் அரும் பொருளாக அமைந்து விட்டது.

---

7. பள்ளியில் எந்தவிதக் கழக அமைப்பும் இல்லை என்பதை எல்லோரும் அறிவர். இப்படி ஒரு கழகம் இல்லாதிருந்தமை ஒரு **'சிதம்பர இரகசியம்'** என்று தான் சொல்ல வேண்டும்.

அக்காலத்தில் இப்போது இருப்பதுபோல் நாளிதழ்கள், வார, பிறை, திங்கள் வெளியீடுகள் இல்லை. தமிழ் மொழிக்கு அதிக மதிப்பு இல்லாத காலம். உயர்நிலைப் பள்ளியிலிருந்த வரை செய்தித்தாள்களை யான் பார்த்ததே இல்லை. Hindu என்ற ஆங்கிலப் பத்திரிகையைப் பற்றிக் கேள்வியுற்ற துண்டு. சுதேசமித்திரன், ஆனந்த விகடன், பிரசண்ட விகடன்—இவற்றைப் பார்த்திருக்கின்றேன்; தொடர்ந்து படித்ததில்லை. ஈரோட்டிலிருந்து 'குடியரசு' காரைக்குடியி லிருந்து 'குமரன்' என்ற பிறை இதழ்கள் வெளிவருவதாகக் கேள்வி; பார்த்ததில்லை. முசிறியில் பொது நூலகமோ, படிப்பகமோ இல்லையாதலின் இவற்றைப் பார்க்க வாய்ப்பு கள் இல்லை. அந்நியர் ஆட்சியில் அடிமையாக இருந்த நாட்டில் இவையெல்லாம் தோன்றுவதற்கு—அதுவும் முசிறி போன்ற சிற்றூர்களில் தோன்றுவதற்கு—வாய்ப்புகள் ஏற்பட வில்லை.

கோட்டத்தூரில் திரு. குணம் நல்லப்ப ரெட்டியாருக்குப் '**பிரசண்ட விகடன்**' வந்து கொண்டிருந்தது. விடுமுறையில் என்னைப் படிக்கச் சொல்லி அருகிலிருந்தோர் பலர் கேட்டு மகிழ்வதற்கு வாய்ப்புகள் தருவார்.

**குமிழி 26**

## 26. தாய்மொழி மூலம் கல்வி

நான் முசிறியில் பயின்றபோது எனக்கு வாய்த்த சில நல்லாசிரியர்கள் கற்பித்த சூழ்நிலையை இப்போது நினைவு கூர்கின்றேன். நான்காவது படிவத்தில் பயின்றபோது கற்பித்தவர் யாவர் என்பதைத் தெளிவாக இப்போதுநினைவு கூர முடியவில்லை. என்றாலும் புவிஇயல், வரலாறு கற்பித்த N. சுப்பிரமணிய அய்யர் நினைவுக்கு வருகின்றார். அக்

காலத்தில் இவரை 'மணி அய்யர்' என்றே அனைவரும் சொல்வார்கள். அந்தக் காலத்தில் மேற்படிவங்களில் ஏ-பிரிவிலுள்ள வரலாறு, புவியியல், ஆரம்ப கணிதம், பொது அறிவியல் போன்ற பாடங்கள் மட்டிலும் தமிழில் கற்பிக்கப் பெற்றன. நான்கு, ஐந்து, ஆறு படிவங்களில் பயின்ற புவியியல், வரலாறு, ஆரம்ப கணிதம், பொது அறிவியல் போன்ற பாடப்பகுதிகள் பள்ளியிறுதித் தேர்வுக்குரியவை. ஆரம்ப கணிதத்தில் பயிலும் சில முக்கிய விதிகள், தனி வட்டி, கூடுவட்டி, இயற்கணிதம் (Algebra), வடிவகணிதப் (Geometry) பகுதிகள் பள்ளியிறுதித் தேர்வுக்குரியவைகளாக அமைந்தன. ஐந்து, ஆறு படிவங்களில் சி—பிரிவிலுள்ள பாடங்களின் பகுதிகள் பள்ளியிறுதித் தேர்வுக்குரியவை. இப்பிரில் முசிறி உயர்நிலைப் பள்ளியில் வரலாறு, புவியியல், இயற்பியல், வேதியியல், இயற்கணிதமும் வடிவ கணிதமும் என்ற பாடங்கள் கற்பிக்கப் பெற்றன. இப்பிரிவில் வரலாறு, புவியியலைத் தவிர ஏனைய பாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிக்கப் பெற்றன. இவை விருப்பப் பாடங்கள். பள்ளியிறுதித் தேர்வுக்குப் போகும் மாணாக்கர்கள் விருப்பப் பாடங்களாக இரண்டைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இவை சற்று ஆழமாகக் கற்பிக்கப்பெற்றன. 1932-33இல் தான் முதன்முதலாக வேதியியல் விருப்பப் பாடமாக முசிறி உயர்நிலைப் பள்ளியில் இடம் பெற்றது. வேதியியல் கற்பித்தல் T.K. இராமநாதப் பிள்ளையின் பொறுப்பிலும், இயற்பியல் கற்பித்தல் A. நாராயணசாமி அய்யர் பொறுப்பிலும், இயற்கணிதமும் வடிவகணிதமும் கற்பித்தல் கே. இராமந்திர அய்யர் பொறுப்பிலும், வரலாறு கற்பித்தல் மணி அய்யர் பொறுப்பிலும் புவியியல் கற்பித்தல் கோவிந்தசாமிப் பிள்ளை பொறுப்பிலும் சண்முகசுந்தரம் பிள்ளை பொறுப்பிலும் இருந்தன. இவர்களுள் மிக இளைஞராக இருந்தவர்கள் T.K. இராமநாதப் பிள்ளையும்

சண்முகசுந்தரம் பிள்ளையும். நான் படிக்கும்போது முதன் முதலாக விருப்ப பாடமான வேதியியல் இராமநாதபிள்ளை யின் பொறுப்புக்கு விடப்பெற்றிருந்தது.

பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்[8]

என்பது பாரதியாரின் '**கல்வித் திட்டம்**'. இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால் தாய்மொழி யிலேயே எல்லாப் பாடங்களையும் கற்பித்தல் வேண்டும். 'விலைப் பாலை'விட 'முலைப்பால்' (தாய்ப்பால்) சிறந்த தல்லவா? கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும்கூடத் தாய்மொழி வாயிலாகக் கற்பிக்கும் நிலை ஏற்பட்டால்தான் எத்தனையோ விதங்களில் வீணடிக்கப்பெறும் ஆற்றல்கள் சரி யான முறையில் பயன்படும். தாய்மொழியிலும் வடமொழி யிலும் உள்ள சமயக் கருத்துகளையும் அம்மொழிகளிலுள்ள கல்வெட்டுகள் போன்றவற்றையும் கூட ஆங்கிலத்தில் படிப் பதுதான் சிறப்பு என்று கருதும் குறுகிய எண்ணமும் நீங்கும். இராஜாஜி அவர்கள் சொல்லுவது போல,[9] பலர் கலைச் சொல் பிரச்சினையையும் பயிற்றுமொழிப் பிரச்சினையை யும் ஒன்று சேர்த்துக் ''குட்டையைக் குழப்பி''ப் போதனா மொழிப் பிரச்சினையை என்றும் தீராத பிரச்சினைபோல் காட்டுகின்றனர். மக்கள் நலனையும் நாட்டு நலனையும் அடிப்படை நோக்கமாகக் கொண்டு தங்கள் போக்கே சரியென்று வக்கீல் வாதம் செய்யாது தெளிவாகவும் விரைவாகவும் பொருளறிவு பெறுவதற்கு வழிகாண்பதில் பரிவுடனும் இதயத் தூய்மையுடனும் ஒத்துழைத்தால் அனைத்தும் சீர்படும்.

ஆங்கில மொழியை இன்று உலகமனைத்தும் புகழ்ந்து பாராட்டுவதற்கு மிலட்டனும் ஷேக்ஸ்பியரும் படைத்துள்ள

---

8. பாரதியார் கவிதைகள்-முரசு-30
9. கல்கி-செப்டம்பர் 23-ஆம் நாள் இதழ் (1956).

இலக்கியங்கள் மட்டிலும் காரணமன்று. உலகிலுள்ள கலை களைத்தும் அம்மொழியில் யாவரும் உணரக் கூடிய முறை யில் வெளியிடப் பெற்றிருப்பதுதான் அம்மொழியின் உயர்வுக்குக் காரணமாகும். அதுபோலவே, தமிழ் மொழி சிறப்புடன் மிளிர்வதற்குக் கம்பனும் வள்ளுவனும் இளங்கோவும் ஏனையோரும் படைத்துள்ள இலக்கியங்கள் மட்டிலும் போதா.

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை[10]

என்ற குறை தமிழுக்கிருத்தல் கூடாது. இவையனைத்தும் புறநானூற்றுக் காலத்திலேயே தமிழில் இருந்தன என்று 'பழங்கதையையே' அடிக்கடிச் சொல்லி மகிழ்வதால் யாதொரு பயனும் இல்லை. கல்லூரிகளிலும் தாய்மொழி வாயிலாகக் கல்வி பயிற்றப் பெற்றால்தான் இவை யனைத்தும் தமிழில் தோன்றுவதற்கு வாய்ப்புகள் அமையும். அப்பொழுதுதான் பிற நாட்டுச் சாத்திரங்கள் அனைத்தை யும் தமிழில் மொழிபெயர்க்கவும் முடியும்.

தமிழில் எல்லாக் கலைகளையும் எழுதவும் விளக்கவும் முடியும் என்பதைச் சிலர் இன்னும் ஒப்புக் கொள்வதில்லை இவர்கள் தமிழ் மொழியில் எல்லாவற்றிற்கும் தக்க கலைச் சொற்கள் இல்லாத காரணத்தால் இவ்வாறு எண்ணு கின்றனர். எந்த மொழியிலும் அதன் வாயிலாகப் பொருள் களை விளக்க முயன்றாலன்றிப் புதிய கலைகட்கு வேண்டிய சொற்களும் தொடர்மொழிகளும் செவ்வனே அமைவ தில்லை.பொருள்களை எடுத்துக்கொண்டு விளக்க முயன்றால் இவை தாமாகவே அமைந்து விடும். இவ்வாறே மேற்புல

10. பா.க. தமிழ்த்தாய்-9

மொழிகளனைத்திலும் கலைச்சொற்கள் உண்டாகி, அம் மொழிகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. கலைச் சொற்களை உண்டாக்கிக் கொண்டு தாய்மொழியில் கற்பித்தல் தொடங்க வேண்டும் என்று நினைப்பது, நீந்தக் கற்றுக் கொண்ட பிறகு நீரில் இறங்க வேண்டும் என்று எண்ணுவது போலாகும். செயலில் இறங்கினால்தான் அனைத்திலும் சீர் படும். இலக்கிய இலக்கண வளமும் சொற்களஞ்சியப் பேறும் பெற்றுள்ள தமிழ் மொழியின் நீர்மையை அறிந்து பிற கலைகளைத் தமிழ்மொழியில் வடித்துத் தரும் பணியில் ஈடுபடுவோர்கள்தாம் 'தமிழ்மொழி அனைத்திற்கும் வளைந்து கொடுக்கும்' என்ற உண்மையை அறிவர். அப்பொழுதுதான் 'சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை' என்ற குறையும் நீங்கும். தமிழ்மொழியும் வளர்ந்து மேலும் வளம்பெறும்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் எவ்வளவோ பெருந் தொகைகள் பல துறைகளுக்குச் செலவழிக்கப் பெறுகின்றன. ஒவ்வொரு கலைத்துறையிலும் மண்டல மொழிகளில் பல நிலைகளிலும் வெளிவரும் நல்ல நூல்கட்கு ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய்கள் பரிசளிக்கும் திட்டத்தை அரசினர் மேற்கொண்டால் பல நூல்கள் உண்டாகி வெளிவரும். அவற்றுள் சிறந்தவற்றுக்குப் பரிசுகள் நல்கி, அரசினரோ பல்கலைக்கழகங்களோ வெளியிட்டு, அவற்றின் துணை கொண்டு செயலில் இறங்கலாம். நாளடைவில் பல குழுக்களை நிறுவி, நூல்களைப் படைத்தவர்களையும் குழுவில் உறுப்பினர்களாகச் செய்து, கலைச்சொற்களை அறுதியிடுவதில் வெற்றியும் பெறலாம். இவ்வாறு திட்டமிட்டுப் பணியாற்றினால்தான் அனைத்தும் விரைவாகவும் திறனுடனும் சீர்பட்டு நடைமுறைக்கு வரும்.

உயர்நிலைப் பள்ளியில் பள்ளியிறுதித் தேர்வுக்குரிய ஏ-பிரிவுப் பாடங்களைத் தமிழிலும், சி-பிரிவுப் பாடங்களை

ஆங்கிலத்திலும் வரலாறு, புவியியலைத்தவிர பயிலும் போது ஒருவித எளிமையையும் திறமையையும் காண முடிந்தது; நல்ல வேட்டியும், சட்டையும் மேலாடையும் (அங்கவஸ்திரம்) காலுக்குப் பொருத்தமான நடையனும் (செருப்பு) அணிந்து கொண்டு தார் சாலையில் இராஜநடையில் செல்லுவது போன்ற உணர்வு ஏற்படுவதை உணர்ந்தேன். ஆங்கிலத்தில் பயிலும்போது நாட்டுப் புறத்தான், நீண்ட குழாய்ச் சட்டை, மேல் சட்டை, கழுத்துப் பட்டைத் தொங்கல் (Tie) அதற்குமேல் மேலங்கி (Coat) காலில் மூடிய காலணி (Shoe) தலையில் தொப்பி இவற்றை அணிந்து கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடப்பது போன்ற உணர்வும் எழுந்ததையும் உணர்ந்தேன். புதிய காலணியாக இருந்தால் அது காலையும் கடிக்கும். கழற்றி எறிந்துவிட வேண்டும் என்றும் தோன்றும்.

தவிர, அக்காலத்தில் நாட்டுப்புறங்களிலிருந்து வந்து உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் பெரும்பாலான மாணாக்கர்கட்கு ஆங்கில அறிவும் போதாது. கற்பிக்கும் ஆசிரியர்களுள் பெரும்பாலானவர்கள் ஆங்கிலத்தில் எளிதாக விளக்கவும் முடிவதில்லை. நான் கணிதமும் வேதியியலும் விருப்ப பாடமாகப் பயின்றதனால் மொழிப் பிரச்சினை அதிகமாக எழவில்லை. காரணம், உயர்நிலைப் பள்ளி மட்டத்தில் இவற்றிற்கு அழுத்தமான ஆங்கில அறிவும் தேவை இல்லை. ஆசிரியர்களும் இவற்றை எளிதாக விளக்க முடிவதையும் அறிந்தேன். வரலாறு, புவியியல் பயில்பவர் கட்கு ஆங்கில அறிவு குறைவாக இருந்தால் கருத்துகளைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியாது. கற்பிப்போரும் தம்மொழிஅறிவுக் குறைவினால் தெளிவாக விளக்க முடிவதில்லை. நல்ல மொழியறிவுடன் ஆசிரியர்கள் கருத்து களை விளக்கினாலும், ஆங்கில மொழியறிவுக் குறைவினால் மாணாக்கர்கள் தெளிவும் பெற முடிவதில்லை. நன்றாக

ஆங்கிலத்தில் விளக்க முடியாத ஆசிரியர்கள் குறிப்புகள் (Notes) எழுதச் சொல்லி சொல்லுவதெழுவதுபோல் (Dictation) கற்பித்து மாணாக்கர்களின் கையை ஒடித்து விடுவார்கள். எழுதிக் கொள்ளும் மாணாக்கர்களும் எழுத்துப் பிழைகள் மலிந்த ஆங்கிலத்தில் எழுதிக் கொள்வார்கள்; தம் ஆங்கில மொழியறிவுக் குறைவே இதற்குக் காரணமாகும். வகுப்புத் தேர்வுகளிலும் பருவத் தேர்வுகளிலும் குறிப்புகளை நெட்டுருப் போட்டு பிழை மலிந்த ஆங்கிலத்தில் வாந்தி எடுப்பார்கள்.

குழந்தை வாந்தி எடுக்கும்போது தாய் வாந்தியை வாரிக் குழந்தையின் வாயைக் கழுவித் துடைத்துச் சீர்படுத்துவது போலவே, மனச்சான்றுடன் பணியாற்றும் ஆசிரியர்கள் மாணாக்கர்கள் எழுதியவற்றில் காணப்பெறும் எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகள், கால மயக்கப் பிழைகள் போன்றவற்றைச் சுட்டிக் காட்டித் திருத்துவார்கள். வரலாற்றுப் பாடம் ஆங்கிலததில் கற்பிக்கும் பாடமாக அமைந்து இவ்வாறு ஆங்கிலத்தில் கற்கும்போது நல்லாசிரியர்கள் அமையும் பேறு பெற்றால் மாணாக்கர்களின் பொருளறிவு பெருகுவதை விட அவர்களின் ஆங்கில அறிவு வளர்ந்திருந்ததைக் காணமுடிந்தது.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் எல்லாப் பாடங் களும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப் பெற்றமையால்தான் அக்காலத்தில் உயர்நிலைப் பள்ளியில் பயின்றவர்களின் ஆங்கில அறிவுகூட நன்றாக இருந்தது. இதனால் ஆங்கிலேயர் ஆட்சிக்கு வேண்டிய எழுத்தர்கள் சிரமமின்றிக் கிடைத்தனர். பெரும்பாலும் இவர்கள் அடிமை மனப்பான்மையுடனேயே பணியாற்றி ஆட்சியாளர்களின் அன்புக்கும் பாராட்டு தலுக்கும் பாத்திரர்களாயினர். அக்காலத்தில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழுக்கு முக்கியத்துவம் தரப்பெறாத தால் மாணாக்கர்களிடம் தமிழறிவு நன்கு அமையாதிருந்தது.

நாடு விடுதலை பெற்ற பிறகு பல நிலைகளிலும் தமிழிலும் பாடங்கள் கற்பிக்கப்பெறுகின்றன. இதனால் இவர்களிடம் தமிழறிவு நன்கு ஏற்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? இவர்களில் பெரும்பாலோருக்கு நல்ல மொழியறிவு இல்லை; ஒரு சிலருக்கு மொழியறிவு நன்றாக அமைந்திருந்தாலும், அவர்கள் மொழியுணர்ச்சியுடன் கற்பிப்பதில்லை. மாணாக்கர்களின் எழுத்து வடிவத்தில் காணப்பெறும் பிழைகளை அவ்வப்போது களைவதுமில்லை. 'எல்லாம் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற தமிழ் வெறிப்போர்க்குரல் (Slogan) நாம் எம்மருங்கும் முழங்கப் பெறுவதைக் கேட்டாலும் ஆசிரியர்கள் சில சாதாரணப் பிழைகளைக் கூடக் களைவதில்லை; களைவதில் முயற்சி எடுத்துக் கொள்வதுமில்லை. அரசியல் விளரம்பரங்கள், அறிக்கைகள், வெளியீடுகள் இவை **'பிழை மலிந்த'** சருக்கங்களாகக் காணப்பெறுவதை நாம் எம்மருங்கும் பார்க்கின்றோம். ஆங்கிலத்தில் செய்யும் பிழைகளை எடுத்துக்காட்டும்போது நாம் நாணப்படுவதைப் போல், தமிழில் செய்யும் பிழைகளை எடுத்துக்காட்டும்போது சிறிதளவுகூட நாணப்படுவதில்லை. இன்று மொழி வளர்ச்சியைப் பற்றிய பிரச்சாரக் குரல் 'வெற்று வேட்டு போல்' கேட்பதைத்தான் நாம் காணமுடிகின்றது. பாவேந்தர் பாரதிதாசனின் **'தமிழ் இயக்கம்'** என்ற கவிதை நூலைப் படித்தால் இன்றைய தமிழ்மொழியின் 'அவல நிலை' பளிங்கில் காண்பதுபோல் தெரியும். பல்லாண்டுகட்கு முன்னர் எழுதப்பெற்ற பாடல்கள் இன்றைய நிலைக்கும் பொருந்துவனவாக இருப்பதை எண்ணும்போது நாணித் தலைகுனிய வேண்டியுள்ளது,

# 27. நல்லாசிரியர்கள் இருவர்

நான் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை யாசிரியனாக ஒன்பதாண்டுகள் பணியாற்றியபோது முதற் படிவத்திலிருந்து பள்ளியிறுதித் தேர்வு வரை பொது அறிவியலும், நான்காம் படிவத்திலிருந்து பள்ளியிறுதித் தேர்வு வரை ஆரம்ப கணிதமும், ஐந்து ஆறு படிவங்களில் இயற்கணிதமும் வடிவ கணிதமும், பள்ளியிறுதித் தேர்வு (ஆறாம் படிவம்) மாணாக்கர்கட்கு ஆங்கிலமும் கற்பித்தேன். இக்காலத்தில் எ-பிரிவு, சி-பிரிவு பாடங்கள் யாவும் தமிழிலேய கற்பிக்கும் முறை நடைமுறைக்கு வந்து விட்டது. ஒன்பதாண்டுகள் துறையூரிலிருந்தபோது இடை நிலைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பி.டி. தேர்வு பெற்றவர் கள், தமிழ் கற்பித்த தமிழாசிரியர்கள் இவர்கள் கற்பித்த முறையைக் கவனிக்கும் வாய்ப்பும் இருந்தது. ஒன்பதாண்டு கட்குப் பிறகு காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனாகப் பத்து ஆண்டுகள் பணியாற்றியபோது தமிழ் பயிற்று முறைகளைப்பற்றிச் சிந்திக்கவும், சிந்தித்தவற்றை பயிற்சிபெறும் பி.டி. வகுப்பு மாணாக்கர்கட்குச் சொல்லவும் வாய்ப்பு ஏற்பட்டது. இது தவிர, உள்ளூர் சுற்றுப்புற ஊர்களிலுள்ள உயர்நிலைப்பள்ளி கட்கு பி.டி. மாணாக்கர்களை இட்டுச் சென்று அப்பள்ளி களில் பாடங்கள் பயிற்று முறைகளைக் கவனிக்கச் செய்யவும், கவனித்தவற்றைப் பயிற்சி மாணாக்களிடம் கலந்தாயவும் வாய்ப்புகள் இருந்தன. இக்காலத்தில் பயிற்று முறைகள், கல்வி உளவியல்பற்றிய பல்வேறு நூல்களைப் பயிலவும், பயின்றவற்றைச் சிந்திக்கவும், சிந்தித்தவற்றை மாணாக்கர் கட்கு எடுத்துச் சொல்லவும், அவர்களுடன் கலந்தாயவும் வாய்ப்புகள் கிடைத்தன. பத்தாண்டுகள் இங்குப் பணியாற்றிய பிறகு திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்

கழகத்தில் பதினேழு ஆண்டுகட்கு மேல் பணியாற்றியபோது பி.ஏ., எம்.ஏ., எம்.ஃபில், பி.எச்.டி. மாணாக்கர்கட்குத் தமிழ் கற்பிக்கவும் ஆராய்ச்சிக்கு வழி காட்டவும் வாய்ப்புகள் நேரிட்டன. நீண்ட என் கல்வி வாழ்வில் ஓய்வு பெற்ற பிறகு உயர்நிலைப்பள்ளியில் எனக்குக் கற்பித்த முறைகளைப்பற்றி நினைவுகூரும்போது என் நீண்ட அநுபவமும் கலந்தே வெளிப்படுகின்றது. தவிர, நான் தமிழைத் தனியாகப் பயின்ற போது சில சமயம் சில நாட்கள் தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் இவற்றில் பாடம் சொன்ன பெரும் பேராசிரியர் களும் நினைவிலிருந்து பேசுவதையும் உணர முடிகின்றது. ஆசிரியரே இன்றி குருபக்தியுடன் பயின்ற ஏகலைவனின் கதையும் சிந்தனையில் எழத்தான் செய்கின்றது.

முதலாவதாக ஆரம்பகணிதம் இயற்கணிதம், வடிவ கணிதம் இவற்றைக் கற்பித்த **கே. இராமசந்திர அய்யர்** நினைவுக்கு வருகின்றார். இவர்தான் என் உள்ளத்தில் குறிக்கோள் ஆசிரியராக நிரந்தர இடத்தைப் பெறுகின்றார். கற்றலில் அக்கறையை உண்டாக்கல் கற்பிக்கும் முறையின் உயிர்நாடி என்பதை நன்கு அறிந்தவர் கே. இராமசந்திர அய்யர். 'அக்கறை கற்றலின் ஈர்ப்பு விசை' என்பதை நன்கு புரிந்து கொண்டு பணியாற்றியவர். சிறார்களின் வயதுக் கேற்றவாறு மன வளர்ச்சி இருக்குமென்றும் இதற் கேற்றவாறு அவர்களின் விருப்பமும் மாறக் கூடியதென்றும் உளவியல் அறிஞர் கூறுவதைத் தம் அநுபவத்தால் நன்கு தெளிந்தவர். ஹெர்பார்ட் என்ற அறிஞர் கூறிய மனத்தைத் தயாரித்தல், எடுத்துக் கூறல், ஒப்பிடல், பொதுவிதிகாணல், விதியைச் செயற்படுத்தல் என்ற ஐந்து படிகளையும் தம் அநுபவமாக்கிக் கொண்ட நல்லாசிரியர்.

ஹெர்பார்ட்டின் ஐந்து படிகளில் மனத்தைத் தயாரித்தலே மிகவும் முக்கியமானது. புதிதாகப் பயிலப்

போகும் கருத்துகளை ஏற்பதற்கு மாணாக்கர்களின் மனத்தைத் தயார் செய்வதே இப்படியின் நோக்கம். ஏற்கெனவே அறிந்துள்ளவற்றுடன் புதிய செய்திகளை இணைத்தால்தான் அவை நன்கு பொருந்தி அநுபவமாகும். எனவே, கற்பிக்கும் ஆசிரியர் மாணாக்கர்களின் முன்னறிவினைச் சில வினாக்களால் சோதித்து அறிதல் வேண்டும். இதனை அறியாது கற்பிக்கும் ஆசிரியரின் முயற்சி கொன்னே கழியும். கற்பிக்கும் பாடத்தையொட்டி ஒரு சில தேர்ந்தெடுத்த வினாக்களை விடுத்தால் மாணாக்கர்கள் ஏற்ற விடைகள் பகர்வர்; அவ்விடைகளிலிருந்து அவர்களுடைய முன்னறிவுத் திரளையைத் (Apperceptive mass) தெரிந்து கொள்ளலாம். இந்தப் படியைச் ''சிக்கெனப் பிடித்துக் கொண்டு'' கே. இராமச்சந்திர அய்யர் கற்பித்தார் என்பதை இப்போது நினைவுகூர முடிகின்றது.

இன்முகத்துடன் இவர் வகுப்பிற்குள் நுழைவதே அற்புதமாக இருக்கும். பஞ்சகச்சம், மூடிய நிலையிலுள்ள மேலங்கி (Close coat) அணிந்திருப்பார். முல்லை மலர் போன்று நல்ல வெளுப்பான துணியாலான தலைப்பாகை இவர் தலையை அணி செய்யும். நெற்றியில் திகழும் திருநீற்றுப்பட்டையும் சந்தனப் பொட்டும் பொன்னிற முகத்திற்குப் பொலிவூட்டும்; புன்முறுவல் பூத்த முகம் அறிவொளி வீசி நிற்கும். இவர் அங்கவஸ்திரம் அணிவதில்லை. இவர் வகுப்பில் அமர்வதே இல்லை. வகுப்பில் நுழையும் போதே கரும்பலகைத் துடைப்பான் (துணிதான் பயன்படுத்தப் பெற்றது) நாலைந்து சுண்ணக் காம்புகள் கொண்டு வருவார். வரலாற்று ஆசிரியர் கதை சொல்லுவது போல் ஆரம்ப கணிதத்திலுள்ள கணக்கின் சூழ்நிலையை உண்டாக்கி விடுவார். இலாப-நட்டம், கூட்டு வாணிகம், வட்டிக்கணக்கு, கூடுவட்டி (Compound interest) இவற்றைக் கற்பிப்பது அற்புதமாக இருக்கும். வகுப்பறையிலிருப்பதை

மறந்து அங்காடித் தெருவில் இருப்பது போன்ற சூழ்நிலைய உண்டாக்கி விடுவார். நாங்களே முதல் போட்டுக் கூட்டு வாணிகம் நடத்துவது போலவும், கந்து வட்டி கந்தசாமிக் கடையில் வட்டிக்குக் கடன் வாங்குவது போலவும் காஃபிப் பொடிக்கடையில் காஃபித் தூளில் சிக்கரித் தூளைக் கலப்பது போலவும், மண்டியில் தேங்காய், சருக்கரை மூட்டை போன்ற சரக்குகள் வண்டியில் வந்து இறங்குவது போலவும் உணர்ச்சியை எழுப்பி விடுவார். கற்பிக்கும் செய்திகள் அன்றாட வாழ்க்கையுடன் இணைந்து விடுவதால் கணக்குப் பற்றிய விவரங்களைக் கரும்பலகையில் மணிமணியான எழுத்துகளால் பொறிக்கப்படும்போது கருத்துகள் மனத்தில் ஆழப்பதிந்து விடுகின்றன.


'காலமும் தூரமும்' (Time and Distance) என்ற ஆரம்ப கணிதப் பாடப் பகுதியை மிகுந்த உற்சாகத்துடன் கற்பித்தமை இப்போது நினைவில் குமிழியிடுகின்றது. (1)900 அடி நீளமுள்ள சரக்கு இரயில் மணிக்கு 20 மைல் வேகத்தில் வருகின்றது; அதன் எதிர்த்திசையிலிருந்து 660 அடி நீள விரைவு இரயில் வண்டி மணிக்கு 40 மைல் வேகத்தில் வந்து கொண்டிருக்கின்றது. இரண்டு வண்டிகளும் ஒன்றை யொன்று கடந்து செல்ல எவ்வளவு நேரம் ஆகும்? (2) 800 அடி நீளமுள்ள பயணிகளை ஏற்றிக் கொண்டு மணிக்கு 30 மைல் வீதம் செல்லும் இரயில் வண்டியொன்று 2 நிமிடங்களில் இரயில் நிலைய மேடையைக் கடந்து சென்றால் மேடையின் நீளம் என்ன? இம்மாதிரியான கணக்குகளைக் கற்பிக்கும்போது மாணாக்கர்கள் இரயில் வண்டிகள், இரயில் நிலையம், எதிர்த்திசையில் வரும் வண்டிகள், ஒரே திசையில் வெவ்வேறு வேகங்களில் செல்லும் வண்டிகள் இவற்றை மானசீகமாகப் பார்த்தல் வேண்டும். அக்காலத்தில் நாட்டுப்புறங்களிலிருந்து வரும் மாணாக்கர் களில் பெரும்பாலோர் இரயிலைப் பார்க்காதவர்கள், நகர்ப் புறத்திலிருந்து வரும் மாணாக்கர்கள் இரயிலைப் பார்த்

திருந்தபோதிலும், இத்தகைய கணக்குகளைச் செய்யும் போது மானசீகமாகப் பார்ப்பது அருமை; நேரில் பார்க்கும் போது ஒருவித தெளிவும் பெற வாய்ப்பு உண்டு. ஆகவே, மாணாக்கர்களிடம் அக்கறை தோன்றவும், கணக்கு போடு வதற்கு அவர்கள் மனத்தைத் தயாரிக்கவும் கே. இராமச் சந்திர அய்யர் தம் வகுப்பு மாணவர்களை முசிறியிலிருந்து படகுகளின் மூலம் குளித்தலைக்கு இட்டுச்செல்வார். காலை உணவு உண்டு, கையில் சிற்றுண்டியை எடுத்துக்கொண்டு சுமார் 10.00 மணிக்குப் புறப்படுவோம். குளித்தலை இரயில் நிலையத்தில் எதிர்த்திசையில் இரயில் வருவதைப் பார்ப்ப தற்கும், ஒரே திசையில் வண்டிகள் வருவதைப்பார்ப்பதற்கும் வண்டிகள் நிலைய மேடையைத் தாண்டுவதை நேரில் காண் பதற்கும் பல மணி நேரம் 'தவம்' கிடப்போம். வண்டிகள் வராத போது, வண்டிகள் மேடையைக் கடப்பதுபற்றி விளக்குவார் கணக்கு ஆசிரியர் இராமச்சந்திர அய்யர். நிலையத்தின் ஒருகோடியை இஞ்சின் தொட்டு, மறு கோடியை வண்டியின் கடைசிப்பெட்டி கடப்பதைத்தான் வண்டி மேடையைக் கடந்தது என்ற உண்மையை நிதர்சன மாக விளக்குவார். வண்டிக்காக காத்திருக்கும் நேரத்தில் கணக்குபற்றிய பல்வேறு குறிப்புகளைத் தந்து விளக்குவார்.

நாங்கள் படித்த வகுப்பின் அடுத்த பிரிவுக்குக் கணக்கு கற்பித்தவர் சந்தானம் அய்யங்கார் என்பவர். மிக அருமை யாக விளக்குவதாக அப் பிரிவு மாணாக்கர்கள் சொல்வதைக் கேட்டிருக்கின்றேன். ஏராளமான கணக்குகளைக் கரும் பலகையில் போட்டுக் காட்டுவதையும் வீட்டு வேலையாக அதிக எண்ணிக்கையில் போடுமாறு செய்வதையும் ஓராண்டில் 2 குயர் குறிப்பேடு நான்கிற்குமேல் ஆவதையும் சிறப்பாகப் பேசுவார்கள். ஆனால் கே. ஆர். வகுப்பு மாணாக்கர்கட்கு 2 குயர் குறிப்பேடு ஒன்று கூட முடிவ தில்லை. இவர் கருத்துகள் மனத்தில் ஆழப்பதிவதையே

நோக்கமாகக் கற்பித்ததை அப்போது நினைத்து பார்க்கும் திறன் இல்லையாயினும் இப்போது நினைந்து பார்த்துச் சிந்திக்க முடிகின்றது.

இவர் இயற்கணிதத்தில் வாய்பாடுகளைக் (Formulae) கற்பிப்பதில் பெரும்புகழ் பெற்றவர். $a^3-b^3$, $(a+b+c)^3-a^3-b^3-c^3$ போன்றவற்றைக் கற்பிப்பதிலும், இவைபற்றிய கணக்குகள் போடும்போது ஒவ்வொரு படியிலும் (Step) இந்த வாய்பாடு விரிந்து செல்வதைப் பொருத்திக் காட்டுவதிலும் அற்புதமான கைவரிசைகளைக் காட்டுவார். வடிவ கணிதத்தில் கடாத்தீர்வுக் (Rider) கணக்கு போடுவதில் மாணாக்கர்கள் ஒவ்வொரு படியிலும் சிந்திக்க வாய்ப்புகள்




தருவார். எ-டு. ABC என்பது ஒரு முக்கோணம். B,C என்ற உட்கோணங்களின் சமவெட்டிகள் I என்ற இடத்திலும் B,C

யின் வெளிக் கோணங்கள் $I_1$ என்ற இடத்திலும் சந்திக்கின்றன. (i) I B $I_1$ C என்பதை ஒரு வட்டநாற்கரம்என்பதை மெய்ப்பி. (ii) $I, I_1$ என்ற கோணங்களின் மதிப்பு என்ன? இது சாதாரணக் கணக்குதான். சில ஆசிரியர்கள் இதனை வேகமாகக் கரும்பலகையில் எழுதி மாணாக்கர்களைத் தத்தம் குறிப்பேடுகளில் எழுதிக் கொள்ளச் சொல்லித் தம் பணியைத் தலைக்கட்டிவிடுவர். இது சில நிறைமதி மாணாக்கர்கட்குத் தெளிவாகும்; பல சராசரி மாணாக்கர்கட்கும் குறைமதி மாணாக்கர்கட்கும் புரிவதில்லை. அவர்கள் 'ஈ அடிச்சான் காப்பி 'போல் தத்தம் குறிப்பேடுகளில் எழுதிக் கொண்டு விடுவர்.

கே.ஆர். இந்தக் கணக்கை பின்னர்க் குறிப்பிட்ட இரு வகை மாணாக்கர்கட்கு வினாக்களை விடுத்து அவர்கள் சொல்லும் விடைகளைக் கொண்டே இக்கணக்கைக் கரும் பலகையில் செய்து காட்டுவார். அவர் இக்கணக்கைச் செய்வதில் அணுகும் முறை :

வினா : ஒரு வட்ட நாற்கரம் என்பது என்ன?

விடை : நாற்கரத்தின் நான்கு மூலைகளும் ஒரு வட்டத்தினுள் அமைத்தால் அது வட்ட நாற்கரம் எனப்படும்.

வினா : அவற்றின் கோணங்களைப்பற்றி ஏதாவது தெரியுமா?

விடை : தெரியும். வட்ட நாற்கரத்தின் நேர்எதிர்க் கோணங்களின் கூட்டுத்தொகை 180 டிக்ரியாக இருக்கும்.

வினா : முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூட்டுத் தொகை என்ன?

விடை : $180^\circ$.

வினா : A+B+C=180 என்று போட்டுக் கொள்ளலாமா?

விடை : போட்டுக் கொள்ளலாம்.

வினா : அப்படியானால் $\frac{A}{2} + \frac{B}{2} + \frac{C}{2} = 90$ என்பது சரிதானே?

விடை : சரிதான்.

இப்படிக் கேட்டுக் கொண்டே மாணாக்கர்களிடமிருந்தே விடையை வரவழைத்து $\frac{A}{2} + \frac{B}{2} + \frac{C}{2} = 90$ என்பதை அறுதியிட்டு விடுவார். அதன் பின்னர் மேற்கூறியவாறு வினாக் களைவிடுத்துக் கொண்டே பின் வருமாறு எழுதிக் கொண்டே கணக்கைச் செய்து காட்டிவிடுவார்.

(i) கோணம் $IBI_1$ = கோணம் IBC + கோணம் $CBI_1$

$$= \frac{B}{2} + \frac{1}{2}(180 - B)$$

$$= \frac{B}{2} + 90 - \frac{B}{2}$$

$$= 90^\circ$$

இப்படியே கோணம் $ICI_2 = 90^\circ$ என்று காட்டுவார். அதன் பிறகு, ஒரு நாற்கரத்தின் நான்கு கோணங்களின் கூட்டுத் தொகை $360^\circ$ என்பதை மாணாக்கர்களிடமிருந்தே வருவித்த பிறகு,

கோணம் $I_1$ + கோ $I_2 = 360^\circ$ − கோ $IBI_1$ − கோ $ICI_2$

$$= 360^\circ - 90^\circ - 90^\circ$$

$$= 180^\circ$$

என்று எழுதிக் காட்டுவார். இந்த நிலையில் நாற்கரத்தின் நேர் எதிர்க்கோணங்களின் கூட்டுத் தொகை $180^\circ$ என்ற

உண்மையை மாணாக்கர்களைக் கொண்டே நிறுவிக் காட்டி முதல் உண்மையை நிலை நாட்டுவார்.

(ii) இரண்டாவது பகுதியையும் வினாக்களை விடுத்துக் கொண்டே பின்வருமாறு எழுதிக்காட்டுவார்.

$$\text{கோ } I + \text{கோ } IBC + \text{கோ } ICB = 180^\circ$$

$$\begin{aligned}\text{கோ } I &= 180^\circ - \text{கோ } IBC - \text{கோ } ICB \\ &= 180^\circ - (\text{கோ } IBC + \text{கோ } ICB) \\ &= 180^\circ - \left(\frac{B}{2} + \frac{C}{2}\right) \\ &= 180^\circ - \left(90^\circ - \frac{A}{2}\right) \\ &= 180^\circ - 90^\circ + \frac{A}{2} \\ &= 90 + \frac{A}{2}\end{aligned}$$

என்று இரண்டாவது பகுதியினை விரிவாக விளக்கிக் காட்டு வார். அடுத்து,

$$\begin{aligned}\text{கோ } I_1 &= 180^\circ - \text{கோ } IBC - \text{கோ } I_1CB \\ &= 180^\circ - \text{கோ } I_1BC + \text{கோ } I_1CB) \\ &= 180^\circ - \left(90^\circ - \frac{B}{2} + 90^\circ - \frac{C}{2}\right) \\ &= 180^\circ - 90^\circ + \frac{B}{2} - 90^\circ + \frac{C}{2} \\ &= \frac{B}{2} + \frac{C}{2} \\ &= 90^\circ - \frac{A}{2} \left( \because \frac{A}{2} + \frac{B}{2} = \frac{C}{2} = 90^\circ \right)\end{aligned}$$

என்று மேலும் விளக்கித் தலைக்கட்டுவார். கடாத்தீர்வுக் கணக்கைச் (Rider) செய்யும் போது முதலில் கரும்பலகையில்

வரைபடத்தைப் போட்டு மாணாக்கர்களைச் சிந்திக்க வைப்பார். துப்புத்துலங்காமல் விழிக்கும் எங்களை வரை படத்தில் வனைவழியை (Construction) வரைந்து மேலும் சிந்தனையைத் தூண்டுவார். அலங்காரத்தீபம் காட்டும் போது கருவறையில் ஆண்டவனின் திருவுருவம் நன்கு புலப் படுவது போல் வனைவழி வரைந்து காட்டியவுடன் கணக்கின் தீர்வு (Solution) பளிச்சென்று பலருக்குத் தட்டுப்படும். வினாக்களை விடுத்துக் கொண்டே மாணாக்கர் கூறும் விடை யைக் கொண்டே படிப்படியாகக் கணக்கின் தீர்வை எழுதிக் காட்டுவார். எங்கட்கெல்லாம் இராமலிங்க அடிகள் காட்டும் 'ஜோதி'யைத் தரிசித்தது போன்ற உணர்வு கிளர்ந்தெழும்.

கே.ஆர். நல்ல அநுபவம் பெற்றவர்: கருவிலே திருவுடையவர். அதாவது பிறவியிலேயே ஆசிரியக் கூறு வாய்க்கப் பெற்றவர். பயிற்சிக் கல்லூரியில் தாம் பெற்ற பயிற்சியும் நீண்டநாள் கற்பித்த அநுபவமும் அவரை சிறந்த ஓர் ஆசிரியராகச் செய்துவிட்டன. தவிர, இவர் கல்வி புகட்டுதலில் மாணாக்கன்தான் மையமேயன்றி புகட்டப் பெறும் பாடமல்ல என்ற ரூஸோவின் கொள்கையை மறையாகக் கொண்டு கற்பித்த பெருமகனார். முலைப் பாலையும் விலைப்பாலையும் குழந்தையின் செவ்வியறிந்து ஊட்டும் அன்னையைப் போலவே, மாணாக்கர்களின் மன நிலை தெரிந்து விதிவருமுறையையும் (Inductive method) விதிவிளக்கு முறையையும் (Deductive method) கலந்து கையாளும் வித்தகர். இவர் கற்பித்த முறைதான் பட்டப் படிப்பு வரையிலும் என்னைக் கணிதத்தில் தலையாய மாணாக்கனாகத் திகழச் செய்தது என்பதை பக்தியுடனும் நன்றியுடனும் நினைவு கூர்கின்றேன்.

அடுத்து, வேதியியலைக் கற்பித்த T.K. இராமநாத பிள்ளை நினைவுக்கு வருகின்றார். இவர் சரியான இளைஞர்.

பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளிவந்தவுடன் ஆசிரியராக அமர்ந்தவர். காதித் துணியாலான நீண்ட குழாய்ச் சட்டையும் திறந்த மேலங்கியும் (Open coat) அணிந்திருப்பார். சில சமயம் கழுத்துப் பட்டைத் தொங்கலும் காணப்படுவதுண்டு. நெற்றியில் திருநீற்றுப் பட்டையும் சந்தனப் பொட்டும் திகழ்ந்ததாக நினைவு. ஆடையைப்பற்றி இவர் தனி அக்கறை கொள்வதில்லை. ஆகவே, மேல் நாட்டு ஆடையுடன் திகழும் இவர் தோற்றம் அவ்வளவாக எங்கள் மனத்தைக் கவர்வதில்லை. எங்கிருந்தாலும் இவரது கீச்சுக் குரல் இவர் இருப்பை இனங்காட்டிவிடும். சுறுசுறுப்புடன் இயங்குபவர்; மாணாக்கர்கள்பால் பேரன்பு கொண்டு பெருநோக்குடன் கற்பித்த பெருமகனார். இவருடைய சீரிய முயற்சினாயில் தான் முசிறி உயர்நிலை பள்ளியில் வேதியியல் சி-பிரிவில் விருப்பப் பாடமாக அமைந்தது. நானும் வேறு நான்கைந்து மாணாக்கர்களும் இதை இரண்டாவது விருப்பப்பாடமாகத் தேர்ந்து எடுத்துக் கொண்டோம். இயன்றவரை எல்லா அறிவியல் உண்மைகளையும் சோதனைகள் மூலம் விளக்குவதில் வல்லவர்; சோம்பலே இவரிடம் தலைக் காட்டுவதில்லை. ஒருசமயம் உயிர்வளி (பிராணவாயு) தயாரிப்பதில் ஒரு விபத்துக்கு ஆளானார். பொட்டாசியம் குளோரேட்டும் கந்தாகமிலமும் கலந்து சூடாக்கும்போது உயிர்வளி வெளிப்படும். குளோரேட் உப்பு தூய்மையற்றதாக இருந்தமையால் (குளோரைட் உப்பும் சிறிது கலந்திருந்தமையால்) குடுவை (Flask) வெடித்து இவர் முகத்தில் அமிலம் சிதறி விபத்துக்குள்ளானார். இறையருளால் கண்கெடவில்லை; முகத்தில் தான் சிறிது விகாரத்தை ஏற்படுத்தி விட்டது. எப்படியும் மாணாக்கரிடம் அறிவியல் உண்மைகளைப் புகுத்திவிட வேண்டும் என்ற துடிப்புதான் இவரிடம் விஞ்சி நிற்கும் பண்பாகத் திகழ்ந்தது. மாணாக்கர்களின் மனநிலையை மறந்து பாடப்பொருளே இவர் மனதில் மீதூர்ந்து நின்றது. மிதிவண்டிச் சக்கரத்திற்குக் காற்றடிப்பது போல வேதியியல்

உண்மைகளை மாணாக்கர் மனத்தில் திணிப்பதில் பேரூக்கம் கொண்டிருந்தார். கற்பிக்கும்போது பொறுமையும் பரிவும் இவரிடம் காணப்படுவதில்லை; மாறாகத் துடிப்பும் அவசரத் தன்மையும் தலைதூக்கி நின்றன.

சோதனைகளைக் காட்டி விளக்குவதில் சிறந்தவராகத் திகழ்ந்தாலும் ஏட்டுப்படிப்பாக, வாய்பாடுகளாக விளங்குவதில் இவர் சிறந்தவராகத் திகழவில்லை. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. சார்லஸ்-பாயில் விதியை விளக்கும் $\frac{PV}{T} = \frac{P_1V_1}{T}$ என்ற வாய்பாட்டை இவருக்குச் சரியாக விளக்கத் தெரியவில்லை. இந்தச் சமன்பாடு ஏன் என்பது விளங்காமையால் என் ஆராய்ச்சி மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. வேதியியல் பாட வகுப்பில் அப்பாவு என்ற மாணாக்கனும் நானும்தான் தலை மாணாக்கர்களாக இருந்தோம். அப்பாவுக்கு விளங்கிற்றோ விளங்கவில்லையோ என்பது இறைவனுக்குத்தான் வெளிச்சம். எனக்கு விளங்கவில்லை என்பதற்கு நானே சான்று. 'விளங்கவில்லை' என்று தெரிவித்தேன். வகுப்பில் ஆசிரியர் மேடை இருந்தது. அதன்மீது மேசையும் நாற்காலியும் போடப்பட்டிருந்தன. ஆசிரியர் பின் பக்கத்தில் சுவரிலேயே அமைந்த கரும்பலகை இருந்தது. இராமநாதபிள்ளை கரும்பலகையில் மேற்குறிப்பிட்ட வாய்பாட்டையே எழுதி ஏதோ விளக்கினார். அவருக்கு விளக்குவதற்குவேண்டிய ஆங்கில அறிவு இல்லையா, அல்லது அவர் விளக்கத்தைப் புரிந்து கொள்ளுவதற்கேற்ற ஆங்கில அறிவு என்னிடம் இல்லையா என்பது அந்த ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். நான் 'விளங்கவில்லையே' என்றேன். மேடையிலிருந்து இறங்கி வந்து கன்னங்கள் வீங்கும் அளவுக்கு மாறி மாறி அறைந்தார். மீண்டும் மேடையேறி அதே பாடத்தையே படித்தார். சொன்னதையே சொல்லும்

கிளிப்பிள்ளையானாரேயன்றி வேறுவிதமாக மாற்றிச் சொல்லும் திறமை இவரிடம் இல்லை என்பதை உணர்ந்தேன். 'ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும்' என்ற பத்தினித் தனத்தைக் கைவிட்டு இந்த இடத்தில் மட்டும் தமிழைக் கையாண்டிருந்தால் ஒருகால் விளங்கியிருக்குமோ என்று என் மனம் இப்போது எண்ணுகின்றது. ஆனால் விளக்குவதற்கேற்ற தமிழ்மொழியறிவு வேண்டுமே. உள்ளத்தில் உண்மையொளி இருந்தால்தானே வாக்கினில் வரும்?என்ன செய்வது? அவர்தான் கிளிப்பிள்ளையாயிற்றே. மீண்டும் 'விளங்கவில்லையே!' என்றேன். திரும்பவும் மேடையினின்றும் இறங்கி வந்து கன்னத்தில் கை வைக்க முயன்றார். "நிறுத்துங்கள்!" என்றேன். சற்றுத் துணிவும் பிறந்தது. "அறை கொடுப்பது தான் உங்கள் விளக்கமா?" என்று துணிவாகக் கேட்டு விட்டேன். அன்றிலிருந்து கைவைப்பதையே நிறுத்தி விட்டார். "பெரிய மனுஷனாகி விட்டாயா?" என்று வினவி விட்டு மௌனமானார்.

இப்படித் தேவையற்றதற்கெல்லாம் அடியும் உதையும் வாங்கிக் கொண்டு வேதியியல் படிப்பதை என் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. அன்று மாலையிலேயே தேம்பியழுத நிலையில் செல்லய்யா என்ற தலைமையாசிரியரையும் கே.ஆர். என்ற மாணாக்கர் விடுதி மேலாளரையும் (Warden) சந்தித்து வேதியியலிருந்து இயற்பியலுக்கு என்னை மாற்றி விடுமாறு வேண்டினேன். இனி 'என்னால் அடி தாங்க முடியாது' என்று முறையிட்டேன். இருவரும் என் நிலைமைக்கு வருந்தினார்கள். இந்தச் சின்ன வயதில் அநுபவக் குறைவாக இருந்தவருக்கு விருப்பப்பாடப் பொறுப்பைத் தந்தது பிசகு என்று குறிப்பாகப் பேசிக்கொண்டது அப்போதே என் காதில் பட்டது; ஆனால் அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் அறிவு எனக்கு அப்போது இல்லை. இனி "இப்படி நிகழாது" என்று சொல்லி என்னை

அனுப்பி விட்டனர். என்னை வெளியேற அனுமதித்திருந் தால் இராமநாதப்பிள்ளைக்கு வேதியியல் கற்பிக்கும் வாய்ப்பே இராது போயிருக்கும்; எல்லோருமே வெளியேறி யிருப்பர். இளையரான இராமநாதப் பிள்ளைக்கு இருவரும் ஏதோ கடுமையான அறிவுரை வழங்கியிருப்பர் என எண்ணு கிறேன். அதிலிருந்து அவர் மேற்படிவ மாணாக்கர்களின் மீது கைவைப்பதையே நிறுத்திக் கொண்டு விட்டார்.

அநுபவம் இல்லாக் காரணத்தாலும், பொறுமையும் பரிவும் இல்லாமையாலும்,மாணாக்கர் மனநிலையை அறிந்து கற்பிக்கும் திறன் இல்லாமையாலும் சிறிது காலம் திறனின்றியே இருந்தார். மனத்தில் தாம் ஏற்றிக் கொண்டு வரும் 'பாடப் பளுவை' எப்படியாவது மாணாக்கர் மனத்தில் திணித்துத் தம் பளுவைக் குறைத்துக் கொள்ள முயன்றாரே யன்றி மாணாக்கர் மனநிலையைச் சிறிது காலம் புரிந்து கொள்ளவே இல்லை. "புற உலகிலிருந்து பட்டறிவு மூலம் பெறும் கருத்துகளே கல்வி என்பது; இப்பட்டறிவைப் புலன் கள் வாயிலாகவே அடைய முடியுமாதலால், ஆசிரியர்கள் இவ்வறிவுப் பெருக்கத்தில் துணையாக இருக்க வேண்டும்" என்ற பெஸ்டலாஸ்ஸியின் கொள்கையைக் கடைப்பிடிப்ப தாக நினைத்துக்கொண்டு புலப்பயிற்சியை அறைவது மூலம் தந்தார் போலும்! வாயின் மூலம் விளக்கி செவிப்புலம் மூலம் கருத்துகளை மனத்தில் ஏற்றுவதற்குப் பதிலாகத் தொடு புலன் மூலம் (Sense of touch) ஏற்ற நினைத்தார் போலும்! மருத்துவர்கள் வாய்வழியாக மருந்துகளைச் செலுத்தினால் பலன் தருவதில் காலதாமதம் ஆகும் என்று கருதி ஊசியின் மூலம் உடலில் குத்திப் புகுத்தவில்லையா? இதனைப் பல இடங்களில் கண்டிருப்பார் அல்லது தாமே அநுபவித்தும் இருப்பார் அல்லவா? 'அடியாத மாடு படியாது' என்ற பழமொழியை செயற்படுத்தி அதன் பொருளை நேரடியாகப் புரிந்து கொள்ள முயன்றார் போலும்!

T. K. இராமநாதபிள்ளை மாணாக்கர் உணவு விடுதியிலேயே உணவு கொண்டிருந்தார். திருமணமாகாத மாணி ஆதலால் நாங்கள் எல்லாம் உணவு கொண்டு படிப்பில் ஆழ்ந்திருந்த சமயம் அவர் சற்றுத் தாமதமாக வந்து உணவு கொண்ட பிறகு என் அறைக்கு வந்தார்; என் அருகிலும் வந்தார், நான் அப்போது ஆங்கிலம் படித்துக் கொண்டிருந்தேன். ஆங்கில வாக்கியம் ஒன்றைக் கூறுபடுத்திக் காட்டுமாறு (analyse) வினவினார். தலைமைக் கிளவியத்தைச் சரியாகச் சொன்னேன். சார்புக் கிளவியங்களில் ஒன்றைச் சொல்லும்போது தவறிழைத்தேன். கன்னத்தில் 'இளந்தட்டு' இட்டார். நான் உடனே, "ஐயா, உங்களை வெற்றிலை பாக்கு வைத்து வரவேற்கவில்லையே. உணவு கொண்ட பிறகு உறைவிடத்திற்கு நேராக ஏகுங்கள்" என்று சொல்லிவிட்டேன்! அவரும் "பெரிய மனிதனாகி விட்டாயா"? என்று சொல்லிக் கொண்டே போய்விட்டார். எப்படியும் மாணாக்கர்கட்குச் சொல்லவேண்டும் என்ற அறிவுத்தினவு அவரிடம் உண்டு; நல்லெண்ணத்தால் எழும் தினவு அது. அதே சமயம் பொறுமையின்மையால் 'கைத்தினவும்' எடுப்பதுண்டு. இதுவே அவரிடம் காணப்பெற்ற குறை. காலப்போக்கில் இக்குறை நீங்கியிருக்கும் எனக் கருதுகின்றேன்.

பொது அறிவியலைக் கற்பித்தவர் A. நாராயணசாமி அய்யர். ஒல்லியான திருமேனியை மூடிய மேலங்கி அணி செய்யும். பஞ்சகச்ச முறையில் வேட்டி இடுப்பில் திகழும். தலையில் முல்லைப் பூ நிறம் போன்ற வெண்ணிறத் தலைப் பாகை இடம் பெற்றிருக்கும். அந்தக் காலத்தில் பெரும்பாலான ஆசிரியர்களிடம் 'கிராப்புத்' தலையைக் காண்டல் அரிது. சிலர் தலையில் சிகையும் சிலர் தலையில் குடுமியும் தான் இருந்தன. இவற்றுடன் மேலங்கி (Coat) அணிந்தால் விநோத ஆடைப் போட்டியில் (Fancy dress competition)

கலந்து கொள்பவர்போல் தோற்றமளிக்கும் என்று கருதித் தான் பெரும்பாலோர் தலைப்பாகை அணிந்து கொண்டார் களோ என்று என் மனம் இப்போது எண்ணுகின்றது. எது காரணமாக இருப்பினும் தலைப்பாகை அணிந்து கொண்டால் அது எடுப்பான தோற்றத்தையும் முகப் பொலிவையும் தந்தது என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை.

நாராயணசாமி அய்யர் மிக மெதுவாகப் பேசுவார்; அளவான சிரிப்பு இவர் உதடுகளில் முகிழ்க்கும். அந்தச் சிரிப்பில் எந்தவித களையும் இராது. கற்பிப்பதில் மிக வல்லவர் என்று சொல்ல முடியாவிடினும் உண்மைத் தொண்டர் என்றே சொல்ல வேண்டும்; சுவையான முறை யில் எடுப்பான குரலில் கற்பித்திருந்தால் நல்ல பெயர் எடுத் திருக்கலாம். இவர் கற்பித்தமுறை மாணாக்கரிடம் எந்த விதமான தாக்கமும் ஏற்படுத்தவில்லை. சிலர் இவரை 'ஊமையன்' என்றே குறும்புப் பெயரால் குறிப்பிட்டனர். சில மாதங்கள்தாம் இவர் நான்காம் படிவத்தில் பொது அறிவியல் கற்பித்தார். அதன் பிறகு வின்செண்ட் என்ற திருநாமம் கொண்ட அறிவியல் இளங்கலைப் பட்டதாரி ஒருவர் அமர்த்தப் பெற்றதால் அவரிடம் இப்பொறுப்பு அளிக்கப் பெற்றது. பொறுப்பு ஏற்றுக் கொண்ட சில திங்களிலேயே மாணாக்கர்களிடம் பெரும் புகழ் பெற்றார். குழாய்ச் சட்டை, திறந்த மேலங்கி (Open coat), கழுத்துப் பட்டைத் தொங்கல் (Tie), கால் புதை அரணம் (Shoe), கிராப்புத்தலை—இவற்றை அழகுடன் அணிந்த தோற்றம் இவர் புகழுக்கு ஒரு காரணமாக இருந்தாலும் எளிமை யாகவும் அன்பாகவும் பழகும் முறை, மனத்தில் கருத்துகள் ஆழப்பதியும் முறையிட கற்பித்த பாங்கு இவைதாம் இவர் புகழுக்கு முதற்காரணமாக இருந்தன என்றுதான் சொல்ல வேண்டும். ஆங்கிலமும் அருந்தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில்தான் கற்பிப்பார். ஆங்கிலத்திலேயே கற்றவராத

லால் தமிழ் அரிதாகவே இவர் நாவில் தாண்டவமாடியது. எனினும் தமிழன்னையை பக்தியுடன் அணுகினமையால் நாளடைவில் அன்னையின் அருள் சுரந்தது. இரண்டரை ஆண்டுக் காலம் இவரிடம் பொது அறிவியல் கற்றதனால் இவர் தமிழில் கற்பித்த முறையில் பெருமாற்றம் கண்டேன். தமிழில் கற்பிக்க முயன்றால் காலப்போக்கில் அனைத்தும் சீர்படும் என்ற உண்மைக்கு வின்செண்ட் அவர்கள் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்கள்.

இக்காலத்தில் நாராயணசாமி அய்யர் 'பொது அறிவியல்' நூலொன்றை நான்காம் படிவ மாணாக்கர்கட்கு வெளியிட்டார். இது எல்லோரும் வாங்கும் கட்டாயம் ஏற்பட்டது. வின்செண்ட் அற்புதமாகக் கற்பித்து குறிப்புகள் தந்தபிறகு இந்த நூலை யாரும் விரும்பவில்லை. முதலாவதாக நூல் கவர்ச்சியான முறையில் அச்சிடப்பெறவில்லை; நூலின் தமிழ் நடை நன்றாக, ஆற்றொழுக்காக அமையவில்லை; மேடுபள்ளங்களுள்ள சரளைச் சாலையில் நடப்பது போன்ற அநுபவத்தைத் தந்தது. இதைப் படிக்கும்போது நூலிலுள்ள கருத்துகள் என் மனத்தில் பதியவில்லையாதலால் 'நூல் நன்றாக இல்லை' என்று சொல்லிவிட்டேன். அன்றிலிருந்து இன்றுவரை 'ஒளிவு மறைவு' இல்லாத பேச்சுப் பழக்கமுள்ளவன்; இந்த வெள்ளை மனத்தைச் சிலர் விரும்புவதில்லை. இதனால் எனக்குப் பல சமயம் தொல்லைகளும் ஏற்பட்டன. பலர் இக்குறையைப் (இன்னும் இது குறையென்று நான் ஒப்புக் கொள்வதில்லை) போக்கிக் கொள்ளுமாறு வற்புறுத்தினர். இஃது உலகியலுக்கு ஒவ்வாத பழக்கமாக இருக்கலாம். என் தூய்மையான உள்ளம் இதை மாற்றிக் கொள்ள மறுக்கின்றது. என் செய்வேன்?

**'புறங்கூறுதல்'** என்ற பண்பு சிறார்களிடமிருந்து வளர்ந்தவர்கள், கிழவர்கள்வரை ஆணவமலம்போல்

பிறவிப் பண்பாகத் திகழ்வதைக் காணலாம். இப்பண்பையே மூலதனமாகக் கொண்டு பதவிஉயர்வு, வேறுபல சலுகைகள் போன்றவற்றைப் பலர் பெற்று 'வயிறு வளர்ப்பதைக்' காணலாம். இவர்கள் சமூகத்தின் நஞ்சாகத் திகழ்பவர்கள். சமூகம் இவர்களை என்று புறக்கணிக்குமோ தெரியவில்லை. ஆணவமலம் அகற்ற முடியாத நிலையிலிருப்பதைப்போல் இதுவும் சிலரிடம் அகற்றமுடியாத பண்பாகத் திகழ்கின்றது. 'நூல் நன்றாக இல்லை' என்று நான் சொன்னதை எப்படியோ திரித்து யாரோ நாராயணசாமி அய்யரிடம் 'வத்தி' வைத்து விட்டனர். நாராயணசாமி அய்யர் இதனால் அதிர்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. ஒரு சமயம் என்னைப் பள்ளித் தாழ்வாரத்தில் சந்தித்தபோது, ''தம்பி சுப்பு, உனக்கு ஒழியும்போது என்னை என் அறையில் வந்து பார்'' என்று அன்பாகத்தான் சொன்னார். இயல்பாகவே பயந்த சுபாவமுடையவனாதலால் பயந்து நடுங்கிப் போனேன். மிக நடுங்கிய நிலையில் அவரை அறையில் சந்தித்தேன். ''அப்பா உன் பெயர் என்ன? நீ எந்த ஊர்? உன் தாய் தந்தை யாவர்?'' என்றெல்லாம் வினாக்களை விடுத்தார். நான் இவற்றிற்கெல்லாம் பதில் சொன்னேன். நான் வகுப்பில் முதல் மாணாக்கனாக இருந்தமையாலும் கே. ஆர். தலைமையாசிரியர், இராமநாதப்பிள்ளை இவர்கள் அன்புக்குப் பாத்திரனாக இருந்தமையாலும் 'நூல் நன்றாக இல்லை' என்ற என் கருத்து நூலின் புகழுக்குப் பங்கம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சினார் போலும். அதற்கு மேல் ஒன்றும் கூறாமல் ''தம்பி போய் வா. ஒன்றுமில்லை. சும்மாதான் கூப்பிட்டேன். நன்றாகப்படி'' என்று அறிவுரை கூறி அனுப்பி விட்டார். இந்நிகழ்ச்சி இன்றும் பசுமையாக என் மனத்தில் உள்ளது.

# 28. நல்லாசிரியர்கள்—வேறு நால்வர்

மாணாக்கர்கட்குப் பாடம் சொல்வதைப் பற்றி நச்சினார்க்கினியர் பண்டையோர் வழி வழியாக மாத்திரை போல் தந்த நூற்பாவைக் காட்டுவார்.

ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்
திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்.[11]

ஆசிரியர் பொழிப்பு, அகலம், நுட்பம், எச்சம் என்ற வகையில் எதனைக் கையாண்டாலும் 'கொள்வோன் **உணர்வகை** அறிந்து அவன் கொள்வரக் கொடுத்தல்' தான் சிறந்த முறையாகும். 'உணர்வகை அறிதல்' தான் கீழ்வகுப்புகளிலும் மேற்படிவங்களிலும் கற்பிக்கும் ஆசிரியர் கவனிக்க வேண்டிய குறிப்பாகும். இக்குறிப்பைத் தெளிவாக அறிந்து கற்பிப்பவர்களே நல்லாசிரியர்களாவர்.

நன்னூலாசிரியரும் பாடம் சொல்லுவதைப் பற்றி,

ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்துஅவன்
உளங்கொளக்
கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப.[12]

11. தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரையில் காட்டப் பெற்றுள்ள மேற்கோள் நூற்பா.
12. நன். நூற். 36.

என்று நூற்பா இட்டுக் காட்டுவர். 'ஈதல் இயல்பு' என்பது பயிற்று முறையைக் குறிப்பிடும் சொற்றொடர். 'காலமும் இடமும்' என்பதைத்தான் இக்காலத்தார் 'தகுந்த சூழ்நிலை' (Proper environment) என்று கூறுவர். 'உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்தல்' என்பது பாட ஆயத்தத்தைக் (Lesson planning) குறிக்கும். 'கொள்வோன் கொள்வகை அறிந்து' என்பது ஹெர்பார்ட் கூறும் 'மனத்தைத் தயாரித்தல்' (Preparation) என்ற படியில் அடங்குவதாகக் கொள்ளலாம். இவற்றை நன்கு அறிந்த அநுபவமிக்க ஆசிரியர்களிடம் பயிலும் பேறும் எனக்குக் கிட்டியிருந்தது. இவர்கள்தாம் என் கல்வி வாழ்க்கையில் முன்மாதிரியாகத் திகழ்கின்றனர். முன் குமிழியில் கே. ஆர்., டி. கே. ஆர் ஆகிய இருவரைக் குறிப்பிட்டேன். இந்தக் குமிழியில் மேலும் சிலர் எழுகின்றனர்.

வரலாற்றுப் பாடம் கற்பிப்பதில் **செல்லய்யா** என்று செல்லப் பெயருடன் விளங்கின **எஸ். அரங்கசாமி அய்யங்கார்** முன்னணியில் நிற்கின்றார். இவர் ஐந்தாம் படிவத்தில் வரலாறு கற்பித்தார். நான்காம் படிவத்தில் கற்பித்தவர் மணி அய்யர். ஆறாம் படிவத்தில் கற்பித்தவர் யார் என்பதை இப்போது நினைவுகூர இயலவில்லை. அன்று ஆறாம் படிவத்தில் வரலாறு கற்பிப்பதற்கு நல்லாசிரியர் எனக்கு அமையவில்லை என்பதுதான் என் கணிப்பு. பாட நூல்களைப் படித்துக் காலந்தள்ளி தேர்வும் எழுதி விட்டேன். ஆனால் செல்லய்யா கற்பித்ததைத்தான் இன்றும் நினைவுகூர முடிகின்றது. இவருடைய தோற்றமே மனம் கவர்வதாக இருந்தது. ஒல்லியான உடலமைப் புடனிருந்தாலும் இவர்தம் பொன்னிறமேனி மனங்கவர்வ தாக இருக்கும். பஞ்சகச்சமும், மூடிய மேலங்கி (Close Coat) அதன்மீது திகழும் விசிறி மடிப்புடன் கூடிய அங்கவஸ்திரம், முல்லை மலர்போன்ற வெண்ணிறத் தலைப்பாகை, நெற்றி

யில் தீட்டப்பெற்ற வட கலைத் திருமண்காப்பு, புன் முறுவல் பூத்த முகம் இவை இவருக்கு மேலும் கவர்ச்சியை அளித்தன. வரலாற்றுப்பாடம் கற்பிப்பதில் இவருக்கு நிகர் இவரே. இவரும் வகுப்பில் உட்காருவதில்லை. மேசை யருகில் நின்று கொண்டே கதை சொல்லுவது போலவே வரலாற்றை ஆற்றொழுக்கு போன்ற ஈரத்தமிழில் இன்முகத் துடன் கூறி வருவது எங்கட்கெல்லாம் குளிர்ந்த இனிப்புப் பானம் பருகுவது போன்றிருக்கும். ஏழுமலையான் சந்நிதி யில் வழங்கப்படும் பச்சைக் கர்ப்பூரத் தீர்த்தம் பருகுவது போல் உணர்வு எழும்.

கதை சொல்லும் பண்பு வரலாற்று ஆசிரியரிடம் அமைந்திருக்க வேண்டிய ஒப்பற்ற பண்பாகும். கதை சொல்லுவதன் நோக்கமே இளஞ்சிறார்களுக்கு மகிழ்ச்சியை யும் உற்சாகத்தையும் அளிப்பதாகும் என்பதை உயர் நிலைப் பள்ளியில் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்கள் உணர்தல் வேண்டும். இதனால் சிறார்கட்குப் படிப்பிலும் பள்ளியின் பாலும் ஆர்வம் உண்டாகும். வரலாற்று வகுப்பு எப்பொழுது வரும் என்ற பேரவா மனத்தில் குமிழியிட்டுக் கொண்டேயிருக்கும். ஆசிரியர் நிரல்படி நிகழ்ச்சிகளைக் கோவையாக ஆற்றொழுக்கான தமிழில் சொல்லும்போது அதைக் கேட்கும் சிறார்களிடம் எண்ண வளர்ச்சி, கற்பனை யாற்றல், நினைவாற்றல் ஆகியவை சிறந்த முறையில் வளர ஏதுவுண்டு; மனமும் கருத்துகளுடன் ஒன்றுபட்டு வரலாற்று நிகழ்ச்சியில் ஈடுபடுவதனால் சிறார்களின் கவனிக்குந் திறனும் வளரும்.

வரலாறு கற்பிக்கும் ஆசிரியரின் ஆயத்தம் மிகவும் இன்றியமையாதது. இவர் உற்சாகமாவும், முகமலர்ச்சி யுடனும், மகிழ்ச்சியுடனும் இருத்தல் வேண்டும். ஒரு குறிப் பிட்ட வகுப்பில் சொல்ல வேண்டியவற்றை மனத்தில் நிரல்

பட அமைத்துக் கொள்ளல் வேண்டும். தேனீக்கள் இருக்கின்றன; அவை மலர்தோறும் நாடிச் சென்று தேனை எடுத்துத் தம் உமிழ் நீருடன் கலந்து அருமையான தேனாகக் கூட்டில் திரட்டிவைக்கின்றன. செடியிலுள்ள மலர்களின் தேனும் தேனீக்கள் தேடிவைத்திருக்கும் தேனும் ஒன்றாகுமா அதுபோலவே, பாடநூல்களிலுள்ள செய்திகளும் ஆசிரியரின் வாயிலிருந்து அநுபவத்துடன் பிறக்கும் செய்திகளும் 'வரலாற்று உண்மைகளில்' வேறுபடாதவை என்றாலும், மாணாக்கர் மனத்தில் விழும்போது கட்டாயம், இவற்றில் 'ஒரு வித வேறு பாடு' தோன்றத்தான் செய்யும்.

வரலாறு நம் மூதாதையரின் வாழ்க்கையைப்பற்றியது. ஒரு சிறந்த வரலாற்றுக் கதை. பண்டைய நிகழ்ச்சிகட்கு உயிர் கொடுத்து வடிவம் அமைக்கின்றது. அந்தந்த நாட்டுக் கதைகளைப் பொறுத்த மட்டிலும் இது முற்றிலும் உண்மையாகும். ஒரு நாட்டு மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி மக்களிடம் நாட்டுப் பற்றை வளர்ப்பதற்கு வரலாற்று நிகழ்ச்சிகள் பெருந்துணை புரிகின்றன. ஒவ்வொரு நாட்டு வரலாற்றிலும் தலை சிறந்த பல பெரியார்கள், நல்லாட்சி செய்த நாயகர்கள், பக்தியை வளர்த்த ஞானிகள், செயற்கருஞ் செயல்களைப் புரிந்தவர்கள், முடிவான தீர்மானம் உள்ளவர்கள், பொறுமையையே அணிகலன்களாகக் கொண்டவர்கள் ஆகியோர் பலர் காணப்படுகின்றனர். நான் படித்த காலத்தில் வரலாறு என்பது மன்னர்களின் வரலாறாகவே இருந்தது. மன்னர்கள் ஆட்சி புரிந்த விதம் அவர்கள் காலத்தில் நடந்த போர்கள், அவற்றின் முடிவுகள், புகழ்சான்ற சமாதானங்கள், சமூகச் சீர்திருத்தங்கள் போன்ற நிகழ்ச்சிகளையே நுவல்வனவாக இருந்தன. பிரிட்டிஷ் ஆட்சியில் எழுதப்பெற்ற வரலாற்றுப் பாடநூல்கள் பெரும்பாலும் அவர்கள் ஆட்சி முறையைப் போற்றுவனவாகவே அமைந்திருந்தன. இஸ்லாமியர்களின்

'படையெடுப்பு' அவர்கள் தில்லியிலிருந்து கொண்டு நாட்டை ஆண்ட முறை, வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் ஆண்ட மன்னர்களின் அட்டகாசங்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் நம்நாட்டுக்கு வாணிகம் செய்ய வந்த வரலாறுகள், அவர்களிடையே நடைபெற்ற போட்டியும் பொறாமையும், உள்நாட்டு மன்னர்களை அவர்கள் தாயக் காய்கள்போல் கையாண்டு நடத்திய அக்கிரமங்கள் இறுதியில் பிரிட்டிஷார் இந்தியா முழுவதையும் ஒரு குடைக் கீழ்ஆண்ட அற்புத நிகழ்ச்சிகள் இவை இந்திய நாட்டின் வரலாறாக அமைந்திருந்தது. வரலாறு எழுதுவோரும் ஆட்சியாளர்கட்கேற்ற துதி பாடுவதும், தாளம் போடுவதுமாக இருந்தனர். அப்படிப் பட்ட பாடநூல்கள்தாம் அரசினரால் ஏற்கக் கூடியனவாக இருந்தன.

தமிழ் நாட்டிலிருந்த சங்க கால வள்ளல்கள், புரவலர்கள், பெரும்புலவர்கள், பக்திமான்கள், சோழர், பல்லவர், பாண்டியர், சேரர்கள் ஆட்சி புரிந்த வரலாறுகள் இவர்கள் பாடநூல்களில் விரிவாக இடம் பெறவில்லை. இவையெல்லாம் ஒரு முப்பது பக்கங்களுக்குள் அடங்குவனவாயின; பெரும்பாலான முக்கிய நிகழ்ச்சிகள் விடுபட்டும் போயின. வரலாறு பொய்யுரைகளின் களஞ்சியம் (History is a pack of lies) என்று சொல்லத்தக்கனவாக இருந்தது. நாடு விடுதலை பெற்ற பிறகு எழுதப்பெறும் வரலாற்று நூல்கள் உண்மை நிகழ்ச்சிகளை உணர்த்துவனவாக அமைகின்றன. பண்டைய பெருமைகள் பாங்குடன் எடுத்துகாட்டப் பெறுகின்றன. சிவாஜியின் துணிகரச் செயல்களும், கட்டபொம்மனின் வீரச்செயல்களும், விநாயக தாமோதர சாவர்க்காரின் துணிகரச் செயல்களும், நேதாஜியுடன் வீரச்செயல்களும், காந்தியடிகளின் நாட்டுப்பற்றும், அவர் சமூகத்திலும்,

அரசியிலிலும் செய்த குருதி சிந்தாப் புரட்சியும் இன்று எழுதப்பெறும் வரலாறுகளில் இடம் பெறுகின்றன. இவற்றையெல்லாம் அக்காலத்தில் நான் படிக்கும் பேறு பெறவில்லை.

செல்லய்யா அவர்கள் வரலாறு கற்பித்த விதம் மிகமிக அற்புதம். அசோகரின் ஆட்சியின் மாட்சி, முகலாயர் படையெடுப்பு, அல்லாவுத்தீன்கில்ஜியும் அவன் தானைத் தலைவன் நாட்டைக் கொள்ளையடித்த விதமும், துக்ளக் ஆட்சி புரிந்த விநோதங்கள் பாபர் முதல் ஔரங்கசீப் வரை தில்லியிலிருந்து கொண்டு ஆட்சி புரிந்த வரலாறு இவற்றை ஆற்றொழுக்கு போன்ற தமிழில் பாட்டி பேரனுக்குக் கதை சொல்லுவதுபோன்று சொன்ன முறை இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. இவர் கூறியவற்றை மீண்டும் பாடநூல்களில் படிக்கும்போது நிகழ்ச்சிகள் மனத்தில் ஆழப்பதிந்தன.

அடுத்து வரலாறும் புவியியலும் கற்பித்த **மணி அய்யர் (என். சுப்பிரமணிய அய்யர்)** நினைவுக்கு வருகின்றார். பெரும்பாலும் இவர் உட்கார்ந்து கொண்டே கற்பித்தாலும் கற்பித்தல் மிக எடுப்பாக இருக்கும், உரைக்கப்படும் பொருள் உள்ளத்தில் நன்கு அமைத்துக் கொண்டு கற்பிப்பதில் இவருக்கு நிகர் இவரே. பஞ்சகச்சம், திறந்த மேலங்கி (open coat) அதில் அழகாக அணி செய்யும் கழுத்துப் பட்டைத் தொங்கல், முல்லை வெளுப்பில் கட்டப்பெற்ற தலைப் பாகை இவை இவர்தம் கனமான உடலமைப்புக்குப் பொலிவினைத் தந்தன. மாநிறமாக இருந்தாலும் இவர் நெற்றியில் திகழும் கோபிச் சந்தனபிறை இவர்தம் ஆளுமைக்கு (Personality) ஒருவித களையைத் தந்தது. கடல் மடை திறந்தது போன்ற தமிழ் இவர் வாயிலிருந்து வெளிப்படும்போது வகுப்பில் நாலாபுறமும் சரியாகப் பாயும்—பள்ளமடைகளில் பாத்தி

யெங்கும் நீர் பரவுவது போல நீர் பாத்திகளில் நன்கு குமிழி யிட்டுப் படிவது போலவே இவர் ஈரத்தமிழில் வெள்ளமிட்டு வரும் கருத்துகள் நுங்கும் நுரையுமாக மாணாக்கர் மனத்தில் நன்கு படியும்; ஆழமாகவும் பதியும். நான்காம் படிவத்தில் தான் இவரிடம் வரலாறு கற்கும் பேறு பெற்றேன். நன்முறை யில் எழுதப்பெற்ற பாட நூல்களும் கிடைத்தமையால் இவர் கற்பிக்கும் பாடங்களைப் பாட நூல்களைக் கொண்டும் கற்க முடிந்தது.

வரலாறு கற்பித்ததை விடப் புவியியல் கற்பித்தது இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. நான் படித்த காலத்தில் புவியியலுக்கு சரியான நூல்கள் யாரும் எழுதவில்லையாதலால், நல்ல பாடநூல்களைப் பார்க்கும் வாய்ப்பே எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் மணி அய்யர் அற்புதமாகக் கற்பித்தார். கடல் மடை திறந்தது போன்ற தமிழ் வெள்ளம். நன்றாகக் கற்பித்த பிறகு சுருக்கமான குறிப்புகளைத் தருவார்; சிலவற்றைக் கரும்பலகையிலும் எழுதுவார். நான் இவற்றை ஒழுங்குபடுத்தி இரண்டு குயர் கோடுகளில்லாத குறிப்பேட்டில் மிக நன்றாக எழுதி வைத் திருந்தேன். வண்ணக்காம்புகளையும், வண்ணப்பென்சில் களையும் கொண்டு அழகான வரைபடங்களை வரைந் திருந்தேன். குறிப்பேடு பல்லோர் பாராட்டும் வகையில் அற்புதமாக அமைந்திருந்தது. முத்துக் கோத்தாற் போன்ற என் கையெழுத்தும் குறிப்பேட்டின் பொலிவை மேலும் அதிகரித்தது. இதைப் ‘புவியியல் களஞ்சியம்’ என்றே சொல்லலாம். பள்ளியிறுதித் தேர்வு மாணாக்கர்கட்கு ஒரு ‘வரப்பிரசாதம்’ போல் அமைந்திருந்தது. நான் பள்ளியிறுதித் தேர்வில் நல்ல வெற்றி பெற்று வீடு திரும்பும்போது இந்தக் குறிப்பேட்டை ‘எதிர்கால மாணாக்கர்கட்கு ஒரு முன் மாதிரி யாக இருக்கட்டும்’ என்று கூறி வாங்கி வைத்துக் கொண்டதை இன்று நினைவு கூர்கின்றேன்,

ஓவிய ஆசிரியர் ஒரு நாயுடு என்பதாக நினைவு. நன்முறையில் ஓவியம் வரைவதைக் கற்றுக் கொடுத்தார். இயல்பாகவே நன்கு ஓவியம் வரையும் பழக்கம் என்னிடம் அமைந்திருந்தது. நான்காம் படிவத்தில் மட்டிலும் இப்பாடம் நடைமுறையிலிருந்தது. இவர் கொடுத்த பயிற்சிதான் ஐந்து, ஆறு படிவங்களில் வரலாற்றுப் படங்களையும் புவியியல் படங்களையும் தெளிவாகவும் அழகாகவும் வரைவதற்குக் கை கொடுத்து உதவியது; கல்லூரி வாழ்க்கையிலும் அறிவியல் பாடத்தில் அவ்வப்போது வரைய வேண்டிய கோட்டுப் படங்களை அற்புதமாக வரைவதற்குத் துணையாக இருந்தது. உடற்பயிற்சி ஆசிரியரை நினைவு கூரமுடியவில்லை. யாரோ ஓர் அய்யர் என்பதாக நினைவு. ஆடுகளத்திற்கு அதிகமாகப் போகும் பழக்கம் என்னிடம் இல்லை. சில சமயம் போகும் போது ரிங் டென்னிஸ், வாலி பால் இவற்றினில் மட்டிலும் ஈடுபட்டேன். உணவு விடுதியில் இந்த இரு விளையாட்டுகளையும் தொடர்ந்து விளையாடியதாக நினைவு.

குமிழி — 29

## 29. பெரிய தமிழ் அய்யா குமாரவீரய்யா

இப்பொழுது எழும் குமிழியில் தமிழாசிரியர்களில் பெரியவர் வீ. குமார வீரய்யர் காட்சி அளிக்கின்றார். இவர் வீர சைவர். இவர் நான்காம் படிவத்திலும் ஆறாம் படிவத்திலும் தமிழ் கற்பித்தது நினைவுக்கு வருகின்றது.

வீ. குமார வீரய்யர் பஞ்சகச்சம், முழு மேலங்கி, வெள்ளைத் தலைப்பாகை, மடித்த நிலையிலுள்ள மேலாடை இவற்றுடன் வகுப்பிற்கு வருவார். மாநிறமுள்ள திருமேனியைக் கொண்ட இவர் நெற்றியில் திருநீற்றுப் பட்டை

யும், சந்தனப் பொட்டும் திகழும். பார்ப்பதற்கு அவ்வளவு வசீகரமாக இராது இவரது தோற்றம். இலக்கணம் சுவையாகக் கற்பிப்பதில் தனித்திறம் கொண்டவர். கவிதையை இசையுடன் படிக்காவிட்டாலும் கற்பித்தல் கவர்ச்சியுடையதாக இருக்கும். கிண்டலும் நகைச்சுவையும் இவரிடம் அதிகமாகக் காணலாம். நகைச்சுவையைக் கிளப்பி விட்டு தாம் முறுவலிப்பதுடன் நிறுத்திக் கொள்வார். மாணாக்கர்கள் வாய்விட்டுச் சிரிக்காமல் இருக்க முடியாது. வீரசைவம் பற்றிய ஏதோ ஒரு வெளியீட்டைக் கவனிக்கும் பொறுப்பு இவரிடம் இருந்ததாகப் பேசிக் கொள்வார்கள். சில நாட்களில் இரவு நேரம் அதிகமாக விழித்திருக்கும் வாய்ப்பு இருந்தபடியால் மறுநாள் வகுப்பு சுவாரஸ்யமாக இருக்க முடியாது. வகுப்பில் நுழைந்து, இருக்கையில் அமர்ந்தவுடன் உறங்கி விடுவார்; சில சமயம் குறட்டையொலியும் கேட்கும். மாணாக்கர்கள் இவர் உறக்கத்திற்குத் தடை செய்யக் கூடாது என்ற "நன்னோக்கத்துடன்" கப்சிப் என்று வாளா இருப்பார்கள். சிலர் பாட நூல்களை பார்த்துக் கொண்டிருப்பதாகப் பாசாங்கு செய்வார்கள். ஒரு சிலர் சாடையாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். ஒரு சிலர் வெளியில் செல்லவும் திரும்பவுமாக இருப்பார்கள். சிலசமயம் தலைமையாசிரியர் மேற்பார்வைக்காகத் தாழ்வாரத்தில் நடக்கும் போது இவர் உறங்குவது அவர் கண்ணில் படுவதுண்டு. பார்த்துக் கொண்டு பாராதவர் போல் முறுவலித்துக் கொண்டே போய் விடுவார். இவர் உறங்குவதன் காரணம் தலைமையாசிரியர் நன்கு அறிந்தவராகையால் இவரிடம் இப்போக்கைக் காண முடிந்தது. பின்னர் தனிமையில் அவர் இவரிடம் இதுபற்றிப் பேசியிருக்க வேண்டும் என்று ஊகம் செய்கிறேன். இதனால் அவர் சில நாட்கள் உறங்குவதை நிறுத்திக் கொள்ள முடிகின்றதில்லை. மனம் ஓய்வை நாடும் போது உடலும் அதற்கு ஒத்துத்தானே போக வேண்டும்?

வகுப்புக்கு வந்து இருக்கையில் அமர்ந்தவுடன் ஒருவர் ஆழ்துயிலில் இறங்க வேண்டுமானால் அதற்கு உடலும் உள்ளமும் ஒத்துப் போக வேண்டும். இவ்வாறு உறங்கு பவருக்கு ஒரு கலை உணர்ச்சியும் வேண்டும் எனத் தோன்று கின்றது. நாற்பது அல்லது ஐம்பது மாணாக்கர்கள் தம் முன் பாடம் கேட்பதற்காகவே அமர்ந்திருக்க அதனை மறந்து குறட்டை விடும் அளவுக்குத் தூங்க வேண்டுமென்றால் அதற்கு ஒரு துணிவு வேண்டும். பள்ளி ஒழுங்கு விதிகளைப் புறக்கணிக்கும் அளவுக்கு நெஞ்சில் உரம் வேண்டும். ஓய்வு வேண்டுமென்றால் 'விடுப்பு' எடுத்துக் கொண்டு இல்லத்தில் உறங்கலாம்.

இக்குறைகளெல்லாம் வீ. குமார வீரய்யரிடம் இருந் தாலும் அவர் பாடம் சொல்லுந்திறன் இவற்றை மறைத்து விடுகின்றது. பள்ளிகளில் மாணாக்கர்கள் பயிலும் பாடங் களுள் மாணாக்கர்கட்கு அதிக அருவருப்பையும் அச்சத்தை யும் தருவது இலக்கண பாடமாகும். இன்று பெரும்பாலும் இலக்கணம் 'மாணாக்கர் காதில் புகாத உலக்கை'யாகவே காட்சியளிக்கின்றது; புலவர் வகுப்பு போன்ற மேல் வகுப்பு களிலும் மாணாக்கர்கள் இலக்கணத்தைச் 'சிம்ம சொப்பன' மாகவே கொள்ளுகின்றனர்; நடைமுறையில் இதை இன்றி யமையாததாகக் கருதுவதில்லை. இந்நிலைக்குக் காரணம் என்ன? மாணாக்கர்கள் இலக்கணத்தை வெறுப்பதற்கு இலக்கணம் காரணம் அன்று; மாணாக்கர் அறிவு நிலையும் காரணம் அன்று. கற்பிக்கும் ஆசிரியர்களே இந்நிலைக்குக் காரணம் என்று கூறவேண்டும். இலக்கணம் கற்பதில் சுவை யற்ற முறைகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. இலக்கணத்தை எதற்காகக் கற்கின்றோம் என்பதை அறியாமல் மாணாக்கர்கள் கற்கின்றனர்; கற்பிக்கும் ஆசிரியர் களும் இலக்கணம் கற்கும் நோக்கத்தை, எடுத்துக்காட்டு களால் விளக்கி அதன் இன்றியமையாமையை அவர்கட்கு

உணர்த்துவாரிலர். எய்தவன் இருக்க அம்பை நோவதால் பயன் என்ன? கொய்னா மருந்தைச் சருக்கரைப் பாகில் தோய்த்து நோயாளிகட்குச் செலுத்துவது போல இலக்கணத்தை அநுபவ முறையில் இலக்கிய பாடத்துடன் இணைத்துக் கற்பித்தால் மாணாக்கர்கள் கட்டாயம் இலக்கணத்தை விரும்புவர். நல்ல முறையில் கற்பித்தால் ஏனைய பாடங்களைக் கற்பதைபோல் அதிக இன்பத்தையும் பெறுவர். கற்கும் நோக்கத்தை விளக்காது, கட்டாயப் படுத்திக் கற்பிப்பதால்தான் மாணாக்கர்கட்கு இலக்கணம் மிகவும் கசப்பாக உள்ளது. இதை ஒரு 'தலைவலியாகவே' இவர்கள் கருதுகின்றனர்.

கற்றலின் விதிகளையும் பயிற்றுமுறைகளையும் சரியாக அறியாத ஆசிரியர்கள் தொடக்க நிலை வகுப்புகளிலேயே இலக்கணத்தைத் தொடங்கி மாணாக்கர்களிடம் வெறுப்புணர்ச்சியை எழுப்பி விடுகின்றனர். அன்றியும் இலக்கியத்துடன் இணைத்துக் கற்பிக்காமல் தனியாகக் கற்பிப்பதனாலும், விளையாட்டு முறைகளை மேற் கொள்ளாததனாலும் அவ்வெறுப்புணர்ச்சி இன்னும் மிகு கின்றது; இலக்கணம் கற்கும் இன்றியமையாமையை மாணாக்கர்கள் உணர்வதே இல்லை. கற்பிக்கும் பொழுதும் ஆசிரியர்கள் மாணாக்கர்களின் பட்டறிவில் வரக்கூடிய எடுத்துக்காட்டுகளைக் காட்டுவதில்லை; இவற்றை மிகுதி யாகவும் காட்டுவதில்லை.

நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பெரும்பாலான ஆசிரியர்கள் விதி வருமுறையில் கற்பிப்ப தில்லை. விதி விளக்கு முறையினையே மேற்கொள்ளு கின்றனர். விதிகளையும் நூற்பாக்களையும் முதலில் கூறிப் பின் எடுத்துக்காட்டுகளால் இவற்றை விளக்குவது தெரிந்த வற்றிலிருந்து தெரியாதவற்றிற்கும் (From known to un-

known), எளிமையிலிருந்து சிக்கலுக்கும் (From simple to complex) போக வேண்டும் என்ற அடிப்படைக் கருத்துகளுக்கு முற்றிலும் முரணாக உள்ளது. இங்கும் இலக்கணத்தை மொழிப்படத்துடனும் கட்டுரை வரைதலுடனும் பொருத்திக் காட்டிக் கற்பியாமல் தனிப்பாடமாகவே கற்பிக்கின்றனர். நடைமுறையில் வேண்டப்படுவது எது? வேண்டப்படாதது எது? என்று பாகுபாடு செய்யாது எல்லா விதிகளையும் கற்பிப்பதுடன் அவற்றை நெட்டுருச் செய்யும்படியும் வற்புறுத்துகின்றனர். மாணாக்கரின் பட்டறிவுக்கேற்ற எடுத்துக்காட்டுகளைத் தேர்ந்தெடுத்துக் கற்பியாமல் பழைய இலக்கண நூல்களில் உரையாசிரியர்கள் காட்டியுள்ளவற்றையே எடுத்துக் காட்டிக் கற்பிக்கின்றனர். தனித்தனிப் பயிற்சி முறைகளை இலக்கணப் படிப்பில் புகுத்துவதில்லை. கற்பிக்கும் ஆசிரியர்களும் இலக்கணத்தில் பற்றும் விருப்பமும் கொண்டு உற்சாகமாகக் கற்பிக்காமல் 'வீண் கடனுக்கு' என்றே கற்பிப்பதால், கற்கும் மாணாக்கர்களும் இதை விரும்பிக் கற்பதில்லை.

குமார வீரய்யர் இலக்கணத்தைச் சுவையுடன் பள்ளி மாணாக்கர்கட்கு கற்பிப்பதில் நிகரற்றவர் என்று சொல்லலாம். ஐந்தாம் படிவத்தில் நான்காம் வேற்றுமைப் பொருள்களைக் கற்பித்ததை இன்றும் நினைவு கூர முடிகின்றது. அடியிற்கண்ட சொற்றொடர்களைக் கரும்பலகையில் எழுதி ஒவ்வொரு மாணாக்கராக வாய்விட்டுப் படிக்கும்படி ஏவுவார்.

(அ) எளியவர்க்கு அன்னம் இட்டான்.
(ஆ) பாம்புக்குப் பகை கருடன்.
(இ) இராமனுக்கு நண்பன் சுக்கிரீவன்.
(ஈ) அரசருக்கு முடி உரியது.
(உ) காப்புக்குப் பொன் கொடுத்தான்.

(ஊ) கூலிக்கு வேலை செய்தான்.

(எ) இராமனுக்குத் தம்பி இலக்குவன்.

கீழ் வகுப்புகளில் நான்காம் வேற்றுமையின் உருபைப் பற்றிப் படித்திருப்பதால் அதே உருபு 'கு' என்பதை வினாக்களை விடுத்தே வருவித்து விடுவார். மேற்குறிப்பிட்ட சொற்றொடர்களில் நான்காம் வேற்றுமை வரும் இடத்தை மாணாக்கர்களைச் சுட்டிக் காட்டும்படி ஒவ்வொருவராக ஏவுவார்.

(அ)-இல் 'இட்டான்' என்பது கொடுத்தலைக் குறிக்கின்றது என்பதை வினாக்களின் மூலம் மாணாக்கர்களிடமிருந்தே வருவித்து விடுவார். இடுதலின் செயப்படுபொருள் 'அன்னம்' என்பதை மாணாக்கர்களிடமிருந்த வருவிக்கப் பார்ப்பார். 40 மாணாக்கர்களில் ஒருவராவது சொல்லி விடுவர். அதனைத் தமக்குரியதாக்கிக் கொள்பவர் 'எளியவர்'. எனவே, 'இரவலர்' கோடற் பொருளாகின்றனர். இங்கு 'கு' உருபு 'கொடைப் பொருளில்' வந்துள்ளதை மாணாக்கர்கட்குத் தெளிவாக விளக்குவார்.

(ஆ)-இல் கருடனித்திலுள்ள பகை தொடர்தற்குரிய இடம் எது?' என்று வினவுவார். யாராவது ஒருவர் 'பாம்பு' என்று சொல்லி விடுவார். பாம்பு 'பகைத்தொடர் பொருள்' என்பதைத் தெளிவாக்குவார்.

(இ)-இல் நட்பு தொடர்தற்கு இடம் 'இராமன்' என்பதை எப்படியோ மாணாக்கர்களிடமிருந்தே வருவித்து விடுவார். இராமன் 'நட்புத் தொடர் பொருள்' ஆகின்றதை நன்கு விளக்குவார்.

(ஈ)-இல் அரசரோடு பொருந்துதற்குத் தகுதியாகிய பொருள், முடி. அதனையுடைய பொருள் 'அரசர்' என்பது. அரசர் 'தகுதியுடைப் பொருள்' ஆவதைத் தெளிவுறுத்துவார்.

(உ)-இல் 'பொன்' என்பது காப்பு செய்தற்கு முதற் காரணப் பொருள் என்பதை விளக்குவார். அதனாலாகிய காரணம் காப்பு என்பதைக் காட்டி, காப்பு 'முதற் காரண காரியப் பொருள்' என்பதைச் சுட்டி உரைப்பார்.

(ஊ)-இல் 'வேலை' நிமித்த காரணம் என்பதை விளக்கிச் சொல்வார். அதனாலாகிய காரியம் 'கூலி'. இதனை எடுத்துக் காட்டி (அல்லது வினாக்கள் மூலம் வருவித்து) கூலி 'நிமித்த காரணகாரியப் பொருள்' என்பதைத் தெளிவாக்குவார்.

(எ)-இல் இலக்குவனிடத்துள்ள 'தம்பி' என்னும் முறைக்குத் தான் இயைந்து நிற்கும் பொருள் 'இராமன்'. இது 'முறைக்கியை பொருள்' என்பதை விளக்கி உரைப்பார்.

இவ்வாறு 'விதிவருமுறையைக்' கையாண்டு நான்காம் வேற்றுமைப் பொருள்களை வருவித்து, இயலாத இடத்து தானே விளக்கிக் காட்டி, நான்காம் "வேற்றுமை உருபு 'கு'; அதன் பொருள் கொடை, பகை, நட்பு, தகுதி, அது ஆதல், பொருட்டு முறை முதலியனவாம்" என்ற விதியை மாணாக்கர்களையே உண்டாக்கும்படி செய்து விடுவார். பிறகு ஆசிரியர் நினைவில் வைத்துக் கொள்வதற்கு எளிதாக இருக்கும் இவ்விதியை இலக்கண நூலில் நூற்பாவாகச் செய்துள்ளனர் என்பதைக் கூறுவார்.

நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது ஆதல்
பொருட்டுமுறை ஆதியின் இதற்கிதெனல் பொருளே[12]

[நேர்ச்சி-நட்பு: தகவு-தகுதி; அது ஆதல்-காரணமே காரியமாதல். பொன்னே காப்பாதலை அறிக.]

என்ற நூற்பாவை கரும்பலகையில் எழுதிக்காட்டி மேற்படி நூற்பா 'விட்டமின் பி. காம்பிலெக்ஸில்' (Vitamin Capsule)

12. நன்னூல்-298

பல சத்துகள் அடங்கியிருத்தல் போல் 'பல பொருள்களையும்' இந்த நூற்பா கொண்டிருத்தலின் அற்புதத்தை எடுத்துக் காட்டி மாணாக்கர்களை 'வியப்புச் சுவையில்' ஆழ்த்துவார்.

சில மாணாக்கர்களும் இலக்கணம் அறியாத பெரியோர் களும் உயர்திணைக்கண் முறைப் பொருளில் நான்காம் வேற்றுமை உருபன்றி ஆறாம் வேற்றுமை உருபு சேர்த்து 'எனது மகன்' என்று எழுதுவதைத் தகுதியன்று என்பதனை இவ்விடத்தில் எடுத்துக்காட்டி விளக்குவார். 'அது' என்னும் உருபு அஃறிணையிலன்றி உயர்திணையில் வருதல் அமையாது என்பதையும், அது முறைப் பொருளில் வருதல் இல்லை என்பதையும் விளக்கிக் காட்டுவதற்கு இவ்விடத்தைச் சிறந்ததாகப் பயன்படுத்திக் கொள்வார். அடியிற் காணும் சில எடுத்துக் காட்டுகளைத் தந்து நான்காம் வேற்றுமை உருபு பற்றியும் அதன் பொருள்கள்பற்றியும் பொருத்திக் காட்டுமாறு 'வீட்டு வேலை'யாகத் தருவார்.

(அ) இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான்.
(ஆ) எலிக்குப் பகை பூனை.
(இ) சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன்.
(ஈ) வெற்றியடைந்தவனுக்குப் பரிசு உரியது.
(உ) உணவுக்கு நெல் கொடுத்தான்.
(ஊ) சன்மானத்துக்கு உழைத்தான்.
(எ) தசரதனுக்கு மகன் இராமன்.

இவ்வாறு விதியை எடுத்துக் காட்டுகளில் பொருத்திக் கற்றலைத்தான் 'விதிவிளக்கு முறை' என்பர் முறைவல்லார். இதனை நினைவில் கொண்டு அற்புதமாகக் கற்பிப்பார் 'வீட்டு வேலை' தருவதன் மூலம்.

கவிதை கற்பிப்பதில் கவிதையின் சுவையை எடுத்துக் காட்டுவதில் இவர் திறனுடையவர் என்று சொல்ல

முடியாது. கவிதையை நன்கு விளக்குவதில் வல்லவர். ஒரு சில இலக்கணக் குறிப்பையும் அளவாக எடுத்துக் காட்டி கவிதை கற்பித்தலைப் பயன் உடையதாகச் செய்து விடுவார். நான் பள்ளியிறுதி வகுப்பில் படிக்கும் போது 'வாலிவதைப் படலம்' பாடமாக இருந்தது. இதனைக் கற்பித்த முறையை இப்போது நினைவு கூர முடிகின்றது.

கண்ணுற்றான் வாலி நீலக்
 கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவில் ஏந்தி
 வருவதே போலும் மாலை[13]

[முகில்-மேகம்; கமலம்-தாமரை; வரிவில்-கட்ட மைந்த வில்; மாலை-திருமாலின் திருவவதாரமான-இராமபிரானை]

என்ற பாடற்பகுதியைக் கற்பித்தது அற்புதமாக இருந்தது. இல்லறந்துறந்த நம்பி தங்கள் பொருட்டு வில்லறத்தையும் துறந்தனனோ என்று நகைத்து, நாணத்துடன் நிற்கும் வாலியின் முன்னர் இராமன் வரும் காட்சியை இப்பாடற் பகுதி காட்டுகின்றது என்று கூறுவார். இங்கு இயல்பாக நிகழும் தன்மையில் கவிஞன் தன் கருத்தினை ஏற்றிக் கூறி யுள்ளான் என்பதை எடுத்துக்காட்டுவார். பொருள்களிடத்து இயல்பாக நிகழும் தன்மையில் கவிஞன் தன் கருத்தினை (குறிப்பினை) ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும் என்று தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணத்தை விளக்குவார். இயல்பாக இராமன் வாலிமுன் வருவதைக் கம்பர் பெருமான் வானத்திலுள்ள நீலக் கார்முகில் தன்னிடம் தாமரை மலர் பூத்து நிற்க, கட்டமைந்த வில்லொன்றைக் கையில் ஏந்திக் கொண்டு வரும் திருமால்' என்று தன்னுடைய கருத்தினை ஏற்றிக் கூறியிருப்பதனை எடுத்துக்காட்டி விளக்குவார். கவிதைப் பாடத்தை இலக்கணப் பாடத்துடன் அளவாகப்

13. வாலிவதை-75

பொருத்திக் காட்டி கவிதை கற்பித்தலில் 'இலக்கணக் களை' தோன்றச் செய்து வகுப்பை வியப்புறச் செய்ய வைத்து விடுவார்.

வாய்மையும் மரபும் காத்து
மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே! நீ
பரதன்முன் தோன்றினாயே[14]

என்ற பாடற்பகுதியை அற்புதமாக விளக்குவார். முன்பு கைகேயிக்கு இரண்டு வரம் அளித்ததனால் சத்தியம் பிறழலாகாது என்பதற்காகத் தன் அருமையான மூத்த மகன் காடுறை வாழ்க்கையை ஏற்கும்படி நேர்ந்தது என்பதை விளக்குவார். 'தன்மகனைக் காட்டுக்குத் துரத்தி விட்டுத் தான் உயிர் வாழ்ந்தான் இக்குலத்தில் ஒருவன்' என்ற பழிப்புத் தான் பிறந்த மநு குலத்திற்கு வராதபடி புத்திர சோகத்தால் உயிர் நீத்த பெருமகன் தசரத சக்கரவர்த்தி என்பதை எடுத்துகாட்டி விளக்கும்போது மயிர் சிலிர்க்கும்; உடல் புளகாங்கிதமாகும். 'தூயவன்' என்ற சொல்லால் தசரதனைக் குறிப்பிடவைத்த நயத்தை எடுத்துக் காட்டுவார். 'இத்தகைய தூயவனுக்கு நீ மைந்தனாகத் தோன்றினாயே'—என்ற அடியினால் ''நீ இத்தகைய பரிசுத்தவானுக்கு மகனாகப் பிறத்ததற்குச் சிறிதும் தகுதியற்றவன்' என்ற ஏளனக் குறிப்பை எடுத்துக்காட்டுவார். அதுவும் 'நீ பரதனுக்குத் தமையனாகத் தோன்றினாய்' என்ற அடியில் 'தூயவனின் மைந்தன் பரதன்; இவன் அதிதூயவன்; தியாக மூர்த்தி; மகாஉத்தமன், இவனுக்கு நீ அண்ணனாகத் தோன்றியது சிறிதும் பொருத்தமற்றது' என்ற கவிஞனின்'கிண்டலை' எடுத்துக்காட்டி எல்லோரையும் வியக்க வைத்து விடுவார்.

14. ஷை-76

அடியிற் குறிப்பிடப் பெற்றுள்ள இரண்டு பாடல்களை அற்புதமாக விளக்கியது இன்றும் என் மனத்தில் பசுமையாக உள்ளது.

கோவியல் தருமம் உங்கள்
　　குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணா
　　உருவத்தாய் உடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற
　　அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
　　திகைத்தனை போலும் செய்கை.[15]

[கோஇயல் தருமம்-அரசநீதி; ஓவியம்-சித்திரம்; ஆவி-உயிர்; அன்னம்-தூயவள்; அமிழ்தின்-அமுதத்தைப் போல; தேவி-மனைவி]

தன்னை மறந்த வாலி நிலையில் இராமனின் திருமேனி அழகில் ஈடுபட்டுப் பேசுகின்றான். 'ஓவியத்து எழுத வொண்ணா உருவத்தாய்!'' என்கின்றான். 'அவதார மூர்த்தியின் அழகில் சொக்கிப் போய் விடுகின்றான் வாலி' என்பதை அற்புதமாக எடுத்துக் காட்டுவார். பின்னர் தன் நிலைக்கு வந்து இராமன் 'அரசியல் பிழைத்ததை'க் குத்திக் காட்டுகின்றான் குத்தூசி குருசாமி மரபில் வந்தவன் போல. 'அரசநீதி உங்கள் குலத்தில் பிறந்தவர்கள் அனைவர்க்கும் பொதுச் சொத்து அல்லவா? அப்படி இருக்க நீ இப்படி அரசநீதியையே கொன்று விட்டாய். பெண்டாட்டியைப் பிரிந்த பிறகு உன் புத்தியும் கெட்டது போலும்! செய்யும் செயலில் தடுமாற்றம் உற்றாயோ?' என்று சாட்டையடி கொடுப்பதை எடுத்துக்

15. ஷை 18

காட்டுவார். 'பெண்டாட்டியைப் பிரிந்த பின்னர் உன் புத்தி கெட்டதோ?' என்று கிண்டல் செய்து வகுப்பைச் சிரிப்பில் ஆழ்த்துவார்.

ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்டு வைணவ தத்துவத்தைத் தெளிவாக அறிந்த பிறகு மேற் குறிப்பிட்ட இறுதி இரண்டு அடிகளிலும் தத்துவப்பொருள் பளிச்சிடுகின்ற தைக் காணமுடிகின்றது. எம்பெருமான் இரட்சிக்கும்போது பிராட்டியின் சந்நிதி அவசியம் இருக்க வேண்டும். புருஷகாரம்[16] பிராட்டியின் தொழிலல்லவா? இறுதி இரண்டு அடிகளில் வாலி இராமனைச் சாடுவதுபோல் தோன்றினாலும் பிராட்டி சம்பந்தம் அற்றதனால் தனக்கு இக்கதி நேர்ந்தது என்ற தத்துவக் கருத்தையும் குறிப்பிடுகின்றான் என்று கொள்ளல் வேண்டும். ஈசுவரன் சேதநரைக் காக்குங்கால் சேதநரின் அளவற்றகுற்றங்களைக் கண்டோ, தன் சுதந்திரத் தினாலோ அவர்களைப் புறக்கணிக்கவும் கூடும்! அவ்வமயம் சேதநரிடம் கருணை பிறக்குமாறு வேண்டியதை வேண்டி யாங்குச் சொல்லி புருஷகாரம் ஈசுவரனிடம் செய்யும் பிராட்டியார் அருகிலிருக்க வேண்டும். அப்போதுதான் பகவான்தடையின்றிக் காத்தல்தொழிலை மேற்கொள்வான்.

கருணை வடிவாகவுடைய பிராட்டியார் அருகிலிருந்தமை யால் காகாசுரன் பிழைத்தான். பிராட்டியார் பிரிந்திருந்தத னால் இராவணன் இராமபிரானின் அம்பிற்கு இலக்காகி உயிரிழந்தான். எம்பெருமான் நம்மை ஊக்குவிக்கும் பொருட்டு இவ்வுலகில் எவ்வுருவத்துடன் தோன்று கின்றனனோ அவ்வுருவத்திற்கு ஏற்றவாறு பிராட்டியாரும் உருவம் கொண்டு தோன்றுகின்றார். இம்முறையில் பெருமாள் இராமனாய் அவதரித்தபோது இவர் சீதா பிராட்டியாகவும், அவர் கண்ணனாய் அவதரித்தபொழுது

16. புருஷகாரம்-தகவுரை

உருக்குணிப் பிராட்டியாகவும் அவதரித்தனர். இக்கருத்துகளும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கவையாகும்.

கூட்டொரு வரையும் வேண்டாக்
கொற்றவ! பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கோர்
தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமம் செய்தாய்;
எம்பிக்கு இவ்வரசை நல்கிக்
காட்டொரு கருமம் செய்தாய்;
கருமந்தான் இதன்மேல் உண்டோ?[17]

[கொற்றவன் - வெற்றியை யுடையவன்; தாதை - தந்தை; பூட்டிய - உரிதாகக் கொடுத்த; செல்வம் - அரசாட்சி; ஓர்தம்பி - ஒப்பற்ற தம்பி (பரதன்); போந்து - வந்து; கருமம் - செயல்]

என்ற பாடலை விளக்கும் போது 'கிண்டலும் கேலியும்' இவர் வாக்கில் தாண்டவமாடி மாணாக்கர்களைக் களிப்பில் ஆழ்த்தும். 'கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ' என்ற சொற்றொடர் 'அசகாய சூரன்' என்ற வடமொழிச் சொற்றொடரின் மொழி பெயர்ப்பு என்று கூறி விளக்கும் போது நாங்கள் வியப்பில் ஆழ்ந்து போவோம். வால்மீகியின் வடமொழி வாக்கை அருந்தமிழ் வாக்காக' அவதாரம் எடுக்கச் செய்த கவிநாயகனின் மொழித் திறமையை வியந்து போற்றச் செய்த ஆசிரியரின் வித்தகத்தை எண்ணி மகிழ்வோம். இவருடைய கிண்டல்; 'அப்பன் கொடுத்த சொத்தைக் காப்பாற்ற வழி தெரியாமல் அதை உன் தம்பிக்கு 'வகை தெரியாமல்' கொடுத்து நாட்டில் (அயோத்தியில்) ஒரு 'கருமம்' (ஈமச்சடங்கு) செய்தாய்.

17. ஷை-81

பிறகு நாட்டிலிருந்து காட்டுக்கு வந்தாய்; எம்பிக்கு இந்த வானர அரசை நல்கினாய்; இங்கும் மற்றொரு 'கருமம்' செய்தாய்; கிட்கிந்தையிலும் ஒரு ஈமச்சடங்கு புரிந்தாய். இனி எத்தனை 'கருமங்கள்' செய்யப் போகிறயோ?' என்பார். 'இலங்கைக்குச் சென்ற பிறகு இராவணன், கும்பகருணன், அதிகாயன், இந்திரசித்து முதலிய அசுர வீரர் களையெல்லாம் கொன்று எத்தனையோ, 'கருமங்களைச்' செய்யப் போகிறாய்' என்ற தொனிப் பொருள் 'கருமந் தான் இனிமேல் உண்டோ?' என்ற தொடரில் ஒசையிடுவதை எடுத்துக்காட்டிக் கம்பன் கவிநயத்தைத் தெளிவுறுத்துவார். உறங்கிக் கிடந்த கும்பகருணன் விழித்ததும் பல அற்புதச் செயல்களை நிகழ்த்தியதுபோல, நடக்கும்போதும்உட்காரும் போதும்—ஏன் பேசும் போது கூட—உறங்குவது போன்ற தோற்றமுடைய குமார வீரய்யர் கம்பனில் ஈடுபட்டு கவிதையை விளக்கும்போது தன் 'உண்மையான சொரூபத் துடன்' திகழ்வார். இந்தப் பண்புதான் இன்றும் அப்பெரு மகனை நினைவு கூரச் செய்கின்றது. பக்தியுடன் போற்றவும் செய்து விடுகின்றது. இதை எழுதும்போது என்னை உணர்ச்சிக் கடலில் மிதக்கச் செய்து விடுகின்றது. பிற்காலத் தில் யான் கம்பனில் அதிகமாக ஈடுபடுவதற்கும், கம்பனைப் பற்றிய கட்டுரைகள் எழுதுவதற்கும், அவை நூல்களாக வடிவம் பெறுவதற்கும் இவர் இளமையில் ஊன்றிய விதை தான் காரணமாக இருக்குமோ என்று என் இன்றைய மனம் எண்ணுகின்றது.

# 30. சின்னத் தமிழய்யா ஐம்புலிங்கக் குருக்கள்

உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் படிவத்தில் கற்பித்த ஐம்புலிங்கக் குருக்கள் இந்தக் குமிழியில் எழுகின்றார். சிறுவயதில் இளம்பிள்ளை வாதத்தால் தாக்குண்டதால் இரண்டு கால்களும் ஊனப்பட்டுச் சரியாக நடக்கமுடியாத நிலையிலிருந்தவர். இவர் முழு மேலங்கியும் விசிறி மடிப்பு மடித்த மேலாடையும் அணிந்து கொண்டு பஞ்சகச்சத்துடன் வருவதே மிகவும் எடுப்பாக இருக்கும். சற்றுக் கருநிறத் திருமேனியும், அருள் ஒழுகும் குண்டு முகமும், நெற்றியில் தீட்டியுள்ள திருநீற்றுப் பட்டையும் சந்தனப் பொட்டும் இவருக்குக் களையூட்டி நிற்கும். பெரும்பாலும் இவர் கத்திரிப்பூ நிறமேலங்கி அணிந்திருக்கும்காட்சியே நினைவுக்கு வருகின்றது. இஃது இவருக்கு மேலும் பொலிவூட்டி நிற்கும். முத்துக் கோத்தாற்போல் கரும்பலகையில் இவர் பொறிக்கும் எழுத்து கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பதாக இருக்கும். கவிதை பயிற்றலில் நிகரற்றவர்; இவரிடம் கற்றபிறகு கல்லூரிகளில் கூட இவர் கற்பித்த முறையில் நான் கவிதைப் பாடம் பயிலும் பேறு பெறவில்லை.

ஆழ்ந்த உணர்ச்சியை வெளியிடுவதற்கு உரைநடை-ஒலிநயம் போதுமானதன்று. அதற்குச் செய்யுள் வடிவமே மிகவும் ஏற்றது. இங்கு ஒலிநயம் (Rhythm) அளவுடன் அமைகின்றது; அழுத்தங்கள் திரும்பத் திரும்ப நிகழ்வதும் ஒழுங்குடன் அமைகின்றது. இதைத் தெளிவாக அறிந்தால் தான் கவிதையைப் பற்றி நாம் கொள்ளும் கருத்து தவறாக அமையாது. செய்யுள்-ஒலிநயம் என்பது சாதாரணக் கருத்து வெளியீட்டின்மீது மேற்கொள்ளப்பெற்ற செயற்கை முறையன்று; இன்பமான ஓசையையோ அல்லது அழகான

முடிவையோ உண்டாக்குவதற்கு மேற்கொள்ளப் பெற்றது மன்று. அது தேவையின் பொருட்டு இயல்பாக வளர்ந்த சாதனமாகும்.

உணர்ச்சி மிகுந்த நிலையில் நம்முடைய மனத்தில் அசைவு ஏற்படுகின்றது. இந்நிலையில் உடலிலும் அவ்வசைவு பிரதிபலிக்கின்றது. உடலில் எப்படியாவது அவ்வசைவு புலப்பட்டே தீரும். சிறுவர்களிடத்தில் இதைத் தெளிவாகக் காணலாம். இரண்டாண்டுக்கு முன்னர்ச் சிங்கப்பூருக்குச் சென்ற தந்தை பல்வேறு விளையாட்டுப் பொருள்களுடனும் பல்வேறு தின்பண்டங்களுடனும் வந்திருக்கின்ற செய்தியைத் தொடக்கநிலைப் பள்ளிக்குச் சென்று திரும்பி வந்த சிறுவர்கட்கு அன்னை அறிவிக்கின்றாள். சிறுவர்கள் அடையும் மகிழ்ச்சியைச் சொல்லவேண்டியதில்லை. அவர்கள் துள்ளுவர்; ஓடுவர்; ஆடுவர்; பாடுவர். மனத்தின் அசைவு அவ்வாறு உடல் மூலம் வெளிப்படுகின்றது.

ஒலிநயத்திற்குப் புலன்களை உள்முகமாகத் திருப்பி விடும் ஆற்றல் உண்டு. சிறந்ததோர் இன்னிசைக் கச்சேரியை கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது நம்முடைய கண், காது முதலான புலன்கள் வெளியுலகப் பொருள்களில் ஈடுபடாமல் அமைதி பெறுகின்றன. உணர்ச்சிகளும் உடம்பின் அளவில் நின்று விடுகின்றன. இந்நிலையில் உறங்குவது போன்ற அநுபவம்—அறிதுயில் அநுபவம்— ஏற்படுகின்றது. உறக்கத்தில் புலன்களின் இயக்கம் நின்று ஒழுங்குடன் இயங்கும் இதயத்துடிப்பு, குருதியோட்டம், மூக்கின் இயக்கம் மட்டிலும் நடைபெறுவதைப் போலவே, மனம் பாட்டின் ஒலி நயத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுது அவ்வுறுப்புகள் மட்டிலும் இயங்கிக் கொண்டுள்ளன. நம் உள்ளம் மட்டிலும் பாட்டின் ஒலி நயத்தில் திளைக்கின்றது. உறக்கத்தில் உள்ளம் இன்பம் அடைந்து ஓர் அமைதியைப் பெறுவதைப் போலவே,

பாட்டின் சற்பனை யுலகத்திலும் உள்ளம் இன்புற்று அமைதியைக் காண்கின்றது. '**கோடையிலே இளைப்பாற்றி**'[18] என்ற இராமலிங்க அடிகளின் திருப்பாடலைக் கொடுமுடி சுந்தராம்பாள் அவர்கள் (இப்பொழுது அவர்கள் இல்லை) பாடும் பொழுது—அல்லது அவர்கள் பாடிய இசைத்தட்டை இயக்கிக் கேட்கும்பொழுது—நாம் இத்தகைய அநுபவத்தைப் பெறுகின்றோம்.

உரைநடையும் பாட்டும் கலந்த நூலொன்றினைப் படிக்கும் பொழுது நமக்கு இத்தகைய அநுபவம் ஏற்படு கின்றதன்றோ? வாய்க்குள் உரைநடையைப் படித்துக் கொண்டிருக்கும் நாம் இடையே ஒரு பாட்டு வருங்கால் அதன் உணர்ச்சி உள்ளத்திற்கு வரப்பெற்றதும் வாய் திறந்து பாட்டைப் படிக்கின்றோம். உணர்ச்சி தனக்குத் துணையாக ஒலி நயத்தை நாடுவதையே இது காட்டுகின்றது. நாட்டுப் புறங்களில் பாரதம், இராமாயணம், பக்தவிஜயம் போன்ற உரைநடை நூல்களைப் படிப்பவர்கள், அவற்றைப் பாட்டு களைப் படிப்பது போலவே நீட்டி நீட்டிப் படிப்பதை இன்றுங் காணலாம். இக்கதைகளை அவர்கள் அடிக்கடி கேட்டுப் பழகிய காரணத்தால், அக்கதைகளைப் படிக்கத் தொடங்கும் பொழுதே உணர்ச்சி நிரம்பியவர்களாகி விடுகின்றனர். உணர்ச்சிமிக்க அவர்களின் உள்ளம் கதையின் கற்பனையில் நுழைந்தவுடன் அஃது ஒலி நயத்தை நாடுகின்றது;அவர்களும் இசையோடு நீட்டிப் படிக்கின்றனர். ''**கொல்லணையேல்**''[19] என்ற குலசேகராழ்வாரின் பாசுரத்தை உள்ளம் கனிந்து பாடுங்கால் ஆழ்வார் தாம் தசரதனாக இருந்து புலம்பும் முறையில் பாடியதைப்போலவே, நாமும் பாடித் தசரதனாகி விடுகின்றோம்; ஆழ்வார் உணர்ச்சியை நாமும் பெறு

18. திருவருட்பா—அருள் விளக்கமாலை-2
19. பெரு. திருமொழி 9 : 3

கின்றோம். செவி ஒலி நயத்தை உணரத் தொடங்கியதும் நம் உள்ளம் கற்பனையை உணர்ந்து பாட்டின் உணர்ச்சியைப் பெறத் தொடங்கி விடுகின்றது,

ஒரு குழந்தையை உறங்க வைப்பதற்குத் தாய் மேற்கொள்ளும் முயற்சி ஈண்டுச் சிந்திக்கற்பாலது. பாரதிதாசனின் 'ஆண் குழந்தைத் தாலாட்டு', 'பெண் குழந்தைத் தாலாட்டு', அல்லது குலசேகராழ்வாரின் ''மன்னுபுகழ்''[20] என்று தொடங்கும் தாலாட்டுப் பாடல்களைப் பாடி தொட்டிலை ஆட்டும் பொழுதும் அல்லது குழந்தையைத் தன் பக்கத்தில் கிடத்திக் கொண்டு அதன் முதுகைத் தட்டும் பொழுதும் பாட்டின் ஒலிநயத்தைக் குழந்தை உணரத் தொடங்கியதும், அல்லது தொட்டிலின் ஒழுங்கான அசைவை அறிந்தவுடன், அல்லது அன்னையின் கை தன் முதுகை மெல்லத் தட்டும் ஒழுங்கை அறிந்தவுடன் குழந்தையின் மனம் உறக்கத்தில் ஈடுபடத் தொடங்குகின்றது; சிறிது நேரத்தில் கண் வளர்கின்றது. இங்ஙனமே, பாட்டின் ஒலி நயமும் நம்மை நனவுலகத்தை விட்டுக் கற்பனையுலகிற்குக் கொண்டு செலுத்தும் சாதனமாக அமைகின்றது. உறக்கத்திற்குரிய சாதனங்களைப் பெற்றுப் பழகிய குழந்தை நாளடைவில் உறக்கம் வரும் பொழுதெல்லாம் அவற்றை நாடும்; இங்ஙனமே பாட்டைப் படிக்கும் நம் உள்ளமும் அறிவுலகத்திலிருந்து உணர்வுலகத்தை எட்டுவதற்கு அதற்கு ஏற்றதாகிய ஒலிநயத்தை நாடும் என்பதை நம் அநுபவத்தால் அறிகின்றோம்.

அச்சு வடிவத்தில் காணும் பாட்டு அரை உயிரோடு தான் உள்ளது. அதைப் பாடிய கவிஞர் (கம்பர், வில்லிபுத்தூரார் போன்றவர்கள்) இப்பொழுது நம்மிடையே இல்லை. அவர்தம் பாட்டில் தம்முடைய முகக்குறிப்பையும்,

20. ஷெ. 8

கையசைவுகளையும் இசையையும் விட்டுச் செல்லவில்லை: அங்ஙனம் விட்டுச் செல்லவும் இயலாது. ஆனால் ஒலிநயம், கற்பனை, மோனை, எதுகை போன்ற கூறுகளை அவற்றின் படிமங்களாக (Images) விட்டுச் சென்றுள்ளார். அவருடைய உணர்ச்சியைப் பெறவேண்டுமானால் அச்சு வடிவத்தில் காணும் அவருடைய சொற்களிலிருந்து மட்டிலும் பெறுதல் இயலாது. அச்சு வடிவத்தில் காணும் அவரது பாடல்; ‘ஒளிப்பட நெகட்டிவ்’ (Photographic negative) போன்றது நெகட்டிவிலிருந்து படத்திலுள்ளவற்றைத் தெளிவாகக் காணல் இயலாது. படத்திலுள்ள பொருள்களின் படிமமே அதில் இருக்கும். தக்க துணைப் பொருள்களைக் கொண்டு அந்த நெகட்டிவிலிருந்து படத்தை அச்சிட்டால்தான் பொருள்களின் படம் தெளிவாகப் புலனாகும். இங்ஙனமே, கவிதையைப் பாடிய கவிஞன் விட்டுச் சென்ற படிமங்களி லிருந்து படிப்பவர் பாட்டை யாத்தவரின் உணர்ச்சியை உண்டாக்குதல் வேண்டும். அங்ஙனம் உண்டாக்குவதற்கு மேற்கொள்ளப்பெறும் முயற்சி நெறியோடு அமைந்தால் விரும்பிய பயன் கிடைக்கும். அதாவது ஒலிநயம் புலப்படுமாறு பாடலை இசையுடன் படிக்குங்கால் அது நமது உள்ளத்தைக் கவர்ந்து விடுகின்றது.

இவற்றைச் சிந்திக்குங்கால் கவிதை காதுகளின் பொருட்டே தோன்றிய கலை என்பதை அறிய முடிகின்றது. செவி வாயிலாகக் கேட்டுப் பொருளை உணர்வதற்காகக் கவிஞனால் படைக்கப்பெற்ற ஓர் அற்புதச் சொல்லோவியம் இது. கண்களை நம்பிக் கவிதைகளை அநுபவிக்க இயலாது. அச்சிட்ட காகிதத்திலுள்ள சொற்கோவை கவிதையாகாது; அதனை உரக்கப் படிக்கும் பொழுதுதான் கவிதை புலனா கின்றது. இதுபற்றியே தொல்காப்பியரும் ஓசை அமைதியையே பா என்ற சொல்லால் குறித்துப் போந்தார். உரையாசிரியராகிய பேராசிரியரும், “பா என்பது, சேட்

புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற் கேதுவாகிப் பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை''[21] என்று உரையும் வகுத்தார். எனவே, இங்ஙனம் நுண்ணிய விசும்பின் கண் அலைஅலையாய் எழும்பி ஓர் ஒழுங்காக வரும் ஓசையே பாவாகின்றது என்பது தெளிவாகின்றது. இதனை நன்கு உணர்ந்த பழந்தமிழர் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கு வகைப்பாக்களின் ஓசைக்கு முறையே செப்பலோசை, அகவலோசை, துூங்கலோசை, துள்ளலோசை எனத் தனித்தனியே பெயர் தந்து சிறப்பித் தனர். மேலும், இவை பாக்களின் வகைகளுக்கேற்ப மும் மூன்றாகப் பிரித்துணர்ந்து நுட்பமும் கண்டுள்ளனர். இந்த ஓசை நயத்தைத்தான் தொல்காப்பியர் 'வண்ணம்' என்ற பெயரால் குறிப்பிடுவர். வண்ணம் என்பது ஒருபாவின் கண்ணே நிகழும் ஓசை விகற்பம்; அதாவது, சந்த வேறுபாடு, இவற்றையெல்லாம் நுட்பமாக அறிந்தவர் ஐம்புலிங்கக் குருக்கள் என்று நினைக்க இடந்தருகின்றது. காரணம், பாவின் நாடியறிந்து கற்பித்த பெருமான் இவர்.

ஐந்தாவது படிவத்தில் வில்லி பாரதம் கன்னபருவம் பதினேழாம் போர்ச் சருக்கத்தில் சில பாடல்கள் பாடநூலில் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தன. இவற்றை **ஐம்புலிங்கக் குருக்கள்** கற்பித்த முறையை இப்போது நினைவு கூர முடிகின்றது. கன்னனுடைய புண்ணியமனைத்தையும் கண்ணன் பெற்று அவன் கேட்ட வரங்களையும் தருகின்றான். அன்றியும், "கூற்றுறழ்கராவின் வாயினின்றழைத்த குஞ்சர ராசன்முன் அன்றுதோற்றிய'' திருமாலின் தரிசனமும் கன்னனுக்குக் கிடைக்கின்றது. இதனைக் கன்னன் வாக்காக வில்லிபுத்தூரரார்,

21. தொல், பொருள் செய்யு-1 (பேராசிரியம்)

நீலநெடுங் கிரியும்மழை முகிலும் பவ்வ
நெடுநீரும் காயாவும் நிகர்க்கும் இந்தக்
கோலமும்வெங் கதைவாளும் சங்கு நேமி
கோதண்டம் எனும்படையும் குழைத்த வாச
மாலைநறுந் துழாய்மார்புந் திரண்ட தோளும்
மணிக்கழுத்தும் செவ்விதழும் வாரி சாதக்
காலைமலர் எனமலர்ந்த முகமும் சோதிக்
கதிர்முடியும் இம்மையிலே கண்ணுற் றேனே![22]

என்று கூறுவர். இங்கு வில்லியின் கண்ணன் மாணாக்கர்களிடம் பேசக் காத்திருக்கின்றான். கண்ணன் பெற்ற உணர்ச்சியை வில்லி பெற்றால்தானே அவன் கொண்ட உணர்ச்சியை நம்மிடம் கொட்ட முடியும்? வில்லி பெற்ற உணர்ச்சியை ஆசிரியர் பெற்றாலன்றி அவர் அவ்வுணர்ச்சியை மாணாக்கர்கட்கு எங்ஙனம் காட்ட முடியும்? ஆசிரியர் இவ்வுணர்ச்சியை எவ்வாறு பெறுவது? ஐம்புலிங்கக்குருக்கள் தம்மைக் கண்ணனாகவே எண்ணிக் கொண்டு பாடலை உணர்ச்சி ததும்ப இசையேற்றிப் படிப்பார். அவர் அங்ஙனம் படிக்கும்போது வில்லியின் உணர்ச்சி ஆசிரியரைக் கிளர்ந்தெழச் செய்யும். அவர் வாயிலிருந்து பாடல் வெளிவரும் போது உணர்ச்சி அலைஅலையாகப் பீறிட்டுக்கொண்டு எங்களை வந்தடையும். போர்க்களக் காட்சியை வில்லி மானசீகமாகக் காண்பது போலவே, எங்களையும் காணச் செய்து விடுவார் குருக்கள் அய்யா.

இரண்டாம் முறை பாடலைப் படிக்கும்போது, கிரி, முகில், பவ்வநெடுநீர், நேமி, கதிர்முடி என்ற சொற்களின் பொருளை விளக்கிக் கொண்டே செல்வார். "திருமால் மலை, மேகம், கடல் நீர், காயாமலர் என்பவற்றின் நிறத்தைக் கொண்டவர். அவர் கையில் கதை, வாள், திருவாழி, திருச்

22. வில்லிபார-கன்னபரு. பதினேழாம்போர்-247

சங்கு,வில் ஆகிய படைகள் அணி செய்யும், நறுமணம், கமழும் திருத்துழாய் மாலை மார்பில் புரண்டசையும் திரண்ட தோளும், அழகிய கழுத்தும், கொவ்வைச் செவ்விதழும், காலையில் மலர்ந்த பாரிசாதமலர் போன்ற திருமுகமும், சோதிமயமாகத் திகழும் திருவபிடேகமும் கொண்ட திருமாலின் தரிசனம் கன்னனுக்குக் கிடைக்கின்றது." என்று விளக்குவார். கஜேந்திரனுக்கு மோட்சம் அளிக்கும்போது கொண்ட கோலத்துடனே கன்னனுக்கும் தரிசனம் தந்தார் என்பதைச் சுட்டுவார். ''இம்மையிலே கண்ணுற்றேனே'' (இக்காட்சியை) என்று பன்முறை கன்னன் பேசுவது போலவே பன்னி உரைப்பார். இறுதியில் இந்த அடியை மெல்லிய குரலில் பலமுறை பாடி எங்கள் கவனத்தை ஈர்ப்பார்.

பாடலைப் படித்தல் எளிது என்று அலட்சியம் செய்யும் ஆசிரியரிடம் ஒருநாளும் கவிஞனின் உணர்ச்சி தோன்ற முடியாது. பாடலைப் படித்தல் அரிய செயல் என்று எண்ணிப் பாடலை ஈடுபாட்டுடன் படிக்கத் தொடங்கும் ஆசிரியரிடமே இவ்வுணர்ச்சி எளிதில் தோன்றும். உண்மையில், பாடலைப் படித்தல் என்பது உள்ளத்தையே அசைத்து விடக்கூடிய செயல்தான்; உணர்ச்சியுடன் படித்தல் பெறற்கரிய பேரின்பத்தை அடைவிக்கும் செயல், சில பாடல்களை உணர்ச்சியுடன் உரக்கப் படிக்கும்போது, அவ்வுணர்ச்சி உரக்கப் படிப்பதையே தடைபடுத்தவும் கூடும். உணர்ச்சியின் கொடு முடியினை எட்டும்போது இவ்வநுபவம் நிகழ்வதை அறியலாம்.

தன் கடமையை முடித்துக் கொண்டமைக்காகவும், இம்மையிலேயே அமலநாரணனைத் தான் காணப்பெற்றதற்கும் பெருமகிழ்ச்சியுற்று அம்மகிழ்ச்சியைக் கண்ணனுக்கு இவ்வாறு தெரிவிக்கின்றான் கன்னன்.

தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ டெதிர்மலைந்து தறுகண் ஆண்மைச்
செருவிலெனு துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன்; தேவர்கோவுக்கு
உரைபெறுநற் கவசகுண் டலமும் ஈந்தேன்
உற்றபெரு நல்வினைப்பேறு உனக்கே தந்தேன்;
மருதிடைமுன் தவழ்ந்தருளும் செங்கண் மாலே
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே.

வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்;
மதிபெற்ற திருவுளத்தான் மதிக்கப் பெற்றேன்;
தேன்பெற்ற துழாயலங்கற் களப மார்பும்
திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்;
ஊன்பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும்
உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன்;
யான்பெற்ற பெருந்தவப் றென்னை யன்றி
இருநிலத்தில் பிறந்தோரில் யார்பெற் றாரே".[23]

இந்த இரண்டு பாடல்களையும் ஒன்றிரண்டுமுறை இசையூட்டிப் படித்த பிறகு தருமன் மகன், மலைந்து, தறுகண் செரு, தேவர்கோ, தமியன்; வான்பெற்ற நதி, தாள், அலங்கல், தைவந்து, பகழி, இருநிலம் என்பன போன்ற சொற்களின் பொருள்களை உரைத்துக்கொண்டே படிப்பார். (1) செஞ்சோற்றுக் கடன் கழித்தல், (2) இந்திரனுக்குக் கவச குண்டலம் ஈதல், (3) கண்ணனுக்கு ஈந்த நல்வினைப் பேறு, (4) கண்ணன் இரட்டை மருதமரத்திடையே தவழ்ந்தது, (5) கங்கை நீர் கமழும் திருவடி இவற்றிலடங்கிய வரலாறுகளை உற்சாகத்துடன் அற்புதமாக விளக்குவார். அதன் பிறகு மீட்டும் ஒருமுறை மூன்று பாடல்களையும் இசையூட்டிப் படிப்பார்; இது எங்களைக் கவிதை அநுபவத்தின் கொடுமுடிக்குக் கொண்டு செலுத்திவிடும்.

23 ஷை. 248, 249

குருக்கள் அய்யா அவர்கள் வாழ்நாள் முழுவதும் எத்தனையோ சிறுவர்கட்கு அறிவினை நல்கி அவர்களின் முகமலர்ச்சியைக் கண்ணாரக் கண்டு அநுபவித்திருப்பார். இந்த அநுபவந்தான் அவர் பெற்ற பேறு. இந்த மூன்று பாடல்களையும் கற்பித்ததில் போர்க்களத்தில் கன்னனும் கண்ணனும் இருந்த சூழ்நிலையையே 'வகுப்பில் திரும்பப் படைத்து' எங்களைக் கவிதைச் சுவையின் கொடுமுடிக்குக் கொண்டு செலுத்தும்போது எங்கள் முகத்தில் இன்பம் ததும்பி யோடுவதை எங்கள் முகமலர்ச்சியைக் கொண்டே அறிவார். இதனைக் குருக்கள் ஐயா கண்ணுறும்பொழுது அவரும் பேரின்பக் கடலில் மூழ்கி விடுவார். இப்படி அவர் தம் வாழ் நாளில் எத்தனையோ வாய்ப்புகளைக் கண்டிருப்பார். இந்த அநுபவமே அவர்தம் துறையில் பெறும் 'உண்மையான' ஊதியமாகும்.

கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று சால்பினை வளர்ப்பது. ஆசிரியர் இதில் கவனம் செலுத்தாவிடில் சால்பிற்கு எல்லைக் கோடுகளை யாவர்தாம் வரையறுப்பர்? சால்பினை வளர்க்கும் பொறுப்பு ஆசிரியரையன்றி வேறு எவரும் மேற்கொள்ளல் இயலாது, அப்படி மேற்கொண்டா லும் தக்க பலனைக் காணல் இயலாது. ஆசிரியர்களே மாணாக்கர்களின் வீர வழிபாட்டிற்குரியவர்கள். ஆசிரியருக்கு அநுபவம் பெருகப் பெருகச் சால்பினை வளர்க்கும் பெருவழி மிகவும் வியப்பினைத் தருவதாக அமைகின்றது: அந்த வழியில் காணும் ஒவ்வொன்றும் புதியனவாகவே தோற்ற மளிக்கும். நன்மையும் தீமையும் நல்கும் ஆற்றலும் இவர்கள் கையில்தான் உள்ளது; இவர்கள்தாம் அதனைச் சரியாக உணர்தல் கூடும். இந்தப் பொறுப்பினை இவர்கள் சரியாக உணர்வார்களாயின் அது சுமக்க முடியாத அளவுக்குப் பெரிதாக இருப்பது தெரியவரும். கற்பித்தல் என்பது ஒருவரது பணியின் ஆற்றலையும் சாத்தியப்படக் கூடியதை

யும் காட்டுவதைப் போலவே, அவர்களது சிறுமையையும் எடுத்துக் காட்ட வல்லது. தாம் என்ன செய்யலாம் என்பதை யும் தம்மால் என்ன செய்ய முடியும் என்பதையும் ஆசிரியர் காணும்பொழுது அவர் தம்முடைய சுவட்டிலேயே தாம் வகுத்துக் கொண்ட துறையிலேயே, சிலர் பெரிய நிலையை எய்துகின்றனர் என்று காண்கின்றார்; தம்முடைய ஆற்றலை யெல்லாம் கொட்டி ஒரு பாடத்தை முடித்தபிறகு தாம் உணர்வதைப் போன்ற பெருமிதத்தை வேறு எப்பொழுதும் அவரால் உணர முடிகின்றதில்லை. அவரிடம் பாடம் கேட்ட சிறுவர்கள் பள்ளியை விட்டு வெளிச்செல்லுகின்றனர்; ஆசிரியரும் சாதாரண மனிதராகி விடுகின்றார். ஆனால், அந்த ஒரு மணி நேரமாவது தம் வாழ்க்கை முழுத்தன்மை எய்தியது என்ற உணர்ச்சி அவரிடம் கட்டாயம் இருக்கத் தான் செய்யும். ஆசிரியத் தொழிலில் இல்லாதவர்களும் இத்தகைய 'பேரின்பத்தை' அடையும் வாய்ப்பு உண்டு. ஒரு நல்ல கவிதையைப் படித்து அதன் சுவையை அநுபவித்தவர் களும், அந்தக் கவிதையைப் படித்த ஒரு சிறு கால அளவிலா யினும் தம்முடைய வாழ்க்கை முழுத்தன்மை எய்தியது என்பதை உணர்வர்.

**ஆசிரியப்பணியின் சிறப்பு :** ஆசிரியப்பணி என்பது நாம் சிறப்பாகப் பெறும் உரிமை; அது கீதாசிரியனின் பணியைப் போன்றது. அப்பணியுடன் ஒரு பெரிய பொறுப்பும் இணைந்தே வருகின்றது. நாம் என்றும் அப்பணிக்கு நம்மைப் பொருத்தப்பட அமைத்துக் கொள்வதே அது. என்றும் கவிதையநுபவத்துடன் வாழ்வதென்பது எளிதான செயலன்று. பிறவியிலேயே ஆசிரியக் கூறு சிறிதளவாவது அமையப்பெற்றவர்கட்கே அஃது இயலும். ஆசிரியத் துறையில் நம்பிக்கை கொண்டு பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெறுபவர்கட்கும் இது சாத்தியமாகும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்[24]

என்ற வள்ளுவர் வாக்கிலும் இவ்வுண்மை காணப்பெறுவதை அறியலாம்.

ஜம்புலிங்கக் குருக்கள் கற்பித்தது இன்றும் என் உள்ளத்தில் பசுமையாகவே உள்ளது. இவர் கற்பித்த முறையே என்னை இன்றளவும் கவிதைச் சுவையில் ஈடுபடுத்தி வருகின்றது என்பதை உணர்கின்றேன். இதுவே நான் பிற்காலத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனாகப் பணியாற்றியபோது என்னை நன்முறையில் கொண்டுசெலுத்தியது என்பதையும் உணரமுடிகின்றது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்த மாதிரி **'கவிதையநுபவம்'** என்ற அரியதொரு நூலும் படைக்கக் காரணமாக இருந்தது என்றும் கருதுகின்றேன்.

**என் ஆய்வில் கவிதையின் கொடுமுடி :** நான் பிஎச்.டி. பட்டத்திற்கு ஆராய்ந்தபொழுது ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால் பட்டபொழுது கவிதையநுபவத்தின் கொடுமுடியை எட்டியிருக்கின்றேன். பாசுரங்களை அநுபவிக்கும் பொழுது பல லிட்டர் கண்ணீர் பெருக்கெடுத்தோடியிருக்கின்றது.

'பழுதே பலபகலும் போயினஎன் றஞ்சி
அழுதேன்'[25]

என்ற பொய்கையாழ்வாரின் அநுபவத்தைப் பெற்றதுண்டு.

ஆவியே அமுதே எனநினைந் துருகி
..........................................
பாவியேன் உணராது எத்தனை பகலும்
பழுதுபோய் ஒழிந்தன நாட்கள்.[26]

24. குறள்-666
25. முதல் திருவந் 16
26. பெரி. திரு.· 1.1:2

என்ற திருமங்கையாழ்வாரின் அநுபவமும் என்னை ஆட்கொண்டதுண்டு. எம்.ஏ. வகுப்புத் தமிழ் மாணாக்கர் கட்கு 'இலக்கியத் திறனாய்வு' கற்பித்தபொழுது அவர் களுடன் இந்த அநுபவத்தைப் பகிர்ந்து துய்த்ததுண்டு. பெரும்பான்மையான மாணாக்கர்கள் கவிதையைத் துய்ப்பது ஆசிரியரைப் பொறுத்தே அமைகின்றது. அலெக்ஸாந்தர் ஹேடோ என்பாரின் "குழந்தை கவிதை யுலகில் புகுவதற்குக் காத்து நிற்கின்றது; அதற்கு வழி காட்டுவது ஆசிரியரின் பொறுப்பிலுள்ளது"[27] என்ற கூற்று கவிதை பயிற்றும் ஆசிரியர்க்கு ஒரு கலங்கரை விளக்கு போல் அமையட்டும்.

குமிழி — 21

## 31. மாணவ விடுதி வாழ்க்கையில்

முசிறியில் 'மாணாக்கர் உணவு விடுதியின் வாழ்க்கை' இப்போது குமிழியிடுகின்றது. இப்போது 'மாதா பிதா குரு' என்ற மூன்று குரவரும் ஒருங்கிணைந்த மூர்த்தியாகத் திகழும் கே. இராமசந்திர அய்யர் நினைவிற்கு வருகின்றார். இவருடைய சீரிய முயற்சியால்தான் 'மாணாக்கர் விடுதி' உருவாயிற்று என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன்.

நன்முறையில் கல்வி பெறுவதற்கு உடலும் உள்ளமும் நன்முறையில் அமைந்து இயங்க வேண்டும். இந்த 'இரகசியத்தை' நன்கு புரிந்து கொண்டவர் கே. ஆர். நல்ல சூழ்நிலையும் இதில்பெரும்பங்கு கொள்கின்றது என்பதையும்

27. The child stands waiting to enter the land of poet, and it lies with the teacher to lead the way-**On the Teaching of Poetry P. 10**

நன்கு அறிந்தவர். இதனை நன்கு தெளிந்த **சித்பவாநந்த அடிகள்** திருச்சி-கரூர் இருப்பூர்திப் பாதையில் உள்ள திருப்பராய்த்துறையில் **'இராமகிருஷ்ண தபோவனம்'** கண்டு அதன் ஆதரவில் **'விவேகாநந்த வித்தியாவனத்தை'** இயங்கச் செய்து பல்லாண்டுகளாகக் கல்வித் தொண்டும் சமயத் தொண்டும் — ஒருவகையில் சமூகத் தொண்டும் — புரிந்து வந்ததைத் தமிழகம் நன்கு அறியும். இந்த அளவுக்குக் கே ஆரின் கல்விதொண்டு அமையவில்லையாயினும் 'குருவிக்குத் தகுந்த இராமேசுவரம்' என்றாற்போல தம் ஆற்றலுக்கேற்றவாறு இறைவன் திருவருள் துணையால் சிறிய அளவில் அருமையான கல்வித் தொண்டு புரிந்து வந்தார் என்பதை எவரும் மறுத்தற்கில்லை.

பள்ளிக்கும் உணவு. விடுதிக்கும் சுமார் 2-3 ஃபர்லாங் தொலைவு இருக்கும். இந்தத் தொலைவுக்கு ஏற்றவாறு உணவு முறைகளை அமைத்தார். சுாலை - 9 மணிக்கு உணவு; நண்பகல் ஒரு மணிக்கு சிற்றுண்டி; இரவு 7-30 மணிக்கு உணவு. காலையில் சிற்றுண்டி வைத்துக் கொண்டால் நண்பகலில் வேகமாகப் பள்ளியிலிருந்து திரும்பி அவசர அவசரமாக உணவு கொள்ள முடியாது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு. காலையில் வேண்டுவோர் மட்டிலும் தனிக் கட்டணத்தில் காஃபி அருந்தலாம்; மாலை காஃபி இல்லை; இரவு வேண்டுவோர் மட்டிலும் தனிக்கட்டணத்தில் பால் அருந்தலாம்; நடுத்தர வகுப்பினருடையவும் அதற்குச் சற்றுக் கீழ்நிலையிலுள்ளவருடையவுமான பொருவாதார நிலைக்கு ஏற்றவாறு மாணவர் விடுதி இயங்கி வந்தது. ஒருசில செல்வர் குடும்பத்தைச் சார்ந்த மாணாக்கர்கள் மட்டிலுமே காலை காஃபியையும் இரவு பாலையும் தனிக் கட்டணத்தில் கொண்டனர். உணவு விடுதிக்கு மிக அருகில் ஒரு சோழிய பிராமணரின் சிற்றுண்டிச்சாலை இருந்தது. குறைந்தவிலையில் இட்லி,தோசை,காஃபி அங்குக்கிடைக்கும்

இங்கு ரவா தோசை பெயர் போனது. 9 மணிவரை பசி தாங்க முடியாத ஒருசில மாணாக்கர்கள் இங்குத் தோசையும் காஃபியும் கொண்டு விடுவார்கள். இவர்கள் 9 மணிக்குச் சரி யாக உணவு கொள்ள முடிகின்றதில்லை. என்ன அறிவுரை சொன்னாலும் ஒரு சில மேற்படிவ மாணாக்கர்கள் காலை யில் ஓட்டல் பழக்கத்தைக் கைவிடுவதில்லை.

நாள்தோறும் அதிகாலையில் காவிரி சென்று நீராடி வரவேண்டும்; ஏழு மணிக்குள் திரும்பி விடுதல் வேண்டும். வெள்ளம் பெருகி வரும் காலத்தில் உணவு விடுதிக்கு நேர் தெற்கே ஆற்றில் கட்டப்பெற்றுள்ள வாகணைக்குக் கீழ்ப்புறம் நீர்ப்பிரவாகம் இன்றி தண்ணீர்குளம்போல் அதிக ஓட்டமின்றி இருக்கும். இராமேசுவரத்தில் கட லலைகள் இல்லாத 'அக்கினி தீர்த்தம்' போல் இருந்தது என்று சொல்லி வைக்கலாம். இந்த இடத்தில்தான் அனை வரும் நீராட வேண்டும் என்பது கட்டாய ஏற்பாடு; வேறு இடங்களுக்குப் போகக் கூடாது என்பது நிரந்தரமான கட்டளை. பெரும்பாலோர் நாட்டுப்புறத்திலிருந்து வந்த வர்களாதலின் அனைவருக்கும் நீந்தத் தெரியும். வெள்ளக் காலத்தில் வாகணையும் அருகில் நீரின் ஆழம் ஆறு ஏழு அடி வரையிலும் இருக்கும். கரையருகில் சாய்ந்த நிலையி லுள்ள மரங்கள் தண்ணீருக்கு அருகிலும் தண்ணீரைத் தொட்டுக் கொண்டுமிருக்கும். நீந்தத் தெரிந்தவர்கள் துணிவாக இந்த மரங்களிலேறி நீரில் குதித்து விளையாடுவது கண்ணன் யமுனையில் நீராடுவதை நினைவூட்டுவதாக இருக்கும்.

பிற்காலத்தில் நான் சங்க இலக்கியங்களில் ஆழங்கால் பட்டபோது மருதத்திணைப் பாடல்களைப் படித் தநுபவிக்கும்போது இந்த ஆற்றங்கரைச் சூழ்நிலை நினை வுக்கு வரும்.

(எ.டு.)

வாழி யாதன் வாழி யவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே; யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டேமே [27]

[யாய் - எம்பெருமாட்டி; வேட்டோள் - விரும்பியிருந்தாள், மறைந்தொழுகினாள்; யாம் - தோழியராகிய யாம்; காஞ்சி - காஞ்சிமரம்; சினை - முட்டை; ஊரன் - மருத நிலத் தலைவன்.].

இது தோழியின் கூற்றாக அமைந்த பாடல். புறத்தொழுக்கத்தில் நெடுநாள் ஒழுகி 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டும் தலைவியோடு ஒழுகி நின்ற காலத்தில் தலைவன் தோழியுடன் சொல்லாடி 'யான் அவ்வாறு ஒழுக நீயிர் நினைத்த திறம் யாது?' என்று வினவியபொழுது அவள் சொல்லியது. தோழி கூறுவாள்: "நீ எம்மைப் பிரிந்துறைந்த காலத்தே பெருந்தகைமை யுடைமையால் தலைவி நின் கொடுமையை ஆயத்தாரும் ஊராரும் அறிந்து நின்னைப் பழி தூற்றுதற்கு நாணித் தன் பெருந்துயரத்தைத் தன்னுள்ளே கரந்து கொண்டவளாய் அயலார்க்குத் தான் துன்பம் சிறிதும் இல்லாதாள் போன்று நடித்தனள்; அவள் 'ஆதன் வாழி' என்றும் 'அவினி வாழி' என்றும், 'நெற்பல பொலிக' என்றும் 'பொன் பெரிது சிறக்க' என்றும் நீ அவளோடு உடனுறையுங் காலத்து நினைக்கற்பாலனவாகிய நலங்களையே விரும்புவாள்போல் காணப் பெற்றாள்.

27. ஐங். 1.

"பின்னும் அவள், மாபெருந் துயரத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றாள் என்பதனை, அவள் வாய் முறுவலே எமக்குக் காட்டலின், யாங்கள் மட்டும் 'எம் பெருமான் அத் தீநெறியிலிருந்து (பரத்தையொழுக்கம்) உய்தல் வேண்டுமே' என்று தெய்வத்தை நினைந்து வாழ்த்தி யிருந்தோம்; யாம் "ஊரன் வாழ்க என வேட்டேம்" என் கின்றாள். இனி தலைவன் இங்ஙனம் தீ நெறிக்கண் ஒழுகு வதற்குப் 'பாணனே காரணம்' என்பதனை அறிந்தவளா யினும், இகழ்ச்சிக் குறிப்பால் 'பாணனும் வாழ்க' என்று ஓதுகின்றாள்."

ஐங்குறுநூற்றில் உள்ளுறை அமைந்திருப்பதைப்போல் வேறு எந்த நூலிலும் அஃது அமைந்திருப்பதைக் காணல் இயலாது. ஈரடியிலும் உள்ளுறை; ஓரடியிலும் உள்ளுறை. அவை மிகச் சுருங்கிய அளவில் பெருகியபொருளை உள்ளடக்கி நிற்கின்றன. சில சொற்கள் நின்று பல வகையான பொருளைக் காட்டுகின்றன. பேருருவங்களைக் கண்ணாடி தனக்குள் அடக்கிக் காட்டுவது போலப் பெரும்பொருளை அடக்கிக் காட்டுகின்றன.

> நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
> யாணர் ஊரன்

என்பது மருதத் திணைக் கருப்பொருளைக் கொண்ட உள்ளுறை. 'அரும்புகளையுடைய காஞ்சி மரத்தின் கிளை களில் சிறிய மீன்கள் தங்கியிருக்கும் புதுமை வாய்ந்த மருத நிலத்தலைவன்' என்பது இதன் பொருள்.

நாங்கள் ஆற்றங்கரையடுத்து வளைந்து நீரில் படிந் திருக்கும் மரத்தின்மேல் ஏறி நீரில் குதிப்போம். அந்த மரம் காஞ்சி மரமா, அல்லது வேறு மரமா என்பது எங்க ளுக்குத் தெரியாது. நாங்கள் அவ்வாறு குதிப்பதற்கு முன்னர், அம்மரத்தின் பல கொம்புகளில் நறுமணம் கமழும்

மலர்கள் பூத்துக் குலுங்கி நிற்பது எங்கள் கண்ணில்படும். நீரோட்டத்தைத் தழுவிய நிலையில் தாழ்ந்திருக்கும் கொம்புகளில் சிறு மீன்கள் துள்ளி விழுந்து தங்கிப் பின் நீரில் குதிக்கும். இதனைக் கண்டு மகிழ்வோம். இன்றும் இத் தகைய காட்சியை முசிறியில் காணலாம்; திருவரங்கம் அம்மா மண்டபப் படித்துறையருகிலும் காணலாம். இந்தக் காட்சி இன்றும் என் மனத்தில் நிலைத்துள்ளது.

இதற்குமேல், சங்க இலக்கியப் பயிற்சி பெற்ற பிறகு இக்காட்சி உள்ளுறையை விளக்குவதை அறிய முடிகின்றது. மீன்கள் மரக்கொம்புகளிலிருந்து நீரில் விழும்போது பூவின் நறுமணமும் மீனின் புலால் நாற்றமும் ஒருங்கே கலந்து கமழ்வதை அப்போது மாணாக்கர் நிலையில் கூர்ந்து பார்க்கும் திறன் இல்லையாயினும். இப்போது நினைந்து பார்க்க முடிகின்றது. இத்தகைய சிறப்புடையது மருதநிலம் என்று இலக்கியங்களில் வருணிக்கப் பெற்றிருப்பதை முசிறியில் நேரில் காணமுடிந்ததை இப்போது நினைந்து பார்க்கின்றேன். இலக்கியப் பயிற்சி பெற்ற பிறகு மருதநிலத் தலைவன் பரத்தையர் சேரியை அடுத்து வாழ்க்கைத் துணைவி யுடன் புகழ் பரவ வாழ்வதையும், இல்லறம் இனிதே நடைபெறுவதையும் சிந்தித்துப் பார்க்க முடிகின்றது. பரத்தையர் இடையே தலைவனைப் பற்றி வசப்படுத்திப் பிரிகின்றதையும் நினைந்து பார்க்க முடிகின்றது.

இந்தப் பாடலில் 'நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்' என்பது உள்ளுறையாகும். இந்த உள்ளுறையில் "நறு மணம் கமழும் மலருடைய காஞ்சியையும் புலால் நாறும் சிறுமீனையும் ஒருங்கே உன்னூர் உடைத்தாயிருத்தல் போன்று நீயும் இத்தகைய மாண்புடைய தலைவியையும் இழிகுணமே நிரம்பிய பரத்தையரையும் ஒப்ப மதித்து ஒழுகா நின்றனை" எனத் தலைவனின் கொடுமையை

உள்ளடக்கிக் கூறியுள்ளமையைக் கண்டு மகிழ முடிகின்றது. "ஆற்றங்கரையில் நறுமணமும் புலால் நாற்றமும் கலந்து பரவுவது போல, நின் வாழ்க்கையில் புகழும் பழியும் கலந்து ஊரில் பரவுகின்றது" என்பது விளக்கம், அன்று முசிறியில் பெற்ற நேர்காட்சி இலக்கிய நயத்தை உணர்வதற்குத் துணையாக இருப்பதை இன்று நீள நினைந்து பார்க்க முடிகின்றது.

ஐங்குறுநூற்றைத் தொகுத்த ஆசிரியர் சங்கப்புலவராகிய புலத்துறை முற்றிய **கூடலூர்க் கிழாரும்**, தொகுப்பித்த **யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை** என்ற அரசனும் சேர நாட்டவர்கள். ஆகவே, மருதத் திணையைச் சார்ந்த 'வேட்கைப் பத்து' என்னும் முதற் பகுதியின் பத்துப் பாடல்களிலும் தம் நாட்டுச் சேர வேந்தனாகிய '**ஆதன் அவினி**'[28] என்பான் வாழ்த்திச் சிறப்பிக்கப் பெற்றுள்ளமை யினால் இந்நூலில் மருதத்திணை முன்னரும், சேரர் துறைமுகப்பட்டினமாகிய '**தொண்டி**' என்னும் நகரினைச் சிறப்பித்துக் கூறும் 'தொண்டிப்பத்தினைத்' தன்னுட் கொண்ட நெய்தல் திணை இரண்டாவதாகவும், அதன் பின்னர் கபிலர் பாடிய குறிஞ்சி நெய்தலின் பின்னர்க் கோக்கப் பெற்றன என்று இம்மூன்றற்கும் ஒருவாறு முறை கூறலா மாயினும் பாலையும் முல்லையும் இவற்றின் பின்னர் முறையே அமைக்கப் பெற்றமைக்குக் காரணம், ஒருவாற் றானும் விளங்கவில்லை என்பர் **டாக்டர். உ. வே. சாமிநாத அய்யர்** அவர்கள்.

---

28. **ஆதன்** என்பவன் வாழியாதன் என்னும் சேரமான். இவன் கபிலரால் பதிற்றுப்பத்திற் பாடப் பெற்ற வள்ளற் பெருமான். இவனைச் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்றும் வழங்குவர். இவனுக்குப் பின்னர் இவன் பெயரால் ஒரு பழங்குடி நிலவியது என்றுதெரி கின்றது. ஆதனவினி, ஆதன் எழினி, ஆதன் அழிசிஎன வரும் சேரமான்களின் பெயர்கள் இதற்குச் சான்றாகும்.

சனிக்கிழமை தோறும் எல்லோரும் எண்ணெய்க் குளியலைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். இதற்கு உணவு விடுதியிலேயே நல்ல ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. பெரிய அண்டாவொன்றில் வெந்நீர் காய்ந்த வண்ணம் இருக்கும். தனித்தனியான மரத்தொட்டிகளில் தொட்டிக்கு ஒரு வாளி வீதம் அதிகச் சூடான வெந்நீர் விடப்பெறும்; குளிக்கும் அளவு சூடு இருக்குமாறு தண்ணீர் கலந்து விளாவி வைக்கப்பெறும். உணவு விடுதி வேலையாள் இந்தத் தொண்டை மிக அன்பாகச் செய்வான். நல்லெண்ணெயும் சிகைக்காய்த் தூளும் ஓரிடத்தில் வைக்கப்பட்டிக்கும். அவரவர் கட்கு வேண்டிய அளவு இவற்றை எடுத்துக் கொள்ளலாம். சிகையுடன் கூடிய மாணாக்கர் ஒருவரும் இல்லையாதலின், அவரவர்களே எண்ணெய் தேய்த்துச் சிகைக்காயும் தேய்த்துக் கொள்வர்; அருகில் நீராடுவோர் முதுகைத் தேய்த்துவிட உதவுவர். இந்தச் சமயத்தில் கே. ஆருக்குத் துணையாகப் பணியாற்றிய இடைநிலை ஆசிரியர் சிவராம கிருஷ்ணய்யர் அருகில் நின்று கொண்டு எண்ணெய்க் குளியல் திட்டத்தை மேற்பார்வை இடுவர். காலையிலும், இரவிலும் உணவு கொள்ளும்போதும், பெரும்பாலும் இவர் உணவு கொள்ளும் இடத்தில் நின்று கொண்டே கவனிப்பார், குறைந்த செலவில் அக்காலத்தில் மிகச் சிறப்பாக நடை பெற்ற ஓர் உணவு விடுதியைக் காண்டல் அரிது. முசிறி உணவு விடுதியில் இரண்டு இராய அந்தணர்கள் பரிசாரக வேலையைக் கவனித்தனர்.

நான் திருச்சி, புனித சூசையப்பர் கல்லூரில் பயின்ற போது இலால்குடியில் பாலசுப்ரமணிய பிள்ளையின் (இவர் ஓர் இடைநிலைப் பள்ளி ஆசிரியர்) பொறுப்பில் இன்னும் குறைவான செலவில் ஓர் உணவுவிடுதி நடைபெற்று வந்த தைக் கேள்வியுற்றேன். என் அருமை நண்பர் விருத்தாசலம் மூலமாக, அவருடன் சென்று அந்த விடுதியையும் பார்வை

யிட்டேன். இங்கு காஃபி தலை காட்டுவதில்லை. சைவப் பரிசாரகர்கள் சமையல் வேலையைக் கவனித்தனர். முசிறி யில் உணவு, சிற்றுண்டி வாழை இலையில் பறிமாறப் பெற்றன. இங்கு ஒவ்வொருவரும் தமக்கென வைத்துக் கொண்டிருந்த தட்டுகளில் பரிமாறப் பெற்றன. உணவுக்கு ஒருபெரிய தட்டும், காய்கறிக்கு ஒருசிறிய தட்டும் ஒவ்வொரு வரும் கொண்டிருந்தனர். இவற்றை அவரவர்களே கழுவித் தூய்மை செய்து மரச் சட்டத்தினாலான அடுக்கில் வரிசை யாக வைத்துக் கொள்ள வேண்டும்.

நான் சிறுவயதில் மோர், தயிர், நெய் ஏராளமாக உண்டதாக என் அன்னை சொல்வார்கள்; ஏதோ ''திருஷ்டி யின்'' காரணத்தால் இவற்றை உண்ணும் நிலை இல்லாது போயிற்று. எப்படியோ கே. ஆர். என்னை தயிர், மோர் உட்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தி விட்டார். முதலில் பலவிதமான தயிர்ப் பச்சடிகளை உட்கொள்ளும் பழக் கத்தை ஏற்படுத்தி விட்டார்; வெங்காயம், தேங்காய், காரட், வெள்ளரிக்காய், தக்காளி போன்றவை கலந்த தயிர்ப் பச்சடிகளின் சுவையைக் காட்டச் செய்தார்; அவற்றில் சுவையை உண்டாக்கினார். மோர் நன்றாகக் கலந்து எலுமிச்சை பழம், இஞ்சி, பெருங்காயம், கறிவேப்பிலை முதலியவற்றைச் சேர்த்து மணமூட்டி உட் கொள்ளச் செய்துவிட்டார். இவற்றில் பழக்கம் ஏற்பட்ட பிறகு இன்றளவும் இவையில்லாமல் உணவு கொள்ளலில் மன நிறைவு ஏற்படுவதில்லை. சுவையாகச் செய்யப்பெற்ற **'ததியோதனம்'** இப்போது வானமிழ்தம்போல் இனிக் கின்றது. அதனை மிக்குச் சுவைத்து உண்பேன்.

**என்னை நெய் உண்ணச் செய்த முயற்சி:** கே. ஆர். அவர்களால் என்னை நெய் உட்கொள்ளச் செய்ய இயல வில்லை, எவ்வளவோ சாணக்கியம் செய்து பார்த்தும் அது

என்னிடம் பலிக்கவில்லை. ஒரு சமயம் காலையில் இராகவேந்திரராவ் என்ற பரிமாறும் இளைய பரிசாரகரிடம் சோறு எடுக்கும் தட்டில் இரண்டு கரண்டி நெய்யை விடச் சொல்லி பரிமாறிக் கொண்டு வரும்போதே நெய் விட்ட பகுதியை என் இலையில் தள்ளிவிடச் செய்தார். பருப்பு போட்டுப் பிசைந்த உணவை வாயில் வைத்ததும் உமட்டிக் கொண்டு வாந்தி பண்ணும் நிலை ஏற்பட்டது. உணவு உணவு கொள்ளாமல் எழுந்து விட்டேன். பிறகு வேறு இலை போட்டு கொண்டேன். பிறிதொரு சமயம் இரவில் ஒரு ஞாயிறன்று இதே முறை கையாளப் பெற்றது. வெங்காயச் சாம்பார் கலந்த உணவை வாயருகில் கொண்டு சென்றதும் உமட்டிக் கொண்டு வந்தது; உணவு கொள்ளாமல் எழுந்து விட்டேன். பிறகு வேறு இலை போட்டு உணவு கொண்டேன்.

உணவு வகைகளைப்பற்றியும் அவற்றிலுள்ள சத்துக் களைப்பற்றியும் அதிகமாகப் படித்து வந்தாலும் உணவில் நெய் கலந்து சாப்பிட முடியாத நிலையை எண்ணும்போது எனக்கே வியப்பாக உள்ளது. நானே விருப்பத்துடன் முயன் றாலும் முடியவில்லை. நெய் தோசை சாப்பிடுகின்றேன். நெய்யால் செய்யப் பெற்ற இனிப்பு வகைகளைப் பிரியமாக உட்கொள்ளுகின்றேன். ஆனால் இட்லி - சாம்பாரில் நெய் கலந்து சாப்பிட்டால் உமட்டுவதுபோல் வருகின்றது. இன்றளவும் நெய் கலந்து பருப்புச் சோறு, சாம்பார் சோறு உண்பதே இல்லை. எனக்கே இது வியப்பாக இருக்கின்றது.

வாரந்தோறும் புதன்கிழமை சந்தை. காய்கறிகள் மலிவாகவும் தாராளமாகவும் கிடைக்கும். நாடோறும் ஒருவித அட்டவணைப்படி சாம்பார், கறி, கூட்டு, அப்பளம் பச்சடி விதவிதமாக மாறிவரும். சனிக்கிழமை இரவு வற்றல் குழம்பு; ஞாயிற்றுக்கிழமை இரவு உருளைக்கிழங்கு கறி, வாழைக்காய் வறுகல், வெங்காயச் சாம்பார் தவறாது

இருக்கும். அன்று அப்பளம் இல்லை. செவ்வாயன்று மிஞ்சின காய்கள் ஒன்று சேர்ந்து அவியலாக உருவெடுக்கும். ஒன்றிரண்டு நாட்களில் காலையில் மோர்க்குழம்பு (பூஷணிக்காய், சுட்ட வெண்டைக்காய், அல்லது கத்தரிக்காய் தானுடன்) இருப்பதுண்டு. ஒன்றிரண்டு நாட்களில் கீரைக் கூட்டு கட்டாயம் இருக்கும். **சிவராம கிருஷ்ண அய்யர்** கறிகாய்கள் வாங்குவதிலும் அவை சமையலில் பயன்படுவதையும் மிக நன்றாகக் கவனிப்பார். உணவு விடுதியில் தங்கியிருப்பவர்கள் நல்ல உடல் நலத்துடன் திகழ்ந்தனர். யாரும் நோய்வாய்ப் பட்டனர் என்ற செய்தியே இல்லை. என் மூன்றாண்டு விடுதி வாழ்க்கையில் நானும் கணபதியும் நோய் வாய்ப் பட்டதே இல்லை.

நாடோறும் நண்பகல் சிற்றுண்டியும் ஒருவிதத் திட்டப் படி அமைந்திருக்கும். பெரும்பாலும் வர்க்க அன்னங்கள் தாம் திட்டத்தில் அமையும். எலுமிச்சை, தேங்காய், கத்தரிக் காய் (வாங்கிபாத்), தக்காளி, சாதவகைகள் மாறிமாறி வரும். ஏதாவது ஒருநாள் அரிசி உப்புமா இருக்கும். சனிக் கிழமை இட்டிலி அல்லது தோசை திட்டத்தில் அமையும். ஞாயிற்றுக் கிழமையன்று ஓர் இனிப்பு (ரவா, சேமியா கேசரி, மைசூர்பாகு இவற்றில் யாதாவது ஒன்று), ஒரு காரம் (பஜ்ஜி அல்லது வடை அல்லது கலவை—இவற்றில் ஒன்று) சிறப்புச் சிற்றுண்டியாக அமையும். உடலோம்பலில் மட்டிலும்,

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.[29]

என்ற திருமூலரின் தத்துவம் செயற்பட்டது என்று சொல்லலாம்.

---

29. திருமந்திரம் - காயசித்தி உபாயம் - 1

# 32. மாணவர் விடுதி வாழ்க்கை— ஒவ்வாத கூறுகள் மழுங்கல்

அந்தக் காலத்தில் கல்லூரி - பள்ளி வாழ்க்கையில் உணவு விடுதிகளின் பங்கு மிகச் சிறப்புடையதாக இருந்தது. உயர்நிலைப்பள்ளி வாழ்க்கையில் மூன்றாண்டுகள் உணவு விடுதியில் வாழ்ந்து நிறைந்த பயன் பெற்றேன். கல்லூரி வாழ்க்கையில் திருச்சியில் உணவு விடுதி வாழ்க்கையை மேற் கொள்ளவில்லை. காரணம் வறுமையே. அதைவிடக் குறைந்த செலவில் நல்ல உணவு, நல்ல சிற்றுண்டி, கல்லூரி அருகிலேயே தனிஅறை பெறமுடிந்தது. இந்தத் தங்கும் விடுதியிலும் ஐந்தாறு அறைகள் இருந்தமையால் உணவு விடுதியில் பெறும் பண்புகளனைத்தும் பெற வாய்ப்பாக இருந்தது. சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யில் பயின்றபோது ஓராண்டுமாணாக்கர் உணவுவிடுதியிலேயே தங்கியிருந்தேன். அக்காலத்தில் நகரத்தில் இந்த விடுதி நல்ல சூழ்நிலையை நல்கியதால்—செலவும் குறைவாக இருந்தமை யால்—உணவு விடுதியிலேயே தங்கும் வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டேன்.

முசிறியில் மாணாக்கர் விடுதியில் தங்கியிருந்தபோது எல்லா வசதிகளும் வாய்ப்பாக இருந்தன. மாணாக்கர்கள் ஒருவரோடொருவர் கலந்து பழகவும், தனிப்பட்டவர் களிடம் முந்திரிக் கொட்டைபோல் முட்டிக் கொண்டு திகழும் ஒவ்வாத கூறுகள் (Angularities) தேய்ந்து மழுங்கவும் நல்ல வாய்ப்பாக இருந்தது. ஏழை பணக்காரர் என்ற வேற்றுமை அவ்வப்போது தலை தூக்கினாலும் பொதுவாக அப்பண்பு கட்டுக்குள் அடங்கியே இருந்தது என்றுதான் சொல்லவேண்டும். நான் படித்தபோது மூன்று

மேட்டுக் குடியைச்(Aristocrat)சார்ந்த மாணாக்கர்கள் படித்த தாக நினைவு. அவர்கள் கீழ்ப்படிவங்களில் பயின்றவர் களாதலின், தங்களைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்ளவோ, தடபுடல் வாழ்க்கையைக் காட்டிக் கொள்ளவோ வாய்ப்புகள் ஏற்படவில்லை. ஒரே ஒரு மாணாக்கன் மட்டிலும் தொலையானத்தம் என்ற ஊரி லிருந்து (முசிறியிலிருந்து முசிறி - துறையூர் சாலையிலுள்ள ஜம்புநாதபுரத்துக்கு அடுத்துள்ளது) படித்ததாக நினைவு. நாட்டுப் புறத்திலிருந்து வந்தவனாதலாலும், செல்லப் பிள்ளையாக வீட்டில் வளர்ந்தமையாலும் பேச்சில் பொருத்தமின்றி ஏதாவது உளறிக் கொட்டுவான். அவன் பெயர் **இராமசாமி** என்பதாக நினைவு. நான் பள்ளியிறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது அவன் இரண்டாம் படிவத்தில் சேர்ந்து படித்ததாக நினைவு. புதன்கிழமை மாலை வாரச் சந்தையிலிருந்து ஏழு நாட்களுக்குத் தேவை யான கறிகாய்க கைவண்டியில் வந்து இறங்கும். அவற்றுள் ஒன்றிரண்டு பெரியபறங்கிக் காய்களும் இருக்கும். இவற்றைப் பார்த்ததும் இராமசாமி தன் வீட்டிலிருக்கும் ஏராளமான பரங்கிக் காய்களை நினைத்துக் கொள்வான். உடனே "இந்த உணவுவிடுதிகொள்ளாத அளவு பறங்கிக் காய்கள் என்வீட்டில் உள்ளன" என்று சொல்வான்; சாதாரணமாகத்தான் சொல்வான். பெருமையடித்துக் கொள்ளும் போக்கில் அவன் பேச்சு இராவிடினும் சில மாணாக்கர்கள் அவன் பேச்சைத் தவறாகப் புரிந்து கொண்டு 'கிண்டல்' செய்வார்கள்; கேலி யுடனும் பேசுவார்கள். இராமசாமியின் முகம் மிகவும் சுருங்கி விடும்; பேய் அறைந்தவன் போலாகி விடுவான்.

யாரும் அவனுடன் பரிந்து பேசுவதற்கு முன் வருவ தில்லை. அவனைப் பார்க்க எனக்குப் பாவமாக இருக்கும். "தம்பி இராமசாமி, வாரந்தோறும் பத்துக் காய்கள் இனா மாக அல்லது குறைந்த விலையில், அனுப்ப ஏற்பாடு செய்க. உன் பெயரைச் சொல்லிக் கொண்டு நாம் எல்லோரும்

சாப்பிடுமோம். இதனால் உணவு விடுதியின் தினசரி வீதம் (Daily rate) ஓரணாவாவது குறையும். என்னைப்போன்ற ஏழை மாணாக்கர்களுக்கும் உதவி செய்ததாகவும் இருக்கும். உனக்கும் உணவுக் கட்டணம் சிறிது குறையும்'' என்பேன். இதைக் கேட்டவுடன் இராமசாமியின் முகம் மலர்ச்சியுறும். அவனுக்குப் பரிந்து பேசும் என் இயல்பைக் கண்டவுடன் ''அண்ணா அண்ணா'' என்று என்னுடன் நெருங்கிப் பழகுவான். கள்ளம் கபடமற்ற அவன் பேச்சை விடுதியில் ஒரு சிலரே புரிந்து கொள்வார்.

**இறைவழிபாடு:மாலையில்:** நான் நான்காம் படிவம் படித்த போது சேர்குடியிலிருந்து **இரா. இராமலிங்கம்** என்ற சிறுவன் (இப்போது உதவி - நீதிபதியாகப் பணியாற்றிச் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குரைஞராக இருப்பவர்) ஆறாம் படிவம் படித்துக் கொண்டிருந்தான். வடமொழி பயின்று வந்தான். நாடோறும் மாலையில் ஏழு மணிக்குக் கலைமகள் படத்தின் முன்னிலையில் அரைமணி நேரம் வழிபாடு நடக்கும்; இது கட்டாயம் இல்லையாதலின் ஒரு பதினைந்து பேர்தான் வழிபாட்டில் கலந்து கொள்வர். இராமலிங்கம் ''யாகுந்தேன்து துஷாரஹார தவளா'' என்று தொடங்கும் கலைமகள் தோத்திரப் பாடலை ஓதுவது மிக அற்புதமாக இருக்கும். இன்றும் அந்த இனிமையான குரல் என் காதில் ஒலிப்பது போன்ற உணர்வு தோன்றுகின்றது. ஒவ்வொரு வரும் தத்தமக்குத் தெரிந்த ஏதாவது ஒரு தோத்திரப் பாடலைப் பாடுவதுண்டு. நான் இயல்பாகவே நாணும் தன்மையுடையவன். ஏதாவது ஒரு தோத்திரம் சொல்ல வேண்டும் என்று கே. ஆர். வற்புறுத்துவார். ஒரு சமயம் துணிவு பிறந்து,

தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தால்
தாயுடன் அணைப்பள்; தாய்அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்;இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மைஅப் பாஇனி ஆற்றேன்.[30]

என்ற அருட்பாவை ஓதுவேன். நல்ல இசையோடு ஓதுவேன் அல்லேன். பிறிதொரு சமயம்,

அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்தஆர் அமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.[31]

என்ற திருப்பாடலைப் பாடுவதுண்டு. என் தம்பி (ஒன்று விட்ட சகோதரன்) பாட்டுப் பாடுவதில் நாணப்படாதவன். சற்று இசையுடனும் பாடவல்லவன்.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்;
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்;
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே,
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்;

---

30. இராமலிங்க அடிகள் : ஆறாம் திருமுறை-பிள்ளைச் சிறு விண்ணப்பம் - 1
31. திருவா. பிடித்தபத்து - 3

செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்;
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்;
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்;
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.[32]

என்ற திருவருட்பாவை அருமையாகப் பாடி அனைவரையும் மகிழ்விப்பான். பிறிதொரு சமயம்,

சங்கநிதி பதுமநிதி யிரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்,
மாதேவர்க் கேகாந்தர் அல்லாராகில்;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைகரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே.[33]

என்ற அப்பர் தேவாரத்தைப் பாடியதாக நினைவு. நாங்கள் இருவரும் இந்தப் பாடல்களையே பாடும் முறை வரும் போதெல்லாம் பாடுவோம். பெரும்பாலும் கே. ஆர். வழிபாட்டின்போது இருப்பார். சிவராமகிருஷ்ணய்யர் கட்டாயம் இருப்பார். மாணாக்கர்கள் பாடும்போது இரு வருமே மெய்மறந்து நிற்பர். எப்பொழுதாவது ஒன்றிரண்டு நாட்கள் தலைமையாசிரியர் செல்லய்யா வந்து போவதுண்டு.

**வடிவகணிதத்தில் நற்பயிற்சி :** வடிவ கணிதத்தில் கடாத் தீர்வு (Rider) கணக்குப் போடுவதில் எனக்கு வெறி அதிகம். கே.ஆர். அவர்கள் ஊட்டிய சுவையே இந்த வெறிக்குக் காரணமாகும். ஆறாம் படிவத்தில் படித்த **இராமநாதனை**

32. இராமலிங்க அடிகள்—ஆறாம் திருமுறை. சுத்த சன்மார்க்க வேண்டுகோள்-1.
33. தேவாரம் 6.95 : 10

அடிக்கடி துணைக்கு நாடுவேன். அவன் நேர்பார்வையில்லாமல் கீழ்ப்பார்வையிலும் பக்கப்பார்வையிலும் பார்க்கும் பழக்கமுள்ளவனாதலால் அவனை மிஸ்டர் நரி (Mister Fox) என்று செல்லமாக அனைவருமே அழைப்பர்; அவன் மட்டும் என்னை மிஸ்டர் நெய் (Mister Ghee) என்று அழைப்பான். கால் ஊனமுள்ளவனைத் தாண்டவராயப் பிள்ளை என்று அழைப்பது போல நெய் உண்ணாத என்னை இத்திருப்பெயரிட்டு அழைப்பான் அன்பாக; இருவரும் கடாத்தீர்வு காண்பதில் அதிக நேரம் செலவழிப்போம். மாலை நேரங்களிலும் வார விடுமுறை நாட்களிலும் அதிக நேரம் இவ்வாறு கழியும். பொறியியல் மேற்பார்வையாளர் (Engineernig Supervisor) ஒருவர் (பெயர் நினைவு இல்லை!) எங்கள் விடுதியில் உணவு கொண்டிருந்தார். அவர் வரும் போதெல்லாம் வடிவகணிதக் கணக்கைப் போட அவரிடமும் உதவி பெறுவதுண்டு. இயற்கணிதத்திலும் இவ்வாறு கணக்குகளைக் கேட்டுப் போடுவதுண்டு. இதில் ஐயம் அதிகம் எழுவதில்லை; அப்படி எழுந்தாலும் அந்த ஐயம் நீங்குவதற்கு அதிகக் காலம் கழிவதில்லை. உணவு விடுதியில் இருந்ததனால் கணிதத்தில் என் திறமை பலர் பாராட்டும் வண்ணம் வளர்ந்து செழித்தது. கல்லூரியிலும் கணிதத்திலும் அறிவியலிலும் இச்செழிப்பு மேலும் அதிகரித்தது. வாழ்க்கையில் ஆசிரியத் தொழிலில் புகுந்த பிறகு (துறையூரில் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியனாக வாழ்க்கை தொடங்கியது) சிறந்த முறையில் கணக்கையும் அறிவியலையும் கற்பித்து 'திறனுள்ள நல்லாசிரியன்' என்ற பெயர் எடுத்தேன். கே.ஆர். கணிதத்தில் ஊட்டிய 'தாய்ப் பாலின்' ஊட்டம் உயர்நிலைப் பள்ளியில் ஏராளமான கடாத் தீர்வுக் (Rider) கணக்குகளைப் போடத் தூண்டியது.

**மேட்டூர் சுற்றுலா :** நான் ஐந்தாம் படிவத்திலிருந்த பொழுது கே.ஆர்., இராமநாதப்பிள்ளை இவர்களின்

முயற்சியால் மேட்டூருக்குக் குறைந்த செலவில் 'சுற்றுலா'வுக்கு ஏற்பாடு செய்யப்பெற்றது. மாணாக்கர் உணவு விடுதியில் தங்கியிருந்தவர்கள் மட்டிலும் இதில் கலந்து கொண்டதாக நினைவு. ஏலூர்ப்பட்டி இராமசாமி ரெட்டியாருக்குச் சொந்த மாக E.N R. என்ற பெயரில் திருச்சி—சேலம் சாலையில் ஒன்றிரண்டு பேருந்துகள் ஓடிக் கொண்டிருந்தன. அவர் குறைந்த கட்டணத்தில் முசிறியிலிருந்து மேட்டூருக்குப் போய்வர பேருந்து வசதி செய்து தந்தார். காலை 7 மணிக்கும், இரவு ) மணிக்கும் முறையே சிற்றுண்டி, உணவு விருந்துகளை அளித்தார். மேட்டூரில் மட்டிலும் எங்கள் செலவு. ஒரு நாள் பயணம்தான். மேட்டூரில் அணைகட்டப் பெற்று முக்கால் பங்கு முடிந்திருந்தது. அணையின் இரண்டு பக்கங்களிலும் வேலை முடிவுற்றிருந்தது. அணையின் நடுவில் சுமார் 100 அடி மூடப்பெறாமல் இருந்தது; அதன் வழியாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.

விரைவில் அணை வேலை முடிய வேண்டும் என்ற வேகம் காணப்பெற்றது. எம்மருங்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றன. செங்கோபுரம் (Red Tower) கருங்கோபுரம் (Black Tower) என்ற இரண்டு கோபுரங்கள் பல்வேறு அளவுள்ள கருங்கல் சல்லிகளையும், கருங்கல் பெரிய துண்டு களையும் இரயில் பாரவண்டிகளில் (Truck) மேலே அனுப்பிக் கொண்டிருந்த காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன. சில இடங்களில் அணைகளின் உச்சியில் இரண் டிரண்டு தண்டவாளங்கள் நீட்டிய வண்ணம் இருக்கும்; இந்தத் தண்டவாளங்களில் பாரவண்டிகள் பொருந்தும்படி யாக இருக்கும் மின்காந்த விசையின் இயக்கத்தால் சல்லிகள் நிறைந்த பாரவண்டிகளை இரண்டு கோபுரங்களும் மேலே ஈர்த்து அவற்றைத் தண்டவாளங்களின்மீது வைத்துவிடும் தண்டவாளங்கள் அணையை நோக்கிச் சற்றுச் சரிவாக இருந்தமையால் பாரவண்டிகள் தாமாகத் தண்டவாளங்

களில் இயங்கித் தாம் கொண்ட பளுவைக் காலி செய்துவிடும், பிறகு மின்காந்த விசையால் காலி பாரவண்டிகள் கீழே கொணரப்பெறும்; மீண்டும் வண்டிகளில் சல்லிகள் நிரப்பப் பெற்று மேலே கொண்டு செல்லப்பெறும். இவ்வாறு மிக எளிதாக இயந்திரங்களின் மூலமாகவே சிறிய சல்லிகள், பெரிய சல்லிகள், பல்வேறு அளவுள்ள கற்கள் இவை மேலே ஏற்றப்பெறும். அணையின்மேல் உள்ளவர்கள் இவற்றைச் சிமிட்டியுடன் கலந்து கட்டடத்திற்குப் பயன்படுத்திக் கொள்வர். வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது தண்ணீருக்குப் பஞ்சமா? அணையிலிருந்தே பம்புகள் மூலம் தண்ணீர் எடுத்துக் கொள்ளப்பெறும். இக்காட்சிகள் எங்களுக்குப் பெருவிருந்தாக இருந்தன. அறிவியலின் அற்புதத்தை இங்கு நடைபெற்ற பல்வேறு செயல்களின் மூலம் ஒரே இடத்தில் காண முடிந்தது.

அணையில் கீழ்ப்பகுதியில் அணையின் நெடுக வளை முகடு அமைப்பில் (Arch) காலி இடம் இருந்தது. இந்த இடத்தில் சல்லிகளும் கற்களும் கொண்ட சிமிட்டிக் கலவையை நிரப்பினால் சில கோடிரூபாய் செலவாகும் என்றும், இந்தச் செலவைக் குறைக்க இந்த ஏற்பாடு என்றும், தவிர இந்த ஏற்பாட்டினால் அணையின் பலம் அதிகரிக்கும் என்றும் எங்களுடன் வந்த இராமநாதப்பிள்ளையும் உணவு விடுதியில் உறவு கொண்டிருந்த பொறியியல் மேற்பார்வையாளரும் மிக நன்றாக விளக்கினார்கள். பொறியியல் மேற்பார்வையாளர் மிகநல்லவர்; பொறுமையுள்ளவர். சில சமயங்களில் அவர் உணவு கொள்ள வரும்போது, அவருக்கு ஓய்வு இருந்தால், அவரிடம் வடிவகணிதத்தில் பல கடாத்தீர்வுக் கணக்குகளில்போடுவதில் ஐயங்களைப் போக்கிக்கொள்வேன். உணவு விடுதியில் நான் ஒருவனே அவரிடம் அதிகமான உதவிகள் பெற்றதுண்டு. வேறு எவரும் பாட விஷயங்களில் நெருங்கிப் பழகாமல் இருந்ததாலும் நான்மட்டிலும் அதிக

மாக பழகினமையாலும் அவர் என்மீது அளவற்ற அன்புகொண்டிருந்தார். பிறவியிலே அவரிடம் ஆசிரியப் பண்பு நன்கு அமைந்திருந்தபடியாலும், அவரும் உயர் நிலைப் பள்ளியில் கணிதத்தையும் இயற்பியலையும் (Physics) விருப்பப் பாடங்களாக எடுத்துப் படித்தமை யாலும் கணிதத்தில் அவ்வப்பொழுது ஏற்படும் ஐயங்களை அற்புதமாக அகற்றுவார்; மிக அன்பாகவும், பரிவுடனும் கலந்து பழகுவார். நான் பள்ளியிறுதி வகுப்பில் பயின்ற போது (ஒரு டிசம்பர் திங்கள் என்று நினைக்கிறேன்) அவர் வேற்றூருக்கு மாற்றலாகிப் போக நேர்ந்தது. உணவு விடுதியில் தேநீர் விருந்துடன் ஒரு வழியனுப்புக் கூட்டம் நடைபெற்றது. ஒரு சில மாணாக்கர்கள் அவர்தம் அருங் குணங்களைப் பேசினார்கள். நான் பேசும்போது அழுதே விட்டேன்; வடிவகணிதத்தில் யான் இனி யாரிடம் போய் ஐயங்களை அகற்றிக் கொள்வேன்? இது எனக்கு வலக்கை இழந்ததுபோன்ற துக்கமாக இருந்தது. ஆயின், ஒருவாறு அமைதியுற்றேன். என் வாழ்க்கையில் தோன்றாத் துணை யாக இருக்கும் இறைவனே எனக்கு வழி காட்டுவான் என்ற நம்பிக்கையோடு இருந்து விட்டேன்.

குமிழி—33

## 33. புனித சூசையப்பர் கல்லூரியில் சேர்ந்தது

**1934** மார்ச்சு மாதத்தில் பள்ளியிறுதித் தேர்வு எழுதினேன். நன்றாக எழுதினேன். சராசரி 60 விழுக்காடுக்கு மேல் மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் இரண்டாவது மாணாக்கனாகத் தேர்ச்சி பெற்றேன். அந்தக் காலத்தில் இது நல்ல மதிப்பெண். அக்காலத்தில் மாணாக்கர் களும் பெற்றோர்களும் இறைவனுடைய கருணையினால் தான் மதிப்பெண் கிடைக்கின்றது என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். தேர்வில் பார்த்தெழுதுதல், துண்டுத் தாள்களில் எழுதிக் கொண்டுபோய் அவற்றைத் தேர்வில் பயன்படுத்துதல் போன்ற பழக்கங்கள் இருந்ததாகத் தெரிய வில்லை. ஆனால் ரூ 250/= கொடுத்து அரசுத் தேர்வுச் செயலர் மூலம் தேர்ச்சி பெறலாம் என்ற பேச்சு அடிபட்டு வந்தது. ஆசிரியர்களும் சில பெரியோர்களும் பேசிக் கொண்டதைக் கேட்டிருக்கின்றேன். இதில் எவ்வளவு உண்மை இருக்கும் என்பதைப்பற்றி நான் சிந்தித்ததே இல்லை.

தேர்வு நடைபெறுங்கால் இன்று மாணாக்கர்கள் கையாளும் முறைகேடான வழிகள், கையூட்டுக் கொடுத்து மதிப்பெண் பெறுதல், அதிகமாகக் கொடுத்து முதல்

வகுப்பில் தேர்ச்சி பெறுதல், அதிகமாகக் கொடுத்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுதல், இதற்குச் சில ஆசிரியர்களும் தேர்வுகள் நடத்தும் அலுவலகத்திலேயே வேலியே பயிரை மேய்ந்தாற்போல் சில அலுவலர்களும் உடந்தையாக இருத்தல் போன்ற முறைகேடான நடவடிக்கைகள் உழைத்துப் படிக்கும் உள்ளங்களை மிகவும் வருத்துகின்றன. 'பணம் பத்துவிதம் செய்யும்' என்ற முதுமொழியின் உண்மையை இன்று நாம் நேரில் காண்கின்றோம். கேரளத்தில் நடைபெற்ற ஊழல்கள் இன்றும் நன் மாணாக்கர்களைத் திகிலடையச் செய்து வருகின்றன. இந்நிலை எங்குக் கொண்டுபோய் விடும் என்பது அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம். மதுரைப் பல்கலைக் கழகத்தில் இந்த 'மதிப்பெண் ஊழல்' நாடகமும், அதன் கிளைக்கதையாக பட்டங்கள் வழங்கும் நாடகங்களும் நடைபெற்றதாகச் செய்தித்தாள்கள் சிரித்தன. அண்மையில் அஞ்சல் வழிக்கல்வி மூலம் பி.காம். தேர்வு எழுதி வெற்றி பெற்ற ஒருவருக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் எம். காம். பட்டம் (தவறுதலாக) வழங்கிவிட்ட செய்தி '**தினகரன்**' என்ற நாளிதழில் (பட்டச் சான்றிதழ் நகலுடன்) வெளி வந்து அறிஞர்களைத் திடுக்கிடச் செய்தது. இன்று எம்மருங்கும் நேர்மையற்ற போக்கு பெருவழிக்காகக் காணப்படுகின்றது. பணத்தால் எதையும் சாதித்து விடலாம் என்பது இன்று காணும் உண்மை. இப்படியே 'தில்லுமுல்லு' செயல்கள் நடைபெற்று வந்தால் எதிர்காலம் எப்படி மாறும் என்று சொல்லுவதற்கில்லை. உண்மையாக உழைத்துப் படித்து அதிக மதிப்பெண் பெறுபவர்கள் பின்னுக்குத் தள்ளப் பெறுவார்கள். இதில் இறைவன்தான் தோன்றாத்துணையாக நின்று இவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

ஜூன் திங்கள் ஒருநாள் முசிறி சென்று ஆசிரியர்களைக் கண்டு வணங்கினேன். எல்லோருமே என்னைக் கல்லூரியில்

சேர்ந்து பயிலுமாறு ஊக்கினர். என் உழைப்பை நேரில் கண்டு அடிக்கடி ஆசி கூறும் கே. ஆர். என்ற கணித ஆசிரியர் கல்லூரியில் நான் சிறந்து விளங்குவேன் என்ற சாத்தியக் கூறுகளை முன்கூட்டியே எடுத்துரைத்தார். இறையருளாலும் தந்தையையொப்ப இருந்த கே. ஆரின் ஆசியாலும் என் கல்லூரி வாழ்க்கை நன்றாகவே அமைந்தது என்று சொல்லலாம். திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். பெரும்பாலான ஆசிரியர்களும் இக்கல்லூரியையே எனக்குப் பரிந்துரைத்தனர்.

திருமணம் புரிந்துகொள்ளப் போகும் இளைஞன் திருமணம் தொடங்கும் நாள்வரையிலும் பல இன்பக் கனவுகளைக் கண்டு மகிழ்வது போலவே, கலைமகள் அருள் தாண்டவமாடும் கல்லூரியில் சேர்ந்து படிக்கப்போகும் எதிர்கால வாழ்க்கையைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருந்தேன். அதே சமயத்தில் கல்லூரியில் படிக்கும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுக்காலத்திற்கு ஆகும் செலவுக்கு என்ன செய்வது? என்ற ஏக்கமும் கவலையும் அடிநாதமாக உள்ளூர ஒலித்துக் கொண்டிருந்தமையையும் இன்று நினைந்து பார்க்கின்றேன். கலித்தொகைப் புலவன்,

> வறியவன் இளமைபோல்
> வாடிய சினையவாய்,[1]

என்று கூறியுள்ளதையும் நினைந்து பார்க்கின்றேன். அதே சமயத்தில் ‘செடி நட்டவனுக்குத் தண்ணீர் ஊற்றத் தெரியும்’ என்று மக்கள் வாக்கில் அடிக்கடி தவழ்ந்துவரும் பழமொழியையும் சிந்தித்துப் பார்க்கும் அறிவு அப்போது இல்லை.

அந்தக் காலத்தில் எங்களூர்ப் பக்கத்தில் நன்கு பயின்ற இரண்டு மாணாக்கர்களின் புகழ் நன்கு பரவியிருந்தது.

---

1 கலி— 10 (பாலை)

அவர்களைப் பார்க்கவேண்டும் என்ற அவா இருந்தது. அவர்களில் ஒருவராகிய அரங்கசாமியைக் காண்பதற்கு நானும் என்னுடன் பயின்ற A. சுப்பையா என்ற தோழனும் வேங்கடாசலபுரம்[2] என்ற ஊர் சென்றோம். அக்காலத்தில் அரங்கசாமி VPR என்று மாணாக்கர் உலகில் புகழ் பெற்றிருந்தார். என்னுடன் வந்த A. சுப்பையாவும் நன்கு படிப்பவன். நல்ல வசதிகள் இருந்தும் அவன் ஏனோ கல்லூரிக் கல்வியைத் தொடரவில்லை. அரங்கசாமி மிக ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் பயில்பவராதலால் எங்களை மேற்கல்வி தொடருமாறு வற்புறுத்தினார்.

இன்னொரு மாணாக்கர் பெயர் அரங்கசாமிதான்; இவர் துறையூருக்கு நான்கு கல் தொலைவிலுள்ள செங்காட்டுப்பட்டியைச் சேர்ந்தவர். இவர் அக்காலத்தில் SPR என்றே புகழ் பெற்றிருந்தார். இவர் 'ஒருவகையில் எனக்கு நெருங்கிய உறவினர். எனக்கு அத்தை மகன் முறை வேண்டும். நான் பள்ளியிறுதித் தேர்வு எழுதிய ஆண்டு கோடை விடுமுறையில் இவருக்குத் திருமணம் உறுதியாகி இருந்தது. செங்காட்டுப்பட்டியில் நான்கு நாட்கள் திருமணம். அரங்கசாமி செல்வர் வீட்டுப் பிள்ளை. வேளாண்மைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். மாளிகை போன்ற பெரிய இல்லம்; மேல் மாடியும் உண்டு; இது மிகவும் விசாலமானது. சாதாரண காலத்தில் பலர் சௌகர்யமாகத் தங்கலாம்; திருமண காலத்திலும் பலர் தங்கலாம்; கோடைகாலமாதலால் மாடியில் வெட்டவெளியிலும் ஏதோ விரிப்பைப் போட்டுக்கொண்டு பலர் சௌகர்யமாகப் படுத்து உறங்கலாம்.

திருமணம் மிகவும் கோலாகலமாக நான்கு நாள் நடை பெற்றது. மேளக் கச்சேரி சிறப்பாக அமைந்திருந்தது;

2. துறையூரிலிருந்து ஆத்தூர் செல்லும் சாலையில் பத்தாவது கல்லில் உள்ள ஒரு சிற்றூர்.

சின்ன மேளமும்[3] இருந்தது. இவள் நலுங்கிலும் நாட்டியத்திலும் பெரும் பங்கு கொண்டிருந்தாள். அக்காலத்தில் ஊர்ப் பெருமக்கள் இம்மாதிரியான நிகழ்ச்சிகளைப் பெரிதும் விரும்பினமையால் செல்வர்கள் வீட்டுத் திருமணங்களில் இவ்வித நிகழ்ச்சிகள் இன்றியமையாதனவாக அமைந்திருக்கும். முதியவர்கள் சிலருக்கும் 'இளம் வட்டங்கள்' பெரும்பான்மையோருக்கும் இவை பெருஞ்சுவை பயப்பனவாக இருக்கும். மாப்பிள்ளை அரங்கசாமியின் (SPR) தந்தையார் பெருமாள் செட்டியார் உலகியல் நன்கறிந்த பெருமகனார்; பழுத்த வைணவர்; வைணவ சம்பிரதாயங்களை நன்கு கடைப் பிடிப்பவர். நெற்றியில் திருமண் காப்பின்றி இவரைக் காண்பதரிது.

உண்ணா நாள்பசி யாவதொன் றில்லை.
ஓவா 'தேகமோ நாரணா!' என்று
எண்ணா நாளும் இருக்கெசுச் சாம
வேத நாள்மலர் கொண்டுன பாதம்
நண்ணா நாள்,அவை தத்துறு மாகில்
அன்றெ னக்கவை பட்டினி நாளே[4]

என்கின்றார் பெரியாழ்வார். ''இவ்வுலகில் உள்ளார் அனைவரும் ஒருபொழுது உண்ணாதிருந்தால் பசியினால் மிகவும் தளர்ந்து வருந்துவர்; அடியேனது இயல்பு அப்படியன்று. திருமந்திரத்தை அநுசந்திக்கப்பெறாத நாளும் 'தொழுது முப்போதும் உன்னடி வணங்கித் தூமலர் தூய்த்தொழுது' ஏத்தப் பெறாத நாளுமே அடியேனுக்கு உண்ணாநாள்; இவ்விரண்டும் அடியேனுக்கு வாய்க்கப் பெற்ற நாள் கண்டுகளிக்கப் பெற்ற நாளே யாம்'' என்று

3. சின்னமேளம் — தேவர் அடியாள். மேளக் குழுவைச் சார்ந்த பெண்.
4. பெரியாழ். திரு. 5.1:6

ஆழ்வார் கூறுவதைப் போலவே 'திருமண் காப்பு இல்லாத நெற்றியில் பாழே' என்ற கொள்கை உறுதியுடையவர் பெருமாள் ரெட்டியாரும். ஆகவே, மூத்தவர்கட்கும் பக்திமான்களுக்கும் திருமணநாட்களில் சுவை பயக்கக்கூடிய காலட்சேபங்களுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்.

அக்காலத்தில் — ஏன் இக்காலத்திலும் — நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த பவுத்திரம், வரகூர், எருமைப்பட்டி போன்ற ஊர்களிலும் வேறு பல சிற்றூர்களிலும் 'பாகவத கோஷ்டி' இருந்து வந்தது. வரகூரில் இராமசாமி ரெட்டியார்[5] என்ற பாகவதர் பெரும்புகழ் வாய்ந்தவர். அக்காலத்தில் நன்றாகக் காலட்சேபம் செய்வார்; அடக்க மான பண்புடையவர். இவர் காலட்சேபம் செய்தது என்னை மிகவும் வியக்க வைத்தது. 'பக்த ராமதாஸ் சரித்திரம்', 'சீதா கல்யாணம்', உருக்மிணி கல்யாணம்' என்ற காலட்சேபங்களை மூன்று நாட்கள் மாலையில் கேட்டது இன்னும் என் உள்ளத்தில் பசுமையாக உள்ளது.

நான்கு நாளும் வேங்கடாசலம்புரம், அரங்கசாமி தங்கி யிருந்தார். நெருங்கிய நண்பரின் திருமணமல்லவா? நானும் என் தம்பி கணபதியும் திருமண நாட்களில் செங்காட்டுப் பட்டியில் தங்கியிருந்தோம். நாடோறும் அரங்கசாமியிடம் பேசிப் பொழுது போக்கினோம். கல்லூரியில் சேர்ந்தால் எங்குத் தங்குவது? எங்கு உண்பது? என்பன போன்ற விவரங்களையெல்லாம் கலந்து உரையாடி மகிழ்ந்தேன். ஒரு சில வாரங்களில் கல்லூரி திறந்தது; நானும் அரங்கசாமியின் துணையால் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் சேர்ந் தேன். அப்போது அரங்கசாமி பி. ஏ. இரண்டாவதாண்டு (இறுதியாண்டு) வகுப்பில் கணிதத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் பயின்று கொண்டிருந்தார்.

---

5. தொண்ணூறு அகவையைத் தாண்டிய இப்பெருமகனார் இன்றும் வாழ்ந்து வருகின்றார் (நாவலடிப் பட்டியில்).

நேராக அவர் அறைக்குச் சென்று பெட்டி படுக்கையை அவர் அறையில் வைத்துவிட்டு அவர் உணவு கொள்ளும் ஆதிகுடி வேங்கட்டராமய்யர் உணவு விடுதியில் அவர் விருந்தினனாக உணவு கொண்டு அவருடன் புனித சூசையப்பர் கல்லூரியில் கட்டணம் செலுத்திக் கல்லூரியில் சேர்ந்து கொண்டேன். புத்தகக் கடைக்குச் சென்று கிடைக்கும் புத்தகங்களையும் தேவையான குறிப்பேடு களையும் வாங்கிக் கொண்டு அறைக்கு வந்து சேர்ந்தேன். மாலையில் அறைக்குத் திரும்பிய அரங்கசாமி அவர் அறைக்குப் பக்கத்திலேயே எனக்கும் ஓர் அறைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். தனி அறை; மாத வாடகை ரூபாய் ஐந்து. அக்காலத்தில் இது என் பொருளாதார நிலைக்குச் சற்று அதிகமாக இருந்தாலும் குளியலறை, கழிப்பறைகள் தனித்தனியாக இருந்தமையாலும், தனிமையில் அமைதி யாகப் படிப்பதற்குத் தக்க சூழ்நிலை அமைந்திருந்ததாலும் ஓராண்டு முழுவதும் அதில் தங்கியிருந்தேன். நாங்கள் தங்கியிருந்த அறை திருச்சியில் 'சவுக்கு' (நகர் மண்டபம்) —(Town Hall) என்ற பகுதியில் இருந்தது. அஃது அக்காலத்தில் 'காசியப்பா ராவுத்தர் ஸ்டோர்' என்ற பெயரால் வழங்கி வந்தது. ஒரு முஸ்லீம் சீமானுக்குச் சொந்தமானது. அந்த ஸ்டோரின் கீழே இரண்டு வரிசைகளில் குடும்பத்துடன் தங்கு வோருக்குத் தண்ணீர்க் குழாய், கழிப்பறைகளுடன் வீடுகள் அமைந்திருந்தன. மாடியில் இரண்டு வரிசைகளில் பல அறைகள் இருந்தன. மாடிக்குப் போவதற்குத் தனிப் படிக்கட்டுகளும், கீழே மாடியில் தங்குவோருக்குத் தனிக் கழிப்பிடங்களும், குளியலறைகளும் இருந்தன. தங்கும் இடம், உணவுகொள்ளும், இடம் கல்லூரி ஒரு பெரிய முக்கோண அமைப்பில் இருந்தன. காலையில் சென்று மாலையில் திரும்பும் வரையில் ஒரு கல் தொலைவு நடக்க வேண்டி யிருக்கும். இரவு உணவு கொள்ளப்போவதற்கும் திரும்பு

வதற்கும் மீண்டும் அரைக்கல் தொலைவு நடக்க வேண்டும். இப்படி இடைநிலை வகுப்பில் (Intermediate) ஓராண்டு கழிந்தது.

குமிழி — 34

## 34. தமிழ், ஆங்கிலக் கட்டுரை, மொழியாக்க வகுப்புகள்

முதலாண்டு கல்லூரியில் ஆங்கிலப் பாடத்திற்கு (1) உரைநடைக்குப் பேராசிரியர் சின்னசாமி அய்யரும், (2) சிறு கவிதைகள் - நாடகம் இவற்றிற்குப் பேராசிரியர் லாரன்ஸ் சுந்தரமும் (3) கட்டுரை, — துணை நூல்கட்கு செக்யூரா சாமியாரும், (4) நீதிப் பாடத்திற்கு முதல்வர் லீ சாமியாரும் ஆசிரியர்களாக அமைந்தனர். தமிழ்ப் பாடத் திற்குப் பேராசிரியர் நடேச முதலியாரும், கட்டுரை - மொழி பெயர்புக்குத் திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் ஆசிரியர்களாக அமைந்தனர். இயற்பியலுக்கு காம்பர்ட் சாமியாரும் (ஃபிரெஞ்சுக்காரர்) கணிதத்திற்குப் பேராசிரியர் சீநிவாசனும், வேதியியலுக்குப் பேராசிரியர் கோவிந்தராவும் ஆசிரியர்களாக அமைந்தனர். இவர்கள் கற்பித்தலால் யான்பெற்ற பயன்களை இக்குமிழியில் நினைவு கூர் கின்றேன். விருப்பப் பாடங்களைத் தவிர எல்லாப் பாடங் களையும் தமிழிலே கற்றதாலும், உயர்நிலைப் பள்ளியில் ஆங்கிலத்தில் பேசும் பழக்கத்தை ஏற்படுத்தாமையாலும் முதலாண்டு முழுதும் என்னைக் கல்லூரி வாழ்வில் பொருத்திக் கொள்வதற்கு மிகவும் சிரமப்பட்டேன்.

**ஆங்கிலம் :** முதல்வர் லீ சாமியார் நாட்டுப்புறத்தி லிருந்து வந்த எம் போன்றார்கள்மீது அன்புடன் இருந்தார். ஏதேதோ சொல்லுவார்; சிரிப்பார். சொல்லுவதில் பாதி

புரிவதில்லை. ஆங்கிலத்தில் பேசும் பயிற்சி இவர் வகுப்பில் நன்கு கிடைத்தது. மாணாக்கர்களிடம் ஏதாவது பேசிக் கொண்டே இருப்பார். வகுப்புகள் நகைச்சுவை ததும்பி வழியும். அவர் பேசுவது நாட்டுப்புறத்திலிருந்து வந்த என் போன்ற சிலருக்குப் புரியாது. இருந்தாலும் நகைச் சுவைப் பேச்சை லீ சாமியார் உதிர்க்கும்போது பலர் சிரிப்பர்; காரணம் தெரியாமல் நாங்களும் சிரிப்போம் — கூட்டத்தில் கோவிந்தா போடுகின்ற மாதிரி. பின்னர் சிரித்த காரணத்தைக் கேட்டு அறிந்து கொள்வேன். பெரும்பாலும் குளித்தலை, இலால்குடி பக்கமிருந்து இரயிலில் வரும் மாணாக்கர்கள் அடிக்கடித் தாமதமாக வருவர். அவர்களை நோக்கி வேடிக்கைப் பேச்சை வெடிப்பார்.

'ஏன் தாமதமாக வருகின்றீர்கள்?'

'இரயில் தாமதமாக வந்தது'

'நீங்கள் சாமான் வண்டியில் வந்தீர்களா?'

என்று கேட்டு நகைப்பார். எல்லோரும் அவருடன் சேர்ந்து நகைப்போம். இவர் எழுதிய 'Lee Composition' என்ற ஒரு நூல் மிகச் சிறந்தது. எல்லோரும் அதைக் கட்டாயம் வாங்க வேண்டும். அதில் சில பகுதிகளை — மரபுச் சொல், தொடர் போன்றவைகளை — அடிக்கடி விளக்குவார் — இப்போது Know Your English என்ற பகுதி 'இந்து' ஆங்கில நாளிதழில் வருகின்றதல்லவா? — அது மாதிரி. ஆங்கில மொழியைநன்கு கற்கவிரும்புவோர்க்கு இவர் வகுப்பு மிகவும் பயனுடையதாக இருக்கும். **திரு லாரன்ஸ் சுந்தரம்** முதலாண்டு மாணாக்கர்கட்கு Minor Poems (சிறு கவிதைகள்) என்ற பகுதியை எளியமுறையில் அழகாகப் பேசி நடத்துவார். உயர் நிலைப் பள்ளியில் ஆங்கில வகுப்பு பெரும்பாலும் தமிழில் நடைபெறும். இதனால் ஆங்கிலத்தில் பேசும் பழக்கம் ஏற்படுவதில்லை. ஆசிரியர் ஆங்கிலத்தில் பேசினாலும் பெரும்பாலோர் தமிழில் பதிலிறுப்பதையே

வழக்கமாகக் கொண்டிருப்பார். இரண்டாம் ஆண்டில் ஷேக்ஸ்பியரியன் இரண்டாம் ரிச்சர்ட் (Richard - II) என்ற நாடகத்தை நடத்துவார். இந்த ஆண்டு கடல் மடை திறந்ததுபோல் மிக அழகாகப் பேசுவார். அலகபாத் அருகில் கங்கை வெள்ளத்தைக் காண்பதுபோல் இருக்கும். இரண்டு ஆண்டுகளிலும் திரு. லாரன்ஸ் சுந்தரத்தின் பேச்சைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆர்வம் எழுந்த வண்ணம் இருக்கும். அவருடைய வகுப்பை எதிர் நோக்கிக் கொண்டே இருப்போம். செக்யூராசாமியார் தாழ்ந்த குரலில் பேசுவார்; அழகாகப் பேசுவார். கடைசிப் பெஞ்சில் உட்கார்ந்திருப்பவர்கட்கு இவர் பேசுவது சரியாகக் காதில் விழுவதில்லை. ஆனால் பேச்சு யமுனை வெள்ளம்போல். தெளிவாக இருக்கும். இடைநிலை வகுப்புகளில் ஆங்கிலத்தை நன்கு கற்க முடிந்தது; அழுத்தமான அறிவும் ஏற்பட்டது.

**தமிழ் :** பேராசிரியர் நடேச முதலியாரிடம் தமிழ் கற்கும் பேறு கிடைத்தது. மூடிய கோட்டு, பஞ்சகச்சம், வெண்ணிறத் தலைப்பாகை இவை இவரது கருமையான திருமேனிக்குப் பொலிவூட்டும். செய்யுட் பகுதியை மிக அருமையாக நடத்துவார். இவர் தலைப்பாகை அழகாக அமைவதில்லை; மூட்டை தூக்குபவன் சும்மாடுபோல் தோன்றும்! வகுப்பில் இவர் உட்கார்ந்து இருப்பதை நான் கண்டதே இல்லை; நின்ற வண்ணமே பாடம் நடைபெறும். என்னுடைய கவனம் எல்லாம் கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய பாடங்களில் அதிகமாகச் சென்றதால் தமிழிலும் ஆங்கிலத்திலும் அதிகக் கவனமும் இல்லை; அக்கறையும் இல்லை. ஆனால் பேராசிரியர் நடேச முதலியார் சில மாணாக்கர்பால் அதிக அக்கறையும் பாசமும் கொண்டிருந்தார். அடிக்கடி வீட்டிற்கு வந்து தம்மைக் காணுமாறு சொல்லுவார். நான் காசியப்பா ராவுத்தர்

ஸ்டோரிலிருந்தமையால் மலைக்கோட்டை யானைக்கட்டித் தெருவில் வாழ்ந்த பேராசிரியரை எளிதில் சென்று காண முடிந்தது. தந்தையனைய பாசத்தைக் காட்டினார்; அறவுரை கூறினார். ''தம்பி, நீ நாட்டுப்புறத்திலிருந்து வருபவன். சிறுவயதில் தந்தையையும் இழந்து நிற்கின்றாய் அன்னையார் சிரமத்துடன் பணம் அனுப்புகின்றார். நகரச் சாயை உன்மீது படியாது காத்துக் கொள்க. மாணவர் உலகைத் தொற்றுநோய்போல் பற்றும் சிறு சுருட்டுப் பிடிக்கும் பழக்கம் உன்னைப் பற்றாது பாதுகாத்துக் கொள்க. அடிக்கடிப் படக்காட்சிகளைக் காண்பதைத் தவிர்க்க, அதிகாலையில் எழுந்து படிக்கும் பழக்கத்தை மேற் கொள்க. சனிக்கிழமை கல்லூரி நடைபெறுவதால் ஞாயிறு அன்று எண்ணெய் தேய்த்து முழுகு; 'சனிநீராடு' என்பது பாட்டியின் வாக்கல்லவா? அது கண்ணுக்கும் நல்லது. 'இணக்கம் அறிந்து இணங்கு' என்பதையொட்டி நல்லா ரோடு பழகு. 'நல்லிணக்கம் அல்லது அல்லற்படுத்தும்' என்பதைப் படித்திருப்பாய்...'' என்பன போன்ற அறிவுரை களைத் தருவார். நன்றாக வளரும் செடிகளில் நோய்கள் தாக்குவதுபோல், கல்லூரி வாழ்வில் முன் குமரப்பருவம், பின் குமரப் பருவத்திலிருக்கும் மாணாக்கர்கள் தீய பழக்கங் களாலும்தீயோர் கூட்டுறவாலும் கெட்டழிவது இயல்பு என்பதை நன்கு அறிந்த பேராசிரியர் முதலியார் கூறின அறிவுரை இன்றளவும் என்னைக் காத்து நிற்கின்றது. சிறு சுருட்டுப் பழக்கம் என்னை நாடவில்லை தீயோர் கூட்டுறவும் என்னைத் தீண்டவில்லை. உயர்நிலைப் பள்ளி வாழ்க்கையில் என்னைக் கட்டிக்காத்த திரு K. இராமச்சந்திர அய்யர் போல், கல்லூரி வாழ்க்கையில் என்னைப் பட்டிமேயவிடாது காத்தவர் பேராசிரியர் நடேசமுதலியார் என்பதை இன்றும் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன் இவர் ஊட்டிய அற வுணர்வும் அடிக்கடிக் காணும் பேறும் என்னைத் தமிழிலும்

சிறிது கவனத்தைக் காட்டச் செய்தன. மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வையும் எழுதச் செய்தன. அதில் முதல் நிலையும் பெறச் செய்தன. 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்ற சித்தாந்த உண்மையையும் இப்போது காணமுடிகின்றது.

இடைநிலை வகுப்புகளில் நான் கற்ற பகுதிகள் நினைவில் இல்லை. நான் மிக்க சிரமத்துடன் கற்ற 'காண்டவ தகனச் சருக்கம்' இன்றும் நினைவுகூர முடிகின்றது. வட சொற்கள் அதிகமாக விரவி வருவதால் கற்பித்தலும் சிரமம்; கற்போர்கள் மனத்தில் நிலைநிறுத்தல் அதனிலும் சிரமம். பேராசிரியர் நடேச முதலியார் இப்பகுதியை மிக நன்றாகக் கற்பித்தார். இப்பகுதியைக் கற்பிக்கும்போது பாடம் மெதுவாகவே சென்றது. இச்சருக்கத்தில் இப்போது மூன்று பாடல்களை நினைவுகூரமுடிகின்றது.

தொழுதரு விசயன், தாலுஏ முடையோன்
சுடர்முடி நனைந்திடு வதன்முன்,
எழுமுகில் இனமும் பொழிதரு மாரி
யாவையும் ஏவினால் விலக்கி,
முழுதுல கமும்தன் னிடத்தடக் கியவான்
முகடுற முறைமுறை அடுக்கி,
குழுமுவெங் கணையால் கனல்-கட வுளுக்குக்
கொற்றவான் கவிகையும் கொடுத்தான்.

ஆழ்தரு பரவை ஏழும்வற் றிடுமா(று)
அழித்தகார் உமிழ்ந்திடு நெடுநீர்
தாழ்தரு சரத்தால் மேய்ந்ததற் கிடையோர்
தனித்திவ லையும்பொசி யாமல்
வீழ்தரும் அருவி பாவகன் தனக்கு
விசயன்அன் றளித்த பொற்குடைக்கு
சூழ்தர நிரைத்துத் தூக்கிய முத்தின்
சுடர்மணித தொடையல்போன் றனவே.

மண்டிமீது எழுந்த வன்னியின் சிகைகள்
இந்திரன் மதலைவா ளிகளால்
கண்டகூ டத்திற்கு அமைந்தசெம் பவளக்
காண்தகு தூண்திரள் காட்ட
அண்டகூ டத்திற்கு இந்திரன் பளிங்கால்
அமைத்தபல் ஆயிரங் கோடி
கண்டதூ ணங்கள் போன்றன, பரந்து
தனித்தனி முகிழ்பொழி தாரை.[6]

என்பவை இந்திரன் ஏவலால் மேகங்கள் பொழிந்த மழையைத் தடுக்க அருச்சுனன் சரக்கூடம் அமைத்தலைக் காட்டுபவை.

பாடலில் உள்ள காட்சிகளைப் பேராசிரியர் மாணாக்கர் மனத்தின் முன் நிறுத்துவது அற்புதம். கதையைச் சுருக்கமாகக் கூறி வகுப்பையே பாவனை ஆற்றல்மூலம் காண்டவ வனத்தருகில் இட்டுச் சென்று விடுவார். மழை தீயை நனைக்காமல் குழுமுவெங்கணையால் கொற்றவான் கவிகை கொடுத்தல், குடையில் வீழும் நீர் சிறிதும் குடைக்குள் கசியாமல் பக்கங்களில் வழிதல் பொன்குடைக்கு முத்து மாலைகள் அமைந்தனபோல் காணப்பெறுதல், அக்கினி கொழுந்து விட்டெரிதல் பார்த்தன் அமைத்த சரக்கூடத்திற்குப் பவளத்தூண்கள் அமைந்தாற்போல்காணப்பெறுதல், மழைதாரையாகப் பொழிதல் நான்முகன் படைத்த அண்டகூடத்திற்கு இந்திரன் பளிங்கால் அமைத்த பல்லாயிரங் கோடி தூண்கள்போல் காணப்பெறுதல் ஆகிய காட்சிகளை மானசீகமாகக் காணச்செய்து மாணாக்கர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவார். இந்தக் காட்சிகளைக் காண்பதற்கு வகுப்பில் அமைதி நிலவுதல் இன்றியமையாதது. இதை நிலை நாட்டுவது பேராசிரியரின் மந்திர ஆற்றலால்தான்

6. வில்லிபா - காண்டவதக. (36-38)

முடியும். ஒரு குண்டூசி விழுந்தால்கூட அதன் ஒலி கேட்கும் அளவுக்குத் தமிழ் வகுப்பில் அமைதியை நிலை நாட்டுவார். பாடப்பகுதியிலுள்ள வடமொழிச் சொற்களின் பொருளை பலமுறை விளக்கிக் கூறி மனத்தில் பசுமரத்தாணியெனப் பதியச் செய்துவிடுவார்.

**கட்டுரை எழுதுதல் :** கட்டுரை பதினைந்து நாட்களுக் கொருமுறை எழுதுதல் வேண்டும். பெரும்பாலும் இது பிற்பகலில்தான் நடைபெறும், இந்தக் கட்டுரைகள் துணைப் பாடநூல்களிலும் அமையும்; பொதுத் தலைப்பு களில் எழுதவேண்டியும் வரும். இன்னவகைக் கட்டுரை எழுதவேண்டும் என்பதைப் பேராசிரியர் முதலியார் அவர்களே வரையறை செய்வார். தலைப்பை உறுதி செய்து கொண்டு கட்டுரைப் பொருளை வகைசெய்து காட்டுவார். முன்னுரை, கட்டுரை உடல் (பல பகுதிகள்), முடிவுரை என்று வகுத்துக் காட்டி ஒவ்வொரு தலைப்புகளிலும் என்ன எழுத வேண்டும் என்று மனத்தில் ஆணித்தரமாகப் பதியும் படி விளக்குவார்; அரைமணி நேரம் இவ்விளக்கம் நடை பெறும். பிறகு எல்லோரும் 'லாலிமண்டம்' என்ற இடத் திற்குச் சென்று எழுத வேண்டும். எழுதுவதற்கு வேண்டிய தாள்கள் மேசையின்மீது வரிசையாக வினியோகித்து வைத்துக் கொண்டு திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார் காத்துக் கொண்டிருப்பார். ஐந்து அல்லது ஆறுபக்கங்களில் அழகிய முறையில் எழுதவேண்டும். ஒன்றரை மணிநேரம் இருப்ப தால் பொருளை நன்கு நிரல்பட அமைத்து நிறுத்தி எழுதலாம். அழகான முறையில் இங்ஙனம் தரப்பெற்ற பயிற்சியை நன்முறையில் பயன்படுத்திக் கொண்டதால் இன்றும் மணிமணியாக முத்துக் கோத்தாற்போல் அழகாக எழுத முடிகின்றது.

ஆங்கிலக் கட்டுரை எழுதுவதும் இம்முறையிலேயே அமையும். திரு. கோபாலரத்தினம் என்ற ஒரு பயிற்சி

அளிக்கும் ஆசிரியர் (Tutor) இம்முறையிலேயே அரைமணி நேரம் வகுப்பு நடத்தி ஒன்றரைமணி நேரம் எழுதச் செய்வார். ஆங்கிலத்தில் நன்கு எழுதும் ஆற்றல் பெற்ற தற்கு இப்பெருமகனாரே காரணம் ஆவார்.

**மொழியாக்கப் பயிற்சிகள் :** இவற்றை அற்புதமாக நடத்திப் பயிற்சியளித்தவர் திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார் என்பவர். இவர் வகுப்பு கலகலப்பாக இருக்கும். நன்றாக ஆங்கிலம் பேசுவார். (In days of antiquity) 'பழங்காலத்தில்' என்று பேசும் செயற்கைப் பழக்கத்தைக் (Mannerism) கொண்டவராதலால் கல்லூரி மாணாக்கர்கள் இவருக்கு 'ஆண்டிகுவிட்டி அய்யங்கார்' என்று சாட்டுப் பெயர் வழங்கினர். இப்பெயராலேயே மாணாக்கர்கள் இவரைக் குறிப்பிடுவர். இதை இவரும் அறிந்து மகிழ்வார். இவர் வகுப்பில் சிரிப்பு அதிகமாகி அமைதியின்மை நிலவும்; இதை இவர் பொறுத்துக் கொள்வார்; தவறாகக் கருதார். மாணாக்கர்களின் உற்சாகமே இதற்குக் காரணமேயன்றி வேலையைத் தட்டிக் கழிப்பதன்று என்பதை இவர் நன்கு உணர்வார்.

மொழியாக்கப் பயிற்சி தரும் முறையை இவர் அற்புத மாகக் கையாளுவார். மொழியாக்கம் செய்ய வேண்டிய பகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார். ஒரு வாக்கியத்தை எல்லோரையும் எழுதிக் கொள்ளச் செய்து அதை தமிழ் மொழியாக்கம் செய்யும்படி சொல்வார். தான் முன்னரே அந்த வாக்கியத்தை மொழியாக்கம் செய்து வைத்திருப்பார். மாணாக்கர் மொழியாக்கம் செய்திருப்பதை அங்கொருவர் இங்கொருவராகப் படிக்கச் செய்வார். பின்னர். தாம் எழுதி வைத்திருப்பதைப் படிப்பார். இவற்றால் எல்லோரும் தத்தம் குறைநிறைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இவ்வாறு ஒரு மணி நேரத்தில் அவர் ஆறு அல்லது

ஏழு வாக்கியங்களை மொழியாக்கம் செய்து காட்டுவார். இஃது ஒரு சிறந்த முறை என்பது என் கருத்து. இதனால் ஒவ்வொருவரும் தத்தம் மொழியாக்கங்களைத் திருத்தம் செய்துகொண்டு பெரும்பயன் அடைவர். ஆசிரியர் எல்லோருடைய மொழயாக்கங்களைத் தனித்தனியாகப் பார்க்கும் சுமை குறையும்; இப்படிப் பார்ப்பதாலும் யாதொரு பயனும் இல்லை என்பதும் தெளிவாகும். திருப்பதியில் யான் மொழியாக்கப் பயிற்சிகள் இளங்கலை வகுப்பிற்குக் கற்பிக்கும் வாய்ப்பு கிடைத்தபொழுது இந்த முறையைக் கையாண்டு வெற்றி கண்டதை ஈண்டுக் குறிப்பிடாது இருக்க முடியவில்லை.

குமிழி—35

# 35. கணிதம், இயற்பியல் வேதியியல் பாடங்கள் கற்பித்த முறை

புனித சூசையப்பர் கல்லூரியில் நான் இடைநிலை வகுப்பில் (Intermediate) கற்றபோது கணிதம் அறிவியல் பாடங்களைக் கற்பித்தவர்கள் நல்லாசிரியர்களாக அமைந்தனர். ஆசிரியர் பயிற்றும் முறையைப் பண்டையோர் 'ஈதல் இயல்பு' என்று குறிப்பிடுவர். இதனைப் பிறிதோர் இடத்தில் சுட்டியுள்ளேன்.

**கணிதம் :** உயர்நிலைப் பள்ளியில் திரு. K. இராமசந்திர அய்யர் போட்ட அடிப்படை கல்லூரி வாழ்வில் இந்தப் பாடத்தைப் பயில்வதற்குப் பெருந்துணை புரிந்தது. இந்தப் பாடத்தில் நானும் மிகவும் அக்கறையுடன் கற்கலானேன். இடைநிலை வகுப்பில் இந்தப் பாடத்தைக் கற்பித்தவர் **பேராசிரியர் சீநிவாசன்** என்பவர். எப்பொழுது வகுப்பிற்கு

வந்தாலும் ஏழெட்டு சுண்ணக் காம்புகளுடனும் (Chalk piece) துடைப்பானுடனும்தான் வகுப்பிற்குள் நுழைவார். வகுப்பு முடிந்து வெளியேறும்போது துடைப்பான்தான் மிஞ்சும். எல்லா ஆசிரியர்கட்கும் கரும்பலகை ஒரு முக்கிய சாதனமாக இருந்தாலும் கணித ஆசிரியருக்கு அது மிகவும் இன்றியமையாதது. ஒரு மணி நேரம் வாய்பாடுகளைக் கற்பித்தல், அவற்றை விளக்குவதற்குப் பல்வேறு வகையான புதிர்மானங்களைப் (Problems) போட்டுக் காட்டல் மிகக் கவர்ச்சிகரமாக இருக்கும். இயற்கணிதம் (Algebra) கோண கணிதம் (Trigonometry) இவற்றை மிக உயர்ந்த முறையில் கற்பித்தார். ஒரு மணி நேரம் கற்பித்தபிறகு அவரைக் கவனித்தால் உடற்சோர்வுடன் இருப்பதைக் காணலாம்; கருவுயிர்த்த இளம் நங்கைபோல் காணப்பெறுவார். ஏராளமான கணக்குகளை வீட்டில் செய்தேன். பல்கலைக் கழக வினாக்களை (பத்து ஆண்டுக்குரியவை) தனிகுறிப்பேடு களில் செய்தேன். அந்தக் காலத்தில் ஒரு குயர் குறிப்பேடு—வழுவழுப்பான தாள்களால் கட்டப்பெற்றது—இரண்டணா (இப்போதைய 12 காசு) தான். இரண்டாண்டுகளில் 25 குறிப்பேடுகளில் பல்கலைக்கழக வினாக்களை வரையறுத்து வைத்திருந்தேன். வடிவகணிதத்தை யார் கற்பித்தார் என்பது இப்போது நினைவில் இல்லை. தேற்றங்களை (Theorems) மட்டிலும் நன்கு கற்பித்தார். கடாத்தீர்வு களை நன்கு செய்துகாட்டவில்லை. பொதுவாக இவர் பெயர் கூட நினைக்க முடியாத நிலைக்குக் காரணம் இவர் நன்கு கற்பிக்காமையே.

கணித பாடங்களில் ஆசிரியர் சரியாக அமையாவிடில் மாணாக்கர்கள் பிற்போக்காளர்களாகிவிடுவர் என்பது என் அநுபவத்தில் கண்ட மாபெரும் உண்மையாகும். பேராசிரியர் சீநிவாசன் கற்பித்த பாடங்களில் நூற்றுக்கு நூறு வாங்கி விடுவேன். மூன்று மணி நேரம் விடையிறுக்க வேண்டிய

வினாக்களை இரண்டரை மணி நேரத்தில் செய்து முடித்து விடுவேன். ஒரு கல்லூரியில் மாணாக்கர் கணிதத்தில் தேர்ச்சி பெறவில்லை என்றால் அதற்குக் காரணம் சரியாகக் கற்பிக்கப் பெறவில்லை என்று பொதுவாகக் கூறிவிடலாம்.

**இயற்பியல்** : இப்பாடத்தைக் கற்பித்தவர் **காம்பெர்ட்** என்ற ஒரு ஃபிரெஞ்சு சாமியார். உரைக்கப்படும் பொருள் உள்ளத்தில் அமைத்துக் கொண்டு கொள்வோன் கொள்வகைக் கோடல் மரபு இவரிடம் அமையவில்லை. இவர் வகுப்பில் மாணாக்கர்களின் சராசரி மதிப்பெண் 15க்குக் கீழ்தான்; நான் முதல் ஆண்டு மூன்று தேர்வுகளிலும் இருபது விழுக்காட்டிற்கு மேல் வாங்கவில்லை. வகுப்பில் ஒருவர் இருவர்கூட முப்பது விழுக்காடு வாங்கியதாக நினைவு இல்லை. பேசும் ஆங்கிலம் ஒருவருக்கும் புரியவதில்லை. செய்முறைகளைச் சோதனைச் சாலைகளில் விளக்குவது இன்னும் மோசம். இளம் வயதுடைய பயிற்சி அளிப்பவர்கள்—செய்து காட்டுபவர்கள் (Demonstrators)- வருவார்கள்; அவர்கள் நன்கு விளக்குவார்கள்.

உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களின் வீடுசென்று மதிப்பெண்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் இருக்கும்; ஒரு சிலரிடம்தான் இந்த ஆவல் காணப் பெறும். வீட்டிற்குச் சென்று முன்கூட்டிய தெரிந்துவரலாம். விடைத்தாள்களைத் திருத்தும்போதுகூட பக்கத்தில் மாணாக்கனை வைத்துக் கொண்டு திருத்துவதும் உண்டு. இம்மாதிரியான பழக்கத்தில் ஒரு முறை காலாண்டுத் தேர்வு மதிப்பெண்களைத் தெரிந்து கொள்வதற்கு சாமியார்கள் தங்கியிருக்கும் விடுதிக்குச் சென்று காம்பெர்ட் சாமியார் அறைக்குள் 'விடுவிடு' என்று நுழைந்து விட்டேன். இப் பழக்கத்தைச் சாமியார் விரும்பவில்லை. இப்பழக்கம் நற் பழக்கம் அன்று என்பதைக் கூறி நற்பழக்கத்தை நாடகம்

போல் நடத்திக் காட்டினார். தாம் ஃபிரெஞ்சுத் தொனியுடன் ஆங்கிலம் பேசுவது பெரும்பான்மையான மாணாக்கர்கட்குப் புரியவில்லை என்பதைச் சாமியார் நன்கு உணர்ந்திருந்தார். அடுத்த பிரிவிலுள்ள மாணாக்கர்கள் இயற்பியலில் அதிகமான மதிப்பெண்கள் பெற்றிருந்ததையும் தம் பிரிவிலுள்ள மாணாக்கர்கள் அங்ஙனம் பெறாமையும் இந்த உணாவுக்குக் காரணமாக இருக்கலாம்.

இப்போது அறையில் அநுமதியின்றிப் புகுந்தது தவறு என்பதைக் காட்டிய முறை இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளது. என்னைக் கழுத்தில் தம் இடக்கையைப் போட்ட வண்ணம் (பாட்டன் பேரன் கழுத்தில் போடுவது போல்) வெளியில் இட்டுச் சென்றார். என்னை வெளியில் விட்டுக் கதவை சாத்தினார். தாம் இருக்கையில் அமர்ந்த பிறகுக் கதவை மெதுவாகத் தட்டுமாறு (Tap the door) பணித்தார். நான் அவ்வாறு செய்தேன், உள்ளே வருமாறு பணித்தார் (Come in). உள்ளே வந்து 'காலை வணக்கம் ஃபாதர்' என்றேன். 'என்ன வேண்டும்?' (What do you want) என்றார். 'மதிப்பெண்கள் தெரிய வேண்டும்' என்றேன். மதிப்பெண் பட்டியலை எடுத்துப் பார்த்தார். நான் பெற்றிருந்த குறைவான மதிப்பெண்ணைச் சொன்னார். ''எல்லோரும் நன்றாக விடை எழுதவில்லை. என்ன செய்ய வேண்டும் என்பதை யோசித்து வருகிறேன். எல்லோருமே சரியாக எழுதாததால்' இப்பிரிவு மாணவர்கள் மட்டம்' என்ற முடிவுக்கு வர முடியாது''. என்றார். ''இனி இப்படித்தான் எல்லோரிடமும் எங்கும் நடந்து கொள்ள வேண்டும். எங்கும் பார்க்க வேண்டியவர்களின் செவ்வியறிந்து இங்கிதமாக நடந்து கொள்ள வேண்டும். புனிதசூசையப்பர் கல்லூரியில் படித்தவன் என்பதை உன் நடத்தை காட்டவேண்டும்'' என்று சொல்லி என்னை இன்முகத்துடன் விடை கொடுத்தனுப்பினார். கார்ட்டி சாமியார்,

எராட் சாமியார் இப்படித்தான் அன்பாக இருப்பார்கள் என்று அவர்களிடம் படித்த மாணாக்கர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

நான் புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்ற ஐந்தாண்டுகளில் (1934-39) முதலாண்டு லீ சாமியார் முதல்வர். அடுத்த நான்கு ஆண்டுகள் ஜெரோம் சாமியார் முதல்வராக இருந்தார். இவர் பதவியேற்றவுடன் கல்லூரி நிர்வாகத்தில் பல மாறுதல்களைச் செய்தார். பேராசிரியருக்கு இயல்பாக அமைந்திருக்க வேண்டிய பண்புகளும் முதல்வருக்கு அமைந்திருக்க வேண்டிய திறனும் வாய்க்கப் பெற்றவர். முதலாவதாக, இடைநிலை வகுப்பு இரண்டாவது ஆண்டில் பி. பிரிவில் காம்பர்ட் சாமியாருக்குப் பதிலாகத் திரு **சவரிமுத்து** என்றவரை இயற்பியல் கற்பிப்பதற்கு நியமித்தார். திரு. சவரிமுத்து பி.ஏ. ஆனர்ஸ் வகுப்பில் சிறந்த மாணாக்கராக இருந்து நல்ல மதிப்பெண் பெற்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று அப்பொழுதுதான் வெளிவந்தவர். மாணாக்கராக இருந்தபோதே கற்பிற்கும் திறன் கருவில் அமைந்தவர் என்பதை நேரில் கண்டவர் ஜெரோம் சாமியார்; அவருக்குக் கற்பித்தப் பேராசிரியர்களையும் வினவி அறிந்திருக்க வேண்டும்.

திரு. சவரிமுத்து வகுப்பின் நிலையை நன்கு புரிந்து கொண்டுதான் தம் வேலையைத் தொடங்கினார். முதல்வர் ஜெரோம் சாமியார் இவர் பணியை ஏற்றுக் கொள்வதற்கு முன் இந்த வகுப்பின் நிலையை நன்கு விளக்கியிருக்க வேண்டும். மாணாக்கர்கள் மூலமும் நிலைமையை நன்கு தெரிந்து கொண்டிருக்க வேண்டும். புனித சூசையப்பர் கல்லூரியில் நான் பயின்ற அந்த நாட்களில் புதன், ஞாயிறு வாரவிடுமுறை, இரண்டு நாட்கள் தொடர்ந்து விடுமுறை அளித்தால் அந்த வாரத்தில் நடந்த பாடங்களை மாணாக்கர் மறந்து விடுவர் என்றும், இரண்டு நாட்கள்

தொடர்ந்து விடுமுறை கிடைத்தால் சிற்றூர்களிலிருந்து வந்து பயிலும் மாணாக்கர்கள் அதனை ஊர்சுற்றப்— இடக்கரடக்காகச் சொன்னால் சுற்றுலாவுக்கு'ப் – பயன் படுத்திக் கொள்வார்கள் என்றும் இந்த முறையை மேற் கொண்டனர் போலும். உளவியல் தத்துவப்படி இது மறதிக்குத் துணை செய்யும் என்றும் கருதியிருக்கலாம்!

திரு. சவரிமுத்து இயற்பியலில் முதலாண்டு நடந்த வற்றை மீண்டும் 'அடியைப் பிடிடா, பாரதபட்டா' என்பது போல் புதன் காலையும் மாலையும் கற்பித்தார். பாடங்கள் நாலுகால் பாய்ச்சலில் செல்லவில்லை: நிதானமாக மாணக்கர் உளம்கொள்ளும் வகையில் அற்புதமாக நடத்தி னார். அவர்தம் இனிமையான குரல் இன்றும் என்காதுகளில் ஒலிப்பதுபோல் உள்ளது; புன்முறுவல் பூத்த முகமும் முத்துக்கோத்தாற் போல் அவர் கரும்பலகையில் எழுதும் பாங்கும் இன்றும் எனக்கு மானசீகமாகக் காட்சியளிக்கின்றன. உயர் நிலைப் பள்ளியில் சார்லஸ் பாயில் விதிபற்றிய,

$$\frac{PV}{T} = \frac{P_1V_1}{I_1}$$

என்ற சமன்பாடு, முகம் வீங்கும் அளவு அடிபட்டும் திரு. டி.கே. இராமநாத பிள்ளையால் விளக்க முடியாமல் குருட்டுப்பாடமாகக் கொண்டிருந்த கருத்து இப்போது தெளிவாகியது. இவர் விளக்கிய முறை:

$$\frac{PV}{T} = \text{மாறாதது (Constant)}$$

$$\frac{P_1V_1}{T_1} = \text{மாறாதது}$$

$$\frac{P_2V_2}{T_1} = \text{மாறாதது}$$

அதாவது அமுக்கம், பரிமாணம், வெப்பம் இவற்றின் நிலைகள் மாறினாலும் அவற்றின் பெருக்குத் தொகை மாறாதிருக்கும். ஆகவே,

$$\frac{PV}{T} = \frac{P_1V_1}{T_1} = \frac{P_2V_2}{T_2} = \frac{P_3V_3}{T_3} = \text{மாறாதது}$$

என்றாகின்றன என்பதைத் தெளிவாக்கினார்.

இயக்கவகையியல் (Dynamics), நிலைபொருளியல் (Statics) என்ற பகுதிகளில் வாய்பாடுகளும் கணக்குகளும் அதிகம். இப்பகுதிகளை மிக அற்புதமாக நடத்தி எங்கட்கு நல்ல தெளிவை ஏற்படுத்தினார் வெப்பம், ஒளி, காந்தம் ஒலி பகுதிகள் மிக நன்றாக விளக்கப்பெற்றன. இப்பகுதி களிலுள்ள கணக்குகளைச் செய்வதிலும் நல்ல ஆர்வ மூட்டினார். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை இப்பகுதி களில் சிறு தேர்வுகள் வைப்பார். உடனுக்குடனே திருத்தி மதிப் பெண்களை அறிவிப்பார். வகுப்புகளில் உற்சாகக் களை தட்டியது; ஆர்வ அலை பொங்கி வழிந்தது. எல்லோரும் நல்ல மதிப்பெண்கள் பெற்றனர். இரண்டாவது ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முதலாண்டுப்பாடங்களை முடித்துவிட்டார். முறையான வார வகுப்புகளில் இரண்டாவது ஆண்டுப் பகுதிகள் நன்கு கற்பிக்கப் பெற்றன. 10% அல்லது 15%வரை மதிப் பெண்கள் பெற்ற நான் திரு சவரிமுத்து வந்த பிறகு 85%, 90% என்று பெறமுடிந்தது. வகுப்பின் சராசரி மதிப் பெண் நிலையே 60% 70% என வளர்ந்தது. இங்ஙனம் இடைநிலை வகுப்பில் இயற்பியலுக்கு ஒரு நல்லாசிரியர் கிடைத்தமையால் இயற்பியலை ஆர்வமாகவும் அக்கறையு டனும் கற்க முடிந்தது. ஓராண்டு நோய் வாய்ப்பட்டு தேய்ந்த உடல், சத்துணவுகளால் தேறுவது போன்ற ஒரு நிலையை வகுப்பிலுள்ள எல்லோருமே உணர்ந்தோம்.

**வேதியியல் :** இதற்குப் பேராசிரியராக அமைந்தவர் திரு. கோவிந்தராவ் என்பவர்; இவர் இளங்கலைப் பட்ட தாரியே. வேதியியலில் தொடக்கக் காலத்தில் தனிமங்களின் குறியீடுகள். இயைபியல், அணு ஆற்றல், அலகு எண், (Valency) வேதியியற் பொருள்களின் குறியீடுகள், வேதியியல் சமன்பாடுகள் ஆகியவற்றில் நல்ல அடிப்படை அமைய வேண்டும். குழந்தை மொழியை பேச, எழுதக் கற்றுக் கொள் வதில் அடையும் சிரமங்கள் எல்லாம் புதியதொரு மொழி யாகிய 'வேதியியல் மொழியை'க் கற்றுக் கொள்வதில் வேதியியல் பாடம் பயில்வோர் அடைய நேரிடும். பொறுமையாக ஆர்வத்துடன் தொடக்கத்தில் கற்றுக் கொண்டால் வேதியியல் பாடத்தை 'ஊதித்தள்ளி விடலாம்' இந்த நுட்பத்தை நன்கு அறிந்தவர் திரு கோவிந்தராவ். ஒவ்வொரு நாளும் புதிய பாடத்தைக் கற்பிக்கத் தொடங்கும் முன் மாணாக்கர்களின் முன்னறிவுத்திரளையைத் (Apperreceptive mass) தட்டி எழுப்புவார். இதனால் பாடங்களின் இடையறாத தொடர்பு ஏற்பட்டுக் கற்போரின் மனத்தில் தெளிவுடன் ஆழப்பதிவதற்கும் ஆர்வம் ஏற்படு வதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

இயற்பியலைப்போல் வேதியியலில் அதிகக் கணக்குகள் செய்ய வாய்ப்புகள் இல்லை. இருந்தாலும் இந்தக் குறைந்த அளவு கணக்குகளைப் பிழையின்றிச் செய்யத் தெளிவு பிறக்கும்படி செய்துவிடுவார் திரு கோவிந்தராவ். இதனால் எனக்கு வேதியியலில் நல்ல ஆழமான அறிவு ஏற்பட்டு அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கும் வாய்ப்பு உண்டாயிற்று. இளங்கலைப் பட்டப் படிப்பிலும் (B.Sc) வேதியியலை முக்கிய பாடமாகவும், கணிதம் இயற்பியல் இவற்றைத் துணைப் பாடங்களாகவும் (Subsidiaries) எடுத்துக்கொண்டு படிக்கும் நிலையும் ஏற்பட்டது.

# 36. கல்லூரியில் பயிலும் போது என் பழக்கங்கள்

இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளில் மாணாக்கர்கள் வகுப்பிற்குச் செல்லும்போது குறிப்பேடுகளையும் பாடநூல் களையும் சுமந்து செல்வதைக் காணும்போது என் மனம் மிகவும் இரக்கப்படுகின்றது. இசைக்கல்லூரியில் வீணை, சீறியாழ், (Fiddle) தவுல், மத்தளம் பயிலும் மாணாக்கர்கள் கூட நாடோறும் இம்மாதிரித் தங்கள் இசைக் கருவிகளைச் சுமந்து செல்லும் தண்டனையைப் பெறவில்லை. சிறார் களும் சிறுமிகளும் காக்கி நிறப் பைகளைக் குறிப்பேடுகளாலும் பாடநூல்களாலும் நிரப்பித் தம் முதுகில் சுமந்து கொண்டு செல்வதைப் பார்த்தால் இமய மலை உச்சியைக் காண வேண்டும் என்ற ஆவலுடன் செல்லும் பயணிகளை நினைக்க வைக்கின்றது. சென்னையில் நகர்ப்பேருந்துகளில் தம் மூட்டைகளுடன் இவர்கள் ஏறும்பொழுதும், இருக்கைகளில் அமரும்பொழுதும் இவர்கள் படும் சிரமத்தைச் சொல்லி முடியாது. இவர்களால் ஏனைய பயணிகள் படும் சிரமம் பொறுக்க முடியாது. இந்த மாணாக்கர்கள் பேருந்துகளில் நிற்கும் நிலை ஏற்பட்டால் சிரமத்தின் அளவைச் சொல்ல முடியாது; அவர்கள் உடற்பாரத்துடன் முதுகிலுள்ள மூட்டை பாரமும் கொண்டு இப்படியும் அப்படியும் திரும்பும் போது அவர்கள் படும் சிரமத்தை கருவுயிர்க்கும் பெண்படும் வேதனையுடன்தான் ஒப்பிட்டுப் பேசவேண்டும். +1, +2 வகுப்புகளில் படிக்கும் மாணாக்க மாணாக்கியர்களின் நிலை இன்னும் மோசமாகின்றது. இவர்கள்படும் தொல்லைகளைக் காணும் பொழுதெல்லாம் இவர்கள்பால் மிகவும் கழிவிரக்கம் கொள்ளுகின்றேன்.

இவற்றை நோக்கும்போது நான் பயின்ற நாளை நினைத்துப் பார்க்கின்றேன். ஆங்கிலம், தமிழ் வகுப்புகளில்

குறித்துக் கொள்ள வேண்டிய குறிப்புகள் ஒன்றும் இரா. இடைநிலை வகுப்புகளில் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டியது கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களில் தான், இந்த மூன்று பாடங்களிலும் தேர்வுகளில் பாடத்திற்கு இரண்டாக ஆறு வினாத்தாள்கட்கு விடையிறுக்க வேண்டும். இதனை நன்கு அறிந்து நான் என் யுக்திக் கேற்றவாறு மேற் கொண்ட முறையைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்; இக்கால மாணாக்கர்கட்கு ஒருவகையான வழிகாட்டியாகவும் அமையலாம். ஃபூல்ஸ்கேப் $\frac{1}{4}$ அளவில் இரண்டு தொளைக ளிட்டு நாடாவைக் (Lace) கொண்டு கட்டும் முறையில் ஏழு கோப்புகள் தயார் செய்து கொண்டேன். இவற்றுள் ஒன்று முழுவதும் கள்ளிக்கோட்டைத் (Calico) துணியாலானது;இது வகுப்பிற்கு எடுத்துச் செல்லவேண்டிய கோப்பு. ஏனைய ஆறும் அடிப்பக்க விளிம்பில் தொளைப் பகுதி மட்டிலும் இத்துணியா லாகியது; மீதிப் பகுதி வண்ணத்தாளால் ஒட்டப்பட்டது. அப்பொழுது ஒரு குயர்தாள் ஒன்றரை அணாவுக்கு (நல்ல தாள் இரண்டணாவுக்கு = 12 காசு) கிடைக்கும். இத்தாள் களை $\frac{1}{4}$ ஃபூல்ஸ்கேப் அளவில் வெட்டிக் கோப்புகளில் போடு வதற்கேற்பத் தொளையிட்டு வைத்துக் கொண்டேன். தொளையிடும் சாதனம் ஒன்றை (ஒற்றைத் தொளை யிடுவது) வாங்கி வைத்துக் கொண்டேன். 1934 ஜூனில் ரூ$3\frac{1}{2}$க்கு வாங்கிய இச்சாதனம் இன்றும் (1988) என்னிடம் பயன்பட்டுவருகின்றது.

ஒருநாளுக்குத் தேவையான தாள்களை வகுப்பிற்கு எடுத்துச் செல்லும் கோப்பில் கோத்துக் கொள்வேன். தேதி போட்டு எழுதும் பழக்கத்தை மாணாக்கப்பருவத்திலிருந்து இன்று வரை (72-வயது) கடைப் பிடித்துவருகின்றேன். மேற் குறிப்பிட்ட மூன்று பாட (கணிதம், இயற்பியல், வேதியியல்) வகுப்புகளிலும் ஆசிரியர் தரும் குறிப்புகள், கரும்பலகையில் அவர் எழுதும் குறிப்புகள் இவற்றைத் தக்கவாறு அழகாக

கோப்பில் உள்ள தாள்களில் குறித்துக் கொள்வேன். ஒவ்வொரு வகுப்பிற்குப் போகும்போதும் பாடம், தேதி இவற்றைக் குறித்துக் கொண்டபிறகுதான் குறிப்புகளைத் தாளில் குறிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். மாலை அறைக்குத் திரும்பியதும் ஒவ்வொருபாடத்திலும் அந்தந்த வினாத்தாளுக்குரிய பகுதிகளை வரிசைதவறாமல் எடுத்துக் கோத்து வைத்துக் கொள்வேன், இபபணியைத் தவறாமல் செய்துவருவேன். தேர்வுக் காலங்களில் பாடங்களைத் திருப்பிப் படிக்கும்போது, வகுப்பில் ஆசிரியர் கற்பித்த காட்சிகள் நாடாப்பதிவு செய்து தொலைக் காட்சியிலோ வானொலியிலோ மானசீகமாகப் பார்ப்பது போன்ற அல்லது கேட்பது போன்ற அநுபவ நிலை ஏற்பட்டுப் பாடங்கள் மனத்தில் ஆழப் பதியவும் அவை தேவைப்படுங்கால் வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் ஏற்படும்.

**வீட்டு—வேலை :** ஆங்கிலம், தமிழ்ப்பாடங்களில் முதல் நாள் வகுப்புகளில் நடைபெற்ற பாடங்களைப் படித்துக் கொண்டும், புதிதாகத் தொடங்க வேண்டிய பகுதிகளை அகராதிகள், குறிப்புநூல்கள் (Notes) இவற்றின் துணை கொண்டு முன் கூட்டியே படித்துக் கொண்டும் செல்வதை ஒரு முக்கிய பழக்கமாகவே மேற்கொண்டிருந்தேன். இதனால் இந்தப் மொழிப் பாடங்களைப் புரிந்து கொண்டு மனத்தில் நிலை நிறுத்துவது எளிதாக இருந்தது. இந்தப் பாடங்களில் எனக்கு எவ்வித சிரமமும் ஏற்படவில்லை.

கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களில்தான் அதிகம் உழைக்க வேண்டியிருந்தது. ஓர் ஐந்தாண்டுகள் மார்ச்சு-செப்டம்பர் திங்களில் நடைபெற்ற தேர்வுகளின் வினாத்தாள்களை மூன்று தனித்தனிக் குறிப்பேடுகளில் படியெடுத்து வைத்துக் கொள்வேன். கல்லூரியில் ஒவ்வொரு பாடத்திலும் பகுதிகள் கற்பிக்கப்பெற்று வரும்பொழுதே

அப்பகுதிகளில் பல்கலைக்கழகத் தேர்வுகளில் விடுக்கப் பெற்ற வினாக்களை நோக்கி மனத்திற்குள்ளேயே விடை யிறுக்கும் முறைகளைப் பயிற்சி தந்து கொள்வேன். அப்பகுதிகளில் கேட்கப்பெற்றுள்ள வாய்பாடுகளைப் (Formulas) பிறப்பிக்கும் முறைகளை அடிக்கடி எழுதிப் பார்த்துக் கொள்வேன்; பெரிய வினாக்களுக்கு விடை காணும் முறைகளிலும் மனத்திற்கு அவ்வப்பொழுது பயிற்சிகள் தந்த வண்ணம் இருப்பேன். இயற்பியல், வேதியியல்களில் கேட்கப்பெற்றிருக்கும் கணக்குகளைச் செய்து பார்ப்பேன். இவ்வாறு செய்தவற்றை அந்தந்தக் கோப்புக்ளில் உரிய இடங்களில் **'வீட்டு — வேலை'** என்று குறிப்பிட்டு இணைத்துக் கொள்வேன். தேர்வுக் காலங்களில் பாடங்களைத் திருப்பும்போது இவை சஞ்சீவிபோல் நின்று தேர்வுகட்கு வழியமைத்துக் காட்டும்.

கணித பாடத்தில்தான் ஏராளமான கணக்குகள் செய்தேன். வடிவகணிதம், இயற்கணிதம், கோண கணிதம் இவற்றிற்கெனத் தனித்தனியான குறிப்பேடுகள் வைத் திருந்தேன். இவற்றைப் பாடநூல் பயிற்சிகள், தேர்வுத் தாள் விடைகள் எனப் பிரித்து வைத்துக் கொண்டு கணக்குகள் செய்தேன். அந்தக் காலத்தில் வழுவழுப்பான யானைப் பொறிப்பு, மூங்கில் பொறிப்பு போடப் பெற்றுள்ள காகிதத்தாலான குறிப்பேடுகள் மிக்க மலிவான விலைக்குக் கிடைக்கும். ஒரு குயர் குறிப்பேடு இரண்டணாத் தான் (பன்னிரெண்டு காசு), இடைநிலை வகுப்பில் இருந்தபோது இரண்டாண்டுகளில் வீட்டுவேலை செய்த குறிப்பேடுகள் இருபதிற்கு மேலிருக்கும். இவற்றைத் 'தெய்வம்' எனப் போற்றினேன். தேர்வுக் காலத்தில் இவற்றைத் திருப்பிப் பார்த்துக் கொண்டு சென்றால் தேர்வு களில் 100க்கு 100 பெற முடியும். மிகச் சிக்கலான கணக்குகளை (பாடநூல் பயிற்சிகளாயிருப்பினும், பல்கலைக்

கழக தேர்வுத்தாள்களாயிருப்பினும்) பேராசிரியர் சீநிவாசன் வகுப்பில் செய்து காட்டுவார். இவ்வாறு காட்டும்பொழுது சிந்தித்தற்குரிய துண்டுக் குறிப்புகளைக் (clues) காட்டிக் கொடுப்பார். கோண கணிதத்தில் மிக அற்புதமான கணக்குகளை எல்லாம் செய்து காட்டுவார். இக்கணக்கு களைச் செய்யும்போது இக்காலச் சிறுகதைகளைப் (Short Stories) படிப்பது போன்ற உற்சாகம் இருக்கும்.

நான் இரண்டாம் ஆண்டு இடைநிலை வகுப்பிலிருந்த போது சவுக்குப் பகுதியிலுள்ள காசியப்பா ராவுத்தர் ஸ்டோரின்மேல் மாடி அறையில்தான் தங்கியிருந்தேன். விடுமுறை நாட்களில் சிறிது நேரம்கூட வீணடிக்கமாட்டேன். அதிகாலை நாலரை மணிக்கு எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, காலை ஒன்பதுமணிவரை ஆங்கிலம், தமிழ் படிப்பேன். விடுமுறை நாட்களில் காலை ஒன்பதரை மணிக்கு ஆதிகுடி வேங்கட்டராம அய்யர் உணவு விடுதிக்குச் சென்று பத்தரை மணிக்குத் திரும்பி விடுவேன். வரும்போது மலைவாழைப்பழம் (சிறியது) ஒரு டஜன் வாங்கி வருவேன். எப்பொழுதும் அறையில் பத்துப் பழத்திற்குக்கு குறையாது வைத்திருப்பேன். அதிகாலையில் எழுந்து படிக்கும்போது பசி எடுக்கும். வாழைப் பழங்களை உண்டு மண்கூசா நீரைப் பருகிப் பசியைத் தணித்துக் கொள்வேன். காலையில் காஃபி பானம் அருந்துவதில்லை. உணவு கொண்டு திரும்பியதும் சோர்வு இருக்கும்; ஒருமணி அல்லது இரண்டு மணி உறங்குவேன்; 12 மணி சுமாருக்கு எழுந்ததும் இயற்பியல்; வேதியியல் கணக்குகள் இருந்தால் அவற்றைச் செய்து கோப்புகளில் உரிய இடத்தில் கோத்து வைப்பேன். பெரும்பாலும் கணிதப் பாடக் கணக்குகளைச் செய் வதில்தான் அதிகக் காலம் செலவாகும்.

அந்தக் காலத்தில் காசியப்பா ராவுத்தர் ஸ்டோரிலுள்ள சுமார் 20 அறைகளில் பாதிக்குமேல் காலியாக இருக்கும்.

அறையில் மின் விளக்குகள் இல்லை. அரிக்கேன் விளக்கைக் கொண்டுதான் காலந்தள்ளினேன். குரங்கு மார்க் மண்ணெண்ணெய் ¼ டின் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கும். இறைக்கும் சாதனம், புனல், கண்ணாடிப் போத்தல் இவை தயாரில் இருக்கும். எண்ணெய்க்காக அடிக்கடி வெளியில் செல்லும் நேரம் குறைந்தது. இரண்டாண்டுகளிலும் ஓயாதுஉழைத்தேன் படக்காட்சிகளை எப்பொழுதாவது காண்பேன்; அடிக்கடி போகும் பழக்கம் இல்லை. இரண்டாம் ஆண்டு பயிலும்போது அரங்கசாமியின் பி. ஏ. படிப்பு முடிந்தது அக்காலத்தில் தேர்வுக்குப் போகுமுன் வடிகட்டும் பழக்கம் (Selection) இருந்தது. சரியாகப் படிக்காதவர்களை மார்ச்சுத் தேர்வுக்குப் போகாமல் கல்லூரி தடை செய்யும். இவ்வாறு படைசெய்யப் பெற்றவர் செப்டம்பர் தேர்வுக்குப் போகலாம் பி.ஏ. தேர்வாக இருந்தால் ஆங்கிலம், தமிழ், விருப்ப தாடங்கள் என்ற பகுதிகளில் தனித்தனியாக வடிகட்டும் முறை இருந்தது. அரங்கசாமி பி ஏ. ஆங்கிலத்தில் தடை செய்யப் பழக்கம் பெற்றார். இந்த மூன்றுமாத காலத்தில் நான் தங்கியிருந்த ஸ்டோருக்கு வராமல் தெப்பக்குளத்துக் கருகிலுள்ள முதலியார் விடுதியில் தங்கியிருந்தார். ஒரு நிகழ்ச்சியில் அவர் என் அருகில் இல்லாதது எனக்குக் கை முறிந்தது போன்றிருந்தது.

பணக்கஷ்டம் அதிகமிருந்ததால் இரண்டாவது ஆண்டு காசியப்பா ராவுத்தர் ஸ்டோரில் ரூபாய் மூன்று வாடகையுள்ள அறையில் தங்கியிருந்தேன்; சற்றுச் சிறிய அறைதான். ஒரு கட்டில், ஒரு மேசை, ஒரு ஸ்டூல்தான் போட முடியும். இப்படியும் அப்படியும் சாமான்களை நகர்த்துவதற்குக் கூட இடம் இருக்காது. இத்தகைய அறை ஒன்றுதான் அங்கிருந்தது; இது கீழ்புற வரிசையில் இருந்தது. சென்ற ஆண்டு மேல் புறவரிசையில் அரங்கசாமி அறைக்கு அருகிலுள்ள அறையில் தங்கியிருந்தேன். இரண்டாம் ஆண்டு

நான் தங்கியிருந்த அறையுள்ள வரிசையில் நான்கு காலியறைகளுக்கப்பாலுள்ள ஓர் அறையில் இரண்டு பேர் தங்கியிருந்தனர். அதில் ஒருவர் (பெயர் நினைவு இல்லை) ஏதோ ஒரு கம்பெனியில் வேலை பார்ப்பவர்; 'பொறியியல்' 'டிப்லமோ' படித்தவர். அவர் மைத்துனர் தேசியக் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் பயிலுபவர். ஒருநாள் நான் செய்து வைத்திருக்கும் கணிதக் குறிப்பேடுகளைப் பார்ப்பதற்காக இருவரும் வாங்கினார்கள். நானும் பத்து நாட்கள் அவற்றைத் திருப்பித் தருமாறு கேட்கவில்லை. பிறகு மிகச் சிரமப்பட்டு வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நான் தங்கியிருந்த மூன்று ரூபாய் அறையில் முன்பக்கம் சாளரம் இல்லை; பின்பக்கம்தான் இருந்தது. விடுமுறை நாட்களில் பகலில் உறங்கும்போதும், கணக்குகளைச் செய்யும்போதும் அறையின் கதவுகளை மூடித் தாளிட்டிருப்பேன்; அமைதி கலையக் கூடாதென்பதற்காக இந்த ஏற்பாடு. மேற்குறிப்பிட்ட இருவரும் சிறு சுருட்டு புகைப்பவர்கள். பாட்டுப் பாடி ஒலி எழுப்பிக் கலாட்டா செய்பவர்கள். நான் உழைப்பவனாதலால் பிறரிடம் அதிகம் பழகுவதில்லை. அக்காலத்தில் அதிகம் பழகினால் கை மாற்றுக் கேட்பார்கள்; திருப்பித் தரவும் மாட்டார்கள். அடிக்கடி அறைக்கு வந்து 'அரட்டை' அடிப்பார்கள். இவற்றைத் தவிர்ப்பதற்காகவே பிறரிடம் அதிகம் பழகுவதில்லை. அதுவும் அஞ்சல் நிலையத்தில் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பது தெரிந்தால் கைமாற்றுத் தொல்லைகள் மிகுதியாக இருக்கும். ஆண்டு செலவுக்குரிய ரூ. 500/= கணக்கில் இருக்கும், நான் அறையை எப்பொழுதும் மூடிக் கொண்டே இருப்பது அவர்கட்குப் பிடிக்கவில்லை. போகும் போதும் வரும்போதும் கதவுகளைத் தட்டிவிட்டுச் செல்வார்கள். கதவுகளில் எச்சில் துப்பிவிட்டுச் செல்வார்கள். சளியை அப்பிக் கதவுகளைத் தூய்மையற்றனவாகச் செய்து விடுவார்கள்.

இவற்றிற்கெல்லாம் காரணம் பொறாமைதான்; என் உழைப்பைக் கண்டும், காலாண்டு அரையாண்டுத் தேர்வுகளில் 70, 80 என்று பெறும் மதிப்பெண்களைக் கண்டும் பொறாமைப் படுவார்கள். நான் அறையைக் காலி செய்து கொண்டு வேறிடம் செல்வதெனத் தீர்மானித்து விட்டேன். நந்திகோவில் தெருவில் உள்ள மலபார் விடுதியில் முன்பணம் தந்து ஓர் அறையை ஒதுக்கிக்கொண்டேன். இது கல்லூரிக்கும் பக்கம். சிற்றுண்டி கொள்வதற்கு பெனின்சுலர் சிற்றுண்டி விடுதியும் அருகிலிருந்தது. ஆதிகுடி வேங்கட்டராம அய்யர் உணவு விடுதிக்குப்போவதை நிறுத்திக்கொண்டு அருகிலுள்ள சில சைவர்களின் விடுதிகளெல்லாம் முயன்று பார்த்தேன். எந்த விடுதி உணவும் என் சுவைக்கும் உடலுக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. ஆறு மாதம் எப்படியோ காலந் தள்ளினேன்.

காசியப்பா ராவுத்தர் ஸ்டோரில் தங்கியிருந்தபோது பெரிய கடை வீதியிலுள்ள ஒரு சிற்றுண்டி விடுதியில் மாலை மூன்று அல்லது நாலு மணிக்கு வழக்கமாகச் சிற்றுண்டி, கோகோ அல்லது ஓவல்டின் பானம் கொள்வேன். பெரும் பாலும் காஃபி அருந்துவதில்லை. நந்திகோயில் தெருவிற்கு வந்தபிறகு உணவுக்கும் சிற்றுண்டிக்கும் செல்லும் நடை குறைந்தது. நாளடைவில் உணவும் சரிப்பட்டு விட்டது. மிக நன்றாகப் படித்ததால் முதல் வகுப்பில் தேர்ச்சியும் பெற்றேன். கணிதம், வேதியியல், இயற்பியல், தமிழ் இவற்றில் 75 விழுக்காடுக்குமேல் பெற்றேன். கணிதத்தில் ஒரு தாளில் (பேராசிரியர் சீநிவாசன் கற்பித்த பகுதி) 100க்கு 100 பெற்றேன். 3 மணி நேர வினாத்தாளை $2\frac{1}{2}$ மணிக்கே முடிக்கவும் முடிந்தது.

# 37. அறைவாழ்வில் சில பழக்கங்கள்

பண நெருக்கடியால் என் கல்லூரி வாழ்க்கை மிக்க கஷ்ட நிலையில் சென்றது. விடுமுறையில் ஏதாவது சொத்துக்களை ஒன்றுக்குப் பாதிக்கும் குறைவாக விற்று ரூ 500/= சரிசெய்து கொள்வேன். பணத்தை பிறர் அறியாமல் அஞ்சல் நிலைய சேமிப்புக் கணக்கில் போட்டு வைத்துக் கொள்வேன். ஒவ்வொரு மாதம் முதல் நாள் அன்று உணவுக்கு, அறை வாடகைக்கு, சிற்றுண்டிக்கு, சில்லறைச் செலவுகளுக்கு எனக் கணக்கிட்டு ரூ 30/= கணக்கிலிருந்து எடுத்துக் கொள்வேன். இத்தொகையைக் கொண்டு அந்த மாதத்தைத் தள்ளவேண்டும். இப்படி மிகச் சிக்கனமாக வாழ வேண்டிய நிலை ஏற்படலாயிற்று.

காசியப்பா ராவுத்தர் ஸ்டோரில் வாழ்ந்தபோது ஆதிகுடி வேங்கடராம அய்யர் உணவு விடுதியில் (மேல் புல்வார்டு சாலையில் இருந்தது) உணவுக்காகச் செல்வேன். மாலையில் 6 மணிக்கே சென்று அந்தச் சாலையிலுள்ள வாசகசாலையில் நாளிதழ்களைப் புரட்டுவேன். காரைக்குடியி லிருந்து வெளிவந்த குமரன், விடுதலை (குறிப்பாக குத்தூசி குருசாமியின் கட்டுரைகள்) சுதேசமித்திரன், குடியரசு போன்றவற்றில் அரைமணிநேரமும்; இந்து, மெயில் என்ற ஆங்கில நாளிதழ்களில் அரைமணி நேரமும் செலவிடுவேன். ஒன்றரையாண்டுக் காலம் இவ்வாறு கழிந்தது. விடுமுறை நாட்களில் காலை 9-30 மணிக்குப் பகலுணவு கொள்ளச் செல்லும்போது அதே சாலையிலுள்ள மாவட்ட நூலகத்தில் சில நூல்களில் ஆழங்கால்படுவேன். திரு வி.க. எழுதிய 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை', 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்', 'தமிழ்த் தென்றல்' என்ற நூல்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. இவற்றால் அப்

பெருமானிடம் ஈடுபாடும் பக்தியும் வளர்த்துக் கொள்ள வழியாக இந்நூல்கள் அமைந்தன. மறைமலையடிகள் எழுதிய 'முற்காலப் புலவர்களும் பிற்காலப் புலவர்களும்' 'சிந்தனைக் கட்டுரைகள்', 'பண்டைக் காலத் தமிழரும் ஆசிரியரும்', 'குமுதவல்லி நாகநாட்டரசி', 'கோகிலாம்பாள் கடிதங்கள்', 'அறிவுக் கொத்து' போன்ற நூல்களில் ஆழங் கால்படுவேன். உ.வே.சாமிநாத அய்யரின் 'நான் கண்டதும் கேட்டதும்', 'பழையதும் புதியதும்', 'மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சரித்திரம்' ஆகிய நூல்களில் என் உள்ளம் மேய்ந்தது. இந்த நூல்களையெல்லாம் புதன், ஞாயிறு விடுமுறை நாட்களில் பகல் 10-12 மணிவரை படித்தே முடித்தேன். பேராசிரியர் ரா.பி சேதுப்பிள்ளையின் 'பன்னிரு கட்டுரைகள்', 'வீரமாநகர்' போன்ற உரைநடை நூல்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

நூலகங்கள் திருக்கோயில்கள் போன்றவை. கல்வெட்டு களில் இவை 'சரசுவதி பண்டாரம்' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளன. இவை கடந்தகால முனிவர்களின் கருத்துகள் நிரந்தரமாக வாழும் இடங்களாகும்; பண்டைக்காலப் பெரியோர்கள் கல்லறையில் அடங்கிக் கிடந்தாலும், தீயில் சாம்பலாகப் போனாலும், அவர்கள் நூல்களில் அடங்கிக் கிடந்து நம்மிடம் பேசுகின்றனர்; நமக்கு அறவுரைகள் தந்த வண்ணமுள்ளனர்; இந்த அறவுரைகள் அவர்தம் வாழ்க்கையி னின்றும் மலர்ந்தவை. இதனால்தான் "நூல்கள் கூடுவிட்டுக் கூடு பாய்தல் செயல்களை நிறைவேற்றுகின்றன; இவை இறவாமையின் குறியீடுகள்; சாவாமையின் அறிகுறிகள். மாண்டவர்கள்—மறைந்தவர்கள் சிதறிப் போயினர்; அவர் களை நாம் கண்டறிய முடியாது; ஆனால்; அவர்கள் நூல் களில் வாழ்கின்றனர்" என்று ஆங்கில அறிஞர் ஒருவர் கூறியுள்ளதை இந்த நூலகப் படிப்பில் பார்க்க முடிகின்றது.

நூலகங்கள் இலக்கியத்தின் பேழைகள். நாம் நல்ல நூல்களின் மூலம் மனத்திற்கேற்ற அணிகலன்களைப் பெறலாம். இங்கு நம் விடுப்பூக்கத்திற்கேற்ற விருந்துண்ணலாம்; வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக உள்ளவற்றையும் கண்டறியலாம். நூலகத்திலுள்ள பன்னூல்களைப் புரட்டும் போது இந்த நான்கு சுவர்களின் எல்லைக்குள் எழில் கொழிக்கும் காஷ்மீரத்தைக் காண்கின்றோம். கண்ணன் கன்று காலிகளை மேய்த்துக் வேய்ங்குழலூதி வேடிக்கையாகப் பொழுது போக்கின பிருந்தாவனத்தைக் காண முடிகின்றது. மைசூருக்கருகிலுள்ள இக்கால பிருந்தாவனமும் நம் கண்ணில் படுகின்றது. பண்டைய உலகின் இடிபாடுகளையும் மிகு புகழ் கொண்ட இன்றைய உலகின் பல பகுதிகளையும் பார்க்க வாய்ப்புகள் ஏற்படுகின்றன. சுருங்கச் சொன்னால் பண்டைய நாகரிகத்தையும் இன்றைய நாகரிகத்தையும் ஓரிடத்தில் ஒருங்கே காண முடிகின்றது. இவையெல்லாம் நூலகப் படிப்பில் நாம் பெறும் அறிவுச் செல்வமாகும்.

காசியப்ப ராவுத்தர் ஸ்டோர் வாழ்க்கையில் அருகிலிருந்த நகர்மன்ற (Town Hall) மைதானத்தில் சில பொதுக் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறும். அக்காலத்தில் பேச்சினால் என் மனத்தைக் கவர்ந்தவர்கள் கி.ஆ.பெ. விசுவநாதன், தந்தை பெரியார், ஈ.வெ.ரா. பட்டுக் கோட்டை அழகிரிசாமி, வல்லத்தரசு, ப. ஜீவானந்தம், நீலாவதி இராமசுப்பிரமணியம் ஆகியோர். ஒருமுறை குளித்தலையில் (நான் பள்ளியிறுதி வகுப்பில் இருந்த காலத்தில்) திரு.வி.க. பேச்சைக் கேட்டதுண்டு. (1934) தேசியக் கல்லூரியில் பேராசிரியர் சாரநாதன் முதல்வராக இருந்த காலத்தில் நீலாவதி அம்மையாரும் ஜீவானந்தமும் பேசிய புரட்சிகரமான இலக்கிய உரைகள் இன்னும் என் மனத்தில் ஒலிக்கின்றன. அக்காலத்தில் மிக்க புகழுடன் விளங்கிய மறைமலை அடிகள், ஞானியார் சுவாமிகள் இவர்

களைப் பார்க்கவும் பேச்சுகளைச் செவிமடுக்கவும் நான் நற்பேறு பெறவில்லை. சிற்றூரில் பிறந்து வளர்ந்து திருச்சி வரை எட்டிய எனக்கு எத்தனையோ வாய்ப்புகள் இல்லா தொழிந்தன.

திருச்சி மலைக்கோட்டையில் யானைக் கட்டித் தெருவில் கீழ்க்கோடியில் உள்ள சைவசித்தாந்த மகாசபையின் ஆதரவில் அடிக்கடி நிகழும் இலக்கியக் கூட்டங்களுக்குப் போவதுண்டு. இங்குப் பெருஞ்சொல் விளக்கனார் அ.மு. சரவண முதலியாரின் பெரிய புராண விளக்க உரைகள் என் மனத்தைக் கவர்ந்தன. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் இக்கூட்டத்தில் செவியமுதம் பருகுவதுண்டு. என் ஆசிரியப் பெருந்தகை பேராசிரியர் நடேச முதலியார் அவர்கள் பிஷப் ஹீபர் கல்லூரிக் கட்டடத்தில் (தெப்பக்குளத்திற்கருகி லுள்ளது) அடிக்கடிக் கூட்டும் சிறப்புச் சொற்பொழிவுகளைச் செவிமடுப்பதுண்டு. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் இவர்களின் பேருரை களைக் கேட்டு மகிழ்ந்துள்ளேன். ஆனால் இவர்களின் புலமை என்னை மிகவும் கவர்ந்தது. இந்த அநுபவம் எல்லாம் அறிவியலில் அதிக நாட்டம் கொண்டு பயின்ற என்னை பிற்காலத்தில் தமிழுக்கு ஈர்க்கும் விசைகளாகப் பயன் பட்டனபோலும் என்று என் மனம் நீள நினைந்து அசை போடுகின்றது. உள்மனத்திலும் ஆழ்மனத்திலும் நடைபெறும் போராட்டங்களை ஃபிராய்டு, யுங் போன்ற உளவியல் வல்லுநர்களே அளந்தறிய முடியும்.

மலபார் விடுதிக்கு மாறிய பிறகு எவராலும் எவ்விதத் தொந்தரவும் இல்லை. உணவுக்காக தொலைதூரம் நடக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. பொங்கல் திருநாளுக்குப் பிறகு தேர்வுக்காகப் பாடங்களைத் திருப்பும் பழக்கத்தை மேற்கொள்வேன். அப்படித் தொடங்கினால்

தான் ஆங்கிலம், தமிழ், கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களை ஓர் ஐந்து முறையாவது திருப்பிப் பார்ப்பதற்கு நேரம் கிடைக்கும். அதிகாலையில் 4.30 மணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு காலை நேரங்களில் ஆங்கிலம், தமிழ்ப் பாடங்களைத் திருப்புவேன். மாலையில் உணவு கொள்ளும் நேரம் தவிர இயற்பியல், வேதியியல் பாடங்களைத் திருப்புவேன். கணிதத்தில் ஏராளமான கணக்குகளைப் போட்டிருந்ததால் அவற்றையெல்லாம் திருப்புவதற்கு அதிகக் காலம் வேண்டியிருந்தது. இதனை மாலை நேரங்களில் வைத்துக் கொள்வேன்.

காவிரிக்கரையில் இருப்புப்பாதைப் பாலத்திற்கருகில் சாய்வான கல்-கட்டால் கட்டப் பெற்றுள்ள அமைதியான இடம் ஒன்று உண்டு. பொங்கலுக்குப் பிறகு காவிரியிலும் வெள்ளப் பெருக்கு குறைந்து தெளிவான நீர் தென்பகுதி யிலும் ஓடிக்கொண்டிருக்கும். மாலைக் கதிரவன் ஒளி அமைதியான அந்தக் கரைப்பகுதியில் வீசும். இந்தப் பகுதியில் தெளிந்த நீரோட்டமும், எதிர்க் கரையில் உள்ள அழகிய தோப்புகளும், இடைஇடையே பாலத்தில் இரயில் வண்டி ஓடும் காட்சியும் சூழ்நிலையின் அழகைப் பன்மடங்கு பெருக்கும். 'பாஞ்சாலி சபதத்தில்' பார்த்தன் பாஞ்சாலிக்குப் பரிதி எழிலைக் காட்டுவனவாக அமைந்த பாரதியின் பாடல்கள் நினைவுக்கு வரும். பார்த்தன் பேசுகின்றான்:

பாரடியோ! வானத்திற் புதுமை யெல்லாம்
பண்மொழீ! கணந்தோறும் மாறி மாறி
ஓரடிமற் றோரடியோ டொத்த லின்றி
உவகையுற நவநவமாய்த் தோன்றுங் காட்சி
யாரடிஇங் கிவைபோலப் புவியின் மீதே
எண்ணரிய பொருள்கொடுத்தும் இயற்ற வல்லார்!
சீரடியால் பழவேத முனிவர் போற்றுஞ்
செழுஞ்சோதி வனப்பையெலாம் சேரக் காண்பாய்.

கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்;
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்
கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ? ஆங்கே
கணந்தோறும் ஒரு புதிய வண்ணங் காட்டிக்
காளிபரா சக்திஅவள் களிக்கும் கோலம்
கணந்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்.

அடிவானத் தேஅங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்.
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி!
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே
மொய்குழலாய்! சுற்றுவதன் மொய்ம்பு காணாய்
வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்!

பார்த்தன் பாஞ்சாலிக்குக் காட்டின காட்சி இயற்கையன்னை எனக்குக் காட்டுவது போலிருக்கும். இந்த இடத்தில் அமர்ந்து கொண்டே கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பையும் கைபுனைந்தியற்றிய கவின்பெறு வனப்பையும் கண்டு களிக்கலாம். இந்தச் சூழ்நிலையில் மனம் விரிந்து காணப்படும். துணிப்பையில் கொண்டுவந்திருக்கும் கணிதக் குறிப்பேடுகளைப் புரட்டிச் செய்த கணக்குகளையெல்லாம் மறுபார்வையிட்டு வழிகளையும் முறைகளையும் மனத்தில் இருத்துவேன். இந்தச் சூழ்நிலையில் கணிதப்பாடம் மனத்திற்கு அற்றுபடியாகிவிடும். கணக்குப்பாடம் முடிந்த பிறகு இயற்பியல், வேதியியல் பாடங்களை நான் சேமித்து

7. பாஞ்சாலி சபதம்-(148-150)

வைத்திருந்த கோப்புகளை — மறுபார்வை இடுவேன். காவிரிக் கரையிலேயே இந்த மூன்று பாடங்களிலும் நல்ல தெளிவு பெறுவேன். சில சமயம் கவிதைப் பாடங்களையும் இவ்விடத்திற்குக் கொணர்ந்து திரும்புவேன். இதனால் இடைநிலை வகுப்புத் தேர்வுகளை மிகத் திருப்தியான முறையில் எழுத முடிந்தது.

**குமிழி — 38**

# 38. என் திருமண ஆண்டு நிகழ்ச்சிகள்

இடைநிலைத் தேர்வுகள் எழுதுவதற்கு ஓரிரு திங்களுக்கு முன்னதாக நாமக்கல் வட்டம் பொட்டணம் என்ற சிற்றூரிலிருந்து ஆ. பெ. இராமசாமி ரெட்டியார் இராமச்சந்திர ஆச்சாரி (விசுவகர்மா) என்ற இருவர் திருச்சியில் எப்படியோ விசாரித்துக் கொண்டு என் அறைக்கு வந்து என்னைச் சந்தித்தனர். இவர்கள் இருவரும் இணை பிரியா நண்பர்கள். முன்னவர் யார்? இவரைப் பற்றி இங்கு அறிமுகம் ஆக வேண்டியது இன்றியமையாதது. உறவு முறையாக இருந்தாலும் பல்லாண்டுகள் ஒருவருக்கொருவர் தொடர்பு அற்றிருந்தமையால் பெயர் முதலிய விவரங்கள் அறியக் கூடவில்லை.

மேற்குறிப்பிட்ட இராமசாமி ரெட்டியார் என் பாட்டியாரின் மூத்த சகோதரி நாகம்மாளின் மகள் வயிற்றுப். பேரர்; இவருக்குச் செல்லபாப்பா என்ற சகோதரி உண்டு இவரைவிடப் பதின்மூன்று வயது இளையவள். இவர் திருமணமானவர். (இவரது திருமணம் பற்றிய விவரங்கள் வேறொரு குமிழியில் பொருத்தமானஇடத்தில் வெளிவரும்). இராமசாமி ரெட்டியார் தன் சகோதரியை எனக்கு மணம் புரிவிக்க நினைத்துத் தன் நண்பர் ஆச்சாரியுடன் நான் தங்கி

யிருந்த இடத்தை விசாரித்துக் கொண்டு என்னைச் சந்தித்தார். பொட்டணத்தில் இராமசாமி ரெட்டியாரின் செல்வ நிலையின் விவரங்களை யான் அறியாவிடினும், அவர் பெரும் பணக்காரர் என்பதை நான் செவிவழிச் செய்தியாக அறிந்திருந்தேன் என் அன்னையார் இவர் குடும்பத்தைப். பற்றிச் சொன்னதும் ஒரு கதைபோல் நினைவிலிருந்தது இராமசாமி ரெட்டியாருக்கும் அவர்தம் சிறிய பாட்டியாரின் மகன் வயிற்றுப் பேரனாகிய என் குடும்ப நிலை பற்றி ஒரளவு நன்றாகவே அறிந்திருக்க முடியும். அதாவது எனது ஏழ்மை நிலையை அவர் ஒரளவு நன்றாகவே அறிந்திருப்பார். கல்லூரியில் படிக்கும் எனக்குச் சொத்து முதலியவை பற்றி ஒன்றும் தெரியாது என்பது உண்மையே. ஆனால் நாட்டுப் புறத்தில் வேறு வேலையின்றிச் செல்வச் செழிப்பில் திளைப் பவர்கட்குத் தம் நிலையும் நன்கு தெரியும்; பிறரது செல்வ நிலையையும் நன்கு அறிந்திருப்பர். அவர் என்னை நோக்கி வந்தது நான் படித்தவன், நன்றாகப் படிப்பவன், ஒழுக்க நிலை கெடாதவன் என்பதற்காகத்தான் என்பதை நன்கு அறிவேன்.

இராமசாமி ரெட்டியாருடன் வந்த இராமச்சந்திர ஆச்சாரிதான் இந்த நிகழ்ச்சியில் வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசினார்; இராமசாமிரெட்டியார் இடைஇடையே பேசுவார். நான் சொன்னேன்: ‘‘எனக்கு இன்னும் இரண்டாண்டுப் படிப்பு இருக்கின்றது. என்னுடைய பொருளாதார நெருக்கடியால் அப்படிப்பை எப்படி முற்று விப்பது? என்பதை நான் யோசித்துக் கொண்டிருக்கின்றேன். திருமணம் என் படிப்புக்குக் குந்தகமாகிவிட்டால் என்ன செய்வது? என்ற அச்சம் இப்போதே தோன்றத் தொடங்கி விட்டது. திருமணம் என்றால் செலவு வரும். அதை எப்படிச் சமாளிப்பது? என் பட்டப் படிப்புக்கு மட்டிலும் குறைந்தது ரூ 1000/= வேண்டும். இதை எப்படிச் சரிக்

கட்டுவது? என்ற யோசனையில் ஆழ்ந்து கிடக்கின்றேன். 'வறியவன் இளமைபோல் வாடிய சினைய வாய்க்' (கலி- 10) கிடக்கின்றேன். தவிர, இருபது வயதிலேயே சிற்றின்பத்தில் இறங்குவதும் சரியன்று. கல்வியில் நாட்டம் இல்லாது சிற்றூரில் உள்ள செல்வக் குமாரர்கட்கு இவ்வயதில் திருமணம் சரியாக இருக்கலாம். உயர்கல்வியில் நாட்டம் உள்ள எனக்குத் திருமணம் தகுமா? என்பது யோசித்து முடிவு எடுக்க வேண்டியதொன்று'' என்றேன்.

இராமச்சந்திர ஆச்சாரி சொன்னார்: ''திருமணம் படிக்க வேண்டும் என்ற உறுதியுடன் இருப்பவர்கட்கு இடையூறாக இராது. யோசியாமல் திருமணம் செய்து கொள்ளலாம். இது தவறான முடிவு ஆகாது'' என்று.

நான் சொன்னேன். ''வறுமையால் வாடுகின்றவனுக்கு, மேலே படிப்பதற்குப் பொருளைப்பற்றி யோசித்துக் கொண்டிருப்பவனுக்கு, திருமணத்திற்குப் பொருள் தேடச் சொல்லுகின்றீர்கள். தவிர, ரூ 1000/— இருந்தால்போதும் என்கின்றீர்கள். சேர்ந்தாற்போல் இத்தொகைக்கு எப்படி வழி செய்வது?'' என்று.

இராமசாமி செட்டியார் சொன்னார்: ''எப்படியாவது ரூ 1000/-க்கு வழி செய்து கொள்க. நான் ரூ. 3000/- வாங்கியிருப்பதாக என் பாட்டியிடம் சொல்லி விடுகின்றேன். என் பெற்றோர்களிடமும் அப்படியே தெரிவித்து விடுகின்றேன். படிப்பைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அதற்காகும் செலவை நான் பார்த்துக் கொள்கின்றேன். எங்களோடு ஒட்டிக் கொண்ட பிறகு இஃது எளிதான செயலாகி விடும்'' என்று. இராமச்சந்திர ஆச்சாரியும் இதற்கு ஒத்து ஊதினார்;

நான் ஒருவாறு ஒப்புதல் கொடுத்தேன். தேர்வு முடிந்து ஊருக்குச் சென்று என் அன்னையார் அநுமதியுடன் உறுதி

யளிப்பதாகச் சொல்லி அவர்கட்கு விடை கொடுத்தனுப்பி விட்டேன். தேர்வுகள் முடிந்தன; ஊர் திரும்பினேன். என் அன்னையாரிடம் இச்செய்தியை அறிவித்தேன். அவர்கள் சோதிடர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்; 'குருபலன்' இருந்தால் செயலில் இறங்கலாம் என்றார்கள். இஃது ஒரு விதத்தில் பச்சைக்கொடி காட்டியது போல் இருந்தது.

என் அன்னையாருக்குப் பிடித்த மூன்று சோதிடர்கள்: (1) வள்ளுவப் பண்டாரம்; (2) வேலூர் வாத்தியார்; (3) அங்கமுத்து ஆச்சாரி. இவர்கள் மூவரும் தனித்தனியாக என் பிறந்த நாள் குறிப்பை ஆய்ந்து 'குருபலன் உண்டு; திருமணம் நடைபெறும்' என்று ஒரே மனத்துடன் சொல்லி விட்டனர்; பெண்ணும் மேல் திசையில் சொந்தத்தில் இருப்ப தாகவும் கூறினர். இவர்கள் ஒருமித்துக் கூறிய கருத்து என் அன்னையாருக்கு உற்சாகம் அளித்தது. திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார்கள். ஆனால் பொட்டணத்திலிருந்து யாதொரு தகவலும் வரவில்லை. அங்குப் பெண்ணின் தாயார், தந்தையார், பாட்டியார் மூவர் ஒப்புதல் பெற வேண்டும். பெண்ணின் தமையனார் இதில் முக்கிய பங்கு ஏற்றாலும் அவர்கள் ஒருமித்து ஒப்புதல் தருவதற்கு மூன்று நான்கு மாதங்கள் ஆயிற்று. என்னால் காத்துக்கொண்டிருக்க முடியவில்லை. வழக்கப்படி ஜூன் திங்களில் கல்லூரியில் அறிவியல் இளங்கலைப்பட்டப் படிப்பில் சேர்வதென்று முடிவு செய்து விண்ணப்பமும் அனுப்பிவிட்டேன். வேதியியலை முதன்மைப் பாடமாகவும் இயற்பியல், கணிதம் இவற்றைத் துணைப் பாடங்களாகவும் படிப்பதென முடிவு கொண்டு விண்ணப்பத்தில் குறித்து அனுப்பிவிட்டேன்.

கல்லூரியில் சேரும்போது கட்டணங்களாகச் செலுத்து வதற்கும், பாட நூல்கள் வாங்குவதற்கும் ரூ 150/- வரை தேவைப்படும் தொகைக்கும் எப்படியோ வழி செய்து

கொண்டேன். ரூ 28/-க்கு ஒரு மிதிவண்டி வாங்கினேன். அரிசி கொடுத்துவிட்டு கீழச் சிந்தாமணியிலுள்ள 'நீராகார மடத்'தில் உண்பதாக ஒரு மூட்டை (60 படி) நல்ல அரிசியைத் தந்தேன். ஊரிலிருந்து இரட்டை மாட்டு வண்டியிலேயே என் தாயாருடன் அரிசி, எனக்கு வேண்டிய பெட்டி படுக்கை இவற்றுடன் வந்து சேர்ந்தேன். மடத்தில் தங்குவதற்கும் படிப்பதற்கும் சரியான அறை வசதி இல்லை. மேட்டுச் சிந்தாமணியில் ரூ 3/- மாத வாடகையில் ஓர் அறை அமர்த்திக் கொண்டு அதில் தங்கினேன்; அறைக்கு மின் விளக்கு இல்லை; மண்ணெண்ணெய் விளக்குதான் வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. நாள்தோறும் மாலையில் கண்ணாடியைத் துடைத்து விளக்கேற்ற வேண்டிய வேலை இருக்கும். காலையில் மேட்டுச் சிந்தாமணியிலிருந்து மிதி வண்டியில் கீழச் சிந்தாமணியிலுள்ள நீராகார மடத்தில் வந்து உணவு கொள்ளல், கல்லூரி செல்லல், பிறகு நண்பகலில் உணவுக்கு வருதல், மீண்டும் கல்லூரி திரும்புதல் என்று கடமைகளைத் திட்டமிட்டுக் கொண்டு கல்லூரியிலும் சேர்ந்து விட்டேன்.

ஒரு மாதம் சிந்தாமணி அறையிலிருந்து கொண்டு மேற் குறிப்பிட்டவாறு நடைமுறைப் படுத்திப் பார்த்ததில் சரி வரவில்லை; உடல்நிலை குன்றிவரும் நிலையில் மிதிவண்டிப் பயணம் (நாள்தோறும் ஐந்து மைல்) ஒத்துவரவில்லை. முதலில் இரத்தக் கடுப்பாகத் தோன்றி, நாளடைவில் விடாத வயிற்றோட்டமாக மாறியது. மிதிவண்டிப் பயணத்தைக் குறைத்துக் கொள்ள வானப்பட்டறைத் தெருவில் மூன்று ரூபாய் வாடகையில் ஓர் அறை அமர்த்திக் கொண்டேன். இந்தஅறை கல்லூரிக்கு மிக அருகிலிருந்தது. கீழே மிதிவண்டி வைத்துக் கொள்ளவும் வசதி இருந்தது. இந்த நிலையில் பொட்டணத்திலிருந்து திரு. இராமசாமி ரெட்டியாரும் திரு. இராமச்சந்திர ஆச்சாரியும் வந்து திருமணத்தை உறுதி

செய்தனர். என் ஒன்றுவிட்ட தமையனார் திரு. சதாசிவ ரெட்டியாருக்கு ரூ 1000/- ஏற்பாடு செய்து உதவுமாறு ஓர் உருக்கமான கடிதம் எழுதினேன். அவரும் என் எதிர்காலம் படிப்பதற்கு நன்கு அமையும் என்று எண்ணிப் பணத்தைத் தயார் செய்து பொட்டணத்தில் என் மாமனார் வீட்டில் செலுத்திவிட்டார்.

நானும் கல்லூரிக்குப் பத்து நாள் விடுமுறை போட்டு ஊர் வந்து சேர்ந்தேன். இப்போது உடல்நிலை மிகவும் சீர் குலைந்தது. திருமணம் நடைபெறுமா? என்ற ஐயம் கூட ஏற்பட்டு விட்டது. இந்த நிலையில் திருமண நாள் உறுதி செய்யப்பெற்றுத் திருமணமும் பொட்டணத்தில்(செப்டம்பர் 1936 என்பதாக நினைவு) நடைபெற்றது. மணவறையில் என் நிலையைக் கண்ட பலர் 'திருமணத்தைத் தள்ளி வைத்துக் கொண்டிருக்கலாமே' என்று கூட கருத்து தெரிவித்ததாகப் பின்னர் அறிந்தேன். ஓர் இரண்டு மணி நேரம் கூட உட்கார முடியாத நிலை. அடிக்கடி வயிற்றோட்டம் இருக்கும். திருமணம் முடிந்ததும் என் ஒன்றுவிட்ட சோதரர் நல்லப்ப ரெட்டியார் திண்ணையில் அமர்ந்து கொண்டேன்; எதிரிலுள்ள மாட்டுக் கொட்டகை அடிக்கடிப் போய் வரும் கழிப்பிடமாகப் பயன்பட்டது. அவரும் ஒரு பெரிய வாளியில் நீர் நிரப்பி ஒரு குவளையும் வைத்துவிட்டார். அடிக்கடி மாட்டுக் கொட்டகைக்குப் போய் வருவதன் காரணத்தைக் கண்ட ஊர்ப் பொதுமக்கள் என்னைக் கண்டு கழிவிரக்கம் கொண்டனர்.

ஊரிலுள்ள பலர் இராமசாமி ரெட்டியாரின் குடும்பத்தின்மீது பற்றும்பாசமும் கொண்டிராவிட்டாலும், அவர் தங்கை (என் மனைவி)யின் மீது அதிக பாசமும் பற்றும் கொண்டிருந்தனர். சிற்றூர்களில் மகளிர் ருதுவாகி இரண்டாண்டுகளுக்குள் திருமணமானால் பெற்றோர்கட்கும் மன

நிறைவு; ஊரார்கட்கும் மகிழ்ச்சி. இந்த நம்பிக்கை அக்காலத்தில் இருந்து வந்தது. இப்போது குறைந்து கொண்டே வருகின்றது. செல்வம் படைத்த வீட்டிலும் நடுத்தரக் குடும்பத்திலும் உள்ள மகளிர் உயர் கல்வி பெறுவதில் ஆர்வங்காட்டி வருவதால் இளங்கலைப் பட்டம் பெறும் வரையிலும் பெற்றோர்கள் திருமணத்தைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை இத்தகைய கல்விபெற வாய்ப்பில்லாத மகளிர்தாம் பதினைந்து அகவை நிரம்பாத நிலையிலும் திருமணத்தை முடித்து விடுகின்றனர். இத்தகைய மகளிர்க்கு அமையும் கணவன்மார்களும் அதிகம் படிக்காத, ஆனால் செல்வ நிலையில் சிறந்து விளங்கும், குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த ஆடவர்கள் படித்து உத்தியோகம் பார்க்கும் (அல்லது பார்க்கத் தகுதி பெற்ற) பெண்களையே விரும்புகின்றனர், இன்றைய நிலையில் இருவரும் சம்பாதித்தால்தான் குடும்பம் சரியான முறையில் நடக்கும் என்றும், பிள்ளைகட்கு நன்முறையில் கல்வி தர வாய்ப்பாக அமையும் என்றும் கருதுவது அறிவுடைமையாகும் என்று சிந்திக்க முடிகின்றது. இராமசாமி ரெட்டியார் தங்கை ருதுவாகி ஆறு ஆண்டுகள் கடந்தும் திருமணம் கூடாததுபற்றி ஊரார் கழிவிரக்கம் கொண்டிருந்ததை நேரில் அறிய முடிந்தது. இஃதெல்லாம் பார்ப்பனரல்லாத நடுத்தரக் குடும்பத்தினரைப் பற்றிய நிலை. பார்ப்பன வகுப்பினரைப்பற்றிய நடைமுறை வேறு; எண்ணமும் சிந்தனையும் வேறு. எந்நிலையிலும் வரதட்சிணையின்றி அவர்கள் திருமணம் நடைபெறுவதில்லை. இன்றைய நிலையில் பார்ப்பனரல்லாதவரும் வரதட்சிணையை வற்புறுத்துகின்றனர். இது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும்.

பொட்டணத்தில் நடைபெற்ற என் திருமணத்திற்கு கோட்டாத்தூரிலிருந்து ஒரு பேருந்து வைக்கப்பெற்றது. 40

பேர்கள்வரை அதில் போகலாம். நான் போவதற்கு ஒரு மகிழ்வுந்து ஏற்பாடு செய்யப்பெற்றது. கோட்டாத்தூரி லிருந்து என்னுடன் தொடக்க நிலையில் பள்ளியில் பயின்ற இளைஞர்கள் ஒருவரும் வரவில்லை; என் தம்பி கணபதி வந்திருந்தான். திருமணமாகாதவன். சிதம்பரம் (திருமண மானவன்) மனைவியுடன் வந்திருந்தான். ஆனால்! இளம் பருவத்தில் நான் பிறந்துவளர்ந்த பெரகம்பியிலிருந்து (என் தாயார் பிறப்பிடம்) என்னுடன் திண்ணைப்பள்ளியில் பயின்ற நாராயணன், இ. மு. துரைசாமி, போஜன், வீரம ரெட்டி என்ற நால்வர் வந்திருந்ததாக நினைவு. இவர்கள் மிதிவண்டிகளில் கோட்டாத்தூர் வந்தனர்; பேருந்தில் இடம் இல்லை. மிதிவண்டிகளிலேயே (வண்டிக்கு இருவராக) பொட்'-ணம் வந்து சேர்ந்தனர். வழி புதிது; வாராத ஊர். எப்படியோ சிரமப்பட்டு வந்து சேர்ந்தனர். பேருந்தில் இடம் ஒழித்துத் தராமை இன்றும் என் உள்ளத்தை வருத்துகின்றது. மிதி வண்டிகள் பழுதாகி, செப்பனிட்டுக் கொண்டு வந்து சேர்ந்ததை நினைக்கும்போது இந்த வருத்தம் மேலும் அதிகமாகின்றது.

திருமணம் முடியும் வரையில் வயிற்றைக் கலக்கவில்லை. ஒருவிதமாகச் சடங்குகளுடன் நிறைவு பெற்றது. இதை இப்போது நினைந்து எழுதும்போது ஞானசம்பந்தப் பெருமானது 'நல்லூர்த் திருமணம்' நினைவிற்கு வருகின்றது. பரத்தை நாடி நின்ற பெருமான் தன் மனைவியுடனும் திருமணம் காண வந்த யாவருடனும் சிவபெருமானின் தூயபெருஞ்சோதியிற் கலந்தனர். ஆனால் 'ஞானியார் மரபில்' வந்தஅடியேன் இகத்தை நாடிநின்றதால் அத்தகைய தெய்வ நிகழ்ச்சி ஒன்றும் நடைபெறவில்லை. என் பிராரப்தம் இன்னும் எதைஎதையோ நிறைவேற்றுவதாக இருந்தது என இப்போது சிந்திக்கின்றேன். பிறகு நல்லப்ப ரெட்டியார் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டேன். சோர்வுடன்

கிடந்த மாப்பிள்ளையை (என்னை) அங்குதான் ஊர் மக்கள் கண்டு என்னுடன் உரையாடி மகிழ்ந்தனர். விரைவில் நலம் பெற வாழ்த்தினர். திருமணத்தன்று 'இரவில் பட்டணப் பிரவேசம்' (திருவுலா) என்ற நிகழ்ச்சி இருந்தது. திறந்த மகிழ்வுந்தில் ஏறி நானும் என் மனைவியும் ஊர்த் தெருக் களில் வலம் வந்தோம். என் நிலையைத் திருமணத்தில் பார்க்க முடியாதவர்கள் கூடப் பார்ப்பதற்கு இது வாய்ப்பாக இருந்தது. காலுறை மேலுறை போட்டுக் கொண்டிருந்தேன். இரண்டு மணி நேரத்தில் வயிறு கலக்கினால் அதற் கேற்றவாறு ஆடையை மாற்றாதிருப்பதற் கேற்றவாறு ஆடைகளை உடுத்திக் கொண்டிருந்தேன். மறுநாள் எல்லோரும் பேருந்தில் திரும்பினர்; நானும் என் மனைவியும் கோட்டாத்தூர் வந்தோம் மகிழ்வுந்தில்; ஒரு வாரம் இருந்து திரும்பி விட்டோம் பொட்டணத்திற்கு. இந்த நிலையில் பெரகம்பியல் என் அம்மான் வீட்டில் பெண் - மாப்பிள்ளை கட்கு விருந்து. போய் வந்தோம். அந்த ஊரே என் உடல் நிலையைக் கண்டு கழிவிரக்கம், கொண்டது. நான் பிறந்து வளர்ந்த ஊரல்லவா ஓரிரு நாட்கள் கழித்து நான் மட்டிலும் கோட்டாத்தூர் திரும்பி விட்டேன். கல்லூரிக்கும் போக முடியாத நிலை; அந்த ஆண்டு படிப்பு நின்றது. நிலையை விவரித்துக் கல்லூரிக்குக் கடிதம் போட்டுவிட்டேன். உடலைத் தேற்றிக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தேன்.

முசிறியில் என்னுடன் பயின்று கல்லூரியிலும் என் வகுப்புத் தோழனாக இருந்த எஸ். அப்பாவும், திருவை யாற்றில் வித்துவான் வகுப்பில் பயின்று கொண்டிருந்த சி. முத்து நல்லப்பரெட்டியும் திருமணத்திற்கு வர முடியாமல் விடுமுறையில் (காலாண்டுத் தேர்வு விடுமுறை) என்னைப் பார்க்கப் பொட்டணம் வந்தனர். ஒருநாள் முழுவதும் தங்கி யிருந்தனர். அவர்களுடன் உரையாடி மகிழ்ச்சியுடன்

பொழுது போக்கினேன். இன்னும் ஒரு வாரத்தில் கோட்டாத்தூர் செல்வதாகவும் உடலைந் தேற்றிக் கொண்டுதான் பொட்டணம் திரும்ப வேண்டும் என்றும் அவர்களிடம் கூறினேன். அவர்களும் நைந்து போயிருந்த என் உடல் நிலையைக் கண்டு பரிதபித்தனர். உடலை நன்கு கவனித்துக் கொள்ளுமாறு சொல்லி விடை பெற்றுச் சென்றனர்.

அக்டோபர், நவம்பர் முடிய கோட்டாத்தூரில் தங்கி விட்டேன். மருந்து ஒன்றும் உட்கொள்ளவில்லை. உணவு முறையாலும், வலிமை தரும் மருந்தை (Tonic) உட்கொண்டதாலும் உடல் நிலையில் நலம் வளர்ந்தது. டிசம்பர் பதினைந்து தேதி வாக்கில் பொட்டணம் சென்று தங்கினேன். 'கல்யாணம் செய்தும் பிரமச்சாரி; கடன் வாங்கியும் பட்டினி' என்ற நிலை. என் உடல்நிலை கெட்டதால் இன்ப வாழ்வில் ஈடுபடாத நிலைக்குத் தள்ளப்பட்டேன். நல்ல நிலையில் உள்ள என் மனைவியின் மனநிலை? இன்னும் திருமணம் ஆகவில்லை என்று நினைத்துக் கொண்டு மனஅமைதி பெற வேண்டிய நிலையில் இருந்தாள். செப்டம்பரில் (1936) திருமணமாகி சனவரி (1937) இன்ப வாழ்வில் இறங்கும் வரையிலும் பொதுவிடத்தில் ஓரிரு சொற்கள் பகிர்ந்து கொண்டேனேயன்றி தனிமையாக இருந்து பேசும் வாய்ப்பையே தவிர்த்துக் கொண்டேன்.

சனவரியில் பொங்கல் விழா கழித்து நாமக்கல் நரசிம்ம சுவாமி தரிசனத்துக்கு ஏற்பாடு செய்யப்பெற்றது. ஒரு நன்னாளில் மாட்டு வண்டியில் குடும்பத்தில் உள்ள எல்லோரும் நாமக்கல்லுக்குச் சென்றோம்.

பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
வாயில்ஓர் ஆயிர நாமம்
ஒள்ளிய ஆகிப் போதஆங்கு அதனுக்கு
ஒன்றும்ஓர் பொறுப்பிலன் ஆகி,

பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்ப
பிறைஎயிற்று அனல்விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை[8]
குடைவரையில் நாமக்கல்லில் சேவித்தோம்.

திசைதிறந்து அண்டங் கீறிச்
சிரித்தது செங்கட் சீயம்[9]

என்ற கம்பன் காட்டும் நரசிங்கப் பெருமான் பிரகலாதனுக்குக் காட்சி அளித்ததுபோல் எங்கட்கும் காட்சி அளித்தான். நாங்கள் இரணியன் மனம் கொண்டவர்கள் அல்லவே. இரணியன் முன் நரசிங்கம் செய்த ஆரவாரத்தை மானசீகமாகக் கேட்டோம். பிரகலாதன் மனநிலையில் சேவித்தோம். நரசிங்க அவதாரச் சிறப்பில் ஆழங்கால் பட்டோம். மிக்க மனநிறைவுடன் வீடு திரும்பினோம். அன்றிரவோ அல்லது அடுத்த நாள் இரவோ எங்கள் இன்பவாழ்வு தொடங்கியது என்பதாக நினைவு. அப்போது வயது 21.

குமிழி—39

# 39. பொட்டண வாழ்வில் சில நிகழ்ச்சிகள்

இன்ப வாழ்வில் புகுந்த பின்னர் பெரும்பாலும் பொட்டணத்திலேயே தங்கி விட்டேன். என்னுடைய சுறுசுறுப்பான இயல்புக்குச் சிற்றூர் வாழ்க்கை ஒத்து வரவில்லை. படித்தவர்களே அந்த ஊரில் இல்லை. மாலை நேரத்தில் (4½-6½ வரை) திருக்குறள் படித்துப் பாடல்களை விளக்க வேண்டும் என்று என் மைத்துனர் விரும்பினார்.

8. பெரி திரு. 2.3 : 8
9. கம்ப. யுத்த. இரணியன்வதை. 127

இதற்குத் தேர்ந்து எடுத்த இடம் இராமச்சந்திர ஆசாரியின் பட்டறை; மிகச் சிறிய இடம். அந்த இடத்திலிருந்து கொண்டுதான் திருக்குறள் பாடம் சொன்னேன். அப்போது திருக்குறளில் அதிகப் பயிற்சியும் எனக்கில்லை. கோபால கிருஷ்ணமாச்சாரியாரின் விளக்கவுரையைத் துணையாகக் கொண்டு ஏதோ சொன்னேன் என்று வைத்துக் கொள்ளலாம் அந்தச் சின்ன இடத்திலிருந்து கொண்டு கேட்டவர்கள் என் மைத்துனர் இராசாமி ரெட்டியார், திரு. இராமச்சந்திர ஆச்சாரி, 'நடுத்தம்பி' என வழங்கும் இராசாமி உடையார். இவர்கள் மூவரிலும், நடுத்தம்பிதான் உன்னிப்பாகக் கேட்டார். இராமச்சந்திர ஆச்சாரியின் முகத்திலிருந்து சில கருத்துகள் தாம் அவர் உள்ளத்தில் பதிந்தன என்பதை அறிந்து கொண்டேன். என் மைத்துனர்தாம் ஆசையுடன் இத்திட்டத்தை அமைத்தவர். இடை இடையே அவர் உறக்கத்தில் ஆழ்ந்து விடுவார்; இடைஇடையே 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' அவரை எழுப்பி குறளமுதம் பருகச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இவர்கள் மூவரிலும் அதிகமாகப் பயனடைந்தது நான்தான். இப்போது,

அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.[10]

.......................... ..
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடநனி இகக்கும்[11]

---

10. நன்னூல்-45
11. ஷை-41

என்ற நன்னூல் நூற்பாக்கள் நினைவிற்கு வருகின்றன. நானோ கல்லூரி மாணாக்கன்; அறிந்து கொள்வதில் பேருக்கம் காட்டியவன். கேட்ட மூவரோ உலக அநுபவம் உள்ளவர்கள். நாங்கள் நால்வரும் வள்ளுவர் பெருமான் கருத்துகளை கோபால கிருஷ்ணமாசாரியார் விளக்க வுரையைத் துணையாகக் கொண்டு வள்ளுவரை அணுகினோம். என் நூலறிவு உலக அநுபவத்துடன் கலந்தது; நுண்ணறிவு வளரத் தொடங்கியது. சுமார் மூன்று மாதத்தில் திருக்குறள் பற்றிய கலந்துரையாடல் நிறைவு அடைந்தது. சனகாதி முனிவர் நிலையில் இருந்து வள்ளுவர் வாய் மொழியைக் கேட்டு மனநிறைவு கொண்டோம்; மன நெகிழ்ச்சியும் உற்றோம்.

நல்ல்ப ரெட்டியார் திண்ணைதான் எனது பொழுது போக்கிடமாக இருந்தது. நல்லப்ப ரெட்டியார் தொழில் 'சுகஜீவனம்', புன்செய் வேளாண்மை மானாவாரி விளைச்சல். அதிக வேலை இராது. அறுவடை காலத்தில் மிளகாய், செஞ்சோளம், நிலக்கடலை முதலியவற்றை நடை முறை விலைக்கு வாங்கிப் போடுவார். சுமார் ஐயாயிரம் வரை அந்தக் காலத்தில் புரட்டிக் கொண்டிருந்தார். மூன்று அல்லது நான்கு மாதத்தில் அவற்றை விற்பார். இரண்டாயிரம் வரை இலாபம் கிடைக்கும். எளிய வாழ்க்கை; இத்தகைய வருமானம் அவருக்குப் போதுமானதாக இருந்தது. தவிர லேவாதேவியில் ரூபாய் இரண்டாயிரம் வரை வட்டியாக வரும். படிப்பு அதிகம் இல்லை; பேச்சில் சதுரர். உலகியலை நன்கு அறிந்தவர். இவரால் உலகியல் பற்றிய எவ்வளவோ செய்திகளை அறிந்து கொள்ள முடிந்தது. இவர் திண்ணை ஒரு பி.டி.ஐ. (P.T.I) அலுவலகம் போல் செயற்பட்டு வந்தது. நாட்டு நடப்புகளில் ஏதேனும் புதுச்செய்திகள் இங்குக் கிடைக்கும்.

இந்தத் திண்ணையில் நிரந்தர உறுப்பினராக இருந்தவர் திரு. அருணகிரி ரெட்டியார்; முதியவர். ஒரே மகள்; குழந்தை இல்லை. கணவனுடன் பிணங்கிக் கொண்டு தந்தை வீடு வந்து அதனையே நிரந்தரமாக்கிக் கொண்டவள். தாயின் நிலையிலிருந்து கொண்டு தந்தைக்குப் பணிவிடை செய்து வந்தாள். ஏதோ குறைந்த வருவாயைக் கொண்டு 'சுக ஜீவனம்' நடத்தி வந்தார் மனைவியை இழந்த அருணகிரியார். உணவு கொள்ளும் நேரம் தவிர, பொழு தெல்லாம் திண்ணையிலேயே கிடப்பார். அடுத்து அதிகமாக வருபவர் கந்துக்கார அருணாசலம். கந்துவட்டியை வசூல் செய்ய அலையும் நேரம் தவிர மீதி நேரத்தை இங்குத்தான் கழிப்பார். இவர்களைத் தவிர முத்து ரெட்டியார் (பெரிய குண்டன்), இராசாமி ரெட்டியார் (சின்னகுண்டன்), சடை ரெட்டியாரின் இரு மக்கள், சில கவுண்டப் பெருமக்கள், உடையார் பெருமக்கள் இவர்களில் சிலர் வந்து வந்து சிறிது நேரம் இருந்து 'அரட்டை' அடித்து விட்டுத் திரும்புவர். நானும் உண்ட நேரம் போகப் பெரும்பாலும் திண்ணை யிலேயே காலம் கழிப்பேன். சனவரி (1937) முதல் ஜூன் வரை—கல்லூரியில் சேரும்வரை—பொட்டணத்தில்தான் என் நிரந்தர வாசம்.

என் மைத்துனர் இராமசாமி ரெட்டியார் கூட சில சமயம் இந்தச் 'சோம்பேறி மடத்தில்' (திண்ணையில்) வந்து உட்காருவார். அப்பொழுதெல்லாம் திரு. நல்லப்ப ரெட்டியார் (திண்ணைக்குரியவர்) அவருடன் 'கிண்டல் பேச்சு' பேசுவார்; எல்லோரையும் மகிழ வைப்பார். காரணம் என்னைப்போல் (நான் சிறிய பாட்டியின் மகன் வயிற்றுப் பேரன்) அவரும் (பெரிய பாட்டியின் மகன் வயிற்றுப் பேரன்) மாமன் - மைத்துனர் உறவு முறைக்காரர். என் மைத்துனர் நடுப்பாட்டியின் மகள் வயிற்றுப் பேரன்.

'உனக்கென்னப்பா, நீ சுகவாசி. நீ எதையும் பேசலாம். வேலை இல்லை. கையிருப்பைக் கொண்டு வாழ்கின்றாய். எல்லோரையும் சிரிக்க வைக்கின்றாய்' என்பார் என் மைத்துனர். என் மைத்துனர் நல்லப்ப ரெட்டியாரை 'மணியாரன் மகன்', 'பெரியான்' என்று செல்லமாக அழைப்பது வழக்கம்.

'உனக்கென்னப்பா. என் கையிருப்பைப் போல் இருபது மடங்கு உங்கள்வீட்டில் உள்ளது. தண்ட.வாளப் பெட்டியில் இரயில் டிக்கெட் அடைத்து வைத்திருப்பது போல் ஒரே நோட்டு மயம். பெரியபண்ணை. வண்டி வாகனம். தோட்டம் துரவுகள். ஆலாத்துடையாம்பட்டி யிலும் ஒரு பெரிய பண்ணை. அது காமதேனுவைப் போல் தவறாது கொடுத்து வருகின்றது. இவை யெல்லாம் போதாதென்று நீ நிற்க நேரம் இல்லாமல் அலைகின்றாய். ஆசை யாரை விட்டது? உன்னைப் போல் நான் இருந்தால் கால்மேல் கால் போட்டுக் கொண்டு இன்னும் சுகமாக இருப்பேன்' என்பார். இவர் என் மைத்துனரை 'இராமசாமி' என்று பெயரிட்டு அழைப்பார். இருவரும் ஒத்த வயதுடையவர்கள். படிப்பு ஐந்தாவது வகுப்பு கூடத் தாண்டாதவர்கள்.

நான் திருமணம் உறுதியான போது எதையும் பேச வில்லை. வரதட்சிணையைப்பற்றிப் பேச்சே இல்லை; வரதட்சிணை என்பது அக்காலத்தில் நான் கேள்விப்பட்டதே இல்லை. பெண்ணுக்குச் சீர் தரும் வழக்கம் இருந்து வந்தது. அதைக்கூட நான் கண்டு கொள்ளவில்லை. என் அன்னையாரும், இது பற்றி வாயைத் திறக்கவில்லை. 'ஏதோ பணக்காரர்கள்; வசதி படைத்தவர்கள். என் மகனின் எதிர்கால வாழ்க்கை சௌகர்யமாக இருக்கும்' என்று கற்பனையில் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம் என்று இப்போது நினைக்கத் தோன்றுகின்றது.

நல்லப்ப ரெட்டியார் சில சமயம் என்னிடம் பேசுவார்: "நீ என்னப்பா பணக்கார வீட்டு மாப்பிள்ளை. பத்தாயிரம் தருவதற்கு ரொக்கமாக வைத்திருக்கிறார்கள். 100 சவரன் நகைகள் செய்யப்பெற்றுத் தண்டவாளப் பெட்டியில் தூங்கு கின்றன. இன்றைய கையிருப்பு தண்டவாளப் பெட்டியில் எண்பதாயிரத்திற்குமேல் ரொக்கம் உள்ளது. இந்த அளவு பாண்டு, கொதுவைப் பத்திரங்கள்மேல் உள்ளது'' என்பார் 'ஆனால் இவையெல்லாம் கைக்கு வந்தபோதுதான் நிச்சயப் படும். பாட்டி நாகம்மாள் பணம் காத்த பூதம்போல் இருக்கின்றாள். எச்சில் கையால் கூடக் காக்கை யோட்ட மாட்டாள். 5, 10, 100 ரூபாய் நோட்டுகட்குக் கூட வேற்றுமை கண்டு அறியாதவள். பணம் குவிந்து கிடக் கின்றது. அந்த அம்மாள் உயிர் இருக்கும்வரை பணம் அப்படியே கிடக்கும். யாருக்கும் உதவாது' என்று பேச்சோடு பேச்சாக ஓட விடுவார்.

"என்னப்பா பேசாமலிருக்கின்றாய்? இவ்வளவு செல்வம் உனக்குவருகிறதென்ற மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றாயா? வாயைத் திறக்கமாட்டாய் போல் இருக்கிறது'' என்பார் மௌனமாகக் கேட்டுக் கொண்டு இருக்கும் என்னை நோக்கி, இந்த மாதிரி உரையாடல்களால் நான் என் மனைவிக்குரிய தொகை பத்தாயிரம் என்றும், 100 சவரன் நகைகள் உள்ளன என்றும் அறிந்து கொண்டேன். இந்த விவரங்களையெல்லாம் திருமணத்தை உறுதி செய்ய வந்தபோது என் மைத்துனரோ அல்லது இராமச்சந்திர ஆச்சாரியோ தெரிவிக்கவில்லை. "நீ வந்து எங்களோடு ஒட்டிக் கொள். பிறகு எல்லாச் சௌகர்யங் களும் தாமாக அமையும்'' என்று சொன்ன சொற்கள் மட்டிலும் என் நினைவில் இருந்தன.

திருமணமானபின் நான் அறிந்து கொண்டவை: என் மனைவிக்கென்று 100 சவரனுக்கு நகைகள் செய்து வைக்கப்

பெற்றுள்ளன. பத்தாயிரம் ரொக்கம் தரும் திட்டம் உள்ளது. இவை தவிர கட்டில், படுக்கை, மேசை, நாற்காலி பீரோ முதலியவையும் உண்டு. ஆனால் இந்தச் செய்தி என் மனத்தில் எந்தவித மகிழ்ச்சியையும் ஏற்படுத்தவில்லை. அப்போது என் கல்வியைப்பற்றிய எண்ணத்தைத் தவிர செல்வத்தைப் பற்றிய சிந்தனையே இல்லை. 'திருமணமாய் விட்டது; பொறுப்பு ஏறிவிட்டது' என்ற சிந்தனையே இல்லை. பள்ளிப் பிள்ளையாகவே இருந்தேன். இளங்கலை வரை இனி படிப்பு நன்றாக அமையும் என்ற மனநிறைவு மட்டிலும் என் மனத்தில் இருந்து வந்தது. இதற்குமேல் என் மனம் அலைபாயவில்லை. 'படித்தபின் ஏதாவது வேலை யில் அமர்ந்து விடலாம்' என்ற மனப்பாலை மட்டிலும் இனிமையாகப் பருகிக் கொண்டிருந்தேன். திருச்சி மாவட் டத்தில் அக்காலத்தில் ரெட்டியார் சமூகத்தில் மூன்று பட்டதாரிகளே இருந்தனர். மூவரும் சட்டம் படித்தவர்கள். இருவர் துறையூர் ஜமீந்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; தாயுடன் அரண்மனையைவிட்டு வெளியேறி ஜீவனாம்சம் வாங்கிக் கொண்டிருந்தவர்கள். மூன்றாமவர் அலங்கானத்து மிட்டாதார் பொன்னுசாமி ரெட்டியார். நான்காமவர் என் னுடன், எனக்கு முன்னர், பயின்று வரும் அரங்கசாமி ரெட்டி யார். நான் ஐந்தாவது பட்டதாரியாக வந்து கொண்டிருப் பவன். அந்தக் காலத்தில் ரெட்டியார் சமூகத்தில் ஒரு சில பணக்காரக் குடும்பங்களில் படிக்க முயன்று பள்ளியிறுதித் தேர்வுகளைத் தாண்ட மாட்டாமலிருந்தவர்கள் ஒரு சிலர்; இடைநிலை முதலாண்டுப் படிப்பைக் கூட முடிக்க முடியாத வர்கள் ஓரிருவர். இதற்குள் திருமணமாகித் தந்தை நிலையை எட்டி விடுவர். பெரும்பாலும் 'நான்', 'எனது' என்ற செருக் குடன் காட்சியளிப்பவர்கள். மமதையோடு விளங்குபவர்கள். திருமண நிகழ்ச்சிகட்குப் போகும்போது இரட்டை மாட்டு வண்டியில் வந்து இறங்குவதைப் பார்க்கலாம். எங்கோ

ஓரிருவர் மகிழ்வுந்து வைத்திருந்ததையும் காணலாம். அக்காலத்து மகிழ்வுந்து விலையே ரூ 1500/- தான்; பெட்ரோல் காலன் விலை பதினாலு அணாதான்; அதாவது இன்றைய நாணய மாற்றில் சொன்னால் 88 காசுதான்.

''உன் மனைவி திருமணத்திற்கு முன் '100 சவரன்; பத்தாயிரம் ரொக்கம்' என்று 'கன்யாசுல்கமாகச்' சொல்லி விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தார்கள். சில பணக்காரர்கள் வந்ததும் பெண்ணைப் பார்த்து விட்டு நிலைமையும் அறிந்து சென்றார்கள். ஒரு மிட்டாதாரர் கூட இரண்டாந்தாரமாகக் கேட்டுச் சென்றார். எல்லோருமே பாட்டியின் சொரூபத்தை அறிந்து கொண்டனர். திருமணத்தில் சபையில் பத்தாயிரம் ரொக்கத்தையும் 100 சவரன் நகைகளையும் பல்லோர் காண வைத்து அவற்றை அன்றே மாப்பிள்ளைவசம் சேர்த்துவிட வேண்டும் என்ற 'நிபந்தனை' போட்டனர். ஒரு மிட்டதார் மட்டிலும் 'நகைகள் தந்தால் போதும்; இருபதாயிரம் கடனாகக் கொடுத்தால் போதும்' என்ற நிபந்தனை போட்டார். பாட்டிக்கும் பெண்ணின் பெற்றோர்க்கும் இந்த நிபந்தனை பிடிக்கவில்லை. (அவர்கள் மனக்கருத்தை ஃபிராய்டு போன்ற உளவியலறிஞர்களாலும் அறிந்து கொள்ள முடியாது) என்று கூறும் அளவுக்கு அவர் தம் 'கல்மனத்தை' எல்லோரும் அறிந்து கொண்டனர். நீ ஏதோ சிறு பையன்; கள்ளம் கபடம் அறியாமல் ஒப்புக் கொண்டு விட்டாய். இது 'இலவுகாத்த கிளிபோல் ஆவாய்' என்று கூட என்னை நினைக்க வைக்கின்றது'' என்று கோடிட்டுக் காட்டியும் விட்டார். திரு நல்லப்ப ரெட்டியார்

'எனக்கு இப்போது எதைப் பற்றியும் சிந்தனை இல்லை; பட்டப்படிப்பு முடிந்தால் போதும்; இதைக் கருத்தில் கொண்டே திருமணத்திற்கு ஒப்புக் கொண்டேன்' என்றேன்.

நல்லப்ப ரெட்டியார் என்னைச் 'சுத்த அசடு' என்று எடை போட்டு விட்டார். 'உலகம் அறியாத அப்பாவி;

புத்தகப் பூச்சி' என்று மதிப்பீடு செய்து விட்டார். இதை அவர் பேச்சின்மூலம் குறிப்பாக அறிந்து கொள்ள முடிந்தது.

'உன் எண்ணம் சரிதான். போகப் போகத் தெரியும்' என்று ஒரு புதிர் போட்டு வாளா இருந்து விட்டார். இதற்கு மேல் ஒரு பள்ளிப் பையனைக் குழப்ப விரும்பவில்லை, உலகியலறிந்த அந்த உத்தமர். இந்தப் புதிர் அப்போது 'பிரம்ம சூத்திரம்' போல் இருந்தாலும் நாளடைவில் அஃது 'பாஷியம்' போல் விளக்கம் அடையும் என்பதை அப்போது என்னால் அறியக் கூடவில்லை. என்ன இருந்தாலும் பள்ளிப் பிள்ளைதானே. 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது' என்பதை நல்லப்ப ரெட்டியார் நன்கு அறிந்திருந்தார். நான் கற்பனையுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன்.

குமிழி—40

# 40. ஒரு புதிய தகவல்

இத் தகவலையும் மணியக்காரன் வீட்டுத்திண்ணையில் தான் அறிந்து கொண்டேன். ஒரே தொடர்ச்சியாக அறிந்து கொள்ளவில்லை; து ணு க் கு க ளா க த் தா ன் அறிந்து கொண்டேன். இடைஇடையே என் மைத்துனரே தந்த துணுக்குகளும் இவற்றுடன் சேர்ந்து கொண்டு தொடர்ச்சி யான ஒரு வரலாறு உருவாகின்றது இந்தக் குமிழியில். 1928-1929 ஆண்டில் என் மைத்துனரின் திருமணம் நடைபெற்றது. பெண் இராசாம்பாள் என்ற பெயருடையவள். ஒக்கரையி லிருந்து (துறையூர் ஆத்தூர் சாலையில் வேங்கடாசல புரத்திற்கு ஒரு கல் தெற்கே மேற்கு நோக்கிப் பிரியும் 2-3 ஃபர்லாங் நீளமுள்ள ஒரு சிறு சாலை இணைக்கும் ஒரு சிற்றூர்) எருமைப்பட்டிக்குத் தன் மாமனார் வீட்டிலேயே குடியேறிய சாம்பசிவ ரெட்டியாரின் முதல் மனைவியின்

மூலம் பெற்ற பெண்; முதல் மனைவி இறந்த பிறகு இரண்டாவது மனைவியாக அவள் தங்கையையே திருமணம் செய்து கொண்டவர்; இந்த அம்மையார் மூலம் ஒரே ஒரு மகன் உண்டு; பெயர் சுந்தரராசன்; என் வயதையுடையவர். இவர் அப்பொழுது திருமணம் ஆகாதவராக இருந்தார்;

இராமசாமி ரெட்டியாருக்குத் திருமணம் ஆகி ஏழாண்டுகள் வரை மக்கட்பேறு இல்லை. இக்குறையை இரு குடும்பத்தாரும் உணர்ந்தனர்; அந்தக் காலத்தில் (ஏன் இந்தக் காலத்தில் கூடத்தான்) செல்வர்கள் குடும்பத்தில் பிறந்த ஆடவருக்குத் திருமணமாகி பல ஆண்டுகள் மக்கட்பேறு இல்லாதிருந்தால் செல்வச் செழிப்பின் இறுமாப்பால், பிள்ளையில்லாக் குறையை மனைவியின்மீது ஒரு பழியாகச் சுமத்தி இரண்டாந்தாரமாக வேறொரு பெண்ணை மணந்து கொள்ளும் வழக்கம் நடைமுறையிலிருந்து வந்தது. சில இடங்களில் முதல் மனைவியின் தங்கையொருத்தி வயதுக்கு வந்தவளாக இருந்து அவளையே இரண்டாந்தாரமாக மணந்து கொள்ளும் வழக்கமும் இருந்தது. இதனால் குடும்பத்தில் கிளைக்கும் சச்சரவுகள் இல்லாதொழியும் அல்லது குறையும். எது இருந்தாலும் இல்லாவிடினும் நீதி மன்றத்தில் தொடுக்கப்பெறும் வழக்காவது இல்லாதொழியும்.

சாம்பசிவ ரெட்டியார் திருமணம் புரிந்து கொண்ட குடும்பம் சின்னப் பண்ணையார் வீடு என்பது. இந்தக் குடும்பத்தில் தைலம்மாள் என்றவருக்கு மூன்று பெண்கள்; இரண்டு பெண்களைச் சாம்பசிவ ரெட்டியாரே மணந்து கொண்டார். மூன்றாவது பெண்ணை இலங்கையில் தேயிலைத் தோட்டத்தில் கணக்கப்பிள்ளை வேலை பார்த்த (பனைமரத்துப்பட்டியைச் சேர்ந்தவர்) ஒருவருக்கு வாழ்க்கைப்படுத்தினர். என் திருமணம் நடைபெற்ற ஒரு

மாதத்திற்கு முன்னர்தான் இத்திருமணம் நடைபெற்றது. என் மைத்துனருக்குப் பிள்ளையில்லாத குறை சாம்பசிவ ரெட்டியார் குடும்பத்திற்கு ஒரு திகிலை உண்டாக்கி விட்டது; தன் மருமகன் பிள்ளையில்லாத குறையைத் தம் மகள்மீது போட்டு வேறொரு பெண்ணை இரண்டாந்தாரமாக மணந்து கொள்ளக்கூடும் என்ற அச்சம் நாளடைவில் வளரத் தொடங்கியது. இதனால்தம் மருமகனின் தங்கையை (என் மனைவியை) தம் மகன் சுந்தரராஜுலுக்குத் திருமணம் முடித்துக்கொண்டால் எந்தவிதப் பிரச்சினையும் எழாதிருக்க வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணினார் போலும்! குடும்பத்தில் அனைவருடனும் கலந்து பேசியபின் இந்த எண்ணம் சரி என்றே அனைவரும் ஒருமனதாக ஒப்புக் கொண்ட முடிவாயிற்று. சாதாரணமாக எல்லாக் குடும்பங்களிலும் இத்தகைய நிலை ஏற்படும்போது எடுக்கப்படும் இயல்பான முடிவேயாகும் இது. நாளடைவில் இது ஒரு சதித் திட்டமாக வளரத் தொடங்கியது. இதற்கு வேறொரு நிகழ்ச்சி வித்திடக் காரணமாக இருந்தது. இது இறுதியாக என் மைத்துனர் தம் மனைவியையே 'தள்ளுபடி' செய்வதற்கும் காரணமாயிற்று. என் திருமணத்தின்போது கூட என் மைத்துனரின் மனைவி ஏழாண்டுகள் கழித்து ஏழு மாத கர்ப்பமாகவும் இருந்தாள். என் திருமணத்திற்கும் அவள் பெற்றோர் அனைவரும் வந்திருந்தனர்.

'வேறொரு நிகழ்ச்சி' என்று மேலே குறிப்பிட்டேன் அல்லவா? அஃது என்ன? என் மைத்துனரின் திருமணம் ஆகி நாலாண்டுகள் கழிந்ததும் அவர் மனைவிக்கு சாமியோ (பேயோ) பிடித்துக் கொண்டது. அடிக்கடி மருள் வருமாம். அந்த மருள்படி ஏதேதோ வாசகங்கள் வெளிப்படும். அவற்றின்படி குடும்பத்தினர் செயற்படுவார்கள். என் மைத்துனரிடம் மூன்று குறைகள் இயல்பாகவே காணப்பெற்றன (1) தீவிரமான கடவுள் பக்தி (2) அளவுக்கு மீறிய சோதிடப்

பைத்தியம் (3) எதையும் ஆராயாமல் நம்புவது. இந்த மூன்றுமே அவர்தம் வாழ்க்கையைப் பாதித்தன. தவிர, குடும்பத்திலும் எந்த விஷயத்திலும் அதிகப் பொறுப்பு தரப் பெறவில்லை பண விஷயம் என்றால் சொல்ல வேண்டிய தில்லை. செல்வக் குடும்பத்தில் ஒரே மகனாகப் பிறந்தும் எந்தவிதப் பொறுப்பும் தரப்பெறாமல் இருந்தது அவர் மனத்தை அதிகமாகப் பாதித்து விட்டது. உளவியல் அடிப்படையில் ஆய்ந்தால் இவ்வுண்மை உறுதிப்படும். இவரைப்பற்றிய செய்திகள் அடுத்த குமிழியில் வெளிவரும்.

மனைவிக்கு சாமி பிடித்துக் கொண்டதாகத் தெரிந்ததும் இதில் அவர் அதிக அக்கறையுடன் செயற்பட்டார். என்று நல்லப்ப ரெட்டியார். சொன்னார். எருமைப்பட்டிப் பக்கத்தி லுள்ள ஒரு மரத்தடிக் கறுப்பண்ணசாமி வந்து சில சமயம் ஆட்டும். இராசாம்பாள் தலைவிரி கோலமாக ஆடுவாளாம். அதிகமாகக் கலாட்டா செய்யாமல் அடக்கமாகத்தான் ஆடு வாளாம். கண்ணைப் பயங்கரமாக விழித்து, ''பிள்ளைகளே, என் கோயிலுக்கு வரவேண்டும்; எனக்குப் பூசை போட வேண்டும்; அப்போதுதான் உங்கள் குறையைத் தீர்த்து வைப்பேன்'' என்று கறுப்பண்ணசாமி பேசுவாராம். கடவுள் பக்தி உள்ள என் மைத்துனருக்கு இஃது அதிகமாக மனத்தைக் கவர்ந்தது. குழந்தைப் பேறு இல்லாத குறையைத்தான் இப்படிச் சுவாமி தன் மனைவி மீது ஆவேசித்துப் பேசுகின் றார் என்று நினைத்து அதை நிறைவேற்றுவதற்கு எருமைப் பட்டிக்குக் குடும்பத்துடன் மாட்டு வண்டியில் செல்வாராம். ஏதோ தவறாக நினைத்துக் கொண்டு மாமனார் வீட்டை எட்டிப் பார்க்காதிருந்தவருக்கு இப்போது மாமனார் வீட்டுக்குச் ''சுவாமியின் அருளால்'' போக வேண்டி நேர்ந்தது. சாம்பசிவரெட்டியார் குடும்பம் தம் மருமகனைத் தம் வீட்டிற்கு அடிக்கடி வரவழைப்பதற்கு இஃது ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டது. ஆங்கிலமே படிக்காத அந்தப்

பெண், உருது(துலுக்கு) பேசத் தெரியாத அந்தப் பெண்' உருதுபேசுவதும் அனைவரையும் வியக்க வைத்ததாம். பேய் ஏறி இருக்குமோ என்றுகூட, ஐயப்பட்டார்களாம். படிப்பே இல்லாத குடும்பம்; மூடப்பழக்கங்களுக்கு அடிமைப்பட்டனர். ஒவ்வொருவர் சிந்தனையும் ஒவ்வொரு விதமாகச் செயற் பட்டு வீட்டில் ஒரே குழப்ப நிலையும் ஏற்பட்டது. இந்த நடைமுறைத் திறன் (Strategy) என் மைத்துனர் குடும்பம் இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து விடுவார்கள் என்பதற்குத் தற்காலிகமாக அணை போட்டது; தடையும் விதித்தது போலாயிற்று.

இப்படிச் சுவாமி ஆடுவது அடிக்கடி நிகழ்வது ஏதோ ஒரு சமயம் என நிகழ்ந்தது. இந்தக் காலத்தில் பொட்டணத்தில் தம் பெண்ணுக்குத் திருமணத்தை விரைவில் முடித்துவிட வேண்டும் என்று தீவிரமாக முயற்சி எடுத்தார்களாம். பணக்காரர் வீடுகளுக்குச் சொல்லி அனுப்பினார்களாம். யார் யாரோ வந்து பார்த்தார்களாம். முக்கியமானவர்கள் யாராவது பெண் பார்க்க வருங்கால், அஃது ஒருகால் முடியும் திருமணம் என்பது தெரிந்தால், அப்போது கறுப்பண்ணசுவாமி இராசாம்பாள்மீது ஆவேசித்து நிற்பாராம். ஓர் ஆறு மாதத்திற்குள் இரண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக நல்லப்ப ரெட்டியார்மூலம் அறிந்தேன்.

ஒன்று : யாரோ ஒரு செல்வர் வீட்டிலிருந்து பெண் பார்க்க இரட்டை மாட்டு வில்வண்டியில் வந்திறங்கினர். உள் வீட்டில் திருமணத்திற்காக ஏழெட்டு மண்குடங்களில் (எள், மணிலா செக்கு போட்டு) எண்ணெய் நிரப்பி வைத் திருந்தனர். அன்றுதான் சுவாமி ஆவேசம் வந்துவிட்டது. கண்விழி பிதுங்கும் நிலையில் உருத்துப் பார்த்துத் தலைவிரி கோலமாக சுவாமி ஆடத் தொடங்கினாள். "வீட்டிற்குள் ஒரு சோதனை ஏற்பட்டுள்ளது. உள்ளே சென்று பாருங்கள்"

என்பது ஆவேசப் பேச்சு எல்லா எண்ணெய்க் குடங்களும் உடைபட்டு வீடெல்லாம் எண்ணெய் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. பெண் பார்க்க வந்தவர்கள் உணவு உண்டு செய்தி அனுப்பினதாகப் போனவர்கள் திரும்பி வரவில்லை. 'சகுனம் சரியில்லை' என்று நின்றனர்.

**இரண்டு :** இன்னொரு நாள் ஒரு செல்வர் குடும்பம் பெண் பார்க்க வந்தது. பெண்ணைப் பார்த்தனர். பகல் விருந்து உண்டு பேசிக் கொண்டிருந்த பொழுது 'சுவாமி ஆவேசம்' வந்து விட்டது, இராசாம்மாளுக்கு. தலைவிரி கோலமாக ஆடத்தொடங்கினாள். ''இன்று ஒரு புதிய சோதனை வந்துள்ளது. புழக்கடையில் கறிவேப்பிலை மரத்தடியில் சென்று பாருங்கள்'' என்ற ஆவேசப் பேச்சு தொடங்கியது. புழக்கடையில் சென்று பார்த்தபோது நீராடு வதற்குக் களைந்து வெளுப்பதற்காக ஒதுக்கி வைக்கப் பெற்றிருந்த நாலைந்து பட்டுச் சேலைக்குள் கொள்ளிக் கட்டை செருகப்பெற்று ஆடைகள் தீப்பற்றி எரிந்து கொண் டிருந்தன. பெண் பார்த்துச் சென்றவர்கள் 'இஃது ஒரு பெரிய அபசகுனம்' என்று நினைத்துத் திரும்பி வரவே இல்லை. இப்படி இரண்டு முறை திருமணம் பேசுவதில் தடை ஏற்பட்டு விட்டது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் என் மைத்துனரைச் சிந்திக்க வைத்தது. ஆதி முதல் நடைபெற்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் சந்தேகக் கண் கொண்டு பின்னோக்கிப் பார்க்கத் தொடங்கினார். 'சுவாமி ஏறியதே ஒரு சூது' என்று முடிவிற்கும் வந்தார். இதனால் மனைவியை வெறுக்கத் தொடங்கினார். அடிக்கடி எருமைப் பட்டியிலிருந்து வண்டி வரும் மகளைக் கூட்டிச்செல்வதற்கு. 'இவர் போகக் கூடாது' என்று தடைபோடுவார். 'வண்டியில் ஏறு' என்று தந்தையின் கட்டளையாக இருக்கும். 'வண்டியில் ஏறாதே' என்பது

கணவனின் கட்டளையாக இருக்கும். 'என் வார்த்தையை மீறிச் சென்றால், திரும்பி வாராத நிலை ஏற்பட்டு விடும்' என்பது கணவனின் எச்சரிக்கையாகவும் இருக்கும். பாவம், பிழைக்கத் தெரியாத பெண். தந்தையின் கட்டளையையே பின்பற்றிச் செல்வாள். இது 'வினாச காலத்திற்கு விபரீத புத்தியாக இருப்பதை' அப்போது அப்பெண் அறியாவிடினும் காலமெல்லாம் அழுத முகத்துடன் இருந்து வருவதைப் பின்னராவது நினைந்து வருந்தி இருக்கவேண்டும்.

என் திருமணம் நிறைவேறி சின்னாட்களுள் ஏழாவது மாத கருப்பத்துடன் இருக்கும் இராசாம்பாளை கருவுயிர்ப் பதற்குக் கூட்டிச் சென்று விட்டனர். என் மைத்துனரும் நன் மனத்துடன் அனுப்பி வைக்கவில்லை. "இதுதான் இறுதிப் பயணம். இனி அவள் திரும்பி வரக் கூடாது. அப்படிச் சேயோடு திரும்பி வரினும் இல்லத்தினுள் நுழைய அனுமதியேன்" என்று சொல்லி அனுப்பிவிட்டார். தம் தாய் தந்தையரிடமும் அவளைக் கூட்டி வருவதற்கு யாதொரு ஏற்பாடும் செய்தல் கூடாது என்று சற்றுக் கடுமை யாகவே சொல்லி விட்டார். "தம்முடைய தங்கையின் மணம் தடைப்படுவதற்கு எவ்வளவோ இன்னாச் செயல்கள் செய்து விட்டாள்; எப்படியாவது அவளைத் தன் தம்பிக்குக் கட்டி வைப்பதற்கு இவ்வளவு கொடுமைகளும் இழைத்தாள் பாவி" என்று தன் மனைவியின்மீது சொல்லொணாத அருவருப்புக் கொண்டு விட்டார் என் மைத்துனர் என்று பலர் பலவாறாகப் பேசிக் கொண்டதைப் பொட்டணத்தில் நான் தங்கியிருந்தபோது என் காதால் கேட்க முடிந்தது.

'கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது' என்ற முதுமொழி எவ்வளவு அநுபவத்திற்குப் பின் எழுந்திருக்க வேண்டும்? மக்கள் படும் இன்னல்கட்கெல்லாம் ஆசைதான் காரணம்

என்ற பேருண்மையைப் புத்தர் பெருமான் பல்வேறு இடர்ப்பாடுகளைக் கடந்து எத்தனை யாண்டுகள் கழித்துக் கண்டறிந்தார்? இதனை இப்போது எத்துணைப் பேர் உணர்கின்றார்கள்? எது எப்படியாயினும் அறிவுடைய ஒரு பெண் அறிவுடையவனைத் தன் மணாளனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அங்ஙனம் தேர்ந்தெடுத்துக் கொண்டபின் இவற்றை உணர்ந்து தெளியவேண்டும். ''மணப்பருவம் எய்திய நங்கை தான் பிறந்தவிடத்தில் பெறும் இன்பமே பெரிதென்று கருதி மகிழ்ந்திருப்பாளாயின், அவள் வாழ்க்கை நிறைவுடையதாகாது. பெற்றோரது அன்பும், உடன் பிறந்தாரது துணையும், உறவினரின் ஆதரவும் மிக விரும்பக் கூடியவையாயினும், இவற்றிலேயே மூழ்கிக் கிடந்து வாழ்நாளைக் கழிப்பது பொதுவாகப் பெண்மைக்கு அழகன்று. பிறந்தவிடம் கடக்கும் நாளன்றோ? அவள் மகளாய்ப் பிறந்ததன் நோக்கம் கைகூடும் நாள்! ஒரு மகள் பிறிதொரு வீட்டில் மருமகளாகுந்துணையும் அவள் பிறந்து வளர்ந்த நோக்கம் நிறைவேறுவதில்லை.

தாய்தந்தையரின் அன்பு சாலுமாயின் மணம் என்பது ஒரு மகளுக்கு வேண்டுவதில்லை. பிறந்த இடத்தினும் பெரிய இடம் இல்லை எனத் துணிந்தவள், தன்னை மறப்பதும் இல்லை; தலைவனை அறிவதும் இல்லை. இங்ஙனமே பிறந்த இடத்தின் பற்றில் சிக்கி, பெரிய இடம் போகும் வகை அறியாது உயிர்கள் ஒடுங்கி இருக்கின்றன. பிறவித் தொடர்பை அறுக்கும் ஆற்றலுடைய காதலைப் புகட்டும் ஓர் உயர் மகன் தோன்றும் அளவும், தாய்தந்தையரின் செல்வத்தையும் அன்பையும் காட்டிலும் இனிய தொன்றில்லை என்று மயங்கி இருக்கும் மகளைப்போல், இறைவன் அருள் காணும் அளவும் உலக இன்பத்தில் உயிர் ஆழ்ந்து கிடக்கும். உயிர்கள் எல்லாம் இறைவனிடமிருந்து தோன்றுவன ஆதலால், அவற்றிற்கு இளமையிலேயே

அவனைப் பற்றிய உணர்ச்சி இயல்பாகவே உண்டு. ஆனால் நாளாவட்டத்தில் பிற பற்றுகள் வளர்ந்து அதை அடக்கி ஒடுக்குகின்றன. காதலாகிய பெரும் பற்று வந்து மங்கையின் அகத்தை நிரப்பிப் பிறந்த இடத்தில் இருந்தவளை ஈர்த்துப் பிறஇடம் சேர்க்கும் திறத்தை ஒரு மங்கை உணர்ந்து தெளிதல் வேண்டும். 'குலமகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்'[12] என்ற பேருண்மையை உணர்ந்தால் கற்புடைய பெண் அடிக்கடி தன் தாய்வீடு போக எண்ணாள். இத்தகைய உண்மைகளை அறியாத பெண்டிர் நன்மகளிர் ஆகார்; காலமெல்லாம் கவலையில் ஆழ்ந்து கிடக்கும் நிலை அவர்களை வந்தடையும்.

குமிழி-41

## 41. ஒரு பழைய நிகழ்ச்சி

**1925-26** என்று நினைக்கின்றேன். நான் கோட்டாத்தூரில் தொடக்கநிலைப் பள்ளியில் பயின்று வந்த காலம் அது. அக்காலத்தில் திரு. இராமசாமி ரெட்டியாரும், ஆலத்துடையாம் பட்டி எனக்கு அண்ணன் முறையிலுள்ள இன்னொரு இராமசாமி ரெட்டியாரு கோட்டாத்தூருக்கு வந்து போனதாக நினைவு, முதலில் குறிப்பிட்ட இராமசாமி ரெட்டியார் பொட்டணம் 'நாமக்கல் வட்டம்' கிராமத்தைச் சேர்ந்தவர்; இவருக்கு ஆலத்துடையாம் பட்டியில் (துறையூர் வட்டம்) நல்ல வளமான நஞ்செய் நிலங்கள் இருந்தன. எங்கு மழை பெய்தாலும் பெய்யாவிட்டிலும் கொல்லி மலையில் மழை பெய்து ஆலத்துடையாம் பட்டியிலுள்ள இரண்டு ஏரிகளும் நிரம்பி விடும். நிலங்கள் இருபோகம்

12. வெற்றி வேற்கை-12

விளைபவை; குத்தகைக்கு விட்டிருந்தனர். ஆண்டொன்றுக்கு 125 மூட்டை நெல் வந்து விடும். இந்த நிலங்களைப் பார்க்க வந்தவர், அவ்வூரிலுள்ள இன்னொரு இராமசாமி ரெட்டியாரை இட்டுக் கொண்டு கோட்டாத்தூர் வந்தார். உறவினர்களைப் பார்த்து அறிந்து கொள்ளவேண்டும என்று

அப்போது இராமசாமி ரெட்டியார் சுமார் 25 அகவை நிறைந்த இளைஞர்; கரிய திருமேனி. பார்ப்பதற்கு தமிழ் நாட்டிலுள்ள ஒரு கோமுட்டிச் செட்டியாரைப்போல் தோற்றம் அளிப்பார். காதில் வெள்ளைக்கல் கடுக்கன்; வலது கைவிரலில் மோதிரமும், மணிக்கட்டில் டாலர் தொங்கும் தங்கச் சங்கிலியும் திகழ்ந்தன. திருமணப் பேச்சு நடந்து வருவதாக உடன் வந்த இன்னொரு இராமசாமி ரெட்டியார் தெரிவித்தார். பொட்டணத்திலும் நன்செயும் புன்செயுமாக 20 ஏக்கர் நிலங்கள் இருந்தன. கையில் ரொக்கம் ஒரு இலட்சம் இருப்பதாகப் பேசிக் கொண்டார் கள். இவ்வளவு செல்வம் இருந்தும் 25 வயது நிரம்பிய இளைஞருக்கு பண்ணை நிர்வாகத்தில் பொறுப்பு தரப்பெற வில்லை. பெற்றோர்கட்கு விவேகம் போதாது. தாயைப் பெற்ற பாட்டி நாகம்மாள் பணம் காத்துவரும் பூதமாகத் திகழ்ந்தாள். சிக்கனமான குடும்பம் என்று சொல்ல முடியாது; கஞ்சத்தனம் நிரம்பிய குடும்பம் என்று சொல்லி வைக்கலாம்.

ஏதோ ஒரு பெண்ணைத் திருமணத்தை உறுதி செய்தார் கள் பெற்றோர்கள். அக்காலத்தில்கூட திருமண ஏற்பாட்டில் பணமும் மணமகள் கொண்டுவரும் சீர்வரிசைகளும்தான் (இதனை வரதட்சிணை என்று சொல்வதற்கில்லை) திருமணத்தை உறுதி செய்யும் இன்றியமையாத கூறுகளாக இருந்தன. அக்காலத்தில் திருமண விஷயத்தில் மணமக னுக்கோ மணமகளுக்கோ எந்தவித சுதந்திரமும் இல்லை.

பெற்றோர்கள் உறுதி செய்தபடி இவர்தம் இசைவு பெறாமலேயே திருமணங்கள் நடைபெற்று வந்தன. ஆனால் இராமசாமி ரெட்டியார்த் தமக்கு உறுதி செய்யப்பெற்ற மணப்பெண்ணை விரும்பவில்லை. ஏன் விரும்பவில்லை என்பது எவருக்கும் தெரியாத புதிராவே இருந்தது. பெண் தான் பிடிக்கவில்லை போலும் என்றுதான் பெரும்பாலோர் கருதினர். இராமசாமிரெட்டியார் ஐந்து வகுப்பு வரையிலும் தான் படித்தவர். அவ்வளவு செல்வமிருந்தும் குடும்பத்தில் ஒரே ஓர் ஆண்பிள்ளையாக இருந்தும் பெற்றோர்கள் இவர் கல்வியில் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை. இராமசாமி ரெட்டியாருக்கும் மேற்படிப்பு படிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றாதிருந்தது வியப்பாகத்தான் இருந்தது. இவர் சராசரி அறிவுடைய இளைஞர்தான். படிக்கும் எண்ணம் தோன்றாதிருந்தது இவருக்கு இத்திசையில் ஊழ் இல்லை போலும்.

திருமணத்தை எப்படியும் பெற்றோர்கள் நடத்தியே தீர்வார்கள் என்ற அச்சம் தோன்றிவிட்டது. ரூ 1000/=ஐ வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டார். தன்னைத் தேட வேண்டாம் என்று ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு இல்லத்தைத் துறந்தார். பணம் கையிலிருக்கும்வரை மனம் போனபடி பல இடங்களில் சுற்றித் திரிந்தார். 'மனம்போன போக்கு எல்லாம் போக வேண்டாம்' என்ற உலகநாத பண்டிதரின் வாக்கைக் கற்றாரோ கற்கவில்லையோ என்பது தெரியாது. அப்படிக் கற்றிருந்தாலும் அக்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி, எந்தச் சிறுவனுக்காகிலும், இத்தகைய நீதிவாக்கியங்களின் தத்துவத்தைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுமா?

கையிலுள்ள பணம் தீரும்வரை சுற்றியலைந்துவிட்டு இறுதியில் திருப்பதி போய்ச் சேர்ந்தார். திருப்பதியில்

எங்கோ ஒரு குகையில் தங்கி விட்டார். கோகர்ப்பம், ஆகாய· கங்கை, பாதாள கங்கை (பாபவிநாசம்) என்ற திருமலையி லுள்ள மூன்றிடங்களுக்குத்தான் திருத்தலப் பயணிகள் போய்வருவதுண்டு. அக்காலத்தில் திருமலைக்குப் போவதற்கு பேருந்துகள் வசதிகள் இல்லை. நடராஜா சர்வீசை நம்பித் தான் செல்லவேண்டும். நான் திருப்பதியில் பணியாற்றிய போது (1960-1977) இந்த இடங்களைப் பார்த்திருக்கின்றேன் இந்த மூன்று இடங்களில் ஒரு சில 'சாதுக்களைப்' பார்த்திருக் கிறேன். இராமசாமி ரெட்டியார் வரலாற்றைச் சிந்திக்கும் போது இவர் ஆகாய கங்கையிலோ கோகர்ப்பத்திலோ சாதுக்களோடு தங்கியிருக்க வேண்டும் என்று ஊகித்தேன்.

ஒரே பையன் மறைந்ததைக் கண்டு பெற்றோர்கள் கவலைப்பட்டிருக்க வேண்டும். பணம் காத்த பூதமாக இருந்த பாட்டி நாகம்மாளுக்கும் கவலை தோன்றியிருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து நாலா பக்கமும் தேட ஏற்பாடு செய்தார்கள். பையன் ஒருவர் கண்ணுக்கும் தென்படவில்லை. இல்லம் விரிச்சோடி இருந்தது. எல்லோரும் கவலையில் ஆழ்ந்திருந்தனர்.

கையில்பணம் தீரும் வரையில் சுற்றித்திரிந்தவர், இந்தச் சாதுக்களோடு தங்கியிருந்தவர், உணவின்றிப் பல நாள் கிடந்தார். உடல் மிகவும் இளைத்துவிட்டது. தம் கதையைச் சாதுக்களிடம் சொல்லியிருக்க வேண்டும். இது எப்படியோ திருமலையில் கைங்கரியம் புரிந்து வந்த அந்தணர் ஒருவருக்கு எட்டியது. அவர் இவரைச் சந்தித்து இவர் வரலாறு முழுவதையும், குடும்ப நிலையையும், இவர் வீட்டைவிட்டு வெளியேறிய காரணத்தையும் தெரிந்து கொண்டார். முகவரியைத் தெரிந்து கொண்டு விவரமாகக் கடிதம் போட்டார். கடிதம் கண்டதும் பெற்றோர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். திருப்பதி சென்று பையனை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டனர்.

ஓரிரண்டு ஆண்டுகள் கழித்து இராமசாமி ரெட்டியாருக்குத் திருமணம் நடைபெற்றது. இராமசாம்பாள் என்ற பெண்ணை மணந்து கொண்டார். இந்தத் திருமணம் 1928 வாக்கில் நடைபெற்றதாக நினைவு. அப்போது நான் கோட்டத்தூரில் தொடக்கநிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். என் அன்னையார் வேறோர் உறவினரான அம்மையாருடன் என்னையும் இட்டுக் கொண்டு இத் திருமணத்திற்கு சென்றதையும், திருமணத்தில் எனக்கு ஒரு சிறு சரிகை வேட்டியும் சரிகைத் துண்டும் தந்ததையும் நினைவு கூர்கின்றேன். சட்டைபோடும் வழக்கம் இல்லாத தால் சட்டை வாங்கித் தரவில்லை.

இந்தத் திருமணத்திற்கு வந்தபோது நான் மிகச் சிறியவன், பத்து ஆண்டுகள் கழித்து இந்த வீட்டில் இராமசாமி ரெட்டியாரின் 'மருதனைய தங்கையை' மணந்து கொள்வேன் என்பது ஒருவர் நினைவிலும் எழவில்லை. தொல்காப்பியர் குறிப்பிடும் 'பாலது ஆணை'யை ஒருவரும் அறியவில்லை. பிற்காலத்தில் நான் தமிழன்னையால் ஆட்கொள்ளப் பெறுவேன் என்பதுதான் யாருக்குத் தெரிந்தது? திருமணம் முடிந்து ஓரிரு நாட்களில் ஊர் திரும்பியது நினைவிற்கு வருகின்றது.

இக்காலத்தில்தான் என்னிடம் மேல் படிப்பு படிக்க வேண்டும் என்ற துடிப்பு எழுந்தது. வழி தெரியாமல் திகைத்தேன். முசிறியில் உயர்நிலைப்பள்ளியில் சேர முயன்றேன்; [ஆகஸ்டு-1930] சேரமுடியாமல் துறையூர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளியில் எட்டாம் வகுப்பில் சேர்ந்து படித்தேன்; வகுப்பையும் கடந்தேன்.

இப்போது சிறிது விவரம் அறிந்த பருவம். இந்தக் கோடை விடுமுறையில் பழைய பாளையத்திலிருந்து (நாமக்கல் அருகிலுள்ள ஒரு சிற்றூர்) ஒரு பெரியவர்

(எனக்குத் தாத்தா முறையிலிருந்தவர்) கோட்டத்தூர் வந்தார். ஒரு சில நாள் தங்கியிருந்தார். அவர் சொன்னார்: ''நீ சிறு பையன். நின் தாய்வழி உறவு நன்றாக இல்லை; அறுந்தே போய்விட்ட நிலை, நின் தந்தைவழி உறவும் அறுந்த நிலையில்தான் உள்ளது. நின் தந்தை அற்பாயுளில் மறைந்ததால் (27-அகவை) இந்நிலை ஏற்பட்டது. உன் உறவினர்கள் நாமக்கல் வட்டத்தில் பவுத்திரம், நாவலடிப் பட்டி, பழையபாளையம், முத்துக்காப்பட்டி, பொட்டணம் ஆகிய இடங்களில் உள்ளனர். அவர்களையெல்லாம் தெரிந்து கொள்ளலாம் வா. உனக்கும் விடுமுறையாதலால் என்னுடன் வரலாம்'' என்று சொல்லிக் கூட்டிக் கொண்டு சென்றார்.

முதலில் பழையபாளையம் சென்றேன். பேருந்து வசதி இருந்தது. கோட்டத்தூரிலிருந்து துறையூர் வரை (7-கல் தொலைவு) நடராஜாசர்வீஸ்தான். துறையூரிலிருந்து நாமக்கல் செல்லும் பேருந்தில் ஏறி 'பிரிவுரோடு' என்னும் இடத்தில் இறங்கினோம். இரண்டுகல் தொலைவு போடி நாய்க்கன்பட்டி வழியாக நடந்து பழையபாளையத்தை அடைந்தோம். இரண்டு நாட்கள் அங்குத் தங்கினேன். அங்குத் தாத்தாவின் மகன் (எனக்கு மாமன்முறை), மகள் (சிற்றன்னை முறை) இவர்களையெல்லாம் அறிமுகம் செய்து வைத்தார். இக்குடும்பங்களிளெல்லாம் ஏழ்மை தவழ்ந்த நிலை. இரண்டு நாட்களுக்குப் பிறகு நான்கு கல் தொலைவிலுள்ள முத்துக்காப்பட்டிக்கு இட்டுச் சென்றார்; நடராஜா சர்வீஸ்தான்! அங்கு இராமசாமி ரெட்டியார் வீட்டிற்கு இட்டுச் சென்றார். (இவர் பொட்டணத்திலிருந்து வந்தவராதலால் பொட்டணம் இராமசாமி ரெட்டியார் என்று வழங்கப்பட்டவர்). இவர் எனக்குப் பெரியப்பா முறை. பொட்டணத்தில் உள்ள மூன்று பாட்டிமார்களில் முதல் பாட்டியின் முதல் மகள்; இரண்டாவது மகன் சிலுவம்

பட்டியில் (நாமக்கல் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர்) திருமணம் செய்து கொண்டு மகப்பேறு இன்றி பொட்டணத்தில் வாழ்ந்தார். அவர் தம் தமையன் இராமசாமி ரெட்டியாரின் முதல்தாரத்தின் மகன் நல்லப்ப ரெட்டியாரைத் தத்து எடுத்துக் கொண்டு பொட்டணத்தில் தங்கியிருந்தார். ஊர் மணியம் அவரிடம் இருந்தது. பொட்டணம் இராமசாமி ரெட்டியார் முதல் மனைவி இறக்கவே, முத்துக்காப்பட்டியில் இரண்டாம் தாரமாக ஒரு பெண்ணை மணந்து கொண்டு அங்கேயே வாழ்ந்து வந்தார். நல்ல வசதியுடன் வாழ்ந்து வந்தார். இவருக்கு மூன்று ஆண் களும் ஒரு பெண்ணுமாக மக்கட் செல்வத்தையுடையவர். நால்வரில் எனக்கு மூத்தவர் ஒருவர்; ஏனைய மூவரும் எனக்கு இளையவர்கள்.

இங்குத்தான் ஒரு வாரம் தங்கி விட்டேன். தாத்தா என்னை இங்கு விட்டுவிட்டு ஒரு வாரத்தில் வருவதாகத் தம்மூர் சென்று விட்டார். இங்கும் இவர் தம் மக்களைக் கல்வியறிவில்லாமல் செய்துவிட்டார். எல்லோரும் உள்ளூரில் ஐந்து வகுப்புகளை முடித்துக் கொண்டவர்கள். இவர்கள் யாவரும் விளையாட்டுத் தோழர்களாக இருந்தமையால் பொழுதுபோவதே தெரியவில்லை. காலையிலும் மாலை யிலும் வயலுக்கு இட்டுச் செல்வார்கள். அருகிலுள்ள மிட்டாதாருக்குச் சொந்தமான நிலங்களைக் காட்டுவார்கள். அவை நல்ல வளத்துடன் திகழ்ந்ததைக் கண்டேன். கொல்லிமலை அடிவாரமாதலால் முல்லையும் குறிஞ்சியும் இணைந்து வளத்துடன் திகழ்ந்ததைக் கண்டு மகிழ்ந்தேன்.

பொட்டணம் இராமசாமி ரெட்டியார் என்மீது அளவற்ற அன்பு காட்டினார். காரணம், நான் அவரது சிற்றன்னையின் பேரன்; அதாவது மூன்றாவது பாட்டியின் மகன்; ஞானி நல்லப்ப ரெட்டியாரின் (என் தந்தை) மகன்.

என் தந்தை அற்பாயுளில் இறந்துவிட்டமையை நினைத்து தம் மக்களிடம் காட்டிய பற்றையும் பாசத்தையும் விட அதிகமாகவே அவற்றை என்னிடம் காட்டினார். இவர் இரவெல்லாம் இருமிக் கொண்டிருப்பார்; இஃது ஒருவித தீராத இளைப்புநோயாக இவரிடம் பற்றிக்கொண்டிருந்தது. இரவு பத்து மணிக்குக் கூட பனைவெல்லம் காஃபி அருந்துவார். தூங்கிக் கொண்டிருக்கும் என்னை எழுப்பி எனக்கும் ஒரு கப் தருவார். மறுத்தாலும், வற்புறுத்தி அருந்தச் செய்வார். ''தந்தையை மிகச் சிறு வயதிலேயே இழந்தும், உற்சாகமாகப் படித்து வருகிறாய். இன்னும் எவ்வளவோ கல்வி உனக்கு வரவேண்டியிருப்பதை நான் கற்பனையில் காண்கின்றேன்'' என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் விடுவார். அப்போதெல்லாம் என் தந்தையின் நினைவு வரும்; அவர் பார்த்துப் பரிவுடனும் பாசத்துடனும் பழக முடியாமல் மறைந்தவர்; இவரோ அவற்றையெல்லாம் எனக்குக் காட்டி மகிழ்பவர்; என்னையும் மகிழச் செய்பவர்.

முத்துக்காப்பட்டியில் நான் தங்கியிருந்த காலத்தில் இரண்டு கல் தொலைவிலுள்ள சேந்தமங்கலம் என்ற ஊரில் அவதூது சுவாமிகளால் நிறுவப்பெற்ற தத்தாத்ரேயர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு விழா நடைபெற்றது. என் உடன் பிறவாச் சகோதரர்களுடன் விழாவைக் கண்டு களித்தேன். அப்போது பொட்டணம் இராமசாமி ரெட்டியாரும் (பின்னால் எனக்கு மைத்துனராக வேண்டியவர்) தன் மனைவி இராசாம்பாளுடனும் தங்கை செல்லபாப்பாவுடனும் விழாவுக்கு வந்திருந்தார். நானும் செல்லப்பாப்பாவும் கணவனும் மனைவியுமாவோம் என்று நாங்கள் கனவிலும் நினைக்கவில்லை. என் மைத்துனரும் கூடக் கருதியிருக்க மாட்டார். முத்துக்காப்பட்டியிலுள்ள என் பெரியப்பா குடும்பத்தின் சிந்தையிலும் இஃது இடம் பெற்றிருக்கமுடியாது. திருவிழா முடிந்ததும் முத்துக்காப்பட்டி

திரும்பினோம். என் மைத்துனர் பொட்டணத்திற்கு வரும்படி என்னை அழைத்தார். ஒன்றிரண்டு நாட்களில் பழையபாளையம் தாத்தாவுடன் வருவதாகச் சொல்லி விட்டேன்.

ஒன்றிரண்டு நாட்கள் கழித்து என் பெரியப்பாவிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு பழையபாளையம் தாத்தாவுடன் பொட்டணம் சென்றேன். இரண்டு மூன்று நாட்கள் தங்கினதாக நினைவு. நல்ல உபசாரம் இருந்தது. நடுப்பாட்டி நாகம்மாள் கூட என்னிடம் பாசத்துடன் பழகி னார்கள். தம் தங்கையின் பேரன் அல்லவா? நானும் என் அத்தைமகள் செல்லபாப்பாவும் எந்தவித உணர்வுமின்றி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். பேச்சு ஒன்றுமில்லை. அவளுக்குப் படிப்பு நின்றுவிட்டது என்பதை மட்டிலும் அறிந்து கொண்டேன்.

பொட்டணத்திலிருந்து விடைபெற்றுப் பழையபாளை யம் தாத்தாவுடன் பவித்திரத்திற்கு வந்தேன். முத்தியாலு ரெட்டியார் என்ற பெரியவர் எனக்கு மாமா முறை வேண்டும். அவர் மகன் கிருஷ்ணசாமி ரெட்டியார். அவருடைய முதல்தாரத்து மகன் தந்தையை விட்டுப் பிரிந்து தாத்தாவுடன் வசித்து வந்தான். முதல் தாரத்துப் பெண் பிள்ளையையும் தன் அண்ணனுடன் சேர்ந்து வசித்து வந்தாள். கிருஷ்ணசாமி ரெட்டியார் தம் இரண்டாம் மனைவியுடன் வசித்து வந்தார். இருவரின் உறவு கீரி — பாம்பு உறவு போன்றிருந்தது. இவர்கட்கு ஒரு பெண் பிள்ளை இருந்தது. அக்குழந்தை தன் பாட்டி வீட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். கிருஷ்ணசாமி ரெட்டியார் வீட்டில் தங்கியிருந்தபோது என் சட்டைப் பையிலிருந்த பணப்பையிலிருந்து ரூ. 7½ எப்படியோ மறைந்தது. ஊர் திரும்புவதற்குப் பணம் வேண்டுமே. ஆதலால் காதோடு

காதாக இதைக் கிருஷ்ணசாமி ரெட்டியாரிடம் சொன்னேன். அவர் விசாரிப்பதாகத் தெரிவித்தார். நான் சற்று வெளியிலிருந்தபோது கணவன் மனைவியரிடையே நடைபெற்ற வாக்குவாதம் என் செவியில் விழுந்தது. ஆனால் மாலையில் மறைந்த பணம் பையில் காணப்பட்டது. கிருஷ்ணசாமி ரெட்டியார் காரணம் கேட்க வேண்டாம் என்று 144 போட்டார்; மௌனமானேன். பாகவதர் கிருஷ்ணசாமி ரெட்டியாரின் (முத்தையாலு ரெட்டியாரின் மருமகன்) தொடர்பும் ஏற்பட்டது.

கூண்டுக் கிளிபோல் சிற்றூரில் அடைந்து கிடந்த எனக்கு இவ்வாறு (15-25) நாட்கள் வெளிச் சென்றது மிகப் பயன் விளைவிப்பதாக இருந்தது. அந்தச் சின்ன வயதில் உலக நடப்பை ஓரளவு புரிந்து கொள்ளவும் முடிந்தது. உறவினர்களின் குடும்ப நிலையைப் புரிந்து கொள்ள முடிந்தது. என் அன்னையார் அடிக்கடிச் சொல்லிக் கொண்டிருந்த ஒரு செய்தி உறுதிப்பட்டது. என் தந்தையார் அற்ப ஆயுளையுடையவர் என்று சோதிடர் சொல்ல (அப்படியே அற்ப ஆயுளுடன் 27-அகவையில் இறந்தார்; அப்போது எனக்கு 3 வயது கூட நிரம்பவில்லை) என் பாட்டியார் (இரண்டாந்தாரமாக என் தாத்தாவுக்கு வாழ்க்கைப்பட்டவர்) கணவனை இழந்துவிட்ட நிலையிலுள்ளவர் தம் பேரிலுள்ள நிலங்களையெல்லாம் விற்று சுமார் ரூ 3000/= பொட்டணத்திலுள்ள தம் தமக்கை நாகம்மாளிடம் கொடுத்து விட்டதாகவும், நான் வளர்ந்த பிறகு (தலையெடுத்த பிறகு) என்னிடம் (வட்டியுடன்) சேர்ப்பிக்கும்படிச் சொன்னதாகவும் என் அன்னையார் மூலம் அறிந்திருந்தேன். அப்படிக் கொடுக்காவிட்டால் என் அன்னையார் நிலத்தை விற்றுப் பெரகம்பியில் தம் அண்ணனிடம் தந்து விடுவார் என்றும், என் தாய் மாமன் ஒரு கால் அதை ஏப்பம் விட்டாலும் விடக்கூடும் என்று ஐயப்பட்டதாகவும், அதனால் அப்பணம்

பாதுகாப்பாக இருக்கும்பொருட்டுத் தம் தமக்கையாரிடம் பணத்தைப் பெருக்கி வரும்படிக்கொடுத்ததாகவும் சொல்லக் கேட்டேன். இந்தச் செய்தியை என் கோடை விடுமுறைச் சுற்றுலாவின்போது எல்லா உறவினர்கள் மூலமும் அறிந்தேன்.

என் தந்தையார் இறந்ததும் மாமியார் தன்னை ஐயுற்றுச் சொத்தினை விற்றுப் பணமாகத் தம் தமக்கையிடம் கொடுத்து வைத்திருப்பதை அறிந்த என் அன்னையார் பொட்டணம் சென்று தம் மாமியார் தந்த தொகையைத் தம்மிடம் சேர்ப்பிக்கும்படி வற்புறுத்தியதாகவும், அவர்கள் 'பையன் தலையெடுக்கட்டும்; தந்து விடுகின்றோம்' என்று சொன்னதாகவும் உறவினர்கள் அனைவருமே ஒரு மனத்துடன் சொன்னார்கள். என் அன்னையாரும் 'பையன் தலையுடன்தான் இருக்கின்றான்; இப்போதே கொடுக்கலாம்' என்று கிண்டலாகச் சொன்னதாகவும் இதற்கெல்லாம் பொட்டணத்தார் அசையவில்லை என்றும் விவரமாகச் சொன்னார்கள். ஆனால் என் அன்னையார் சில உறவினர்களைப் பொட்டணத்திற்கு இட்டுச் சென்று எங்கள் பணம் ரூபாய் 3000/=ம் நாகம்மாளிடம் இருப்பதை உறுதிப்படுத்தினார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் தகவலினால் யான் அறிந்த உண்மை:

தன்ஆ யுதமும் தன்கைப் பொருளும்
பிறன்கையில் கொடுக்கும் பேதையும் பதரே.[13]

என்ற அதிவீரராம பாண்டியரின் வாக்கின் உண்மை அந்தச் சிறு வயதிலேயே எனக்குப் புலப்பட்டது. யாதொரு எழுத்து ஆதாரமுமின்றித் தரும் பொருள் எவராலும் ஏப்பம் விடப்படும் என்பது ஒரு முட்டாள் கூட அறிவான். எழுத்து மூலம் ஆதாரத்தைப் பெற்றுக் கொண்டு பணம் தந்தாலும்

---

13. வெற்றிவேற்கை—71

அப்படியும் ஏப்பம்விடும் கவந்தர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் உறவினர்கள் அனைவருமே வட்டியும் முதலுமாக எப்படியாவது ஆண்டவன் கொடுக்கச் செய்து விடுவான் என்றார்கள். இத்தகைய பழைய எண்ணங்கள் எல்லாம் இப்போது என் நினைவுக்கு வருகின்றன. பெரியோர்களின் வாக்கும் ஊழும் இருந்த தனால்தான் பெண்ணை வலிந்து என் தலையில் கட்டி னார்கள். ஆனால் பணத்தை இப்போதும் ஏமாற்றி விட நினைத்தார்கள் என்பதைப் பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தின. ஆனால் இறைவன் அருளால் கிட்டத்தட்டப் பத்தாயிரம் ரூபாய் 'ஆயுதப் பிரசவம்' போல் எங்களை வந்தடைந்தது. இதன் விவரம் இந்நூலின் இரண்டாம் பகுதியில் ஒரு குமிழியில் வெளிவரும்.

குமிழி—42

# 42. மேற்கொண்ட சுற்றுலாக்கள்

பட்டப் படிப்பை மேற்கொள்ளும்முன் பொட்டண வாழ்க்கையில் (டிசம்பர் 36 முதல் மே 37 வரை) மூன்று சுற்றுலாக்களை மேற்கொண்டதாக நினைவு. முதல் சுற்றுலாவுக்கு என் மாமனார் என்னையும் என் மனைவியையும் இட்டுச் சென்றார்—மேட்டூர் அணைக்கு. என் மாமனார் செலவுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவர் ஆலத்துடையாம்பட்டி (திருச்சி மாவட்டம்) என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். பொட்டணத்தில் (சேலம் மாவட்டம்) திருமணம் புரிந்துகொண்டு மாமனார்வீட்டில் சொத்துக்கு ஆளாக ஐக்கியமானவர். உறவுமுறைத் திருமணம் இது.

இந்த உலகில் செல்வத்தை வைத்து ஒருவரை மதிப்பது போல் கல்வியை வைத்து மதிப்பதில்லை.

நாட்டுப்புறத்தில் நடைமுறையில் இதனைக் காணலாம். நகர வாழ்க்கையில் இதே நிலைதான்.

கல்லானே யானாலும்
கைப்பொருள்ஒன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங்கு
எதிர்கொள்வர்; இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்று
ஈன்றெடுத்த தாய்வேண்டாள்;
செல்லாது அவன்வாய்ச்
சொல்.[14]

என்று பாட்டியார் நாட்டு நடப்பை அன்றே பட்டவர்த்தனமாகச் சொல்லிச் சென்றுள்ளார். சொத்துக்கு ஆளாக வந்தாரேயன்றி சொத்தை நிர்வகிப்பதில் எந்தவித உரிமையையும் இல்லாதவர். எல்லாவற்றையும் மாமியார் நாகம்மாள்தான் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டிருந்தாள். ஏதோ பண்ணையாள்போல் வயலுக்குச் செல்லல், கூலியாட்களிடம் வேலைவாங்கல், வீடு வருதல், உணவு கொள்ளல், மீண்டும் தோட்டத்திற்குச் செல்லல் — இம்மாதிரி ஓர் எந்திர வாழ்க்கையில் காலங்கழித்துக் கொண்டிருந்தார். பணம் இருந்தால்தான் ஒருவருக்கு மதிப்பு உண்டாகும் என்பதை நேரில், தம் அநுபவத்தில், கண்டவரல்லவா? தம் மாமியாரிடம் செல்வம் இருப்பதால் தானே எல்லாரையும் ஆட்டி வைக்கின்றாள்! என்பதை நன்கு புரிந்து கொண்டவர். எனவே தாமும் சிறிது சிறிதாகப் பொருள் சேமித்து வரலானார்.

பெரியதாக வருமானம் உள்ள பண்ணையில் இஃது எளிதான செயல். எப்படியோ 'அதையும் இதையும்' விற்றுப் பணத்தைச் சேர்க்கலாம். தாம் சேமிப்பதில் செலவு இல்லை.

14. நல்வழி — 34

ஒரு நூறு ரூபாய்வரை சேர்ந்தால், அதனைக் கொண்டு எட்டு சவரன் வாங்குவார். அக்காலத்தில் (1930) சவரன் விலை ரூ 12, 13க்குமேல் இல்லை. நாமக்கல் வட்டத்தில் 'புதன் சந்தை' என்ற ஒரு சந்தை வாரந்தோறும் புதன் கிழமையன்று கூடும். அங்குத் தாய் தந்தையரைத் தவிர அனைத்தையும் கொள்முதல் செய்யலாம். வேளாண்மையில் ஒய்வு கிடைக்கும்போது — அல்லது புதனன்று தம்மைத் தோட்ட வேலையினின்றும் விடுவித்துக் கொண்டு — காலை உணவு கொண்டு சந்தைக்கு நடந்தே செல்வார். குறுக்கு வழியில் இரண்டு கல் தொலைவைக் கடந்து சந்தையை அடையலாம். வாங்கிய சவரனை வீட்டுக்குக் கொணர்வார். அடிக்கடி சரவன்களை எடுத்துப் பார்த்து கொண்டிருப்பார். அறுசுவை உண்டியை உண்ணுங்கால் மகிழ்ச்சி உண்டா கின்றது. கற்றவர்கள் கவிதையைப் படித்துச் சுவைக்குங்கால் இன்பம் உண்டாகின்றது. நிலக்கிழார் தோட்டத்திற்குச் சென்று தென்னை மரங்கள், மாமரங்கள், கொய்யா மரங்கள் ஆகியவை பயன் தருவதைக் கண்டும்; பல ஏக்கர் நிலத்தில் மிளகாய் பயிரிடப் பெற்று நன்றாகக் காய்ப்பதைக் காணும் போதும்; பல ஏக்கர் நிலத்தில் குச்சி வள்ளிக் கிழங்குச் செடி கள் வளர்ந்து எங்கும் பச்சை மயமாய்க் காணப்படும் காட்சியைக் காணுந்தோறும்; பச்சைப் பட்டு விரித்தாற் போன்று நெற்பயிர்கள் வளர்ந்து நிற்கும் காட்சியை நோக்குந்தோறும் இப்படி நீர் வளமிக்க நிலவளத்தைக் காணுந்தோறும் நிலக்கிழார் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால் இத்தகைய மகிழ்ச்சியை வங்கிக் கணக்கு களில் பண இருப்பைக் காட்டும் வெறும் எண்களைக் கண்டே களிப்பார் வணிக மன்னர், ஆலை முதலாளி.

என் மாமனார் இந்தச் சவரன்களைத் தம் அருமை மகளுக்கு அடிக்கடிக் காட்டி, "உன் திருமணத்திற்கு என் பெயர் நினைவில் இருக்குமாறு பெரிய நகை செய்து

போடுவேன்'' என்பார். ஏழெட்டு வயது கூட நிரம்பாத அப் பெண் ஏதோ 'பெரிய நகை' தனக்கு வருவதாக எண்ணி உள்ளம் பூரிப்பாள். இந்தச் சவரன்களை என மாமனார் வாரந்தோறும் புதன் அன்று சந்தைக்கு எடுத்துச் செல்வார். சவரனுக்கு எட்டணா இலாபம் கிடைக்குமானால் விற்று விடுவார். ரூ 4, 5 கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைவார். இப்படியே சிறுகச் சிறுகச் சேர்த்த பணம் ஓராயிரமாகப் பெருகிற்று. அப்போது ஆறு ஏக்கர் நிலம், கிணறு, இருபது தென்னைமரங்கள் மழைகாலத்தில் நீர்தேங்கி ஒரு வாரத்திற்குப் போதுமான நீர்தேங்கும் குட்டை இவை அடங்கிய நிலம் விலைக்கு வந்தது. அதை ரூ. 1000/-க்கு வாங்கினார். நல்லநிலம்; மழைபெய்து கிணற்றில் நீர் இருக்கு மாயின் நல்ல மகசூல் எடுக்கலாம். கிணறு முழுவதும் வியாபித்துள்ள கரும்பாறை வாய்த்து விட்டதால் கிணற்றை ஆழப்படுத்த முடியவில்லை. நல்ல மழை பெய்யுங்காலத்தில் கிணறு நீரால் நிரம்பி விடும். வேளாண்மை நன்கு பலிக்கும். இந்தச் சொத்து அவருக்கு வந்ததும் மாமியாரிடமும் மனைவியிடமும் நல்ல மதிப்பு ஏற்பட்டது. அடிக்கடி மகளிடம் ''இந்த நிலம் உனக்குத் தான்; எனக்குப்பின் உன்னைச் சேருமாறு எழுதி வைப்பேன்'' என்று ஆசை காட்டிக் கொண்டே காலம் கழித்தார். (இந்த நிலம்தான் 1960இல் ரூ. 30,000/- ஆயிரத்திற்கு விற்கப்பட்டது) இந்தக் குடும்பத்தில் எல்லோருக்கும் பணத்தின் மீதிருந்த பற்றும் பாசமும் பிள்ளைகளின்மீது இல்லை என்பதை என்னால் அறிய முடிந்தது. இந்த நிலையைப் பரவலாக எங்கும் காண முடிகின்றது.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்[15]

15. குறள்-751

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு[16]

என்ற குறள்களின் கருத்தை இக்குடும்பத்தில் எல்லோருமே நன்கு அறிந்திருந்தனர் என்பதை நான் கண்டேன். இவர்கள் சம்பாதிக்கும் பொருள் 'திறனறிந்து தீதின்றி வந்த பொருள்' ஆகும்.

இங்ஙனம் மிக்க சிரமத்துடன் ஈட்டிய பொருளைக் கொண்டுதான் என் மாமனார் மேட்டூருக்குக் கூட்டிச் சென்றார். சிந்தனையுள்ள மாமனாராக இருந்தால் ஒரு தொகை கொடுத்து மேட்டூர் முதலான இடங்கட்குப் போய் சுற்றி வருமாறு பணித்திருக்கலாம்; அவ்வாறு செய்யவில்லை. இந்த இடங்களையெல்லாம் அவரே பார்த்ததில்லை. 'தமக்குத் துணையாக இருக்கட்டும் என்று என்னைக் கூட்டிச் சென்றார்; என் மனைவியும் என் கூட வந்தாள்' என்றுதான் இப்பயணம் அமைந்தது. சேலத்தில் அவருக்குத் தெரிந்த ரெட்டியார் ஒருவர் உணவு விடுதி நடத்தி வந்தார்; முதல் நாளிரவு அவர் வீட்டில் தங்கி மறுநாள் காலை மேட்டூர் செல்லும் இருப்பூர்தியில் மேட்டூர் சென்றோம். சரியான உணவு விடுதிகள் மேட்டூரில் இராது என்று கையில் கட்டமுது எடுத்துச் சென்றோம்.

இந்தப் பயணத்தை எங்கள் தேனிலவு' என்று சொல்லலாம். காரணம் முதற் பொருள் குறிஞ்சி; கருப் பொருளும் குறிஞ்சி நிலப்பொருளே, அணை, ஆறு, பூங்கா முதலியவை குறிஞ்சி நிலத்தில்தான் அமைந்திருந்தன. இக்கால இளைஞர்கள் திருமண வாழ்க்கையை அநுபவிப்பது போல் நான் அநுபவிக்கவில்லை. இளமையிலேயே பொறுப் புணர்ந்தவனாதலால் இன்ப உணர்ச்சி அறிவுக்குக் கட்டுப்

16. ஷை-752

பட்டே கிடந்தது. மாமனார் அருகிலிருந்தமையால் மனைவி யுடன் நகைத்துப் பேசுவதற்குக் கூட வாய்ப்பில்லை. இதை எழுதும் போது இராமனின் சித்திரகூட நிகழ்ச்சி நினைவிற்கு வருகின்றது. இராமன் சீதையை முன்னிலைப் படுத்திப் பல காட்சிகளைக் காட்டி வருவது போல், நானும் என் மாமனாரையும் மனைவியையும் முன்னிலைப் படுத்திப் பல காட்சிகளைக் காட்டிக் கொண்டே அணையருகில் பல இடங்களைச் சுற்றி வந்தேன்.

இருப்பூர்தியை விட்டிறங்கியதும் அணை நிரம்பி விட்டால் அதிகமாயுள்ள நீரை வெளிப்படுத்தும் பதினாறு கண்களையுடைய பாலத்திற்கு முதலில் வந்தோம். நான் முசிறியில் உயர்நிலைப்பள்ளியில் ஐந்தாம் படிவம் பயின்ற போது (1933), சுற்றுலா வந்தபோது பார்த்த இடங் களாதலால் பெரும்பாலான இடங்களை இனங்கண்டு கொள்ள முடிந்தது. பாலத்தில் பதினாறு பெரிய கண்களை மூடுவதற்குப் பதினாறு பெரிய கதவுகள் இருந்தன; அவை மின்விசையால் இயக்கப்பெறுபவை. நீர் நிரம்பி அணைக்கு ஆபத்து வரும் நிலை ஏற்பட்டாலும், அணைக்குத் தண்ணீர் மிதமிஞ்சி வரும் நிலை ஏற்படும்போதும் இக்கதவுகள் திறக்கப்பட்டுத் தண்ணீர் காவிரியில் விடப்படும் என்று விளக்கினேன். மெதுவாக அணையின்மீது நடந்து வந்தோம். கடல் போல் நீர் நிறைந்த அணை அழகாகக் காட்சி அளித்தது. "இவ்வளவு நீர் இங்கு இருக்கின்றது. பொட்டணம் தண்ணீர் இல்லாக் காடாகக் கிடக்கின்றது. இந்த நிலை பொட்டணத்தில் ஏற்பட்டால் எவ்வளவு அற்புதமாக வேளாண்மை செய்யலாம்?" என்று சொன்னார் என் மாமனார்.

அணையை விட்டுக் கீழிறங்கி அணையில் பல இடங்களில் திறப்புகள் இருப்பதையும் இவற்றின் வழியாக வரும் நீரைக்

கொண்டு மின்னாற்றல் உற்பத்தி செய்யப்படுவதையும் விளக்கினேன்; பிறகு இந்நீர் காவிரியுடன் கலப்பதையும் சுட்டிக் காட்டினேன். அடுத்து அணையின் நெடுக சுருங்கை வழி (Tunnel) இருப்பதைக் காட்டினேன். இந்த அமைப்பினால் மீதப்படும் சிமெண்டின் அளவும் கருங்கல் சல்லியும் இருபது விழுக்காடு இருக்கலாம் என்று எடுத்துரைத்து, இந்த ஏற்பாட்டினால் அணையின் வலிமையும் அதிகப்படுகின்றது என்றும் விளக்கினேன். சுருங்கை வழியில் செல்ல யாரையும் அனுமதிப்பதில்லை என்றிருந்ததால் கதவுகள் பூட்டப் பெற்றிருந்தன. ஆகவே, உள்ளே சென்று பார்க்க முடியவில்லை. பின்னர் அங்குப் பலவேறு இடங்களில் அமைக்கப் பெற்றிருந்த இளமரக்காக்களைச் (Parks) சுற்றிப் பார்த்தோம். இதற்குள் மணி 12.30 ஆகிவிட்டது. மார்ச்சு மாதத்திலும் மேட்டூர் வெயில் தாங்க முடியவில்லை. பிறகு ஓரிடத்தில் (நிழலில்) அமர்ந்து கையிலிருந்த உணவைக் கொண்டு பசி ஆறினோம். ஊரில் பார்க்க வேண்டிய சிறப்பான இடங்கள் இல்லை. திரும்பவும் இருப்பூர்தி நிலையத்திற்குப் போக வேண்டுமானால் சுமார் மூன்று கல் தொலைவு நடக்க வேண்டும். நிழலிலேயே ஓய்வு எடுத்துக் கொண்டு மாலை 3-30க்கு ஒரு சிற்றுண்டி விடுதியில் சிற்றுண்டி காஃபி அருந்திப் பேருந்தில் சேலம் திரும்பினோம். முதல் நாளிரவு தங்கியிருந்த ரெட்டியார் வீட்டிலேயே தங்கி மறுநாள் காலையில் பேருந்தில் புறப்பட்டுப் பொட்டணம் வந்தடைந்தோம்.

சின்னாட்கள் சென்ற பின்னர் என் மைத்துனர் புகளூர் சருக்கரை ஆலையைப் பார்த்துவரத் திட்டமிட்டார். அவர், நான், என் மனைவி, அவர் நண்பர் இராமச்சந்திர ஆச்சாரி ஆகிய நால்வரும் நாமக்கல்லுக்கு மாட்டு வண்டியில் வந்தோம். பேருந்தில் வேலூரை அடைந்தோம்; வேலூரில் காவிரியாற்றைக் கடந்தால் புகளூரை அடையலாம்.

சருக்கரை ஆலையைச் சுற்றிப் பார்த்தோம். பக்கத்து ஊர்களி லிருந்து மாட்டு வண்டிகளிலும் லாரிகளிலும் ஆலைக்குக் கரும்புகள் வந்து கொண்டிருந்தன. அவை வரிசையாக நிறுத்தப்பெற்றிருந்ததைக் கண்டோம். சரக்குடன் லாரி களையும் வண்டிகளையும் நிறுக்கவும் சரக்குகளைக் கொட்டிய பிறகு காலியாகவுள்ள லாரிகளையும் வண்டி களையும் நிறுக்கவும் உள்ள ஏற்பாடுகளினால் சரக்குகளின் எடையைக் கணக்கிட்டதைக்கண்டோம். கரும்புகள் ஆலையில் சிறுசிறு துண்டுகளாக நறுக்கப்பெறுவதையும், நறுக்கப் பெற்ற துண்டுகள்வரிசையாகப் பிழியும் இடத்திற்குச் செல்வதையும், பிழிந்த பிறகு கரும்புச்சாறு காய்ச்சப்பெறுவதையும், பழுப்பு நிறச் சருக்கரையாக மாற்றப் பெறுவதையும், இறுதியாக மணல் போன்ற சருக்கரை ஓரிடத்தில் கொட்டுவதையும் கண்டோம். இவற்றையெல்லாம் ஆலையில் பணிபுரியும் அலுவலர் ஒருவர் எங்கட்கு விளக்கினார். அன்று மாலையே நாமக்கல் திரும்பினோம். நாங்கள்வந்த மாட்டு வண்டியைக் காக்கவைத்திருந்தோம். அந்த வண்டியிலேயே இரவு சுமார் 8 மணிக்கு வீடு வந்தடைந்தோம்.

பின்பு ஒருநாள் நான், என் மனைவி, என் மாமனார், மாமியார் நால்வரும் கூடுதுறை—பவானிக்குச் சென்று பவானி ஆற்றிலுள்ள அம்மனை வழிபட்டு வந்ததாக நினைவு; இதைச் சரியாக நினைந்து விவரம் கூற முடிய வில்லை. வெள்ளம் குறைவாக பவானி ஆற்றில் குறுக்கும் நெடுக்குமாக என் மனைவியுடன் நடந்து சென்றது நினைவுக்கு வருகின்றது. எங்களைப் போல் பல தம்பதிகள் வந்து பவானி அம்மனை வழிபட்டதைப் பார்த்தோம். இதை எழுதும்போது பரிபாடலில் காணப்பெறும் பல வையைக் காட்சிகளை நினைவு கூர்கின்றேன். ஆனால் அம்மாதிரியான விளையாட்டுகளை நாங்கள் மேற்கொள்ள

வில்லை. எங்குச்சென்றாலும் நான் கல்லூரியில்சேர்வதையே நினைத்துக்கொண்டு கலங்குவேன். சதா கல்லூரியில் சேர்வது பற்றியும் அதற்குப் பணம் காண்பதுபற்றியும் நினைத்துக் கொண்டு கவலைப்பட்டுக் கிடந்ததால், திருமணத்திற்குப் பின்னர் என் இன்ப வாழ்வு இனிக்க வேண்டிய அளவுக்கு இனிக்கவில்லை. உணர்வு நிலை அடங்கிய நிலையில் அறிவு நிலை செயற்பட்டதே இதற்குக் காரணம் என்று சொல்லலாம்.

## 43. ஆனந்தவிகடன் குறுக்கெழுத்துப் போட்டி

சேந்தமங்கலத்தில் பஞ்சாங்க அய்யர் (புரோகிதர்) ஒருவர் இருந்தார்; தெலுங்கு பேசுபவர். அவர் எங்கள் மாமனார் வீட்டிற்கு வழக்கமாக வந்து திவசம் செய்து வைக்கும் புரோகிதர். அவருக்குச் சோதிடமும் தெரியும்—அரைகுறையாக. புரோகிதத் தொழிலைத் தவிர படக்கடை ஒன்று நடத்தி வந்தார். எப்படியோ என் மைத்துனர் அவரிடம் நட்பை வளர்த்துக் கொண்டார். நல்ல நல்ல படங்களைக் கண்ணாடி போட்டு விற்று வந்தார். உயர்ந்த ரக ஜெர்மன் அச்சு ரவிவர்மா படங்கள் இருந்தன. பெரிய அளவில் கிருஷ்ணர், இராமர், சிவபெருமான், கௌரிசங்கர், இன்னும் பல படங்கள் கண்ணாடி போட்டு வீட்டில் மாட்டினார். இவற்றைத் தவிர ஒலிப்பதிப்பிக்கும் பெட்டி (Phonograph) வாங்கி பல்வேறு பக்திப்பாடல்கள் கொண்ட இசைத்தட்டுகளை வாங்கி அடிக்கடிக் கேட்பார். இரவு 8 மணிக்கு மேல் 50 பேர்களுக்குறையாத கூட்டம் சதா இருந்து கொண்டே இருக்கும். கே.பி. சுந்தராம்பாள் போன்ற இசை வாணர்களின் பக்திப் பாடல்கள் ஆராவமுதமாய், செவிநுகர் கனிகளாக—இனிக்கும். அடிக்கடி நுகரும் பேறு கிடைத்த

வண்ணமிருக்கும். என் மைத்துனர் மேற்கொண்ட பல அவசியமில்லாத செயல்களில் இவை இரண்டும் அவசிய மானவைகளாகவும் பலருக்கும் பயன்படுபவைகளாகவும்—இருந்தன.

இந்தப் புரோகிதர் ஆனந்தவிகடன் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குகொண்டிருந்தார். எப்படியோ இதை என் மைத்துனர் காதில் போட்டு விட்டார். அவர் என்னிடம் இதைத் தொற்றிவிட்டார். வாரந்தோறும் ஆனந்தவிகடன் வரத் தொடங்கியது. Hindu வழக்கமாக வந்து கொண்டிருந்தது. அப்பொழுதெல்லாம் Hinduவுக்கு மாதச்சந்தா ரூ. 4/-க்கு மேல் இல்லை. ஆனந்தவிகடன் படிப்பதற்கு மிகச் சுவையாக இருக்கும். மணியாரன் வீட்டுத் திண்ணையில் பலருக்குப் படித்துக் காட்டுவேன். சோம்பேறிகளாக உட்கார்ந்திருப்பவர்கட்குக் கேள்வி ஞானத்தை ஊட்டினேன். ஒன்று விட்ட என் சகோதரர் நல்லப்ப ரெட்டியார் இயல்பாகவே நகைச்சுவையாகப் பேசவல்லவர். என் ஆனந்த விகடன் செவியமுதம் அவருக்குப் பேரின்பத்தை விளை வித்தது. சுவைக்கும் பழக்கமில்லாத என் மைத்துனர் கூடச் சுவைக்கத் தொடங்கினார்.

குறுக்கெழுத்துப் போட்டி—அறிவுக் கூர்மையாகச் சிந்திக்கும் பழக்கத்தைத் தந்தது என்றாலும் அஃது ஒரு சூதாட்டம் நிலையாக வளர்ந்தது. ரூ. 1000/- தான் பரிசுத் தொகை, இதில் என் மைத்துனர் என்னைத் தள்ளியது எனக்கு வியப்பாகத்தான் இருந்தது. இருந்தாலும் பொழுது போக்காக இறங்கினேன். போட்டியின் முடிவுகள் 'நாரதர்' என்ற வார இதழில் வெளி வந்தன. இதையும் ஆனந்த விகடன் நிறுவனந்தான் வெளியிட்டது. புரோகிதர் அய்யர் சொற்படி ஓர் ஆனந்தவிகடன் அகராதி வாங்க நினைத்தார் என் மைத்துனர். அவர் உள்நோக்கம் வரவரப்புரிந்தது. என் படிப்பின் செலவை ஒப்புக் கொண்டாரல்லவா? "இதில்

பரிசு விழுந்தால் அதைக் கொண்டு அவர் படிப்பை முடித்துக் கொள்ளட்டும். நமக்குக் கையைக் கடிக்காமல் இருக்கும்" என்று எண்ணியதாக எனக்குப் புலனாகத் தொடங்கியது நல்லப்ப ரெட்டியாரிடம் இதைத் தெரிவித்தேன். அவர் சொன்னார். "எனக்கு ஆரம்பத்திலேயே தெரிந்தது. ஊகம் செய்து புரிந்து கொண்டேன். உன்னிடம் சொல்லலாம் என நினைத்தேன். நீயே புரிந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது" என்றார்.

நான்கு மாதத்தில் ரூ. 100/-வரையிலும் செலவாயிற்று. பரிசு விழவில்லை.

ஆக்கங் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடையார்.[17]

என்ற வள்ளுவர் வாக்கை நினைத்துக் கொள்வேன். ஒரு சமயம் நல்லப்ப ரெட்டியாரிடம் சொன்னேன்: "நான் எழுதுகிறேன். சீட்டுக்கு (Coupon) உரிய கட்டணத்தை நீங்கள் கட்டுங்கள். பரிசு விழுந்தால் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம்" என்று, அவர் கூறர்; அவர் சொன்ன மறுமொழி: "நீயே கட்டி விடு. பரிசு விழுந்தால், பாதித் தொகையில் சீட்டுத் தொகையைக் கழித்துக் கொண்டு மீதியை எனக்குத் தந்தால் போதும்" என்றார். அவருடைய அறிவுக் கூர்மையையும், நாசூக்கான நளினத்தையும், உலகியலறிவையும் கண்டு வியந்து போனேன்.

திண்ணை நாலு வீதிகளும் சந்திக்கும் முனையிலிருந்தது. எந்தப் பக்கமாக யார் வந்தாலும் திண்ணையில் உட்கார்ந்திருப்பவர்களின் கண்ணில் படாமல் போக முடியாது. வேட்டுவக் கவுண்டர் வீட்டுக்குப் பொங்கலுக்கு ஒரு புது மாப்பிள்ளை வந்து போனார். அவருடைய ஊர் ஐந்தாறு

17. குறள்-493

கல் தொலைவிலுள்ள ஒரு சிற்றூர். புதிதாக மிதிவண்டிப் பழக்கம் உடையவர். இரவலாகவோ வாடகைக்கோ மிதிவண்டி வாங்கிக் கொண்டு அதில் வந்து சேர்ந்தார் மாமனார் வீட்டுக்கு. இரண்டு மூன்று நாட்கள் தங்கினதில் சக்கரங்களில் சற்றுக் காற்று இறங்கியிருந்தது வண்டியைக் கொடுத்தவர்கள் இத்தகைய நிலையைச் சமாளிப்பதற்கு வண்டியிலேயே காற்றடிக்கும் விசைக்குழாயை (Pump) வைத்து அனுப்பியிருந்தனர். மிதிவண்டிப் பழக்கம் புதிதாக உடையவராதல் விசைக்குழாய் வண்டியில் பொருத்தி யிருந்ததைக் கூட அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை. இவர் மிதிவண்டியைத் தள்ளிக் கொண்டு வந்து நல்லப்ப ரெட்டியார் வீட்டில் விசைக்குழாய் தருமாறு கேட்டார். திண்ணையில் பலர் அமர்ந்திருந்தனர். நல்லப்பரெட்டியார் ''வண்டியிலேயே விசைக்குழல் இருக்கிறதே!'' என்று சுட்டிக் காட்டினார். அப்படிக் காட்டியும் அவரால் அஃது இருக்கும் இடத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. திண்ணையருகில் நின்று கொண்டிருந்த சிறுவன் ஓடிச்சென்று விசைக்குழாயை வண்டியிலிருந்து எடுத்து அவர் கையில் கொடுத்தான். விசைக்குழாயின் உந்துத் தண்டில் உள்ள இணைப்புச் சாதனத்தை (Connection) எடுத்து சக்கரத்திலும் விசைக் குழாயிலும் பொருந்திக் காற்றடிக்க வேண்டும் என்பதை அறியாத புது மாப்பிள்ளை இணைப்புச் சாதனத்தை எடுக்காமல் அப்படியே சக்கரத்தில் பொருத்த முயன்றபோது திண்ணையிலிருந்தோர் அனைவரும் ''கொல்லென்று'' சிரித்து விட்டனர். மாப்பிள்ளையின் முகம் சுருங்கிப் போயிற்று. என்ன செய்வது? நல்லப்ப ரெட்டியார், 'பொருத்தி அடிப்பதைக் கூட அறிந்து கொள்ளாத, உன்னிடம் மிதிவண்டியைக் கொடுத்தார்களே! உலக்கைக் கொழுந்து போன்ற உனக்கும் எங்களூர்க்காரர் ஒரு பெண்ணைக் கொடுத்தார்களே!'' என்று சொன்னபோது

எல்லோரின் நகைப்பு மேலும் அதிகமாயிற்று. என்ன செய்வது? எல்லோரும் அவர் நிலையைக் கண்டு கழிவிரக்கம் கொண்டனர். விசைக்குழாயை எடுத்துக் கொடுத்த சிறுவனே இணைப்புக் குழலைத் தனியே எடுத்துக் சக்கரத்திலும் விசைக்குழாயிலும் பொருத்திக் காட்டினான். இந்த நிலையிலும் அவரால் காற்றடித்துக் கொள்ளத் தெரியவில்லை. பிறகு அந்தச் சிறுவனே இரண்டு சக்கரங்களுக்கும் காற்று அடித்துக் கொடுத்து உதவினான். நல்லப்பரெட்டியார், "இப்போது வண்டியிலாவது ஏறத் தெரியுமா? தெரியா விட்டால் அச்சிறுவனையே ஏற்றிவிடச் சொல்கிறேன்" என்ற போது சிறுவன் உட்பட எல்லோருமே மேலும் சிரித்தனர். "தெரியும்" என்று சொல்லி மாப்பிள்ளை வண்டி ஏறிச் சென்று விட்டார். குடுமியில் பூச்சுற்றியிருந்த நிலை, களையில்லா முகம்—இவற்றைக் கண்ட அனைவரும் முழுவளர்ச்சி பெறாத மனமுடையவர் என்று அறுதியிட்டனர். "வாப்பாடு கூடத்தெரியாத இந்தப்'பிரகஸ்பதிக்கு' நம்மூர் 'பிரகஸ்பதி' தேடிச் சென்று பெண்ணைக் கொடுத்தாரே அவரை என்ன செல்வது? எல்லாம் பெண்ணின் தலை எழுத்து! கோடி வீட்டுக் குப்புசாமியின் மகள் மிகவும் கெட்டிக்காரி. தன் மூளையைக் கொண்டு மாப்பிள்ளையை ஓர் ஆட்டு ஆட்டி விடுவாள். அவள் சாதுரியத்தால்தான் இப்புதுக் குடும்பம் தலையெடுக்க வேண்டும்" என்று நல்லப்ப ரெட்டியார் சொன்னபோது எல்லோரும் "மெய்தான் மெய்தான்" என்றும், "ஆம், ஆம்", என்றும் சொல்லித் தலையசைத்தனர்.

இன்னொரு சுவையான நிகழ்ச்சியும் நினைவிற்கு வருகின்றது. 'ஆனந்தவிகடன் அகராதி' அஞ்சல் வழியாக V.P.P.யில் வந்தது. திண்ணையில் உட்கார்ந்திருந்தபோது அஞ்சல் சேவகன் பணத்தைப் பெற்றுக்கொண்டு புத்தகத்தைத் தந்தான். கிட்டத்தட்ட அஃது ஒரு சாண்

உயரம் இருந்தது. நின்று கொண்டே இதைக் கவனித்த வேட்டுவ இளைஞன் ஒருவன் விரைந்து வந்து விரலால் அளக்கத் தொடக்கிவிட்டான்; ''ஒரு சாண் உயரம் இருக்கிறதே! இஃது எந்த வகுப்புக்கு உரியது? இருபதாவது வகுப்புக்கு உரியதாக இருக்குமா? நீங்கள் இருபதாவது வரை படித்திருக்கின்றீர்களா?'' என்று கேட்டான். பாவம் எழுத்து வாசனையே அறியாதவன் என்று எல்லோருமே! அவனுடைய அறியாமைக்கு இரங்கினர். ''இல்லை தம்பி'', இஃது எல்லா வகுப்புக்கும் உதவும். ஐம்பதாவது வகுப்புக்கும் செல்லும். இதில் அவ்வளவு விஷயங்கள் அடங்கி இருக்கின்றன'' என்று அவன் அறிந்த மொழியிலேயே கூறி அவனுக்கு மகிழ்ச்சியூட்டினேன்.

## 44. என் மனம் சிந்திக்கத் தொடங்கியது

'போகப் போகத் தெரியும்'—என்று நல்லப்ப ரெட்டியார் சொன்ன வாக்கியம் (குமிழி-40) என் மனத்தில் ஆழப்பதிந்து என்னைச் சிந்திக்க வைத்தது. முன்பின் தெரியாத பணக்காரர்கள் யாவரும் முன்னதாகவே ரூ. 10000/- திருமணச் சபையில் வைக்கச் சொல்லுகின்றனர்; 100 சவரன் நகையைக் காட்டச் சொல்லுகின்றார். வீட்டில் உள்ள என் மைத்துனர் உட்பட ஒருவருக்கும் இந்த நிபந்தனையின் கீழ்ப் பெண் கொடுக்க விருப்பமில்லை என்பது முதற்காரணம். கேட்டவர்கள் யாவரும் வயது தளர்ந்தவர்கள்; இரண்டாந்தாரமாகவே கேட்டனர். கொழுந்து போன்ற ஓர் இளம்பெண்ணை நடுத்தர வயதுடைய கிழவருக்குக் கொடுத்தால் உடற் பொருத்தம், மனப்பொருத்தம், இயல்புப் பொருத்தம் இவற்றில் முரண்பாடு இருக்குமே; இவை பொருந்தாவிட்டால் பெண்ணின் வாழ்க்கை கெடுமே என்ற ஒருபால் அச்சம்; இவர்கள் ஏதாவது சாக்கு போட்டு

சுரப்பு விடுவதற்குக் கன்றுக்குட்டியைத் தாய் முலையைச் சப்ப விடுவதுபோல் பெண்ணைத் தாய் வீட்டிற்குத் தன்னைப் போலவே விரட்டி விட்டால் என்ன செய்வது? என்று மற்றொருபால் அச்சம். இந்நிலையைச் சிந்தித்துப் பார்த்து என் மைத்துனர் மனம் ஒப்பவில்லை.

இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கலாம் என்று என் மனம் சிந்தித்தது. பாட்டிக்கும் பேத்திக்கும்தான் நெருக்கம் அதிகமாக இருக்கின்றது. பேத்தி உணவு கொண்டு போனால்தான் பாட்டி உண்பாள். தான் பெற்ற மகள் மீது சிறிதுகூடப் பாசம் இல்லை. மாறாக வெறுப்புதான் மிஞ்சி நிற்கின்றது. முன்பின் இயல்பு அறியாத பணக்காரர் வீட்டில் தன் தங்கை வாழ்க்கைப்பட நேர்ந்து, தன் பாட்டியும் பேத்தியிடமே போக நினைத்தால் என்ன செய்வது? கிழவியை மயக்கிச் சம்பந்தி வீட்டார் சொத்துகளை எழுதி வாங்கிக் கொண்டால் என்ன செய்வது? சொத்துகள் யாவும் கிழவி பேரில்தானே உள்ளது? அவள் சுயமாகச் சம்பாதித்த சொத்து. இப்படி இக்கட்டான நிலை உண்டாகி விட்டால் பேராபத்தாகிப் போய்விடுமே என்று சிந்தித்து தான் அந்நியருக்குப் பெண்கொடுக்க இசையாதிருக்க வேண்டும்; மனமும் ஒப்பாதிருக்க வேண்டும்.

தவிர, அந்நியரும் திருமணமான பின்னர் தன் தங்கையைத் தன் வீட்டில் விட்டு வைக்கமாட்டார்கள். பாட்டி மிகவும் தளர்ந்த நிலை எய்தும்வரை, உண்பதற்கும், கழிப்பிடம் செல்வதற்கும் பிறரை நாடும் நிலை வரும் வரை யாவது தன் தங்கை தன் வீட்டிலிருந்தரல் எல்லாம் சரியாய் விடும். இந்நிலையில்—கண்ணும் மங்கிய நிலையில்—பாட்டி அதிகமாக ஆட்டம் போட முடியாது. இந்நிலையில் தங்கைக் கணவன் வீட்டிற்குச் சென்றுவிட்டாலும் நிலையைச் சமாளித்துக் கொள்ளலாம் என்று என் மைத்துனர் சிந்தித்

திருக்க வேண்டும். சொந்தக்காரன் தலையில் கட்டி விட்டால், அதுவும் ஓர் ஏழையின் தலையில் கட்டிவிட்டால், அவன் இழுத்த இழுப்பிற்கு வருவான். தொடக்கத்தில் விரோதம் ஏற்பட்டாலும் சொந்த உறவினால் ஒட்டிக் கொள்வ தற்கு வழியும் ஏற்பட்டுவிடும் என்றெல்லாம் அவர் மனம் எண்ணியிருக்க வேண்டும்.

இந்த எண்ணங்களினால் முடிவு எடுத்து தன் நண்பர் இராமச்சந்திர ஆச்சாரியைக் கூட்டிக் கொண்டு திருச்சிக்கு வந்து என்னைச் சந்தித்திருக்க வேண்டும். என் ஊழும் அவர் ஊழும் ஒத்துப்போனதால் எங்கள் திருமணமும் பல இன்னல், கட்கு இடையேயும் நடைபெற்றது. இதன் காரணமாக, நான் படிக்க முடியாத ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டேன். திருமணம் ஆனால் மைத்துனர் அரிச்சந்திரனுக்கு அடுத்தபடி யான சத்தியசீலனாக இருப்பார் என்று நம்பி நானும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டேன். இதையெல்லாம் இப்போது எண்ணிப் பயன் என்ன? அப்போது எண்ணினால் மட்டிலும் பயன் உண்டா? பிறகுஉண்மைதான் என்ன?

வினைப்பயனை வெல்வதற்கு
வேதம் முதலாம்
அனைத்துஆய நூலகத்தும்
இல்லை.[18]

என்ற ஔவைப்பாட்டி சொல்வதுதான் உண்மை. இந்த உண்மையை அறிந்து கொள்வதற்கும் ஊழ் வேண்டும் என்பதையும் இப்போது உணர்கின்றேன். இப்படி எல்லாம் என் படிப்பு முற்றுப் பெற வேண்டும் என்றிருந்ததால் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பெற்றேன்; திருமணம் செய்து கொள்வதற்கும் ஒப்புதல் தரும் நிலைக்கு வரவேண்டிய

18. நல்வழி-37.

சந்தர்ப்பமும் ஏற்பட்டது. இவற்றையெல்லாம் இப்போது சிந்தித்துப் பார்க்கின்றேன். அந்தக்காலத்தில் தன் முனைப்போடு செயல்பட்ட சிந்தனை இப்போது அஃதின்றிச் செயற்படுகின்றது.

ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித் திருந்தாலும்—மாதேவா
நின்செயலே என்று நினதருளா லேஉணரின்
என்செயலே காண்கி லேனே.[19]

என்ற குருஞானசம்பந்தரின் வாக்கின் உண்மை இப்போது என் மனத்திற்குத் தட்டுப்படுகின்றது. 'அவன் அருளால் நடைபெறும் அனைத்தையும் காண்கின்ற பொழுது என் செயலால் நடைபெறுவது என்ற எண்ணமே இல்லாதொழி கின்றது' என்ற உண்மையை நன்கு உணர்கின்றேன். 'வருவதும் தானே வரும்'[20] என்ற பேருண்மையையும் காண் கின்றேன்.

இப்பொழுது இன்னொரு நிகழ்ச்சியும் நினைவிற்கு வருகின்றது. என் திருமணம் நடந்து ஒரு வாரத்திற்குப் பிறகு கருவுயிர்ப்பதற்கு எருமைபட்டி சென்ற இராசாம்பாளுக்கு டிசம்பரிலோ (1936),சனவரியிலோ (1937) ஆண்குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலமாக இருப்பதாகச் செய்தி வந்தது. என் மைத்துனருக்கு இது குறித்து மகிழ்ச்சி ஏற்பட்டதா என்பதை அவர் முகக் குறிப்பிலோ அல்லது பேச்சுவாக்கினாலோ அறிந்துகொள்ள இயலவில்லை. "திரும்பவும் இல்லத்தில் நுழையக்கூடாது" என்ற தடையுத்தரவு என் மைத்துனர் போட்டதால், பொட்டணத்திலிருந்தும் யாரும் அழைக்கப் போகவில்லை. எருமைப்பட்டியிலிருந்து யாரும் அழைத்து வரவில்லை. இரு

19. சிவபோக சாரம்-45.
20. ஷை. 78.

பக்கத்திலும் ஆணவ மலம் தலைதூக்கி நின்றதால் நடுவில் எவரும் இருவரையும் இணைக்க முயற்சி எடுக்கவில்லை. நான் கல்லூரி மாணவன் — உலகியல் நுட்பங்களை நன்கு அறிந்திருந்தாலும் — இதில் தலையிட விரும்பவில்லை. அப்படித் தலையிட்டாலும் ''ஏழைசொல் அம்பலத்திற்கு ஏறாது'' என்பதை நன்கு அறிந்திருந்தேன்.

இல்லத்திலுள்ளாரின் இயல்புகளை நன்கு அறிந்த என் மனைவியும் குழந்தையைப் பார்க்கப்போகும் விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை. இருந்தாலும் நானாவது தனியே போய் வரலாம் என்று நினைத்து என் விருப்பத்தைத் தெரிவித்தேன். அவள் ஒப்புக்கொண்டாள். என் மைத்துனரும் ஒருவாறு ஒப்புக் கொண்டார். ஒன்றிரண்டு நாட்களில் (மார்ச்சு-1937) மிதிவண்டியில் (10கல் தொலைவு) எருமைப்பட்டி போய் வந்தேன். அங்குப் போய்வருவதற்கு இரட்டை மாட்டுவண்டியைத் தவிர வேறு வசதிகள் இல்லை. நம் விருப்பப்படி போவதற்கு மிதிவண்டி ஒன்று தான். மூன்றுமாதக் குழந்தை நிலையில் பார்த்தேன். ''ஜனகராஜன்'' என்று திருநாமம் இட்டிருந்தனர். பின்னால் இந்தக் குழந்தையைக் கொண்டு கணவன் மனைவியை இணைத்துவரும் வாய்ப்பு வரும், இறையருள் இருப்பின் அது நடைபெறும் என எண்ணியிருந்தேன். என் மைத்துனர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டுவிட்டார் (1942); 1944இல் ஜனகராஜனுக்கு நல்ல கல்வி அளித்து உயர்ந்தவனாகச் செய்யவேண்டும் என்று நினைத்து துறையூரில் படிக்க வைத்தேன். இறையருள் இல்லாமையால் பையன் அற்பாயுளில் இறந்தான். (இதன் விவரம் பின்னர் வரும் ஓர் குமிழியில் — இந்த நூலின் இரண்டாம் பகுதியில் வெளி வரும்).

இரண்டு நாட்களில் எருமைப்பட்டியில் தங்கி இருந்தேன். ஒருநாள் மிட்டாதார் V. வாசுதேவ ரெட்டியார்

விருந்தளித்தார். சின்னப் பண்ணை ரெட்டியார் எதிர்வீட்டு இராமச்சந்திர ரெட்டியாரின் நட்பும் கிடைத்தது. சின்னப் பண்ணை ரெட்டியார் வயல், காடு முதலிய இடங்கட்கு என்னைக் கூட்டிச் சென்று காட்டினார். எந்திரம் போல் மனம் அதில் ஈடுபடாமல் அவ்விடங்கட்குச் சென்று வந்தேன். இரண்டு நாட்கள் கழித்துப் பொட்டணம் திரும்பினேன். என் மைத்துனர்தான் குழந்தையைப் பற்றி அதிகம் விசாரித்தார். குழந்தையின் நிறம், முகக்குளி முதலிய விவரங்களைக் கேட்டார். அவர் கேட்ட போக்கு என் மனத்திற்கு உகந்ததாக இல்லை. அதைப்பற்றி விரித்து எழுதவும் விரும்பவில்லை. இப்போது ஒரு பாடல் என் மனத்தில் குமிழியிடுகின்றது.

அன்னை தயையும் அடியாள் பணியும்மலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்[21]

(மலர்ப்பொன்—திருமகள்)

கணவனுக்கு மனைவியாக அமையும் பெண்ணிடம் தாயைப் போல் அன்பும், பணிவிடைக்காரியைப்போல் தொண்டும், திருமகளைப் போல் அழகும், நிலமகளைப் போல் பொறுமையும், விலைமாதினைப்போல் இன்பந்தரும் திறனும், அமைச்சர்களைப் போன்ற அறிவும், அமைந்திருக்க வேண்டும் என்கின்றார். இப்படியுள்ள ஒரு பெண்ணுக்குக் கணவனாக அமைபவனும் இவற்றை ஏற்கும் தகுதியுடையவனாக இருக்க வேண்டுமல்லவா?

---

21. நீதிவெண்பா-30

# 45. படிப்பதற்குப் பணஉதவி

நான் இடைநிலை வகுப்பில் இரண்டாவது ஆண்டுப் படிப்பில் இருந்தபொழுது 'ரெட்டிஜனசங்கம்' ரெட்டிகுல இளைஞர்கட்கு மாணவர் படிப்புதவிச் சம்பளம் (Scholarship) தருவதாகச் சிலர் சொல்லக் கேட்டிருந்தேன். செய்தித் தாள்களிலும் இந்தச் செய்தி வெளிவந்திருந்தது. இளங்கலை வகுப்பில் சேர்ந்து பயிலும்போது இதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று கருதியிருந்தேன். கல்லூரி யில் சேர்வதற்கு முன் கோட்டாத்தூர் சென்று என் ஒன்று விட்ட தமையன் திரு. ஞானி சதாசிவ ரெட்டியாரை இட்டுக் கொண்டு துறையூர் சென்று திரு பிரசன்ன முத்து வேங்கடாசலதுரை (பி ஏ..பி.எல்.) என்பவரைச் சந்தித்து எனக்குப் படிப்புதவிச் சம்பளம் பெறுவதற்குரிய எல்லாத் தகுதிகளும் இருப்பதாக சான்றிதழ் ஒன்றையும், அக் காலத்தில் சென்னையில் மிகவும் புகழ் வாய்ந்த வழக்குரைஞ ராக இருந்த திரு இ.வி. சுந்தரரெட்டி (பி.ஏ ,பி எல்.) என்பவருக்கு ஒரு பரிந்துரைக் கடிதமும் பெற்றேன்.

அந்தக் காலத்தில் ரெட்டியார் வகுப்பில் பட்டம் பெற்ற வர்கள் நால்வர்தாம். இருவர் துறையூர் பெருநிலக்கிழவரின் இரு மக்கள் பிரசன்ன விசய வேங்கடாசலதுரை, பிரசன்ன முத்து வேங்கடாசல துரை என்ற இருவரும், நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த அலங்காநத்தம் என்ற ஊரைச் சேர்ந்த பொன்னுசாமி ரெட்டியார் என்பவரும் ஆவர். மூவரும் இளங்கலைப் பட்டம் பெற்று, சட்டம் பயின்று, அத் துறையிலும் பட்டம் பெற்றவர்கள். நான்காவதாகப் பி.ஏ.பட்டம் பெற்றவர் என் அரிய நண்பர் கல்லூரித் தோழர் திரு. பா. அரங்கசாமி ரெட்டியார். அக்காலத்தில் துறையூர் பெருநிலக் கிழவராக இருந்தவர் கல்வியறிவில்லாத வர். அரண்மனையைவிட்டு வெளியில் வராதவர்.

துறையூரில் அவரை நேரில் பார்த்தவர்கள் ஒரு சிலரே. இவருக்கு மூன்று ஆண் மக்கள். அவர் தம் துணைவியாரையும் மக்களையும் அரண்மனையை விட்டு விரட்டிவிட்டு வேறு விதமாகச் சிற்றின்பத்தை நுகர்ந்து வந்தவர். மனைவிமாரும் பிள்ளைகளும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பிழைப்புத் தேவைகட்காக (Maintenance) ஒவ்வொருவரும் திங்கள் ஒன்றுக்கு ரூ250/= வீதம் தொகை பெற்று வாழ்ந்து வந்தனர்.

இவர்களுள் மூத்தவருக்கு ஒரு மகன் உண்டு, இவரும் இவர் மனைவியும் மறைந்தனர். சிறுவனுக்கும் பாட்டிக்கும் சிற்றப்பன்மார்கள் உதவியாக இருந்தனர். தந்தையைவிட்டுப் பிரிந்து வந்துவிட்டதனால்தான் இருவரும் உயர்கல்வி பெற்று வழக்குரைஞர்களாக வரமுடிந்தது. பிரசன்ன விசய வேங்கடாசலதுரை, அவர் தாயார், அண்ணன்மகன் சிறுவன்- இவர்கள் திருச்சியில் வாழ்ந்து வந்தனர். விசய வேங்கடாசல துரை திருச்சியில் வழக்குரைஞர் வேலை பார்த்து வந்தார். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் (அதன் தொடக்க காலத்தில்) தமிழ் பி. ஏ. பயின்று முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ந்தவர். தமிழ் இலக்கண இலக்கியத்தில் நல்ல பயிற்சியுடையவராக இருந்தார். நீதிமன்றத்துக்கு அலங்காரபுருஷராகப் போய்வந்து கொண்டிருந்தாரேயன்றி தொழிலில் சிறக்கவில்லை. எவருடனும் அதிகமாகப் பேசுவது மில்லை; தாம் கற்ற தமிழறிவைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதுமில்லை. 'இணரூழ்த்தும் நாறாமலரனையராகத்[1]' திகழ்ந்தார் என்று சொல்லி வைக்கலாம். இவருடைய அண்ணன் மகன், தம் பாதுகாப்பிலிருந்தவன், பள்ளியிறுதி வகுப்பைக் கூடத்தாண்ட முடியாதவனாகிவிட்டான். பெரு நிலக் கிழவரின் சொத்துமுழுவதற்கும் இவன்தான் உரியவன்.

1. குறள்—650 (சொல்வன்மை)

பிரசன்ன முத்து வேங்கடாசல துரை துறையூரில் வழக்குரைஞராகத் தொழில் நடத்திவந்தார். இவரும் தொழிலில் சிறக்கவில்லை. நீதிமன்றத்துக்கு (Munsifs court) எதிரில் வீடு இருந்தது. இவரும் நீதிமன்றத்தின் 'அல்ங்காரபுருஷரே'. பெரிய குடும்பத்தில் பிறந்தவரா தலால் மதிப்புடன் திகழ்ந்தார். நான் இடை நிலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேறித் தேர்வுமுடிவுகள் செய்தித் தாளில் வெளிவந்த அன்று கோட்டாத்தூரில் இருந்தேன். அப்போது இவர் சட்டமன்ற மேலவைத் தேர்தலில் உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடும் காட்டுப் புத்தூர் பெரு நிலக்கிழவர் திரு சப்தரிஷிரெட்டியாருக்காக வாக்காளர் களை நாடிக் கோட்டாத்தூருக்கு வந்திருந்தார். அப்போது இவருக்கு அறிமுகமானேன். பின்னர் சான்றிதழ், பரிந்துரைக் கடிதம் இவை பெறப் போகும்போது என்னை எளிதாக அடையாளம் கண்டு கொண்டு அவற்றை வழங்கினார்.

கல்லூரியில் சேர்ந்ததும் இந்தப் பரிந்துரைகளோடு ரெட்டிஜன சங்கத்திற்கு முதல்வர் சான்றிதழுடன் விண்ணப் பம் அனுப்பினேன். இரண்டுதிங்களில் ஆண்டொன்றுக்கு ரூ100/=வீதம் வழங்குவதாகவும், அது மாதம் ஒன்றுக்குப் பத்துரூபாவீதம் வழங்கப்படும் என்றும், இரண்டாவது ஆண்டில் வேண்டுகோளைப்புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் ரெட்டிஜன சங்கத்திலிருந்து கடிதம் வந்தது. அக் காலத்தில் இஃது எனக்குப் பேருதவியாக இருந்ததால் பெரு மகிழ்ச்சி அடைந்தேன்.

அந்தக் காலத்தில் கல்லூரியில் கட்டணம் ஆண் டொன்றுக்கு ரூ90/=தான். இதைத்தான் ரெட்டிஜன சங்கம் வழங்கிவந்தது. சங்கத்தின் மூலம் மாதம்ரூ10/வீதம் பத்து மாதத்திற்கு வழங்கிவந்தது, இளங்கலை வகுப்பில் பயின்று

வந்தபோது இரண்டாண்டுசட்கு இத்தொகை பெற்றேன். இக்காலநிலையை வைத்துப் பார்க்கும்போது இத்தொகை மிகக்குறைவாகத் தோன்றினாலும், அக்காலத்தில் இது பேருதவியாக இருந்தது. உணவு விடுதியில் உண்போருக்கு இத்தொகை இரண்டு வேளை உணவுக்குப் போதுமானதாக இருந்தது. மாதாமாதம் முதல்வாரத்தில் பணவிடை மூலம் ரூ9-14-0 வரும்; இரண்டணா அஞ்சல் சேவகனுக்குத் தருவேன். ரூ 9-12-0 என்செலவுக்கு ஆகும்.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.[2]

என்ற குறளையும், அக்கால நோக்குவதல்லது பொருள் நோக்கலாகா தென்பதாம்' என்ற பரிமேலழகரின் உரையையும் இப்போது சிந்தித்துப் பார்க்கின்றேன்.

குமிழி—46

# 46. மீண்டும் கல்லூரி வாழ்க்கை

தலைவன் தலைவியை மணந்து கொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பொழுதுதான் தலைவியை விட்டுப் பிரியும் வாய்ப்புகள் நேரிடும் என்று அகத்திணை இலக்கியங்கள் கூறுகின்றன. அகப்பொருள் நூல்களில் ஆறுவித பிரிவுகள் கூறப்பெறுகின்றன. இறையனார் களவியல் என்னும் நூலில்,

ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்(று)
ஆங்க ஆறே அவ்வயிற் பிரிவே[1].

2. குறள் - 102 (செய்ந்நன்றியறிதல்)
1. இறை. களர். நூற். 35

என்று அப்பிரிவுகள் தொகுத்துக் கூறப்பெறுகின்றன. என் இல்லறவாழ்வில் கல்வியின் பொருட்டு ஏற்பட்டது 'ஓதல் பிரிவு' ஒன்றேயாகும். இஃது மூன்றாண்டுகள் நடைபெற்றது. இளங்கலைப் பட்டபடிப்புக் (பி. எஸ்சி.) காலத்தில் இரண்டாண்டும், எல். டி. பட்டப்படிப்பின்போது நேரிட்ட ஓராண்டுப் பிரிவும் ஓதற்பிரிவில் அடங்கும். ஆனால் விடுமுறை நாட்களில் 'பிரிவு விரதம்' இல்லை. மற்றும் பட்டப் பிடிப்பு முடிந்த பிறகு நடைபெற்ற 'உத்தியோகவேட்டை' யின்போது ஓராண்டு பிரிவு இல்லை. அதன் பிறகு ஆசிரியப் பயிற்சி (எல்.டி) பெறும்போது ஓராண்டு பிரிவு ஏற்பட்டது. இந்த இரண்டு பட்டங்கள்தாம் பிரிவை மேற்கொண்டு பெற்றவை. ஏனைவித்துவான், பி.ஏ., எம். ஏ., பிஎச். டி. பட்டங்கள் பிரிவின்றியே பெற்றவை என்பது குறிப்பிடத் தக்கது. பட்டங்கள் பெறுவதில் உண்மையான ஞானம் பெற வேண்டும் என்ற'அவா' இருந்தால், இல்வாழ்க்கை இதற்குத் தடையாக இருக்காது என்பதற்கு நானே ஓர் எடுத்துக் காட்டாக அமைகின்றேன்.

பொட்டணத்தில் ஆறுதிங்கள் இல்லற வாழ்க்கை (இன்ப வாழ்க்கை?) காற்றினும் கடுக ஓடிவிட்டது. ஜுன் திங்களில் (1937) கல்லூரியில் சேர்வதாகக் கல்லூரி முதல்வருக்குக் கடிதம் போட்டேன். கல்லூாரி திறக்கும் இரண்டு நாள்முன்னதாக ரூ150= எடுத்துக்கொண்டு (இதை என்மைத்துனரே கொடுத்தார்) திருச்சி புறப்பட்டேன். கல்லூரியில் சேர்வதற்கு முதல்வரிடம் இசைவு பெற்றேன். முதற் பகுதிக் காலத்திற்குரிய கட்டணங்களைச் செலுத்தினேன். சென்ற ஆண்டில் தங்கியிருந்த வாணப்பட்டறைத் தெருவிலுள்ள அறையை உறுதிப்படுத்திக்கொண்டு ஒரு மாதத்திற்குரிய வாடகையை (ரூ6/=) முன்பணமாகச் செலுத்தினேன். முதல் ஆண்டு திரு. ஜி. எம் விருத்தாசலம், (பெரம்பலூர் வட்டம், கருடமங்கலத்தைச்சேர்ந்தவர்) என் அறைத் தோழராக அமைந்தார்,

இலால்குடி உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் படிவத்தில் படித்துக்கொண்டிருந்தபொழுதே (மே 1936) இவர், வகுப்புத் தோழர் பி.பி. சே.தியாகராசன்,இலால்குடி வட்டம் பெருவள நல்லூரைச் சேர்ந்தவர்), இவர்கட்கு இரண்டு வகுப்புகள் கிழே படித்துக் கொண்டிருந்த என். வி. முத்துக்கிருட்டிணன் (பெரம்பலூர் வட்டம், நாரணமங்கலத்தைச் சார்ந்தவர்) ஆகிய மூவரும் எனக்கு அறிமுகமானவர்கள். அக்காலத்தில் இலால்குடியில் மிகஉயர்ந்த நிலையில் பள்ளி உணவுவிடுதியை மிகக் குறைந்த செலவில் நடத்திவந்த திரு. வி. பாலசுப்பிரமணியப் பிள்ளை (உயர்நிலைப்பள்ளி இடை நிலை ஆசிரியர்) இவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். இவர்கள் மூவரும் துடுக்காகவும், சுறுசுறுப்பாகவும் படிப்பில் ஆர்வம் மிக்கவர்களாகவும் இருந்தமையாலும் இத்தைய இயல்புகளையுடைய என்னை இவர்கணித்தறித்திருந் தமையால் இவர்களை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார் எனக் கருதுகின்றேன். நான், விருத்தாலம், முத்துக் கிருட்டிணன் ஆகிய மூவரும் நடுத்தர நிலையிலுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தியாகராசன் மேட்டுக்குடி வகுப்பைச் சேர்ந்தவர். எங்கள் மூவரையும் சிறுவயதிலே கவனித்த பழம் பெரும் புலவர் ஒருவர் எங்கள் இயல்புகளைப் பதிய வைத்துள்ளார்.

பூவுலகில் மானிடராய்த் தோன்றஅரி தென்னும்
　　புகழுரையை யாம்மதியோம் புண்ணியனார் பாதம்
மேவுதிரு மெய்யறிவும் நற்செயலும் கொண்டு
　　விழுமியநல் குணங்களொடு திகழுமவர் அன்றே
தாவுதிரை சூழ்உலகில் மாந்தரெனச் சாற்றும்
　　தகவுமிக வுடையர்வெறும் சனித்தல்பொருள் ஒன்றோ
பாவுறு எம் தோழரவர் பல்கலைக் குரிசில்
　　பைந்தமிழின் சுவையனையார் வந்தணைந்தோர்
எவர்க்கும்

நகைமுகமும் இன்சொல்லும் இயல்பினிலே வாய்ந்த
நண்பரவர் சுப்பு எனும் நாமம்உறு செம்மல்
மிகையொன்றும் கூறுகிலேன் விளம்புவதொன்றுண்டு
விளையுமொரு பயிர்முளையில் தெரியும்எனற் கேற்ப
தகைசான்ற மூவரவர் தலைநாளில் ஓர் நாள்
தமியேன்கண் டுரையாடும் சார்புவரப் பெற்றோன்
வகையான கல்விபயில் மாணவராம் நிலையில்
வந்தஅவர் இவரெனவே வகுத்துரைப்பக் கேண் மின்;

பழமலையின் திருப்பெயரான் வழக்கறிஞன் வல்லான்
பண்புமிகு மருத்துவனாம் அன்புமுத்து கிருஷ்ணன்
அழகுதமிழ் மொழியினொடு ஆங்கிலமும் தேர்ந்த
ஆசிரியப் பெருந்தகையாம் சுப்புஎனும் அண்ணல்
விழலாக்கா தொருநொடியும் பெறற்கரிய தென்று
வினையாற்றும் திறனதனால் மேனிலையில் நின்று
பழகுதமிழ் அனையராய்ப் பெயர்பெறுவர் என்று
பண்டேயென் பேதைமனம் கண்டதின்று மெய்யே

இவ்வாறு பதிவுசெய்த புலவர் வேளாண்மைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; வைணவ மணி எனப் போற்றத்தக்க திருமால் பக்தர். எண்பது அகவையைத் தாண்டிய இவர் இன்னும் வாழ்ந்து வருகின்றார்; இவர் ஆசி எனக்கு இன்றும் உண்டு.

நான் ஏதோ புத்தகங்களைக் கட்டிக்கொண்டு இன்னும் அழுகின்றேன், கலைமகள் அருள் இன்னும் இருந்து வருகின்றது. விருத்தாசலம் இன்று திருச்சிமாநகரில் புகழ்பெற்ற வழக்குரைஞராகத் திகழ்கின்றார், இவர் திருச்சி கண்டிராத அளவுக்குப் பெரும் புகழுடன் திகழ்

2. என் மணிவிழா மலர் - பக், 25 (பெ, இராமாநுச ரெட்டியார்)

கின்றார்; திருமகளின் அருள் மழையாகப் பொழிகின்றது. முத்துக்கிருட்டிணன் சிறந்த மருத்துவராகத் திகழ்ந்து வருகின்றார், ஏழைஎளியவர்களிடம் குறைந்த தொகையைப் பெற்றுத் தொண்டாற்றுவதனால் இவருக்கு 'ஜனதா டாக்டர்' என்ற பெயர் வழங்கி வருகின்றது. இவர் மேலும் திருமகள் அருள் பாய்ந்தவண்ணம் உள்ளது.

நான் தங்கியிருந்த வீட்டு மேல்மாடியில் நான்கு அறைகள் இருந்தன, அவற்றுள் இரண்டு மிகச் சிறியவை; இரண்டு சற்றுப் பெரியவை. பெரிய அறைகட்கு ரூ5/-ம் சிறியவற்றிற்கு ரூ3/-ம் வாடகையாக இருந்தது. நானும் விருத்தாசலமும் ஓர் அறையில் தங்கியிருந்தோம். ஓர் ஆண்டு முடிய. அடுத்த ஆண்டு அவர் புனித சூசையப்பர் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பெற்ற உணவு விடுதியில் சேர்ந்து கொண்டார், சிறிய அறைகள் ஒன்றில் தம்பையா என்ற ஒரு கல்லூரிமாணவரும் மற்றொன்றில் காவலர் (Head-Constable) ஒருவரும் இருந்தனர், மற்றொரு பெரிய அறையில் சுப்பண்ணன் என்ற கணித மாணவரும் மற்றொருவரும் தங்கியிருந்தனர்.

நான் தங்கியிருந்த வீடு ஒரு பிள்ளைமாருக்குச் சொந்தமானது, வீட்டுக்குரியவரும் அவரது இல்லத்தரசியும் அறுபது அகவையை எட்டும் நிலையிலிருந்தவர்கள். மிகவும் அன்பாகப் பேசி எங்களை மகிழ்விப்பவர்கள், எங்கள்மீது தந்தை, தாய்ப்பாசத்தைக் காட்டுபவர்கள். நான் தங்கியிருந்த அறை தெருவை நோக்கியிருந்தது. அங்கிருந்து சாளரத்தின் வழியாக உச்சிப்பிள்ளையார் கோயிலையும் தாயுமானசுவாமியின் ஆலயத்தையும் காணலாம். இந்த அறைக்கு ஒருரூபாய் அதிகமாகவாடகை கேட்டார். காரணம், இதிலிருந்து படித்துத் தேர்வு எழுதியவர்கள் முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்று, கல்லூரியிலும் முதன்மையாக இருந்தவர்

கள் என்றும், பிள்ளையாரும் சுவாமியும் இவ்வறையிலிருப்பவர்கள்மீது அருள் பொழிவார்கள் என்றும் கூறுவார் அவர் சொன்ன காரணத்தின் உண்மையை அறிவு கொண்டு ஆராய்தல் இயலாது. பெரியவர், நல்லவர், ஒரு ரூபாய் அதிகம் கேட்பதத்கு இவ்வாறு காரணம் கூறுகின்றார் என்று மனமுவந்து ஒரு ரூபாய் அதிகமாகவே தந்து இந்த அறையை அமர்த்திக் கொண்டேன்.

இந்த விடுதியில் இருந்தவர்கள் ஆறுபேர். அக்காலத்தில் தெப்பக்குளத்தருகில் சைவர் உணவு விடுதியொன்றிருந்தது. முதலியார் 'விடுதி' என்ற மற்றோரு விடுதியும் இருந்தது இரண்டிலும் மாதச்சாப்பாட்டிற்கு ரூ7/-வாங்கினர். அந்தக் காலத்தில் அளவுச் சாப்பாடு என்பது இல்லை, பலர் இதில் உணவு கொண்டனர். எங்கள் அனைவருக்கும் சுவை ஒத்து வராததால், நாங்கள் மாயவரம் உணவுவிடுதியில்[3] 'எடுப்புசாப்பாடு'ஏற்பாடு செய்து கொண்டோம், பதினெட்டு ரூபாய் எடுப்பில் மூவர் சாப்பிடலாம். அக்காலத்திம் இந்த விடுதியிலும், சின்னகடைவீதியிலுள்ள வேங்கட உணவுவிடுதியிலும் பிராமணர்கள் மட்டிலும் தான் உள்ளே சென்று உணவு கொள்ளலாம்; பிராமணரல்லாதாருக்கு 'எடுப்பு சாப்பாடு, வசதியிருந்தது. உணவுக் கடைவைத்துப் பிழைக்கும் பிராமணர்களும் இந்த 'வைதிக முறையை' அனுசரித்துவந்தது இப்போது வியப்பினைத் தருகின்றது. தந்தை பெரியார் ஈ. வெ. ரா, அவர்களின் பிரசார பீரங்கியும் இந்த 'வைதிக முறையை'த் தொடக்கத்தில் தகர்க்க முடியாதிருந்தது, பிராமண ரல்லாத சில சமூகத்தினரிடம் இந்தப் 'பிராமணத்துவம்' நிலைபெற்றிருந்

3 மாயவரம் - மாயூரம், இப்போது மயிலாடுதுறை, என்று பெயர் மாறறப்பட்டுள்ளது. அதாவது, பண்டிருந்துவந்த சரியானபெயர் மீண்டும் புழக்கத்திற்கு வந்துள்ளது.

தமையே இதற்குக் காரணமாகும், இதனால் பெரியார் இரு முனைச் சமூகப்போர் தொடுக்க வேண்டிய நிலையிலிருந்தார்' நாளடைவில் பெரியாரின் பீரங்கியால் இந்த முறை தவிடு பொடியாகிவிட்டது.

தேசிய கவி பாரதியாரும் இந்த வைதிக முறையைத் தகர்த்தெறியக் கவிதை வெடிகளை வீசினார். 'பார்ப்பானை ஐயர் என்றகாலமும் போச்சே' என்ற அடி எத்தனையோ மேடைகளில் முழங்கப்பட்டது. இது தேச விடுதலையை நோக்கி வீசப்பெற்ற வெடி குண்டு.

நந்தனைப் போல்ஒரு பார்ப்பான்—இந்த
நாட்டினில் இல்லை, குணம் நல்லதாயின்
எந்தக் குலத்தின ரேனும்—உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்[4]

சூத்திர னுக்கொரு நீதி—தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடு மாயின்—அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்[5]

வையகம் காப்பவ ரேனும் - சிறு
வாழைப் பழக்'கடை வைப்பவ ரேனும்
பொய்யக லத்தொழில் செய்தே - பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்[6]

இவை சமூக நோய் அகன்றிட பாரதியார் தந்த ஆயுர்வேதக் குளிகைகள், இவை, மெதுவாக மனம் மாற்றம் செய்பவை· அழுகுபுண்கள் இவற்றால் ஆறுமோ என ஐயப்படத்தக்கவை.

4. பா.க : புதியபாடல்கள் -உயிர் பெற்றதமிழர்பாட்டு.
5. ஷை - ஷை - 13
6. ஷை - ஷை 14

ஆனால் தந்தை பெரியாரும் அவருடைய சீடர்களும் தரும் மருந்து அழுகு புண்ணில் காரத்துணி வைத்துக்கட்டுவது போன்றவை. ஆனால் இந்த மருத்துவத்தின் பலன் காண கிட்டத்தட்ட முக்கால் நூற்றாண்டு ஆயிற்று, உணவு முறையைப்பற்றிப் பேசிய மனம் உள்ளுக்குள் பொங்கி எழுந்த தால் பேனாவை எங்கோ இழுத்துச் சென்றுவிட்டது. இன்றும் அந்த மயிலாடுதுறை உணவு விடுதி உள்ளது; இப்போது உணவு கொள்வதில் சாதி வேற்றுமை காட்டுவதில்லை. இன்று வேங்கட உணவுவிடுதி இல்லாதொழிந்தது.

நாங்கள் தங்கியிருந்த விடுதியின் உரிமையாளர்கள்- தம்பதிகள் - இருவரும் சற்றுப் பருத்த உடலையுடையவர் கள்; குள்ளமாக இருந்தமையால் இந்தப் பருமன் அதிகமாகத் தெரிந்தது. இதனால் விடுதியில் தங்கியிருந்த சுப்பண்ணன் இவர்கட்குக் 'குண்டுத்தம்பதியர்' என்று திருநாமம் சூட்டி னார் ஆகவே, நாங்கள் ஆண் உரிமையாளரை மிஸ்டர்குண்டு (Mr Fat) என்றும், பெண் உரிமையாளரை மிஸஸ் குண்டு (Mrs-Fat) என்றும் செல்லமாகச் சுட்டுவோம். எப்படியோ எங்கட்கு உதவியாளாக இருப்பதற்கு எங்கிருந்தோ வந்தான் ஓர் இளைஞன். அவனைப் பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. பரம்பரை ஆண்டியோ பஞ்சத்தில் ஆண்டியோ என்பது தெரியவில்லை. இவன் நிலையைப் பார்த்து சுப்பண்ணன் 'பிட்சு' என்று திருநாமம் சூட்டினார், எங்கள் சிறிய உலகத்தில் இரண்டாண்டுக் காலம் அவன் இதே பெயரால் வழங்கப்பெற்றான்.

பாரதியார் சித்திரிக்கும் 'கண்ணன் - என் சேவகனைப்' போன்றே பணியற்றினான். 'வெட்டி வா' என்று ஏவினால் 'கட்டி வருவான்'. தவறாக ஏதாவது அவன் செய்துவிட்டால் எங்களில் யாரும் அவனைக் கடிவதில்லை. அறிவுரை கூறித் திருத்துவோம். நகைச் சுவையாக அவனைப்பற்றி

ஏதேனும் கிண்டலாகச் சொன்னால் அவனும் எங்களுடன் சேர்ந்து சிரிப்பான்; முகச்சுழிப்பின்றி சிரிப்பு விருந்தில் கலந்து கொள்வான். 'விருந்துப் பண்டமாக' இருப்பவன் அவன்தானே! அவன் முதன்முதலில் வேலைக்காக எங்களை நாடியபோது 'என்ன சம்பளம் வேண்டும்?' என்றோம். அவனோ சேவகக் கண்ணன் போலவே,

''ஐயன்மீர்!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிக ளேதுமில்லை
நானோர் தனியாள்;............
''............. ...........; தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை; நெஞ்சிலுள்ள''
காதல் பெரிதெனக்குக் காசுபெரி தில்லை''

என்று பேசினான். ''ஆளுக்கு ஒரு ரூபாய் போட்டு ஆறு ரூபாய் தருகின்றோம். நீ காலையும் மாலையும் இரண்டு செட்டில் எடுப்பு சாப்பாடு மாயூரம் விடுதியிலிருந்து எடுத்து வரவேண்டும். இதில் மிஞ்சும் சாப்பாடு உனக்குப் போதும். கடைக்குப்போதல் போன்ற ஏதாவது 'எடுபிடி' வேலையும் செய்ய வேண்டும். அவ்வப்போது ஏதாவது 'சில்லறையும்' உனக்குக்கிடைக்கும். மாலையில் அரிக்கேன் விளக்குகளைத் துடைத்து எண்ணெய் போட்டு வைக்க வேண்டும். சில சமயம் எங்கள் பனியன், அண்டர்வேர் இவற்றைத் துவைத்துப் போடவும் வேண்டும். சட்டை, வேட்டிகளை அவ்வப்போது லாண்டரியில்போட்டு வாங்கி வந்து தர வேண்டும். இவைதாம் உன் வேலை. எங்களுடன் தாழ்வாரத்தில் தங்கிக்கொள்ள லாம் பகல் ஒரு மணிக்கு சிற்றுண்டி விடுதியில் சிற்றுண்டி வாங்கி வைக்க வேண்டும். திரு. ரெட்டியாருக்கு மட்டிலும் (எனக்கு) நண் பகலிலும் இரவிலும் பால்வாங்கி வைக்க

7. கண்ணன்-என் சேவகன்-அடி 34-38.

வேண்டும்'' என்றோம். அவனும் 'சரி' என்று ஒப்புக் கொண்டு எங்களுடன் தங்கி விட்டான். எங்களுள் ஒருவனாகவே ஆகிவிட்டான்.

நாளாக நாளாக எங்களிடத்தில் பிட்சுவுக்குப் பற்று மிக வளர்ந்து வந்ததைக் காண முடிந்தது. அவனால் எங்கட்கு ஏற்பட்ட நன்மைகளைச் சொல்லி முடியாது. வாய் முணுப்ப தில்லை. அறைகளை நன்கு பெருக்கித் தூய்மையாக்கி விடுவான். போடும் துணிகளைத் தூய்மையாக்கிக் காய வைத்து மடித்து வைப்பான். நாங்களும் அவனை எங்களில் ஒருவனாகவே கருதி, பழைய வேட்டி, பழைய சட்டை தருவோம். தீபாவளி, பொங்கலுக்கு புதிய சட்டை, புதிய வேட்டி வாங்கித் தருவோம். அந்தக் காலத்தில் ஆறு ரூபாய்க்கு 'மூன்று செட் துணிகள்' வாங்கலாம். விடுமுறைக்குப் பிறகு திரும்பி வந்து சேரும்போது விடுமுறைக்கு (2 மாதம்) உள்ள சம்பளத்தையும் தருவோம். அதனைப் பெற்று மிகமிக மகிழ்வான். பணப் புழக்கம் அதிகம் இல்லாத காலம். இட்டிலி காலணா; தோசை முக்காலணா; அரை கப் காஃபி முக்காலணா.[8] இக்கால 12 காசுக்கு அக்காலத்தில் வயிறு நிறைய சிற்றுண்டி கொள்ள லாம். நாங்கள் சொன்ன பணிகளை மிகத் திறமையாக நிறைவேற்றி வந்தான்.

நான் மட்டிலும் அவனுக்கு.2/- ரூ தனியாகக் கொடுத்த தாக நினைவு. இரண்டு இட்டிலி, ஒரு தோசை, ஒரு வடை பகல் ஒரு மணிக்கு தயாராக வாங்கி வைத்திருப்பான். நான் அறையில் பிரஸ்ஸர் ஸ்டவ் ஒன்று வாங்கி வைத்திருந்தேன். ஆழாக்குப் பாலைச் சிறிது நீர் விட்டுக் காய்ச்சி ஓவல்டின்

8. காலணா : 3 காசு ($1\frac{1}{2}$ புதுக்காசு); முக்காலணா - 9 காசு ($4\frac{1}{2}$ புதுக்காசு). அக்காலத்தில் ரூபாய்க்கு 192 காசு.

பானம் தயாரித்துக் கொள்வேன். சிற்றுண்டி அருந்தியதும் இதனை உட்கொள்வேன். இரவிலும் ஆழாக்குப் பாலைக் காய்ச்சிப் பருகுவேன். பால் பாத்திரங்களைத் துப்புரவு செய்தல் போன்ற வேலைகளைச் செய்து வந்ததால், ரூ 2/- தனியாகக் கொடுத்து வந்தேன். நான் பொட்டணம் போகும்போதும், கோட்டாத்தூர் போகும்போதும் நான் விரும்பும் பாசிப்பருப்பு இலட்டு, காராச்சேவு அல்லது முருக்கு கொண்டு வருவேன். மாலையில் 5 மணிக்குக் கல்லூரியி லிருந்து திரும்பியதும் இவற்றில் சிறிது உண்டு களைப்பைப் போக்கிக் கொள்வேன். அதிகமாக வெளியில் போவதில்லை. அப்படிப் போனால் காவிரிப்பாக்கம் (4 ஃபர்லாங் தொலைவு) சென்று உலாவுவேன்; அல்லது காவிரிக் கரையின் அருகி லுள்ள நீராகார மடத்துச் சாமியாரிடம் பேசிக் கொண் டிருப்பேன். இவ்வாறு இரண்டாண்டு அறை வாழ்வு இனிமையாகச் சென்றது. இரவு எட்டு மணிக்கு உணவு கொண்டதும் மாடியில் வெட்ட வெளியில் உட்கார்ந்து கொண்டு இந்த அறுவரும் அளவளாவுவோம். அது பெரும் பாலும் பேராசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதைப் பற்றிய திறனாய்வாகத்தான் இருக்கும்.

தம்பையா என்பவர் ஓர் அநுபவத்தை அவிழ்த்து விட்டார். அவர் இன்று கல்லூரி மாணவர்கட்கு N. C C. இருப்பதுபோல் அன்று U.T.C. என்ற படைப்பயிற்சி இருந்து வந்தது. முதலிரண்டு ஆண்டு அவர் திருச்சி மேட்டுச் சிந்தா மணியில் அறையொன்றில் தங்கியிருந்து படித்து வந்தார். புதன் ஞாயிறு ஆகிய வார விடுமுறை நாட்களில் கல்லூரி மைதானத்தில் படை அணிவகுப்பு (Parade) நடைபெறும். துப்பாக்கி இயக்குதல் போன்ற விளக்கமும் தெளிவாக்கப் பெறும். அதற்கு அவர் அதிகாலையில் 5.45க்கு U. T. C ஆடையணிந்து மேட்டுச் சிந்தாமணியிலிருந்து மிதி வண்டி யில் வருவது வழக்கம். இப்போது சாலை அமைப்பு முதலிய

வற்றில் மாற்றம் செய்திருப்பது போன்ற நிலை அக்காலத்தில் இல்லை. கரூர் நெடுஞ்சாலையில் திருச்சி நகரை விட்டுத் தனியாக ஒரு ஃபர்லாங் தொலைவில் அஃது ஒரு தீவுபோல் அமைந்திருந்தது. பல அந்தணக்குடும் பங்களும் சிறு தொழிலாளர் குடும்பங்களும் உழவர் பெருமக்களும் அங்குக் குடியிருந்தனர். அமாவாசை போன்ற நாட்களில் தர்ப்பணம் முதலிய சடங்குகட்குப் பலர் அங்கு வருவார்கள். காவிரியில் நீராடுவதற்கு நல்ல துறையமைப்பு படிக்கட்டு களுடன் அமைந்திருந்தது. இந்தப் புறநகர்ப் பகுதியில் நாட்டுப்புறக்களை தட்டும் அமைதியான வாழ்வுக்குச் சிறந்த இடம். மேட்டுச் சிந்தாமணி.

கரூர் நெடுஞ்சாலையில் ஏராளமான இரட்டை மாட்டு வண்டிகள் சரக்குகளை ஏற்றிக் கொண்டு மயிலஞ் சந்தையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும். கழுத்துப் புண்ணுடன் கூடிய எருதுகள் கட்டப் பெற்றிருக்கும் வண்டி களில் வரும் வண்டியோட்டிகள் வண்டிகளிலிருந்து இறங்கி வணக்கம் செலுத்தி ரூ. 2/- ரூ. 5/- என்று தம்பய்யாவிடம் தந்து தங்கள் வண்டிகளை நிறுத்தாது அனுப்புமாறு வேண்டுவார்களாம். முதலில் தம்பையாவுக்கு ஒன்றும் புரிய வில்லையாம். பிறகு தன்னைத் தான் அணிந்துள்ள ஆடையைக் கண்டு மயங்கி S.P.C.A.யைச் சார்ந்த ஆள் என்று தவறாகக் கருதி இப்படிப் பணம் வழங்க முயன்றதை எங்களிடம் சொல்லிச் சொல்லி மகிழ்வார். இப்படிக் கள்ளங் கபடம் அற்ற வண்டியோட்டிகளும் அக்காலத்தில் இருந்து வந்தனர். இந்நாளில் அத்தகைய வண்டிகட்கு வேலையே இல்லை. அவை செய்த பணியை இப்போது சரக்குந்து (Lorry)—பாரப் பொதி வண்டிகள் செய்து வருகின்றன. இப்படித் தம்பையாவும், தலைமைக் காவலரும் (Headconstable) தம் பல்வேறு அநுபவங்களை அவிழ்த்து விட்டு எங்களை மகிழ்விப்பார்கள்.

# 47. இயற்பியல் புகழ்ப்பட்டப் (ஆனர்ஸ்) படிப்பு

1936ல் இளங்கலைப் பட்டம் படிப்பு (பிஎஸ். சி) வகுப்பில் சேர்வதற்கு முன் இயற்பியல் புகழ்ப்பட்டப்படிப்பு வகுப்பில் (பி.எஸ் சி ஆனர்ஸ்) சேர்வதற்கு 'பகீரதப் பிரயத்தனம்' செய்தேன். அக்காலத்தில் புனித சூசையப்பர் கல்லூரியில் கணிதம், பொருளாதாரம், இயற்பியல் இந்த மூன்று பாடங்களில் மட்டிலும் தான் புகழ்ப்பட்டப் படிப்புக்கு (Honours Course) வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தன. என் விஷயத்தில் பரிந்துரைப்பதற்குப் பிறந்த நாள் தொட்டு இன்றுவரை எவரும் இலர். 'பெரியாரைத் துணைக் கோடல்' என் விஷயத்தில் பொருளற்றதாகி விட்டது. அப்படிப் பரிந்துரைக்கும் பெரியார் வேண்டு மானால் நான்தான் அவரையும் பார்த்து முயல வேண்டும்; பலன் அளிக்க வேண்டியவர்களையும் நான்தான் பார்க்க வேண்டும். பரிந்துரைப்பவர்களைப் பார்ப்பதைவிடப் பலன் அளிப்பவர்களைப் பார்ப்பதே சிறந்தது எனப்பட்டது என் மனத்தில், பூசாரியைப் பார்க்க முயல்வதை விட சுவாமியையே பார்ப்பது மேல் என்பதுதான் ஒருவிதத்தில் என் வாழ்வில் அமைந்து விட்டது.

புகழ்ப்பட்டப் படிப்பிற்கு நானே அடிக்கடி மறைத் திரு. ஜெரோம் டி. சௌஸா (முதல்வர்) அவர்களை அடிக்கடிப் பார்த்துக் கெஞ்சினேன்! 'ஒரு மாணவன் பல முறை வந்து தம்மைப்பார்த்து இப்படித் தொந்தரவு பண்ணுகின்றானே' என்று அவர் மனம் கோணுவதில்லை; சினம் கொள்வ தில்லை. எப்பொழுதும் புன்முறுவலுடன்தான் காணப்படுவ வார். இம்மாதிரி தொந்தரவு கொடுப்பது முதல்வர் அறையில் அல்ல; சாமியார்கள் விடுதி (Fathers lodge)இல் தான் அடிக்

கடிப்பார்ப்பதுண்டு, ''நீ வந்தது தாமதப்பட்டது. இடங்கள் நிரம்பிவிட்டன. முயல்வதைக்கை விடுக'' என்று ஒரேயடியாக மறுத்துவிட்டார். ஓராண்டுப் படிப்புத்தடைப்பட்டு அடுத்த ஆண்டு வந்து படிப்பைத் தொடங்கும்போது இயற்பியல் புகழ்ப் பட்டப் படிப்பிற்குத் தொடக்கத்திலேயே முயன்றேன். விடுமுறைக்காலத்திலேயே முதல்வருக்குக் கடிதம் எழுதினேன். குழந்தைப் பேறு இல்லாத ஓர் இளம் பெண் அரசமரத்தைச் சுற்றி வழிபாடு செய்வதைப் போல் விடாமல் பாதிரியார் விடுதிக்குப் போவதும் வருவதுமாக இருந்தேன். பத்து நாட்கள் இவ்வாறு செய்தேன்.

ஒவ்வொரு நாளும், காலையில் 8-30மணிக்கு முதல்வரின் அறைக்குப் (விடுதியில் உள்ள அறை) போவேன். மிகச் சுறு சுறுப்பாக ஏதாவது செய்து கொண்டிருப்பார். அடிக்கடி பார்ப்பதால் எங்களிடம் பேச்சு இராது; மௌனமே பேச்சு. போனவுடன் 'வணக்கம்' செலுத்திவிட்டுத் தரையில் உட்கார்ந்து விடுவேன்; அவர் இருக்கையில் அமரச்சொல்வார். நான் மறுத்து விட்டுத் தரையில்தான் உட்கார்வேன். கல்லூரியில் நின்று கொண்டு சுருக்கமாக விஷயத்தை முடிப் பதைவிட விடுதியில் தரையில் உட்கார்ந்து சாதிப்பது மேல் எனப்பட்டது என் மனத்தில். ஆகவே, இந்தச் 'சண்டித் தனத்தை' மேற்கொண்டால் பலன் கிட்டும் என்று கருதினேன்.

மறைத்திரு. ஜெரோம் சாமியார் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலச்' சிறந்தவர். ஒவ்வொரு மாணாக்கரின் தகுதி, திறமை, உழைக்கும் திறன், நல்லொழுக்கம் முதலியவற்றையெல்லாம் நன்கு கணிக்கும் திறம் படைத் தவர். நாள்தோறும் நானும் பேசாமல் வாளா அமர்ந் திருப்பேன். அவரும் தம் காரியத்தை விடாது பார்த்துக் கொண்டிருப்பார், 9-45 ஆனதும், ''மிஸ்டர் சுப்பு,

அறையைப்பூட்டிவிட்டுச் சாவியை அலுவலகத்தில் என் தலைமை எழுத்தரிடம் சேர்ப்பாய்'' என்று கூறிவிட்டுக் கல்லூரியை நோக்கிப் புறப்பட்டுவிடுவார். நானும் அவ்வாறே அறையைப் பூட்டிச் சாவியை அலுவலகத்தில் சேர்ப்பிப்பேன், இப்படிச் சில நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் என் நிலையை விளக்கினார். இப்போதுள்ள விதிப்படி இடைநிலை வகுப்பு முடித்தவுடன் நான்கு ஆண்டு களுக்குள் புகழ்ப்பட்டப்படிப்பை முடித்துக் கொள்ள வேண்டும். மூன்றாண்டுப்படிப்பு; ஏதோ அசௌகர்யம் ஏற்பட்டால் ஓராண்டு தள்ளிப் போட்டுக் கொள்ளலாம். இப்போது ஓராண்டு உன் உடல் நலக்குறைவால் கழிந்தது. இந்தச் சலுகை இனி உனக்கில்லை, மீண்டும் ஏதாவது அசௌகர்யம் ஏற்பட்டால், இந்தச் சலுகையைப் பயன் படுத்த முடியாதாகையால், உன்நிலை 'அதோகதி'யாய்விடும் உன் நன்மையைக் கருதித்தான் இந்தப் புகழ்ப்பட்டப் படிப்பை உனக்கு நான் அளிக்க வில்லை ஆனால் இந்த விதியை மாற்றுவதற்கு முயன்று வருகின்றேன். இடைநிலைவகுப்பை முடித்த 'நான்காண்டுக்குள்' என்பதை ''புகழ்ப் பட்டப்படிப் பைத் தொடங்கி நான்காண்டுக்குள்' என்ற திருத்த முயன்று வருகின்றேன்'' என்றார். இப்போது என் நிலை எனக்குப் புரிந்தது. உடனே. அவரிடம் ''மிக்க நன்றி ஃபாதர்; என் முயற்சியைக் கைவிட்டு விடுகிறேன்'' என்று சொல்லி அவருக்குத் தொந்தரவு கொடுப்பதை நிறுத்திக்கொண்டேன். அவர் சொன்னார் ''இயற்பியல் புகழ்ப் படிப்பைவிட வேதியியல் பட்டப் படிப்பு சிறந்தது. இது பல இடங்களில் இல்லை. இது படித்தவர்கட்கு நல்ல எதிர் காலம் உண்டு'' என்று.

அந்தக்காலத்தில் மேனாட்டிலிருந்து வந்த சாமியார்கள் விருப்பு வெறுப்பின்றிப் பணியாற்றினார்கள். சாதி, சமய

வேறுபாட்டிற்கு இடம் கொடாமல் திறமைக்கு முதலிடம் தந்தார்கள். சொந்தத் தந்தையைவிட மாணாக்கர்களிடம் பரிவும் பாசமும் காட்டி அவர்தம் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார்கள். இன்றைய நிலையில் நம் நாட்டுச் சாமியார்கள் கல்வி நிலையங்களில் முக்கிய பொறுப்பில் அமர்ந்திருக்கின்றனர். இப்போது 'நாடார் கிறித்தவர்' 'தேவர் கிறித்தவர்' 'வேளாளர் கிறித்தவர்', 'பிராமணக் கிறித்தவர்' என்றெல்லாம் பாகுபாடு காட்டுகின்றனர் என்பதாகக் கேள்வி. சில ஆண்டுகட்கு முன்னர் சென்னை புரசைவாக்கத்திலுள்ள கிறித்தவ வேதாகம குருகுலத்தில் "தந்தை பெரியார் ஈ. வெ. ரா. கொள்கைகள்" என்பது பற்றி நடை பெற்ற கருந்தரங் கொன்றில் பெங்களூரிலிருந்து வந்து கிறித்தவ அறிஞர் ஒருவர் இதனை அம்பலப் படுத்தினார். "நமக்கு ஒரு விடிவெள்ளி தோன்ற வேண்டுமானால் தந்தை பெரியார் கிறித்தவராகப் பிறந்து ஒரு நூற்றாண்டு பணியாற்றினாலும் நாம் மாறுவோமா என்பது ஒரு கேள்விக்குறி" என்று உணர்ச்சியுடன் பேசிமுடித்தார்.

குமிழி—48

## 48. தேர்வுக் கண்ணோட்டம்

அன்று முதல் இன்றுவரை கல்லூரியில் பாடம் பயிற்றும் ஆசிரியர்கள் தேர்வுக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டே கற்பித்துவருகின்றனர். இன்று நாட்டில் பெரும்பாலும் மிக்க செல்வாக்குப் பெற்றிருப்பது அஞ்சல் வழிக் கல்வியாகும். இதில் பாடங்கள் தயாரித்து மாணாக்கர்கட்கு அனுப்பும் முறைகளைக் கவனித்தால், இம் முறைக்கல்வி தேர்வை முக்கிய நோக்கமாகக் கொண்டே இயங்குகின்றது என்பது தெளிவாகும். எந்தவிதமாகச் சிறந்த முறையில்

பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பெற்றாலும் பாடத் திட்டங்களின் நோக்கங்கள் மலையேறிப் போகின்றன; தேர்வு நோக்கங்களே நடைமுறையாகி விடுகின்றன. பயிற்சிக் கல்லூரியில் பத்தாண்டுகள் பணியாற்றிக் கற்பிக்கும் முறை பற்றிய நூல்கள், கல்வி பற்றிய கொள்கைகளை விளக்கும் நூல்கள், பாடத் திட்டங்களை உருவாக்கும் முறைகள் நுவலும் நூல்கள், தேர்வு முறைகளைத் தெளிவிக்கும் நூல்கள், வேறு பல்வகை நூல்கள் இவற்றை ஆழ்ந்து கற்கும் வாய்ப்பு பெற்றபிறகு கல்வியியல் பற்றிய தத்துவங்கள் தெளிவாயின. ரூசோ, வால்ட்டயர், பெஸ்டலாஸ்ஸி, மாண்டிசாரி ஃப்பிராபெல், ஜான்ட்யூவி போன்ற அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் கண்ட முறைகளை விளக்கும் நூல்களையும் ஆழ்ந்து கற்றதால் இவை மேலும் தெளிவினை நல்கியது.

கல்லூரி வாழ்வில் நான் மேற்கொண்ட முறைகளை விளக்க முயல்கின்றேன். கல்லூரியில் பயிலும் மாணாக்கர்கள் நூலகத்தைச் சிறந்தமுறையில் பயன்படுத்திக் கொள்ளும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மனிதரெல்லாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை;
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.[5]

என்று நூலகத்தைப்பற்றிப் பாரதிதாசன் கூறியிருப்பது ஈண்டு நினைவிற்கு வருகின்றது. புனிதசூசையப்பர் கல்லூரி

5. பாரதிதாசன் கவிதைகள் - புத்தக சாலை

யில் நான் படித்த காலத்தில் நூலகம் மிக அருமையாக அமைந்திருந்தது. இன்றைய நிலையில் அது மிக விரிந்து வளர்ச்சி பெற்றிருக்கும் எனக் கருதுகின்றேன். கல்லூரியில் சேரும் போதே கட்டணம் வாங்கிக் கொண்டு ஒவ்வொரு மாணாக்கனுக்கும் புத்தகப்பட்டி (Books Catalogue) தந்துவிடுவார்கள். இல்லத்திலிருந்து கொண்டே இதைப் புரட்டிப்பார்த்து தேவையான நூல்களைக் குறித்துக் கொள்ளலாம்.

மாணாக்கர்கட்குப் பயன் படும் பொருட்டு முன்னைய ஆண்டுகளில் நடைபெற்ற பல்கலைத் தேர்வுகளின் வினாத் தாள்களை கட்டமைத்து நூல்வடிவில் வைக்கப்பெற்றிருக்கும். கல்லூரியில் சேர்ந்ததும் முதல் வாரத்திலேயே இந்த வினாத்தாள் தொகுதிகளைப் பெற்றுக் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களில் நடைபெற்ற தேர்வுகளின் வினாத் தாள்களில் ஓர் ஐந்தாண்டுக்குரிய தாள்களை ஒரு நல்ல கட்டமைத்த குறிப்பேட்டில் பாடம், ஆண்டு (மார்ச்சு, செப்டம்பர்), தாள்வரிசை (1, 2, 3,...)யில் எழுதிவைத்துக் கொள்வேன். ஆங்கிலத்தில் பாட நூல்கள் ஆண்டிற்கு ஐம்பது விழுக்காடு மாறிக் கொண்டிருக்கும், இவற்றில் நடைமுறையிலுள்ள நூல்களில் வரும் வினாக்களை மட்டிலும் குறித்துவைத்துக் கொள்வேன். வேதியியல் முக்கிய பாடமாதலால் (Main) அவற்றில் பத்தாண்டுகளில் கேட்கப் பெற்ற பொதுக் கட்டுரைகளைப்பற்றிய குறிப்புகளை மட்டிலும் தனித்தனியாகக் குறித்துவைத்துக் கொள்வேன். பாடங்கள் கற்பிக்கப்பெறும்போது இவற்றைப் புரட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தால் இவை தேர்வுபற்றிய முறையை விளக்குவனவாக அமையும்,

புனித சூசையப்பர் கல்லூரியில் நூலகப்பணியாளர்கள் மிகத் திறமையாகப் பணியாற்றி வந்தனர், நூல்களைப் பெறுவதற்கு நூலகத் தாள்நறுக்கு (Library Slip) களைப் பத்துப் பத்தாகக் கட்டமைத்து வைத்திருப்பார்கள், ஒரு

கட்டின்விலை ஓர் அணா (ஆறுகாசு). அதில் நூல்எண், நூலின் பெயர், நூல் பெற்றநாள், திருப்பிக்கொடுக்க வேண்டியநாள் குறிப்பிடப்பெற்றிருக்கும், தேவையான நூல்களில் ஆறின் பெயர்களை எழுதித்தருதல் வேண்டும்; ஒரே ஒரு சமயம் மூன்று நூல்களைப் பெறலாம். குறிப்பிட்டநாளில் நூல் களைத் திருப்பித்தராவிடில் ஒருவாரத்திற்கு ஒரு நூலுக்கு ஓரணாவீதம் தண்டம் (Fine) கட்டவேண்டும், முக்கியமாக ஒருவர் வேண்டும் நூல் யாராவது பெற்றுப் போயிருந்தால் அதைக் குறித்துவைத்துக் கொண்டு அடுத்த முறை முன்னுரிமையாக அது வழங்கப் பெறும், இந்த நூலகத்தை அக்காலத்தில் நான் மிக நன்றாகப் பயன்படுத்திக் கொள்வேன். அறிவியல் பட்டப்படிப்பில் தமிழ்ப்பாடம் இல்லையானாலும் சிலசமயம் மறைமலையடிகள் திரு.வி.க. பண்டிதமணி, நாவலர் வேங்கடசாமி நாட்டார், கரந்தை வேங்கடாசலம் பிள்ளை, ரா. பி, சேதுபிள்ளை இவர்கள் எழுதிய ஒரு சில நூல்களைப் பெற்றுப் படிக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தேன். இதனால் என்னிடம், அடங்கிக் கிடந்த (Dormant) ‘தமிழ்க்காதல்’ பிற்காலத்தில் பெருகி வளர்வதற்குக் காரணமாயிற்று.

பாடங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது குறித்து வைக்கப்பெற்றுள்ள தேர்வுத்தாள்களைப் புரட்டும் போது நடைபெற்ற பாடங்களில் கேட்கப் பெற்றுள்ள வினாக்கள் தெரியவரும். கணிதப்பாடத்தில் வரும் வினாக் கட்கு உடனுக்குடன் தனிக்குறிப்பேட்டில் விடையிறுத்து விடுவேன். இயற்பியல், வேதியியல் இவற்றில் கேட்கப் பெற்றுள்ள கணக்குப்பகுதிகட்கு விடையிறுத்து அப்பகுதியில் சேர்ந்த கோப்புகளில் சேர்த்து வைத்துக் கொள்வேன். இப்பணியில் சிறிதும் சோம்பலின்றி மிகச் சுறுசுறுப்பாகச் செயற்படுவேன். பாடங்கள் நடைபெறும்போதே அப்பகுதியில்

பல்கலைக்கழகத்தேர்வில் கேட்கப்பெற்றுள்ள வினாக்களைப் பேராசிரியப் பெருமக்கள் சுட்டிக்காட்டுவார்கள், வேதியியல் பாடங்களில் கேட்கப் பெற்றுள்ள பொதுக்கட்டுரைகட்கு பல நூல்களின் துணைகொண்டு தனித்தாள்களில் (Foolscap) பதினைந்து பக்கங்கள் அளவில் கட்டுரைகளைத் தயாரித்து வைத்துக்கொள்வேன். பொது வேதியியல் (General chemistry), அங்கக வேதியியல் (Organic chemistry) அநங்கக வேதியியல் (Inorganic Chemistry) இவற்றில் இரண்டாண்டுப் படிப்பு முடியும் நிலையில் ஒவ்வொன்றிலும் பத்துக் கட்டுரைகட்குக் குறையாமல் என்னிடம் இருந்தன. சில கட்டுரைகள் எம்.எஸ்சி. தரத்திலும் இருந்தன. இவற்றை அடிக்கடிப் பார்த்து அவற்றின் பொருள்களை மனத்தில் நிரந்தரமாக அமைத்துக் கொள்வேன்.

இரண்டாம் ஆண்டின் இறுதியில் எழுதிவைத்திருந்த வினாக்கள் அனைத்திற்குமே விடைகாணப் பெற்றிருக்கும். என் அறைக்கருகிலுள்ள அறையில் சுப்பண்ணன் என்ற மாணாக்கர் இருந்தார், அவர் பி.ஏ. வகுப்பில் முற்றிலும் கணிதப்பாடமாகவே எடுத்துப்படித்தவர். கணிதத்தில் வரும் ஐயங்களை அவர் தீர்த்து வைப்பார். அவராலும் தீர்க்க முடியாத ஐயங்களை வகுப்பில் எழுப்புவேன்; பேராசிரியர் சீநிவாசன் மிக அருமையாக விளக்கி எல்லோருமே பயனடையச் செய்வார். ஐயமாக இருக்கும் கணக்குகளை கரும்பலகையில் மிக அழகாகச் செய்து காட்டுவார். இயல்பாகவே கணிதத்தில் பேரார்வங் கொண்டிருந்த எனக்கும் கணிதப்பாடத்தில் நல்ல தெளிவு ஏற்பட்டது.

குமிழி-49

# 49. படைப் பயிற்சி பெறுவதில் ஆர்வம்

இடைநிலை வகுப்பில் நான் சேர்ந்தபோது பல்கலைக் கழகப் பயிற்சிப் படையில் (University Training Corps U.T.C) சேரும் என்ணம் எழவில்லை. காரணம், அப்போது எனக்கு வழிகாட்டிபோல் காணப்பட்டவர் P. அரங்கசாமி. அவர் அதில் சேரவில்லை; நானும் அதில் சேரவில்லை; அதில் சேர்ந்தால் பல்வேறு நன்மைகளை அடையலாம். முதல் நன்மை நடையில் ஓர் ஒழுங்குமுறை ஏற்படும், சாலையில் ஆடிஆடி நடக்கும் பழக்கம் மாறும்; ஆணைக்குக் கட்டுப்பட்டு நடத்தல், காலத்தில் எதையும் செய்தல், உண்டல் - உறங்கல் இவற்றைக் காலந் தவறாது மேற்கொள்ளுதல் போன்றவை இரண்டாவது நன்மையாகும். வேலைதேடும் படலத்தில் இங்குப் பெறும் சான்றிதழ் ஓரளவுதுணை செய்யும் என்பது கற்பனையில் காணும் மூன்றாவது நன்மையாகும்; கற்பனை சிலருக்கு நடைமுறையாகவும் நிகழ்வதுண்டு.

பட்டப்படிப்பு முதலாண்டு கல்லூரியில் சேர்ந்ததும் இந்த மாணவர் படையில் சேர்ந்து கொண்டேன். புதன், ஞாயிறு காலை ஆறுமணிக்குப் படையுடையுடன் வகுப்பிற்கு வருதல் வேண்டும். பல்வேறு பயிற்சி நடைகளில் பயிற்சிகள் தரப் பெறும். துப்பாக்கியைப் பிரித்து அதில் தோட்டாவைப்பது, துப்பாக்கியைத்துடைத்துத்தூய்மையாக வைத்துக் கொள்வது ஈட்டியை அதில்வைத்துப் பொருத்துவது, துப்பாக்கியைக் கொண்டு சுடுவது போன்றவற்றில் நல்ல பயிற்சிகள் அளிக்கப்பெறும். துப்பாக்கியைத் தோளில் சாத்திக் கொண்டு வரிசை நடை பயில்வது, ஒற்றை வரிசை நடை, இவற்றிற்கெல்லாம் நல்ல பயிற்சிகள் அளிக்கப் பெறும்.

ஓராண்டிற்குள் எல்லாவற்றிலும் என்னிடம் நல்ல திறன்கள் ஏற்பட்டன. துப்பாக்கியைக் கொண்டு இலக்கை நோக்கிச் சுடுவதில் ஒரு தேர்வு நடைபெற்று அதில் முதற்பரிசும் பெற்றேன்.

இந்த ஆண்டு (டிசம்பர்-1937) சென்னையை அடுத்தள்ள பல்லாவரத்தில் ஒரு பயிற்சி முகாம் (Training Camp) நடைபெற்றது; 20 நாட்கள் Military Barracks அருகில் நாங்கள் இருவர் வீதம் தங்குவதற்கு டேராக்கள் (Tents) அமைக்கப் பெற்றன. சற்றுத் தொலைவில் கழிப்பிடத்திற்கும் ஏற்பாடு செய்யப் பெற்றது. முகாமிற்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற இடம் நீர் சூழ்ந்த இடமாக இருந்தது. 20 நாட்களில் இரண்டு மூன்று நாட்கள் மழை பெய்ததாக நினைவு; மீதி நாட்கள் பனி, குளிர் அதிகமாக இருந்தது இருபது நாட்களும் காலை 6 மணி முதல் 8 மணிவரை கடுமையான பயிற்சிகள்; போர் வீரன் உடையில் பல்வேறு பயிற்சிகள்; வாள் பொருத்தப் பெற்ற துப்பாக்கிகளைத் தாங்கிய வண்ணம் பல்வேறு பயிற்சிகள் நடைபெற்றன. இவை காலை தேநீருக்குப் பின் தரப்பெற்றன. 8-9 மணிவரை குளியல்; வசதிகள் குறைவான இடத்தில் இதற்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தன. 9-10 மணிவரை காலை சிற்றுண்டி. 10-12 மணி வகுப்புகள் நடைபெற்றன. திரு. சுந்தரேசனும் போர்த்துறையைச் சார்ந்த பலரும் வகுப்புகளை நடத்தினர். போர்த்துறைபற்றிய பல்வேறு செய்திகள் இந்த வகுப்புகளில் விளக்கப்பெற்றன. 12-2மணி பகலுணவுக்கும் ஓய்வுக்கும் என நேரம் ஒதுக்கப் பெற்றிருந்தது மீண்டும் 2-4 மணி வகுப்புகள் தொடர்ந்தன. 4-4½ மணிக்கு சிறிய அளவில் சிற்றுண்டி; 5-6 மணி சில விளையாட்டுகளில் ஈடுபாடு. இரவு 8 மணிக்கு உணவு. சில நாட்கள் இரவில் 'போர் வீரர்கள்' களியாட்டங்களில் ஈடுபட்டதாக நினைவு. நாங்களெல்லாம் கற்பனைப் போர் வீரர்கள். போர்க்காலச் சூழ்நிலைகளை எல்லாம் நாங்கள்

அநுபவித்தோம். அக்காலம் இத்தாலி-ஜெர்மனி போர் நடை பெற்ற சமயம். 1939-இல் இரண்டாம் உலகப் பெரும்போரும் தொடங்கியது. இந்த 20 நாட்களில் இரண்டு ஞாயிற்று கிழமைகள் வந்தன. அன்று முழு ஓய்வு. சென்னையைச் சுற்றிப் பார்க்கலாம். இந்த 20 நாட்கள் பயிற்சி எங்களை வாட்டி எடுத்து விட்டது. சில சமயம் கடுமையான பயிற்சி களால் சோர்வும் ஏற்பட்டது. இரவில் நன்கு உறக்கமும் வந்தது.

ஒரு ஞாயிறன்று சென்னையைச் சுற்றிப் பார்க்கச் சென்றேன். எஸ். அப்பாவு என்ற என் ஒரு சாலை மாணாக்கர் என்னுடன் வந்ததாக நினைவு. இவர் இடை நிலை வகுப்பில் தேசியக் கல்லூரியில் படித்து பி.எஸ்சி. படிப்பிற்குப் புனித சூசைட்பர் கல்லூரிக்கு வந்தவர். இன்னொரு மாணாக்கர் எஸ் நாகரத்தினம் என்பவர். இவர் நான்கு ஆண்டுகளும் தேசியக் கல்லூரியில் பி.ஏ. வரையில் படித்தவர். பொருளியல் அவர் விருப்ப பாடம் என்பதாக என் நினைவு. இந்த இருவரும் முசிறியிலிருந்தபோதே என்னுடன் பயின்றவர்கள். இவர்கள் இருவரின் தந்தையாரும் 1914-18இல் நடைபெற்ற முதலாம் உலகப் பெரும்போரில் பங்கு பெற்றவர்கள். ஆதலால் கல்லூரியில் படிக்கும்போது பல்வேறு சலுகைகள் இருந்தன. படிப்பதற்கு உதவித் தொகையும் பெற்று வந்ததாக நினைவு. நான் ஓராண்டு படிப்பை நிறுத்த வேண்டி நேரிட்டதால் இருவரும் ஓராண்டு என்னை முந்தி விட்டனர். இவர்கள் இருவரும் போர்ப் படைப் பயிற்சியில் நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்றதால் இதிலேயே பல்வேறு உயர்நிலைகளை அடைந்தனர்; என்ன நிலைகளை அடைந்தனர் என்பது இப்போது நினைவில் இல்லை; அதனால் இந்தக் குமிழிகளில் அச்செய்திகள் வெளிப்படவில்லை.

அப்பாவும் நானும் முதல் ஞாயிறன்று காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டதும் புறப்பட்டோம். முற்பகலில் அரும்பொருள் காட்சியகம், கன்னிமாரா நூலகம் ஆகியவற்றைச் சுற்றிப் பார்ப்பதற்கு முற்பகல் ஒருமணி ஆகிவிட்டது. எழும்பூர் வந்து உணவு கொண்டு உயிர்காட்சி சாலைக்குப் போனோம். உண்ட களைப்பைப் போக்கிக் கொள்வதற்காக உயிர்க்காட்சிச் சாலைக்குப் போகும் சாலையிலுள்ள ஒரு மரத்து நிழலில் சிறிது நேரம் உட்கார்ந்து பொழுது போக்கினோம். சரியாக பிற்பகல் மூன்று மணிக்கு நுழைவுக் கட்டணம் செலுத்தி உயிர்காட்சிச் சாலைக்குள் நுழைந்தோம். பல்வேறு பிராணிகள்—ஊர்வன, பறப்பன, நீந்துவன, தாவிக்குதிப்பன, நடப்பன என்றெல்லாம் வரிசையாகப் பார்த்துக் கொண்டே வந்தோம். சென்னைக்கு இது என் முதற் பயணமாதலால் இப்பிராணிகளின் காட்சி என்னை மிகவும் கவர்ந்தது. அடுத்து, மிகவும் புகழ்பெற்ற 'மூர் சந்தை' (Moor Market) என்ற இடத்திற்கு வந்து சுற்றிப் பார்த்தோம். 'நினைவாக இருக்கட்டும்' என்று ஏதோ பொருள்வாங்கினதாக நினைவு. அடுத்து, 'மைய இருப்பூர்தி நிலையம்' (Central Railway Station) என்ற இடத்தைச் சுற்றிப் பார்த்தோம். பின்னர் பூங்கா நிலையம் வந்து மின் இருப்பூர்திமூலம் சரியாக மாலை ஏழரை மணிக்குப் பல்லாவரம் வந்தடைந்தோம். இஃது சென்னைக்கு முதற் பயணமாதலால் 'பட்டிக் காட்டான் யானையைக் கண்டது' போன்ற ஒருவித வியப்பும் வேடிக்கையுமாக இருந்தது.

அடுத்த ஞாயிறன்று மீண்டும் என் சென்னை சுற்றுலா தொடர்ந்தது. உலகப் புகழ்பெற்ற திருவல்லிக்கேணி கடற்கரை, மாநிலக் கல்லூரி, பல்கலைக்கழகத் தேர்வு மண்டபம், பல்கலைக்கழகப் பல்வேறு துறைகள் முதலியவற்றையெல்லாம் சுற்றிப் பார்த்தோம். இவையனைத்திலும்

பல்கலைக்கழக ஆய்வுத்துறைகள் என்னை மிகவும் கவர்ந்தன அறிவியல் படிப்பை முடித்துக் கொண்டு அறிவியல் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆவலால் உந்தப் பெற்றேன். நான் தமிழ் படித்துத் தமிழில் ஆய்வினை மேற்கொள்வேன் என்று கனவிலும் கருதவில்லை.

> ஒன்றை நினைக்கின்
> அது ஒழிந்திட்டு, ஒன்றுஆகும்
> அன்றி அதுவரினும்
> வந்தெய்தும்; ஒன்றை
> நினையாத முன்வந்து
> நிற்பினும் நினைக்கும்
> எனை-ஆளும் ஈசன்
> செயல்.[6]

என்ற ஔவைப் பாட்டியின் திருவாக்கை இப்போது சிந்திக்கின்றேன். யான் தமிழில் புலமைபெற்று, ஆய்வினை மேற்கொண்டது, பல நூல்களைப் படைத்தது இவை யெல்லாம் 'எனை ஆளும் ஈசன் செயலால்' என்பதை நினைந்து நினைந்து மகிழ்கின்றேன். அறிவியலில் ஆர்வம் கொண்டிருந்த என்னைத் தமிழில் அறிவியல் நூல்களைப் படைக்கும் வாய்ப்பை அளித்தது இறைவனின் திருவருளே என்றும் கருதுகின்றேன்.

இருபது நாட்கள் கழித்து முகாம் முடிந்தது. எல்லோரும் திருச்சி திரும்பினோம். முகாமின் இறுதி நாளன்று போர்த் துறையைச் சார்ந்த பெரிய அலுவலர் ஒருவர் விழாவில் கலந்து கொண்டு எங்கட்கெல்லாம் ஏதோ அறிவுரை வழங்கியதாக நினைவு. திருச்சியிலிருந்து அன்று மாலையே பொட்டணம் சென்றேன். மூன்று நாட்கள் விடுமுறைதான் எஞ்சியது. அந்த நாட்களைப் பொட்டணத்தில் கழித்து மீண்டும் திருச்சி வந்து கல்லூரிப் படிப்பைத் தொடரலானேன்.

---

6. நல்வழி-37

# 50. தமிழை முறையாகக் கற்கத் தொடங்கியது

நான் இடைநிலை வகுப்பில் கல்லூரியில் பயின்ற காலத்தில் துறையூருக்கருகிலுள்ள சிக்கத்தம்பூரிலிருந்த வீ.சி. கிருஷ்ணசாமி, கோட்டாத்தூருக் கருகிலுள்ள நாகலாபுரம் என்ற ஊரிலிருந்து சி. முத்துநல்லப்ப ரெட்டி, உப்பிலியபுரத்தருகிலுள்ள மாறாடியிலிருந்து அ. சாம்பசிவம் என்பவர்கள் திருவையாற்றில் புகுமுக வகுப்பு, வித்துவான்—முதல்நிலை, வித்துவான்—இறுதிநிலை வகுப்புகளில் பயின்று வந்தனர். கோயம்புத்தூரிலிருந்து அரசு. நாராயணசாமி, கு. தாமோதரன் இவர்களும் திருவையாற்றில் படித்து வந்தனர். இவர்கள் யாவரும் தொடக்கநிலையில் சரியான கல்வி பெறமுடியாமல் பின்னர் தமிழின்மீது கொண்டிருந்த ஆர்வத்தால் தமிழ் படிக்க விழைந்து வித்துவான் போன்ற வகுப்பில் சேர்ந்து படித்தவர்கள். கோடை விடுமுறையில் கு. தாமோதரன், அரசு. நாராயணசாமி நாயுடு இவர்கள் இருவரைத் தவிர, ஏனைய மூவரையும் தனித்தனியாகவோ, சேர்ந்தோ கோட்டாத்தூரிலோ அல்லது வேறு எங்காவதோ சந்திக்கும் வாய்ப்புகள் நேரிடும். சிலசமயம் தஞ்சை மாவட்ட இளங்காடு என்ற ஊரைச் சார்ந்த பழநி முருகையா நாட்டாரும் வருவதுண்டு. இவர்தான் இலவச உணவுவிடுதியில் இவர்கள் இடம் பெறத் துணையாக இருந்தவர். இவர்களிடம் மேற்கொள்ளும் உரையாடல்கள் நான் உயர்நிலைப்பள்ளியில் படித்த காலத்தில் ஐம்புலிங்கக் குருக்கள், குமாரவீர அய்யர் இவர்களும்; கல்லூரியில் இடைநிலை வகுப்பில் படித்த காலத்தில் பேராசிரியர் மு நடேச முதலியார் அவர்களும் ஊட்டிய தமிழுணர்'வும் என்னுள்ளே உறங்கிய நிலையில் இருந்தது. அந்த உணர்வு நான் பொட்டணத்தில் இருந்த காலத்தில் தலை காட்டத் தொடங்கியது.

அந்தக்காலத்தில் இரா. கிருட்டிணசாமி என்பவர்—இவர் நாமக்கல் தாலுகா வரகூரைச் சேர்ந்தவர்—வித்துவான் பட்டம் பெற்று வேலையின்றி வீட்டில் இருந்தார். அவரிடம் **நன்னூல்காண்டிகை, யாப்பருங்கலக்காரிகை** கற்றுக் கொள்ள நினைத்துக் கடிதம் எழுதினேன். அவரும் ஒப்புக்கொண்டார். ஒருமாதம் பொட்டணத்தில் வந்து தங்கினார். காலையிலும் மாலையிலும் இயன்றபோதெல்லாம் இந்த இருநூல்களைப் படித்தோம். பின்னர் நான் துறையூரிலிருந்தபோது வித்துவான் முதல் நிலைத்தேர்வுக்குப் படித்தபோது இக் காலத்தில் பெற்ற அடிப்படை அறிவு மிகவும் துணையாக இருந்தது. இவர் திருமணமாகாதவராதலால், நான் கடிதம் எழுதியவுடன் யாதொரு தடையுமின்றிப் பொட்டணத்தில் வந்து தங்கிப் பாடம் சொன்னதை இன்று (21-1-1988) நினைவு கூர்கின்றேன். பாடம் படித்த நேரம் போக எஞ்சிய நேரத்தில் மணியக்காரர்வீட்டுத் திண்ணையில்—'சோம் பேறி மடத்தில்'—அரட்டைக் கச்சேரியில் இவரும் எங்களுடன் கலந்து கொண்டு பொழுது போக்குவார்.

நான் அடுத்த ஆண்டு (1940-41) சைதை ஆசிரியர் கல்லூரியில் சேர்ந்து படித்தபோது இவர் வடஆர்க்காடு குடியாத்தம் என்ற ஊரில் நகராண்மைக் கழக ஆட்சியின் கீழிருந்த உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணியில் சேர்ந்து விட்டார். அப்போது அப்பள்ளியின் தலைமையாசிரியர் எம்.எஸ். நடேசஅய்யர் என்பவர். இவர் நாமக்கல் வட்டம் முத்துக்காப்பட்டி என்ற ஊரைச் சேர்ந்தவர். இவருடைய உதவியால்தான் குடியாத்தத்தில் இரா. கிருட்டிணசாமிக்கு உத்தியோகம் கிடைத்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். அந்தக் காலத்தில் வேலை வாய்ப்புகள் மிசமிகக் குறைவு. எவராவது உதவாவிடில் வேலையில் அமர்வதென்பது குதிரைக் கொம்பாக இருந்தது.

நான் சைதையில் பயின்ற காலத்தில் ஒருசமயம் சேலம் வழியாகப் பொட்டணம் வரும்போது குடியாத்தத்தில் இறங்கி இவரைச் சந்தித்தேன். திரு. நடேசஅய்யரிடம் அறிமுகம் செய்துவைத்தார். சைதையில் படித்தபோதே படித்து முடித்தபின் என்ன செய்வது? எங்கு வேலை தேடுவது? எனக்குப்பரிந்துரைப்பவர்கள் ஒருவரும் இல்லையே என்ற கவலை மனத்தில் ஊடாடிக் கொண்டிருந்தமையால் குடியாத்தம் சென்றால் ஏதாவது வழிபிறக்குமா என்பதை ஆராய்வதற்காகவே குடியாத்தம் சென்று வந்தேன். திரு. நடேசஅய்யர் இயற்வியலில் பட்டம் பெற்றவர். நான் வேதியியலில் பட்டம் பெற்றுப் பயிற்சியும் பெற்றுக் கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் (இரண்டாம் உலகப் பெரும் போர் நடை பெற்றிருந்தகாலம் அது) வேலை கிடைப்ப தெல்லாம் போர்த்துறையில்தான் என்பதையும் நாட்டில் கிடைப்பது குதிரைக்கொம்பாக இருந்தது என்பதையும் சொல்லியேயாக வேண்டும். வேலை வாய்ப்புகள் மிகக் குறைவாக இருந்தாலும், பள்ளிகளில் கணித ஆசிரியர், அறிவியல் ஆசிரியர் கிடைப்பது அரிதாக இருந்தனமையால் என் பயிற்சி முடிந்ததும் தனக்கு எழுதும்படி அன்புடன் சொன்னார் நடேசஅய்யர். ஆனால் குடியாத்தம் சென்று பணியாற்ற வாய்ப்பு இல்லாது போயிற்று. துறையூரிலேயே புதிதாகத் தொடங்கப் பெற்ற நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியேற்கும் வாய்ப்பை இறைவன் ஏற்படுத்தி விட்டான்.

என்னதன்று நின்செயலே
　　என்றறிந்தால் யான்விரும்பி
என்னவென்று வாய்திறப்பேன்
　　ஈசனே—இன்னமின்னம்

எப்படியோ நாயேனை
ஈடேற்ற வேண்டுமெனக்(கு)
அப்படியே செய்தருளு
வாய்?

என்ற குருஞான சம்பந்தரின் திருவாக்கை இப்போது நினைந்து மகிழ்கின்றேன்.

குமிழி—51

# 51. ஜி. எம். விருத்தாசலம்

**பி. எஸ்சி.** முதலாண்டு பயின்ற காலத்தில் ஜி.எம். விருத்தாசலம் என்ற இளைஞர் அறைத்தோழராக இருந்தார். இவர் யார் என்பதை முன்னரே விளக்கியுள்ளேன். அப்போதுதான் பள்ளியை விட்டு இடைநிலை வகுப்பில் (Intermediate) முதலாண்டு மாணாக்கனாகச் சேர்ந்தவர். இலால்குடியில் மாணாக்கர் விடுதியில் இருந்து கொண்டு படித்தபோது விடுதில் பொறுப்பிலிருந்த திரு. வி. பால சுப்பிரமணியபிள்ளை அவர்களால் படிப்பில் நன்கு ஊக்கு விக்கப் பெற்றவர். உயர்நிலைப்பள்ளியிலிருந்து கல்லூரிக்கு வந்த பொழுதே நல்ல ஆங்கிலம் பேசுவார். இது பாலசுப்பிர மணியபிள்ளை அவர்கள் தந்த பயிற்சி என்பதை இப்போதும் நினைந்து பார்க்கின்றேன். நான் முசிறியில் பயின்றபோது திரு. கே. இராமச்சந்திர அய்யர் மாணாக்கர் விடுதிப் பொறுப்பில் இருந்த போது எங்கட்குத் தந்த பயிற்சியைவிட சற்று அதிகமாகவே இவர் பயிற்சி தந்திருக்க வேண்டும் என்பது என் கணிப்பு. மாணவர் பருவத்தில் ஆசிரியர் நல்ல வழி காட்டியாக அமைந்து வீரவழிபாட்டுக் குரியவராக அமைந்தால் வளையும் நிலையிலுள்ள இளைஞர் உள்ளம் முன்னேற்றப்பாதையில் நன்கு செல்வதற்கு வாய்ப்பு உண்டாகும்.

---

7. சிவயோகசாரம் - 89

விருத்தாசலம் படிப்பில் பேரார்வமுள்ளவர். இடைநிலைவகுப்பில் முதலாண்டு பயிலும்போதே காந்தியடிகளும் பண்டித சவகர்லால் நேருவும் இவருக்குக் குறிக்கோள் மனிதர்களாவும். வீரவழிபாட்டுக்குள்ளவர்களாகவும் இருந்தனர். காந்தியடிகளின் My Expriments with Truth (சத்திய சோதனை), நேருவின் My Aulography, Glimpses of World History, Discovery of India என்ற ஆங்கில நூல்களைச் சொந்தத்தில் வாங்கி வைத்துக்கொண்டு படித்தவர். இம்மாதிரி நூல்களை ஒரே மூச்சில் படித்தால் நல்லபயன் காணலாம். நூலகத்தை நன்முறையில் பயன்படுத்திக் கொண்ட மற்றோர் இளைஞரை அக்காலத்தில் நான் கண்டதில்லை. ஏராளமான ஆங்கில நூல்களை ஊன்றிப் படித்து ஆங்கில அறிவை வளர்த்துக் கொண்டதோடன்றி பல்வேறு கருத்துச் செல்வத்தையும் பெற்றுக் கொண்டார். இடைநிலைவகுப்புத் தேர்வில் நல்ல மதிப் பெண்கள் பெற்று முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தார். வரலாறு, பொருளியல், அளவையியல் (Logic) என்ற பாடங்களை விருப்ப பாடங்களாக எடுத்துக் கொண்டு படித்தவர். இவற்றில் உயர்ந்த மதிப் பெண்கள் பெறுவது சிரமம். நன்கு உழைக்கவேண்டும். ஆங்கிலத்தை வளமாக எழுதுபவர்கள்தாம் நல்ல மதிப் பெண்கள் பெறமுடியும்; முதல் வகுப்பிலும் தேறமுடியும்.

இவர் வாங்கிய நூல்களை நான் விடுமுறையில்தான் படிக்க முடிந்தது. அறிவியல், கணிதம் விருப்ப பாடங்களாக எடுத்துப் படிப்பவர்களுக்கு கல்லூரி வாழ்வில் அதிக வேலைகளிருக்கும். கணிதபாடங்கள் நடைபெறும்போதே அதிகமான கணக்குகளை வீட்டில் செய்ய வேண்டும். விட்டுப் போனால் கணித அறிவில் பிற்போக்கு நிலை ஏற்பட்டுவிடும். மேலும் தொடர்ந்து நடைபெறும் பாடங்களைப் புரிந்து கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுவிடும். அறிவியல் பாடங்களிலும் அதிகமான சோதனைகள் செய்ய வேண்டி

வரும். நுட்பமான எடைகளைக் காட்டக் கூடிய வேதியியல் தராசுகள் பத்துதான் ஆய்வகத்தில் இருந்தன. ஆதலால் நிறுக்கும் பணிகள் வரும்போது சனிக்கிழமைகளில் காலை ஏழரை மணிக்கே சோதனைக்கூடங்களுக்குப் போக வேண்டியிருக்கும். வேதியியலில் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று சோதனைகளும், இயற்பியலில் ஒரு சோதனையும் செய்ய வேண்டியது இன்றியமையாதது. எடுகோள்களைப் பட்டியலிட்டு பதிவேடுகளில் அழகாகக் காட்டவும் தேவையான இடங்களில் படங்கள் வரையவும் வரைபடங்கள் (Grabhs) வரையவும், சோதனைகள் செய்த முறைகளைப் பதிவேடுகளில் எழுதவும், பதிவேடுகளைக் குறித்தகாலத்தில் பேராசிரியர் பார்வைக்கு வைக்கவும் அதிகக் காலம் தேவைப் படும். தவிர, அறிவியலில் நல்ல அறிவு ஏற்படவேண்டுமானால் பாடநூல்களேயன்றி நூலகத்திலும் துறைநூலகத்திலும் சிலநூல்களை எடுத்துப்படித்து குறிப்புகளெடுத்துக் கொண்டு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் பொது அறிவை வளர்க்கக் கூடிய நூல்களில் அதிகமாக கவனம் செலுத்த முடிவதில்லை.

விருத்தாசலம் ஏராளமான நூல்களைப் படித்தார். இடைநிலை வகுப்பில் படிக்கும் போதே ஏராளமான ஆங்கில நூல்களைப் படித்தார். நன்றாக ஆங்கிலத்தில் உரையாடும் பயிற்சியை திரு. வி. பாலசுப்பிரயணியம் பிள்ளை அளித்ததாக நான் கருதுகின்றேன். பள்ளியில் எல்லாப் பாடங்களையும் தமிழில் கற்றதால் அங்கு ஆங்கில அறிவு வளர்வதற்கு வாய்ப்பில்லை; தமிழிலும் நல்ல அறிவு பெற முடியாத நிலைதான் நிலவியது. ஆங்கிலம் பாடமொழியாக இருக்கும்போது ஆங்கில அறிவு கணிசமாக வளர்வதைக் காண முடிகின்றது. ஒவ்வொருபாட ஆசிரியரும் மாணவர்கள் மொழியில் செய்யும் தவறுகளைத் திருத்துவர். ஆனால் அக்காலத்தில் தமிழில் பாடங்களைக் கற்கும்போது இம்

மாதிரி நிலை ஏற்படுவதில்லை. பாடநூல்களும் நல்ல தமிழில் எழுதப்பெறுவதில்லை. கற்பிக்கும் ஆசிரியர்களும் தமிழ் உணர்வுடன் கற்பிப்பதில்லை. ஐம்பதாண்டுகட்குப் பிறகு இன்றைய நிலையிலும் மொழியுணர்வு நன்னிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் எம். ஏ. படித்து, எம். ஃபில் பட்டமும் வாங்கிய மாணாக்கர்களில் பெரும் பாலோர்க்கு பிழையின்றி எழுதமுடியாத நிலையைக் காணும்போது அழுவதா? சிரிப்பதா? என்ற நிலைதான்.

விருத்தாசலம் பி.ஏ. (ஆனர்ஸ்) பொருளாதாரம் படித்து வெற்றியடைந்த பின் சட்டக்கல்லூரியில் சென்னையில் படித்தார். சில ஆண்டுகள் திருச்சியில் எஸ். அரங்கராசனிடம் (இவர் அக்காலத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞர்; பின்னர் மாவட்ட நீதிபதியாக நியமனம் பெற்று சிறந்த முறையில் பணியாற்றி டில்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக உயர்ந்து ஓய்வு பெற்றவர்). இளநிலை வக்கீலாகப் பணி யாற்றினார். பின்னர் தனியாக அலுவலகம் தொடங்கிப் பலர் அவர் கீழ் பணியாற்றும் நிலையை எய்தினார். குற்றம் பற்றிய வழக்குகளில் மட்டிலுமே கவனம் செலுத்தி வருகின்றார். எத்தனையோ தூக்குத் தண்டனைகளை ஆயுள் தண்டனைகளாக மாற்றிய பெருமை இவருக்கு உண்டு. பல கொலைக்குற்றங்களில் வீணாக மாட்டிக் கொண்ட அப்பாவி மக்களை நிரபராதிகளாக ஆக்கிய நற் பெயரும் இவருக்கு உண்டு. பல வழக்குகள்பற்றிய விவரங் கள் தெரியுமெனினும் அவற்றை ஈண்டுக் குறிப்பிடுவது மற்றொன்று விரித்தலாக முடியும்.

சில ஆண்டுகட்கு முன் கிளைவ் மாணவர் விடுதியில் காவலர் அடாவடித்தனமாக நடந்து கொண்ட வழக்குபற்றி எல்லோரும் அறிவர். இது நாடறிந்த பெரிய வழக்காக

மாறிப் பல மாதங்கள் நடந்தது. பழைய மாணவர் என்று கருதி புனித சூசையப்பர் கல்லூரி நிர்வாகம் அந்த வழக்கை நடத்தும் பொறுப்பை இவரிடம் தந்தது. மிகத் திறமையாக நடத்தி வெற்றி பெற்றார். அறிஞர்கள் அதிசயிக்கத் தக்க நிலையில் வாதிட்டார் விருத்தாலம். முதல்வர் இவருடைய திறமையை மெச்சி தொகை போடாமல் ஒரு காசோலையை இவரிடம் தந்து விருப்பமான தொகையைப் போட்டுக் கொள்ளும்படி பணித்தார். சாதாரணமாக இந்த வழக்கில் அவருக்குக் குறைந்தது ரூ 25,000/= தரலாம்; ஆனால் முதல்வரை நோக்கி, "நான் கல்லூரியின் பழைய மாணவன். இக்கல்லூரியில் படித்தமையால்தான் பல்திறன்கள் பெறும் வாய்ப்புகள் கிடைத்தன. பேராசிரியர் மறைத்திரு கார்டி அவர்கள், பேராசிரியர் இருதயசாமி ரெட்டியார், பேராசிரியர் ஆரோக்கியசாமி ரெட்டியார் போன்றவர்களிடம் பயிலும் வாய்ப்புகள் கிடைத்தன. பாடங்களில் பெற்ற அறிவுத்திறன் ஒருபுறமிருக்க இன்று நான் பெரியோர்களால் சிறந்த வழக்குரைஞர் என்று கருதத் தக்கவனாக இருப்பதற்குக் காரணம் இக்கல்லூரியில் யான் பெற்ற பயிற்சியேயாகும். ஆகவே, என் உழைப்பு கல்லூரிக்கு அன்பளிப்பாக இருக்கட்டும். பழைய மாணவர் ஒருவர் இங்கு இப்போது பயிலும் மாணாக்கர்கட்காகப் பாடு பட்டார் என்று வரலாறு கூறட்டும்" என்று தன் உழைப்புக்காகப் பெற வேண்டிய ஊதியத்தைப் பெற மறுத்து விட்டார். இவர் நடந்து காட்டிய முறை இன்றைய மாணாக்கர் உலகிற்கு ஒரு படிப்பினையாக இருக்கும் எனக் கருதலாம்.

முதலாண்டுப் படிப்பு ஒரு விதமாகச் சிரமமின்றி நிறைவெய்தியது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் என் மைத்துனர் ரூ 400/—வரை உதவினார். ரெட்டி ஜன சங்கத்தின் மூலம் ரூ 100/- கிடைத்தது. ரூ. 500/-ஐக்

கொண்டு சிக்கனமாக வாழ்ந்து முதலாண்டுப் படிப்பைக் கடந்தேன். பகுதி-ஒன்று ஆங்கிலத் தேர்வும் முடிவு எய்தியது. இனி இரண்டாம் ஆண்டில் அறிவியல் மட்டிலும்தான் படிக்க வேண்டும்.

குமிழி—52

# 52. இளங்கலை இரண்டாம் ஆண்டு

**1938**—கோடை விடுமுறையைப் பெரும்பாலும் பொட்டணத்திலேயே கழித்தேன். சில நாட்கள் கோட்டாத் தூரில் என் அன்னையாருடன் வாழ்ந்தேன். இந்த ஆண்டுச் செலவிற்குத் தன்னால் உதவ முடியாதென்று என் மைத்துனர் கையை விரித்துவிட்டார். கோட்டாத்தூரிலும் என் அன்னையார் உதவும் நிலையில் இல்லை. சிறு பண்ணையில் வரும் வருமானம் வேளாண்மை முட்டு வழிக்கே போதவில்லை. பேருந்து அல்லது சிற்றுந்து போன்ற தானியங்கிகளில் போடப்படும் நீர் வண்டியிலேயே வட்டா காரமாகச்சுழன்று வண்டியிலுள்ள பொறியின் வெப்பத்தைத் தணிப்பது போலவே, வேளாண்மையில் வரும் சிறிய வருமானம் வேளாண்மைத் தொழிலேயே சுழன்றுகொண்டே ஓரளவு வேளாண்மைத் தொழில் நடைபெறச் சிரமத்துடன் துணை புரிந்ததேயன்றி என் படிப்புச் செலவிற்குச் சிறிதேனும் உதவவில்லை. ஓய்வு ஊதியமின்றிப் பொருள் களின் விலையேற்றத்தால் இன்று சென்னைநகர வாழ்க்கை சென்னை நரக வாழ்க்கையாக இருப்பதுபோல் அன்று வேளாண்மைப் பொருள்கட்கு நல்ல விலை இல்லாமையால் சொல்லொணாச் சிரமத்தைத் தாங்கிக் கொள்ள வேண்டிய தாயிருந்தது. அன்று 'பணச் சுருக்கத்தால்' நெருக்கடி; இன்று 'பண வீக்கத்தால்' நெருக்கடி. பொருளாதார வல்லுநர்கள் இரண்டு நிலைகட்கும் விளக்கம் தருவார்கள்.

என் மைத்துனரின் "ஏழை வேஷம்"—கை விரிப்பு—எனக்கு ஒரு புதிராகவே இருந்தது. மாமனார் வீட்டு நிதி நிலைமையைப் பற்றி என் மனைவியை உசாவினேன். பெரிய பண்ணையில் வரும் அதிக அளவுள்ள பொருள்கட்கு நல்ல விலை இல்லாதிருந்தாலும் ஓர் ஐந்நூறு ரூபாய் அந்தப் பெரிய பண்ணைக்குப் பெரிதல்ல; எளிதாக உதவலாம். இரண்டு இலட்ச ரூபாய்வரை கொடுக்கல்—வாங்கல் நடைபெற்று வந்தது. விலைவாசி இறக்கத்தினால் இத்தொழில் சரியாக நடைபெறவில்லை. கொடுக்கல்—வாங்கல் வேளாண்மைப் பெருமக்களிடமே நடைபெற்று வந்தமையால் அவர்களால் வட்டி கூட சரியாகக் கட்ட முடியவில்லை. இராஜாஜி அவர்களால் ஏழைமக்களின்பொருட்டு உண்டாக்க பெற்ற விவசாயக் கடன் நிவாரணச் சட்டம், நடைமுறைப் படுத்தப்பெற்று வந்ததால் பணப் புழக்கம் தம்பித்து விட்டது. இந்த வட்டித் தொழிலை நாமக்கல்லில் நடத்தியிருந்தால் மிகச் சிறந்தமுறையில் நடைபெற்றிருக்கும், கடன் நிவாரணச் சட்டத்தின் காரணமாகக் கடன்களைத் திரும்பப் பெற முயன்றனரேயன்றி புதிதாகக் கடன்களை ஏற்படுத்தவில்லை. இந்நிலையில் வீட்டில் தண்டவாளப் பெட்டியில் இலட்சம்வரை ரொக்கம் இருந்ததை என் மனைவி மூலம் அறிந்தேன். பெட்டியின் சாவி அவள் கையில்தான் இருந்தது. மனைவியைக் கைக்குள் போட்டுக் கொண்டு ரூ. 500/— பெட்டியிலிருந்து எடுத்தால் இந்தப் பெருந்தொகையில் தெரியப் போவதில்லை. இந்தக் குறுக்கு வழியைக் கடைப்பிடிப்பது பெருந்தவறு என்றே என் மனத்தில் பட்டதால், இந்தத் தவறான நெறியில் செல்ல என் மனம் விரும்பவில்லை. என் மனைவி மனத்திலும் இவ்வழி தோன்றியிருக்க வேண்டும். ஆனால் அவளும் இதைப்பற்றி 'மூச்சு' கூட விடவில்லை.

ஒரு யுத்தி தோன்றியது. என் மனைவியிடம் நான் திருமணத்தில் போட்ட 10 சவரன் இரட்டை வடச் சங்கிலி இருந்தது. அதை வங்கியில் அடமானம் வைத்துக் கடன் வாங்கலாம் என நினைத்தேன். இதனை என் மனைவியிடம் தெரிவித்தேன். அவளும் இத்திட்டத்திற்கு ஒப்புக் கொண்டாள். ஆனால் இத்திட்டத்தை நிறைவேற்றுவது எப்படி? இந்தக் கேள்வி என் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது. என் மைத்துனருக்குத் தெரியாமல் இதைச் செய்ய விரும்பவில்லை. என் ஒன்றுவிட்ட தமையன் நல்லப்ப ரெட்டியாரை இணைப்பு அலுவலராக (Liaision official) பயன்படுத்திக் கொள்ள நினைத்து அவர்மூலம் என் மைத்துனரிடம் பேசி அவர் கருத்தை அறியுமாறு செய்தேன். என் மைத்துனர் அவரிடம் சொன்னாராம்: ''அப்படியே செய்யட்டும்; வட்டியை அவரே கட்டி, படிப்பு முடிந்தபின் அசலையும் செலுத்தி அவரே நகையையும் மீட்டிக் கொள்ளட்டும்'' என்றாராம். இத்திட்டத்தை அவர் காதில் போட்டும் கூட வீட்டில் தண்டவாளப் பெட்டியில் உறங்கும் ஓர் இலட்சம் ரூபாயில் சிறிது எடுத்து உதவலாம் என்ற கருணை கூடத்தோன்றவில்லை. அவருடைய உள் மனத்தை ஃபிராய்டு என்ற உளவியல் வல்லுநராலும் அறிய முடியாது என்று இப்போது நினைந்து பார்க்கின்றேன்.

நகையை வங்கியில் நானே அடமானம் வைக்க விரும்பவில்லை. என் தமையன் பேரில் கடன் வாங்க நினைத்து ''அண்ணா, நீங்கள் நகையை நாமக்கல்லிலுள்ள கரூர் வைஸ்யா பாங்கியில் அடமானம் வைத்து வாங்கித் தாருங்கள். சவரனுக்கு ரூ 25/- கடன் தருவதாக அறிகின்றேன். மூன்று மாதம் வட்டி முதலில் எடுத்துக் கொண்டுதான் கடன் தருவார்கள். ரூ 225/- இந்த நகைக்குக் கிடைக்கும். மூன்று மாதத்திற்கு ஒருமுறை நீங்களே வட்டி கட்டிக் கொள்ளுங்கள். என் படிப்பு முடிந்து திரும்பியதும் நீங்கள்

கட்டிய வட்டியையும் தந்து விடுகின்றேன்.'' என்று கேட்டுக் கொண்டேன். அவரும் ஒருவாறு ஒப்புக் கொண்டு நாமக்கல் சென்று தன் பேரிலேயே கடன் வாங்கி என்னிடம் பணம் தந்து விட்டார். கோடை வீடுமுறை கழித்துக் கல்லூரி திறந்ததும் நான் திருச்சி சென்று கல்லூரிக்கு வழக்கம் போல் போய் வரலானேன். தேவையுள்ள பணத்தை மட்டிலும் எடுத்துக்கொண்டு மீதியைத் தெப்பக்குளம் அஞ்சல் நிலையத்தில் சேமிப்புக் கணக்கில் போட்டு வைத்துக் கொண்டேன். இந்தப் பணத்தையும் மாதந்தோறும் ரெட்டி ஜனசங்கத்திலிருந்து கிடைக்கும் ரூ 10/-யும் கொண்டு சில மாதங்களைக் கவலையின்றித் தள்ளலாம் என நினைத்துக்கொண்டேன்.

இந்த ஆண்டு கவலையின்றிச் செல்வதற்கு இன்னும் ரூ 200/- வேண்டுமே; அதற்கு என்ன செய்வது? என்று யோசித்த வண்ணம் இருந்தேன். கோட்டாத்தூரில் வைக்கோர் போர் போடும் இடம் ஒன்று ஊரையொட்டி இருந்தது. அப்போது விற்றால் ரூ 500/-க்குப் போகும். ரூ 250/-க்கு யாராவது வாங்கிக் கொள்வார்கள் என நினைத்து விற்கும் எண்ணத்தைப் பலருக்குத் தெரியப்படுத்தினேன். ரூ 200/-க்குத் தான் விற்க முடிந்தது. என் அண்டை வீட்டுச் சாம்பசிவரெட்டியார் என்பவர் தனக்குத் தேவையில்லாதிருந்தும் என்படிப்பிற்கு உதவும் பொருட்டே வாங்கிக் கொண்டார். அதை வைத்துக் கொண்டு இளங்கலைப்பட்டப் பட்டப் படிப்பை வெற்றிகரமாக முடிக்க முடிந்தது, இப்போது அது ரூ 10,000/-க்குப் போகும். இப்படியே பல சொத்துகளை வயது வராத நிலையில் (Minor) மூன்றில் ஒருபாக விலைக்கு விற்கும்படி நேரிட்டது. திருமணத்தால் ஏற்பட்ட கடனுக்குக் குடியிருந்த வீட்டை ரூ 1000/-க்கு விற்றுக் கடனை அடைத்தேன். இப்போது அது ரூ30 000/-ப் போகும். இல்லத்தைவிற்று இல்லத்தரசியைப்பெற்றேன்! ஆனால் அவள் சொந்த இல்லம் இல்லாத இல்லத்தரசியானாள். 1983-இல்

(ஓய்வுபெற்றுஏழாண்டுகட்குப்பிறகு) சொந்த வீடு அமைந்தது அதை எம்பெருமான் ஏழுமலையான் வாழும் "வேங்கடம். என்று பெயர் சூட்டி அவனுக்குரிய தாக்கினேன். இப்போது நாங்கள், மக்கள், மருமகள்மார், பேரன்-பேத்திமாருடன் அவன் நிழலில் வாழ்கின்றோம். நகர வாழ்க்கை நிலையான வாழ்க்கையாகிவிட்டது. அவன் அடிக்கீழ் என்பிராரத்தம் தீரும் வரையில் தமிழ்ப்பணி ஆற்றி வர உறுதிகொண்டுள் ளேன்; அங்ஙனமே ஆற்றிவருகின்றேன். இதனைத் தமிழ் கூறு நல்லுலகம் நன்கு அறியும்.

குமிழி - 53

# 53. பட்டப் படிப்பும் நூலகப்பழக்கமும்

கல்வெட்டுகளில் நூலகத்தைச் 'சரசுவதி பண்டாரம்' என்று குறிப்பிட்டுள்ளதைக் கல்வெட்டுகள் சிலவற்றைப் படிக்க நேர்ந்தபோது கண்டதுண்டு. உண்மையில் நூலகம் கலைமகளின் திருக்கோயில்களே. ஆங்கில அறிஞர் பேக்கன் என்பார் கூட நூலகங்கள் கோயில்கள் போன்றவை என்றும், இவை உண்மையான நற்குணங்கள் நிறைந்த, ஏமாற்றல் அல்லது வஞ்சகக் குணமற்ற, ஞானிகளின் நினைவுச்சின்னங் கள் வைத்துக் காப்பாற்றப்பெற்றுள்ள இடங்கள் என்றும் கூறுவர். மற்றோர் அறிஞர் நூலகத்தை இலக்கியத்தின் நிலையடுக்குப் பேழை என்று போற்றுவர்.

மாணாக்கர்கள் நூலகத்தை நன்முறையில் பயன்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டும். கல்லூரி வாழ்வில் இப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். கன்னமேரா பொதுநூலகம் பல்கலைக் கழகநூலகம் போன்ற இடங்களில் பல்வேறு வகை நூல்கள் வைக்கப்பெற்றிருக்கும்; பல்வேறு வகை அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், ஆய்வு வெளியீடு கள் வைக்கப்பெற்றிருக்கும். இவற்றைப் பயன்படுத்தும்

முறைகளைத் தெரிந்து கொள்வதே ஒரு கலையாகும். நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்துத் தேவையான செய்திகளைத் திரட்டி வைத்துக் கொள்வதென்பது எளிதான செயலன்று. இதனை நன்கு உணர்ந்து தெளிந்த சமண முனிவர்,

> கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
> மெல்ல நினைக்கிற் பிணிபல;—தெள்ளிதின்
> ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீ ரொழியப்
> பாலுண் குருகின் தெரிந்து[8]

என்று கூறிப் போந்தார்.

என் கல்லூரி வாழ்க்கையில் கல்லூரி நூலகத்தை மிக நன்றாகப் பயன்படுத்திக் கொண்டேன். பதினைந்து நாட்களுக்கொரு முறை மூன்று நூல்கள் வீதம் தொடர்ந்து பெற்றுப் படிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தேன். அமயம் வாய்க்கும் போதெல்லாம் திருச்சியில் உள்ள மாவட்ட நூலகத்திற்குச் சென்று சில இலக்கிய நூல்களையும் பொது அறிவு நூல்களையும் படிப்பதுண்டு. செய்தித் தாள்களில் வரும் நூல்களின் மதிப்புரைப் பகுதியை விடாது படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டால் அன்றாடம் வெளியாகும் நூல்கள் ஓரளவு அறிமுகமாகும். காலாண்டு, அரையாண்டு விடுமுறை நாட்களில் குறிப்பிட்ட சில நூல்களைப் படித்து முடித்து விடுவேன்.

நூலகங்களில் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தல் வேண்டும். நச்சுக் கருத்துகளை ஊட்டும் நூல்களை நூலகத்திலிருந்து நீக்கி விடுதல் வேண்டும். "ஒருவேளை மருந்து ஒருவரை ஒருமுறை தான் கொல்லும்; ஆனால் தீய கருத்துகளைக் கொண்டுள்ள நூல் நீண்டகாலம் மக்கள் மனத்தில் நஞ்சூட்டிக் கொண்டே இருக்கும்" என்றார் ஜான் மர்ரே

8. நாலடியார்-135 (கல்வி)

என்ற ஆங்கில அறிஞர். நூல்கள் என்பவை பரந்து அகன்ற காலம் என்னும் கடலில் நிறுவப்பெற்ற கலங்கரை விளக்கங் களாகும் என்றார் ஓர் ஆங்கில அறிஞர். ஒவ்வொரு புதிய நூலும் ஒரு கப்பலைப்போன்றது. ''எப்படிக் கப்பல் நம்மைக் குறுகிய இடப்பரப்பினின்று அகற்றுகின்றதோ அங்ஙனமே ஒரு புதிய நூல் வாழ்க்கை என்னும் எல்லையற்ற பெருங் கடலுக்குள் இட்டுச் செல்லுகின்றது'' என்கின்றார் ஹெலென் கெல்லர் என்ற அறிஞர். ஓர் ஆசிரியரின் இதயத்திலிருந்து எழும் கருத்துகள் அவர்தம் நூலில் அமைந்தால் அவை அந்நூலைப் படிப்போரின் இதயங்களைத் தொடும் என்பதற்கு ஐயமில்லை என்று கூறுவர் கார்லைல் என்ற பேரறிஞர். ''புத்தகங்கள் என்பவை கூடுவிட்டுக் கூடுபாய்தல் (Metempsychosis); அவை இறவாமையின் அறிகுறிகள்; அடையாளங்கள் இறந்தவர்கள் யாவரும் எங்கெங்கோ சிதறிக் கிடக்கின்றனர்; ஒருவரும் அவர்களைக் காண முடியாது. ஆனால் பாருங்கள்! அவர்கள் யாவரும் இங்குள்ளனர்'' என்கின்றார் பீச்சர் என்ற மற்றோர் அறிஞர்.

ஜான்சன் என்ற ஆங்கிலப் பேரறிஞர் சொல்வார்; ''மரபுப் பண்பு என்பது ஒரு எரிமீன் போல; அது தரையில் வீழ்ந்து விட்டால், மீண்டும் எரிய வைக்க முடியாது. நினைவில் குறுக்கீடு இருந்தால், திரும்பவும் நினைவுகூர முடியாது. ஆனால் எழுத்து வடிவம் பெற்ற ஞானம் ஒரு நிலைத்த அறிவுடைய பொருளாகத் திகழ்கின்றது. அதை மறைந்திருந்த மேகப்படலம் விலகியதும் அது திரும்பவும் சரியான இடத்தில் பிரகாசிக்கின்றது. ஆகவே, நூல்கள் நம்பிக்கைக்குரிய களஞ்சியங்களாகின்றன; அவை சில காலம் புறக்கணிக்கப்பெறினும் அல்லது மறக்கப்பெறினும், அவற்றைத் திரும்பவும் திறக்கும்போது, அவை மீண்டும் அறிவுரை பகர்கின்றன'' என்று. ''நூல்கள் நமக்கு

எப்பொழுதும் தயாராகவுள்ள நிலையான அறிவுரை கூறுப வர்களாக போதகாசிரியர்களாகத் திகழ்கின்றன; அவை தன் னலமற்றவையாகவும் உள்ளன. வாய்மொழி பகர்பவர்களை விட இந்த நூல்கள் நற்பயன்களை விளைவிப்பவையாயிருப்ப தால், அவை தம் படிப்பினையை நாம் விரும்பும் அளவும் திரும்பக் கூறுவதற்கு ஆயத்தமாகவே உள்ளன'' என்கின்றார் மற்றோர் ஆங்கில அறிஞர். ''கையில் பிரம்போ கைத்தடியோ இல்லாமல், வாயில் சீறும் சொற்களையோ சினத்தையோ காட்டாமல் உள்ள ஆசிரியர்களாகத் திகழ்கின்றன நூல்கள்; நாம் அவற்றை நெருங்கும்போது, அவை தூங்கி வழிவ தில்லை: நாம் அவற்றை நாடும்போது, அவை ஒளிந்து கொள்வதில்லை; நாம் தவறிழைக்கும்போது அவை நம்மைக் கடிவதில்லை; நாம் அறியாமையுடனிருப்பினும், நம்மைக் கேலி செய்வதில்லை'' என்கின்றார் ரிச்சார்ட்-டி-பர்ரி என்பார். ''சில நூல்கள் சுவைக்கக் கூடியவை; மற்றவை விழுங்கத் தக்கவை; ஒரு சில மென்று செரிமானம் செய்யத் தக்கவை'' என்கின்றார் பேக்கன் என்ற ஆங்கில அறிஞர். இவையெல்லாம் 'சிந்தனைகளைப்பற்றிய புதிய அகராதி'[8] என்ற நூலைப் புரட்டும்போது நான் அறிந்து கொண்டவை.

வழக்கமாக நூலகத்தைப் பயன்படுத்துவோருக்கு இவ்வுண்மைகள் தெளிவாகப் புலனாகக் கூடியவை. இன்று நாம் ஒரு பெரிய நூலகத்திற்குச் சென்றால் நம் முன்னோர் களும் நம்மிடையே வாழ்பவர்களும் நமக்குச்சொத்துகளாகப் பல்வேறு வகைச் செல்வங்களை வைத்துச் சென்றிருப்பதைக் காணலாம். அவை பாகுபாடு செய்யப்பெற்று நாமே சென்று எடுத்துக் கொள்ளத்தக்கவையாக அடுக்கி வைக்கப்பெற்று இருப்பதையும், நூலகமும் நாம் விரும்பியவாறு அமர்ந்து கொண்டு படிப்பதற்கேற்ற இருக்கை வசதிகளுடன் திகழ்

8. The New Dictionary of Thoughts-Standard book Company-1966.

வதையும் இன்றைய சிறந்த நூலகங்களில் காணமுடிகின்றது. இத்தகைய வாய்ப்புகளையும் வசதிகளையும் ஒரு சிலரே பயன்படுத்துவதையும் காண்கின்றோம். பலர் பயன்படுத்தும் நாள் விரைவில் வரவேண்டும்.

நான் பயின்றபோது இத்தகைய வசதிகள் திருச்சியில் இல்லை; மாவட்ட நூலகத்தில் இந்த வசதிகள் சிறிதளவே இருந்தன, நூல்களும் அக்காலம் பெருகி இருக்கவில்லை. சில சமயம்தான் இந்நூலகத்திற்குப் போய்வருவதுண்டு; போய் வந்தவரை ஓரளவு பயன் பெற்றேன். இங்கு அதிகமாக நான் படித்தவை திரு.வி.க.வின் ஒரு சில நூல்கள்தாம். கல்லூரி நூலகத்தில் பெற்றுவரும் அறிவியல் நூல்களைப் படிப்ப தற்கும் படித்தவற்றைக் கட்டுரைகளாக வடித்து வைத்துக் கொள்வதற்கும் நேரம் போதாது. இத்தகைய உழைப்பு தேர்வு நோக்கத்தையொட்டியது. மாணாக்கர் வாழ்வில் தேர்வு ஒரு முக்கியக் கூறு என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சில சமயம் விடுமுறையில் கூட இத்தகைய நூல்களை எடுத்துச் சென்று பொட்டணத்தில் என் மாமனார் வீட்டில் படித்துக் கட்டுரைகளை எழுதுவதுண்டு. என் மாமியாருக்கு இது பிடிப்பதில்லை; இதை அவர்தம் முகக் குறியாலேயே என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. ‘தம் மகளுடன் கொஞ்சிக் குலவுவதை விட்டு இப்படிப் புத்தகங்களைக் கட்டிக் கொண்டு அழுகின்றாரே’ என்ற குறிப்பு பேசாத பேச்சாக என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. திருமணம் ஆகி மூன்றாண்டுகள் ஆகியும் பேரன் அல்லது பேத்தியை எடுத்துக் கொஞ்சமுடியவில்லையே என்ற ஏக்கமே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்பது என் ஊகம். அக்கம்பக்கத்தாரிடம் பேசிய பேச்சின் எதிரொலி யும் மெதுவாக என் காதிற்கு எட்டவும் செய்தது. என் ஒன்றுவிட்ட அண்ணன் மனைவியார் இதைக் குறிப்பாக என்னிடம் தெரிவித்ததாக நினைவு கூர முடிகின்றது.

பண்டைய நூல்கள் எல்லாம் நூல்களின் பயனைப் பேசும்போதும் கல்வியின் பயனை எடுத்துரைக்கும்போதும் தத்துவஞானத்தின் பயனையே பேசுவதாக அமைகின்றன.

கற்கை நன்றே; கற்கை நன்றே;
பிச்சை புகினும் கற்கை நன்றே[9]

என்ற அதிவீரராம பாண்டியரின் வாக்கும்,

அறம்பொருள் இன்பமும்வீடும்பயக்கும்
புறக்கடை நல்இசை நாட்டும்—உறுங் கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை[10]

என்ற குமரகுருபர அடிகளின் திருவாக்கும் இக்கருத்தின் சாயலாக அமைந்திருப்பதைக் காணலாம். இப்பொழுது இதை எழுதும்பொழுது இக்கருத்துகள் என் மனத்தில் தோன்றினாலும், நான் கல்லூரியில் பயிலுங்கால் நான் தேடிய கல்வி இகத்தை மட்டிலும் நாடியதாகவே இருந்தது ஆகவே, பெரும்பாலும் அறிவியல் நூல்களைக் கற்பதிலேயே என் நாட்டம் இருந்து வந்தது என்பதைச் சொல்லியேயாக வேண்டும்.

ஒருசமயம் 'அறிவியல் வரலாறு' (History of science) என்ற நூலைப் படிக்க வேண்டும் என்று என் மனம் விழைந்தது. நூலகத்தில் இந்த நூலை வாங்கிக் கொண்டு சென்று ஒரு காலாண்டுத் தேர்வுக்குப்பின் கிடைத்த விடுமுறையில் இந்த நூலைப் படித்துப் பெரும் பயன் பெற்றேன். அறிவியல் வளரவளர மூடப்பழக்கங்கள் தேய்ந்தொழிந்த வரலாற்றை இலைமறை காய்கள்போல் இதில் காண முடிந்தது. இப்போது அதில் படித்த இரண்டு கருத்துக்களை நினைவுகூர முடிகின்றது.

9. வெற்றிவேற்கை—35
10. நீதிநெறி விளக்கம்-2

**ஒன்று** : முதன்முதலில் மேல்நாட்டில் பூமியை நடுவாக வைத்து எல்லாக் கோள்களும் சுற்றுவனவாகக் கருதப் பெற்றன; கலிலியோ காலம்வரையிலும் கூட இதே கருத்து தான் நிலவியது. காப்பர்நிகஸ் காலத்தில் இக்கருத்து தலை கீழாயிற்று. கதிரவன்தான் மையமாக உள்ளான் என்றும், அவனைச் சுற்றிதான் பூமிஉட்பட எல்லாக் கோள்களும் இயங்கி வருகின்றன என்னும் கொள்கை ஏற்பட்டு விட்டது.

அண்டங்க ளெல்லாம் அணுவாக
அணுக்கள் எல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி
தாயி னானும்
அண்டங்க ளுள்ளும் புறம்புங்கரி
யாயி னானும்
அண்டங்கள் ஈன்றாள் துணைஎன்பர்
அறிந்த நல்லோர்.[11]

என்று கூறுவார் பரஞ்சோதியார். இன்னும் இந்த அண்டங் களைப் பற்றி ஆய்ந்து வருகின்றனர். சர் வில்லியம் ஜீன்ஸ் என்பார் எழுதியுள்ள **'விளங்கா வியன்உலகம்'** (The Mystrious Universe) என்ற நூல் ஒருவகையாக எடுத் துரைக்கும். இந்தக் கதிரவ மண்டலத்தைப்போல் எண்ணற்ற அண்டங்கள் இருப்பதாகக் கூறுகின்றார் அந்தப் பேரறிஞர். இதை மணிவாசகப்பெருமானும்,

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.[12]

---

11. திருவிளையாடல்—பாயிரம்-செய். 6
12. திருவா. திருவண்டப்பகுதி-அடி (1-4)

என்று கூறிப் போந்ததையும் காண்கின்றோம். இப்போது நாம் வதியும் இப்பூமண்டலமும், இதனோடு சார்ந்திருக்கும் ஏனைய கோள்களும் இவற்றின் தலைவனாம் கதிரவனும் இப்பெரிய அண்டப்படைப்பில் ஒரு சிறு அணுவென்றே சொல்லவேண்டும். மணிவாசகர் கருத்தும் இதுவேயன்றோ?

நக்கபிரான் அருளால்—இங்கு
நடைபெறும் உலகங்கள் கணக்கிலவாம்;
தொக்கன அண்டங்கள்—வளர்
தொகைபல கோடிபல் கோடிகளாம்!
இக்கணக் கெவரறி வார்—புவி
எத்தனை யுளதென்ப தியாரறிவார்!

நக்கபிரான் அறிவான்—மற்று
நானறி யேன்பிற நரரறியார்;
தொக்கபேர் அண்டங்கள்—கொண்ட
தொகைக்கெல்லை இல்லையென்று சொல்லுகின்ற
தக்கபல் சாத்திரங்கள்—ஒளி
தருகின்ற வானமோர் கடல்போலாம்
அக்கட லதனுக்கே—எங்கும்
அக்கரை இக்கரை யொன்றில்லையாம்

இக்கட லதனகத்தே—அங்கங்
கிடையிடைத் தோன்றும்புன் குமிழிகள்போல்
தொக்கன உலகங்கள்;—திசைத்
தூவெளி யதனிடை விரைந்தோடும்;
மிக்கதோர் வியப்புடைத் தாம்—இந்த
வியன்பெரு வையத்தின் காட்சி கண்டீர்![13]

என்று புதுமைக்கவி பாரதியாரின் வியன்பெரு வையத்தின் காட்சி சர்வில்லியம் ஜீன்ஸ் காட்டும் காட்சியுடன் ஒருவாறு ஒத்திருப்பதைக் காண முடிகின்றது.

13. பா.க. கோமதி மகிமை-செய் 5,6,7.

இரண்டு : இது மூடப் பழக்கங்களும் சமயக் கருத்துகளுக்கு அடிமையும் பற்றியது. ஒருசில நூற்றாண்டுகட்கு முன்னர் அறிஞர்களிடையே குதிரைக்கு எத்தனைப் பற்கள்? என்ற ஐயம் எழுந்ததாம். இந்த அறிஞர்கள் நூலகத்தில் குதிரையைப் பற்றி எழுந்துள்ள நூல்களையெல்லாம் புரட்டிப் பார்க்க முனைந்தார்கள். சாதாரண நிலையிலுள்ள ஒருவன் "ஒரு குதிரையைப் பிடித்து பற்களை எண்ணினால் தெரியுமே!" என்றானாம் மாதா கோயிலின் ஆதிக்கத்திலுள்ள அந்த அறிஞர்கள் "கிறித்தவ மத நூலுக்குப் புறம்பாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டானே இந்தப் பாமரன்? இவனுக்குச் சரியான தண்டனை விதிக்க வேண்டும்" என்று யோசித்தார்களாம். இதிலிருந்து சமயக் கொடுமையிலிருந்து விடுபட்டு அறிவியல் வளர்ந்த வரலாற்றை அறிய முடிகின்றதன்றோ?

இவை நூலகப்படிப்பால் யான் அறிந்த செய்திகளாகும்.

**குமிழி-54**

# 54. துன்பத்திலும் இன்பத்திலும்

தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றும் கல்வி—நெடுங்காமம்
முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது.[14]
[மடம் - அறியாமை; பீழை - துன்பம்]

என்ற குமரகுருபர அடிகளின் பாடல் என்மனத்தில் குமிழியிடுகின்றது. இதனை ஆழச்சிந்திக்கின்றேன். எல்லோர் வாழ்க்கைக்கும் பொருந்தும் அடிகளாரின் இந்தச் சிந்தனை என் வாழ்க்கையில் சிறப்பாகப் பொருந்துவதைப் பார்க்கின்றேன். பட்டப்படிப்பில் இறங்கியிருக்கும்பொழுது மாமனார் வீட்டுப்

பெரியவர்களின் விருப்பப்படி இரண்டு வாரத்திற்கொரு முறை பொட்டணம் போய் வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். இது ஆர்வமாகக் கல்வியில் ஈடுபட்டிருந்த எனக்குத் துன்பமாக இருந்தது. என் மனைவிக்கும் நான் கட்டாயமாக வரவேண்டும் என்ற ஆவல் இல்லாதிருந்தது என் நற்பயனாக இருந்தது. என்னைப் போல அவளும் என் படிப்பில் அதிக அக்கறை காட்டியது என் நல்லூழ் ஆகும். இல்லையெனில் இன்பவாழ்க்கையாகிய இல்லறத்தில் குழப்பம் எழும்; மன முறிவு ஏற்படும். இதனால் விளையும் துன்பங்கள் சொல்லி முடியா; உளவியலார் இதுபற்றிக் கூறுவனவற்றை இப்போது நினைந்து பார்க்கின்றேன்.

'தொடங்குங்கால் துன்பமாய்' என்ற தொடர் என் மனத்தில் எழுப்பும் சிந்தனையோட்டம் இது: சிறுவனாக இருந்தபொழுது எழுத்து, சொற்கள், சொற்றொடர்கள்—இவற்றை ஒலித்தல், எழுதுதல் போன்ற செயல்களைக் கற்றல்; மொழித்திறன்கள் வளர்த்துக் கொள்வதற்கு ஒரு குழந்தை தொடக்கம் முதல் பெரிய புலவனாகும்வரை அது படும் பாட்டைக் கூர்ந்து கவனித்தால் இத்துன்பநிலை புலனாகும். இப்படியே கணிதம், அறிவியல், பொறியியல், மருத்துவஇயல் இவற்றைக் கற்கும் நிலையைக் கவனித்தால் எல்லையில்லாத துன்பத்தை அநுபவிப்பது தெரியவரும். இவற்றைத் திறமையாகக் கற்றுக் கொள்வதற்கு ஒருசிறுவன் தன் வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குமுறை கட்டுப்பாடு, தன்னடக்கம், விடாமுயற்சி இவற்றை நினைந்து பார்த்தால் இத்துன்பநிலை விளக்கமடையும். இத்துன்பத்திற்குப் பிறகு ஒவ்வொரு துறையிலும் கற்றுத் துறை போய வித்தகர்களாகத் திகழும்பொழுது பெறும் 'இன்பம்' தெளிவாகும். கல்வியை அடையும்போது பெறும்

14. நீதிநெறி விளக்கம்-3

'துன்பத்தையும்' அதனை 'முழுமையாகப்' பெற்ற பிறகு அடையும் 'இன்பத்தையும்' ஒவ்வொருவரும் நினைந்து பார்ப்பார்களாக. இப்போது 'மடங்கொன்று—அறியாமையைக் கெடுத்து' என்பதன் பொருள் துலக்கமடையும். மடம் நீங்கவே அதனுள் மறைந்து கிடந்து அறிவு எழுந்தது; அங்ஙனம் எழுந்த அறிவு அதாவது, கல்விப் பயிற்சியினால் எழுந்த அறிவு—அதே பயிற்சியினால் அவ்வறிவைப் பெரிதாகவும் விரியச் செய்யும் என்பதை விளக்கும் 'அகற்றும்—விரியச் செய்யும்' என்பதன் ஆழ் பொருள் நன்கு துலங்கும்.

இங்ஙனம் கல்வியை ஊக்கத்துடன் கற்றுக் கொண்டிருக்கும் பொழுது பதினைந்து நாட்கொருமுறை மாமனார் வீடு சென்று பெறும் 'சிற்றின்பம்' அப்போது பெருந்துன்பமாய்த் தோன்றும். இதனை நான் விளக்கும் போது இதன் 'கொடுமையை' என் மனைவியும் உணரத் தொடங்குவாள்; இதனால் நாங்கள் பெற்றுவந்த சிற்றின்பத்தில் எப்பொழுதும் 'இடையறவு' தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். இருவரும் இதனை மனம் ஒத்து உணர்ந்து கொண்டதால்—ஒருவரையொருவர் இத்துறையில் தெளிவாகப் புரிந்து கொண்டமையால்—எங்கள் வாழ்வு கட்டுப்பாடாகவே இருந்து வருவது இறைவனுடைய அருள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது வாழ்க்கையின் எத்தனையோ பேருண்மைகள் புலனாகின்றன.

புனித சூசையப்பர் கல்லூரியில் சனி, ஞாயிறு என்ற வார விடுமுறை வழக்கத்தில் இல்லை. அப்படி விட்டால் ஒரு வாரத்தில் பெற்ற அறிவு நீண்ட இடை வெளியாலும், இந் நாட்களில் வாரம் முழுதும் பெற்ற அறிவு ஓரளவு மறைவதற்குக் காரணமாக அமையும் என்று கருதியமையாலும் கல்லூரி நிர்வாகம் ஞாயிறு புதன் என்று வார விடுமுறையை

அமைத்து இந்த இடைவெளியின் நீளத்தைக் குறைத்து விட்டிருந்தது. இதனால் உளவியல் உண்மைப்படி மறக்கும் நிலை குறைந்து விட்டது. இந்த ஒழுங்குமுறையால் நான் பொட்டணம் சென்று இரண்டு நாளாவது தங்குதலில் தடை நேரிட்டது. இரண்டு நாட்களில் ஒருநாள் எண்ணெய்க் குளியல்; பகல் முழுவதும் ஓய்வு. சனி இரவு, ஞாயிறு இரவு இரண்டு நாட்கள் தங்கினால் திங்களன்று அதிகாலையில் குளியலை முடித்துக் கொண்டு திருச்சி வந்து சேர்வது பெரும் பாடாகிவிடும். அப்படி வந்தாலும் ஓரிரு பாடவேளையில் மட்டம் போடவேண்டி வந்துவிடும். பெரும்பாலும் திங்கள் முதல் பாடவேளையில் கணிதப்பாடம் நடைபெறுவதாக இருக்கும். ஒருவேளை இப்படித் தவறினால் அடுத்த நாள் பாடத்தைப் புரிந்து கொள்ள இயதாத நிலை ஏற்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில் நடந்த கணிதப்பாடத்தின் விவரத்தை யாராவது ஒரு மாணவன்மூலம் தெரிந்து கொள் வேன்; திங்கள் மாலையோ இரவோ அப்பாடப் பகுதியை என் அறையின் பக்கத்திலுள்ள அறையில் தங்கியிருந்த பி.ஏ. கணித மாணவர் சுப்பண்ணனிடம் கேட்டு விளக்கம் பெறுவேன். இப்படிச் செய்து கொள்வதால் அடுத்து செவ்வாயன்று நடைபெறும் கணிதப் பாடத்தைத் தெளி வாகப் புரிந்து கொள்ளமுடியும், அறிவியல் பாடச் செய்முறை (Pracfical) பிற்பகலே நடைபெற்று வந்தமையால், எனக்கு இது உதவுவதாக இருந்தது. எக்காரணத்தாலும் செய்முறைப் பயிற்சியை இழத்தல் கூடாது. இது தேர்வில் பாதிக்கச்செய்து விடும். இங்ஙனம் 'சின்னீர இன்பத்தின்' தன்மையை நன்கு உணர்ந்து அஃது என் கல்வி வளர்ச்சியில் விளைவிக்கும் 'பிழையை'த் தவிர்த்துக் கொண்டேன். இப்படிக் கல்வியில் பெரும் நாட்டம் கொண்டு இடையிடையே பெறும் 'சிற்றின்பம்' முழுமை அடையாது, இருப்பூர்திப் (Railway journey) பயணத்தின்பொழுது பெறும் உணவு போல்

அமைந்து விடும். இதனால் என் வாழ்நாள் முழுதும் 'இடையறவு பட்ட அகப்பொருள் இன்பமே' எனக்குக் கிட்டுவதாக அமைந்தது. இன்ப உணர்வை—காமத்துடிப்பை—நெறிப்படுத்திய பொருளாகக் கொண்டு பாடல்களை யாத்தனர் சங்கச் சான்றோர். இதன் இன்றியாமையையும் சிறப்பினையும் நன்கு உணர்ந்த தொல்காப்பியனார் பொருள் இலக்கணம் கண்டு அதில் முந்துற அகப்பொருள் இலக்கணத்தைப் பொருத்திக் காட்டினார். கடந்த 41 ஆண்டுகளாக அகப்பொருளில் ஆழங்கால்பட்டு பத்தாண்டுகள் அகப்பொருளைத் தமிழ் எம்.ஏ. மாணாக்கர்கட்குக் கற்பித்து 'அகத்திணைக் கொள்கைகள்' (1981) என்ற நூலையும் எழுதி வெளியிட்ட பிறகுதான் இன்பத்தைப் பற்றிய தெளிவான கருத்து ஏற்பட்டது. தலைவனும் தலைவியும் சேர்ந்து நுகர்வது 'சிற்றின்பம்' என்பதை அறிந்தேன். இருபது யாண்டுகளாக ஆழ்வார் பாசுரங்களிலும் அவர்தம் பாசுரங்களின் உரைகளிலும் ஈடுபட்ட பிறகு ஆன்மா பரமான்மாவுடன் கலப்பதைப் 'பேரின்பம்' என்று அறிந்து கொள்ள முடிகின்றது. இந்த அறிவுடன்—உணர்வுடன்—இல்லற இன்பத்தை இப்போது சிந்தித்துப் பார்க்கின்றேன்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப் படிப்பும், பின்னர் 40 ஆண்டுகள் கற்பித்த அறிவும், பல உளவியல், அறிவியல், கல்வியியல் நூல்களை ஆழ்ந்து கற்ற அறிவும் என்னைக் 'கல்விப் பருவம்', 'கல்வி கற்றல்' என்பவற்றைப் பற்றிச் சிந்திக்க வைக்கின்றன. உலகிலுள்ள உயிர்ப் பிராணிகளையும் மனிதனையும் உற்றுக் கவனித்தால், பலவித உண்மைகள் தெரியவரும். படைப்பு ஏணியிலேயே மனிதன் உயர்ந்த உன்னத நிலையிலுள்ளான். கூர்தல் அறக்கொள்கையின் படியே (Doctrine of Evolution) மனிதன்தான் உயர்ந்த நிலையிலிருக்கின்றான். பிற உயிர்கட்கும் மனிதனுக்கும் இயல்பான தொடர்புகளே இல்லை என்று கூடச்

சொல்லலாம். படைப்பு ஏணியின் கீழ்ப்படியிலுள்ள பிராணி களின் வாழ்க்கையெல்லாம் இயல்பூக்கங்களின் அடிப்படை யில் அமைந்துள்ளது; ஏணியின் மேற்படிக்குப் போகப் போக அவற்றின் வாழ்க்கை அறிவின் அடிப்படையில் அமைந் திருப்பதைக் காணலாம். ஏணியின் உயர்ந்தபடியில் இருக்கும் குரங்கின் வாழ்க்கை கிட்டத்தட்ட அறிவு நிலையின் அடிப் படையிலிருப்பதையும், அதற்கு மேற்படியிலுள்ள மனிதனு டைய வாழ்க்கை, முழுவதும் அறிவின் அடிப்படையிலிருப் பதையும் அறிய முடிகின்றது. மேலே செல்லச் செல்ல உயிர்ப் பிராணிகளின் வாழ்க்கையில் இயல்பூக்கங்களின் ஆதிக்கம் குறைந்து கொண்டேவந்து, மனிதனிடம் அவற்றின் ஆதிக்கம் மிகக் குறைவாக இருப்பதையும் காணலாம். விளக்கில் விழும் விட்டில் பூச்சிகள் தம் அநுபவத்தை மறந்து மீண்டும் விளக்கில் விழுவதையும், ஒரு தடவை நெருப்பைத் தொட நேர்ந்த குழந்தை மீண்டும் நெருப்பைத் தொட அஞ்சுவதை யும் கவனித்தால், இவ்வுண்மை நன்கு விளங்கும். கீழ்நிலை யிலுள்ள பிராணிகளுக்கும் தம் முன்னநுபவம் பயன்படா திருப்பதும் மனிதன் தன் அநுபவ அறிவால் சூழ்நிலைக் கேற்றவாறு தன்னை அநுசரித்துக் கொள்வதும் நாம் நாள் தோறும் காணும் உண்மைகளாகும்

இயல்பூக்கங்களின் குறைவைத் தவிர, மனிதனிடம் இன்னொரு சிறப்பும் அமைந்துள்ளது. உயிர்ப் பிராணி களிலேயே திமிங்கலத்தையும் யானையையும் தவிர மனிதன் தான் பெரிய மூளையைப் பெற்றுள்ளான் என்று சொல்லப் பெறுகின்றது. இயல்பூக்க நிலையிலிருந்து அறிந்து கொண்டவை யாவும் பகுத்தறிவு நிலைக்குக் கொண்டு வரப் பெற்றுப் பாகுபாடு செய்யும் தன்மையும் முன்னநுபவத்தைப் பயன்படுத்தக் கூடிய திறனும் மனிதனிடம் இயல்பாகவே அமைந்துள்ளன.

இதைத் தவிர, இன்னோர் உண்மையும் மனிதனிடம் அறிய முடிகின்றது ஏனைய பிராணிகளின் இளமைப் பருவத்தையும் மனிதனுடைய இளமைப் பருவத்தையும் உற்று நோக்கினால், ஏனைய பிராணிகளின் பருவத்தை விட மனிதனுடைய இளமைப் பருவம் நீடித்திருப்பது தெரிய வரும். மனிதனுடைய இளமைப் பருவம் மட்டிலும் இங்ஙனம் நீடித்திருப்பதற்குக் காரணம் என்ன? சிந்தனை செய்து பார்த்தால் சில உண்மைகள் புலனாகாமற் போகா. ஏனைய பிராணிகள் யாவும் இயல்பூக்கங்களின் அடிப்படையில் மட்டிலும் சூழ்நிலைக்கேற்றவாறு தம்மைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டியிருத்தலும், மனிதன் மட்டிலும் இத்துடன் அறிவு நிலையிலும் தன்னைச் சூழ்நிலைக்கேற்றவாறு சரிப் படுத்திக் கொள்ள வேண்டியிருத்தலும் தெரியவரும். ஏனைய பிராணிகள் தம் அநுபவத்தை மட்டிலும் கொண்டு வாழ் கின்றன; ஆனால், மனிதன் தன் மூதாதையரின் அநுபவத்தை யும் கொண்டு தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டியவனாக உள்ளான். இவ்வாறு தனது மூதாதையரின் அநுபவங்களையெல்லாம் மனிதன் அறிந்து கொள்ள வேண்டு மானால் அதிகக் காலம் வேண்டுமல்லவா? கோழிக்குஞ்சு, பசுங்கன்று இவற்றின் இளமைப்பருவத்தைவிடக் குரங்குக் குட்டியின் இளமைப்பருவம் நீட்டித்தும் குரங்குக்குட்டியின் இளமைப்பருவத்தைவிட 'உர்ராங் உட்டாங்' என்ற பிராணியின் இளமைப்பருவம் அதிகமாக நீடித்தும் உள்ளன. இவை எல்லாவற்றின் இளமைப் பருவத்தைவிட மனித னுடைய இளமைப் பருவம் மிக அதிகமாக நீடித்து உள்ளது. ஏனையவற்றின் இளமைப் பருவம் நாள், வார, மாதக் கணக்கிலிருக்க, மனிதனுடைய இளமைப் பருவம் மட்டிலும் ஆண்டுகள் கணக்கில் உள்ளது. ஏனைய பிராணிகளின் குட்டிகள் சில நாட்களிலேயே பெற்றோர் உண்ணும் உணவை ஏற்கும் நிலையை அடைய மனிதக் குழந்தை

அவ்வாறு தனது பெற்றோர் உண்ணும் உணவுகளை யெல்லாம் புசிப்பதற்குச் சில ஆண்டுகளாகின்றன. ஏனைய பிராணிகளின் குட்டிகள் சில நாட்களில் ஓடி விளையாடு கின்றன; ஆனால் மனிதக் குழந்தையால் ஓர் ஆண்டு முடிந்த பிறகு கூட நடக்க முடிவதில்லை. இரண்டாண்டுகள் முடிந்த பிறகே பேசத் தொடங்குகின்றது. மருத்துவ நியாயப்படி (Medical Jurisprudence) ஏழாண்டுகள்வரை குழந்தைதான்; சிவில் சட்டப்படி இருபத்தோர் ஆண்டுகள் முடிவுற்ற பிறகுதான் 'மேஜர்' ஆகின்றான்; அப்போதுதான் கல்லூரிப் படிப்பும் முடிவடைகின்றது. இவற்றையெல்லாம் சிந்தித்து நோக்கினால் மனிதன் தன்னை மிகச் சிக்கலான வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்து கொள்வதற்கு இவ்வளவு காலம் வேண்டியுள்ளது என்பது தெரியவரும். தனது மூதாதையரின் அநுபவத்தையெல்லாம் தான் பெறுவதற் காகத்தான் மனிதனுடைய குழந்தைப்பருவம் நீடித்துள்ளது.

தன் மூதாதையரின் அநுபவமும் தன்னோடு சமகாலத் தவர்களின் அநுபவமும் நூல் வடிவில் காட்சியளிக்கின்றன. இலக்கியம், சமூகம், பல்வேறு அறிவியல் துறைகள், மருத்துவம், பொறியியல், புவியியல், வரலாற்றியல், வானியல் போன்ற துறைகளிலெல்லாம் மலை மலையாக நூல்கள் குவிந்துள்ளன; நாடோறும் குவிந்து கொண்டும் வருகின்றன. அண்மைக் காலத்தில் அணுவியல், தொலை யுலகச் செலவு, மின்னணுவியல் (Electronics) போன்ற துறைகள் "ஓங்கி உலகளந்துள்ளன." இவற்றையெல்லாம் நாம் கற்கும் காலத்தைத்தான் 'கல்விப் பருவம்' 'கல்வி கற்றல் பருவம்' என்றும் வழங்குகின்றோம். எல்லா வற்றையும் எல்லோரும் கற்க முடிவதில்லை. சிலவற்றைத் தனித்தனியாகக் கற்று வல்லுநர்களாகின்றோம். இந்தக் கருத்துகள் அறிவு முதிர்ச்சி பெற்ற என்னிடம் இப்போது தான் எழுகின்றன; குமிழியிடுகின்றன.

பட்டப்படிப்பின் பொழுது இரண்டாண்டுகள் துன்பமும் இன்பமும் மாறி மாறி என்னை வந்தடைந்தன. சனிக் கிழமையன்று மாலை (இரவு) 8-மணி சுமாருக்கு நாமக் கல்லை அடைவேன். என் மைத்துனர் பேருந்து நிலையத்தில் காத்துக் கொண்டிருப்பார். அப்பொழுது ரூ 2/— கொடுத்தால் குதிரை வண்டியில் 2 மணி நேரத்தில் பொட்டணம் அடையலாம். ரூ 5/— கொடுத்தால் மகிழ்வுந்தில் அரைமணி நேரத்தில் பொட்டணத்தை அடையலாம். என் மைத்து னருக்குத் தெரிந்த முதலாளி ரூ 2/-க்குப் பேருந்தையே பொட்டணத்திற்கு அனுப்புவார். இம்மாதிரியான சந்தர்ப் பங்களில் என் மைத்துனர், அவருடன் வந்திருக்கும் ஓரிரு நண்பர்கள் எல்லோருமாக ஒன்பது மணி சுமாருக்குப் பொட்டணத்தை வந்தடைவோம். இரண்டாண்டுகள் பத்துப் பதினைந்து தடவைகள் பொட்டணத்திற்கு என் இன்பப் பயணம் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

குமிழி —55

# 55. இளங்கலைப் பட்டத்தேர்வும் முடிவும்

தேர்வுகள் மாணாக்கர் கண்டு அஞ்சும் ஓர் அமைப்பு முறை. தொடர்ந்து இடைவிடாது படிப்பவர்கட்குத் தேர்வுகள் அச்சம் தருவதில்லை. என்னைப் பொறுத்தவரை தேர்வுகள் எனக்கு இன்பத்தைத் தருவனவாக இருந்தன. பெரும்பாலும் அன்றைய தேர்வுகள் நினைவாற்றலைத் தேர்வனவாகவே அமைந்திருந்தன. நினைவு[15] என்பது என்ன? இன்றைய உளவியலார் கற்றல் மூளையில் மாற்றங்களை உண்டாக்கு கின்றது என்று கூறுகின்றனர். இம்மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு இருத்தப்பெறுகின்றன. அவை

15. நினைவு — Memory.

தனியாளின் நடத்தைமூலம் வெளிப்படுகின்றன. இந் நடத்தைதான் நினைவு என்பது. அதாவது, மனம் தன்னுடைய செயலால் கருத்துகளைப் பதிந்து, இருத்தி, திரும்பவும், தேவையான பொழுது வெளியிடுவதையே 'நினைவு' என்ற சொல்லால் குறிக்கின்றோம். இதனை ஈண்டு விளக்குவது பொருத்தமாகின்றது. 'கிச்சிலிப் பழம்' எப்படி இருந்தது என்பதை நினைவில் வைக்க வேண்டு மானால் அதன் மஞ்சள் போன்ற நிறம், உருண்டை வடிவம், தொளைகள் உள்ள தோல், ஊற்றுணர்ச்சி, மணம், சுவை ஆகியவை மனத்திற்கு வருகின்றன. இவ்வாறு 'கிச்சிலிப் பழம்' என்ற கருத்தினைப் பெறுகின்றோம். இதனை உண்மைக் கிச்சிலிப் பழத்துடன் வைத்து நாம் மயங்கு வதில்லை. அதற்குக் காரணம் நாம் பார்த்த பல கிச்சிலிப் பழங்களையும் திரும்பவும் நினைவுபடுத்திக் கொள்வதே யாகும்.[16] கிச்சிலிப்பழக் கருத்தே படிமம்[17] என்பது.

நினைவில் பதிவு பெறுதல்[18] இருத்துதல்,[19] மீட்டு மொழிதல்,[20] மீட்டறிதல்[21] என்ற நான்கு கூறுகள் அடங்கி யிருப்பதாகக் கூறுவர் உளவியலார். இந்தக் கூறுகள் ஒவ்வொன்றும் முக்கியமானவை. மனத்தில் தெளிவாகப் பதிபவை அதிகக் காலம் நீடித்திருக்கும். தேர்வுக்குப் பல நாட்களுக்கு முன்னரே நன்கு விளக்கம் பெறும்வரையில் கற்று, சிறிது காலம் இடைவிட்டுத் திரும்பவும் அதில் பயிற்சி பெற்றால் நலம் பயக்கும். நிரந்தரமாக நினைவிலிருத்த வேண்டியவற்றை அடிக்கடித் திரும்பக் கூறுதல் வேண்டும்; கற்கும் பகுதிகளின் இயல்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

16. நினைவு படுத்திக் கொள்ளல - Recollect
17. படிமம் - Image; 18. பதிவு பெறுதல் - apprehension; 19. இருத்துதல் - Retention; 20. மீட்டு மொழிதல் - Reproduction; 21. மீட்டறிதல்- Recognition.

புனித சூசையப்பர் கல்லூரியில் பிப்பிரவரி முடிவிற்குள் நடத்த வேண்டிய பாடப் பகுதிகளை—குறிப்பாக அறிவியல் பாடங்களில்—நடத்தி முடித்து விடுவார்கள். மார்ச்சு மாதத்திலிருந்து பதினைந்து நாட்களில் இரண்டாண்டுகளில் நடத்தியவற்றைத் திரும்பவும் வேகமாக மீள்பார்வை செய் வார்கள், சனவரி முதலே நான் இப்பாடங்களைத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருப்பதால் மீள் பார்வையால் நான் பயன் அடைந்தேன்.

ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலில் பிழைபா டிலனே.[22]

என்ற பவணந்தியாரின் கூற்று இதற்கு ஒத்து வருவதைக் காணலாம். முதன் முதலாக ஆசான் கற்பித்த நூற்பொருளை நிரம்பக் கற்றுக் கொண்டாலும், ஆசிரியரின் புலமைத் திறத்தில் காற்பங்குதான் பெறமுடியும் என்கிறார்[23] இந்த இலக்கண ஆசிரியர்.

மாணாக்கர்கள் ஒருவரையொருவர் வினவும் வினாக் களுக்கு விடைகாணல் வேண்டும். ஒருவருக்கு விடை தெரிந்திருந்தால் அது மீள்நோக்காக[24] அமைகின்றது; தெரியாதிருந்தால் அது கற்பதாகின்றது. இவ்வாறு கலந்து பயில்வதால் இம்முறை பதிவித்தலில் பெரும்பங்கு பெறு கின்றது. நன்னூலாரும்,

அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்[25]

---

22. நன்னூல் - 42
23. ஷை - 44.
24. மீள நோக்கு — Review
25. நன்னூல் - 45

என்று கூறியிருத்தல் ஈண்டு நினைத்தல் தகும். அறிவியல் பாடங்களில் இவ்வாறு கலந்து பயில்வதற்கு வாய்ப்பில்லை. ஆனால் கணிதப் பாடத்தில் பக்கத்து அறையிலிருந்த சுப்பண்ணன்மூலம் இத்தகைய வாய்ப்பினைப் பெற்றேன்.

சனவரியிலிருந்தே பாடங்களைத் திருப்பும் பணியில் ஈடு பட்டேன். மாலை நேரத்தில் காவிரிக்கரையே இவ்வாறு செய்வதற்குத் தக்க இடமாக அமைந்தது. பொது வேதியியல், கணிதம் அநங்கக வேதியியல், அங்கக வேதியியல்; கணிதம், அங்கக வேதியியல், பொது வேதியியல், அகங்கவேதியியல் என்று பாடங்களை மாற்றித் திருப்பியதால் பாடங்களை இடையிட்டுத் திருப்பும் பயிற்சி பெற வாய்ப்பாக அமைந்தது. இது மனத்தில் நிரந்தரமாக நினைவில் அமைவதற்குத் துணை செய்தது. தேர்வுக் காலங்களிலாயினும், சாதாரணமாகக் கல்லூரி நாட்களாயினும் அதிகாலை நான்கு மணிக்குஎழுந்து படிக்கும் பழக்கம் உண்டு. இதனால் காலை மணிக்கே பசி ஏழு கிளம்பிவிடும். இதைத் தவிர்ப்பதற்காக அதிகாலை 6-6½ மணிக்கு இரண்டு இட்லி ½ கப் காப்பி எடுத்துக் கொள்வேன். காலை 9 மணிவரை படிக்க வசதியாக இருக்கும். 9 மணிக்கு உணவு உண்டு கல்லூரிக்குப் போகநேரம் சரியாக இருக்கும். தேர்வுக்காக தரப்பெறும் 15 நாள் விடுமுறையில் வசதி போல் முன்பின்னாக இம்முறை மேற்கொள்ளப்பெறும்.

ஏப்பிரல் மாதம் தேர்வுகள் தொடங்கினதாக நினைவு. முதல் நாளன்று பொது வேதியியல் தேர்வு இருந்தது; தேர்வு முற்பகல் தொடங்கியது. மிக நன்றாக எழுத முடிந்தது; மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆயத்தம் செய்து வைத் திருந்த கட்டுரைகளில் இரண்டு இதில் பயன்பட்டன. தேர்வு முடிவுகள் வெளிவந்தபின் ரூ. 2/- கட்டணம் செலுத்தி மதிப் பெண் வாங்கிப் பார்த்ததில் 85 விழுக்காடு பெற்றிருந்தது தெரிந்தது. அடுத்த நாள் அங்கக வேதியியல்தாள் எழு

வேண்டியிருந்தது. இதிலும் ஆயத்தம் செய்து வைத்திருந்த வற்றில் இரண்டு கட்டுரைகள் பயன்பட்டன. இத்தாளில் ஐந்து வினாக்கட்கு $4\frac{3}{4}$ வினாக்களுக்குத் தான் விடையளிக்க நேரம் இருந்தது. எம்.எஸ்சி தரத்தில் சில விடைகள் அமைந்தன. இதில் 87 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றது தெரிய வந்தது. மூன்றாம் நாள் அநங்கக வேதியியல் தாள் எழுதவேண்டி வந்தது. இத்தாளை எவரும் எப்பொழுதும் திருப்தியாக எழுத முடிவதில்லை. இதில் 62 விழுக்காடுதான் மதிப்பெண்கள் பெறமுடிந்தது.

அடுத்து எழுதிய கணிதத் (கால்குலஸ் பிரிவு) தாள் வினாக் கட்கு மிக நன்றாக விடையிறுத்தேன். தாள் முழுவதுக்கும் $2\frac{1}{2}$ மணி நேரத்தில் விடையிறுத்தேன். இதில் 100 விழுக்காடு மதிப்பெண் பெற்றிருந்தேன். இன்னொரு தாளுக்குரிய பாடங்களைக் கற்பித்த இராமச்சந்திர அய்யர் முதலாண்டுத் தொடக்கத்திலேயே திருநாடு அலங்கரித்தார். இப்பாடங் களை விட்டு விட்டு மூவர் கற்பித்தனர். எல்லா மாணாக்கர் கட்கும் இத்தாளில் சரியான அடி; பெரும்பாலோர் தேர்வில் வெற்றியடைய வேண்டிய குறைந்த மதிப்பெண்கள்கூடப் பெற வில்லை. எனக்கு 52 விழுக்காடு வந்திருந்தது. சரியான ஆசிரியர்கள் அமையாததால் வகுப்பிலுள்ள அனைவரும் நல்லூழ் இல்லாதவர்களானோம். கணிதம் ஆசிரியரின்றிப் படித்துக் கொள்ளும் பாடமும் அன்று. அடுத்து எழுதிய இயற்பியல் இரண்டு தாள்களிலும் 81, 79 விழுக்காடுகள் பெற்றிருந்தேன்.

அக்காலத்தில் எழுத்து முறைத் தேர்வுகளைத் தொடர்ந்து செய்முறைத் தேர்வுகள் நடைபெறுவதில்லை. இருபது நாட்கள் இடைவெளிவிட்டு நடைபெற வேண்டி யிருந்தமையால் அறையைப் பூட்டிக்கொண்டு மாமனார் வீடு வந்தடைந்தேன். செய்முறைத் தேர்வுக்குரிய நான்கு

பதிவேடுகளையும் ஒரு சில இன்றியமையாத நூல்களையும் எடுத்துக் கொண்டு வந்திருந்தேன். பதினைந்து நாட்கள் இவற்றைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். தேர்வுகள் தொடங்கும் இரண்டு நாட்களுக்கு முன்னரே திருச்சி திரும்பினேன். விதிப்படி பதிவேடுகள் மூன்றையும் பேராசிரியர்களின் மதிப்பீட்டிற்காகக் அந்தந்தத் துறைகளில் தந்துவிட வேண்டும். தேர்வுகள் தொடங்கின. ஆறுமணி நேரம் (முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4 மணி முடிய) நடைபெற வேண்டிய தேர்வு முதலில் தொடங்கியது. இதை மிக நன்றாகச் செய்தேன். இடைஇடையே பேராசிரியர் A. C ஜூசையப்பர் என்னிடம் வந்து நின்று நான் செய்வதைப் பார்த்துச் சென்று சொண்டிருந்தார். நான் செய்து வருவது அவருக்கு மனநிறைவு தந்தது என்பதை அவர் முகத்தினின்றும் அறிந்து சொள்ள முடிந்தது. இறுதியாக வந்த போது பூரட்டில் குறித்த அளவு என்ன என்று கேட்டார். நான் 26. 2 என்று சொன்னேன்; அவர் அதை 26.1 என்று போட்டுக் கணக்கீடு செய்யும்படியும் சொல்லிச் சென்று விட்டார். வேறுசில மாணவர்கள் 'சார், சார்' என்று அவரைக் கெஞ்சும் பாவனையில் முகங்களைக் காட்டி நின்றனர். அவர் 'Proceed Mister, Proceed Mister' என்று கூறிக்கொண்டே சென்று விட்டார். இவர்கள் யாவரும் தாவரஇயலைத் (Botany) துணைப்பாடமாகத் தேர்ந்து எடுத்துக் கொண்டு படித்தவர்கள்.

வேதியியலில் ஆறு மணி நடைமுறைத் தேர்வில் பண்பு முறைப் பகுப்பாய்வுத் தேர்வும் (Qualitative Analysis) அடங்கும். இதில் இரண்டுஉப்புகளின் கலவையைத் தந்து அவற்றை எவை எனக் கண்டறிதல் வேண்டும். ஒவ்வொரு உப்பிலும் அமிலப்பகுதி (Acid radical), மூலப்பகுதி (Basic radical) என்று உண்டல்லவா? கொடுக்கப்பட்ட இரண்டு அமிலப் பகுதிகளையும் இரண்டு மூலப்பகுதிகளையும் காணல்

வேண்டும். இரண்டு அல்லது மூன்று கிராம் அளவுதான் உப்புக் கலவை கொடுக்கப் பெற்றிருக்கும். சிறிதும் வீணாக்காமல் கருத்துடன் கையாள வேண்டும். முதற்குழு உலோகங்கள் (First group metals) தொடங்கி வரிசையாக ஐந்தாம்குழு (Fifth group metals) வரை படிப்படியாகப் பார்த்துக் கொண்டே வருதல் வேண்டும். இப்படிச் செய்து தான் இரண்டு மூலப்பகுதிகளையும் (Basic radicals) கண்டறிதல் வேண்டும். இவற்றைக் கண்டறிவதில்தான் விழிப்பாக இருத்தல் வேண்டும். அமிலப் பகுதிகள் எளிதாகத் தட்டுப்பட்டுவிடும்; சில முக்கிய சோதனைகளால் உறுதிப்படுத்திவிடலாம். ஆனால் மூலப்பகுதிகளைக் கண் டறியும்போது செய்யப்படும் பல சோதனைகளால் திரவம் தீவிரம் குறைந்து விடுவதால் உறுதிப்படுத்துவது மிகச் சிரம மாக இருக்கும். இரண்டு, மூன்று, நான்காவது குழுவிலே இந்த இரண்டு பகுதிகளும் உறுதிப்பட்டுவிட்டால் அதிர்ஷ்டமே; ஐந்தாவது குழுவும் வரும்படி நேர்ந்தால் மிக விழிப்பாகச் சோதனைகள் செய்தல் வேண்டும். இந்தத் தேர்வில் நான் நான்கு பகுதிகளையும் சரியாகக் கண்டறிந்த தால் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் பேறு பெற்றேன்.

பேராசிரியர் A. C. சூசையப்பர் தாவர இயலைத் துணைப்பாடமாக எடுத்துப் படித்த மாணவர்களிடம் தனிச் சலுகைகள் காட்டுவார்; கணிதத்தைத் துணைப்பாடமாகக் கொண்டு படித்தவர்களிடம் அரைகுறை ஆர்வமுடையவ ராகவே (Lukewarm) இருப்பார். இவர்களில் சிலர் இரண் டாண்டுகள் இவரை 'வளைய வளைய' வந்து கொண்டிருப் பார்கள். ஏதோ அக்கறையாகப் படிப்பவர்கள்போல் 'பாவனை' பண்ணுவார்கள். இவர்கள் மறைத்திரு ஹாஸ் சாமியாரிடமும் (துறைத்தலைவர்) இப்படித்தான் நடந்து கொள்வார்கள். ஆனால் இருவரும் இம்முறைகளால் மயங்கு பவர்கள் அல்லர். அவர்களிடம்தான் வகுப்புத்தேர்வு மதிப்

பெண் பட்டியல், பதிவேடுகளை ஒழுங்காக எழுதிக் குறித்த காலத்தில் தந்த விவரங்கள் முதலியவை சாதகக் குறிப்புகள் போல் இருக்கின்றனவே. இவற்றைப் பார்க்காமல் சான்றிதழ் கூட வழங்க மாட்டார்கள்.

செய்முறைத் தேர்வுகள் நடைபெறுவதற்குமுன் மாணவர்கள் எழுத்துமுறைத் தேர்வுகளில் பெற்ற மதிப் பெண்கள் பேராசிரியர்கட்குத் தெரிந்துவிடும். இவற்றில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றவர்களிடம் மட்டிலும் செய் முறைத் தேர்வுகள் நடைபெறும்போது இவர்களின் 'கடைக் கண் பார்வை' இருக்கும் A C. சூசையப்பர் என் அருகில் வந்து போய் கொண்டிருந்தது ஒரு சிலருக்குப் பொறாமையாகக் கூட இருந்திருத்தல் கூடும். இரண்டாண்டுகளாகப் பேரா சிரியர்களிடம் 'காக்கை' பிடிப்பதற்குக் காக்கைகள் போல் சுற்றிக்கொண்டிருந்தவர்களிடம் பேராசிரியர் அருகில்கூட வரவில்லையே என்பது அவர்கட்கு வியப்பாகக்கூட இருந் திருத்தல் கூடும். இவர்கள் தம் உழைப்பு, தம் அறிவுத்திறன், உண்மையாகத் தாம் பாடங்களில் ஈடுபட்டது, இதுகாறும் நடந்த வகுப்புத் தேர்வுகள், காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகள் இவற்றில் தாம் பெற்ற மதிப்பெண்கள் இவற்றைச் சிந்தித்து 'ஆன்மப் பரிசோதனை' நடத்துவார்களானால் உண்மை தட்டுப்படாமற் போகாது.

அடுத்த நாள் நடைபெற்ற 'அங்கக வேதியியல்' பற்றிய செய்முறைத் தேர்வில் எல்லோருக்கும் ஒரே மாதிரியான தேர்வுமுறை அமைந்திருந்தது. எல்லோரும் என்ன செய்ய வேண்டும் (40 பேர்) என்று செய்யவேண்டிய முறையை 'சொல்லுவதெழுதுதல்' (Dictation) மூலம் தெரிவித்து விட்டனர். இனி செய்முறைத் தேர்வை சூழ்ச்சித் திறனுடன் கையாள்வதைப் பொறுத்துதான் சோதனையின் முடிவுகள் அமையும். பொதுவாக ஆய்வுக் கூடங்களில் நான் செய்திறன்

நேர்த்திக்குப் பெயர் போனவனாக இருந்ததைப் பேராசிரியர்களும் சோதனைக்கூட அலுவலர்களும் நன்கு அறிவர். இரண்டு வேதியியல் சோதனைகளிலும் என் சோதனை முடிவுகளில் தவறுகள் (Exprimental error) ஒரு விழுக்காட்டிற்குக் குறைவாக இருந்தமையால் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெறமுடிந்தது. தவறுகள் ஒரு விழுக்காட்டிற்குக் குறைவாக இருந்தால் 100 விழுக்காடும் ஒரு விழுக்காட்டிற்குமேல், ஆனால் இரண்டு விழுக்காட்குற்குக் கீழே, தவறுகள் இருப்பின் 60 விழுக்காடும் மதிப்பெண்கள் பெறுவார்கள்.

இறுதியாக, இயற்பியல் செய்முறைச் சோதனை செய்யும் நாள் வந்தது. மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப பரிசோதனைகள் ஏறபாடு செய்யப் பெற்றிருக்கும்; பரிசோதனைகளுக்குக்கு வரிசை எண்கள் இடம் பெற்றிருக்கும். சோதனைக் கூடத்தின் நுழைவாயிலில் சிறுசிறு அட்டைத் துண்டுகளில் எண்கள் எழுதப்பெற்றிருக்கும். ஒவ்வொருவரும் ஏதாவது ஓர் அட்டையை எடுத்துக் கொண்டு அதிலுள்ள எண் குறிக்கும் சோதனை எண்ணுக் குரிய சோதனையைச் செய்ய வேண்டும். நான் 3 என்ற எண்ணை எடுத்ததாக நினைவு. அது பட்டகம் (Spectrometet) பற்றிய சோதனை. நீர் பட்டகத்தினைத் (Waterprism] துணைகொண்டு நீரின் விலக்களண் (Refractive index) கண்டறிதல் வேண்டும். எளிதான சோதனைதான். எனினும் துணைக்கருவியை நன்றாகக் கையாளும் பயிற்சியைப் பெற்றவர்கட்கு எளிதானது. சோதனையை முடித்துப் போகும்போது அதனை (வழி) மாற்றக் கோணத்தில் (Angle of deviation) வருமாறு சரிப்படுத்தி வைத்துச் செல்ல வேண்டும். மூன்று மணி நேரம் செய்யவேண்டிய சோதனையை ஒன்றரை மணி நேரத்தில் செய்து முடித்து விட்டேன்.

செய்முறைச் சோதனைகளில் இத்தகைய பயிற்சி பெற்றிருந்தாலும் நீர்பட்டகம் (water-prism) பற்றிய சோதனையைச் செய்ததில்லை. இதனால் அதற்குரிய வாய்பாடு (Formula) தெரியவில்லை. தெரிந்தால்தான் நீரின் விலகு விகிதம் (Refractive index) கணக்கிட முடியும். கண்ணாடியின் விலகு விகிதம் தெரிந்ததே; கிளார்க் அட்டவணையிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம். இதனை வாய்பாட்டில் அமைத்துக் கணக்கிட்டால் நீரின் விலகு விகிதம் தெரிந்துவிடும். இந்த வாய்பாட்டை வகுப்பில் சொல்லித்தரவில்லை; செய்முறை சோதனைகள் கற்கும்போதும் இதனை அறிந்து கொள்ளும் வாய்ப்பு பெறவில்லை. தேர்வு மேற்பார்வையாளர் ஒரு மலையாளி. வாய்பாடு தெரியாமல் கணக்கிட முடியாதென்றும் இரண்டாண்டுக் காலத்தில் இதனைப் பேராசிரியர்கள் சொல்லித்தரவில்லை என்பதையும் அவர் நன்கறிவார்' வாய்பாடு தெரியாமல் கணக்கீடு செய்ய முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்த என்னிடம் வந்தபோது வாய்பாட்டைத் தெரிவித்தார். பத்து மணித்துளியில் கணக்கீட்டை முடித்துவிட்டேன். என் விடையைக் கண்டு புன்முறுவலுடன் தலையசைத்தார். மறுநாள் 100 விழுக்காடு பெற்றதையும் தெரிவித்தார். இப்படி என் கல்லூரிப்படிப்பில் கலைமகளின் 'கடைக்கண் நோக்கு' இருந்தமையால் என் கடின உழைப்பினால் சிறந்த முறையில் தேர்வுகளில் வெற்றியடைய முடிந்தது. அடுத்த நாள் அறையைக் காலி செய்து கொண்டு பெரட்டணம் (மாமனார் வீடு) வந்து சேர்ந்தேன்.

# 56. இளங்கலைத் தேர்வு வெற்றிக்குப்பின்

இளங்கலைத் தேர்வு வெற்றி அறிவிக்கப் பெற்றபின் திருச்சி சென்றேன். கல்லூரியில் முதல்வர் பேராசிரியர் ஜெரோம் டி சௌஸா சாமியாரைச் சந்தித்து அவர் ஆசியைப் பெற்றேன். நல்ல மதிப்பெண்கள் பெற்று முதல் வகுப்பிலும் கல்லூரியில் முதல்வனாகவும் தேர்ச்சியடைந்தமையைத் தெரிவித்து மகிழ்ந்தார். அடுத்து, பேராசிரியர் சீநிவாசன் (கணிதம்), பேராசிரியர் என். அநந்தகிருஷ்ணன் (இயற்பியல்), பேராசிரியர் மறைத்திரு ஹாஸ் அவர்கள் (வேதியியல் துறைத்தலைவர்), பேராசிரியர் ஏ. சி. சூசையப்பர் (வேதியியல்), பேராசிரியர் சி.கே. இராமகிருஷ்ணன் (வேதியியல்) இவர்களை எல்லாம் சந்தித்து ஆசிபெற்றேன். பேராசிரியர் ஹாஸ் சாமியார் அரியதோர் சான்றிதழை வழங்கி ஆசி கூறினார். ஆரோக்கியசாமி என்ற சோதனைக் கூடப் பொறுப்பாளர், சோதனைக்கூடச் சிறுவர்கள் இவர்களையும் சந்தித்தேன். இவர்கள் தந்த உதவி மறக்க முடியாதது. முதல்வரைச் சந்தித்து 1. நடத்தை பற்றிய சான்றிதழ் 2. வயது பற்றிய சான்றிதழ் 3. இட மாற்றச் சான்றிதழ் தருமாறு வேண்டி விண்ணப்பம் தந்தேன். மூன்றுநாள் கழித்து வருமாறு பணித்தார் அவர்.

புனித சூசையப்பர் கல்லூரியில் ஒவ்வொரு மாணாக்கரைப்பற்றியும் அவர் சேர்ந்த நாள்தொட்டு பேரேடு ஒன்று திறக்கப்பெற்று அதில் அம்மாணவரைப் பற்றிய எல்லா விவரங்களும் பதியப்பெறும்; காலாண்டு, அரையாண்டு, முழுஆண்டுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள், கல்லூரிக்கு வந்த நாட்கள், விதிகளுக்குப் புறம்பாக நடந்து ஏதாவது தண்டம் (Fines) செலுத்தியிருந்தால்

அவற்றின் விவரம், பேராசிரியர்கள் மாணாக்கர்களைப் பற்றி பாதகமான குறிப்புகள் தந்திருந்தால் அவற்றின் விவரம்—ஆகிய அனைத்தும் அதில் பதிவாகி இருக்கும். மாணாக்கரின் நடத்தைத் தகுதி சான்றிதழ் வழங்கும் போது முதல்வர் இந்தப் பேரேட்டை நன்கு ஆராய்ந்துதான் சான்றிதழ் வழங்குவார். இந்தச் சான்றிதழ் முதல்வர் கையெழுத்திலேயே இருக்கும்; தட்டச்சு வசதியை இதில் பயன்படுத்துவதில்லை. பேராசிரியர் ஹாஸ் சாமியார், முதல்வர் பேராசிரியர் ஜெரோம் டி. செளஸா சாமியார் இவர்கள் நல்கிய சான்றிதழ்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. அவர்கள் தந்த சான்றிதழ் களில் கண்ட குறிப் புகளை இன்றும் மறை வாக்குகளாக நினைந்து போற்றி வருகின்றேன்; அவற்றில் கண்ட உண்மைகட்கு இலக்கியமாகவும் நடந்து வருகின்றேன்.

அக்காலத்தில் திருச்சி மாநகரில் சர் டி. தேசிகாச்சாரி என்ற வைணவ வழக்குரைஞர் ஒருவர் இருந்தார்; மிகு புகழ் பெற்றவர். பல்வேறு குழுக்களில் உறுப்பினராகவும் தலை வராகவும் இருந்து பணியாற்றுபவர். இருப்பூர்தித் துறையில் அவருக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு என்பது நாடறிந்த செய்தி. சில மாணாக்கர்கள் அவரை அண்மி நடத்தை சான்றிதழ்களைப் பெறுவதுண்டு. இதையறிந்த நான் அவரிடம் சான்றிதழ் பெறவேண்டும் என விழைந்தேன். முதல்வர் மூன்று நாட்கள் கழித்து வருமாறு சொல்லி யிருந்தாரல்லவா? இந்த மூன்று நாட்களை இவ்வாறு கழித்தேன். ஒருநாள் முற்பகல் ஒன்பது மணிக்குக் கண்டோன் மேண்டிலுள்ள அவர் இல்லம் சென்று செவ்வியறிந்து அவரைச் சான்றிதழ் வழங்குமாறு வேண்டினேன். அவர் '1. உன்னை யார் என்று அறியேன்; உனக்கு எப்படிச் சான்றிதழ் வழங்க முடியும்? 2. இந்த ஊரில் எத்தனையோ பேர்கள் இருக்க, என்னை நாடி வந்த காரணம் என்ன?'

என்று வினாக்களை விடுத்தார். மேலும், "நீ துணிவான பையனாகவும் சுறுசுறுப்பானவனாகவும் காணப்படுகின்றாய். உனக்கு வழங்க நினைக்கின்றேன். உன்னை தெரியாதே என்றுதான் கவலைப்படுகின்றேன்" என்றார்.

நான் சொன்னேன்: "ஐயா, 1. முதல்வர் சான்றிதழ் பெற மூன்று நாட்கள் கழித்து வருமாறு சொல்லியுள்ளார். அவர் தந்தவுடன் அதனைத் தங்களிடம் காட்டி என்னைப் பற்றி அறிமுகம் செய்துகொள்வேன். 2. உங்கட்கு இருப்பூர்தித் துறையில் நல்ல செல்வாக்கு உள்ளதாகப் பொதுமக்கள் பேச்சு. உங்கள் சான்றிதழைக் கொண்டு இருப்பூர்தித் துறைக்கு விண்ணப்பித்தால் வேலை கிடைப்பது உறுதி என்றும் பேசிக்கொள்ளுகின்றனர். அதனால்தால் உங்களை நாடிவந்தேன்" என்று.

அவர் "நீ நன்றாகப் பேசுகின்றாய். இங்கிதம் அறிந்து வந்து சந்தித்தாய். யாரும் உனககுத் துணையில்லாததால் நீயே துணிவாக வந்து என்னைச் சந்தித்துக் கேட்கின்றாய். என்னிடம் சான்றிதழ்கட்கு வருபவர்கள் எல்லாம் யாரோ ஒரு பெரிய மனிதரைக் கூட்டிக்கொண்டு வருவார்கள். சரி, முதல்வர் சான்றிதழை எடுத்துக் கொண்டு என்னிடம் வா; தருகின்றேன்" என்று இசைவு காட்டினார்.

இதற்கிடையில் இருப்பூர்தித் துறையில் நந்திரெட்டியார் என்ற ஒருவர் பெரும்பதவியிலிருந்தார் என்பதைக் கேள்வி யுற்றிருந்தேன். அவர் மிகவும் செல்வாக்கும் புகழும் பெற்றிருந்தார். அவர் மலைக்கோட்டையில் யானைக்கட்டி யிருக்கும் தெருவில் இருப்பதாக அறிந்து அவரைச் சந்தித்தேன். என்னைப்பற்றிய சான்றிதழ் ஒன்று வழக்கு மாறு வேண்டினேன். அவர் சொன்னார்: "என்னுடைய சான்றிதழ் வேண்டா. நான் எப்பேதும் உங்கட்கு உதவுவ

தற்குத் தயாராக உள்ளேன். நீங்கள் காட்டுப்புத்தூர் பெருநிலக்கிழார் திரு. கே. சி. சப்தரிஷி ரெட்டியார் அவர்களிடம் சான்றிதழ் பெறுங்கள், அவர் சட்டமன்ற மேலவை உறுப்பினர்; செல்வாக்குள்ளவர். அவருக்கு நான் உங்களை அறிமுகப்படுத்தி ஒரு கடிதம் தருகிறேன். போய்வாருங்கள்'' என்று.

அடுத்த நாள் காலையில் சிற்றுண்டிக்குப்பின் குழித்தலை வழியாகக் கரூருக்குச் செல்லும் இரும்பூர்தியில் ஏறி அவர் சொன்ன நிலையத்தில் இறங்கிக் காவிரியைக் கடந்து காட்டுப் புத்தூர் சென்று மிட்டாதாரின் அரண்மனையை அடைந்தேன். நந்தி ரெட்டியாரின் கடிதத்தை ஆள் மூலம் கொடுத்தனுப்பினேன். மிட்டாதார் உடனே தன்னைப் பார்க்குமாறு பணித்தார். சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தோம். பிறகு ஓய்வு அறையைக் காட்டி அதில் சிறிது நேரம் இருக்குமாறு பணித்தார். பகல் 12-30 மணி இருக்கும். உணவுக்கு வருமாறு ஆள் அனுப்பினார். பெரிய தலைவாழை இலையில் பல்வேறு உணவு வகைகள் பரிமாறப் பெற்றிருந்தன. தான் நடந்து கொண்டே "அதை வை, இதை வை'' என்று பரிமாறுபவனுக்கு ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தார். அத்தகைய எளிய, ஆனால் சுவையான உணவை, அன்றிலிருந்து இன்றுவரை உண்டதில்லை. என் வாழ்வில் பெரிய பெரிய விருந்துகளில் கலந்து கொண்டதுண்டு. செட்டிநாட்டில் இருந்தபொழுது மிகச்சிறந்த விருந்துகளில் பங்கு பெற்றதுண்டு. ஆனால் அவையெல்லாம் மிட்டாதார் விருந்துக்கு அடுத்தபடிதான். அந்த நல்ல விருந்தை இன்றும் (15-10-1988) நினைந்து பார்க்க முடிகின்றது.

விருந்து முடிந்ததும் தன் அறைக்கு என்னை இட்டுச் சென்றார். அங்குத் தாம்பூலம் தயாராக இருந்தது. பழவகை

களும் இருந்தன. ஒரு சில திராட்சைப் பழங்களையும், கிச்சிலிப் பழத்தையும் எடுத்து உண்டேன். திருமணமானவன் னாதலால் துணிவாகத் தாம்பூலம் தரித்துக் கொண்டேன். சான்றிதழ் ஓர் உறையில் போட்டுத் தயாரரக வைத்திருந் தார்; அதை என்னிடம் தந்து வாழ்த்தினார். 'பெரியாரைத் துணைகொள்' என்ற பாட்டியின் வாக்கு நினைவிற்கு வந்தது.

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்.[26]

என்ற வள்ளுவர் வாக்கையும் நினைவுகூர முடிகின்றது. நந்திரெட்டியாரின் கடிதம் செய்த பெருமையை இன்றும் நினைந்து அசைபோட முடிகின்றது. மிட்டாதாரிடம் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் காவிரியைக் கடந்து (கோடை காலமாதலால் வெள்ளம் இல்லை) இரும்பூர்தியிலேறித் திருச்சி வந்து சேர்ந்தேன். இப்போது மாலை 6-மணியாக இருந்தது. சரியாக 7-மணி அளவில் நந்திரெட்டியாரைச் சந்தித்து, சான்றிதழ் பெற்ற விவரங்களையும் மிட்டாதார் உபசரித்த முறையையும் கூறி அவருக்கு நன்றி தெரிவித்தேன்.

அக்காலத்தில் எந்த வேலைக்கு விண்ணப்பித்தாலும் கல்லூரி முதல்வரின் சான்றிதழைத் தவிர, வேறு இரண்டு சான்றிதழ்களை வற்புறுத்தி வந்தனர். அடுத்து, உயர்நிலைப் பள்ளிப் படிப்பின்போதே முசிறியில் கே. இராமச்சந்திர அய்யர் என்னை அறிமுகம் செய்து வைத்த தி.மு. நாராயண சாமிபிள்ளை அவர்களைச் சந்தித்தேன். இப்போது அவர் மாவட்ட கழகத்தலைவராக இல்லை. வழக்குரைஞர் பதவி யில் இருந்தார். இவரது அலுவலகம் திருச்சி பெரிய கடை வீதியில் இருந்தது. செங்கமலம் பிள்ளை, எம். முத்துசாமி

26. குறள் - 441.

பிள்ளை, இன்னும் சிலர் இவரது அலுவலகத்தில் இளைய வழக்குரைஞர்களாக இருந்து வந்தனர். (இம்மூவரும் இப்போது திருநாடு அலங்கரித்து விட்டனர்). நாராயணசாமி பிள்ளையை அண்மி, முசிறியில் கே. இராமச்சந்திர அய்யர் அறிமுகம் செய்ததை நினைவூட்டி, இளங்கலைத் தேர்வில் முதல் தகுப்பில் தேர்ச்சியடைந்ததைச் சொல்லிச் சான்றிதழ் பெற்றுக் கொண்டேன். சௌலப்பியமே வடிவு கொண்டாற் போன்ற இவரிடம் சான்றிதழ் பெறுவது எளிதாக இருந்தது.

மூன்று நாள் தவணைக்குப் பிறகு கல்லூரி முதல்வரைச் சந்தித்து அவரது ஆசியுடன் சான்றிதழ்களைப் பெற்றேன். இந்த சான்றிதழ்களைக் காட்டி, சர். டி. தேசிகாச்சாரியிடம் நடத்தை பற்றிய சான்றிதழ் பெற்றேன். சுறுசுறுப்பான என்னை நோக்கி, "நீ வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவாயாக" என்று வாழ்த்தினார். எழுபது அகவையை எட்டிய நிலையில் இருந்த அப்பெருமகனாரின் வாழ்த்து இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. இப்போது வேலைதேடும் படலத்திற்குத் தயாராக இருந்தேன். கோட்டாத்தூர் சென்று என் அன்னையின் ஆசிபெற்று மீண்டும் பொட்டணம் சென்று அங்கு நிரந்தரமாகத் தங்கலானேன். இங்கிருந்து கொண்டுதான் பல்வேறு வேலைகட்கு விண்ணப்பித்த வண்ணமிருந்தேன்.

குமிழி 57

## 57. விநோதச் செயல்கள்

பொட்டணத்தில் நாகம்மாள் யார்மீதும் நம்பிக்கை வைக்கவில்லை, தம் பேத்தியைத் தவிர. தண்டவாளப் பெட்டிச் சாவி தன் பேத்தியின் (என் மனைவியின்) கையில் தான் இருக்கும். பணம் தேவைப்படும்போது என் மைத்துனர்

பாட்டியின் இசைவு பெற்றுத் தங்கையிடம் சாவியை வாங்கிப் பணத்தை எடுக்கும் வழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. பண்ணைச் செலவுக்குத் தேவைப்படும்போதும், பிறருக்குக் கடன் கொடுக்கத் தேவைப்படும்போதும் இவ் வழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. தன் சொந்தச் செலவுக்குத் தேவைப்படும் பொழுது பாட்டியின் இசைவு பெறாமலேயே தன் தங்கையிடம்சாவியைப்பெற்றுப்பணத்தை எடுத்துக் கொள்வார். என்மைத்துனர் நடைமுறையில் பஞ்சதந்திரக்காரர்; பாட்டியை ஏமாற்றுவதில் எத்தனையோ தந்திரங்களைக் கையாளுவார். ஒரு பழைய மோட்டார் சைக்கிள் வாங்கினார். அஃது ஓடும் நாட்களை விட ரிப்பேராகக் கிடக்கும் நாட்கள்தாம் அதிகம். வண்டியைப் பிரித்துப் போட்டு இவரே பூட்டுவார்; பழுதடைந்த பகுதி களை மாற்றுவார். இவர்தம் மூளை இயந்திரத் தன்மை வாய்ந்தது. தாமாகவே இயந்திர நுட்பங்களையெல்லாம் அறிந்து கொள்வார்.

பாட்டிக்குப்பேரன் பணத்தை வீணடிக்கின்றான் என்ற ஐயம் ஏற்பட்டது. மோட்டார் சைக்கிள் வீட்டிற்கு வந்ததி லிருந்து இந்த ஐயம் தோன்றத் தொடங்கியது. ஒரு சமயம் இதைக் கேட்கவே தொடங்கி விட்டார். என் மைத்துனர் இந்நிலையைச் சமாளித்தது மிகவும் அற்புதம். இரண்டாம் உலகப் பெரும்போர் நடந்து கொண்டிருந்த சமயம். போர் நிதி திரட்டிக் கொண்டிருந்தது வெள்ளையரசு. இதில் பரிசுத் திட்டமும் புகுத்தப் பெற்றிருந்தது. ஐம்பது ரூபாய்ச்சீட்டு, நூறு ரூபாய்ச் சீட்டு என்றெல்லாம் விற்றுக் கொண்டிருந்தது. பாட்டியிடம் பேரன் சொன்னது : "பாட்டி, சர்க்காருக்கு யுத்த நிதிக்கு ரூ 50/- கட்டினேன்; மோட்டார் சைக்கிள் பரிசாக விழுந்தது. இன்னொரு நூறு ரூபாய் சீட்டுக்குக் கட்டியுள்ளேன். கார் விழப்போகிறது என்று சோதிடர் சொன்னார். நீ யாருக்கும் சொல்லாதே, "கண் திருஷ்டி

பட்டு விடும்'' என்று. பாட்டியின் வாய் சும்மா இருக்குமா? வெறும் வாயை மெல்லுகிறவர்கட்கு அவல் போட்டமாதிரி தன் வயதிலுள்ள சில கிழவிகளிடம் 'அலமேலு, என் பேரனுக்குச் சீட்டு போட்டதால் மோட்டார் சைக்கிள் விழுந்திருக்கிறது. கார் விழப் போகிறதாம். நீ யாருக்கும் சொல்லாதே' என்று சொல்லி வைக்க அது வதந்தி பரவுவது போல் ஊர் முழுவதும் பரவி விட்டது. இந்த 'நகைச்சுவை விருந்தை' திரு. நல்லப்ப ரெட்டியார் அடிக்கடிச் சொல்லிச் சொல்லி மகிழ்வார்.

பொட்டணத்தில் ரெட்டியார் வீடுகள் பதினைந்து இருந்தன. இப்போது ஐந்தாறு வீடுகளாகி விட்டன என்பது கேள்வி. சோம்பேறிக் கூட்டம் எப்படிச் செழிக்க முடியும்? இவர்கட்கு அடுத்துக் குறைவாக உள்ளவர்கள் வேண்டுவக் கவுண்டன்மார்கள்; நிற்க நேரமில்லாமல் உழைப்பவர்கள், இவர்களைத் தவிர உடையார்கள், வேளாளக் கவுண்டர்கள், அரிசனர் இவர்களே அதிகமாக இருந்தனர். இவர்களுள் கவுண்டர்கள் மிக்க உழைப்பாளிகள். 'மேழிச் செல்வம் கோழைபடாது' என்பதை மறைமொழியாகப் போற்றி உழைப்பவர்கள். 'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது' என்பதன் உட்கருத்தை உணர்ந்தவர்கள். சாதாரணமாக இவர்களைப் பகலில் மாலை 6 மணிக்கு முன் ஊருக்குள் பார்க்க முடியாது; வயல்களில்தான் பார்க்கலாம். அரிசன்மார்கள் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள். உடையார்களில் பெரும்பாலோர் சொகுசான வாழ்க்கை நடத்துபவர்கள். இவர்கள் நடுவே படித்தவர்கள் ஒரு வருமிலர்; செல்வர்களும் அல்லர். கூட்டம் போட்டுக் கொண்டு 'அரட்டை' அடிப்பார்கள்; எங்காவது சீட்டாடிக் கொண்டிருப்பார்கள். கவுண்டன்மார்கட்கும் உடையார் கட்கும் இந்த ஊரில் நீண்ட நாட்களாக பொதுக் காரிய விஷயமாக விரோதம் இருந்து வந்தது.

பத்துப் பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் மாரியம்மன் திருவிழா அவ்வூரில் நடைபெற்றது. உடையார்களும் கவுண்டன்மார்களும் இடத்தாலும் பிரிவுற்றிருந்தனர். ஊரின் கீழ்ப்பகுதியில் உடையார்களும் மேற்பகுதியில் கவுண்டர்களும் வாழ்ந்து வந்தனர். ஊருக்குப் பொதுவான மாரியம்மன் கோயில் ஊரின் கீழ்க்கோடியில் உடையார்கள் வாழும் பகுதியில் அமைந்திருந்தது. திருவிழாவில் கவுண்டர் கள் வாழும் பகுதிக்கு வந்த மாரியம்மன் திருவுலாவைத் தடுத்து நிறுத்தினர் உடையார்கள்; தம் பகுதிக்கும் அம்மன் எழுந்தருள வேண்டும் என்று வாதாடினர், கவுண்டன்மார். சில ஆண்டுகள் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது; நீதி மன்றத்தில் நீதி கிடைக்கவேண்டுமானால் அது பரிசுச்சீட்டுக் குலுக்கலில் பரிசு கிடைப்பது போல. பரிந்துரையும், செல்வாக்கும், பணபலமும் நீதியையே மாற்றி விடுவதை நாம் காணாமல் இல்லை. இம்மாதிரிதான் யாரோ ஒரு நீதிபதி ஊருக்குப் பொதுவாகவுள்ள அம்மன் கவுண்டர்கள் வாழும் பகுதிக்குத் திருவுலாவாகப் போகும் உரிமையைக் கவுண்டர்கள் கொண்டாட முடியாது என்று 'அநியாயமாக' நீதி உரைத்து விட்டார். பதினைந்து இருபதாண்டுகளாக இவ்வழக்கின் முடிவால் அந்த ஊரில் மாரியம்மன் திரு விழாவே நின்று போயிருந்தது.

'உலகத்து நாயகியாக' இருக்கும் மாரியம்மனைப் பாரதியார் தேசமுத்துமாரியாகப் போற்றுவார். மக்கள் மனத்தில் மழைக்கடவுளாக இடம் பெற்றிருக்கும் மாரி யம்மனை ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு செல்லக் கூடாது என்று தடைவிதித்தார் நீதிபதி. மக்கள் பழக்க வழக்கங்களையும், திருவிழா மரபுகளையும் அறியாத இந்த நீதிபதி 'அநியாய நீதி' உரைத்து விட்டார். இதனால் ஊர் மக்களே மாரி யம்மனையே மறந்து விட்டனர். மாரியம்மன் கோவில் முன்

மண்டபம் சோம்பேறிகள் உறங்கும் இடமாகவும், சீட்டாடும் களமாகவும் மாறிக் கிடந்தது. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலேதானே இருக்கும்? இந்த வழக்கில் உரைக்கப் பெற்ற 'அநீதி'யால் உடையார்களும் மாரி யம்மனை மறந்தனர்; திருவிழாவும் அவர்தம் நினைவி னின்றும் நீங்கியது. கவுண்டன்மார்கள்,

கலகத் தரக்கர் பலர்,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
கருத்தினுள்ளே புகுந்து விட்டார்—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி![27]

என்று பாரதியாரின் பாடற்பகுதியை நினைத்துக் கொண்டு அடங்கிப் போயினர். 'துணி வெளுக்க மண்ணுண்டு; தோல் வெளுக்கச் சாம்பலுண்டு; மணி வெளுக்கச் சாணையுண்டு' என்றெல்லாம் கூறிய பாரதியின் வாக்குகள் உழைப்பாளிக்கு நன்கு தெரியுமாதலால் 'உழைப்பே வழிபாடு' என்று கோயிலை மறந்தனர். 'மனம் வெளுக்க வழி இல்லை; பேதைமைக்கு மாற்றில்லை' என்ற கவிஞரின் வாக்கே அவர் கள் அடங்கிப் போனதற்குக் காரணமாக இருக்குமோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

சேலம் கோவை மாவட்டங்களில் சித்திரை, வைகாசி மாதங்களில் மாரியம்மன் திருவிழாக்கள் கண்கொள்ளாக் காட்சிகளாக இருக்கும். வறண்டப் பகுதிகளில் இந்த அம்மனுக்கு வழிபாடுகள் அதிகமிருக்கும்; திருவிழாக்களும் சிறப்பாக இருக்கும். மாரியம்மன் அருளால்தான் மழை பெய்கின்றது என்று அதிராத நம்பிக்கையுள்ளவர்கள் உழவர் பெருமக்கள். ஒரு சமயம்—1959 மே மாதம் என்பதாக நினைவு (காரைக்குடியில் நான் பணியாற்றும்போது)—

27. பா.க.தோ.பா : முத்துமாரி-1

நானும் காரைக்குடிக் கம்பன் அடிப்பொடி சா. கணேசனும் திருச்செங்கோட்டில் மிகவும் கோலாகலமாக நடைபெற்ற விழாவைக் கண்டு களித்தது இப்போது (அக்டோபர் 15, 1938) நினைவுக்கு வருகின்றது. பெரும்பாலும் உழவர்களால் நடத்தப்பெறும் திருவிழாவாக இருந்தாலும் உழவர்கட்கு உறுதுணையாக இருக்கும் கருமார், தச்சர், தோல்வினைஞர் போன்றோர்களும்—ஏன்? வணிகர்களும் கூடத்தான்—இவ் விழாக்களில் முக்கிய பங்கேற்பதைக் கண்டுள்ளேன்.

பொட்டணத்தில் உடையார் வகுப்பைச் சேர்ந்த ஓரிருவர் நீர் இறைப்பதற்குத் துணைக்கருவிகளாகப் பயன் படும் கபிலை ஏற்றத்திலுள்ள மரஉருளைகள், சக்கரங்கள் இவற்றைக் களவாடுவது உண்டு. கவுண்டன்மார்கள் இத்தகைய அடாத செயல்களில் இறங்கினதைக் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. என் மைத்துனர்க்குரிய பல கிணறுகளில் இத்தகைய சம்பவம் அடிக்கடி நிகழ்வதுண்டு. இதனால் நீர் இறைப்பதில் திடீரென்று நேரிடும் சங்கடங் களைச் சொல்லி முடியாது. ஒரு சமயம் ஒருவர் களவாடி வைத்திருந்த உருளையையும் சக்கரத்தையும் என் மைத்துனர் பத்துப் பதினைந்து பேர் அடங்கிய கூட்டத்துடன் சென்று தமக்குச் சொந்தமான வைக்கோல் போரில் ஒளித்து வைத்திருந்ததை அம்பலப்படுத்தி விட்டார். யாரோ உடையார் சமூகத்தைச் சேர்ந்த ஓரிரு இளைஞர்கள் இழைத்த கொடுமைக்காக உடையார் சமூகமே 'அயோக்கியர்கள்' நிறைந்த சமூகம் என்று கருதினார் என் மைத்துனர். இஃது என் மைத்துனரின் பெருங்குறை.

சில முக்கியமான கவுண்டன்மார்களைக் கைக்குள் போட்டுக் கொண்டார்; கிராம முனிசீப் ஓர் உடையார்; நல்லவர்; சாதுவானவர். அவரையும் தம்வசப்படுத்திக் கொண்டார். இவர்களிடம் பல்லாண்டுகளாக நடத்தப்

பெறாமல் உறங்கிக் கிடந்த மாரியம்மன் திருவிழாவை நடத்தும் திட்டத்தை அவர்கள் முன்வைத்தார். அனைவரும் ஒப்புக் கொண்டனர். விழாச் செலவுகளை ஊர்ப்பெருமக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், இது சம்பந்தமாக வழக்குகள் ஏற்பட்டால் அவற்றைத் தாம் சமாளித்துக் கொள்வதாகவும் ஒருவித வாய்ப்பேச்சாக ஒப்பந்தம் செய்து கொண்டனர். திருவிழா நாட்கள் குறிக்கப் பெற்றன. விரைவில் திருவிழாச் செய்தி தம்பட்டம் மூலம் ஊர்ப் பெரு மக்களுக்கு அறிவிக்கப்பெற்றது. சாதாரண மக்களுக்கு இதனால் ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்லி முடியாது. எப்படியோ 'தம்பு' (என் மைத்துனரைத் 'தம்பு' என்று வழங்குவர்; ரெட்டியார்களில் சில முக்கியமானவர்க இச்சிறப்புப் பெயரால் வழங்கப்படுவதுண்டு) முன்னின்று திருவிழா நடத்துவதை ஊர்ப் பொதுமக்கள் அறிந்து கொண்டனர். இதனால் என் மைத்துனர் அவர்களின் 'வீரவழி பாட்டுக்'குரியவரானார்.

ஊரில் சந்து பொந்துப் பகுதிகள் யாவும் தூய்மைப் படுத்தப் பெற்றன. கவுண்டர்களின் குடியிருப்பிற்கும் ஊருக்கும் இடையில் ஓர் அகன்ற வண்டிப்பாதை இருந்தது. வண்டிபோகும் இடத்தைத் தவிர இருபுறமும் சப்பாத்தி மண்டிக் கிடந்தது. மாரியம்மன் விழா நின்ற ஆண்டு முதல் இப்பாதை பராதீனப்பட்டுக் கிடந்தது. இப்போது திருவிழா உறுதிப்பட்டமையால் நூற்றுக்கணக்கான ஊர்ப் பொது மக்கள் முன்னின்று ஒரு 100 கெஜ நீளமுள்ள பாதையைச் செப்பனிட்டனர் இருபது ஆண்டுகளாக மண்டிக்கிடந்த சப்பாத்தியும் கள்ளியும் அகற்றப்பெற்றன. பல வண்டிகளின் மூலம் மணலுள் கலவை மண்கொட்டப்பெற்று குருடனும் துணிவாக நடக்கும் அளவுக்குப் பாதை செம்மையாயிற்று.

திருவிழாவில் கவுண்டர் தெருவுக்கு அம்மன் திரு வுலாவாக எடுத்துச் செல்லப்பெற்றால் உடையாரில்

பெரும்பாலோர் தடையாக நிற்பர் என்றும், இதனால் பெருங்கலகம் விளைதல் கூடும் என்றும் கருதிமுன் எச்சரிக்கை யாகப் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு காவல் துறைக்கு விண்ணப்பமும் அனுப்பப்பெற்றது. இருசாராரிலும் முக்கிய மானவர்கள் காவல் நிலையத்தில் அடிக்கடிக் காணப் பெற்றனர். இருபக்கத்தி லும் பணத்தின் திருவிளையாடல்கள் இருந்தன. ஒரு நாள் புதிதாகத் துறையில் பணியேற்ற காவல் துறை துணை மேலாளர் (Assistant Superintendent of Police) ஊரில் முகாம் அமைத்துக் கொண்டு ஊரின் நிலைமையை நோட்டம் விட்டார். இருபது இருபத்தைந்து போலிஸ் ஜவான்கள், சார் ஆய்வாளர்கள் (Sub-Inspectors) இருவர் வட்ட ஆய்வாளர் (Circle Inspector) ஒருவர் என்று காவலர் களின் கூட்டம் பெருகியிருந்தது. ஊர்மாரியம்மன் கோயிலரு கிலுள்ள ஒரு பெரிய மரத்தடியில் பெருங் கூட்டம் கூடியது. காவல் துறை துணைக் மேலாளர் மிக்க இளைஞர்; விருப்பு வெறுப்பு இல்லாமல் நிலைமையை நோட்டம் இட்டு அறிந்து கொண்டார். இளங்கலைப்பட்டம் பெற்று வேலை தேடும் படலத்தில் இருந்த என்னைப் பார்த்துக் காவல் துறைத் துணை மேலாளரிடம் பேசுமாறு என் மைத்துனர் பக்கத்துப் பெருமக்கள் தூண்டினர், அவர்கள் விருப்பத்திற்கிணங்க நானும் அவரைப் பார்த்து உரையாடிக் கொண்டிருந்தேன்.

நானும் இளைஞன்; அவரும் இளைஞர், 'இறைவழி பாட்டில் தகராறு வரக்கூடாது, ஊர்த்தேவதை அனை வருக்கும் பொது. வெளியூர்க்காரரும் வந்து வழிபாடு செய்வதிலும் தடை இருக்கக் கூடாது என்றெல்லாம்' பொது வாகப் பேசினேன். துறையில் பழகிச் சாயம் ஏறாததால் நேர்மையில் தவறாதவராக இருந்தார். காவல் அதிகார் நான் கூறியகருத்துகள் அவர் ஏற்பதாகக் காணப்பட்டன இருசாராருக்கும் அறிவுரை வழங்கினார்; இறைவழிப் பாட்டில் எந்தவிதப் பிணக்கும் வேண்டா என்பதை

வலியுறுத்தினார். இருசாராரும், ஒப்புக் கொள்வதுபோல் தலையசைத்தனர். என் மைத்துனர் இல்லத்தில் பெரிய சிற்றுண்டி விருந்து நடைபெற்றது. காவல் துறையினரும், இருசாராருமே விருந்தில் கலந்து கொண்டனர். காவல் துறையினர் ஊரைவிட்டு வெளியேறியதும் இருசாரார் பக்கலிலும் தலைக்கும் மேலேறியது. தன் முனைப்பு காவல்துறையினரும் தம் அறிவுரை செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகும் என்பதை நன்கு அறிந்திருந்தனர். நிறைந்த அநுபவம் உள்ளவர்களல்லவா?

குமிழி—58

## 58. வேலை தேடும் படலம்

**1939** - இல் இளங்கலைப்பட்டத் தேர்வில் (B.Sc) முதல்வகுப்பில் (கல்லூரியில் முதல் மாணவனாகவும், பல்கலைக்கழக நிலையில் மூன்றாவது மாணவனாகவும் தேர்ச்சி பெற்றேன். இந்த ஓராண்டுக் காலம் (1939-40) வேலை தேடும் படலத்தில் ஈடுபட்டிருந்தேன். திருமணம் ஆனபிறகு பொட்டணத்தில் மாமனார் வீட்டிலேயே தங்கியிருந்தேன். அக்காலம் இந்தியா அடிமை நாடாக இருந்தது; இரண்டாம் உலகப் பெரும்போர் நடைபெற்று வந்தகாலம். நாட்டில் வேலை கிடைப்பது குதிரைக்கொம்பாக இருந்தது. எங்கெங்கோ விண்ணப்பங்கள் அனுப்பினேன். எங்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

மூன்று இடங்களுக்கு விண்ணப்பித்தது நினைவுக்கு வருகின்றது. இருப்பூர்தித் துறையில் விடுவிக்கும் பயணச் சீட்டுத்திரட்டுபவர் (Relieving Ticket Collector) பதவிக்கு விண்ணப்பித்தேன். வாரச்சம்பளம் ரூ10/-; அதுவும் ஒருசில வாரங்களுக்கு வேலையிராது பரிந்துரைக்க யாராவது

பெரியவர்கள் இருந்திருந்தால் கிடைத்திருக்கும் யானோ திக்கற்றவன்; எந்தப் பெரியவரையும் எனக்குத் தெரியாது. அக்காலத்தில் நந்திரெட்டியார் என்ற ஒருவர் இருபூர்தித் துறையில் பெரியபதவியில் இருந்தார். அவரை நாடினேன்; அவரும் உண்மையாக முயன்றார். பலன் இல்லை. அவர் மூலம் பயன் அடையும் ஊழ் எனக்கில்லை. அப்போது இம் முறையில் நினைத்துப்பார்க்கும் மனப்பக்குவம் இராவிடினும் இப்போது (15-10-1988) நினைத்துப் பார்க்க முடிகின்றது. சர். டி. தேசிகாச்சாரியின் சான்றிதழும் இங்குப் பலிக்கவில்லை. இவருக்கு இருப்பூர்தித் துறையில் மிக்கச் செல்வாக்கு இருந்தது; பலர் இவரிடம் பெற்றசான்றிதழ்களால் அலுவல் பெற்றனர். ஆனால் எனக்குக் கிடைக்கவில்லை: ஊழ் (ஆகூழ்) எனக்கு இவர் மூலம் ஏற்படவில்லை.

அடுத்து, பொதுப்பணி ஆணையர் அலுவலகம் தகுதி ஆய்வு சார்ந்த வருவாய்த்துறை ஆய்வாளர் (Probationary Rvenue Inspector), ஒதுக்கீட்டு சார்பதிவாளர் (Reserve sub-registrar) பதவிகட்கு விண்ணப்பங்கள் கேட்டு விளம்பரம் செய்திருந்தது. இரண்டிற்கும் விண்ணப்பித்திருந்தேன். இப்போதுதான் பொட்டணத்தில் காப்புக் கட்டி மாரியம்மன் திருவிழா நடைபெற்று வந்த காலம். விழாவில் எனக்குப் பங்கு ஒன்றும் இல்லையாயினும், காவல்துறை அலுவலர்களைச் சந்திக்கும் பொறுப்பை என்னிடம் விட்டிருந்தார்கள். இதனால் அடிக்கடி சேந்தமங்கலம், நாமக்கல் சென்று வரும் பொறுப்புகள் இருந்தன.

திருவிழாவின் நடுவில் எனக்குப் பேட்டி வந்தது. பேட்டி நடைபெற்ற இடம் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்; இந்த அலுவலகம் கோவை இருப்பூர்தி நிலையத்தருகில் இருந்தது; இப்போதும் அங்குதான் உள்ளது. ஒரு விடுதியில் தங்கி பேட்டிக்குச் சென்றேன். காலுறை. மேலுறை, கழுத்துப்பட்டை, கால்புதை அரணம் (shoe)

இவற்றை அணிந்து கொள்ளும் பழக்கம் இல்லாதவன்; இப்போது முதன்முதலாக அணிந்து கொண்டு பேட்டிக்குப் போக வேண்டியநிலை. கால்புதையரணம் நடக்க முடியாத அளவுக்குத் தொந்தரவு கொடுத்தது. விடுதியிலிருந்து குதிரை வண்டி அமர்த்திக் கொண்டு சென்றேன். ஒருவிதமாகப் பேட்டி நடைபெற்றது. ஏதேதோ வினாக்கள் விடுக்கப்பெற்றன. பெரும்பாலானவற்றுக்கு நன்கு விடையிறுத்தேன். பலன் இல்லை; சில திங்கள் கழித்து சான்றிதழ்களைத் திரும்பப் பெற்றேன்.

பெரும்பாலும் இத்தகைய பேட்டிகள் கண்துடைப்பு வேலையாக இருந்ததைப் பின்னர் உணர்ந்தேன். உயர் அதிகாரிகளின் பரிந்துரை இருந்தால் (திரைமறைவில் நடப்பது இது) பதவி கிடைக்கும். அப்போது 'அரசியல்வாதிகள்' என்ற கூட்டம் இல்லை. எல்லாம் ஓரளவு நியாயமாகவே நடைபெற்றன. அந்தக் காலத்தில் வேலை வாய்ப்புகள் மிகக்குறைவு. அலுவல்களில் இருப்பவர்களின் மக்கள் எளிதாக வேலை பெற்று வந்தனர். எம்போலியர் நாட்டுப்புறத்தார்க்கு—திக்குத் தெரியாத காட்டில் இருப்பது போல் இருப்பவர்கட்கு—எங்ஙனம் கிடைக்கும்? ஓராண்டுக் காலம் இங்ஙனம் கொன்னே கழிந்தது.

கோவையிலிருந்து திரும்பியதும் மாரியம்மன் திருவிழாவில் ஈடுபட்டேன். காவல்துறை வட்ட ஆய்வாளர் (Circle Inspector) ஒருவரை நாமக்கல் சென்று சந்தித்தேன். ஒரு நாள் கவுண்டர் தெருவிற்கு சுவாமியை எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்வதாக வாக்களித்தார். அவர் சொன்னார்: "மிஸ்டர் தம்பி, கவுண்டர் தெருவுக்குச் சாமி போகக் கூடாது என்று நீதிமன்ற ஆணை உள்ளது. அதைப் பற்றி நீங்கள் கவலை கொள்ள வேண்டா. நீங்கள் எடுத்துப் போகும் அன்று இங்குச் சட்டம் 144 பிரிவின்கீழ் தடைவிதிக்க ஏற்பாடு செய்து விடுகின்றேன். 100 ஜவான்கட்கும், 44 துணை

ஆய்வாளர்கட்கும் (Sub-Inspectors) ஏற்பாடு செய்து விடுகின்றேன். நீங்கள் அந்த ஒருநாள் (இரவு) சுவாமியை எத்தனை தடவை வேண்டுமானாலும் எடுத்துச் செல்லுங்கள். 'கலாட்டா' செய்பவர்களை அரஸ்டு செய்து காவல் நிலையத்திற்கு அனுப்பிவிடுகின்றேன். இதற்குக் கைம்மாறாக ரூ300/-எனக்குத் தந்துவிட வேண்டும். நான் வந்து போவதற்குக் கார் வாடகை ரூ50/- தனியாகத் தரவேண்டும்'' என்றார். சரி என்று ஒப்புக் கொண்டு உரிய தொகைகளை அவரிடம் தந்தேன்.

பேசியபடி சுவாமி ஊர்வலமாகக் கவுண்டர் தெருவிற்குப் பலமுறை எடுத்துச் செல்லப்பட்டது. அதற்கு முன்னரே '144 விதி அமுலிலுள்ளது' என்று 'டாம்டாம்' மூலம் பலமுறை ஊரில் அறிவிக்கப்பெற்றது. திருவிழாவில் 'கலாட்டா' செய்பவர்கள் கம்பி எண்ணும்படி நேரிடும் என்று எச்சரிக்கைச் செய்தியைப் பரப்பினர் காவலர். முக்கிய நிகழ்ச்சியன்று காவலர் படை வந்து சேர்ந்தது. முக்கியமான இடங்களில் ஐவான்கள் நிறுத்தப் பெற்றனர். அன்று மாலை சிற்றுண்டி காஃபி, இரவு விருந்து, மறுநாள் காலை சிற்றுண்டி காஃபி— என் மைத்துனர் வீட்டில் தரப்பெற்றன. உடையார் மார்கள் திடீர் காவல்துறை ஏற்பாட்டை எதிர்பார்க்கவில்லை. மௌனமாயினர். வட்ட ஆய்வாளர் வாக்குத் தந்தபடி எல்லாம் அமைதியாக நடைபெற்றன. என் மைத்துனர் மனம் குளிர்ந்தது; கவுண்டர்மார்கள் களிப்பெய்தினர். குறிப்பாகப் பெண்கள் பேருவகை கொண்டனர். தங்கள் தெருவிற்கு மாரியம்மன் பல்லாண்டுகள் கழித்து வந்தமை குறித்து மிகவும் மகிழ்ந்தனர். என் மைத்துனரை மனமாரப் பாராட்டினர். சில மாதங்களாக ஊர்பூராவும் சுவாமி கவுண்டர் தெருவிற்குப் போனதைப்பற்றியே பேச்சு நிகழ்ந்த வண்ணம் இருந்தது.

இந்த விழாவில் என் மைத்துனருக்கு ரூ 5000/-கையைப் பிடித்திருக்கும் என்பது என் கணிப்பு. திறந்த குழாய் வழியாகத் தண்ணீர் ஓடுவதுபோல் தண்டவாளப் பெட்டியி லிருந்து பணம் போய்க் கொண்டே இருந்தது. தண்டவாளப் பெட்டியை அடிக்கடித் திறப்பதும் மூடுவதுமாக இருந்ததால் பணம் பறந்து செல்வதை என்னால் ஊகிக்க முடிந்தது. அண்ணன் கேட்கும்போதெல்லாம் தங்கை பெட்டிச் சாவியைக் கொடுத்தவண்ணம் இருந்தாள். என் மாமியாரும் மாமனாரும் காவலர் படைக்கு உணவு தருவதில் மூழ்கி யிருந்தனர். உள்ளூர் பாபுரெட்டியார் என்பவர் 'நளபாகத் தில்' வல்லவர். அவர்தான் உணவு தயாரிப்பதில் முக்கிய பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார். வெளிவாசலுக்கு உட் புறமாகவுள்ள திண்ணையில் பெரும்பாலும், வெளிப்புறமாக வுள்ள திண்ணையில் சிலசமயமும் பணம் காத்த பூதம்போல் உட்கார்ந்த வண்ணம் இருக்கும் (அப்போது 70 வயதுக்கு மேலிருக்கும்) பாட்டி நாகம்மாளும் தன் பேரன் முன் நின்று நடத்தும் மாரியம்மன் திருவிழாவைப்பற்றி மனமகிழ்ச்சி யுடன் இருந்ததை அவள் முகத்தில் பிரதிபலிப்பதைக் கண்டேன். சாவியை அடிக்கடிக் கேட்குப்போதெல்லாம் அண்ணனுக்குத் தரும் தங்கையும், செலவு செய்யும் முறையை நேரில் காணும் நானும், செலவு செய்யும் மைத்துனரும் பணம் பல்வேறு துறையில் பறந்து செல்வதை அறிவோம்,

என் திருமணத்திற்கு முன்னர் "நீ வந்து ஒட்டிக்கொள். பிறகு படிக்க ஆகும் செலவைப் பற்றிக் கவலைப்பட வேண்டா; நானே எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வேன்" என்று சொன்ன வாக்கு காற்றில் பறந்ததை யும், நான் இரண்டாம் ஆண்டு பட்டப்படிப்பில் இருந்தபோது "பணமே இல்லை; நீயே பார்த்துக்கொள்" என்று கூறிக் கையை விரித்ததையும், இப்போது பணம் எங்கிருந்து வந்தது என்ற நினைப்பும் என் சிந்தனையில் எழுந்து என்னை

உள்ளுக்குள் சிரிக்க வைத்தன. என் வினைப்பயனை நினைத்து நொந்து கொள்கின்றேன். இப்படி ஒரு பிராமணச் சிறுவன் தொல்லைப்பட்டால், அவனை மருமகனாக ஏற்ற செல்வச் செழிப்புள்ள மாமனார் அவனை இப்படி நட்டாற்றில் விட்டுவிடுவாரா? அதுவும் சுறுசுறுப்பும் படிப்பிப் பேரார்வமும் கொண்டவன் தம் மருமகன் என்பதைத் தெரிந்து கொண்டால், என்னென்ன செய்வார்? என்றெல்லாம் என் சிறு மனம் அப்போது எண்ணிக் கொண்டது. ஏதோ இறையருளால் இளங்கலைப் பட்டம் சிறப்பாகப் பெற்றது குறித்து ஓரளவு மனம் நிறைவு கொண்டேன்.

குமிழி—59

## 59. என் மனைவி நோயுற்ற காலத்தில்

**வே**லை தேடும் படலம் நடைபெற்ற ஆண்டில் என் மனைவி நோயுற்றாள். சிறுநீரகங்களில் ஏதோ கோளாறு ஏற்பட்டுவிட்டது. உடல் முழுவதும் பூதாகாரமாக வீங்கியது. வீட்டிலுள்ளவர்கள் யாவரும் பேரச்சத்தால் பீடிக்கப் பெற்றனர். அக்காலத்தில் திருச்சியில் புகழ் பெற்ற மருத்துவர் டாக்டர் காளமேகம். தென்னூர் சாலையில் அவருடைய மருத்துவமனை இருந்தது. (அதுதான் இப்போது கோவிந்தராஜ கல்யாண மண்டபமாக மாறியுள்ளது. கட்டடத்திற்கு முன்புறமிருந்த காலியிடம் திருமண மண்டபமாக மாறியுள்ளது. முன்பிருந்த பழைய கட்டடம் பழுது பார்க்கப் பட்டுத் தங்கும் அறைகளாக அமைந்துள்ளன. கட்டடத்தின் பின்புறப் பகுதி சமையற் கூடமாக அமைந்துள்ளது). அதில் சேர்ந்து சிகிச்சை பெற்று வந்தாள் என் மனைவி. அறை வாடகை நாள் ஒன்றுக்கு ரூ 10/- இரண்டு மாதம் வாடகை மட்டிலும் ரூ600/ தர நேர்ந்தது. மருந்துச் செலவு, டாடர் கட்டணம் இந்த வகையில் ரூ 600/-வரை செலவாயிற்று.

என் அன்னையாரைக் கோட்டாத்தூரிலிருந்து உணவு தயாரிப்பதற்காக வரவழைத்திருந்தேன். அப்போது கோட்டாத்தூரிலிருந்து குணம் நல்லப்ப ரெட்டியாரும் (என் ஒன்றுவிட்ட தமக்கையின் கணவர்) சிகிச்சை பெற்று வந்தார். இவர் திருமணம் ஆன ஒன்றிரண்டு ஆண்டுகளி லிருந்து (1929) அவர் மறைந்தவரை (1982) நோயையே செல்வமாகப் பெற்று அநுபவித்தவர். அரை நூற்றாண்டு சிறுநீர் இறங்காமல் துன்பப்பட்டவர். சில நாட்கள் நன்றாக இருப்பார்; திடீரென்று நீரடைப்புத் தோன்றும். மடை திறந்து நீர் ·வெளிப்படுவது போல் பணம் பெருகியோடும். ஓர் இலட்சம் ரூபாய்வரை மருத்துவச் செலவு ஆகியிருக்கும் என்பது என் கணிப்பு. அவர் நிலையைக் கூர்ந்து கவனித்தவ னாதலால் என் கணிப்பு சரியாகவே இருக்கும். அவரும் எங்களுடன் உணவு கொண்டார். கணக்குப் பார்க்காமல் பிறருக்காகச் செலவிடும் கருணாநிதி. அவர் பேச்சுத் துணைக்கு இருந்ததால் எங்கட்குப் பொழுது போவதே தெரியவில்லை. டாக்டர் காளமேகமும் நகைச்சுவையுடன் உரையாடும் பண்புடையாளர்.

கந்தசாமி என்பவர் டாக்டர் காளமேகம் மருத்துவமனை யில் மருந்தைக் கூட்டுவோர் (Compounder). பிணியாளர் களுடன் நகைச்சுவையுடன் பேசி அவர்களை மகிழ்விப்பவர். ஒருநாள் திருச்சி நகர மண்டப (Town hall) மைதானத்தில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது. தந்தை ஈ.வெ. இராமசாமிப் பெரியார் உரையாற்றினார். அவருக்கு முன் வேறு சிலரும் உரையாற்றினர். அப்போது இருந்தது சுயமரியாதைக் கட்சி; திராவிடக் கழகம் என்ற பெயரில்லை. கூட்டத்தில் மூடப் பழக்களைப்பற்றியும் இவ்வளவுக்கும் காரணம் கடவுள் நம்பிக்கைதான் என்றும் விரித்து உரைக்கப் பெற்றன. அன்று பேசிய ஒருவர், "நாங்கள் பிராமணர் களைக் குறைகூறவில்லை; வையவில்லை. தனிப்பட்ட

பிராமணர்கள் எங்கட்கு விரோதிகள் அல்லர். பிராமணீயத்தைத்தான் நாங்கள் சாடுகின்றோம்'' என்று முழங்கினார். இவர் மறுநாள் ஏதோ ஒரு நோயின் காரணமாகக் காளமேகம் மருத்துவமனைக்கு வந்தார். டாக்டர் மருந்தினைக் குத்திப் புதுத்தச் சீட்டு எழுதித் தந்தார். பேசிக்கொண்டே நாசூக்காக ஊசிமூலம் மருந்தைச் செலுத்தினார் கம்பவுண்டர் கந்தசாமி. ''சார், வலிக்கிறது'' என்று சற்றுக் கதறினார் நண்பர். ''என்ன ஐயா, நேற்று நீங்கள் கூட்டத்தில் 'நாங்கள் பிராமணர்களைத் திட்டவில்லை; பிராமணீயத்தைத் தான் சாடுகின்றோம்' என்று முழங்கினீர்கள். இப்போது நான் உங்கள் நோய்க்குத்தானே ஊசி போடுகிறேன். நீங்கள் ஏன் கதறுகிறீர்கள்?'' என்றார். நண்பருக்குப் பேசவாய் எழவில்லை. பிராமணீயத்தைச் சாடினால் பிராமணர்களைக் குறிப்பிடாது இருக்க முடியாது. நோய்க்குச் சிகிச்சை செய்யும்பொது நோயாளருக்குத்தான் அதனைச் செய்ய வேண்டும். உடலின்றி நோய் இல்லை. பிராமணர்களின்றி பிராமணீயம் இல்லை என்பதை எடுத்துக் காட்டினார் கந்தசாமி. அவருடைய சந்தர்ப்பப் பேச்சு என்னை வியக்க வைத்தது. அதனால் அதனை இன்றும் நினவுகூர முடிகின்றது.

என் மனைவி நோய்வாய்ப்பட்டது எனக்கு ஓயாத கவலையை அளித்தது. மாமனார் வீட்டில் செலவும் செய்தாலும் மனமின்றிச் செய்தனர். பணத்தைப் பற்றிக் கவலைப்பட்ட அளவு மகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. ''கன்னி கழிந்தது; மகள் இறந்தாலும் கவலை இல்லை'' என்று கூட நினைத்தார்களோ என்று என் மனம் ஒரு சமயம் சிந்திக்கவும் தொடங்கியது. அரக்க மனம் படைத்தவர்கள் என்பதை நான் நன்றாக உணர்ந்தேன். இதைப் பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றால் நான் கருதியது சரி என்றே உறுதியாயிற்று. ஒன்று விட்ட என் தமையன் மனைவி என் மாமியாரிடம், ''உங்கள் மருமகன் மிக்க கவலையுடன்

அலைந்து திரிகின்றார். மனைவிமீது உயிர் வைத்திருக்கின்றார். உங்கள் பாசத்தை விட அவர் பாசம் மிஞ்சி நிற்கின்றது. அவரைப் பார்க்கும்போது என் மனம் மிகவும் வருந்துகின்றது'' என்று சொன்னாளாம். அதற்கு என் மாமியார், ''நீ சொல்லுவது உண்மைதான். நானும்தான் அதைக் கவனித்தேன். என் மகளுக்கு ஏதாவது நடக்க முடியாதது நடந்து விட்டால், அவருக்குப் பணக்காரர்கள் யார் பெண் கொடுப்பார்கள்? இதை நினைத்துக் கொண்டு தான் அவர் துன்பப்படுகின்றார்'' என்று சொன்னார்களாம். ''இந்தப் பெண் இவ்வளவு செலவு வைத்து விட்டாளே. ஒழிந்தாலும் துன்பம் இராது'' என்று நினைத்தார்களோ என்று இப்போது என் மனம் எண்ணுகின்றது. இப்போது தெலுங்குக் கவி வேமனர் கஞ்சப் பிரபுக்களைப் பற்றிச் சாடுவது நினைவிற்கு வருகின்றது. கஞ்சப் பிரபு ஒருவர் வீட்டில் தந்தை இறந்து போனாராம். வீட்டிலுள்ளவர்கள் அனைவருமே அழுது அழுது புரண்டார்களாம். பார்த்தவர்கள் யாவரும் ''என்ன தந்தை பாசம்! என்ன கணவன் பாசம்'' என்று வியந்தார்களாம். வேமனர் சொல்லுகின்றார்: ''அவர்கள் அழுவதெல்லாம் பெரியவர் மறைந்தார் என்ற துக்கத்தினாலன்று. 'வீட்டை விட்டுப் பிணம் போவதற்குக் குறைந்தது ரூ 100- செலவாகுமே' என்று நினைத்தன்றோ அழுகின்றார்கள்'' என்று.

திருச்சி மருத்துவமனையை விட்டுப் பொட்டணத்தில் இரண்டு மாத காலம் தங்கியிருந்தேன். உடலின் வீக்கம் குறைவதும் அதிகப்படுவதுமாக இருந்து கொண்டிருந்தது. முதலில் இருந்த அளவு நோயின் தீவிரம் இல்லை; குறைந்திருந்தது. இதனால் என் கவலையும் குறைந்து விட்டது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்பி விட்டேன். சென்னையில் படிக்க ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினேன். ரூ 6/-க்கு அனைத்தும் அடக்கும் பை

(Hold All) வாங்கினேன்; ரூ. 1½க்கு ஒரு குப்பம் மெத்தை வாங்கினேன். அதற்குக் கதர்துணியில் ஓர் உறை தைத்துப் போட்டுக் கொண்டேன். மாமனார் வீட்டில் இலவம் பஞ்சு நெற்று ஏராளமாக இருந்தது. இரண்டு சிறிய தலையணை வேண்டும் என்று என் மைத்துனரிடம் சொன்னேன். எத்தனையோ ஆட்கள் அவர் பண்ணையிலிருக்க, அவர்களில் ஒருவரை ஏவாது, தானே நெற்றுகளை உடைத்து கொட்டைகளைப் பஞ்சினின்றும் நீக்கி பஞ்சை வில்லால் அடித்துத் தலையணைகளைத் தயார் செய்து கொண் டிருந்தார். நான் அதைப் பார்த்த வண்ணம் ஏதோ படிப்பில் ஈடுபட்டிருந்தேன். என் மைத்துனர் என்னைப் பார்த்துக் கொண்டே தலையணைகள் தயாரிக்கும் செயலில் ஈடுபட் டிருந்தார்.

கோட்டாத்தூரிலிருந்து என் தாயார் என் மனைவியின் உடல்நிலையை விசாரித்து அறிந்து போவதற்காகப் பொட்டணம் வந்திருந்தார். என் மைத்துனர் என் அன்னை யாரிடம், ''பார் அக்கா உங்கள் மகன் மிகவும் சோம்பேறி. நான் தலையணைகள் தயார் செய்து கொண்டிருக்கிறேன் அவருக்காக. அவர் காலை நீட்டிப் படித்துக் கொண்டு இருக் கின்றார். அவர் இந்த வேலையைச் செய்யக் கூடாதா? அவருக்குரிய தலையணைகள் தாமே இவை?'' என்று சொன்னார். நானும் இதைக் கேட்டுக் கொண்டுதானிருந் தேன். என் அன்னையார் இதற்குச் சூடான பதில் கொடுத் தார். ''இராமசாமி, என்ன இருந்தாலும் என் மகன் உங்கள் வீட்டு மாப்பிள்ளை. மாப்பிள்ளை மாமனார் வீட்டில் வந்து வேலை செய்யத் தொடங்கினால் உங்கட்கு இளக்காரமாகப் போகின்ற நிலை ஏற்பட்டு விடும். நீங்கள் அவனை உங்கள் பண்ணை வேலையாள் போல் நினைத்து எல்லாவற்றிற்கும் ஏவத்தொடங்கி விடுவீர்கள். உன் தந்தையார் ஆலத்துடையாம் பட்டியிலிருந்து வீட்டு மாப்பிள்ளையாக வந்தார். இன்னும்

அவருக்கு உங்கள் சொத்தை நிர்வாகம் செய்ய எந்த விதமான உரிமையும் இல்லாமலிருக்கின்றார். பண்ணையாள் மாதிரி உழைக்கின்றார். என் மகனை அப்படி நினைக்காதீர்கள், அவன் சோம்பேறி அல்லன். அவனைப்போல் சுறுசுறுப்பாக உழைப்பவனைப் பார்க்க முடியாது. எங்கள் வீட்டில் எல்லாக் காரியங்களையும் செய்வான். உங்கள் வீட்டில் அப்படிச் செய்ய எதிர்பார்க்காதீர்கள். இன்றிருந்து என் மகனைக் குறைவாகவும் பேசாதே; குறைவாகவும் நினைக்காதே'' என்று என் அன்னையார் ஆணித்தரமாகச் சொன்னதும் அவர் வாயடங்கிப் போனார். தம்பிக்குத் தமக்கையார் தந்த அறிவுரை திலகவதியார் (தருமச் சேனருக்கு) திருநாவுக்கரசருக்குத் தந்த அறிவுரையை ஒத்திருந்ததை நினைத்துக் கொண்டேன்.

பயிற்சிக் கல்லூரியில் சேரவேண்டும் என்ற எண்ணம் மெல்ல அரும்பத் தொடங்கியது; தொடர்ந்து கவலையும் அரும்பு விடத்தொடங்கியது. ஆசையும் கவலையும் துன்பத்தின் இணைபுரியாத நண்பர்கள் அல்லவா? இந்த நிலையில் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் விட்டது போன்ற ஒரு நிகழ்ச்சியும் தோன்றியது. வேலைதேடும் படலம் ஆண்டில்—ஆகஸ்டு என நினைக்கின்றேன் (1939-40)—ஒருநாள் சினிமா வசனம்போல் என் மாமியாரும் மைத்துனரும் பேசிக் கொள்ளுகின்றார்கள். நான் கேட்க வேண்டும் என்றே—என் காதில் விழவேண்டும் என்றே—நான் திண்ணையில் சாய்ந்து கொண்டு ஏதோ படித்துக் கொண்டிருந்தபோது இந்த 'சினிமா வசனம்' நடைபெற்றது.

**மாமியார்** : ''எதற்கோ வைத்திருந்த பணத்தை எடுத்துப் போய் வங்கிக் கடனைக் கொடுத்துவிட்டு நகையை மீட்டிக் கொண்டு வந்தாயே. அந்தப் பணத்திற்கு என்ன வழி செய்யப் போகின்றாய்?'' என்கின்றார்.

**மைத்துனர் :** "அதாவது அம்மா, நம்முடைய மாப்பிள்ளை சென்னைப் படிப்பிற்காக ஆலத்துடையாம் பட்டியிலுள்ள நிலத்தை விற்கப் போகின்றார். அப்போது விற்றதால் கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதியை நமக்குத் தந்துவிடுவார். பணம் ஈடாகிவிடும்" என்கின்றார்.

நான் கேட்கவேண்டும் என்றே என் முன்னிலையில் இந்த உரையாடல் நடைபெறுகின்றது. என் முன்னிலையில் இவ்வாறு பேச வேண்டுமென்று எத்தனை நாட்கள் ஒத்திகை நடத்தினார்களோ, அஃது அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம். நான் ரூ 700/-க்குதான் அந்த நிலத்தை விற்றேன் என்பதையும், அத்தொகை என் படிப்பிற்குப் போதும் போதாதாக இருந்தது என்பதையும் நன்றாக அறிந்து கொண்டு பின்னர் இதைப் பற்றிப் பேசவே இல்லை. இதற்கு மூன்று காரணங்கள் எனக்குத் தெரிகின்றன.

(1) ஆகஸ்டு இறுதியில் என் மாமனார் கண் படலம் (Cataract) அறுவை சிகிச்சை மேற்கொள்பவராக இருந்தார். நான் திருச்சி சென்று ஜோசப் கண் மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து அங்கேயே சில நாட்கள் தங்கியிருந்தேன். என் அன்னையார் கோட்டாத்தூரிலிருந்து எங்கட்கு உணவு தயாரிப்பதற்காக வந்து சில நாட்கள் தங்கியிருந்தார்கள்.

(2) பொட்டணத்தில் மாரியம்மன் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். நாலைந்து மாதங்களாக என் மைத்துனர் இந்தப் பணியில் மூழ்கியிருந்தார். பல ஆயிரம் ரூபாய் அவர் கையைக் கடித்தது. என் படிப்புக்கு உதவுவதாகச் சொன்னவர் சொன்ன சொல் தவறி நடந்து கொண்டார். ஆனால் திருவிழாவுக்கும் அதனைத் தொடர்ந்து. வழக்கு விஷயமாகவும் பணத்தைத் தண்ணீராகச் செல விட்டார்.

(3) என் மனைவி நீரக நோயால் தாக்குண்டு திருச்சியில் களேமேகம் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டிய நிலையிலிருந்தாள். இது குறித்து எனக்கு அலைச்சல் அதிகமாக இருந்தது. ரூ. 1000/-க்குமேல் வரை என் மைத்துனர் செலவுசெய்ய வேண்டியிருந்தது.

இக்காரணங்களால் ரூ 225/- (வங்கிக்கடன் தீர்த்தது) கேட்டதை மறந்துபோயினர். பொதுவாக என் பட்டப் படிப்பிற்கு ரூ 625/- செலவு செய்தனர். இதற்குள் மேல்மூச்சு-கீழ்மூச்சு வாங்கினர். என்னுடைய நல்லூழினால் என்பட்டப் படிப்பும் இனிதாகவே முடிந்தது.

அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாது
மில்லை பெறுவான் தவம்.[28]

என்ற குறளை நினைத்துக் கொண்டேன்.

---

28. குறள்-842 (புல்லறிவாண்மை)

# 60. பயிற்சிக் கல்லூரிக்குப் பணம்தேடு படலம்

ஓராண்டு மேற்கொண்ட வேலைதேடும் முயற்சி பயன் தரவில்லை. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர முயன்றேன். அக்காலத்தில் சென்னை மாநிலத்தில் மூன்றே பயிற்சிக் கல்லூரிகள் இருந்தன. ஒன்று, சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, இது அரசு நடத்தும் கல்லூரி. வேப்பேரியில் பெண்களுக்காக 'லேடிகிரிஸ்டோபர் பயிற்சிக் கல்லூரி, என்ற ஒரு பயிற்சிக் கல்லூரியும் இருந்தது. மற்றொன்று, இராயப்பேட்டையிலுள்ள மெஸ்டன் பயிற்சிக் கல்லூரி. உரியகாலத்தில் (ஏப்பிரல்-மே, 1940) கல்லூரியிலிருந்து விண்ணப்பப் படிவம் பெற்று முறைப்படி விண்ணப்பம் அனுப்பினேன். மெஸ்டன் பயிற்சிக் கல்லூரியில் 50 பேர்கட்கு இடம்; பெரும்பாலும் இங்கு கிறித்தவர்கட்கு முன்னுரிமை வழங்கப்பெற்றது. இதனால் இக்கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்பவில்லை.

சைதையிலுள்ள அரசுக் கல்லூரியில் 200 பேர்கட்கு இடம் இருந்தது. அக்காலத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைப்பது எளிதல்ல. கேரளம், கர்நாடகம், ஆந்திரம் என்ற பகுதியிலுள்ளவர்க்கும் சென்னைதான் புகலிடம். காரணம், இப்பகுதிகள் 'சென்னை ராஜதானியிலில்' அடங்கி

சென்னையையே தலைநகராகக் கொண்டிருந்தன. பத்து ஆண்டுகள் வரை பள்ளிகளில் ஆசிரியர் அநுபவம் பெற்ற பட்டதாரிகட்கும் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. நான் விண்ணப்பித்தபோது துறையூரைச் சார்ந்த திரு M. கிருஷ்ணசாமி செட்டியார் (இவர் எம்.ஏ இயற்பியல் படித்து சுமார் பதினைந்து ஆண்டுகளாக மாவட்ட நீதி மன்றங்களிலும் வேறு இடங்களிலும் எழுத்தாளராகப் பணி யாற்றியவர்) என்பவரும், துறையூருக்கருகிலுள்ள கீரம்பூரைச் சார்ந்த திரு எஸ். சோமசுந்தர அய்யர் (இவர் வீரசைவர்; பி.ஏ. வரலாறு படித்து அங்கும் இங்குமாக (ஆசிரியராக இரண்டாண்டுகள் பணியாற்றிய அநுபவம் பெற்றவர்) என்ப வரும் விண்ணப்பித்திருந்தனர். நாங்கள் மூவரும் ஒருவரை யொருவர் நன்கு அறிவோம். மூவருமே இடம் கிடைப்பது பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், எல்லோருக்குமே கிடைத்துவிட்டது. அறிவியல் கணிதம் கற்ற பட்டதாரிகட்கும், இவற்றில் முதல் வகுப்பில் தேறின வர்கட்கும் கட்டாயம் கிடைக்கும் என்றும் பின்னர் அறிந்தேன். காரணம் இத்தகைய பட்டதாரிகள் அக்காலத் தில் மிகவும் அரியவராகவே இருந்தனர்; இவர்கள் பள்ளிகட்கு மிகவும் தேவைப்பட்டனர்.

அண்மையில் (1981இல்) என்னுடன் பயிற்சிபெற்ற திரு கே. ஆர். மாணிக்கம் என்பவரை அண்ணாநகரில் முதன் முதலாகச் சந்திக்க நேர்ந்தது (40 ஆண்டுகட்குப் பின்னர்). அவர் இல்லத்தின் மாடிப் பகுதி வாடகைக்கு விடுவதாக விளம்பரம் செய்திருந்தார். நானும் என் இளைய மகன் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணனும் வீடுதேடி அலைந்த காலத்தில் இவர் தந்த விளம்பரத்தைக் கண்டு அந்த வீட்டிற்குச் சென்ற பொழுது இவரைச் சந்திக்க சேர்ந்தது. நான் என் மூத்தமகன் டாக்டர் எஸ். இராமலிங்கத்துடன் வாழ்ந்து கொண்டு அண்ணாநகரில் மனை ஒன்று வாங்கி

புதிய வீடு கட்டிக் கொண்டிருந்த சமயம் அது. இந்த வீட்டை ரூ. 600/- (மாத) வாடகைக்கு அமர்த்திக் கொண்டு குடியேறினான் என் இளைய மகன். இவனைப் பார்ப்பதற்கு அடிக்கடிப் போகும்போதெல்லாம் திரு மாணிக்கத்தைப் பார்த்துப் பேசுவதுண்டு. இவர் பொருளாதாரம் படித்து எம்.ஏ. பட்டம் பெற்றவர். பேச்சுவாக்கில் "என்ன டாக்டர் ரெட்டியார், நீல்கள் அந்தக் காலத்தில் எப்படி சைதைக் கல்லூரியில் இடம் பெற்றீர்கள்?" என்று வினவினார். நான் சொன்னேன்: "விண்ணப்பித்தேன்; எவர் பரிந்துரையு மின்றிக் கிடைத்தது" என்று, அவர், "அப்படியா? நான் திண்டாடித் தெருவில் நின்று இடம் பெற்றேன். கல்லூரி திறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் வந்து கல்லூரியில் வட்டம்போட்டு முதல்வரைக் கெஞ்சிக் கூத்தாடி "தாழ்வார சேர்க்கைகள்!" (Verandah admissrons) என்று சொல்லு கின்றார்களே, அந்த முறையில் கிடைத்தது" என்று சொன்னபோதுதான் நான் என் நல்வினைப் பேற்றால் கிடைத்தது என்று நினைத்துக் கொண்டேன். திருமகள் அருளின்றித் தொல்லைப்பட்ட எனக்கு அன்றிருந்து இன்று வரைக் கலைமகள் அருள் வரம்பின்றிக் கிடைத்து வருவதை நினைந்து பார்க்க முடிகின்றது.

"சைதைக் கல்லூரியில் இடம் கிடைத்துவிட்டால் ஓராண்டுச் செலவிற்கு ரூ. 750/- வேண்டுமே. என்ன செய்வது?" என்ற எண்ணம் என் மனத்தில் நெருடிக்கொண் டிருந்தது. ஆலத்துடையாம்பட்டியில் ஒன்றரைக்குழி (66 செண்ட்) நஞ்சை நிலம் இருந்தது, அதிலிருந்து பன்னிரண்டு கலம் நெல் ஆண்டுக் குத்தகையாக வந்துகொண்டிருந்தது. இதை விற்றுவிடத் தீர்மானித்தேன். அன்றையவிலை குழி ஆயிரம் ரூபாய்; விற்றால் ரூ, 1500/- கிடைக்கும் என நினைத்து கோடையில்(ஏப்ரல்-மே 1940 மாதத்தில்)அந்த ஊர்

சென்று என் அண்ணார் (என் மனைவிக்கு சொந்த அத்தை மகன்) மு.கிருட்டிணசாமி ரெட்டியார் இல்லத்தில் ஒரு வாரம் தங்கி முயன்றேன். இவரும் மற்றோர் அண்ணார் பெ. இராமசாமி ரெட்டியார் என்பவரும் வாங்குவோரைப் பிடிக்க முயன்றனர். கிருஷ்ணசாமி ரெட்டியார் அதிகமாக நடக்க முடியாதவர்; அலையமுடிவதில்லை. பெ. இராமசாமி ரெட்டியார்தான் அலைந்து திரிந்து முயன்றவர். இவர்கள் இருவருமே அன்றைய நிலவரப்படி ரூ1500/-க்குப் போகும் என்று சொன்னவர்கள். நான் கல்லூரிமாணவன்; உலக நிலைமையும், உலகோர் அநுபவமும் அறியாதவன். கல்வி அறிவில்லாத நாட்டுப் புறத்தார்களிடம் கூட எளிதில் ஏமாற்றப் படுவதற்குப் பக்குவமானவன்.

ஆலத்துடையாம் பட்டியில் இவர்களைத் தவிர, வேறு எவரையும் நன்கு அறியாத நிலையில் இருந்தேன். அந்தக் காலத்தில் சிவசங்கரரெட்டியார், முனிசீப்பு பெத்துரெட்டியார் (இவர்கள் 1941க்குப் பிறகுதான் நன்கு அறிமுகமாகி நெருங்கிப் பழகியவர்கள்) அந்த ஊரில் செல்வர்க்குடன் திகழ்ந்தவர்கள். இவர்களை நாடுவதற்குத் துணிவும், இல்லை; எண்ணமும் எழவில்லை. நான்கு நாட்களாகக் காத்திருந்தும் பலன்கிட்டவில்லை. ஆனால் படிப்பிற்கு என் அவசரத்தேவை ரூ750/= என்பதை இவர்கள் நன்கு அறிந்து கொண்டனர். நாள் ஆக ஆக என் கவலையும் அதிகரித்ததை என் முகத்திலிருந்தும் என் பேச்சிலிருந்தும் அறிந்து கொண்டிருந்தனர். இரவில் கூட நன்றாக உறங்காத நிலை ஏற்பட்டதையும் கண்டனர்.

ஒரு நாள் பெ. இராமசாமிரெட்டியார் என்னிடம் வந்து ‘எங்கும் வாங்குவோர் இருப்பதாகத் தெரியவில்லை; கடைசியில் என் மாமியார் வைத்துக் கொள்வதாகத் தெரிவித்தார். ஆனால் ரூ-700/-க்கு மேல் விலைதரவிரும்ப வில்லை. விருப்பப்பட்டால் பேசி முடிக்கிறேன்.’’ என்றார்.

கிருஷ்ணசாமி ரெட்டியார் ''இதில ஏதோ சூது இருப்பதாகத் தெரிகின்றது'' என்று காதோடு காதாகத் தெரிவித்தார். இவர் பேச்சு என் மனத்தில் ஏறவில்லை ''எப்படியோ முடித்து விடுங்கள்'' என்று சொல்லிவிட்டேன். கிருஷ்ணசாமி ரெட்டியார் இதை விரும்பவில்லை. ''ரூ 1500/- பெறுமான நிலத்தை ரூ700/-க்குக் கேட்கிறார்களே, பாவிகள்! ஒரு கல்லூரி மாணவனை அவன் அவசரத்தை அநுசரித்து ஏமாற்றப் பார்க்கின்றார்களே! ரூ1000/-க காவது வைத்துக் கொள்ளக் கூடாதா?'' என்று மனம் குமுறிப் பேசினார் அன்றிரவு தனிமையில். என்ன செய்வது? அந்த நிலத்தை ஈடாக எழுதிக் கொண்டு பணம் தரவும் ஒருவர் இல்லை.

மறு நாள் காலையில் இராமசாமிரெட்டியார் என்னிடம் வந்தார். ''ரூ700/- ஐயும் எடுத்துக்கொண்டு சென்னை செல்லுகின்றாயா? ஒரே சமயத்தில் இந்தத் தொகை தேவையா?'' என்று கேட்டார். நான், ''முதலில் ரூ200/- இருந்தால் போதும்; பிறகு மாதாமாதம், ரூ100/- அனுப்பினால் போதும்'' என்றேன். கிருஷ்ணசாமிரெட்டியாருக்கு மனம் கொதித்தது இதனைக் கேட்டு; உள்ளம் குமுறியது. அடுத்த நாளே உப்பலியபுரம் சென்று கிறயபத்திரம் எழுதிப் பதிவு செய்து விட்டேன். ரூ200/- பெற்றுக் கொண்டு ''ஏதோ வெற்றி பெற்றுவிட்டதாக'' ஊர் திரும்பும்போது கிருஷ்ண சாமிரெட்டியார் ''நன்றாக ஏமாந்தாய்; என்னாலும் உதவ முடியவில்லை; என்ன செய்வது? நீ சென்னை சென்றதும், ஒரு மாதத்தில் 'மீதி ரூ500/-ம் உடனே தேவை' என்று கடிதம் எழுது. இவர்கள் மாதாமாதம் சரியாக அனுப்ப மாட்டார்கள். பிறர்கஷ்டத்தைத் துளியும் அறியாதவர்கள். சுயநலமே, வடிவெடுத்தாற் போன்றவர்கள்'' என்று சொல்லி விடைகொடுத்தார். இருவரும் நெருங்கியஉறவினர்களாக இருந்தாலும் எப்பொழுதுசென்றாலும்,கிருஷ்ணசாமிரெட்டியார்வீட்டில்தான் உண்பேன்; உறங்குவேன். இராமசாமி ரெட்டியார் வீட்டில் ஒரு வேளை கை நனைப்பேன்.

ரூ200/- உடன் கோட்டாத்தூர் வந்தேன். என் அன்னையுடன் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு என் மாமனார் வீட்டிற்கு வந்து பத்து நாட்கள் தங்கியிருந்தேன். நோயுற்ற என் மனைவியைப் பிரிந்து செல்வது மிகவும் கஷ்டமாகத் தான் இருந்தது. அகப்பொருள் இலக்கியத்தில் கூறப் பெற்றுள்ள "ஓதற் பிரிவை" நினைத்து கொள்ளுகின்றேன். "பட்டப் படிப்பிறகு இரண்டாண்டு பிரிந்திருந்தேன்; இப்போது ஓராண்டு ஆசிரியர் பயிற்சிக்காகப் பிரிகின்றேன்" என்று நினைத்துக் கொண்டேன். அப்பொழுது என் மாமனார் வீட்டிலுள்ள அனைவருமே "அரக்க மனம்" படைத்தவர்கள் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டேன். "இந்த மரபில் மலர் போன்ற மென்மையான உள்ளத்தையுடைய என் மனைவி பிறந்தாளே!" என்று என் உள்ளம் உருகியது; கழிவிரக்கம் கொண்டது. "இந்தக் குடும்பம் எதிர் காலத்தில் எங்கட்கு என்னென்ன துன்பங்களைக் கொடுக்க இருக்கின்றதோ?" என்றெல்லாம் என் மனம் சிந்திக்கத் தொடங்கியது. அப்போது

"எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப்
போதும் பராபரமே![29]

என்ற தாயுமான அடிகளின் திருவாக்கை என் மனம் அசைபோடத் தொடங்கியது. நான் எண்ணிய எண்ணங்களெல்லாம், பின்னர் நடைமுறைப் படுத்தப்பெற்றதை ஒரு மூன்றாண்டுகளில் கண்டேன். இதைப் பின்னர் வரும் குமிழியொன்றில் இந்த நூலின் இரண்டாம் பகுதியில், விளக்குவேன்.

நாட்டுப்புற மக்கள் அனைவருமே, கள்ளங்கபடமற்றவர்கள் என்பதை 'உண்மையிலேயே கள்ளங்கபடமற்ற

29. தா. பா. பராபரக் கண்ணி—35

என்மனம்' எண்ணியது பொய் என்பது என் வாழ்க்கையி லேயே தெளிவாயிற்று. ''அயோக்கியர்கள், ஏமாற்றுபவர் கள் படிக்காதவர்களிடமும் உள்ளனர்; படித்தவர்களிடமும் உள்ளனர்'' என்ற உண்மையை நாளடைவில் உணர்ந்தேன். இன்றும் அந்த உண்மை மாறாமல் உள்ளது என்பதையும் காண்கின்றேன்.

கல்லூரியில் சேரும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. நோயில் கிடக்கும் என் மனைவியைப் பிரிந்து செல்ல நேர் கின்றதே என்று என் மனம் மிகவும் வேதனையுற்றது. இந்த நிலையிலும் அவள் துணிவுடன் ''போய்வாருங்கள்! இறை வன் இருவருக்கும் துணை நிற்பான்'' என்று இசைவு தெரிவித் தாள். இரண்டு நாள் முன்னதாக 'புதன் சந்தைவரை' (இது நாமக்கல்-சேலம் நெடுஞ்சாலையருகில் உள்ளது) பெட்டி படுக்கையுடன் மாட்டுவண்டியில் அனுப்பினார்கள். அங்கிருந்து மேருந்தில் ஏறி சேலம் வந்தேன்; அன்றிரவே இருப்பூர்தி மூலம் (Train) சென்னை வந்தடைந்தேன்; மத்திய நிலையத்தில் (Central station) இறங்கி மின்விசையால் இயங்கும் இருப்பூர்தியில் பூங்காநிலையத்தில் (Park Station) ஏறிச் சைதையை அடைந்தேன். விண்ணப்பத்திலேயே மாணவர் விடுதியில் இடம் வேண்டும் என்று குறிப்பிட் டிருந்தமையால் நேராக மாணவர் விடுதியில் வந்து சேர்ந் தேன். A—3 என்ற தனியறை ஒதுக்கப் பெற்றிருந்தது. அதில் சௌகர்யமாகத் தங்கினேன். மேசை நாற்காலி தரப் பெற்றிருந்தன. கட்டில் இல்லை; அக்காலத்தில் இந்த விடுதியில் கட்டில் வசதி இல்லாதிருந்தது. ஒன்றிரண்டு நாட் களில் இரண்டு ரூபாயில் ஒரு நார்க்கயிறு கட்டில் வாங்கிக் கொண்டேன். ஓராண்டிற்கு இது தாங்கும். உணவு விடுதி அமைந்திருந்த சூழ்நிலை ஓர் ஆசிரமத்தின் சூழ்நிலையை ஒத்திருந்தது. அறை வாடகை மாதம் மூன்று ரூபாய்தான்.

—30—

இஃது ஒருவர் தங்கும் அறை. டிசம்பருக்குமேல் இருவர் தங்கும் அறைக்கு என் இடத்தை மாற்றிக் கொண்டேன். இதற்கு மாத வாடகை ஐந்து ரூபாய்தான்; சற்றுப் பெரிய அறை. அதிக வாடகைதந்து ஒருவர் தங்கும் அறையாக மாற்றிக் கொண்டேன். A—3 அறைக்குத் தெற்குப் பக்கமாக அமைந்திருந்தன இந்த வரிசை அறைகள். எதிரில் பெரிய மைதானம். நான் B-5 என்ற அறையில் தங்கியதாக நினைவு. என் நண்பர்களான கே. நாராயணன். எஸ்.ஆர். சுப்பிரமணியன், ஆதிநாதன் ஆகிய மூவரும் முறையே B-4, B-6, B-7 என்ற அறைகளில் தங்கினார்கள் நால்வரும் ஒரே தினத்தில் அறைகளை மாற்றிக் கொண்டோம். சனவரிக்கு மேல் நல்ல தென்றலை அநுபவித்தோம்; மாலை நேரத்தில் மைதானத்தில் அமர்ந்து பாடங்களைத் திருப்பிப் பார்ப்பதற்கு வசதியாக இருந்தது. நண்பர் சோமசுந்தர அய்யரும், கிருஷ்ணசாமி செட்டியாரும் திருமணமானவர்கள். இவர்கள் குடும்பத்துடன் சென்னை வந்தார்கள். சோமசுந்தர அய்யர் நுங்கம்பாக்கத்தில் வீடு அமர்த்திக் கொண்டார். அப்போது நுங்கம்பாக்கம் நிலையம் ஏற்படவில்லை. கோடம்பாக்கம்வரை இரண்டு ஃபர்லாங் தொலைவு நடந்து இரும்பூர்தியில் ஏறி சைதாப்பேட்டை வருதல் வேண்டும். கிருஷ்ணசாமி செட்டியார் தியாகராய நகரில் ஒரு சிறு வீடு அமர்த்திக் கொண்டு குடும்பத்துடன் தங்கியிருந்தார். அப்போது இப்போதுள்ள தி. நகர் நகரப் பேருந்து நிலையத்திற்கும் சைதை நகருக்கும் இடையி லுள்ள பகுதிகளில் வீடுகள் இல்லை; அங்கும் இங்குமாக ஒரு சில சிறுசிறு வீடுகள் இருந்தன. அவற்றுள் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார் கிருஷ்ணசாமி செட்டி யார். அக்காலத்தில்ரூ 10/-அல்லது ரூ 15/-மாத வாடகையில் சிறு வீடுகள் கிடைத்தன. கிருஷ்ணசாமி செட்டியார் குறுக்கு வழியாக நடந்தே கல்லூரிக்கு வருவார்; மாலையில் நடந்தே

திரும்புவார். நான் திருமணமானவனாக இருந்தாலும் என் மனைவி நோயுற்றிருந்தமையால் வீடு அமர்த்திக் கொள்ள வில்லை. அவள் உடல் நிலை நன்றாக இருந்தாலும், நான் குடும்பம்வைத்துக் கொள்ள விரும்பவில்லை. முதற் காரணம் அவள் தன் பாட்டியைக் கவனித்துக் கொள்ள வேண்டி யவளாக இருந்தாள். இரண்டாவது காரணம், நான் மாணி நிலையிலிருந்து படிக்க விரும்பினேன். இதனால் குடும்பம் அமர்த்திக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலை தான் என் மனநிலைக்குப் பொருத்தமாகவும் இருந்தது.

குமிழி—61

# 61. சைதையில் என் கல்லூரி வாழ்க்கை

நான் கல்லூரியில் சேர்ந்ததும் அதற்குரிய கட்டணங் களையும், மாணவர் உணவு விடுதியில் சேர்ந்ததும் அதற்குரிய கட்டணங்களையும் செலுத்திவிட்டு மீதி ரூபாய் நூறை அஞ்சல் நிலையச் சேமிப்புக் கணக்கில் போட்டு வைத்துக் கொண்டேன். ஒரு திங்கள் கழித்து ஆலத்துடையாம்பட்டிக்கு அவசரக் கடிதம் எழுதி மீதி ரூ 500/-யும் தருவித்து அஞ்சல் நிலையக் கணக்கில் போட்டு வைத்துக் கொண்டேன். இதனால் இந்த ஆண்டு முழுவதற்கும் ஒருவர் கையையும் எதிர்பார்க்காமல் படிப்பு யாதொரு தடையுமின்றிச் சென்றது. இந்த ஆண்டே என் ஆசிரியப் பயிற்சிப் படிப்புப் பயிற்சி முடிவதற்குள் நான் விற்ற நிலத்தை வாங்கினவர்கள் (ஆறு மாதத்திற்குள்) ரூ 1500/-க்கு விற்றுவிட்டனர் என்பதை யும் அறிந்தேன்.

அக்காலத்தில் சைதாப்பேட்டை தனி நகராண்மைக் கழக ஆட்சியிலிருந்தது. பின்னர்தான் சென்னை மாநகராட்சி யின்கீழ் வந்தது. நகராண்மைக் கழக ஆட்சியிலிருந்தபோது

நாங்கள் பல்வேறு வசதிக் குறைகளை அநுபவித்தோம். கொசுக்கள் தொந்தரவு அதிகமாக இருந்தது. குடிநீர் வசதிகள் சரியாக இல்லை. கும்பகோணம் போலவே இங்கும் யானைக் கால் நோய் பரவலாக இருந்து வந்ததால் நாங்கள் அஞ்சிக் கொண்டே ஓராண்டைக் கழித்தோம். இறையருளால் எங்கள் ஒருவரையும் இந்த நோய் தாக்கவில்லை.

மாணவர் விடுதி ஊரைவிட்டுச் சற்று ஒதுங்கியே அமைந்திருந்தது; கல்லூரி வளாகத்திற்குத் தென் பகுதியில் அமைந்திருந்தது. இங்கிருந்து 'அடையாறு' என்ற ஆற்றைக் கடந்தால் சென்னை பொறியியல் கல்லூரி வளாகத்தை அடையலாம்; இது கிண்டியில் இருந்தது. அதை அடைய வேண்டுமானால் விடுதியினருகிலிருந்த மைதானத்தைக் கடந்து செல்ல வேண்டும். சில சமயம் இவ்வாறு கடந்து பொறியியல் கல்லூரி வளாகத்தைச் சுற்றிப் பார்ப்பதுண்டு. ஆசிரியர்க் கல்லூரியின் மாணவர் விடுதி ஓர் ஆசிரமத்தின் பொலிவை உண்டாக்கியது என்று குறிப்பிட்டேன் அல்லவா? அதைச் சற்று விளக்குவது இன்றியமையாததாகின்றது.

தங்கும் அறைகள் A, B, C என்று மூன்று பகுதிகளாக அமைந்திருந்தன. A, C பகுதிகளில் ஒருவர் தங்கும் அறைகளும், B பகுதியில் இருவர் தங்கும் அறைகளுமாக அமைந்திருந்தன. விரும்புகிறவர்கட்கு இருவர் தங்கும் அறைகள் ஒருவர் தங்குவதற்கும் தரப்பெறும் மரபும் இருந்து வந்தது. A, B பகுதிகள் வேப்பமரங்களால் சூழப்பட்டிருந்தன. நல்ல நிழலும் காற்றோட்ட வசதியும் நிறைந்திருந்தன. C-பகுதி புதிதாகக் கட்டப்பெற்றதால், அதன் அருகில் மரங்கள் இல்லாதிருந்தது. நான் A பகுதியிலிருந்தபோதும் B பகுதிக்கு மாற்றிக் கொண்ட பிறகும் நிழல் வசதியையும் காற்றோட்ட வசதியையும் நன்றாக அநுபவிக்க முடிந்தது. கொசுவலை மிகவும் இன்றியமையாததாக இருந்தது. அப்போது ரூ 6/-க்கு

நல்ல அருமையான வலை கிடைத்தது. இப்போது ரூ 75/-க்கும் அத்தகைய வலை கிடைப்பதில்லை. படிப்பதற் கேற்ற இருக்கை வசதிக்களாக நாற்காலியும் மேசையும் இருப்பினும், பாடங்களைத் திருப்பும்போது நீண்ட நேரம் உட்காருவதற்கு நாற்காலி சௌகர்யமாக இருப்பதில்லை. இதற்காக பாரி முனையில் கித்தான் அமைப்புள்ள சாய்வு நாற்காலி (Easy chair) ஒன்று வாங்கினேன். தோதகத்தி மரத்தால் (Rose wood) ஆனது இது. விலை ரூ 3-8-0 (3-50) தான். இதில் உட்கார்ந்தால் ஆடக்கூடிய (Rocking) தாதலால் மிகவும் சொகுசாக இருந்தது. 1940இல் பாரி முனையில் வாங்கப்பெற்ற இஃது இன்றளவும் பயனளித்து வருகின்றது. இத்தகைய ஒன்று இப்போது ரூ 60/-க்குக் கூடக் கிடைக்காது. திருப்பதியிலிருந்தபோது (1967 என நினைக்கின்றேன்) இதில் ஓர் ஆணி முறிந்தது; வேறு எப்படியோ கெட்டு ஆடுவதில்லை; ரூ 4/- கூலி தந்து பழுது பார்த்தேன். பல தடவை கித்தான்கள் புதிதாகப் போடப் பெற்றன. இந்த நாற்காலியில் உட்காரும் போதெல்லாம் நான் பயிற்சிக் கல்லூரியில் படித்த நாட்கள் நினைவில் எழும்.

விடுதியில் உணவு முறை மிக நன்றாக அமைந்திருந்தது. கைக்குத்தல் அரிசி (திரிகைபோல் சுற்றும் மரத்திரிகையில் நெல்லைப் போட்டு தவிடு வேறு, அரிசி வேறு, என்று பிரித் தெடுக்கப்பெற்ற அரிசி) தான் பயன்படுத்தப் பெற்றது; அரிசி மீதுள்ள மெல்லிய தோல் நீங்காதது. கண்பார்வைக்கு ஒரு மாதிரியாக இருப்பினும் உடல் நலத்திற்கு மிகவும் ஏற்றது. இத்தகைய அரிசி திருப்பராய்த்துறை விவேகானந்த வித்யாவனம் உயர்நிலைப் பள்ளி விடுதியில் சித்பவாநந்த அடிகள் பயன்படுத்தி வருகின்றார். இங்கு சமையலில் கஞ்சி வடிப்பதில்லை; சைதை உணவு விடுதியில் கஞ்சியை நீக்கினர். காலை ஆறுமணிக்கு காஃபி பானம்; ஒன்பது மணிக்கு தரப்

பெறும் உணவில், சாதம், கறி, கூட்டு, பச்சடி, சாம்பார், ரசம், அப்பளம் (அல்லது பப்படம்) இவை அடங்கியிருந்தன. நண்பகலில் ஏதாவது சாதம் (எலுமிச்சை, தேங்காய், புளியோதரை, கத்தரிக்காய்) அல்லது இட்டலி, தோசை, ஊத்தப்பம் என்று மாற்றி மாற்றி சிற்றுண்டி அமையும். மாலை நாலரை மணிக்கு காஃபி. இப்படி உணவு முறை அமைந்திருந்தது.

மாணவர்களிலேயே உணவு செயலர் (Mess Secretary) என்று ஒருவர் தேர்ந்தெடுக்கப்பெற்று அவர் மூலம் ஒவ்வொருநாளுக்கும் தரப்பெறும் உணவு, சிற்றுண்டி போன்றவை இன்னவைதான் என அறுதியிடப் பெறும். நாங்கள் படித்தபோது இப்போது கல்வித்துறையில் (நாங்கள் படித்த கல்லூரியிலேயே முதல்வராகச் சில ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. கே.ஆர். மாணிக்கம்தான் உணவுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தார். விடுதிக்குக் கல்லூரி முதல்வர்தான் (அப்போது முதல்வராக இருந்தவர் என்.ஆர். கிருஷ்ணம்மா என்ற ஆந்திரர்) விடுதியின் தலைவர். வரவு செலவுக் கணக்குகளைப் பார்த்து வந்தவர் கல்லூரியுடன் இணைக்கப்பெற்றிருந்த மாதிரி உயர்நிலைப் பள்ளியின் அறிவியல் ஆசிரியர் ஒருவர், உண்பதற்கு மேசை நாற்காலி அமைப்பு முறை இல்லை; கீழே உட்கார்ந்து வாழை இலையில் உணவு கொள்ளும் பழக்கம்தான் நடைமுறையில் இருந்தது.

அக்காலத்தில் இந்த வசதிகளுடன் உள்ள உணவு முறையில் தினசரிவிகிதம் 0-12-0 (0-75) மேல் போவதில்லை. இரவில் (ஒன்பதுமணிக்கு) தேவையானவர்கட்கு பால் வழங்கப்பெற்றது. இதற்கு மாதத்திற்கு ரூ26/- தனியாகக் கணக்கிடப்பெற்றது, இந்தவசதிகளுடன் உணவு விடுதிக்குத் தர வேண்டிய கட்டணம் ரூ25/- ரூ26/-,க்கு மேல் போவதில்லை (சிப்பந்திகள் செலவு, அறை வாடகை உட்பட.)

எண்ணிப் பார்த்தால் இக்கட்டணம் இப்போது குறைவாகத் தோன்றும்; அக்காலத்தில் இது அதிகமான தொகையாக இருந்தது. இலயோலா, பொறியியல் மருத்துவக் கல்லூரி விடுதிகளில் ரூ50/-வரைகட்டணம் அமையும். பிற விடுதிகளில் உணவு முறை பார்ப்பதற்குத் தடபுடலாக இருந்தாலும், ஆசிரியர் கல்லூரி மாணவர்விடுதி உணவுதான் உடல் நலத்திற்கு ஏற்றதாக அமைந்திருந்தது. உணவுமுறையும், தங்கும் சூழ்நிலையும் ஏற்றனவாக இருந்தமையால் ஓராண்டுப் படிப்பு சிறப்புடன் சென்றது.

குடிப்பதற்கு எப்படியோ நல்ல தண்ணீர் கிடைத்தது. இந் நீர் எந்தவித அச்சத்தையும் அருவருப்பையும் விளைவிக்க வில்லை. ஆனால் குளிப்பதற்குக் கிடைத்த நீர் சற்று அருவருப்பாக இருந்தது. ஒரே உப்பு மயம்; ஓரளவு கடல் நீர் போலவே இருந்தது. குளிர் காலத்திலும் சனிக்கிழமைகளில் எண்ணெய் குளியலின்போதும் வெந்நீர் தருவதற்கு ஏற்பாடு இருந்தது. ஒரு 50 கெஜதூரம் சென்று குளித்து வர வேண்டும்.

கழிப்பிடங்கள் திருப்தி கரமாக இல்லை. அடித்துச் செல்லும் (Flushout) பாதாளக் கழிப்புமுறை இல்லை. இதனால் கொசுக்கள் பெருகுவதற்கும் வாய்ப்பாக இருந்தது. பாதாளச் சாய்க்கடை (Underground Drainage) இல்லை: இதுவும் கொசுக்களின் தொல்லைகட்குக் காரணமாக இருந்தது. இஃதெல்லாம் ஓரளவு சிற்றூர் சூழ்நிலையைப் பிரதிபலித்தது.

# 62. மறக்கமுடியாத சில நிகழ்ச்சிகள்

'உண்ணுவது, உறங்குவது, பிள்ளைகளைப் பெறுவது'' என்பது போன்ற செயல்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இயந்திரச் செயல்கள்போல் நடை பெற்று வருகின்றன. ஓயாமல் நடைபெற்று வரும் இந்தச் சுழற்சியால், குடை இராட்டினத்தில் சுற்றுவோர் பெறும் ஒரு வித மயக்கத்தைப் போல், பெறும் ஒருவித மயக்கத்தின் காரணமாக சிந்திக்க நேரமின்றி இருக்கின்றனர்.

வாழ்வாவது மாயம்
மண்ணாவது திண்ணம்

என்ற சிந்தனை அன்றிருந்து இன்றுவரை என் சிந்தையில் எழும் ஒரு குமிழி. நோயால் பீடிக்கப்பெற்றுள்ள என் மனைவியைவிட்டுப் பிரிந்த நிலையில் இந்த எண்ணம் அடிக்கடி என் மனத்தில் எழத்தொடங்கியது. இரவு உணவு கொண்டபின் உணவு விடுதியின் மைதானத்தில் உலவும் போது இந்த எண்ணம் வானத்தில் சதா விட்டுவிட்டு மின்னும் உடுக்கள்போல என் மனத்தில் தோன்றிக் கொண்டே இருந்தது. உடல் நலம் பற்றி வகுப்பில் திரு. சிங் அவர்கள் நடத்திய பாடம் சூழ்நிலையின் காரணமாக என்மனத்தைக் கவர்ந்தது. உடல் அமைப்பு உள்ளுறுப்புகள் செயற்படும் முறை இவற்றை விளக்கும் நூலொன்றில் ஆழங்கால் பட்டேன். சிறு நீரகங்களில் ஏற்பட்ட கோளாறு காரண மாகச் சிறுநீர் குருதியுடன்கலந்து உடலில் சுற்றத் தொடங்கிய தால் உடல் முழுவதும் பூதாகாரமாக அடிக்கடி வீங்குவது, பின்னர் குறைவது போன்ற நிகழ்ச்சிகைளக் கண்டநிலையில், மருத்துவர் தரும் சிகிச்சை பலனளிக்காததால், சிகிச்சையை இறைவன் கையில் விட்டுவிட்டு ஆசிரியர் பயிற்சிப் படிப்பை மேற்கொண்டு சென்னை வந்த நிலை அடிக்கடி மனத்தில் எழுந்த வண்ணம் இருந்து கொண்டிருந்தது.

சில சித்தர்கள் 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்று சொல்லி நிலையாமையை வற்புறுத்தி வந்த போதிலும், திருமூலர்போன்ற ஞானிகள் 'உடலை உத்தமன் கோயில் கொண்டான்' என்று கருதி உடலோம்பலின் இன்றியமையாமையைப் பற்றிக் கூறியுள்ளதும் அடிக்கடி நினைவிற்கு வந்தது. இந்தப் பிறப்பில் இந்த உடற் பயணம் செவ்வனே நடைபெறுவதற்கு உடலைப் போற்றி வாழவேண்டும் என்ற உண்மை என் மனத்தில் ஆழப் பதிந்தது. அக்காலத்தில் உடல்பற்றி எழுதப்பெற்ற தமிழ் நூல் சைதையில் என் கைக்குக் கிட்டவில்லை. நல்ல ஓர் ஆங்கில நூல்தான் கிட்டியது; நூலகத்திலிந்து அதை எடுத்து வைத்துக் கொண்டு படிக்கத் தொடங்கினேன். கருத்துகளை மனத்தில் நன்கு அமைத்துக் கொண்டேன். பதினைந்து நாட்களுக்கு ஒன்று வீதம் உடலமைப்பு, உள்ளுறுப்புகள், குருதிமண்டலம், கழிவுமண்டலம், நரம்பு மண்டலம், இனப் பெருக்க உறுப்புகள் போன்றவற்றைப் பற்றி கடிதங்கள் எழுதி என்கவலையை மறந்தேன்; இதனால் உடல்பற்றிய செய்திகளில் தெளிவு ஏற்பட்டிருத்தல் கூடும். இந்த முயற்சி தான் பிற்காலத்தில் '**இல்லறநெறி**' (1964) **முத்திநெறி** (1982) **சைவ சமய விளக்கு** (1984) என்ற நூல்களை எழுதும்போது கடித உத்தியைக் கையாளச் செய்ததோ என்பதை நினைந்து பார்க்கின்றேன்.

நான் கல்லூரியில் சேர்ந்த ஒன்றிரண்டு மாதங்களில் என் மாமனார் ஊரிலிருந்து A. இராமச்சந்திர ஆச்சாரி (பொற்கொல்லர்) வந்தார். இவர்தான் என்மைத்துனருடன் நான் திருச்சியில் பட்டப் படிப்பு படித்தபோது என்னைச் சந்தித்துத் திருமணம் முடித்தவர். இவர் எதோ நோய்வாய்ப் பட்டு நாமக்கல், சேலம் போன்ற இடங்களில் பெரிய மருத்துவர்களைக் கலந்து ஆய்ந்ததில் அவர்கள் யாவரும் இவர் இருமல் நோயால் (Tuberculosis) பீடிக்கப் பெற்றுள்ளார்

என்றும், அதற்குக் கருமையான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஒருமித்த கருத்தினைத் தெரிவித்ததால் இவர் மிகவும் அச்சம் எய்தி சென்னையில் அப்போது பெரும் புகழ் பெற்றிருந்த டாக்டர் குருசாமி முதலியாரைக் கலந்து யோசிக்கவேண்டும் என்று என் உதவியை நாடிச் சென்னை வந்தார். முன்னதாகக் கடிதம் எழுதினார். நானும் முகவரியை விவரமாகத் தந்து எந்தெந்த இருப்பூர்திகளில் ஏறி எங்கெங்கு இறங்கிச் சைதை வர வேண்டும் என்றவிவரங் களை எழுதியிருந்தமையால் அவர் எளிதாக வந்து சேர்ந்து விட்டார்.

ஒரு ஞாயிறு அன்று காலையில் டாக்டர் குருசாமி முதலியாரைப் பார்ப்பதென்று முடிவு செய்தோம். டாக்டர் முதலியார் கீழ்ப்பாக்கத்தில் இருந்து வந்தார். காலை எட்டரை மணி சுமாருக்கு அவர் இல்லத்தை அடைந்தோம். அரசு மருத்துவமனையிலிருந்து ஓய்வு பெற்றபின்னர் மக்கள் நலவாழ்வுக்காக பிணியாளர்களைப் பார்த்து வந்தார். இலவசமாகவே சேவை செய்து வந்தார். ஓய்வுபெற்றபிறகு இவர் இலவசப்பணியில் ஈடுபட்டிருந்த பொழுது இறைவனே இவர் நெஞ்சில் அமர்ந்து கொண்டு பிணியாளர்கள் பார்த் தானோ என்ற நம்பிக்கை அனைவர் மனத்திலும் தோன்றி வேரூன்றியது. நாங்கள் சென்றபோது கூட்டம் இல்லை. வயது முதிர்ந்த நிலையில் ஒருமுனிவர்போல் காணப்பட்டார். என் நண்பர் ஆச்சாரி தன்னுடைய நோயைப்பற்றியும் நாமக்கல், சேலம் மருத்துவர்கள் கூறிய கருத்துகளையும் எடுத்துரைத்தார். டாக்டர் முதலியார் ஒன்றும் பேசவில்லை. ஆச்சாரியை மேலும் கீழும் நோக்கினார், இமைகளை அகட்டி கண்களைச் சோதித்தார். உடனே மருந்தை எழுதித் தந்தார். "இதைச் சாப்பிடுங்கள்; குணமாகி விடுவீர்கள்" என்று ஆசி கூறினார் என்று சொல்ல வேண்டும், ஆச்சாரி பேசத்தொடங்கினார். பின்பக்கமாக நின்று கொண்டிருந்த

ஒருவர் கையால் சைகை மூலம் பேசவேண்டாம் என்று தெரிவித்தார். 'கட்டணம் எவ்வளவு?'' என்று கேட்டபோது டாக்டர் முதலியார் பேசவில்லை. ஆச்சாரி ரூ10/-ஐ எடுத்து மேசை மீதுவைத்துவிட்டு அகன்றார். ரூபாய் தாள் காற்றில் பறந்து அறையெங்கும் கிடந்த பல ரூபாய்த்தாள் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டது. இந்தத் தாள்களை யெல்லாம் பொறுக்கி ஏதோ அறச்சாலைக்குப் போகிறதாகக் குறிப்பிட்டார்கள் அங்குவந்து சேர்ந்த வேறு பிணியாளர்கள்

நாங்கள் வரும் வழியில் ஒரு மருந்துக் கடையில் ஒரு மாதத்திற்குத்தேவையான மருந்துகளை வாங்கிக் கொண்டு திரும்பினோம். அன்றிரவே இருப்பூர்திக்குப் பயணச்சீட்டு வாங்கிக்கொண்டு சேலம் வழியாக பொட்டணம் திரும்பினார். காலாண்டுத் தேர்விற்குப் பின்னர் கிடைத்த இரண்டுவார விடுமுறையில் பொட்டணம் சென்றேன். என் மனைவியின் உடல்நிலை முக்கால் வாசி சீர்பட்டிருந்தது. இராமச்சந்திர ஆச்சாரியும் டாக்டர் குருசாமி முதலியார் குறிப்பிட்ட மருந்துகளை உண்டு மூன்று நான்குமாதங்களில் நன்கு குணம் அடைந்தார், மூன்று மாதங்கள்கூட பிழைத் திருப்பது அரிது என்று சொன்ன நாமக்கல், சேலம் மருத்துவர் களின்வாக்கு பொய்த்தது 'எம்பெருமான் மருந்தாயும் இருப்பான்; மருத்துவனாயும் இருப்பான்' என்பதுஆழ்வார் களின் கருத்து. இராமச்சந்திர ஆச்சாரி விஷயத்தில் எம் பெருமானே குருசாமி முதலியார் வடிவில் இருந்து, அவர் குறிப்பிட்ட மருந்துமாயும் இருந்து நோய்தீர்த்தான் போலும் என்று கருதுவது பொருத்தம் எனத் தோன்று கின்றது. பேயாழ்வாரின் ''உலகம் உண்டு உமிழ்ந்து நீரேற்று மூவடியால், அன்றுலகம் தாயேன் அடி...மருந்தும் பொருளும் அமுதமும் தானே''[31] என்ற வாக்கு இப்போது நினைவு கூரவும் முடிகின்றது. திரு ஆச்சாரி இன்னும் வாழ்கின்றார் (80க்குமேல்),

30. மூன், திருவந். 4

என்னுடைய மனைவியின் நோயை அன்று திருச்சியில் புகழோங்கித்திகழ்ந்த டாக்டர் காளமேகம் 'நோய் நாடி நோயின் குணம் நாடி அதுதணிக்கும் வாய் நாடி வாய்ப்பச்'[31] செய்தார். மருந்தினைக் குத்தில் புகுத்தின பொழு தெல்லாம் உடல் வீக்கம் வாடியது; மருந்தை நிறுத்தினால், மீண்டும் வீக்கம் தோன்றியது. அவருக்கே இஃது ஒரு புதிர் போல இருந்தது. ஒன்றிரண்டு மாதங்கள் திருச்சியில்-தென் னூரில் அவர் மருத்துவமனையில் தங்கி 'சிகிச்சை பெற்றும் நோய் முற்றிலும் நீங்கவில்லை, ஆயிரம்ரூபாய்க்குமேல் வரை செலவாயிற்று. ஆனால் நோயின் வேகம் குறைந்தது புல னாயிற்று. ஆகவே பெர்ட்டணம் திரும்பி மருந்தும் ஊட்டச் சத்து தரும் மருந்தும் அருந்தி ஓய்வாக இருந்தால் போதும் என்று கருதி இறைவன்மீது பாரம் போட்டு ஊர் வந்து சேர்ந்தோம். ஜூன்-1940ல் நோய் நீங்காத நிலையில் தான் என் மனைவியை விட்டுப்பிரிந்து சென்னை சென்றேன். செப்டம்பர் வாக்கில் 75 விழுக்காடு குணமாயிற்று; டிசம்பர் விடுமுறை வந்தபோது முற்றிலும் குணம் ஆயிற்று. மருந்தும் இறை வழிபாடும் சேர்ந்து நோய் நீங்குவதற்குக் காரணங் களாக அமைந்தன. இதனை எழுதும் போது,

வாளால் அறுத்துச்
சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ
யாளன்போல், மாயத்தால்
மீளாத் துயர்தரினும்
வித்துவக்கோட்(டு) அம்மா! நீ
ஆளா உனதடியேன்
பார்ப்பன் ஆடியேனே[32]

என்ற குலசேகராழ்வாரின் பாசுரம் நினைவிற்கு வருகின்றது; ஆழ்ந்து சிந்திந்து இறைவழிபாட்டின் மேன்மையை உணர்

31- குறள்-948
32. பெரு. திரு. 5:4

கின்றேன். அவன் தாள் வணங்குவதற்கும் அவன் அருள் தேவைப்படுகின்றது என்ற மணிவாசகரின் வாக்கையும் சிந்திக்கின்றேன்.

அன்று (1940) டாக்டர் குருசாமி முதலியாரைப் பார்த்தது இறைவனையே கண்டது போன்ற உணர்வு ஏற்படு கின்றது. இறைவன் குருவாகவும் எழுந்தருளுவான் என்று சொல்வதுண்டு. தாயுமானஅடிகள் முன் இறைவனே மௌன குருவாக எழுந்தருளி ஆட்கொண்டதையும் நினைந்து பார்க்க முடிகின்றது. டாக்டர் குருசாமி முதலியாரைப் பார்த்தபோது அங்கு ஒரு நோயாளியுடன் துணையாக வந்த ஒரு பெரியாரிடம் உரையாடிய போது அவர் சொன்ன ஒரு நிகழ்ச்சியை ஈண்டு குறிப்பிடுவது பொருத்தமாகும். மேட்டுக் குடியைச் சார்ந்த ஒரு வைணவப் பெண்மணி ஒரு சமயம் தாங்க முடியாத தலைவலியுடன் டாக்டர் குருசாமி முதலியாரிடம் வந்தாள் தன் தந்தையாருடன். அவர் மூக்கிலும் காதிலும் முறையே உயர்ந்த வயிரத்தாலான மூக்குத்தியையும் காதணியையும் அணிந்திருந்தார். டாக்டர் குருசாமி முதலியார் அப்பெண்மணியின் முகத்தை உற்று நோக்கினார். உடலைப் பொருத்தமட்டிலும் எந்தவிதமான நோய்க்குறிகளும் இல்லை. அவர் சிந்தனை செயற்படத் தொடங்கியது. அந்தப் பெண்மணியை நோக்கி, ''அம்மா, உங்கள் மூக்குத்தி மிகவும் நன்றாக இருக்கின்றது; காதணி களும் அற்புதம். என் பேத்தி திருமணத்திற்குத் தயாராக இருக் கின்றாள். காதிற்குத் தோடுகள் தயராகிவிட்டன. மூக்குத்தி பற்றி இன்றும் எந்த மாதிரி செய்யலாம் என்பது தெளியாத தால் இன்னும் எந்தக் கடைக்குக் கட்டளை தருவது என்பதை அறுதியிடவில்லை. உங்கள் மூக்குத்தி அழகாக உள்ளது. இதைக் கழற்றிக் கொடுங்கள். என் பேத்திக்குப் பிடித்திருந்தால், பாபலால் கம்பெனியில் செய்ய வேண்டி யிருக்கும். ஒரு வாரத்தில் திருப்பித் தந்து விடலாம்'' என்று

கூறி மூக்குத்தியைக் கழற்றி வாங்கிக்கொண்டார். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தன்னைக் காணுமாறு பணித்தார். அப்படியே அந்தப் பெண்மணியும் வந்து வந்து போனாள். "இப்போது வலி குறைந்தவிருகிறது" என்று சொல்லிச் சொல்லித் திரும்பினாள். டாக்டர் முதலியாருக்குத் தாம் கருதியது சரி என்றே பட்டது. ஒரு பத்து நாட்களுக்குள் தலைவலி முற்றிலும் நீங்கியதாகத் தெரிவித்தார் அந்தப் பெண்மணி. டாக்டர் முதலியார் "அம்மா, இந்தச்சனியன் மூக்குத்தியைக் கழற்றி எறியுங்கள். இதன் பிரகாசம் தான் உங்கள் கண்களில் தாக்கித் தலைவலியை விளைவித்தது. இனி, சாதாண புஷ்பராகத்தில் நல்ல தொன்றைத் அணிந்து கொள்ளுங்கள். காதில் இருப்பது அப்படியே இருக்கலாம்" என்று சொல்லி மூக்குத்தியைத் திருப்பித் தந்தார். டாக்டர் முதலியாரின் நோயின் அணுகும் முறையைக் கண்டு என் மனம் வியப்பில் ஆழ்ந்தது. சிறந்த மருத்துவராக இருந்ததால் தம்முடைய அனுபவத்தைக் கொண்டு 'நோய் நாடி நோயின் குணம் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செய்தல் வேண்டும்' என்பது தெரிந்தது. இந்த நிகழ்ச்சி இன்னும் என் மனத்தில் பசுமையாக உள்ளது. டாக்டர் முதலியார் இன்றும் என் மனத்தில் உபநிடத முனிவர் போல் நீங்காத இடம் பெற்றுத் திகழ்கின்றார்.

மருத்துவத்துறையில் பணி புரியும் மருத்துவர்கட்கு டாக்டர் முதலியார் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். பிணியாளர்களின் நோயினைப் போக்குவது தம் குறிக்கோளாகக் கொண்டால், பணம் தானாக வந்தடையும். பிணியாளர்களின் முகமலர்ச்சி மருத்துவர்களிடம் திருமகளின் கடைக்கண் நோக்கை அருளும். மருத்துவப்பணி தெய்வப் பணி என்பதை நோக்கமாகக் கொண்டு பணியாற்றுவது மருத்துவர்களின் கடமை. இறைவனே நோயைப் போக்குகின்றான், தாம் ஒரு கருவியாக நின்று பணியாற்றுகின்

றோம் என்பது மருத்துவர்கள் மனத்திலிருத்த வேண்டிய ஒரு சேருண்மையாகும். இங்ஙனம் எழுதும்போது,

நின்னையே தான்வேண்டி
    நீள்செல்வம் வேண்டாதார்
தன்னையே தான்வேண்டும்
    செல்வம்போல், மாயத்தால்
மின்னையே சேர்திகிரி
    வித்துவக்கோட் டம்மானே!
நின்னையே தான்வேண்டி
    நிற்பன் அடியேனே[33]

என்ற குலசேராழ்வாரின் பாசுரத்தை நினைவு கூர்கின்றேன். எந்தப் பணியையும் தெய்வப் பணியாகக் கருத வேண்டும் என்பது பொதுவிதியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றாலும், மருத்துவப் பணியை மேற்கொள்வோர் இதனைச் சிறப்பாகக் கருத்தில் இருத்த வேண்டும். பிணியாளர்கள் நோயால் தாக்குண்டவர்கள்; உயிர் ஊசலாடும் நிலையில் தம்மிடம் வருகின்றனர். மருத்துவர்கள் பணியைத் தம் வாழ்வுக்குரிய தொழிலாக மேற்கொண்டிருப்பினும், அவர்களிடம் இரக்க உணர்வு மேலோங்கியிருத்தல் இன்றியமையாதது. இதனால பிணியாளர்களின் மனம் குளிரும்; நம்பிக்கை முகிழ்க்கும். இதனால் நோயும் விரைவில் நீங்க வாய்ப்புண்டு. திருக்கோயிலுக்கு வழி பாட்டுக்குச் செல்லும் பக்தர்கள் போல் பிணியாளர்கள் மருத்துவமனைக்கு வருகின்றனர்; இறைவனைக் காண்பதுபோல் மருத்துவ ரைக் காண்கின்றனர். தங்கள் தொண்டிற்கு வறியர் உட்பட எல்லோரும் தரக் கூடிய அளவிற்குக் கட்டணங்களை அறுதியிட்டு நடைமுறைப் படுத்துவது இன்றியமையாததாயினும், பிணியாளர் நலிவை நீக்குவதே தம் முதற்கடமையாக இருத்தல்

33. பெரு. திரு. 5:9

வேண்டும். இலைவனே மருத்துவராக நின்று தம் பிணியைப் போக்குகின்றான் என்ற உணர்வு பிணியாளர்களின் மனத்தில் எழும் படியாகத் தம் கடமையை ஆற்ற வேண்டும்; கட்டுப்பாடும் கண்ணியமும் தலைதூக்கி நிற்க வேண்டும். இங்ஙனம் நடந்து கொள்ளும் மருத்துவர்களைப் பிணியாளர் கள் வாழ்த்துவார்கள். எதிர்பாராத விதமாக இறை யருளால் மருத்துவர்களிடம் பணமும் குவியும். மருத்துவ உலகிற்கு இன்றும் கலங்கரை விளக்காகத் திகழ்பவர் டாக்டர் குருசாமி முதலியார். சென்னை அரசினர் கல்லூரி நுழைவாயிலின் இடப்புறம் திகழும் அவருடைய சிலை மருத்துவப் படிப்பிற்காகக் கல்லூரியில் புகும் மாணாக்கர் கட்கு வழிகாட்டியாக உதவும் என்பது என் கருத்து. மருத்துவ மாணாக்கர்கள் இந்தச் சிலையைத் தரிசித்துத் தம் வாழ்க் கையை நெறிப்படுத்திக் கொள்வார்களா?

**குமிழி —63**

# 63. பயிற்சிக்கல்லூரிப் பேராசிரியர்கள்

அக்காலத்தில் திருச்சியில் இளங்கலை வகுப்பில் படிக்கும் மாணவர்களுடனும், பயிற்சிக் கல்லூரி மாணவ - ஆசிரியர்களுடனும் பழகும்போது மரியாதைப் பண்மை யுடன் (வாருங்கள், செல்லுங்கள் என்பது போல) பழகும் பழக்கங்கள் நடைமுறையிலிருந்து வந்தன. இளங்கலை வகுப்புகளில் ஒரே உயர்நிலைப்பள்ளியில் படித்து 'வா, போ' என்று பழகிய பழக்கத்தால் கல்லூரிக் வந்த பிறகும் ஓரிருவர் 'வா, போ' என்று பழகும் பழக்கத்தைத் தவிர்க்க முடியாதிருந்தது. ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் ஒருமையாக விளித்துப் பேசும் பழக்கம் அடியோடு ஒழிந்தது. இன்றைய சூழ்நிலையில் எண்ணற்ற மாணாக்கர்கள்

சேர்ந்து படிக்கும் நிலையில் நல்லபழக்கங்கள் அருகி வருவதைக் காண முடிகின்றது. கல்வித்தரமும் குறைந்து விட்டது. தேர்வு முறைகளாலும் பெற்றோர்கள் குறுக்கிடுவதாலும் பரிந்துரைகளும் அரசியலும் பணப்புழக்கமும் செயற்படுவதாலும் 'பணவீக்கம் போல்' 'மதிப் பெண் வீக்கமும்' மிகுந்து காணப்படுகின்றது. இப்பொழுது 10-வது வகுப்புத்தேர்வில் 600 க்கு 590 வரை பெறுவதைக் காண்கின்றோம். நான் படித்த காலத்தில் பள்ளியிறுதித் தேர்வுகளில் 600 க்கு 450 மதிப்பெண்கள் பெறுவது அரிதாக இருந்தது. 300-360, 360-400 என்று மதிப் பெண்கள் பெறும் மாணவர்கள் முறையே 30 விழுக்காடு, 20 விழுக்காடு என்று எண்ணிக்கையில்தான் இருந்தனர். பெரும்பாலோர் 300 க்குக் கீழ்தான் மதிப்பெண்கள் பெறுவோராக இருந்தனர். 210 வாங்குவோர் பெரிய அளவில் இருந்தனர்.

நான் பயிற்சிக்கல்லூரியில் படித்தபோது கல்விபற்றிய கருத்துகள் பயிற்சி பெறுவோரால் மறை மொழிகள்போல் போற்றப் பெற்றன. இயன்றவரை நடைமுறையில் செயற்படுத்த முற்பட்டோம். புதிய கல்வி முறைகள், உளவியல் கருத்துகள் எங்கட்கு மனநிறைவினைத் தந்தன. கல்லூரியில் மாதிரிப்பள்ளி மாணவர்களைக் கொண்டு நடைமுறைப் பயிற்சிகளை நாங்கள் பெறும்போது மிகப் பொறுப்புடன் நடந்து கொண்டோம். ஆந்திரம், கேரளம், கர்நாடகம் போன்ற பகுதிகளிலிருந்து வருபவர்களிடம் நெருங்கிப் பழகியதால் ஒருவித ஒருமைப்பாட்டு உணர்ச்சியைப் பெற்றோம். இன்றைய நிலையில் ஒருமைப்பாடு அதிகமாகப் 'பேசப்படுகிறது'. மொழி வாரியாக மாநிலங்கள், பிரிந்த பிறகு 'வெறுப்புணர்ச்சி' வளர்ந்து வருகின்றது; ஒருமைப்பாடு வேண்டும் என்ற கூக்குரல் தம்பட்டம் அடிக்கப்படுகின்றது. பயனோ விழலுக்கு இறைத்த நீர் போலத்தான்.

நான் பயின்றகாலத்தில் கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர்களில் நினைவுகூர முடிகின்றவர்கள் திரு. குருசாமி ரெட்டியார் (உளவியல்), திரு. சீமான்பாதர் (ஆங்கிலம்), திரு. கே.சி. வீரராகவ அய்யர் (இயற்பியல்), திரு. சிங்க் (இயற்கை அறிவியல்), திரு. என். இரகுநாத அய்யங்கார் (கணிதம்), திரு. தேசிகாச்சாரி (வரலாறு) ஆகியோர்; உடற்பயிற்சி ஆசிரியர் பெயர் நினைவு இல்லை. உடற்பயிற்சி செய்வதில்லை கூடைப்பந்து, பூப்பந்து, எறிபந்து (volley ball) கால்பந்து, டென்னிகாய்ட் போன்ற விளையாட்டுகள் மட்டிலும் புழக்கத்தில் இருந்தன. நான் எறிபந்து, கூடைப்பந்து, டென்னி காய்ட் போன்ற விளையாட்டுக்களில் கலந்து கொள்வேன்; அதிக ஊக்கத்துடன் கலந்து கொள்வதில்லை. சனிக்கிழமையோ ஞாயிறுஅன்றோ (நினைவுகூர முடியவில்லை) எங்கள் கல்லூரிக்கு அடுத்துள்ள உடற்பயிற்சி கல்லூரிக்குக் காலை ஆறுமணிக்குப் போவோம். கல்லூரி முதல்வர் உலகப்புகழ்பெற்ற திரு. பக் (Buck) என்பார் ஏதோ சில உடற்பயிற்சிகளில் பழக்குவார். அவரிடம் கற்றது மிகப் பெருமையுடன் நினைவுகூர முடிகின்றது. அவர் பேச்சு நகைச் சுவையுடன் மிளிர்வதால் அஃது எங்களை மிகவும் ஈர்க்கும். ஞாயிறுகாலை எட்டுமணி வரை காலம் உற்சாகமாகப் பயனுள்ள முறையில் கழியும். நான் பயின்றபோது தமிழ் கற்பிக்கும் முறை பயிற்றுவிக்க வகை செய்யப்பெறவில்லை. அதனால் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் நியமனம் பெறவில்லை.

பேராசிரியர் சீமான்பாதர் ஆங்கிலம் கற்பிக்கும் முறைகளை மிக அற்புதமாக விளக்குவார் என்று அவரிடம் பயின்ற மாணவர்கள் பேசிக்கொள்வதைக்கேட்டதுண்டு. என் நண்பர் கே. நாராயண அய்யங்கார் (திரு அரங்கத்திலிருந்து வந்தவர்) திரு. பாதரின் சொற்பொழிவு கவர்ச்சிகரமாக இருக்கும் என்று அடிக்கடிச் சொல்லி மகிழ்வார். பேராசிரியர்

தேசிகாச்சாரி எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்துடன் காணப்பெறுவார். இவரது சொற்பொழிவுகளும் விளக்கங்களும் கவர்ச்சிகரமாகவும் பயனுடையனவாகவும் இருக்கும் என்று என் நண்பர் கே. நாராயண அய்யங்கார் அடிக்கடிச் சொல்லி மகிழ்வதைக் கேட்டிருக்கின்றேன்.

பேராசிரியர் என். இரகுநாத அய்யங்கார் (கணிதப் பேராசிரியர்)எப்பொதும் சுறுசுறுப்பாக இருப்பார்: மாணவர்களுடன் கண்ணியமாக நடந்து கொள்வார். ஒரு மணி நேரப் பேச்சில் நாற்பது மணித்துளிகள்தாம் பேச்சு இருக்கும்; மீதி நேரத்தைக் கலந்தாய்தலுக்குப் பயன்படுத்துவார். இவருடைய வகுப்புகளை தட்டும். துறைக்குரிய நூலகத்திற்கு என்னை நூலகராக வகுப்பு தேர்ந்தெடுத்தது. நூல்களை மாணாக்கருக்கு வழங்குவது, திரும்பப் பெறுவது போன்ற செயல்களில் பேராசிரியர் அய்யங்காருக்கு நன்கு உதவுவேன் அவரும் என்னுடைய சுறுசுறுப்பைக் கண்டு பாராட்டுவார்; பொறுப்புடன் ஆற்றும் பணியைக் கண்டு மெச்சுவார். நன்கு படிக்க வேண்டிய நூல்களைச் சுட்டிக் காட்டுவார். அவற்றைப் படித்து எழுதிவைத்திருந்த குறிப்புகள் தேர்வுக்கு நன்கு உதவின; அதிக மதிப்பெண்களையும் பெற முடிந்தது.

நலவாழ்வுக் கல்வி (Health Education) பற்றிய படிப்பை இயற்கை நூல் பேராசிரியர் திரு. சிங் அவர்கள் கற்பித்ததாக நினைவு. உடற் கல்வியை யார் கற்பித்தார் என்பது நினைவிற்கு வரவில்லை. இந்தப் பாடங்களைக் கற்பித்தவர்கள் எந்தவிதமான எழுச்சியையும் என்னிடம் ஏற்படுத்தவில்லை. அதனால்தான் அவர்களைப்பற்றிய நினைவே இல்லை.

பேராசிரியர் கே. சி. வீரராகவ அய்யர் அறிவியல் பேராசிரியர். இவர் வகுப்பில் அறிவியல் கற்பித்தல்பற்றிய முறைகளை ஒழுங்காகச் சொல்வதில்லை. வகுப்பில் எதை

எதையோ தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் பேசிக் கொண்டு காலத்தை வீணாக்குவார். மூன்று நான்கு மாணவர்களை நோக்கியே ஏதாவது பேசிக்கொண்டே யிருப்பார். ஏனையவர்கட்கு அலுப்பும் சலிப்பும் தட்டிவிடும். இவர் சிரிப்பதிலோ முறுவலிப்பதிலோ கவர்ச்சி இராது. நஞ்சு கலந்திருப்பது போன்ற சாயை தோன்றும். இவர் போன்றவர்கள் அறிவியல் பாடங்களில் புலமை இல்லாதவர் கள் எனக் கருத இடந்தருகின்றது. எல்.டி. பட்டம் பெற் றிருந்தமையால் பயிற்சிக் கல்லூரியில் தள்ளப்பட்டு விட்டாரோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. தமக்குப் பிடிக்காதவர்களைத் தேர்வில் 'கழுத்தை அறுத்து விடுவார்' என்று இவரைப்பற்றிய பேச்சு உலவியது. அந்தக் காலத்தில் எந்த ஆசிரியர்களைப்பற்றியும் யாரும் தவறாகப் பேசுவ தில்லை. இவரைப்பற்றி மட்டிலும் இத்தகைய பேச்சு எழுந்ததால் இதில் உண்மை இருக்க வேண்டும் என்பது என் நினைப்பு. இராமமூர்த்தி [பி.எஸ்.சி. (ஆனர்ஸ்) படித்தவர்], நடேசன் (பி. எஸ்.சி. படித்தவர்), T. D. சுப்பிரமணியம் (பி.ஏ. படித்தவர்) இவர்கள்தாம் வகுப்பில் இந்தப் பேராசிரியரிடம் அதிகமாகப் பேச்சில் கலந்து கொள்பவர் கள். இவர்கள் தேர்வில் எதை எழுதினாலும் அது சரியான தாக ஏற்றுக் கொள்ளப்பெறும். பலரைத் தேர்வில் பலி யாக்கியதையும் கண்டேன். பிராமணரல்லாதார் முன்னுக்கு வருவதைத் தடுத்துவிடுவார் என்றும் பேசிக் கொள்வார்கள். சிறிது கூட உண்மையின்றி ஒருவரைப்பற்றி இவ்வாறு தவறான பேச்சு எழாது என்றே நினைக்கத் தோன்று கின்றது.

பேராசிரியர் குருசாமி ரெட்டியாரின் வகுப்புதான் அற்புதமாக இருக்கும். இருநூறு மாணாக்கர்கள் அடங்கிய வகுப்பை அற்புதமாகக் கையாளுவர். வகுப்பிற்கு வருங்கால் இவர் உதவியாள் இருபதிற்குக் குறையாமல் நூல்களை

மேசைமீது கொண்டு வந்து வைப்பான். ஒவ்வொரு நூலின் பெயர், அதனை இயற்றிய ஆசிரியரின் பெயர் கூறி அந்த நூலின் உள்ளுறையை (Contents) மாற்றி மாற்றிப் படிப்பார். இவர் செய்கையைக் கூர்ந்து கவனித்தால் இந்த நூல்களின் துணை கொண்டுதான் கல்வி உளவியல் பாடத் திட்டத்தை வகுத்தனர் என்பதை விளக்குவது புலனாகும். இடை இடையே பாடத்திட்டத்திலுள்ள பல கருத்துகளை மின்வெட்டு போல் ஒளி காட்டி விளக்குவார். இங்கிலாந்தில் படித்தபோது வெள்ளைக் கார மாதினைத் திருமணம் புரிந்து கொண்டு மணமுறிவு ஏற்பட்டதன் விளைவாக இவர் ஒரு விதக் கிறுக்குத்தனமாக நடந்து கொள்ளுகின்றார் என்று பேச்சு அடிபட்டது. இவர் போக்கும் ஒருவிதமாகத்தான் இருந்தது. இவர் சிரிப்பும் எவரையும் கவராது. வெறுப்பு கலந்த பார்வை, நஞ்சு கலந்தது போன்ற சிரிப்பு—இவர்தம் உள்ளக்கிடக்கையைப் புலப்படுத்தி விடும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற பழமொழி இவருக்கு முற்றிலும் பொருந்தும் என்ற போதிலும், இவர் விபரீதமான கற்பிக்கும் முறையைக் கையாண்டாலும் இவர் போக்கைக் கருத்திற் கொள்ளாது வகுப்பில் நடந்து கொள்ளும் முறையை உன்னிப்பாகக் கவனித்தால் கல்வி உளவியல்பற்றிய கருத்துக் களஞ்சியத்தை நன்கு பெறலாம். இருநூறு பேர்களடங்கிய ஒரு பெரிய வகுப்பில் ஒரு நாற்பது பேராவது இவர் பாடம் நடத்தும் முறையால் பயன் பெற்றனராகக் கருதுகின்றேன். நான் நன்கு பயன் அடைந்தேன் என்பதை மட்டிலும் குறிப்பிடாமல் இருக்க முடிவதில்லை.

1985 திசம்பர் திங்களில் 'கல்வி உளவியல் கோட்பாடுகள் என்ற ஓர் அரிய நூலை வெளியிட்டேன். நான் கல்வி உளவியலில் ஆழங்கால் படுவதற்கும் அதில் மேலும் மேலும் ஆர்வம் எழுவதற்கும் காரணமாக இருந்த பேராசிரியர் குருசாமி ரெட்டியார் அவர்கட்கு இந்த நூலை

தலம்புகழ் சைதைப் பயிற்சிக்கல் லூரி
சால்புறப் புரிந்தபே ராசான்;
நலம்பொலி உளத்தின் இயல்பினை விரிக்கும்
ஞானசூ ரியனெனத் திகழ்ந்தோன்;
புலம்பெற எனக்கு நுண்ணுணர்வு அளித்த
புண்ணியன்; தண்ணியன்; எங்கள்
குலம்புரி தவத்தால் வருகுரு சாமிக்
கொண்டலுக் குரியதிந் நூலே.

[குலம் – ஆசிரியக் குலம்]

என்ற பாடலால் அவருக்கு அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன்.

நான் காரைக்குடியில் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய போது ஓரிருவரைத் தவிர எல்லோருமே உற்சாகமாக வகுப்புகளைக் கையாண்டோம். அதிகமாக நூல்களைப் பயின்றோம்; அற்புதமாகக் கற்பித்தோம். எங்களையும் நாங்கள் படித்தபோது எங்கட்கு ஆசிரியர்களாக அமைந்தவர் களையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கி ஆராய்ந்தால் நாங்கள் தாம் சிறந்த முறையில் பணியாற்றினோம் என்பது வெள்ளிடை விலங்கலெனத் தெரிகின்றது. இதனை ஒருவித ஆன்ம பரிசோதனையாகக் கருதி எண்ணிப் பார்த்ததில் இந்த முடிவிற்கு வரமுடிந்தது. இதனை ஓர் உண்மையான ஒப்பீடு என்றே கருதலாம்.

எல்.டிக்குரிய பல்கலைக் கழகம் நடத்திய தேர்வுகளை நன்கு எழுதினேன். பேராசிரியர் குருசாமி ரெட்டியார் கற்பித்த கல்வி உளவியல் தேர்வினையும், பேராசிரியர் என். இரகுநாத அய்யங்கார் கற்பித்த கணிதம் பயிற்றும் முறைத் தேர்வையும், பேராசிரியர் சிங் அவர்கள் கற்பித்த நலவாழ்வுக் கல்விக்குரிய தேர்வையும் மிக நன்றாக எழுதியதை இன்று நினைவுகூர முடிகின்றது. கோடை

விடுமுறைக்காக (தேர்வுகள் நிறைவு பெற்றதும்) சேலம் வழியாக மாமனார் வீட்டிற்குச் செல்லாமல் திருச்சி வழியாகப் பொட்டணம் சென்றேன். சைதையில் இருக்கும் போதே துறையூரில் பெருநிலக் கிழவரின் மக்கள் திரு. விசய வேங்கடாசல துரையும் திரு முத்து வேங்கடாசல துரையும் (இவர்கள் வழக்குரைஞர்கள்) சேர்ந்து ஓர் நடுநிலைப் பள்ளியைத் தொடங்குவதாகவும், அஃது உயர்நிலைப் பள்ளியாக உயர்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் கேள்வியுற்று அதுபற்றி மேலும் தெரிந்து கொண்டு விண்ணப்பிப்பதற்கென்றே திருச்சி வழியாக வந்தேன்.

திருச்சியில் என் அரிய நண்பர் திரு P. அரங்கசாமி ரெட்டியார் பி.எல். பட்டம் பெற்று மிகு புகழ் வாய்ந்த திரு கணபதி அய்யர் என்ற வழக்குரைஞரிடம் வழக்குரைஞராக வருவதற்குரிய பயிற்சி பெற்று (Apprenticeship) வந்தார். திரு கணபதி அய்யர் வீடு ஆண்டார் தெருவிலிருந்தது. அவர் வீட்டிற்கு அருகில் எதிர் வரிசையில் ‘சேதுரத்தின அய்யர் தங்கும் விடுதி’ யொன்றிருந்தது. அதில் தான் P. அரங்கசாமி ரெட்டியார் தங்கியிருந்தார். சென்னையை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் திரு அரங்கசாமி ரெட்டியாருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். நகர் இருப்பூர்தி நிலையத்தில் (Town Station) இறங்கி அவர் அறையை வந்தடைந்தேன். குளியலையும் சிற்றுண்டியையும் முடித்துக் கொண்டு துறையூர் நடுநிலைப்பள்ளி தொடங்குவது குறித்து அனைத்து விவரங்களையும் திரு அரங்கசாமி ரெட்டியார் மூலம் நன்கு தெரிந்து கொண்டேன்.

இருவரும் கலந்து யோசித்ததில் தலைமையாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்புவதென முடிவு செய்தோம். அழகான முறையில் விண்ணப்பம் தயார் செய்யப்பெற்றது. தட்டச்சு செய்யாமல் கையெழுத்திலேயே விண்ணப்பம் அனுப்புவதென முடிவுக்கு வந்தோம். அக்காலத்தில் என் தமிழ்க் கையெழுத்தும் ஆங்கிலக் கையெழுத்தும் முத்துக்

கோத்தாற்போன்று மிக அழகாக இருக்கும். விண்ணப்பத்தை கையெழுத்திலேயே தயார் செய்தேன். 1) பி.எஸ்சி. பட்டச் சான்றிதழ் 2) சைதை கல்லூரியில் வழங்கப் பெற்ற சான்றிதழ், 3) மறைதிரு ஜெரோம் டி சைளஸா, மறைதிரு ஹாஸ், கே சி. சப்த ரிஷி ரெட்டியார், தி மு. நாராயணசாமி பிள்ளை, சர் டி. தேசிகாச்சாரி இவர்கள் வழங்கிய சான்றிதழ் களையும் அழகாகப் படியெடுத்தேன். ஏற்கெனவே (1939-40) ஆண்டில் வேலைதேடும் படலத்தில் அழகிய முறையில் விண்ணப்பம் அனுப்பும் முறைகளைப் பற்றி நன்கு அநுபவம் பெற்றிருந்தபடியால் விண்ணப்பம்தயாரிக்கும்முறையில்நன்கு பயிற்சி பெற்றிருந்தேன். அந்த அநுபவத்தைக் கொண்டு விண்ணப்பத்தைத் தயாரித்துச் சான்றிதழ் நகல்களை அத் துடன்அழகிய முறையில் இணைத்து திரு முத்து வேங்கடாசல துரை அவர்களின் முகவரிக்குப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தேன். இந்தவிண்ணப்பத்தைப் பார்த்த திரு அரங்கசாமி ரெட்டியார் என்திறமையைக்கண்டு மிகவியந்தார். துறையூரில் திரு. முத்து வேங்கடாசலதுரை, உயர்நிலைத் தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. T. S. இராசகோபால் அய்யர், அக்காலத்தில் முசிறி வட்டத்துணைக் கல்வி ஆய்வாள ராக இருந்த திரு C. சிங்காரவேலு முதலியார் ஆகிய மூவரும் என் விண்ணப்பத்தைக்கண்டு மிகவும் மெச்சிப் போற்றியதைப் பின்னர் அறிந்தேன். என் தகுதி, திறமை முதலியவற்றைச் சான்றிதழ்கள்மூலம் அறிந்த திரு C. சிங்காரவேலு முதலியார் ‘‘இவர் புதிதாகத் தொடங்கப் போகும் பள்ளிக்கு நல்ல நிலை முதலாக (Asset) இருப்பார்’’ என்று பரிந்துரைத்துப் புகழ்ந்ததாக என் ஆசிரியப் பெருந்தகை திரு T. S. இராசகோபால் அய்யர்மூலம் அறிந்து மகிழ்ந்தேன். இறையருளால் புதுப்பள்ளிக்குத் தலைமை யாசிரியர் பொறுப்பும் என்னை வந்தடைந்தது (1941-ஜூன் 1 தேதி முதல்).

# 64. நினைவுச் சிதறல்கள்

சென்ற 63-குமிழிகளும் நான் கல்விகற்ற நாள் தொடங்கிக் கல்லூரிக்கல்வி முடியும் வரை என்னைப் பற்றிச் சிறிது எடுத்துக் காட்டுவனவாக அமைந்தன. இந்த இருபத்தைந்து ஆண்டுக் காலத்தில்—குறிப்பாகக் கல்லூரிப்படிப்புக் காலத்தில்—வேறு சில சிறு குமிழிகளும் எழுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒரு சிலவற்றை ஈண்டுப்பதிவு செய்கின்றேன்—'நினைவுச் சிதறல்கள்' என்ற தலைப்பில்.

(1) நான் திருச்சி வாணப் பட்டறைத் தெருவில் இருந்த காலத்தில் என் அரிய நண்பர் திரு. **வையாபுரியும்** (தொழில் துறையில் பெரிய பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்று கரூரில் வாழ்ந்து வந்தவர்; இரண்டு மூன்றாண்டுகட்கு முன்னர் திருநாடு அலங்கரித்தவர்) வேறு சில நண்பர்களும் தேசியக் கல்லூரிக்கருகில் (ஆண்டார் தெருவிற்கு எதிரில்) உள்ள ஓர் ஓய்வு பெற்ற பேராசிரியர் வீட்டு மாடியிலிருந்த நான்கு அறைகளில் தங்கியிருந்தனர். பேராசிரியர் மக்கட்பேறு இல்லாதவர்; இவர் இல்லத்தில் தங்கியிருந்த கல்லூரி மாணவர்கள் அனைவருமே ஒழுங்கு தவறாமல் படிக்கும் நன்மாணாக்கர்கள். சிலசமயம் மாலை நேரங்களில், அல்லது விடுமுறை நாட்களில் மாலை நேரங்களில் வேறு இடங்களில் தங்கியிருக்கும் மாணாக்கர்கள் வருவதுண்டு. அப்போது சற்று இரைச்சலும் கொம்மாளமும் இருக்கும். மாணவர் பருவத்தில் இவையெல்லாம் இருப்பது இயல்புதானே. தேர்வுக் கவலையைத் தவிர எந்தக் கவலையும் இல்லாதவர்களல்லவா? பல்லாண்டுகள் கல்லூரியில் கல்வி கற்பித்து ஓய்வு பெற்ற பேராசிரியருக்கு மாணவர்களின் உணர்வுகள்பற்றி அறியாதது வியப்பாக இருந்தது. அடிக்கடி அடக்கு முறைக் குரல் எழுப்புவார்—தொடக்கநிலைப் பள்ளி ஆசிரியர்கள்

சிறுவர்களை விரட்டுவதுபோல. இவர்போக்கையே விரும்பாதவர்கள் இவர்குரலுக்குச் செவிசாய்ப்பதில்லை மாறாகத் தமக்குள்ளே கிண்டலும் கேலியும் செய்வதுண்டு. ஆனால் பேராசிரியரிடம் மரியாதையுடன்தான் நடந்து கொள்வார்கள். இவர்கள் யாவரும் புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்கள்.

பேராசிரியர் இவர்கள் போக்கைப் பிடிக்காமல் அறைகளைக் காலி செய்யுமாறு பதிவு அஞ்சல் மூலம் வக்கில் நோட்டீசு அனுப்பச் செய்தார். இது நடைபெற்றது பிப்பிரவரி (1939) இறுதியில் மாணவர்கள் என்ன செய்வார்கள்? எங்கும் தங்கும் அறைகள் கிடைக்கா. அதுவும் கல்லூரிக்கு அருகில் எப்படிக் கிடைக்கும்? மாணவர்கட்கு ஒரே கவலையாகிவிட்டது. வழக்கமாக அவர்கள் அறைக்குப் போகும் என்னிடம் நிலைமையைத் தெரிவித்தார் வையாபுரி. மறுநாள் காலையில் நானும் வையாபுரியும் நான்கு நோட்டீசுகளையும் எடுத்துக் கொண்டு பாதிரிமார் மாளிகை சென்று முதல்வர் **ஜெரோம் டி சௌஸா** அவர்களைச் சந்தித்து நிலையைவிளக்கினோம். தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்த சமயம் எங்கட்கு இத்தொல்லைகள் தருவதைப்பற்றி வருத்தத்துடன் தெரிவித்தோம்; எப்படியாவது எங்களைக் காப்பாற்றுமாறு வேண்டினோம்.

மாணவர்கள் நலனையே குறிக்கோளாகக் கொண்டிருந்த முதல்வர், ''அஞ்ச வேண்டா. நம் கல்லூரி வக்கீல் **பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யரிடம்** (ஆண்டார் தெருவில் தான் இவர் குடியிருந்தார்) என் கடிதத்துடன் இந்த நோட்டீசுகளைச் சேர்ப்பியுங்கள். அவர் பதில் நோட்டீசு தந்துவிடுவார். எல்லாம் சரியாய் விடும். நீங்கள் கவலையின்றித் தேர்வுக்குப் படியுங்கள். ஆசி'' என்று வாழ்த்தி அனுப்பினார். ஒன்றிரண்டு நாட்களில் அஞ்சல் சேவகன்

பதிவு அஞ்சல் கடிதம் ஒன்றை பேராசிரியரிடம் தந்ததைப் பார்த்ததாக வையாபுரி என்னிடம் சொன்னார். ''அன்று முதல் பேராசியர் முகத்தில் ஈஆடவில்லை. பெட்டி பாம்பு போல் அடங்கிவிட்டார். நாங்கள் நன்கு படிக்கின்றோம்'' என்றார் வையாபுரி. மாணவர் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் ஜெரோம் டி சௌஸாவைப் போல் ஒரு முதல் வரைக் காண்டல் அரிது.

(2) நான் சூசையப்பர் கல்லூரியில் படித்த காலத்தில் தேசியக் கல்லூரியில் முதல்வராக இருந்தவர் மிகுபுகழ் பெற்ற **பேராசிரியர் சாரநாதன்** அவர்கள். இவரும் மாணாக் கர்பால் மிதமிஞ்சிய அன்பும் அக்கறையும் கொண்டவர். ஆங்கிலம் கற்பிப்பதில், ஷேக்ஸ்பியர் நாடகங்களைக் கற்பிப் பதில் வல்லவர் என்று மாணவர்கள் பேசிக் கொள்வதைக் கேட்டதுண்டு. இவர் தேசபக்தர்; கதர் ஆடை தவிர வேறு உடைகளை அணிவதில்லை. காங்கிரஸ் கட்சிபால் பற்றுடைய வராக இருப்பினும் பிறகட்சிகளின் கொள்கைகளைக் கேட்டு மகிழும் பரந்த, திறந்த மனமுடையவர்.

ஒரு சமயம் தோழர் ப. **ஜீவானந்தத்தையும்** திருமதி **நீலாவதி இராமசுப்பிரமணியத்தையும்**, கல்லூரியில் வந்து பேசுமாறு அழைத்திருந்தார் பேராசிரியர் சாரநாதன். இவர் கள் இருவரும், அக்காலத்தில் தந்தை பெரியார் அவர்களின் கொள்கைப் பிடிப்புடையவர்கள். இவர்கள் நகரமண்டபம் (Town Hall) அருகிலுள்ள மைதானத்தில் அடிக்கடிப் பேசுவ துண்டு. அப்பொழுது காசியப்பா ராவுத்தர் ஸ்டோரில் தங்கி யிருந்த நான் இவர்கள் பேச்சை அடிக்கடிக் கேட்பதுண்டு. கல்லூரி மரபுக்கு ஒவ்வாத முறையில் பேசும் இவர்கள் பேச்சைக் கேட்க நான் மிக்க ஆவலுடன் சென்றிருந்தேன். அக்காலத்தில் ஐரோப்பா போர்மேகம் சூழ்ந்திருந்தது. இத்தாலி நாட்டைச் சார்ந்த முஸோலினியின் அச்சுறுத்தல்

செய்தித்தாள்கள் வழியாக வெளிவந்து கொண்டிருந்தது. தோழர் ப ஜீவாநந்தம் தலைமையில் நீலாவதி இராம சுப்பிர மணியம் பேசியதாக நினைவு. இருவரும் அய்யர்மாருக்குச் சிறிதும் ஒவ்வாத சுயமரியாதைக் கட்சிக் கொள்கைகளை அவிழ்த்துவிட்டுக் கொண்டிந்தனர். ஆனால் கல்லூரி கௌரவத்திற்கு முற்றிலும் பொருந்தும் படியாக உயர்ந்த பண்பாட்டுடன்தான் பேசிவந்தனர். பேராசிரியர் சாரநாதன் உட்பட அய்யர் கோட்டையான தேசியக் கல்லூரியில் பணியாற்றும் அய்யர்மார்களில் பெரும்பாலோர் வந்திருந் தனர். அனைவருமே இருவர் பேச்சுகளைச் சுவைத்து மகிழ்ந்தனர்; பேச்சின் முக்கியமான கட்டங்களில் கையொலி யும் எழுப்பி மகிழ்ந்தனர். தோழர். ப. ஜீவாநந்தம் பேசும் போது 'இத்தாலி நாட்டு மக்களின் மார்பைப் பிளந்து பார்த்தால், "இத்தாலி சுதந்திரம்" என்று பொறிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம்; ஆனால் நம் தென்னிந்திய அய்யர்மார்களின் குப்பாயத்தை (சட்டை)யை நீக்கினாலே 'டவாலி' (பூணூல்) திகழ்வதைக் காணலாம்" என்று ஒருபோடு போட்டார் 'இப்படிப் பேசிவிட்டாரே!' என்று என் நெஞ்சு துணுக்குற்றது. ஆனால் போராசிரியர் சாரநாதன் சிரிப் பொலியை எழுப்பிக் கொண்டு கையொலியையும் பலமுறை எழுப்பி மகிழ்ந்ததைக் கண்டு வியப்புற்றேன். "பண்புடையார் பட்டுண்டு உலகம்" 'என்ற பொய்யாமொழிக்கு இலக்கிய மாகத் திகழ்ந்ததையும் கண்டு மகிழ்ந்தேன். அக்காலத்தில் இப்படிப் பரந்த உள்ளமுடைய பிராமணரைக் காண்டல் அரிது.

(3) சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர் விடுதியில்நான் தங்கியிருந்தபோது திரு கா. அப்பாதுரைப் பிள்ளை அவர்களும் தங்கியிருந்தார்; கல்லூரியில் என்னுடன்

1. குறள் 996.

பயிற்சி பெற்றார். அக்காலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகளை நற்றமிழில் எழுதிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குத் தந்து கொண்டிருந்தார். கழகம் பயிற்சிக் கல்லூரியில் படிப்பதற்கான செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்ள ஒப்புதல் அளித்ததால் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். கையில் செலவுக்குப் பணமின்றி அடிக்கடிச் சிரமப்பட்டதைக் கண்டேன். கழகத்திலிருந்து உரிய காலத்தில் பணம் தராததால் இந்தச் சிரமம் அவருக்கு இருந்து வந்தது.

பயிற்சிக் கல்லூரியில் எல்லோரும் விளையாட வேண்டும், உடற்பயிற்சியும் பெறவேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. உடல் கல்வி பற்றிய எழுத்துமுறைத் தேர்வும் இருந்து வந்தது. கல்லூரி மாணவர்களில் 23 வயதிலிருந்து 48 வயது வரைக்கும் உட்பட்ட மாணவர்கள் இருந்து வந்தனர் டார்வின் படிவளர்ச்சிக் கொள்கையை எடுத்துக் காட்டுவது போல் மாணவர் கூட்டம் திகழ்ந்தது! பருத்த உடலும் குள்ளமான உருவமும் சுமார் 40 அகவையை எட்டும் திரு அப்பாத்துரையாரும் விளையாடினார். ஒரு சமயம் எறிபந்து விளையாட்டில் (Volley ball) ஓடியாடி விளையாடின பொழுது தவறி விழுந்தார்; முழங்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. சுமார் இருபது நாட்கள் மருத்துவமனையில் இருக்கும் நிலை ஏற்பட்டது. உரையாடலில் வல்லவராதலால் (தமிழ், ஆங்கிலம், இந்தி) எல்லோர் கவனத்தையும் ஈர்த்தார்.

மரக்கறி உணவுப் பகுதியில் சுமார் 45 மாணவர்கள் இருந்தனர். இப்பகுதியில்தான் அவர் உணவு கொண்டிருந்தார். மருத்துவமனையிலிருந்து திரும்பியதும் அவருக்கு இலவச உணவு வழங்கும் ஒரு திட்டத்தை மாணவர்கள் கூட்டத்தில் எடுத்துக் கூறினேன். அவர் நிலையையும்

பன்மொழிப் புலமையையும் கண்ட மாணவர்கள் அனைவரும் ஒரு மனதாக இத்திட்டத்திற்கு ஆதரவு அளித்தனர். ஏறக்குறைய ஆறு, ஏழு மாத காலம் (செப்டம்பர் முதல்—ஏப்பிரல் வரை) அவருக்கு இலவசமாக உணவு வழங்கப் பெற்றது. அறை வாடகை, நிலைய வகைச் செலவு (Establishment Charges) இவற்றை அவரே ஏற்றுக் கொண்டார் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டது. இப்படியாக ஒரு நல்லவருக்கு உதவும் பேறு எங்கட்குக் கிடைத்தது.

(4) சைதை மாணாக்கர் விடுதியில் தங்கியிருந்தபோது நானும் சில நண்பர்களும் மாலை வேளைகளில் அடிக்கடிக் குறுக்கு வழியாக நடந்து தியாகராய நகரிலுள்ள பனகல் பூங்காவுக்கு வருவதுண்டு. மாலை காஃபி அருந்தியவுடன் நடை கட்டுவோம். 6-15 மணியளவில் பூங்காவை அடைவோம். வழியில் ஓர் இல்லத்தில் தங்கியிருந்த M. கிருஷ்ணசாமி செட்டியாரும் (அக்காலத்தில் திருச்சியில் நாங்கள் அவரை எம்.ஏ. செட்டியார் என்றே வழங்குவோம்) எங்களுடன் வருவார். இரவு 7-30 மணி வரை பல செய்திகளைப் பேசி 'அரட்டை' அடிப்போம். 7-45க்கு மாம்பலம் இருப்பூர்தி நிலையம் வந்து வண்டியேறி சைதையை அடைவோம். வண்டிக் கட்டணம் அக்காலத்து அரையணா (இக்காலத்து 3 காசு). சில சமயம் பூங்கா அருகில் அரசியல் கூட்டங்கள் நடைபெற்றால் அவற்றையும் செவிமடுப்போம். ஒரு சமயம் பேராசிரியர் கல்கியவர்கள் பேசியதை நினைவு கூர்கின்றேன். செய்திகளை துணிவாக எடுத்தியம்பும் நெஞ்சுரமும், ஆற்றொழுக்கான தமிழ்ப் பேச்சும், ஆராத தமிழ்க் காதலும், நாட்டுப்பற்றும் அவருடைய பேச்சில் வெளிப்பட்டதைக் கண்டு மகிழ்ந்தேன்; என் நண்பர்களும் மகிழ்ந்தார்கள்.

(5) திருச்சியில் படிக்கும்போது தேசியக் கல்லூரி தத்துவப் பேராசிரியர் **சீநிவாசசர்மா** என்பவரைக் கேள்விப் பட்டதுண்டு. மிகுபுகழ் பெற்ற பேராசிரியர் இவர் வகுப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவுகள் 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்ப மொழிவதாய்'[2] இருக்கும் என்று கேள்விப்பட்டதுண்டு. ஒருநாள் புதன்கிழமையன்று (எங்கள் கல்லூரி விடுமுறை) இவர் சொற்பொழிவைக் கேட்க வேண்டும் என்று தேசியக் கல்லூரியில் வட்டம் போட்டேன்; இவர் எடுக்கும் வகுப்பை அறிந்து கொண்டு தாழ்வாரத்தில் உலவினேன். ஓரைம்பது மாணாக்கர்கள் முன்னிலையில் உரை நிகழ்த்துவது போன்ற பெரிய குரலைக் கேட்டேன்; தாழ்வாரத்திலிருந்து கொண்டே நயாகரா அருவி பொழிவது போன்ற 'பேருரையை' அநுபவித்து மகிழ்ந்தேன். வகுப்பைப் பார்வையிடலாம் என்று தாழ்வாரத்தில் நடந்து சென்றபோது ஒரே ஒரு மாணவி மட்டிலும் வகுப்பறையில் அமர்ந்திருப்பதைக் கண்டு வியந்தேன். வானொலி, தொலைக்காட்சியில் பேருரை நிகழ்த்துவதுபோல் உரை நிகழ்த்தும் பேராசிரியரையும் 'கடைக்கண் நோக்கால்' கண்டேன்; மகிழ்ந்தேன். இந்த மாணவியும் புனித சிலுவைக் கல்லூரியைச் சார்ந்த ஒரு துறவிப் பெண் (Nun). பேராசிரியர் சொற்பொழிவை அநுபவித்து மகிழ வேண்டுமென்றே 'விதிவிலக்கு' பெற்று மாணவியாகச் சேர்ந்தார் என்று பின்னர்க் கேள்வியுற்றேன். அக்காலத்தில் பட்டப் படிப்பில் 'தத்துவமும்' விருப்பப் பாடமாக இருந்தது. ஆனால் மாணவர்கள் இதை விரும்பிப் படிப்பதில்லை.

பேராசிரியர் **சர்மா** அவர்கள் ஆண்டார் தெரு எண்-2 கொண்ட இல்லத்தில் வாழ்ந்து வந்தார்கள். நான்

---

2. குறள்-943

துறையூரில் தலைமையாசிரியாகப் பணியாற்றியபோது இவர் நட்பை நாடி நன்கு பழகி வந்ததுண்டு. மிக்க அன்புடனும் பொறுமையுடனும் எவர்க்கும் உதவுவார். இலக்கியத் திறனாய்வு பற்றி ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் எழுதிய '**இலக்கியத் திறனாய்வு**' என்ற நூலை எனக்கு அறிமுகம் செய்து வைத்த பெருமகனார் இவர். தவிர, இந்நூலின் முக்கிய பகுதிகளைக் காட்டி விளக்கமும் தந்தார். துறையூரிலிருந்து பள்ளிப் பணியாகவும் வேறு சொந்தப் பணியாகவும் திருச்சி வரும்போதெல்லாம் இவரைப் பார்த்து ஓர் அரைமணி நேரமாவது அளவளாவாது திரும்புவதில்லை. பேருந்து நிலையமும் ஆண்டார் தெருவிற்கு அடுத்து வடபுறமுள்ள 'பட்டர்வொர்த்' சாலையின் முகப்பில் இருந்தமையால் எனக்கு இவரைப் பார்த்துப் பழகுவது எளிதாக இருந்தது. இலக்கியத் திறனாய்வில் நான் அதிகமாக ஆழங்கால் பட்டது இவரது நட்பால் என்று சொன்னால் அஃது எள்ளளவும் மிகையுரையன்று.

# பின்னிணைப்பு-1

## அ. தமிழ் நூல்கள்

அதிவீரராம பாண்டியன் : **வெற்றி வேற்கை** (மர்ரே ராஜம் பதிப்பு)

அம்பலவாணக் கவிராயர் : **அறப்பளீசுவர சதகம்**

அருணகிரிநாதர் : **கந்தர் அலங்காரம்**

ஆழ்வார்கள் : **நாலாயிரத் திவ்யியப் பிரபந்தம்** (கி. வேங்கட சாமி ரெட்டியார் பதிப்பு)

இரத்தின நாயகர் அண் சன்ஸ் (பதி) : **விவேக சிந்தாமணி**

இராமலிங்க அடிகள் : **திருவருட்பா**-ஊரன் அடிகள் பதிப்பு (இராமலிங்கர் பணிமன்றம் 31,போயஸ்தோட்டம், சென்னை-600 086)

இறையனார் : **களவியல்** (நக்கீரர் உரை-கழகம்)

ஔவையார் : **கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி** (மர்ரே ராஜம் பதிப்பு)

கம்பர் : **கம்ப ராமாயணம் உரை** (வை. மு. கோ. பதிப்பு)

கவிமணி : **மலரும் மாலையும்** (புதுமைப் பதிப்பகம், காரைக்குடி)

குமரகுருபர அடிகள் : **நீதிநெறி விளக்கம்** (மர்ரே ராஜம் பதிப்பு)

குருஞானசம்பந்தர் : **சிவபோகசாரம்** (அருணை வடிவேல் முதலியார் உரை-தருமபுர ஆதீன வெளியீடு)

சங்கப்புலவர்கள் : **ஐங்குறுநூறு** (பொ. வே. சோம சுந்தரனார் உரை-கழகம்)

சங்கப் புலவர்கள் : **கலித்தொகை** இளவழகனார் எவிக்க உரை (பாகனேரி பதிப்பு)

சங்கப் புலவர்கள் : **குறுந்தொகை** (உ. வே. சாமிநாதய்யர்- உரை, பதிப்பு)

சங்கப் புலவர்கள் : **புறநானூறு** (உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு-பழைய உரையுடன்)

சமணமுனிவர்கள் : **நாலடியார்** (வை. மு. கோ உரை- பதிப்பு)

சிவப்பிரகாச அடிகள் : **நன்னெறி** (மர்ரே ராஜம் பதிப்பு)

**நீதிவெண்பா**-இளவழகனார் உரை (கழக வெளியீடு)

சுப்புரெட்டியார், ந : **கல்வி உளவியல்** (எஸ். வாசன் கம்பெனி, சென்னை-600 004)

சுப்புரெட்டியார், ந : **தமிழ் பயிற்றும் முறை** (மணிவாசசர் நூலகம், சிதம்பரம்-மூன்றாம் பதிப்பு)

சுப்புரெட்டியார், ந : **மணிவிழாமலர்** (1977)

தாயுமான அடிகள் : **தாயுமானவர் பாடல்கள்** (தருமபுர ஆதீன வெளியீடு)

தாராபாதி, கவிஞர் : **புதியவிடியல்கள்**

தாராபாரதி, கவிஞர் : **இன்னும்ஒருசு தந்திரப் போர்**

திருமூலர் : **திருமந்திரம்** (குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவை குண்டம்)

திருவள்ளுவர் : **திருக்குறள்** (பரிமேலகர் உரை-கழகம்)

தொல்காப்பியர் : தொல். எழுத்ததிகாரம் - நச்சினார்க் கினியர்உரை (கழகம்)

தொல்காப்பியர் : தொல்-பொருளதிகாரம் (இளம்பூரணர், நச்சினார்க்கினியர், போாசிரியர் உரைகள் - கழகம்)

பட்டினத்தடிகள் : **பட்டினத்தார் பாடல்கள்**

பரஞ்சோதிமுனிவர் : **திருவிளையாடல் புராணம்** (நாட்டார் உரை-கழகம்)

பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை : **ஸ்ரீபத்மகிரிநாதர் தென்றல்விடுதூது** (உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு)

பவணந்தி முனிவர் : **நன்னூல்காண்டிகை** (பதிப்பு ஆறுமுக நாவலர்)

பாரதிதாசன் : **பாரதிதாசன் கவிதைகள் முதற்றொகுதி** (செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம், புதுக் கோட்டை)

பாரதியார் : **பாரதியார் கவிதைகள்** (எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை 6, பிலிப்ஸ்தெரு, சென்னை-600 001)

மாணிக்கவாசகர் : **திருவாசகம்** (ச. தண்டபாணிதேசிகர் பதிப்பு-தருமபுர ஆதீன வெளியீடு)

மேத்தா, மு. : **காத்திருந்த காற்று**

விரகவிராயர் : **அரிச்சந்திர புராணம்**

**இதழ்கள்**

கல்கி-செப்டம்பர் 23 (1956)

**ஆ. ஆங்கில நூல்கள்**

Alexander Haddow : **On the Teaching of Poetry**

Tmile or Treatise on Education.

the New Dictionary of Thoughts.

பின்னிணைப்பு-2

# பொருட்குறிப்பு


## அ

அகத்திணைக் கொள்கைகள் 419
'அக்கினி தீர்த்தம்' 256
அட்லாண்டிக்கடல் 85
அ-தழை 14
அங்கமுத்து ஆச்சாரி 314
அதிகாயன் 241
'அடையாறு' 468
அதிவீரராம பாண்டியன் 412
அப்பர்தேவாரம் 269
அப்பாதுரைப் பிள்ளை கா, 492
அப்பாவு, எஸ். 319, 392, 393
அம்பலவாணக்கவிராயர் 23
அம்மாமண்டபம் 259
அரங்கசாமி 277
அரங்கசாமி ரெட்டியார், பா. 327, 367, 487
அரங்க நாதஅய்யர், வி.கே. 88, 127, 129, 130, 132
அரங்கசாமி அய்யங்கார், எஸ். 162, 186, 222
'அரசியல்வாதிகளின் திருவிளையாடல்கள்' 92
அரிசனர் 440
அரிச்சந்திர புராணம் 75, 82, 112
அரிச்சந்திரன் 114, 116, 121, 363
அரிஸ்டாட்டில் 145
அருணகிரியந்தாதி 75, 86
அருணகிரி ரெட்டியார் 324
'அரைக்கிராப்பு' 142
அலங்காநத்தம் 367
அலங்காநத்தம் மிட்டாதார் 327
அலங்கார புருஷர் 369
அலெக்ஸாந்தர் ஹேடோ 254
அழகிரிசாமி 307
அழுதலின் ஆழ் பொருள் 39
அறச்சாலை 475
அறப்பளிசுர சதகம் 23, 74, 82
அறிவியல் வரலாறு 412
அனந்த கிருஷ்ணன், என். 433

## ஆ

ஆகாயகங்கை 340
ஆங்கிலம் 281
ஆசிரியப் பணியின் சிறப்பு 252
ஆசிரியப் பண்பு 273
ஆசிரியர்பயிற்சிக்கல்லூரி 459
ஆசிரியப் பா 247
ஆட்டைப்பிடிப்பேன் கோனாரே 55
ஆணவமலம் 219, 220
'ஆண்குழந்தைத் தாலாட்டு' 245
ஆண்டார் தெரு 489, 490, 495
ஆதன் 260

ஆதன் அவினி 260
ஆதிகுடிவேங்கடராம அய்யர் உணவுவிடுதி 304
ஆதிகாலச் செயல்கட்குத் திரும்பும் கொள்கை 145
ஆதிசேஷன் 63
ஆதிநாதன் 466
ஆந்திரம் 481
ஆரணிகுப்புசாமி முதலியார் 153
ஆரோக்கியசாமிரெட்டியார் 402
ஆலத்துடையாம்பட்டி 348
ஆனந்தவிகடன் 195, 357
ஆனந்தவிகடன் அகராதி 357, 360

இ

இடைநிலைவகுப்பு 281
இதிகாசங்கள் 134
இந்திரசித்து 241
இந்திரன் 113
இயக்கவகையியல் 295
இயற்கணிதம் 270, 290
இரகுபதி ரெட்டியார் 137
இரகுநாத அய்யங்கார், என். பேராசிரியர் 482
இரண்டாம் ரிச்சர்ட்ஸ்-283
இரணியன் 321
இராசாம்பாள் 329, 334, 364
இராதா 127
இராகவேந்திரராவ் 263
இராசகோபால், கி 63, 127, 152, 154
இராசகோபாலய்யர், T.S 174, 176, 488
இராசமாணிக்கம் 63, 127
இராமகிருஷ்ணதபோவனம் 255
இராமமூர்த்தி 484
இராமகிருஷ்ணன் எஸ். டாக்டர் 460
இராமகிருஷ்ணன், சி. கே. 433
இராமச்சந்திர அய்யர் கே. 186, 187, 193, 196, 205, 207, 254 284, 289, 398, 427, 437
இராமச்சந்திரஅய்யரின் தன்னலமற்ற பணி 191
இராமச்சந்திர ஆச்சாரி 311, 312,313, 315, 322, 354, 363, 473
இராமச்சந்திர ரெட்டியார் 366
இராமசாமி 266
இராமசாமி (வி) 63
இராமசாமி (பூ) 61
இராமசாமி அய்யர் A. 164, 174, 177, 180
இராமநாதன் 269
இராமநாதபிள்ளை T.K. 196, 212, 216, 219
இராமுடு (செ) 127
இராமுடு (பி) 127
இராமன் 239,
இராமசாமி உடையார் (நடுத்தம்பி) 322
இராமசாமிரெட்டியார், ஆ, பெ. 311, 312, 313‘315, 322,
இராமசாமி ரெட்டியார், பெ. 462, 463
இராமசாமி ரெட்டியார் (பொட்டணம்) 342, 343
இராமசாமி ரெடியார் 271.
இராமசாமி ரெட்டியார் (சின்னகுண்டன்) 324

இராமாநுசரெட்டியார், பெ 373
இராமலிங்கம், எஸ், டாக்டர் 460
இராமலிங்கம், இரா 267
இராமாயணம் 152, 185, 244
இராமலிங்க அடிகள் 212, 268
இராமமூர்த்தி 484
இராமேசுவரம் 259
இராயப்பேட்டை 459
இராவணன் 241
இராஜாஜி 197, 404
இருதயசாமிரெட்டியார் 402
இலக்கியக்கழகங்கள் 193
இலக்கியத்திறனாய்வு 496
இலந்தைப்பழம் 157
இலக்கியத்தின் பேழைகள் 307
இலக்கியத்திறனாய்வு 254, 496
இலிங்கிசெட்டியார் 19, 21, 31, 98, 123, 128, 152
இல்லறவாழ்க்கை 371
'இல்லற நெறி' 473
இளங்கோ 198
இளம்பிள்ளை வாதம் 242
'இளவட்டங்கள்' 278
இறையனார்களவியல் 370
இறைவழிபாடு 267
இன்னிசைக் கச்சேரி 243

ஈ

'ஈதல் இயல்பு' 222
ஈ.வெ ரா. 307
ஈ.வெ. இராமசாமிப் பெரியார் 452

உ

உச்சிப்பிள்ளையார் கோயில் 374
உடையார்கள் 440
உடையார்மார்கள் 449
உணர்ச்சியின் கொடுமுடி 249
உணவுமுறைகள் 18
'உதயசூரியன்' 129
உயர்வுச் சிக்கல் 87
உருக்குமிணிகல்யாணம் 279
உருக்குமிணிப் பிராட்டி 240
உருவம் அமைத்தல் 38
உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்தல் 222
'உர்ராங் உட்டாங்' 421
உலகத்து நாயகி 441
உலகநாத பண்டிதர் 338
உள்ளூர் பாபுரெட்டியார் 450

ஊ

ஊமைப்படக்காட்சிகள் 160
'ஊமையன்' 218
ஊரணை 140, 154
ஊழல்கள் 275
ஊற்றுப் பேனா 181

எ

எங்கள்வருவாய் 79
எங்கள் வறியநிலை 77
'எடுப்புசாப்பாடு' 375
'எதுமலையம்மாள்' 76
எராட்சாமியார் 293
எரிந்தகட்சி 50
எரியாதகட்சி 50
எருமைப்பட்டி 334
எழுஞாயிறு 129

ஏ

ஏழுமலையான் 407
ஏழுமலையான் திருவருள் 172
ஏழைக்கட்சிக்காரர்கள் 137
'ஏழைவேஷம்' 404

ஐ

ஐங்குறுநூறு 258
ஐயம்பாளையம் 187

ஒ

ஒக்கரை 329
ஒட்டஉணர்தல் 117
ஒத்திகை 457
ஒத்துணர்ச்சி 116, 117
ஒருமைப்பாட்டு உணர்ச்சி 481
ஒலிநயம் 242
ஒவ்வாத கூறுகள் 265

ஓ

'ஓதற்பிரிவு' 464
ஓமாந்தூர் 67

ஔ

ஔவைப்பாட்டி 397
ஔவையார் 90

ஃ

ஃபிராய்டு 308
ஃபிராபெல் 386

க

கஞ்சப் பிரபுக்கள் 454
கடாத் தீர்வுக் கணக்கு 208, 211
கடைக்கண் நோக்கு 432
கட்டபொம்மன் 225
கட்டுரை எழுதுதல் 287
கணபதி,126, , 161
கணபதி ரெட்டியார் 188
கணிதம் 289
கணேசன், சா 123
கண்ணன் 239, 249
கண்ணன் பிறப்பு, 45, 46
கண்ணன் பிறப்புத் திருவிழா 44
கண் திருஷ்டி 439
கதி மோட்சம் 190
கதிரேசன் செட்டியார், பண்டிதமணி 380
கத்திரிப் பூ மேலங்கி 242
கந்தசாமி, கம்பவுண்டர் 452, 453
கந்துக்கார அருணாசலம் 324
கந்துவட்டி கந்தசாமி 206
கம்பர் 245
கம்பன் 198, 241
கரக ஆட்ட விழா-43
கரட்டாம்பட்டி இராமசாமி 149
கருங்கோபுரம் 271
கருடமங்கலம் 37
'கருணரசம்' 120
கருப்பண்ணன் 172
கரும்பலகையின் பயன் 131
கர்நாடகம் 481
கலித்தொகைப் புலவன் 276
கலிப்பா 247
கலிலியோ 413
கல்கி 197
கல்வி உளவியல் 155, 156
'கல்வி கற்றல்' 419
கல்வி முறை 20,
'கல்விப் பருவம்' 419
கவிதையநுபவம் 253
கவிதையின் கொடு முடி 253
கவிமணி 93
கள்ளச்சாவி 136
கவுண்டர்மார்கள் 449
கற்பித்த முறை 83, 89
கண்ணன் 247, 249
கன்னபருவம் 247
கஜேந்திரன் 249

**கா**

காசியப்ப்பாராவுத்தர் ஸ்டோர்ஸ் 280, 301, 305, 307
காட்டுப் புத்தூர் 369
காந்தியடிகள் 123, 399
கார்த்தி சுற்றுதல் 52
காப்பர்னிகஸ் 4'3
காமன் பண்டிகை 48
காமாட்சியம்மன் 141
காம்பர்ட் சாமியார் 281, 291
கார்ட்டி 402
காரைக்குடி பயிற்சிக் கல்லூரி 486
கார்ட்டி சாமியார் 292
கார்லைல் 409
'காலமும் இடமும்' 222
கால் குலஸ் 427
கால் தூக்கும் கணக்கப் பிள்ளை 56
காளமேகம், டாக்டர் 451, 476
காஷ்மீரம் 307

**கி**

'கிடுக்கட்டி' 71
கிட்டிப்புள் அடித்தல் 147
கிட்டிப்புள் விளையாட்டு 52, 53
கிராப்பு ஆசை 142
கிறிஸ்டோபர் பயிற்சிக் கல்லூரி 459
கிருட்டிணசாமி, மைனர் 194
கிருஷ்ணசாமி, இரா 396
கிருஷ்ணசாமி அய்யங்கார் 281, 288
கிருஷ்ணசாமி செட்டியார், M 460
கிருஷ்ணசாமிரெட்டியார், மு. 462, 463
கிருஷ்ணசாமி ரெட்டியார் (பாகவதர்) 346
கிருஷ்ணசாமி ரெட்டியார், வீ.சி 395
கிருஷ்ணசாமி ரெட்டியார், மு. 345
கிருஷ்ண மூர்த்தி அய்யர், பி. எஸ் (வக்கீல்)-490
கிருஷ்ண மூர்த்தி 152
கிரௌஞ்சப் பறவைகள் 120

**கீ**

கீச்சி ரெட்டியார் 152

**கு**

குஞ்சு பிள்ளை 63
குடியரசு' 195, 395
குடை இராட்டினம், 472
குண்டுத்தம்பதியர் 377
குத்தூசி குருசாமி 305
குப்பம் மெத்தை 455
குமரகுருபர அடிகள் 412, 413
'குமரன்' 195, 395
குமாரவீரய்யா 228, 230, 395
கும்பகருணன் 241
கும்பகோணம் 468
குருக்கள் அய்யா 251
குருசாமி முதலியார், டாக்டர் 474, 475, 477, 480
குருஞான சம்பந்தர் 354
'குருட்டுப்பாடம்' 29
குருசாமி ரெட்டியார், பேராசிரியர் 482, 484, 485, 486
குலசேகராழ்வார் 244, 476, 479

குலாலயர் 139
குறள் 19, 368, 370, 437,

**கூ**

கூடலூர்க் கிழார் 260
கூடுதுறை பவானி 255
கூர்தல் அறக் கொள்கை 419

**கே**

கே. ஆர். 262, 267,
கேரளம் 481

**கொ**

கொடுமுடி சுந்தராம்பாள் 90
'கொம்புகாத்தான்' 136, 155
கொள்வோன் கொள்வகை22

**கோ**

கோகர்ப்பம் 240
கோசிகன் 113
கோட்டாத்தூர், 8, 10, 65, 74, 75, 88, 97, 173, 317, 319, 338, 367, 402
கோணகணிதம் 290
கோபால் 61
கோபால் ரத்தினம் 287
கோயில் வழிபாடு 138
கோலிகுண்டு விளையாட்டு52
கோவிந்தசாமி பிள்ளை 196
கோவிந்தராவ் (புத்கடை)181
கோவிந்தராவ் (பேராசிரியர்) 281, 296
கோவிந்தராஜ கல்யாண மண்டபம் 45
கோபால கிருஷ்ணமாச்சாரியர் 232 323;

**ச**

'சங்ககாலம்' 189
சங்கத்தமிழ் 91
சங்ககாலவள்ளல்கள் 225
சடைப் பின்னல் 36
'சண்டித்தனம்' 383
சண்முக சுந்தரம்பிள்ளை 196, 197,
சதாசிவரெட்டியார், ஞானி 366
சதுரப் பின்னல் 36
சத்திய சோதனை 399
சந்தானம் அய்யங்கார் 207
சந்திர சேகரய்யர் 82, 88, 98
சந்திரமதி 122
சப்தரிஷி ரெட்டியார் சே.சி. 369, 436, 488
'சமூகத் தொண்டு' 21
சரசுவதி பூசை 32, 34
'சரசுவதி பண்டாரம்' 306
சரவணமுதலியார், அ. மு. 306
சர்மா, பேராசிரியர் 495
சவரிமுத்து, பேராசிரியர் 293 294
சனகாதி முனிவர் 32

**சா**

'சாதி ஆணவம்' 62
சாமி நாதய்யர், உ. வே. 260, 306
சாமுவேல்பிள்ளை 63, 125, 126,
சாம்பசிவ ரெட்டியார், 300, 331, 406
சாம்பமூர்த்தி, எஸ், 66, 185
சாய்வு நாற்காலி 469
சாரநாதன், பேராசிரியர், 307,
'சார்ந்ததன் வண்ணமாதல்' 285
சார்ல்ஸ் பாயில்ஸ் விதி 294

**சி**

சிங்காரவேலுமுதலியார், ம. 488

சிங்க், பேராசிரியர் 482, 483
சிதம்பரம் 63, 127, 143
சிதம்பர அய்யர் 123
சிதம்பர ரகசியம் 194
சித்பவானந்த அடிகள் 255, 469
சிவராம கிருஷ்ண அய்யர் 261, 264, 269,
சினிமா வசனம் 456
'சிற்றின்பம்' 419
சிவாஜி 225
சின்னகாமாட்சி 62
சின்னசாமி அய்யர் 281
சின்னபண்ணை ரெட்டியார் 366
சின்ன மடம் 169

சீ

சீதாப்பிராட்டி 239
சீதா கல்யாணம் 279
சீநிவாச சர்மா பேராசிரியர் 495
சீநிவாசன் பேராசிரியர், 281, 289, 301, 433
சீமான் பாதர், பேராசிரியர், 482

சு

'சுக ஜன்னி' 149
சுக்கிரீவன் 119
'சுதேசமித்திரன்' 195, 305
சுந்தரரெட்டி, இ. வி. 367
சுந்தராம்பாள், கே. பி. 356
சுப்பண்ணன் 374, 418, 426,
சுப்பராய உடையார் 84, 86 88
சுப்பிரமணியன், T. D. 484
சுப்பிரமணிய அய்யர் 174
சுப்பிரமணிய அய்யர், N 195 226
சுப்பிரமணியன், எஸ். ஆர். 466
சுப்பு அய்யர், 63
சுப்பு ரெட்டியார், ந. 28
சுப்பையா, A. 277
சுயமரியாதைக் கட்சி 452
சுருங்கைவழி 354
சுவர்நிலைத் தட்டு 187
'சுற்றுலா' 271

சூ

சூசையப்பர் கல்லூரி 276, 289, 292, 293, 392.
சூசையப்பர், A. C. 428, 429 430, 433

செ

செங்கமலம் பிள்ளை 437
செங்காட்டுப்பட்டி 277
செப்பலோசை 247
செல்லமுத்து 62
செல்லம்மாள் 62
செல்லபாப்பா 63, 64, 167
செல்லய்யா 162, 222, 226, 229

சே

சேணியர் தெரு, 139
சேதுபிள்ளை, ரா. பி. 388
சேந்தமங்கலம் 334

சை

சைதாப்பேட்டை 265, 459
'சைவசமய விளக்கு' 473

சொ

சொக்கலிங்கன், ராய. 123
சொந்தப் பண்ணை 80

**சோ**

சோதனை முடிவுகளில் தவறுகள் 431
சோமசுந்தர அய்யர், எஸ் 460, 466
சோமசுந்தரம் 63

**ஞா**

ஞானசம்பந்தப் பெருமான் 318
ஞானி (பெ) கிருஷ்ணசாமி ரெட்டியார் 72
ஞானி நல்லப்ப ரெட்டியார் 343
ஞானியார் பரம்பரை 8
'ஞானோபதேசம்' 85

**த**

'தகுந்த சூழ்நிலை' 222
ததியோதனம் 262
தந்தை பெரியார் ஈ வே. ரா 307, 375
'தமிழ் இயக்கம்' 202
'தமிழ் காதல்' 388
தமிழ் பயிற்றும் முறை 28, 180
தம்பையா 380
தருமசேனர் 456
தற்குறிப்பேற்ற அணி 236
தனலட்சுமி 63
'தனிகாட்டு ராஜா' 85, 167
'தன்முனைப்பு' 62

**தா**

தாண்டவராய பிள்ளை 187
தாமோதரன், கு. 395
தாயுமான அடிகள் 188
தாயுமான சுவாமி ஆலயம் 374
தாரா பாரதி, கவிஞர் 189
தாழ்வுச் சிக்கல் 87
'தான்தோன்றிகள்' 191

**தி**

தியாகராஜன் பி. பி. கே. 372
'திருக்குறள்' 194, 321
திருச்சி 274
திருநாவுக்கரசர் 456
திருப்பதி 339
திருமங்கையாழ்வார் 8, 254
திருமந்திரம் 264
திருமூலர் 264
திருவரங்கம் 259
திருவாசகம் 413
திரு. வி க. 305, 410
'திருவிடைச்சான்' 72
திருவிளையாடல் 413
திருவிளையாடல் புராணம் 413
திருஷ்டி 262
திலகவதியார் 456
தினகரன் 275

**து**

துடுக்கான இளைஞர்கள் 183
துண்டுக்குறிப்புகள் 301
துரைசாமி, இ. மு. 383
துரைசாமி(த) 61
துரைசாமி (மோ) 63
துறையூர் 161, 173, 377
துறையூர் ஜமீந்தார் 324
துன்பியல் நாடகங்கள் 146

**தூ**

தூய பெருஞ்சோதி 318

**தெ**

தென்முகக்கடவுள் 85

**தே**

தேசியக் கல்லூரி 307
தேசிக்காச்சாரி, சர். டி. 434, 438
தேசிகாச்சாரி, பேராசிரியர் 482
'தேர்வுக் காய்ச்சல்' 183
தேர்வுமுறை 181

**தொ**

தொண்டி 260
தொலையானத்தம்அம்மாள் 164
தொல்காப்பியர் 247
தொல்காப்பியனார் 419

**ந**

நச்சினார்க்கினியர் 221
நடராசன், க. 188
'நடராஜா சர்வீஸ்' 139
நடேச முதலியார், மு. பேராசிரியர், 194, 281
நடேசய்யர், எம். எஸ். 396, 397
நடைமுறைத்திறன் 333
நடேசன் 484
நந்தி ரெட்டியார் 435, 436
நமச்சிவாய முதலியார், கா. 22, 31
நரசிங்க அவதாரச் சிறப்பு 321
நல்லப்ப ரெட்டியார், ஞானி. 8
நல்லப்பரெட்டியார், பண்ணை 9
நல்லப்ப ரெட்டியார், குணம் 195, 452
நல்லப்ப ரெட்டியார் (ம) 316, 357
நல்லப்ப ரெட்டியார் திண்ணை 318
நல்லம்மாள் 165
நல்லிபாளையம் ரெட்டியார், ஓட்டல் 168
'நல்லூர்த்திருமணம்' 318
நல்வழி 89, 92, 394
நவராத்திரி விழா 37
நளபாகம் 450
நல்னூலாசிரியர் 221
நன்னூல் 425
நன்னூல் காண்டிகை 396
நன்னெறி 94, 95

**நா**

நாகம்மாள் 438, 450
நாகரத்தினம் அய்யர், E. B. 164, 174, 176
'நாடக ஆட்சி முறை' 190
நாமக்கல் 321, 355
நாமக்கல் நரசிம்ம சுவாமி தரிசனம் 320
நாரணமங்கலம் 188
'நாரதர்' 357
நாராயணன் 318
நாராயண அய்யர், கே. 466
நாராயணசாமி, அரசு 396
நாராயணன், கோ 152
நாராயணசாமி, மு. 63, 127
நாராயணசாமி பிள்ளை, T. M. 194, 439, 488
நாராயணசாமி அய்யர், A. 156. 217, 248, 220
நாலடியார் 408
நாவலடிப்பட்டி 342
நாவற்பழம் 157

**நி**

நிலைபொருளியல் 295
நிழலாட்டம் 159

'நினைவு' 424
நீ
நிதிமன்றம் 441
நீதிநெறி விளக்கம் 412, 415
நீதிவெண்பா 95, 97, 366
நீந்தக் கற்றது 51
'நீராகாரமடம்' 315, 380
நீலாவதி அம்மையார் 307
நீலாவதி ராமசுப்பிரமணியம் 307, 491
நூ
நூலகப் படிப்பு 415
நூலகம் 387
நெ
நெய்உண்ணச் செய்தமுயற்சி 263
நெய் தோசை 163
ப
'பகீரதப் பிரயத்தனம்' 382
''பக்த ராமதாஸ் சரித்திரம்' 279
பக்தவிஜயம் 152, 185, 244
பக்திப் பனுவல்கள் 135
'பசனைக்குழு' 71
படை அணிவகுப்பு 380
படைப் பயிற்சி 390
படைப்பாற்றல் 33
'பட்டணப் பிரவேசம்' 193
பட்டம் விடுதல் 147
பட்டிரெட்டியார் 82
'பணநாயகம்' 190
'பணச் சுருக்கம்' 43
'பண வீக்கம்' 403, 481
பண்ணையார் வீடு 8
பம்பர விளையாட்டு 52
பயபக்தி 87
பரஞ்சோதி முனிவர் 134
பரத்தையர் 259
பரத்தையொழுக்கம் 258
பல்லாவரம் 391
பவணந்தியார் 425
பவித்திரம் 342
பள்ளி நடைமுறை 25
பழநி முருகய்ய நாட்டார் 395
பழைய பாளையம் 341, 342
பழைய மாணாக்கர் கழகம் 194
பனகல் பூங்கா 494
பா
பாடவேளைப்பட்டி 131
பாஞ்சாலி சபதம் 309
பாதாள கங்கை 340
பாபவிநாசம் 340
பாரதம் 152, 185, 244
பாரதிதாசன் 245
பாரதியாரின் கல்வித் திட்டம் 197
பாரதியார் 376, 414, 442
பாரதியின் பாடல்கள் 309
பார்த்தன் 310
பாலசுப்பிரமணியப் பிள்ளை 261, 398, 400
'பாலது ஆணை' 341
பால்வளம் 16
'பாஷியம்' 329
பி
பி.டி.ஐ. அலுவலகம் 323
பிட்சு 377
பிரகலாதன் 321
பிரசண்டவிகடன் 195
பிரசன்ன முத்துவேங்கடாசல துரை 367, 368

பிரசன்னவிஜய வேங்கடாசல
துரை 367. 368
'பிரம்மசூத்திரம்' 329
பிராரத்த கருமம் 8, 159, 318
'பிராமணத்துவம்' 385
பிருந்தாவனம் 307
பிள்ளையார் சதுர்த்தி 32, 91
பிள்ளையார் பந்து விளை
யாட்டு 54
பின்னல் கோலாட்டம் 35

பீ

பீச்சுகுழல் விளையாட்டு 52

பு

புதிய ஆசிரியர் 83
புதிய கதிரோன் 125
புத்தர் பெருமான் 336
புநிர்மானங்கள் 290
புத்தனாம் பட்டி 66, 141
புராணங்கள் 135
புருஷகாரம் 236
'புவியியல் களஞ்சியம்' 226
புனித சூசையப்பர் கல்லூரி
387, 392, 417, 525

பூ

'பூங்கேணி' 7
பூசாரி ரெட்டியார் 61

பெ

'பெண்குழந்தை தாலாட்டு'
245
பெரகம்பி 3, 61, 63, 65, 139,
146. 148, 319
பெரிய காமாட்சி 72
பெரியாழ்வார் 72, 278
பெரியார் வழிபாடு 170
'பெருங்குடும்பம்' 192
பெருமாள் அய்யா 169, 170
பெருமாள் நாயுடு 174
பெருமாள் ரெட்டியார் 279
'பெரியான்' 325
பெஸ்டலாஸ்ஸி 386

பே

பேக்கன் 410
பேதி மருந்து 146
பேயாழ்வார் 475

பொ

பொட்டணம் 342, 345
பொட்டணம் இராமசாமி
ரெட்டியார் 342
பொய்யுரைகளின் களஞ்சியம்
225
பொறியியல் கல்லூரி
வளாகம் 468
பொன்னுசாமி ரெட்டியார்
327, 367

போ

போரூக்கம் 146
'போலச் செய்தல்' 33
போஜன் 62

ம

மணியக்காரன் வீட்டுத்
திண்ணை 329, 357
'மணியாரன் மகன்' 325
'மணி அய்யர்' 196, 226
மணிவாசகப் பெருமான் 192,
413
மணிவாசகர் 414
மதிப்பெண் ஊழல் நாடகம்
275
'மதிப்பெண் வீக்கம்' 481
மயன் வேலை 125
'மருந்தனைய தங்கை' 11

மருதத்திணைப் பாடல்கள் 256
மருத்துவ நியாயம் 422
மலபார் விடுதி 308
மறைமலையடிகள் 306, 307, 388
மறைத்திரு ஹாஸ் 433
'மனத்தைத் தயாரித்தல்'222
மனமுறிவு 416

மா

மாணிக்கம், கே.ஆர். 460, 370
மாணிநிலை 467
மாண்டிசாரி 386
மாரியம்மன் திருவிழாக்கள் 442
மாரியம்மன் திருவிழா 441, 448, 450, 457
மாரியம்மன் விழா 444
மாலைக்கண் 141
மாவட்ட நூலகம் 411

மி

மில்ட்டன் 197
மிஸ்டர் குண்டு 377
மிஸஸ் குண்டு 377
மிஸ்டர் நரி 270
மிஸ்டர் நெய் 270

மு

முசிறி 259
முத்துக்காபட்டி 342, 396
முத்து கிருஷ்ணன், என்.வி. 372
முத்துசாமி பிள்ளை எம். 437
'முத்திநெறி' 473
முத்துவேங்கடாசலதுரை 487
முத்து நல்லப்ப ரெட்டியார், சி 319, 395
முத்து ரெட்டியார் (பெரிய குண்டன்) 324
முத்தியாலு ரெட்டியார் 345
'முயல் வேட்டை' 7
'முருகப்பா, சொ. 123
முலைப்பால்' 197
'முறப்பாடு' 137, 138
'முறைவைப்பு' 25, 98
முன்னறிவுத்திரள் 205, 296

மெ

மெய்யுணர்வுக்கல்வி 134
மெஸ்டன் பயிற்சிக் கல்லூரி 459

மே

மேட்டுச் சிந்தாமணி 315, 380
மேட்டூர் 352
மேட்டூர் அணை 348
மேட்டூர் சுற்றுலா 270
மேஜர்' 422

மொ

மொட்டை ரெட்டியார் 61
மொழியாக்கப் பயிற்சிகள்288

மோ

மோன நிலை 134

ய-வகை

யாப்பருங்கலக்காரிகை 396
யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை 260
யுங் 308

ர-வகை

ரங்கராஜு 153
ரவிவர்மாபடம் 356
ராமுடு 152
ரிச்சர்ட்-டி-பாரி 410

ரிச்சர்ட்ஸ், ஐ, ஏ. 496
ரூஸோ 212, 386
ரெட்டியார் சமூகம் 190, 327
ரெட்டிகுல வள்ளல்கள் 187
ரெட்டிஜன சங்கம் 366

**வ**

'வக்கீல் வாதம்' 197
வசிட்டன் 113
வஞ்சிப்பா 247
வடகலைத் திருமண்காப்பு 223
வடுவூர்துரைசாமிஅய்யங்கார் 153
வண்ணம் 247
வரகுபாடி கிருஷ்ணசாமி 61
வரகூர் இராமசாமி ரெட்டியார் 279
வரதட்சிணை 325, 338
வளர்ச்சிப் பருவங்கள் 150
வளைகோடு அமைப்பு 272
வல்லத்தரசு 307
வள்ளுவப் பண்டாரம் 314
வள்ளுவர் 358
வள்ளுவர் வாக்கு 253
வள்ளுவன் 198
வள்ளுவர் வாய்மொழி 323
வனைவழி 212

**வா**

வாகணை 256
வாக்குண்டாம் 89
வாங்கிபாத் 264
வாசுதேவரெட்டியார் V. 365
வாலி 238
வாலிவதை 236
வால்ட்டயர் 386
வால்மீகி பகவான் 120
வயக்குள் படித்தல் 134
வாழ்க்கை ஆயத்தக் கொள்கை 145

**வி**

'விட்டில் பூச்சிகள்' 420
விசுவநாதன் கீ. ஆ-பெ. 307
விசைக்குழாய் 359
விஞ்சு ஆற்றல் கொள்கை145
விடுதலை 325
விதிமுருவறை 234
விநாயகர் அகவல் 29, 91
விநாயக தாமோதர சாவர்க்கார் 225
விருந்துப் பண்டம் 378
விருத்தசாலம் ஜி.எம். 261, 371, 398, 399, 400, 401
விருப்பப் பாடங்கள் 196
'விலைப்பால்' 197
வில்லிபாரதம் 247
வில்லிபுத்தூரார் 245, 247
வில்லியம் ஜீன்ஸ், சர் 414
வில்லியின் உணர்ச்சி 248
விவேக சிந்தாமணி 67, 74, 143, 170, 171
விவேகாநந்த வித்தியாவனம் 255, 469
விளையாட்டு முறை 144
வினைப் பயன் 451
விஜயதசமி 38
விஜயவேங்கடாசலதுரை 487

**வீ**

வீட்டுவேலை 131, 299
வீட்டு வேலைகள் 165
வீரம ரெட்டி 318
வீரராகவ அய்யர், கே.சி. பேராசிரியர் 482 483, 484

வீரவழிபாடு 251

வெ

வெட்டியான்' 154,
வெப்ப நீரோட்டம் 85
வெள்ளரிக்காய் விருந்து 68
'வெள்ளைக் காரன்' 155
வெறிப்போர்க் குரல் 202
வெற்றி வேற்கை 337, 347
வெற்று வேட்டுகள்' 202

வே

''வேங்கடம்'' 407
வேங்கட உணவு விடுதி 375
வேங்கடாசலம் 166
வேங்கடாசலம் பிள்ளை, கரந்தை 388
வேங்கடாசலபுரம் 277, 299
வேங்கடசாமி நாட்டார், ந. மு. 308
வேங்கட சுப்பையா செட்டியார் மளிகைக்கடை 181
வேணுகோபால் 170, 171
வேதியியல் 296
வேப்பேரி 459
வேலூர் வாத்தியார் 82, 85, 86. 88, 91, 97, 98, 119, 121
வேமனர் 454

வை

'வைதிகமுறை' 375
வையாபுரி 489

வடமொழி

ஜம்புலிங்கக் குருக்கள் 242, 247, 395
ஜனதா டாக்டர் 374
'ஜனநாயகம்' 181
ஜனகராஜன்' 365
ஜான்ட்யூவி 386
ஜான்சன் 409
ஜாதிப்பகுதி 189
ஜீவானந்தம் 307, 491, 492
ஜெரோம்- டி-சௌஸா 382, 488, 490
ஜெரோம் சாமியார் 293, 383 434
ஷேக்ஸ்பியர் 197
'ஸ்வான் இங்கி' 181
ஹாஸ்சாமியார் 429
ஹார்பார்ட் 222

## பேராசிரியர்

## டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம்:**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

**இலக்கியம்:**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியங்களில்—அறம், நீதி, முறைமை,

**சமயம், தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள் :**

18. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
19. சிலநோக்கில் நாலாயிரம்
20. வைணவமும் தமிழும்
21. சைவசமய விளக்கு
22. ஆன்மிகமும் அறிவியலும்
23. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
24. கலியன் குரல்
25. கீதைக் குறள் (பதிப்பு)
26. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
27. கீதைப் பொழிவுகள்
28. கண்ணன் துதி
29. ஆண்டாள்பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)

**(ஆ) திருத்தலப் பயண நூல்கள்**

30. மலைநாட்டுத் திருப்பதிகள்
31. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
32. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
33. வடநாட்டுத் திருப்பதிகள்
34. சோழநாட்டுத் திருப்பதிகள்-முதற்பகுதி (த.அ.ப. பெற்றது)
35. சோழநாட்டுத் திருப்பதிகள்-இரண்டாம்பகுதி (ஷை)
36. தம்பிரான் தோழர்
37. நாவுக்கரசர்
38. ஞானசம்பந்தர்
39. மாணிக்கவாசகர்

**திறனாய்வு:**

40. பாட்டுத் திறன்
41. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
42. அகத்திணைக் கொள்கைகள்
43. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
44. கண்ணன்பாட்டுத் திறன்
45. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
46. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
47. குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு
48. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
49. ஆழ்வார்கள் ஆரா அமுது
5υ. விட்டு சித்தன் விரித்த தமிழ்

**வரலாறு, தன்வரலாறு:**

51. நினைவுக் குமிழிகள் - முதற் பகுதி
52. நினைவுக் குமிழிகள் - இரண்டாவது பகுதி
53. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
54. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
55. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
56. வேமனர்
57. குரஜாட
58. மேகானி
59. சி. ஆர். ரெட்டி
60. தாயுமான அடிகள்
61. பட்டினத்தடிகள்
62. வடலூர் வள்ளல்
63. பிரவாதி பயங்கரம்
64. மலரும் நினைவுகள்

**அறிவியல்**

65. மானிட உடல்
66. அணுவின் ஆக்கம்
67. இளைஞர் வானொலி
68. இளைஞர் தொலைக்காட்சி
69. அதிசய மின்னணு
70. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
71. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
72. அம்புலிப் பயணம்
73. தொலை உலகச் செலவு
74. அணுக்கரு பெளதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
75. இல்லற நெறி
76. வாழையடி வாழை
77. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
78. வானமண்டலக் காட்சி

**ஆராய்ச்சி**

79. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
80. வடவேங்கடமும் திருவேங்கடமும்.
81. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
82. Studies in Arts and Sciences : (61st Birth Day Commemoration Volume)
83. Collected Papers.

# பிழை—திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 6 | நல்லப்ப செட்டியார் | நல்லப்ப ரெட்டியார் |
| 24 | 9 | முகங்கடுத் திருவராயின் | முகங்கடுத் திடுவராயின் |
| 56 | 2 | நரியனராகவும் | நரியனாராகவும் |
| 60 | 22 | அடைவேண்டிய | அடைய வேண்டிய |
| 75 | 24 | கொட்டகைத் தருகிலிருந்த | கொட்டகைக்கருகி லிருந்த |
| 81 | 19 | குறுகிட்டது | குறுக்கிட்டது |
| 85 | 8 | கொள்ளா; | கொள்ளா |
| | 24 | புலத்தில் | புறத்தில் |
| 92 | 24 | அரசிரல்வாதிகள் | அரசியல்வாதிகள் |
| 102 | 15 | அப்ாறப்பட்டவை | அப்பாறப்பட்டவை |
| 128 | 12 | சகமாக | சுகமாக |
| 174 | 4 | இருப்பூர்த்தி திருச்சி இலால்குடி குளித்தலையில் உள்ள பள்ளிகள்ில் இரயில் போக்கு வரத்து உள்ள ஊர்களிலிருந்து வரும் சிறுவர்கள் மட்டிலுமே... | திருச்சி இலால்குடி குளி தலையில் உள்ள பள்ளி களில் இருப்பூர்திப் போக்குவரத்து உள்ள ஊர்களிலிருந்து வரும் சிறுவர்கள் மட்டிலுமே |
| 176 | 8 | மாணாக்ர்களைத் தட்டி கொடுக்கும் | மாணாக்கர்களைத் தட்டிக் கொடுக்கும் |
| 189 | 21 | ஒழிப்பில்பெரி | ஒழிப்பில் பெரிய |
| 194 | 12 | செல்வ குடும்பத் தைச் | செல்வக் குடும்பத்தைச் |
| 195 | 26 | N. சுப்பிரமணிய அய்ாய | N. சுப்பிரமணிய அய்யர் |

| | | | |
|---|---|---|---|
| 202 | 13 | விளம்பரங்கள் | விளம்பரங்கள் |
| 203 | 9 | தமிழிலேய | தமிழிலேயே |
| 206 | 10 | விவரங்களைக் | விவரங்கள் |
| 211 | 14 | கோ 1, BC — கோ 1, CB) | (கோ 1, BC—கோ1, CB) |
| 222 | 15 | சொல்லய்யா | செல்லய்யா |
| 228 | தலைப்பு | குமார வீரய்யா | குமார வீரய்யர் |
| 285 | 28 | நிரைத்து | நிறைத்து |
| 302 | 17 | பழக்கம் | (சொல்லை நீக்குக) |
| 308 | 26 | உணவுக்காக | உணவுக்காகத் |
| 313 | 19 | இராமசாமி செட்டியார் | இராமசாமி ரெட்டியார் |
| 321 | தலைப்பு | நிம்ழ்ச்சிகள் | நிகழ்ச்சிகள் |
| 325 | 11 | ஆலாத்துடை யாம்பட்டி | ஆலத்துடையாம்பட்டி |
| 332 | 4 | பெறவில்லை | பெறவில்லை; |
| 417 | 11 | கங்வியை | கல்வியை |
| 426 | 15 | காலை மணிக்கே பசி ஏழு | காலை ஏழு மணிக்கே பசி |
| 427 | 29 | நான்கு | மூன்று |
| 440 | 23 | அரிசன்மார்கள் | அரிசனர்மார்கள் |
| 444 | 12 | முக்கிமானவர்க | முக்கியமானவர்கள் |
| 445 | 27 | அதிகார் | அதிகாரி |
| 448 | 21 | கோவயை விருந்து | கோவையிலிருந்து |
| 470 | 27 | ரூ 26/ தனி யாகக் | ரூ 2/- தனியாகக் |
| 475 | 20 | மருதாயும் | மருந்தாயும் |

# இந்நூலாசிரியரைப் பற்றி. . .



பிறப்பு : 27 - 8 - 1916

72-அகவையைக் கடந்த இந்த நூலாசிரியர் பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி.ஏ., எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும், (1941-1950), பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950-60), பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் (1960-77) பணியாற்றி ஒய்வு பெற்றவர். 1978-இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 பிப்பிரவரி-1979 ஜூன்) கலைக் களஞ்சியத் தலைமைப்பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (12), சமயம் (22), திறனாய்வு (11), அறிவியல் (14), ஆராய்ச்சி (4), வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு (15) — என்று 83 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும்; அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசும்-ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் பண்ணுருட்டி வைணவ சபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீசடகோபன் பொன்னடி' என்ற விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.